ஹநுமான்

ஆண்டு மலர்

சென்னையின்
வன்னமிகு
சிற்றுண்டிச்சாலை

'கராச்சி கபே'
ஆண்டர்சன் ஹால்

புதிய புதிய அம்சங்கள் வசதிகள் முதலியன நிரம்பிய ஸ்தாபனம்

வனப்பு மிக்க முகப்பு

நாகரிக மக்கள் நாடி வரும் நயமான, நூதன முறையான சாலை

மண்டபத்தின் ஒரு பகுதி

வாரத்தில் இரு முறை அருமையான சங்கீதம் இனும்

பக்ஷண வரிசையும் மண்டபத்தின் மற்றொரு பகுதியும்

இந்தியா தேசத்தின்
பல பாகங்களினதும் மேன்மையான இனிப்பு
வகைகள், கார வகைகள் எல்லாம் அவ்வப்பாகத்துப் பிராமண வல்லுநர்களால்
தயாரிக்கப்பட்டு, விசாலமான காற்றோட்டமுள்ள நேர்த்தியான சாலையில் சீராகப் பரிமாறப்
படும் இடம் இது ஒன்றே. கால்மணி நேரம் ஆறி, பசிதாக சாந்தி செய்து, புது உற்சாகம் பெற்றுப்போக ஏற்றது.

KARACHI CAFE

பணம் கொடுக்கும் இடம்

"கராச்சி
கபே"

Phone: 3183

ஆண்டர்சன் மண்டபம், எஸ்பிளனேட், சென்னை

சமசீதோஷ்ண சாலையின் காட்சி

HANUMAN ANNUAL

1939

Established 1909 Tel. : GOKUL Phone No. : 55

டி. எஸ். ஆர்.

கம்பெனி, கும்பகோணம்

MARK OF QUALITY

Copyright Reserved

அநேகம் பொருள் காக்ஷி சாலைகளில் தங்கம்,
வெள்ளி பதக்கங்கள் பரிசு பெற்றதும், உயர்தர
டாக்டர்களால் பரீக்ஷித்து ஆமோதிக்கப்பட்ட
துமான எங்கள்

சந்தனாதித் தைலம்
அரைக்கீரை விதைத் தைலம்
கோகுல் கூந்தல் தைலம்

மூளைக்குக் குளிர்ச்சியையும், சரீரத்திற்கு ஆரோக்கியத்தையும், கூந்தலுக்கு வளர்ச்சியையும் கவர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றது

கோகுல் வாஷிங் சோப்

ஆடைகளை மாசற வெளுப்பதில் நிகரற்றது

முக்கிய கவனிப்பு :

கோகுல் கூந்தல் தைலம் வாங்குபவருக்கு 28×21 அழகிய ஆலிலை கிருஷ்ணன் படம் ஒன்று இனாம்

கோகுல் கார்டுன் சோப் எல்லா கட்டிகளிலும் பைசா முதல் ரூபா வரை நாணயங்கள் வைக்கப்பட்டிருக்கிறது

எல்லா விடங்களிலும் கிடைக்கும்

மற்ற வாசனை சாமான்களடங்கிய காட்லாகிற்கு எழுதவும்

Branch : MANNARGUDI *Agencies :* Throughout INDIA & BURMA

ஸ்ரீ கிருஷ்ண பிலிம்ஸ் லிமிடெட்
(தியாகராயநகர், சென்னை)

இந்த நவீனத்திலும் நவீனமான தமிழ் டாக்கியை, பெருமையுடன் சமர்ப்பிக்கும்

அபலை

(அரிய கலை வல்லவர்கள் நடித்தது)

சோகம், அன்பு, ஹாஸ்யம், சங்கீதம், சந்தோஷம், அழகு, பக்தி, மயிர்க்கூச்செரியும் சம்பவம், உயரிய நடிப்பினை எல்லாம் நிறைந்தது

இந்த வருஷம் பூராவும் 'அபலை'யைப் பற்றித்தான் புகழ்ந்து பேசிக் கொண்டிருக்கப் போகிறார்கள்.

●

இந்தப் படத்தைப் பாராதவர்கள் கொடுத்து வைக்காதவர்களே!

பாருங்களேன் :—

- மனிதன் தவறிப் போய், மனைவியை உதறித் தள்ளிவிட்டு தாசி வீட்டை நாடுகிறான்—அங்கு நடப்பதென்ன ?
- ஸ்டீமரிலிருந்து கடலில் தாவிக்குதிக்கும் குழந்தையின் தீரம் !
- பேபி பாப்பாவின் விதவிதமான விளையாட்டுகள் !
- அனாதைப் பெண்ணின் வாழ்க்கைப் பிரசினை.
- நாயகி காதல் மிகுதியால் காதலனைத் தேடுகிறாள் !
- மேனாட்டு நாகரிகமும் கீழ் நாட்டு கலாசாரமும் முரண்டிக் கொள்கிறதேன் ?

எல்லாம் ஒன்றில் ; ஒன்று எல்லாருக்கும்

●

ஸ்டுடியோ :
பிராக்ஜோதி பிலிம்ஸ் ஸ்டுடியோ

டைரக்ஷன் :
பி. எஸ். வி. அய்யர்

தியேட்டர் முதலாளிகளுக்கு
'அபலை' எனில் என்னவென்று நினைக்கிறீர்கள் ? இதுவரை கண்டிராத வகையில் பெருங் கூட்டத்தைக் கவர வல்ல முதல்தரப் படம் ! இதை உங்கள் தியேட்டரில் 'புக்' செய்துவிட்டீர்களா ? இல்லையெனில்-இப்போதே, இன்றே செய்யுங்கள்.

தென், வட ஆற்காடு, செங்கல்பட்டு ஜில்லாக்களுக்கு :
ஸி. வி. நைனார் & ஸன்ஸ்
ஆரணி (வட ஆற்காடு)

மைசூர் சமஸ்தானம், தென் கன்னடம் ஜில்லா இரண்டுக்கும் :—
பாரமௌண்டு பிக்சர்ஸ்
" பாரமௌண்டு பாலஸ் "
தியாகராயநகர், சென்னை

படத்தைப் பார்க்கப்போகிறவர்கள், தியேட்டர் நாற்காலியில் அப்படியே 'வேர்வை விடுவார்கள்.' அவ்வளவு கவர்ச்சி மிக்க படம்

●

ஆண், பெண், கிழவர், குழந்தை ஏழை, செல்வவந்தர் எல்லாரும் கண்டானந்திக்கக் கூடிய படம்.

மதராஸ் எனாமல் ஒர்க்ஸ் லிமிடெட்,

65, சைடன்ஹாம்ஸ் ரோட், மதராஸ்

எமது உற்பத்தி சரக்குகள் :

எலக்ட்ரிக் விளக்குகளுக்கு ஷேடுகள்

●

ஆஸ்பத்திரிக்கு தேவையான சாமான்கள்

●

குடும்பத்திற்கான பாத்திர வகைகள்

●

இத்தனையும்
போர்ஸிலின்
(விட்ரீயஸ்)
எனமல்
சரக்கினால் செய்தது

கவர்ன்மெண்டு ஆப் இந்தியாவினால்
இன்டியன் ஸ்டோர் இலாகா)
ஆமோதிக்கப்பட்ட அட்டவணையிலுள்ளது

●

மதராஸ், மைசூர், கொச்சி சர்க்கார்கள், ரயில்வேக்கள், பல நகர சபைகள், ஜில்லா போர்டுகள், தென்னிந்தியாவின் பிரபல விளம்பரக்காரர்கள் எல்லாரும் உபயோகித்து வருகிறார்கள்.

லக்ஷக்கணக்கானவர்கள் பார்த்து ரசித்து அனுபவித்தது

பெரியவர்க்கும் சிறியவருக்கும் உகந்ததோர் படம்

இப்போது

எல்லா தியேட்டர்களிலும்
நடைபெறுகிறது

பக்த குமணன்

அல்லது

ராஜயோகி

(தமிழ்)

நடந்து வருகிறது. குமணன் கதையைச் சித்தரிப்பது—கொடையே உருவெடுத்தவன் வரலாறு—கவிக்காகத் தலையைக் கொடுக்கத் துணிந்த உத்தமன் சரிதை.

டி. பி. ராஜலக்ஷ்மி,
வி. ஏ. செல்லப்பா,　வி. எஸ். மணி,　பேபி ருக்மிணி
முதலியோர் நடித்தது

டைரக்டர்: கே. ரங்கு ராவ்

ஸ்டுடியோ : **ஜோதி & கம்பெனி, பம்பாய்**

தயாரிப்பு : **சரஸ்வதி பிக்சர்ஸ்**

மகத்தான புராணக் கதை!　இதற்கு இணை இதுவே!

ராமனிடம் ஹநுமான் வைத்திருந்த பக்தியின் மஹிமை—அதன் மஹிமையால் யமஸ்வரூபமான பிரம்மாஸ்திரத்திலிருந்து சகுந்தனை காத்தது—அன்னை அஞ்ஜனைவுக்குக் கொடுத்த வாக்கை கடைப்படுத்தியது பாருங்கள் !

எல்லாம் சாகரின்

ராமநாம மஹிமை

அல்லது

ராமாஞ்சனேய யுத்தம்

(தமிழ்)

நடிகர்கள் :

மாதிரிமங்கலம் நடேசய்யர்,　மாஸ்டர் லக்ஷ்மணன்,
லக்ஷ்மி,　பிரஹதாம்பாள்,　பேபி கமலா
முதலிய பிரபல நடிகர்கள்

டைரக்டர் :

ஏ. என். கல்யாணசுந்தரம்

ஸ்டுடியோ :

ஜோதி & கம்பெனி, பம்பாய்

இன்று உலேக்கூடத்தி லிருக்கிறது :

தமிழ் தாய் or மாத்ரு தர்மம்

(தமிழ்)

: விவரங்களுக்கு :

கபூர்சந்த் & கம்பெனி, பெங்களூர் ஸிடி

தந்தி : Kapurchand　　போன் : 2382

சேலம் மோகினி பிக்சர்ஸ் லிட். & மதுரை, ஸ்ரீ தண்டபாணி பிலிம்ஸ் லிட்.

கூட்டுத் தயாரிப்பு

"என்பேரில் உங்களுக்கு உண்மையான காதலிருப்பது வாஸ்தவமானல்
நீங்கள் வைஷ்ணவத்தை விட்டு ஏன் சைவராய் விடக்கூடாது ?"

காதலா ? ? ? ? மதமா ?

அகில இந்திய நாதஸ்வர வித்வானின் இனிய கானங்கள் !
அரிய நடிப்பு !

T. N. RAJARATNAM

"இம்மென்னு முன்னே
யெழுநூறு மெண்ணூறும்
அம்மென்றுலாயிரம் பாட்டாகாதா"

? ? ?

S. P. L. DHANALAKSHMI

காளமேகம்

★ நடிகர்கள் : ★

T. N. ராஜரத்னம்
C. V. V. பந்துலு
M. S. முத்துக் கிருஷ்ணன்
M. V. மணி
காளி N. ரத்தினம்
N. S. கிருஷ்ணன்
சிறுவன் T. V. நமசிவாயம்
ஜோக்கர் ராமுடு
K. S. முத்தையா பாகவதர்

டைரக்ஷன் :
எல்லிஸ் R. டங்கன்
W. J. மாய்லன்

துணை டைரக்ஷன் :
P. S. செட்டியார்

?
"வாழ்க்கை உடம்பினில்
காதலே ஜீவன்"
"மதம் பொய்"
?

★ நடிகைகள் : ★

S. P. L. தனலட்சுமி
T. A. மதுரம்
P. S. ஞானம்
P. R. மங்களம்
T. N. ராஜலட்சுமி
சிறுமி சிட்டாணி ராஜலட்சுமி
T. M. பட்டம்மாள்

மற்றும் பலர்

கதை, வசனம் & பாட்டு :
பாரதி தாஸன்

ஸ்டுடியோ :
பிரக்ஜோதி பிலிம்ஸ்

: பூரண விநியோகிப்பாளர்கள் :

ஸ்ரீ தண்டபாணி பிலிம்ஸ் லிமிடெட்

174, மேலமாசி வீதி :: மதுரை

For Quality and Service!



K. RATNA & CO.

OPTICIANS OF 25 YEARS EXPERIENCE
305, ESPLANADE, MADRAS.,

TRY ONCE! SERVICE IS OUR MOTTO!!

OUR FRAMES & LENSES ARE OF EXCEPTIONAL QUALITY

YOU WOULD HAVE TO PAY
DOUBLE THESE PRICES ELSEWHERE
BEAR IN MIND. WE GUARANTEE THIS

DOCTORS' PRESCRIPTIONS ACCURATELY & PROMPTLY EXECUTED

காபிக்கு
எடுத்தது
கணேஷ்
காபி

பச்சையாகவும்
வறுத்ததாகவும்
பொடியாகவும்

முதல்தரமான காபி
கிடைக்கும்



7 பவுண்டு சிறு பையிலிருந்து கப்பல் கப்பலாக
வேண்டுமானாலும் அவரவருக்கு வேண்டியபடி
பல ரகத்திலும் நாங்கள் ஸப்ளை செய்கிறோம்.

கணேஷ் & கம்பெனி

தம்புச் செட்டித் தெரு :: மதராஸ்

*

சில்லரை வியாபாரம்

285, சைனா பஜார் :: மதராஸ்

குழந்தைகளின் ஈரல் குலை ஜுரக்கட்டிகளுக்கு

'அசல் விஜய நகரம்' மருந்து

பாலசஞ்சீவினி

சொற்ப மாதத்திலே குணப்படுத்தக்கூடியது. மற்ற மருந்துகளைப்போல் வருஷக்கணக்காக கொடுக்க வேண்டாம்

இது ஒன்றே 'அசல் விஜயநகரம்' மருந்து என்பதை இதற்கு வந்திருக்கும் எண்ணிக்கையற்ற நற்சாக்ஷிப் பத்திரங்கள் சந்தேகமின்றி வெளிப்படுத்தும்.

★

Dr. பிள்ளாபாபய்ய பாத்ருடு பிரதர்.

விஜய நகரம் சமஸ்தான வைத்திய பரம்பரை

★

45-வருஷகாலமாய் அநேக ஆயிரக்கணக்கான குழந்தைகளை இந்தக் கொடிய குலைக்கட்டி வியாதியினின்று குணப்படுத்தி இருக்கிறார்கள்.

★

98-99, பிராடிஸ் ரோட்,

மைலாப்பூர், மதராஸ்.

புலவர் புராணம்

தண்டபாணி சுவாமிகள் இயற்றியது

விலை ரூ. 4

ஹநுமான் சந்தாதார்க்கு செப்டம்பர்மீ 15உ வரை ரூ. 2—0—0

போஸ்டேஜ் பிரத்யேகம் : சில பிரதிகளே உள்ளன—தேவைக்கு உடனே எழுதவும்



நவீன மூக்குக்கண்ணாடிகள் நம்மிடம் சகாயமாக விற்கப்படும்

கெ. வி. கெ. சாரி & சன்,

மூக்குக்கண்ணாடி வியாபாரிகள்,
கங்கைகொண்டான் மண்டபம்,
திருவல்லிக்கேணி, சென்னை.

நேர்த்தியான வேலைப்பாடமைந்த பிளாக்குகள்

லைன், ஆப்டோன் இரண்டு கலர் மூன்று கலர் பிளாக்குகள் வெகு நன்றாக சிறந்த முறையில் குறித்த காலத்தில் செய்து தருகிறோம்

★

விவரங்களுக்கு:

கிவீன் அண்ட் பெரிஸ் கம்பெனி

மவுண்ட் ரோட் :: மதராஸ்

தமிழ் வாழ்க!!

விரைவாகவும் விரிவாகவும் தேன்மொழியாகிய தேன்மொழியை எழுத

ஐடியல் (பெரிய) எரிகா (சிறிய)

தமிழ் டைப்ரைட்டர் மிஷன்கள்

படிப்பவர்களுக்கு எளிய நவீன கீ போர்ட்.

சென்னை கவர்ன்மெண்டாரால் அங்கீகரிக்கப்பட்டது.

IDEAL Standard OR ERIKA Portable Typewriters

(English or Tamil)

Approved by the Government of Madras

The advanced typewriter bearing the distinct date of 1940 ! !

Many automatic devices create typing comfort

Buying an IDEAL or ERIKA typewriter means installing Efficiency, Durability & Economy

ASK FOR FREE DEMONSTRATION

LEON TYPEWRITER Co., Ltd.

5, Linga Chetty Street :: MADRAS

செவிக்கினிய கீதங்கள்! நகைக்கத்தக்க சம்பவங்கள்! சிரிப்பூட்டும் சம்பாஷணை!

ஹாஸ்யபாவம் நிறைந்த நடிப்பு!

தென்னிந்திய சினிமா சரித்திரத்திலேயே கண்டிராத ஒரு புதுமை!

சூர்யா சவுண்டு பிக்சர்ஸின்

"முழு காமிக் புரோகிராம்"

(தமிழ்)

டைரக்ஷன்: **ஆர். பிரகாஷ்**

மதராஸ் எம். பி. பி. ஸி. லிமிடெட் ஸ்டுடியோவில்

முடிவடையும் தறுவாயிலுளது

●

நடிக கோஷ்டி:

N. S. கிருஷ்ணன், T. A. மதுரம் & கோஷ்டியார்

மிஸ் கே.எஸ். அங்கமுத்து, மிஸ் வி.எஸ். கௌசல்யா, வி.எம். எழுமலை, எம்.ஆர். சுவாமிநாதன், குஞ்சிதபாதம் பிள்ளை, சாரதா முதலியோரும், ஏனைய நக்ஷத்திரங்களும் நடிப்பது. இதுவரை எப்படத்திலும் இவர்கள் எல்லாரும் ஏககாலத்தில் சேர்ந்ததில்லை

●

சினிமாத் திரையில் இதுவரை காணக்கிடைக்காத இந்த ஆச்சரிய மிக்க ஜாலத்தைக் கண்டு, களித்து, சிரிப்பு மிகுதியால் நீங்கள் பிரமிப்பீர்கள்

புக்கிங்களுக்கு:

நாராயணன் & கம்பெனி

1/17 H, மவுண்ட் ரோடு, மதராஸ்

டிஸ்டிரிபியூஷன் உரிமையாளர்கள்:

சூர்யா சவுண்டு பிக்சர்ஸ்

56, புரசவாக்கம் ஹைரோடு, மதராஸ்

வி. எம். அண்ணாஜி கம்பெனியாரால்

ஆங்கில் வைத்திய சாஸ்திர பிரகாரம் செய்யப் பட்டுள்ள மருந்து களின் விலை ஜாபிதா

அடியிற் கண்ட மருந்துகள் அநேக விலையுயர்ந்த மூலிகைகள் சேர்ந்த ஔஷதங்கள். அனைவரும் வாங்கி உபயோகிக்க ஸரஸமான விலைக்கு விற்கப்படுகின்றன. ஆதலால் உடனே தேவைக்கு எழுதுங்கள்.

	ரு.அ.பை.
அண்ணாஜி பெயின் பாம்	0-4-0
சொரி, சிரங்கு; கரப்பான் நிவாரணி	0-4-0
ஸ்வாச காச நிவாரணி (சகல விதமும்)	5-0-0
அண்ணாஜீஸ் டூத்பவுடர்	0-3-0
ஆனேபிலென் (சகல ஜுரங்களுக்கும் நிவாரணி)	1-0-0
எனெர்ஜன் (நீரிழிவு, டயாபிடிஸ்)	5-0-0
டாக்டர் காபெட்ஸ் பிளட் மிக்சர் (இரத்த சுத்திக்கு)	2-8-0
டாக்டர் காபெட்ஸ் பசிதீக்ஷண சர்பத்து	3-0-0
டாக்டர் காபெட்ஸ் கனோரியா மருந்து	2-0-0
கேசபோஷகி கூந்தல் தைலம் நரைமயிர் போக்க	1-0-0

	ரு.அ.பை.
காம்னிரின் தலைவலி, சூதகவலி, நரம்புவலி, வயிற்றுவலி முதலிய வற்றிற்கு 12 பாக்கெட்	0-6-0
போட்டானல்-லிவர் டானிக் (ஈரல் நிவாரணி)	2-0-0
ஓபர்டோன் (எல்லாவித இருமலுக்கும் மருந்து)	2-0-0
ரிங்ஓர்ம் ஆயின்ட்மென்ட் (தேமல்கடிமருந்து)	0-4-0
ஷோட்டாக்ஸ் - உயர்தரமான டானிக் (small)	2-8-0
சுவர்ண டோன்-உயர்ந்த தாதுவிருத்தி டானிக்	3-0-0
விபிடால்-சூதகசம்பந்தமான கோளாறுகளுக்கு - பெண்களுக்கு சிநேகிதன்	2-8-0

விவரங்களுக்கு:

வி. எம். அண்ணாஜி & கம்பெனி

மானுபாக்சரிங் கெமிஸ்ட்ஸ்

384, தங்கசாலை வீதி (Upstairs-மாடியின்மேல்), மதராஸ்

N. B.:—பல வியாதிகளையும் பரிசீலனை செய்து காலை 7-மணி முதல் 11-மணிவரையில் வைத்தியம் செய்யப்படும். மொத்த விலை விபரங்களுக்கும் காட்லாக்குக்கும் எழுதுங்கள்.

உயர்ந்த காப்பியும்,
சிறந்த பலகாரங்களும்,
குளிர்ந்த பானங்களும்
கிடைக்கும்

★

சந்திர பவான்

★

151, அண்ணா பிள்ளை தெரு,
லோன்ஸ்கொயர்
மதராஸ்

K. R. V. IYER, *Proprietor*

R. S. SUGANTHA MOOKKUTHOOL

ASK FOR P. V. RAJAN'S BEST MADRAS SNUFF &

BEST IN THE MARKET. SOLD EVERYWHERE

ஜெகப்பிரசித்திப்பெற்றதும்
காரம், மணம், குணம், நிறம் எல்லாவற்றிலும்
சிறந்ததும், பல
எக்ஸிபிஷன்களில் பொன், வெள்ளி மெடல்கள்
பரிசுபெற்றதுமான

பி. வி. ராஜன் அண்டு

கம்பெனியாரின்

பட்டணம் பொடி
&
R. S. சுகந்த மூக்குத்தூள்

இதையே கேட்டு வாங்கி உபயோகப்படுத்துங்கள்
விலை விபரத்திற்கு எழுதவும்

தயாரிப்பவர்கள் :—

பி. வி. ராஜன் & கம்பெனி
44, கோவிந்தப்ப நாய்க்கன் வீதி,

தந்தி விலாசம்: "NASYAM" } .. **மதராஸ்.**

பிராஞ்சு: பாராபஜார், கல்கத்தா.

TONSILS
டான்ஸில்ஸ்

ஆபரேஷன் தேவையில்லை; சொஸ்தமடைய உத்தரவாதம். தொண்டையில் இரு பக்கங்களிலும் சதை வளர்ந்திருப்பதை டாக்டர் நாதப்'ஸ் "டான்ஸில் க்யூர்" வெகு சீக்கிரத்தில் கரைக்கும். நூற்றுக் கணக்கானவர்கள் நன்மையடைந்துள்ளனர், ராஜாக்களாலும் பிரபல உத்தியோகஸ்தர்களாலும் புகழ்ந்து பேசப்பட்ட அதி ருசிகரமான சிகிச்சை.

●

KENT CHEMICALS
Mowbrays Road

Royapettah :: Madras.

INDEX TO ADVERTISERS

		PAGE
1.	Al. Rm. & Company ...	127
2.	Annajee & Co., V. M. ...	7
3.	Appaswamy Chetty & Co., M. C. ...	92
4.	Ballabh & Sons ...	140
5.	Bengal Silk Stores ...	56-B, 92
6.	Bourn-Vita ...	44
7.	Castor Oil Works K. P. ...	100
8.	Central Talkie Equipment Co. ...	88
9.	Chari & Son, K. V. K. ...	5
10.	City Process Studio ...	136
11.	Coimbatore Coffee Works ...	Line Advts.
12.	Commonwealth Assurance Co., Ltd. ...	92
13.	Chandra Bhavan Hotel ...	7
14.	Chellaram Gayanchand ...	29
15.	Dharma Rao Printing Works ...	112
16.	Famous Pictures ...	58 & 60
17.	Gopalsamy Naidu & Sons, P. ...	8
18.	Gore D. G. ...	87
19.	Govindachary, Prof. K. ...	136
20.	Gramophone Co., Ltd., The ...	103
21.	Ganesh & Co. ...	5
22.	Hamsa Photo Works ...	76
23.	Hanuman Bank Ltd., The ...	75
24.	Hindustan Films, Ltd. ...	95
25.	India Life Benefit Assurance Co., Ltd., The	131
26.	Jagadish Films, Ltd. ...	117
27.	Jaya Films—Presidency Amateurs ...	104-B
28.	Kannan Butter House ...	114
29.	Kishinchand Chellaram ...	32
30.	Kapurchand & Co. ...	3
31.	Kesari Kuteeram ...	64
32.	Krishnan Chettiar, M. K. ...	123
33.	Klein & Peyerl ...	6
34.	Kubera Films, Ltd. ...	11
35.	Karachi Cafe ...	Front Cover
36.	Kent Chemicals ...	7
37.	Laljee Godhoo & Co., Madras ...	32
38.	Laljee Godhoo & Co., Kumbakonam ...	75
39.	Leon Typewriter Co. ...	6
40.	Madras United Artistes Corpn.—Gemini Pictures Cercuit ...	121
41.	Madras Enamel Works ...	2
42.	Modern Theatres Ltd. ...	112
43.	Mohammed Ebrahim & Co. ...	58
44.	Murale. Prof. ...	101
45.	Modern Machinery Co. ...	88
46.	Mayura Films Ltd. ...	74
47.	Narandas Kesurdas & Sons ...	56
48.	Nagalingappa, T. C. ...	114
49.	National Insurance Co., Ltd. ...	112
50.	Narayanaswamy Iyer, T. M. ...	Line Advts.
51.	Narayanaswamy Mudaliar & Sons, M. ...	Line Advts.
52.	National Industrial Co., Ltd. ...	130
53.	New India Film Distributing Co. ...	2nd Cover.
54.	Oriental Govt. Sec., Life Ass., Co., Ltd. ...	12
55.	Paramount Pictures ...	2
56.	Pilla Papiah Patrudu & Bros. ...	5
57.	Rashid Jamshedjee & Sons ...	116
58.	Royal Betel Nut Factory ...	54
59.	R. M. S. & Co. ...	28
60.	Royal Cycle & Motor Co. ...	15
61.	Radha Film Co., & B. V. Ramanandam ...	56-A
62.	Raju Films Ltd. ...	114
63.	Ratna & Co., K. ...	5
64.	Rajan & Co., P. V. ...	7
65.	Racek & Co. ...	79
66.	Radha Silk Emporium ...	139
67.	Raju Chettiar & Sons., P. A. ...	56-A
68.	Ramachandra Iyer, VK. VR. ...	Line Advts.
69.	Swaminathan, Prof. R. ...	72
70.	Surajmals ...	Back Cover
71.	Spencer & Co., Ltd. ...	29
72.	South Indian Fire & General Assurance Co. (Coimbatore) Ltd. ...	60
73.	Saraswathi Stores ...	32, 75, 91, 93, 94, 96, 97, 106
74.	Salem Mohini Pictures Ltd. ...	4
75.	Satagopachary, V. K. ...	110
76.	Shamsuddin & Ismail ...	140
77.	Seetharaman T. B., Dr. ...	123
78.	Solden & Co. ...	126
79.	Surya Sound Pictures ...	6
80.	Sri Seetharaghava Vaidyasala ...	126
81.	Shyamala Pictures ...	11
82.	Star Films ...	119
83.	T. S. R. & Co. ...	1
84.	Thomas Rodrigo & Sons ...	64
85.	Turner, Morrison & Co., Ltd. ...	25
86.	Tet Manufacturing Co. ...	132
87.	Thygaraja Films Ltd. ...	104
88.	Tropical Insurance Co., Ltd. ...	56-B
89.	Tonsinal Laboratory ...	132
90.	Vyasachariar, R. ...	129
91.	Vasudeva Pillai, Dr. ...	111
92.	Vel-Murugan Film Service ...	137
93.	Woodwards Gripe Water ...	3rd Cover

அசல்

வைரங்கள்

ரங்கூன் வைரங்கள், நகைகள்



உத்திரவாதத்துடன் கிடைக்கும்—கேட்லாக் இனம்

165 வருஷங்களாய் நம்பிக்கையுடன் வியாபாரம் செய்து கொண்டு வரும்

பி. கோபாலசுவாமி நாயுடு & சன்ஸ்

க. புதுப்பேட்டைதெருவு, பறங்கிமலை போஸ்ட், சென்னை.

கிளை :—234, கோவிந்தப்ப நாயகன் தெரு, சென்னை.

ஹநுமான் ஆண்டு மலர்

பொருளடக்கம்

பக்கம்

கிர்ர்ர்ரணி—டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் ... 13
காந்தி வழி பழசா— (கவி) ராமலிங்கம் பிள்ளை ... 16
தங்கத்தின் கதை—படங்கள் ... 17
பாரத சரித்திரம்—மாதவாரி படங்கள் ... 18
ஹநுமான் தரிசனம்—(கவி) " சுரபி " ... 20
உலர்ந்ததா ? (கதை)—'தெலுகுவாடு' ... 26
சுவரும் சித்திரமும்—காப்டன் திருவேதி ... 30
தேவர்கள் பயந்தது சரியா?—பெ.நா. அப்புசாமி ... 33
சிம்லா பிரயாணம்—ராஜன் ... 35
நாணயம் (சின்னஞ்சிறு கதை) ... 37
தியாக வேள்வி—(கவி) சுவாமி சுத்தானந்தர் ... 38
தெருவில்கண்ட தெய்வம் (கதை) என்.ஆர்.எஸ். ... 40
சந்திரகுப்தரின் ஜயஸ்தம்பம்—(சரித்திரம்) எஸ். ஆர். ... 45
கலியாண டயரி—(கதை) வி. எஸ். கிருஷ்ணமூர்த்தி ... 46
சிம்ம கட்டில் பலியான சிங்கம் —(கதை) " கோபன் " ... 49
கிளிக்கூண்டு— (நடைச் சித்திரம்) வ. ரா. ... 50
" சிட்டி " காட்டும் வழி—" சிட்டி " ... 53
ஆதித்யன் சன்னதி—சிதம்பர சுப்பிரமணியன் ... 55
பாரத தேவியர்—(கவி) பிரஹத்தீசுவரி ... 57
மகாபோதம்—(கதை) கு. ப. ராஜகோபாலன் ... 59
ஸ்ரீ அரவிந்த ஆசிரமம்— " வில்லன் " ... 61
ஸ்ரீ பாதமலை— கே. சபாநாதன் ... 63
வண்டி மாடுகளின் விண்ணப்பம் (கவி)— " தேவி தாஸன் " ... 65
வெற்றி யாருக்கு ?—தி. நா. சு. ... 66
ஹைகோர்ட் அப்பீல் பி. ஏ. பி. எல். ... 68
சிதைந்த கோபுரம்—ஏ. ராமனுத் டாக்டர் ... 70
கதைக்குக் காலுமில்லை தலையுமில்லை —கௌசல்யானந்தன் ... 73
கவிக் குயில்—(கவி)—உமைதானப் பிள்ளை ... 76
ஜனநாயகமும் கழுதைகளும்—வி. சந்தானம் ... 77
வெள்ளைப் பறவை (கவி)—" நாணல் " ... 80
கோதை—ராமாமிருதம் ... 81
முல்லை மலர் (கவி)—தெ. ப. பெருமாள் ... 82
கவிதைப் பெண் (கவி)—" சோமன் " ... 84
பர்மா பர்மியர் புத்தர் பொங்கிகள்—எஸ். ராஜம் ... 85
முதல் பிடில்— ந. பிச்சமூர்த்தி ... 89
விடிந்தது— பி. வி. சுப்பிரமணியம் ... 90
நாம் ஆங்கிலம் கற்பானேன் ?— ஸ்வாமிநாதன் ... 93
அட்டைக்கோட்டையின் ஆட்டம்—சங்கரன் ... 96

பக்கம்

மரகதத்தின் கலியாணம் —(கதை) அனந்தகிருஷ்ணன் ... 98
பாரோ கட்டிய பிரமிட்—வெ. வேதமூர்த்தி ... 102
கடல் கடந்த தமிழ்—எஸ். ஆர். பாலசுப்ரமணிய அய்யர் ... 105
செக்கடி மாடுகள்—எஸ். சங்கரன் ... 107
கரும்பு இனித்தது—" பெரிய கருப்பன் " ... 110
பட்டினியும் பாரணையும்— முசிரி சுப்பிரமணிய அய்யர் ... 113
உயிர் வாழ உரிமை—ஏ. ஜி. வி. ... 115
வாழ்வும் மொழியும்—தி. ஜ. ர. ... 118
ஸ்ரீராமருக்கு சீடை பிடிக்குமா ?—ஸ்ரீரங்கன் ... 120
வலிமையும் வனப்பும் —கிருஷ்ணஸ்வாமி ... 122
கிராம தேவதைகள்(கவி)—கொத்தமங்கலம் சுப்பு... 124
கலையும் பயனும் — 'சங்கு' ... 125
ரங்க ராட்டினம் (கதை)—பி. எம். கண்ணன் ... 128
சொர்ப்பன சுகம்—எஸ். விசாலாக்ஷி ... 130
பஞ்சவர்ணக் கிளி—சடகோபன் ... 133
தமிழ் பட டைரக்டர்கள்—ம. க. த. ... 134
' கண்டாள் கருணை ஏசுவை'—(கவி) ச. து.சு. யோகி ... 136
அழகு இரகசியங்கள் —" இளங்கோவன் " ... 138
பழைய துன்பமும் புதிய இன்பமும்— பதுமநாப பிள்ளை ... 141

ஆர்ட் படங்கள்

சுசீந்திரம் ஹநுமான் ... 21
மன்மத விஜயம்—(போட்டோ ஜாலம்) ... 23
'என்னடா அங்கே' / சாலை அடி ஓரம் } ஸ்ரீ அருணாசலம் ராயல் போடோ கிராபிக் சொசைடிக்காரர்
பாரதி நாட்டியம்— (44-ம் பக்கத்துக்கு எதிரே) கவி—சுப்பிரமணிய பாரதி நடனம்—மிஸ். டி. எம். பட்டம்மாள் (28 தோற்றங்கள்)
கிறுக்குப் பிடித்த காமிரா—(படங்கள்) 104-A

வர்ணப் படங்கள்

சித்திரங்கள்	சித்திரக்காரர்	பார்வை
' இராம ரதம் '	மாஸ்டர் ராஜம்	10
சிவகிராமத்து சிற்பி	ராமராஜு	16
ஜீவன் அர்ப்பணம்	மாஸ்டர் ராஜம்	60
தாக சாந்தி	ராமநாத சர்மா	72
ஸந்தி உஷா நர்த்தனம்	ராமராஜு	80
சதுரும் தாளமும்	' குளோரி '	106
வர்ணமும் வாழ்க்கையும்	ஸ்ரீ நாக்	128

★

ஆசிரியர்
'சங்கு'
சு. சுப்ரஹ்மணியன்

★

சமர்ப்பணம்

தமிழ்த் தாயின் திருப்பாதங்களிலே, 'ஹனுமான்' இரண்டாவது ஆண்டு மலரை மிக்க சந்தோஷத்தோடும் விநயத்தோடும் சமர்ப்பிக்கின்றோம்.

தமிழ் மக்களும் தமிழ் எழுத்தாளர்களும், கலைஞர்களும் நமது காரியாலயத்திடம் காட்டிவரும் அன்பும் சலுகையுமே இம் மலராகப் பூத்து வெளிவந்திருக்கின்றது.

அவசரம் அவசரமாக வாரந்தோறும் ஒரு பத்திரிகை யிதழை சிருட்டிக்கின்றோமே, அதற்கும் இந்த ஆண்டு மலர் சிருட்டிக்கும் தனித்தனி அழகம்சங்கள் உண்டு. அது துள்ளியோடும் புள்ளிமானின் போக்கை யொத்தது. ஆண்டு மலரோ கம்பீரமாகப் பவனி வரும் ஒரு யானையின் நடையைப் போன்றது. அதற்கென்று சில ஆடம்பரங்களும் அலங்காரங்களும் இருக்கத்தான் வேண்டும்.

கனமான கருத்துக் கட்டுரைகளாயும், கலை யின்பத்தின் கதிர்களாயும், அவசரக்கோலமில்லாததாயும் சிரஞ்சீவித் தன்மையை எதிர்பார்ப்பதாயும் உள்ள எழுத்துக்களே ஆண்டு மலரை நிரப்ப வேண்டும் என்பது நமது ஆசை. அந்த ஆசை எவ்வளவு தூரம் பூர்த்தியாகி யிருக்கின்றதோ நாம் சொல்வதற்கில்லை.

சென்ற வருடம் 'ஹனுமான்' ஆண்டு மலருக்கு விஷய தானம் செய்த பெரியார்கள் பலரும் இவ் வருடத்திய மலரையும் அலங்கரித்திருக்கிறார்கள். இளம் எழுத்தாளர் பலருக்கும் இடம் தரவேண்டுமென்ற ஆர்வத்தால் இவ்வருடத்திய ஆண்டு மலரைப் பெரிய உருவுடையதாக்கினோம். வாழையடி வாழையாக தமிழ்ப் பண்ணையில் தோன்றியுள்ள இளைஞர் பலரும் இம் மலரில் எழுதியுள்ளனர்.

மகா மகோபாத்யாயா ஸ்வாமினாதய்யர், ஸ்ரீ வ. ரா. போன்ற வைரம் பாய்ந்த எழுத்துக்களினின்று தோழர் பி. எம். கண்ணன், ஸ்ரீ சந்தானம் போன்ற தளிரனையோரின் எழுத்துகளும் இம்மலரை அலங்கரிக்கின்றன.

'காந்தி பழசா?' என்று நெஞ்சு வெடிக்க உருக்கமாகப் பாடியுள்ள நாமக்கல் ராமலிங்கம் போன்ற கவிகளினின்று நண்பர் உமைதாணுப் பிள்ளையின் பாட்டு ஈறாகப் பல கவிஞர்கள் பாடி யிருக்கிறார்கள்.

வித்வான் முசிரி சுப்பிரமணிய அய்யர், "நான் ஒரு பாடகர் மட்டுமல்ல, வேடிக்கையாக எழுதவும் செய்வேன்" என்று ஒரு கட்டுரையின் மூலம் நிரூபித்திருக்கிறார்.

ஜாவளிகளுக்கும், பதங்களுக்குமே இதுவரை பரத நாட்டிய அபிநயங்கள் இருந்துவந்தன. தமிழ் நாட்டின் கனவு மைந்தனாகத் தோன்றி மறைந்த கவி பாரதியாரின் சுவை நிறைந்த பாடல்களில் பலவற்றை நமது நாட்டிய உலகு எடுத்துக்கொள்ள வேண்டும். சௌபாக்யவதி பட்டம்மாள் இந்த மலர் மூலம் அந்த விக்ஞாபனத்தை ஞாபகப்படுத்த விரைந்துளார்.

அன்னாரின் 'பாரதி நாட்டிய'த்தைத் தொடர்ச்சி கெடாமல் போட்டோ எடுத்தவர் சித்திரக்காரர் ஸ்ரீ ராமராஜு. அவருடைய இதர போட்டோ விஷமங்களும் கவனிக்கத் தக்கவை.

இந்த வருடம் ஆண்டு மலருக்கும் தோழர் பி. எஸ். ராமையா கூடயிருந்து உதவி செய்ததற்கு அவரையும் பாராட்டுகின்றோம்.

நாட்டின் கலாஞானமும் ரசனையும் வருடாவருடம் எவ்வளவு தூரம் விர்த்தி யடைந்திருக்கிறதென்ற அளவைக் காட்டும் தெர்மாமீடர்களாகப் பத்திரிகைகளின் ஆண்டு மலர்களைச் சொல்லலாம். சித்திரங்களை ஜோடிப்பதில் புதுப் புது முயற்சிகள், அச்சுத் தொழிலிலே அபிவிர்த்தி இவைகளுக்கும் எடுத்துக் காட்டு ஆண்டு மலர்களே யென்பர். அந்த ரீதியில் இந்த மலர் எவ்வளவுதூரம் அடையாளமாக இருக்கிறதென்பதை வாசகர்களே நிர்ணயிக்க விட்டு விடுகின்றோம்.

தென்றிசை இருண்ட காட்டில்
    தேய்கின்ற கொடியை மீட்க
குன்றிடா ஒளியை வீசும்
    மரகதக் கோல தீபம்,
வென்றியைக் காட்டும் பைம்பொன்
    விளக்கொன்றும் கூட ஏந்தி
குன்றமே கடந்த தம்மா!
    குறைந்திடும் கொடுமை மண்மேல்!

"சந்த"

ஸ்யாமளா பிக்சர்ஸாரின் உன்னத தயாரிப்பு

இரு அற்புதப் படங்கள் !



கேரள நாடக கேஸரி

குஞ்சு குஞ்சு பாகவதர்

டைரக்ஷன்:

("ஸீதா ஜெனனம்") ("ஞானம்பிகை")

'முருகதாஸா' S. நொட்டானி

ஸ்டுடியோ:

நியூடோன்

மிஸ் தவமணிதேவி V. V. சடகோபன்

மிஸ் செல்லம் R. பாலசுப்ரமணிய அய்யர்

முதலியோர் நடிக்கும்

ஸீதா ஜெனனம்

அல்லது

வேதவதி

(உயர்தர தமிழ் புராண படம்)

பிரபல கேரள நடிகர்கள் தோன்றும்

"ஞானம்பிகை"

(மலையாளம்)

சிறந்த சமூக சித்திரம்

மிஸ் தவமணிதேவி

விவரங்களுக்கு:

ஸ்யாமளா பிக்சர்ஸ் லிமிடெட்

'Phone: 8482 | 1, கிழக்கு ஸ்பர்டாங்க் ரோட் :: எழும்பூர், மதராஸ் | 'Grams: SYAMPICTUR

விரைவினில் வெளிவருகிறது

❋

ஆந்திர தேசத்து நடிகரத்னங்கள் தோன்றும்

குபேராவின்

மஹி ராவணன்

(தெலுங்கு)

நடிகர்கள் :

காஞ்சனமாலா, கக்கய்யா, ராமகிருஷ்ண சாஸ்திரி, ராயப்ரோலு, ராமிரெட்டி, பால பீம Y. R. தூரி, சேஷாசலம், மற்றும் பலர்

அஜ ரியின்
அற்புத நடனம்

டைரக்டர் :

Ch. நாராயணமூர்த்தி

விவரங்களுக்கு:

(Sole Distributors)

குபேரா பிலிம்ஸ் லிமிடெட்

141, பூனமல்லி ஹைரோட் :: கீழ்பாக்கம்—மதராஸ்

இன்றே நினைவிருக்கட்டும்!

தினசரி வாழ்க்கையில் நாதியற்றுத் தவிக்கும் அநேக விதவைகளையும் குழந்தைகளையும் நாம் காண்கிறோம்! அவர்கள் ஜீவனோபாயமின்றி எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள்! ஏன் அப்படி? அவர்களைப் பராமரித்து வந்தவர்கள் தங்களுக்கு மரணம் வந்தே தீருமென்பதை உணர்ந்து, அவர்களுக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதற்குத் தக்க முன்யோசனை பெற்றிருக்கவில்லை.

உங்கள் காலத்திற்குப் பின், உங்களை நம்பியிருப்போர் பிறரை எதிர்பாராமல் சுதந்திரர்களாய் வாழ்க்கையை நடத்துவதற்கு நீங்கள் உத்தரவாதமான ஏற்பாடுகளைச் செய்தாய் விட்டதா?

இல்லாவிடில், காலதாமதமின்றி ஒரு **'ஓரியண்டல் பாலிஸி'**யை எடுத்துக்கொண்டு, உங்களுடைய அன்பிற்கு அத்தியந்தபாத்திரர்களான அவர்களுடைய பண சுதந்திரத்தை உத்தரவாதம் செய்யுங்கள்.

இன்ஷ்யூர் செய்து கொள்வதற்கு இலாயக்கில்லாமற் போகும் காலம் ஒவ்வொரு நபருக்கும் வந்தே தீரும். ஆனால் அது எப்பொழுது என்று நிர்ணயிக்க யாவராலும் முடியாது.

எனவே, காலஹரணம் வேண்டாம்—வருஷா வருஷம் விவரம் தெரிந்தவர்களில் பெரும்பான்மையோர் தங்கள் ஆயுளை இன்ஷ்யூர் செய்துகொள்ளும் **"ஓரியண்டலில்"** உங்கள் ஆயுளை இன்ஷ்யூர் செய்துகொள்ளுங்கள்.

சுமார்

ரூ. 21 கோடிவரை

ஆயிரக்கணக்கான பாலிஸிதாரர்களின் உற்றார் உறவினர்களுக்கு அவர்களுக்குத் தேவை மிகுந்த கஷ்டகாலத்தில் **"ஓரியண்டல்"** நன்றியறிதலுடன் இதுவரை பணம் செலுத்தியிருக்கின்றது

இப்பொழுது அமுலிலிருந்துவரும் பாலிஸிகளின் தொகை

ரூ. 77·5 கோடிக்கு

மேற்பட்டது

1938 டிசம்பர்ீ 31உ யன்று கம்பெனியின் நிதிகளுடைய மதிப்பு

ரூ. 23 கோடிக்கு

மேற்பட்டது

ஓரியண்டல்

கவர்ன்மெண்ட் செக்யூரிடி லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.

தலைமை ஆபீஸ்: ஓரியண்டல் பில்டிங்ஸ், பம்பாய்

எங்களுடைய வசீகரமான பாலிஸிகளைப்பற்றிய முழு விவரங்களுக்கும் நீங்கள் எழுதவும்:

பிராஞ்சு காரியதரிசி, ஓரியண்டல் லைப் ஆபீஸ், அரமனைக்கார தெரு, சென்னை

பிராஞ்சு காரியதரிசி, ஓரியண்டல் லைப் ஆபீஸ், 3, மக்டனல்ட்ஸ்ரோட், திருச்சி கண்டோன்மெண்டு

பிராஞ்சு காரியதரிசி, ஓரியண்டல் லைப் ஆபீஸ், மேல்மாசி தெருவு, மதுரை

சப்-பிரான்சு காரியதரிசி, ஓரியண்டல் லைப் ஆபீஸ், கோல்ட்ஸ்மித் ரோடு, பெல்லாரி

இன்ஸ்பெக்டர், ஓரியண்டல் லைப் ஆபீஸ், 17, ஆபீசர்ஸ் லைன், வேலூர்.



சென்ற நூற்றுண்டில் தஞ்சாவூரில் பல சங்கீத வித்துவான்கள் சமஸ்தானத்தின் ஆதரவு பெற்று வாழ்ந்து வந்தனர். அவர்களுள் துரைசாமி ஐயர் என்பவர் ஒருவர். அவர் பிறந்த இடம், திருவையாறு. அது காவிரியின் வடபால் அமைந்துள்ள சிறந்த சிவஸ்தலம். பல சங்கீத வித்துவான்கள் அவதரித்துப் புகழ்பெற்று விளங்கிய பெருமையை உடையது அது. அதில் பதினைந்து மண்டபத் தெரு என்பதொரு தெரு உண்டு. அங்கே துரைசாமி ஐயர் வசித்து வந்ததால், பதினைந்து மண்டபம் துரைசாமி ஐயரென்றே யாவரும் அவரை அழைத்து வந்தனர்.

துரைசாமி ஐயர் சங்கீத மார்க்கங்கள் எல்லாவற்றிலும் பயிற்சியுடையவர். நல்ல உடல் வன்மையும் இனிய சாரீரமும் அமைந்தவர். அவர் வாய்ப்பாட்டில் வல்லவராக இருந்ததோடு பிடில் வாத்தியத்தையும் மிகவும் அருமையாக வாசிக்கும் ஆற்றல் பெற்றவராக இருந்தார். அவரிடம் பல மாணக்கர்கள் இசைப் பயிற்சி செய்து வந்தனர்.

தமிழ், தெலுங்கு ஆகிய பாஷைகளிலே துரைசாமி ஐயர் தக்க அறிவுடையவர். சங்கீத அமைப்புக்கேற்ற சாகித்தியங்களை அமைக்கும் திறமையும் அவர்பால் இருந்தது. அவர் இயற்றிய சில கீர்த்தனைகள் இன்றும் வழங்கி வருகின்றன. இவ்வாறு சிறந்த வாய்ப்பாட்டுடையவராகவும், வாத்திய வித்துவானுகவும், சாகித்திய கர்த்தாவாகவும் விளங்கிய அவருடைய பெருமை, தஞ்சாவூர் சமஸ்தான சம்பந்தத்தால் வரவர விருத்தியாகி வந்தது.

தஞ்சாவூரில் அக்காலத்தில் இருந்த சங்கீத வித்துவான்களின் கோஷ்டியைப் போன்றதொன்றை வேறு இடங்களில் பார்த்தல் அருமை. ஒவ்வொரு சமஸ்தானத்திலும், சிறந்த சில வித்துவான்கள் இருந்தாலும், பலவகையிலும் சிறந்து விளங்கிய வித்துவான்களை ஒருங்கே பார்க்க வேண்டுமாயின் தஞ்சையிலே தான் பார்க்கலாம். அதனல் தஞ்சாவூர் சமஸ்தானத்துக்குச் சங்கீத வித்துவான்களைப் போஷித்து வளர்க்கும் தாயகம் என்ற புகழ் வளரலாயிற்று. வேறு இடங்களில் உள்ள சங்கீத வித்துவான்கள், தஞ்சாவூருக்கு வந்து அங்குள்ள சங்கீத கோஷ்டியின் பெருமையையும், அவர்களை ஆதரிக்கும் சமஸ்தானதிபதியாகிய அரசரின் இயல்பையும் அறிந்து செல்ல ஆசைப்படுவார்கள். அதனல் தஞ்சாவூருக்கு அடிக்கடி பிற இடங்களிலுள்ள வித்துவான்கள் வந்து சம்மானம் பெற்றுக்கொண்டு போவார்கள். அவர்கள் தஞ்சைக்கு வந்து, அங்குள்ள வித்துவான்களோடு கலந்து மகிழ்ந்து சென்ற பின்பு தம்மை ஆதரிக்கும் சமஸ்தானதிபதிகளிடம் சொல்லித் தஞ்சை வித்துவான்களைத் தம்மிடத்திற்கு வந்து உபசாரம் பெற்றுச் செல்லும்படிச் செய்வர்.

இதனல் தஞ்சை வித்துவான்கள் மைசூர் முதலிய சமஸ்தானங்களுக்கும் சென்று தங்கள் வித்தையை வெளிப்படுத்தி சம்மானமும் புகழும் அடைந்தனர். இத்தகையோரது வரிசையிலே ஒருவராக விளங்கியவர் துரைசாமி ஐயர்.



மகாமகோபாத்தியாய தாக்ஷிணத்ய கலாநிதி,

டாக்டர் உ. வே. சாமிநாதய்யர்

ஒருசமயம் ஆந்திர தேசத்திலுள்ள ஒரு சமஸ்தானத்தி லிருந்து வித்துவான் ஒருவர் தஞ்சைக்கு வந்தார். அவர் துரைசாமி ஐயரைப்போலவே வாய்ப்பாட்டிலும், பிடில் வாத்தியத்திலும் சிறந்தவர். அவர் வந்திருந்த காலத்தில் அவரது வினிகை அரசர் முன்னிலையில் நடைபெற்றது. தம்முடைய சிறந்த ஆற்றலை அவர் காட்டினர். யாவரும் அவருடைய சங்கீதத்தைக் கேட்டு இன்புற்றனர். அரசரும் அவ்வப்போது அந்த வித்துவானைப் பாராட்டிக்கொண்டே இருந்தனர். பல சங்கீத வித்துவான்களைப் பரிபாலித்து வரும் ஓரரசர், அந்த வித்துவான்களுக் கிடையில் வீற்றிருந்து, அவர்கள் முன்னிலையிலே தம்மைப் பாராட்டும்பொழுது, ஆந்திர வித்துவானின் உள்ளத்தில் சிறிது கர்வம் உண்டாயிற்று; "இங்கே நம்மைப் போலப் பாடுபவர் இல்லையெனத் தோற்றுகிறது. இவ்வரசர் நம்முடைய சங்கீதத்தில் மயங்கிவிட்டார். இவரிடத்தில் இன்னும் நமது ஆற்றலைக் காண்பிக்க வேண்டும்" என்று அவர் எண்ணினர். அரசர் மிகவும் சுலபராகப் பழகியதால் அவரிடம் ஒரு விண்ணப்பம் செய்துகொள்ளலானர்.

"இங்கேயுள்ள வித்துவான்களில் யாரேனும் என்னேடு போட்டிபோட்டால் என்னுடைய திறமை நன்ருக வெளியாகும்" என்று தம்முடைய உத்ஸாகமிகுதியால், அவர் அரசரைநோக்கிக் கூறினர். அரசர் அதைக்கேட்டுப் புன்முறுவல் பூத்துக்கொண்டே, "அதற்கென்ன ஆக்ஷேபம்? அப்படியே செய்யலாம். நாளைத்தினம் நம்முடைய வித்துவான்களில் ஒருவர் உங்களோடு பாடுவார்" என்று கூறினர். ஆந்திரதேச வித்துவானுக்கு உச்சி குளிர்ந்துவிட்டது.

இந்த சம்பாஷணையைக் கேட்டுக் கொண்டிருந்த தஞ்சை வித்துவான்களும் உள்ளம் பூரித்தனர். வந்த வித்துவான் அகங்காரம் கொண்டிருப்பதை அறிந்த அவர்கள் சோழநாட்டுச் சங்கீதம் அவருடைய பாட்டுக்கு இம்மியளவும் குறைந்ததன்று என்பதை நிரூபிக்க வேண்டுமென்று ஒவ்வொருகணமும் துடித்துக்கொண்டிருந்தனர். ஆனல் அதற்குரிய சந்தர்ப்பத்தை அரசர் தரவேண்டுமேயென்று ஆவலோடு நோக்கியிருந்த அவர்கள் தங்கள் விருப்பப்படியே தக்க சமயம் வாய்த்ததை அறிந்து எல்லையற்ற மகிழ்ச்சியை அடைந்தனர். தமக்குள் எவ்வகையிலும் சிறந்த ஒருவரை அந்த ஆந்திர வித்துவானேடு பாடுவதற்குத் தேர்ந்தெடுத்து அரசரிடம் தெரிவித்தார்கள். அரசரும் அங்கீகரித்தார். அவர்களால் அங்ஙனம் தேர்ந்தெடுக்கப் பெற்றவர் பதினைந்து மண்டபம் துரைசாமி ஐயரே.

மறுநாள், சங்கீத வாதம் நடைபெறப் போகின்றதென்ற செய்தி நகர்முழுவதும் பரவியது. வித்துவான்களும் சிஷ்யர்களும் மறுநாளை மிகவும் ஆவலோடு எதிர்பார்த்தனர். ஆந்திர வித்துவானே மறுநாள் தம்முடைய வித்தைக்குத் தனிமதிப் பொன்று

ஏற்படப்போவதாக எண்ணி இறுமாப்புடன் இருந்தார்.

விடிந்தது. அரசர் முன்னிலையில் ஒரு மகாசபை கூடியது. வித்துவான்களும், ரஸிகர்களும் குழுமியிருந்தனர். தஞ்சை சமஸ்தானத்தின் சார்பில் பதினைந்து மண்டபம் துரைசாமி ஐயர் வித்துவான்களுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுப் பணிவுதோன்ற முன்னே அமர்ந்திருந்தார். அவருக்கு எதிரில், ஆந்திர தேச வித்துவான் இருந்தார். அரசர் தம்முடைய ஆசனத்தில் வீற்றிருந்தார். சங்கீத வித்தையிலும், பிராயத்திலும் முதிர்ந்த வித்துவான்கள் சிலர் அந்த வாதத்திற்கு விதாயகர்த்தர்களாக நியமிக்கப்பெற்று அரசருக்கருகில் உட்கார்ந்திருந்தனர். பிடில், வாய்ப்பாட்டு இரண்டிலும் வாதம் நடைபெறும்படி ஏற்பாடு செய்யப் பெற்றது. முதலில் இருவரும் வாய்ப்பாட்டுப் பாடுவதென்றும், அப்பால் இருவரும் வாத்தியம் வாசிப்பதென்றும், பிறகு ஒருவர் பாடுவதை மற்றவர் பிடிலில் வாசிப்பதென்றும் வரையறை செய்து கொண்டார்கள்.

முதலில் ஆந்திர வித்துவான் பாடினார். சங்கீதத்தில் அவருக்கிருந்த பயிற்சி அப்பொழுது நன்றாக வெளிப்பட்டது. துரைசாமி ஐயரிடம் பொறாமை கொண்டிருந்த சில இளைஞர், "சரி சரி; நமது சமஸ்தானத்தின் கௌரவம் இன்றோடு போய் விடும்" என்று எண்ணினார்கள். ஆனால் அப்படி ஒன்றும் நேரவில்லை. அவர் பாடியவற்றையெல்லாம் துரைசாமி ஐயர் அப்படியே பாடிக் காட்டினார். பிறகு துரைசாமி ஐயர் பாடியவற்றை வந்த வித்துவான் பாடிக் காட்டினார். இவ்வாறு அந்தச் சங்கீத வாதத்தின் ஒரு பகுதி ஒருவருக்கும் வெற்றியோ தோல்வியோ இல்லாமல் முடிந்தது. அப்பால் வாத்திய வாதம் தொடங்கியது. ஆந்திர சமஸ்தானத்து வித்துவான் பிடில் வாத்தியத்திலே சிறந்தவர். அவருடைய வாசிப்புக்கு முன் பிற சமஸ்தானங்களில் உள்ளோர்யாரும், தலைவணங்கும் நிலையினரே யாவர்.

துரைசாமி ஐயர் தைரியமாகத் தம் வாத்தியத்தை எடுத்து வாசித்தார். எந்த நிமிஷத்தில் துரைசாமி ஐயர் தோல்வியுறுவாரோ வென்று பொறாமைக்காரர் சிலர் எதிர்பார்த்திருந்தனர். தெலுங்கு நாட்டு வித்துவான் நிச்சயமாகத் தம் வாத்தியத்துக்கு நேராகத் துரைசாமி ஐயர் வாசிக்க இயலாது என்றே எண்ணியிருந்தார். அவர் நினைத்தபடி நடக்கவில்லை. தாம் பிடித்த பிடிப்பையெல்லாம் துரைசாமி ஐயர் தவறுமற் பிடிப்பதைப் பார்த்து அவரே ஆச்சரியமடைந்தார். பிறகு துரைசாமி ஐயருடைய முறை வந்தது. அவர் பிடிலில் வாசித்ததை மற்றவர் அணுவளவும் பிசகாமல் தம்முடைய வாத்தியத்திலே வாசித்துக்காட்டினர். இவ்வாறு இரண்டாம் பகுதியும் பூர்த்தியாயிற்று. அப்பால் மூன்றாவது போர் தொடங்கியது. ஆந்திர வித்துவான் பாடினார்; துரைசாமி ஐயர் பிடில் வாசித்தார். அந்தப் போரில் சபையிலுள்ள அத்தனைபேரும் ஒன்றியிருந்தனர். பொழுது போவதே தெரியவில்லை. அரசரும் தம்மை மறந்து அதில் ஈடுபட்டனர். தாம்நெடுநாளாக அப்பியாசம் செய்து கைவரப்பெற்ற அரிய வித்தியாசாமர்த்தியத்தையெல்லாம் தெலுங்கு தேச வித்துவான் எடுத்துக்காட்டினார். அவருடைய குரல் போன வழியே துரைசாமி ஐயருடைய கை சென்றது. அந்த வித்துவானது சாரீர வீணையில் உண்டாகிய சங்கீதத்தின் ஒவ்வோர் அம்சத்தையும் துரைசாமி ஐயர் தம்முடைய பிடில் தந்தியிலே எழுப்பிக் காட்டினார். தஞ்சாவூர் வித்துவான்களுக்கே அவருடைய வாசிப்பு அளவற்ற ஆச்சரியத்தை உண்டாக்கியது. பிராயத்தில் முதிர்ந்த வித்துவான்களும், அவருக்கு ஆசிரிய நிலையிலே உள்ள பெரியோர்களும், "இந்தப் பிள்ளையாண்டான் இவ்வளவு வித்தையை இத்தனை நாள் எங்கே அடக்கிவைத்துக் கொண்டிருந்தான்! இதுவரையில் இந்த சாமர்த்தியத்தை வெளியிடாமல் இருந்தானே!" என்று வியந்து உள்ளம் பூரித்தனர். ஆந்திர தேச வித்துவானுடைய மனத்திலோ வர வர உத்ஸாகம் குன்றியது. 'இனிமேல் இந்த சமஸ்தானத்தில் நம் ஜபம் பலியாது' என்றே அவர் உறுதிசெய்துகொண்டார்; ஆனாலும் அவருடைய மானம் இறுதிவரையில் போராட வேண்டுமென்று அவரை ஊக்கியது. அவர் பாடிக்கொண்டே வந்தார்.

ஒருவகையாக அவர் பாடி நிறுத்தினார். அதுவரையில் வெற்றியோ தோல்வியோ ஒருவர் பக்ஷமும் செல்லவில்லை. தம்மோடு யாராலும் போட்டிபோட முடியாதென்று வந்தவர் எண்ணிய எண்ணந்தான் தோல்வியுற்றது. அதன் பின்பு துரைசாமி ஐயர் பாட, மற்றவர் பிடில் வாசிக்க வேண்டியது ஒன்றுதான் எஞ்சியிருந்தது. அவ் வித்துவானுடைய முகம் ஒளியிழப்பதை அரசர் கண்டார். "இதோடு நிறுத்திக்கொள்ளலாமே; உங்களுக்கு மிகுந்த சிரமம். துரைசாமி ஐயர் பாடுவதை நீங்கள் வாசிக்க வேண்டியது இப்பொழுது அவ்வளவு அவசியமாகத் தோன்றவில்லை" என்றார். அவர் அதற்கு இணங்கவில்லை; "இல்லை, இல்லை; நாம்செய்து கொண்ட நிபந்தனையிற் பிறழக்கூடாது. அவர் பாடட்டும்; நான் வாசிக்கிறேன். இவ்வளவு அருமையான வித்துவானோடு வாசிக்க நான் எவ்வளவோ புண்ணியம் செய்திருக்கவேண்டும்" என்றார். அவருடைய குரலிலே பழைய மிடுக்கு இல்லை; பணிவின் சாயை புலப்பட்டது.

நிபந்தனையின்படியே துரைசாமி ஐயர் பாட ஆரம்பித்தார். அவருக்கு ஒவ்வொரு விநாடியும் உத்ஸாகம் ஏறிக்கொண்டே வந்தது. ஆந்திர வித்துவான் துரைசாமி ஐயருடைய வாய்ப்பாட்டைப் பிடிலில் வாசித்துக் கொண்டு வந்தார். ஒரு கீர்த்தனம் முடிந்தது. "இன்னும் ஒரு கீர்த்தனம் ஆகட்டுமே" என்றார் ஆந்திரர். துரைசாமிஐயர்ஒருசிறு கனைப்புக்கனைத்துக் கொண்டார். சிங்கமொன்று குகைக்கு வெளியிலே புறப்படுவதற்குமுன் செய்யும் கர்ஜனையிலுள்ள கம்பீரம் அதில் இருந்தது. அவர் தம்முடைய வாய்ப்பாட்டையும், பிடில் வாத்தியப் பயிற்சியையும் அந்த மகா சபையில் நிரூபித்ததோடு திருப்தி உறவில்லை. தம்முடையசாகித்திய சக்தியையும்வெளிப்படுத்த வேண்டுமென்றெண்ணினார். அவருக்கிருந்த மனவெழுச்சி அவருக்குத் துணை செய்தது. போட்டிபோடும் வித்துவான் ஓர் ஆந்திரராதலின் ஒரு புதிய தெலுங்குக் கீர்த்தனத்தை அந்தச் சமயத்திலேயே பாடிக்காட்ட வேண்டுமென்றும், முடிந்தால் வாசிக்க முடியாமல் செய்து அந்த வித்துவானைக் கலங்க வைக்கவேண்டுமென்றும் அவர் யோசித்தார். அந்த யோசனையைச் செய்வதற்கு வெகு நேரம் ஆகவில்லை. மின்னல்போல ஒரு கருத்து அவர் மனத்திலே தோற்றியது. கீர்த்தனம் ஒன்றைப் புதிதாகப் பாடத் தொடங்கிவிட்டார்.



கௌரி சிந்தாமணி:—கால்பட்ட வெட்டை ரோகத்திற்கும், சர்ம வியாதிகளுக்கும். கோபால ஔஷதாலயம், சீயாழி.

"ஆடினம்ம ஹருடு த்ருகுடுத தையனி" என்று பல்லவியை ஆரம்பித்தார். சிவபெருமானது திருநடனத்தை வருணிக்கும் பொருளையுடையது அக்கீர்த்தனம். சிவபெருமான் 'திருகுடுத தை யென்று ஆடினன்' என்பது அதன்பொருள். அநுபல்லவி அந்தப் பொருளைச் சிறப்பித்து நின்றது. 'அவனுடைய நடனத்தைக் கண்ட கிரிகன்யையாகிய உமாதேவி சபாஷென்று சொல்ல, அதனைக் கேட்டுக் கொண்டும் அப்பிராட்டியைப் பார்த்துக் கொண்டும் வர வேகமாக நடனமாடினன்' என்பது அதன் கருத்து. சரணமும் வெளியாயிற்று. 'சிவபெருமான் திருச்செவியில் குழையும் தோடும் ஆடின; கங்கையணிந்த திருமுடி குலுங்கியது; சடை விரிந்தாடியது; சிறு நகை முத்துப்போலத்தோன்றியது; திரிபுரஹரனாகிய சிவபெருமான் கிர்ர்ர்ரென்று சுழன்று ஆடினன்' என்பது சரணப் பொருள். 'சுழன்று நடன மாடினன்' என்னும் கருத்துடைய "கிர்ர்ர்ரனி திருகி யாடினம்மா" என்ற பகுதியைத் துரைசாமி ஐயர் பாடினபோது ஆந்திர வித்துவானது கை தளர்ந்து விட்டது. அதுகாறும் துரைசாமி ஐயருடைய உத்ஸாகமும் அவருடைய சாகித்தியமும் அந்தச்சாகித்தியப் பொருளும் ஆந்திர வித்துவானது கருத்தும் கையும் ஒன்றி யாவரையும் பிரமிக்க வைத்தன. 'கிர்ர்ர்ரனி' என்ற சப்தம் உண்டானவுடன் அதைப் பிடிக்க மார்க்கமில்லாமல் ஆந்திர வித்துவான் தவித்தார். உயிருள்ள சாரீர வீணையோடுஉயிரற்ற நரம்பு போராட முடியுமா? சந்தோஷ ஆரவார மொன்று அப்பொழுது சபையில் எழும்பியது. 'கிர்ர்ர்ரனி' என்ற சாகித்தியத்தைத் தொடர்ந்து அந்த ஆரவாரம் எழுந்தது பரமேசுரவரனது பரமானந்த தாண்டவத்தில் திசை முழுதும் எழுந்த முழக்கத்தை யொத்தது.

ஆந்திரவித்துவான் வாத்தியத்தைக் கீழே வைத்தார்; துரைசாமி ஐயருக்கு முன் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்தார்; "நான் தோற்றேன்; என் கர்வம் ஒழிந்தது" என்று தழுதழுத்துக் கொண்டே கண்ணீர் துளிக்க அவர் கூறினர்.

அரசர் புன்னகை பூத்து அவரை இருக்கச் செய்து, "நீங்கள் மகாவித்துவான். பல இடங்களுக்குச் செல்லுபவர்கள். இந்தப் பால்ய வித்துவான் உங்கள் வாழ்த்தைப் பெறவேண்டியவர். உங்கள் காதிலே படும்படி இவருடைய சங்கீதம் உபயோகமானது இவருடைய பாக்கியம். உங்களுடைய வித்தையைப் பூரணமாக அநுபவிக்கும்படியான சந்தர்ப்பம் இன்று நேர்ந்தது நமக்கு மிகவும் சந்தோஷம்" என்று சமாதானமான வார்த்தைகள் கூறிப் பலவகையான சம்மானங்களைச் செய்தார்.

துரைசாமி ஐயருக்கு அன்று உண்டான கீர்த்தியும், அவர் அன்று இயற்றிய சுவைமிக்க அக்கீர்த்தனமும் சங்கீத உலகத்தில் இன்றும் நிலவி வருகின்றன.

(துரைசாமி ஐயருடைய பேரர் சாம்பசிவைய ரென்பவர் ஸ்ரீ மகா வைத்தியநாதையருடன் இருந்து பிடில் வாசித்துக் கொண்டுவந்தார். இந்த வரலாற்றை எனக்குக் கூறியவர் அவரே.)

வெற்றிமேல் வெற்றி!

மோட்டார் சைகிள் பந்தயத்தில்

மறுபடியும் DKW-வுக்கு ஜயம்



ஹாலந்து தேசத்து கிராண்டு பிரிக்ஸ் பந்தயத்தில் (அகில தேசப் பந்தயம்) பலமான போட்டிக்கிடையே எப்பொழுதும் ஜயிக்கும் வல்லமையுடைய DKW-வுக்கு மிகவும் மஹத்தான வெற்றி 250 C. C. பிரிவில் 1, 2, 4, 5-வது ஸ்தானங்களை DKW-தான் பெற்றது. தவிர 350 C. C. பிரிவிலும் 1 & 3-வது ஸ்தானங்களை DKW-தான் அடைந்தது.

★

DKW-வின் உழைப்பிற்கும் சக்திக்கும் நிகர் வேறு கிடையாது. DKW மோட்டார் சைகிள்களை உபயோகப்படுத்தி வருகிறவர்களைக் கேட்டால் இந்த உண்மை விளங்கும்.

★

டிஸ்ட்ரிப்யூடர்கள்:

ராயல் சைகிள் & மோட்டார் கம்பெனி

(கலீல் மான்ஷன்ஸ்)

மவுண்ட் ரோடு : : மதராஸ்

உலகிலேயே மிகப் பெரிய மோட்டார் சைகிள் தொழிற்சாலையின் உன்னத தயாரிப்பு

DKW AUTO UNION

காந்திவழி பழசா!

நாமக்கல்
ராமலிங்கம்
பிள்ளை

சாந்தவழி சத்தியத்தில் சலித்தாய் நெஞ்சே!
சன்மார்க்கப் பழக்கமில்லா சகவாசத்தால்
காந்திவழி பழசாகப் போனதென்று
கதிமாற மதிமாறிக் கருதுகின்றாய்;
மாந்தருக்குள் காந்தியைப்போல் புதுமைவாழ்க்கை
மற்றொருவர் நடத்தினதார் மனமேசொல்வாய்
ஆய்ந்தறிந்த அவன்தொடர்பை இகழ்வாயானால்
யாரும்இனி மீட்கவொண்ணா அடிமையேநீ. 1

'பெற்றெடுத்த தாய்மிகவும் பழசாய்ப்போனாள்
பிறிதொருதாய்வேண்டு'மென்று பேசுவார்போல்
நற்றவத்தால் நமக்கடுத்த தலைவன் காந்தி
நானிலத்தின் உயிர்க்கெல்லாம் தாயாம்நண்பன்
கற்றகதை சரித்திரங்கள் காணா சுத்தன்
கருணையென்ப தின்னதெனக் காட்டும்தீரன்
உற்றதுணை காந்திவழி பழசாமென்றால்
உய்வதற்கு வேறுகதி உண்டோநெஞ்சே! 2

'சந்திரனும் சூரியனும் பழசாய்ப்போனார்
சலித்துவிட்டோம் தினந்தினமும் அதையேபார்த்து
விந்தையுள்ள வேறிருவர் வேண்டுமே'ன்று
விரும்புவதை ஒக்குமன்றோ விளம்பாய்நெஞ்சே
இந்தநிலம் இதுவரையில் அறிந்தஉண்மை
இதைவிடமேல் இல்லையென நடந்துகாட்டி
சந்ததமும் மாறாத அறத்தைக் காக்கும்
சாந்தனந்த காந்தியைநீ சலித்ததன்மை! 3

'நித்தம்ஒரு காற்றினையே மூச்சுவாங்கி
நீர்நெருப்பு நிலம்வானில் புதிசுமின்றி
மெத்தவும்நாம் சலித்துவிட்டோம்' என்பாயானால்
மேதினியில் வேறுவழி உண்டோநெஞ்சே!
சத்தியஞ்சேர் சாந்தவழி அதையேநித்தம்
சாதிப்பான் காந்தியென்று சலிப்பாயானால்
பத்தியத்தைப் பாதியிலே முறித்தாற்போல
பாடுபட்டும் பயனடையாப் பதரே ஆவாய். 4

மாறுகின்ற சிறுபொருள்கள் மயக்கத்தாலே
மாறாத உண்மைகளை மறந்தாய்நெஞ்சே
கூறுபல மாச்சரியம் குறையநம்முள்
குற்றமற்ற சாந்தவழி வேண்டும்என்றே
வேறுபல துன்பவழி எல்லாம்விட்டு
வெகுபுதிய காந்திவழி விரும்பிக்கொண்டாய்
சேறுபட்ட உலகநடை மீட்டும்சேர்ந்து
செய்தஅருந் தவப்பயனைச் சிதறுகின்றாய். 5

கலகமெல்லாம் கைகோர்த்துக் களிகூத்தாட
கரடிபுலி சிங்கமென மனிதர்சீற.
அலகைபற்றி யாட்டுதல்போல் அகிலம்அஞ்ச
அடிதடியும் கொலைகளவே அறம்போல்ஓங்க
உலகமெல்லாங் காந்தியையே உற்றுப்பார்த்து
உய்வதற்கோர் புதியவழி உரைத்தானென்று
பலகலையின் அறிஞரெல்லாம் புகழப்பார்த்தும்
பரிகசித்தாய் நீஅவனைப் பாவிநெஞ்சே! 6

அச்சமிக்க இருட்டறையில் அடைபட்டங்கே
அழுவதற்கும் ஜீவனற்றுக் கிடந்தஉன்னை
மிச்சமுள்ள மூச்சுமற்றுப் போகுமுன்னால்
மீட்டணைத்து மேனிசெய்து விட்டான்காந்தி!
இச்சகத்தில் அறிவறிந்தோர் என்றும்வாழ்த்தி
இன்பமிகும் காந்திவழி பழசாமென்றால்
பச்சையிளங் காய்புதிய தென்றுகொண்டு
பழுத்தபழம் பழசென்னும் பான்மையாகும். 7

ஹநுமான் ஆண்டு மலர் 1939.

ஏண்டி தங்கம் அழறே!

அந்த சந்த்ரு
கெட்டிக்காரப் பேர்வழி; ஏறிப்பிட்டான்; ஹோ ஹோ மரத்திலே உச்சாணிக் கிளையிலே!

அந்த முத்தண்ணா கண்ணை இப்படி வச்சுக்கொண்டு தடியைய சுத்திக்கொண்டு வரானே அதுக்குப் பயந்தா?



"டே அண்ணா என்னை அடிக்காதே" என்று கெஞ்சுகிறான் சுந்தரம்.

இத்தனை காபுராவையும் பார்த்து நம்ப ராஜம் சிரிக்கிறது. "வெறும் காத்துலே கழியை வீசினா இத்தனை பயமா" என்று கேட்கிறது.

காலச் சக்கரம் சுழலுகிறது



பாரத சரித்திரம் - மாதவாரி



ஹநுமான் தரிசனம்

"சுரபி" எழுதியது

கனவென்ன கனவே—என்றன்
கருத்தி லிருந்தொரு கணமகலா திந்தக் (க)

1. கற்பகக் காவோ—இது
கற்பகக் காவோ—என்னப்
பொற்பு மிகுந்து பொலிந்திடுஞ் சோலை (க)

2. சோலையிலெங்கும்—மலர்ச்
சோலையிலெங்கும்—வண்ணக்
கோலமிட்டா லென்னக் கொடிபடர்ந்தோடும் (க)

3. கோலத்தின் நடுவே—அந்தக்
கோலத்தின் நடுவே—ஒளிர்
மாலை விளக் கென்ன மதியொளி பாயும் (க)

4. மதியினை யெட்டி—அந்த
மதியினை யெட்டித்—தாமும்
கதிபெறலா மெனத் தாவும் மரங்கள் (க)

5. ஓர் மரந் தன்னில்—நல்ல
தோர் மரந் தன்னில்—ராமன்
சீர்பரவுந்தனிச் செம்மொழி கேட்டேன் (க)

6. கேட்டு நிமிர்ந்தேன்—மொழி
கேட்டு நிமிர்ந்தேன்—அங்கு
நாட்டிய நாட்டத்தில் கண்டதென் சொல்வேன் !(க)

7. கதிரொளி வட்டம்—தெய்வக்
கதிரொளி வட்டம்—அதில்
துதிசெயு மடியவர் துணைசெயும் வடிவம் (க)

8. கல்லன்ன மேனி—நெடுங்
கல்லன்ன மேனி—என்றும்
அல்லன்ன ராக்கதர் அஞ்சுறும் பாணி (க)

9. செம்பொன் மகுடம்—தூய
செம்பொன் மகுடம்—தாங்கும்
அம்புலி யென்ன அவிரும் வதனம் (க)

10. வீரந்திரட்டி—உள்ள
வீரந்திரட்டி—அதில்
ஈரம் புகுத்தி இழைத்தென்ன தோள்கள் (க)

11. பத்தித் தடாகம்—ராம
பத்தித் தடாகம்—எனப்
பரந்திட்ட மார்பிடைப் பணிமலர் கைகள். (க)

12. ராமவோ ராமா—ரகு
ராமவோ ராமா—என்றந்
நாமமே பேசிடும் நளின மலர் வாய் (க)

13. வச்சிர அரையும்—மெச்சும்
வச்சிர அரையும்—யாரும்
நச்சர வென்ன நடுங்கிடும் வாலும் (க)

14. ஏமனு மஞ்சும்—அந்த
ஏமனு மஞ்சும்—புய
வீமன் தன் விறலுடன் சோமன் தன் அளியும் (க)

15. என்று மிருப்பாய்—மைந்த
என்று மிருப்பாய்—என்றே
அன்றன்னை வாழ்த்திய அண்ணலைக் கண்டேன் (க)

16. அண்ணலைக் கண்டேன்—என
தண்ணலைக் கண்டேன்—இந்த
அண்டமெலாம் புகழ் அநுமனைக் கண்டேன் (க)

17. "அன்றொரு தேவி—ஐய
அன்றொரு தேவி—தன்னை
வென்றி கைக்கொண்டு விடுதலை செய்தாய் (அ)

18. இன்றெம தன்னை—ஐய
இன்றெம தன்னை—பண்டைத்
தன்திறல்மங்கித் தவிப்பது காணாய் (அ)

19. வெஞ்சிறை யிட்டார்—பரர்
வெஞ்சிறை யிட்டார்—அவள்
அஞ்சிறைக் கிளியென்ன அலமருகின்றாள் (அ)

20. கையினில் தளையும்—மலர்க்
கையினில் தளையும்—தூய
மெய்யினில் நாணமும் மேனி மெலிவும் (அ)

21. கண்டிரங்காயோ—ஐய
கண்டிரங்காயோ—சிறை
விண்டுவிளங்கிட விஞ்சைசெய் யாயோ" (அ)

22. என்று துதித்தே—தேவ
என்று துதித்தே—நின்று
மின் திரண்டன்ன அம் மேனியைப் பார்த்தேன் (க)

23. "மைந்தனே கேளாய்—தகை
மைந்தனே கேளாய்"—என
உய்ந்திட வகை யொன் றுரைத்தனன் கேளீர் (மை)

24. "அநுமனும் யானோ—சொல்லும்
அநுமனும் யானோ—அண்ணல்
அருள்வலி இவ்வொரு ஆவிக்குத் தானோ? (மை)

25. அநுமனும் நீரே—இந்த
அநுமனும் நீரே—அந்த
அடல்வலி வீமனும் ராமனும் நீரே (மை)

26. வீரமும் ஒன்றே—மைந்த
வீரமும் ஒன்றே—அது
யாரும் படைத்திட்ட தாயிடு மன்றோ? (மை)

27. தன் கையைக் கட்டி—மைந்த
தன் கையைக் கட்டி—எவர்
தன் கை தருவரென் றேங்குவ துண்டோ? (மை)

28. ஒன்று திரள்வீர்—இன்றே
ஒன்று திரள்வீர்—இனிச்
சென்றதில் ஒன்றையும் சிந்தை கொள்ளாதீர்" (மை)

29. ஊக்கத்தைக் கண்டால்—உண்மை
ஊக்கத்தைக் கண்டால்—அங்கே
உற்றிடுவோ மென்றன்" நாதனும் (மை)

30. இம் மொழி சொன்னான்—ஐயன்
இம் மொழி சொன்னான்—கேட்டுக்
கும்பிடு முன்னவன் கோலம் மறைத்தான். (க)



" ஊக்கத்தைக் கண்டால்—உண்மை
ஊக்கத்தைக் கண்டால்—அங்கே
உற்றிடுவோ மென்றன் நாதனும் யானும் "

சுசீந்திரத்திலுள்ள நாற்பதடி
ஹநுமான் விக்ரகம்
Photo by : Mr. OMATHANU PILLAI



“என்னடா அங்கே!”

Photo By
Mr. A. ARUNACHALAM B.A., B.L.,
Associate of the Royal Photographic Society.

மன்மத விஜயம்



சாலை அடி ஓரத்திலே
சாஞ்சிருக்கும் ஆலமரம்,
பாலைப்பழிக்கும் தட்டை தங்கர் தில்லாலே!—அதிலே
நீ பாஞ்சு குதிக்கப்போடி ! பொன்னே தில்லாலே!

Photo By
Mr. A. ARUNACHALAM B.A., B.L., A. R. P. S.

மொகல் லைன் லிமிடெட்

[1877-ல் ஸ்தாபிதமானது. ஹஜ்பிரயாணிகளை ஏற்றிச் செல்லும், பிரதான் கப்பல் கம்பெனி]

ஹஜ் பிரயாணத்திற் கேற்றது மொகல் லைன்

பம்பாய், கராச்சி, கல்கத்தா முதலிய நகரங்களிலிருந்து ஜிட்டாவுக்கு, நவீன மோஸ்தர் ஸ்டீமர்கள் ஹஜ் யாத்ரிகர்களுக்காக ஸ்பெஷல்கள் விடுகிறது இக்கம்பெனி

எங்கள் கப்பல்கள்

எஸ். எஸ். அக்பர் (4043 டன்கள்)

எஸ். எஸ். அலாவி (3566 டன்கள்)

எஸ். எஸ். ஜிஹாங்கிர் (3566 டன்கள்)



எஸ். எஸ். குஸ்ரு (4043 டன்கள்)

எஸ். எஸ். ரஹ்மானி (5463 டன்கள்)

எஸ். எஸ். ரிஜ்வானி (5448 டன்கள்)

எஸ். எஸ். 'இஸ்லாமி' (5879 டன் கப்பல்)

எஸ். எஸ். இஸ்லாமி:—இப்போதுள்ள எங்கள் கம்பெனிக் கப்பல்களுள் முதன்மையானது. நாகரிக வசதிகள் அமைந்தது என்பதை பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறோம். 100 பிரயாணிகளுக்கு, கீழேயுள்ள இரண்டு 'பெர்த்து'களில் முதல் வகுப்பு வசதிகள் செய்யப்பட்டிருக்கிறது. 'டெக்' பிரயாணிகளின் தொந்திரவில்லாமல், பிரத்தியேகமாக 'பிராமினேட்'டெக், போஜன விடுதி, 'டெக்'கில் லௌஞ்ஜ் சகல சௌகரியங்களும் செய்திருக்கிறது. தெர்மோ-டாங்கி முறையினால், காபின்களிலும், 'டெக்'கிலும் துல்லியமான காற்றோட்டமிருக்க வசதியுண்டு.

எஸ். எஸ். 'ரஹ்மானி,' 'ரிஜ்வானி':—இந்தக் கப்பல்களில் பல அபிவிருத்திகளியற்ற, கம்பெனியார் ஏராளமான பொருள் சிலவு செய்திருக்கிறார்கள். பம்பாயிலிருந்து செல்லும் யாத்திரிகர்கள், அத்புதமான கப்பல்கள் என்று சொல்லுவார்கள். அவ்வளவு சௌகரியங்கள் செய்யப்பட்டுளது. அதிக 'காபின்' வசதி, காற்றோட்டமுள்ள விஸ்தாரமான, தக்க இடவசதிகளுடன் ஸ்திரீகள், புருஷர்கள் இரு பாலர்க்கும் தனித்தனி 'லௌஞ்ஜ்'கள் ஏற்படுத்தியிருக்கிறோம். பிரார்த்தனைக்கென்றும் உலாவுவதற்கென்றும் இடவசதி நிறைய அளிக்கப்பட்டிருக்கிறது.

இதர பாஸஞ்ஜர், கார்கோ கப்பல்கள் :

பம்பாய், கராச்சியிலிருந்து ஷேஹர், மாகல்லா, ஏடன், பெர்பரா, ஜுபூதி, மஸோவா, ஸுடான் துறைமுகம், ஜிட்டா முதலிய இடங்களுக்கு ஒரு பக்ஷத்திற் கொரு கப்பல் போகிறது.

பம்பாய், கராச்சியிலிருந்து ஹாயி துறைமுகம், மோரிஸ் தீவு முதலியவற்றுக்கு 2 மாதத்திற் கொருமுறை கப்பல் செல்லும்.

இடவசதி :—எல்லா கப்பல்களிலும் 'காபின்', 'டெக்' இரண்டு வகுப்பு பிரயாணிகளுக்கு மிடமுண்டு.

எல்லா கப்பல்களிலும் முதல்தரமான போஜனம், அந்தந்த ஜாதிக்குத் தக்கவாறு தரப்படுகிறது.

For particulars apply to :

TURNER, MORRISON & Co., Ltd.

MANAGING AGENTS :

16, Bank Street, BOMBAY.

Telegrams : "MOGUL" Telephone : 26561.

GRAHAMS TRADING Co. (INDIA) Ltd.	TURNER, MORRISON & Co., Ltd.
KARACHI.	6, Lyons Range, CALCUTTA.
Telegrams : "GRAHAMS"	Telegrams : "TURNERS"

உலர்ங்குசூர்?



தனவந்தன் :
லிம் ஸேய் ஹிங்.
அவன் மகள் :
ஷிங் போ.
வியாபாரி :
பா ஸோ லியாங்.
அவன் குமாரர்கள் :
(1) ஜீ பெய்க்
(2) ஆஹ் ஷீன்

தென் சீனம். யாங் ஸீகியாங் நதியின் உபநதி மலைப் பிரதேசங்களைக் கடந்து சமவெளியை யடையும் நிலம். தென் கரைக்கப்பால் அரைக் காத தூரத்தில் காடுகள் அடர்ந்த மட்டமான மலைகள். நதிக்கும் மலைகளுக்கும் நடுவேயுள்ள சரிவுகளில் தேக்கங் காடுகள். வடகரைகளிலுள்ள சமவெளிகளில் கண்ணிற் கெட்டியவரையில் நெற்பயிர் செழித்திருக்கும். இந்த தேக்கங்காடுகளும், நெல் வயல்களும் சுமார் நூறு சதுர மைல்கள் ஏக போகமாய் ஒருவருடைய ஆதீனம். அவர் தான் லிம் ஸேய் ஹிங். கொழுத்த பணக்காரர். பணத்துடன் சகல போகங்களும் செல்வாக்கும் படைத்தவர்.

பயன் என்ன? மனைவி, பதினெட்டு வருடங்களுக்குமுன்பு, ஓர் பெண்ணைப்பெற்று காலமடைந்தாள். இறக்குந் தறுவாயில் தன் சிசுவின் க்ஷேமத்தை முன்னிட்டு, புருஷனை மறு விவாஹம் செய்துகொள்ள வேண்டாமென்று கேட்டுக்கொண்டாள். புருஷனும் அப்படியே வாக்களித்தான். மறு விவாஹம் செய்து கொள்ளாது பேச்சைக் காப்பாற்றினானும், மற்றப்படி ஆடி ஓடித் தனது இளமையைச் சீக்கிரமே பழுக்க வைத்து, நாற்பத்தைந்து வயதிலேயே முதுமையடைந்து மூலையில் ஒடுங்கி உட்கார்ந்தார்.

அவனது ஒரே மகள்தான் ஷிங் போ. அவளுக்காக நியமிக்கப்பட்ட செவிலித்தாய்களும் எடுபிடி யாட்களும் ஏராளம். வீட்டைச் சூழ்ந்திருந்த நந்தவனங்களிலும் "மானினம் வருவபோன்றும், மயிலினம் திரிவபோன்றும்" அவளுடன் சுற்றிவருவார்கள். கூப்பிடு தூரம் போகவேண்டுமானாலும் குழந்தைக்கு நாற்காலி சவாரி. வேலை வெட்டி, விசனம் ஏதும் கிடையாது. தகப்பனின் செல்லப்பெண்ணல்லவா?

ஷிங் போ வுக்கு வயது பதினெட்டு. இயற்கையான கட்டழகி. அதில் பருவமும் சேர்ந்தால்? யௌவனம் கட்டுக் கடங்காமல் உள்ளூரக் குமுறுவது போலிருப்பாள். சில சமயங்களில் சேடிகளின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு ஆற்றின் கரையோரத்திற்குத் தனியே போய் விடுவாள். எங்கே போகிறாள், என் என்பது ஒருவருக்கும் தெரியாது.

நிலத்திற் கதிபதி லிம் ஸேய் ஹிங். நீருக்கதிபதி பா ஸோ லியாங். மலரும் மணமும் போல இருவரும் பால்ய முதல் அத்யந்த சிநேகிதர்கள். வயதுடன் அந்த சிநேகமும் வளர்ந்து கொண்டேதான் வந்தது.

ஆங்காங்குள்ள நீர்க்குட்டைகளில், ஆயிரக்கணக்கில் வாத்துகளும், பன்றிகளும் வளர்த்து வியாபாரம் செய்வது பா ஸோ லியாங் தொழில். இத்துடன் சுற்றிலும் பயிராகும் விளைபொருள்களைத் தனது எண்ணிறந்த படகுகளிலும் பாய் கட்டிக் கப்பல்களிலும் ஏற்றி, தூரத்திலுள்ள பட்டணங்களில் வியாபாரம் செய்வார். தரகு வியாபாரமும் உண்டு. பண்ட மாற்றினால் செல்வத்தைக் குவித்துக்கொண்டே இருந்தார்.

அவருக்கு இரு பிள்ளைகள். மூத்தவன் "ஜீ பெய்க்". வயது இருபத்தாறு. பரம சாது. தந்தை சொல் அவனுக்கு மந்திரம். வெளுத்ததெல்லாம் பால் என்று நம்பும் அப்பாவி. இளையவன் "ஆஹ் ஷீன்." வயது இருபத்து மூன்று. அழகன். தந்தையின் சொல்லென்றாலே "தவோ" கொட்டுவான் வினயன். தன் காரியத்தில் மட்டும் கண்.

ஓர் நள்ளிரவில் லிம் ஸேய் ஹிங் தனது பெண்ணை யழைத்து "அம்மா, உனக்கு நான், நமது வழக்கப்படி, வரன் பார்த்திருக்கிறேன். என் சிநேகிதனின் மூத்தபிள்ளை ஜீ பெய்க் நல்ல பையன். அடுத்த பௌர்ணமி இரவு கலியாணத்திற்கு வேண்டிய

ஏற்பாடுகள் நடந்தேறி வருகின்றன. நானோ நோய் வாய்ப்பட்டிருக்கிறேன். என் வாழ்வெல்லாம் இன்னும் சில மாதங்கள் தான். என் சொத்தெல்லாம் உங்களுடையது தான். ஜாக்கிரதையாக பிரம்மா" என்று மலர்ந்த முகத்துடன் சுபம் சொல்ல ஆரம்பித்து, கம்மிய குரலுடன் கண்களில் நீர்ததுப்ப முடித்தார்.

ஷிங் போ ஒன்றும் பதில் சொல்லவில்லை. தலை குனிந்து நின்றாள். "சரி; குழந்தைக்கு வெட்கம்போலும்" என்று தகப்பன் அசட்டுச் சிரிப்புச் சிரித்து கண்களைத் துடைத்துக் கொண்டான்.

பாவம்! அந்தக் கிழவனுக்கு, அந்த யௌவன நெஞ்சில் குமுறிய பயங்கரப் புயலைப் பற்றி என்ன தெரியும்!

குறித்த நாளில் சகல வைபவங்களுடனும் கலியாணம். விண், மண், தண் வாழும் பிராணிவகைகள் பல மனிதர்கள்வயிறுகளுக்குள் அனுப்பப்பட்டன. விருந்து பிரமாதம். வேடிக்கைகள், சங்கீதக் கச்சேரிகள், தெருக்கூத்துகள் முதலிய கோலாகலங்களும் அபாரம்.

பிள்ளை வீட்டார், பெண் வீட்டார் பணத்தைத் தண்ணீராகத்தான் மதித்தார்கள். அவ்வளவு தாராளம். அப்பாவி மாப்பிள்ளைக்குப் பரம திருப்தி. கலியாணம் முடிந்தும் மாப்பிள்ளை மாமனார் வீட்டிலேயே வசிக்கவும் வந்துவிட்டான்.

மூலையில் முடங்கி உட்கார்ந்து கிடந்த லிம் ஸேய் ஹிங் படுத்த படுக்கையானார். எண்ணி முப்பது நாட்களுக்கெல்லாம் பொட்டென்று பேய்விட்டார். தடபுடலாக, ஆடம்பரத்துடன் அவரைப் புதைத்தார்கள். இனி அவரது மகள் வைத்ததே சட்டம்.

ஷிங் போ தனது கணவனிடம் தாமரையிலைத்தண்ணீர் போல் பட்டும் படாமலும் தளுக்காக நடந்துகொண்டாள். அவள் முகத்தில் எப்பொழுதும் இளமுறுவல் தவழும். "இணைபிரியாப் பறவைகள்" என்று ஊரார் சொல்லிக் கொள்வார்கள். வெளியே வெறும் தோற்றத்தைக் கண்டு பேசுகிறவர்கள் வேறு என்ன சொல்வார்கள்!

வியாபார நிமித்தம் வெளியூர் சென்று ஆஹ் ஷீன் திரும்பிவரும் ஒவ்வொரு சமயமும், அண்ணன் வீட்டில்தான் முகாம் போடுவான். அண்ணியாரின் உபசரணை அவனுக்கு அதிகம். ஓர்நாள் வீட்டை விட்டு அண்ணியாரிடம் விடை பெற்றுப் போகும்

......இதோ மோதிரத்தைக் கழற்றி......

போது, "ஞாபகம் இருக்கட்டும், உடனே தகவல் அனுப்பவும்," என்று பேச்சோடு பேச்சாக எச்சரித்தான்.

அண்ணியின் கடைக்கண்ணிலிருந்து, "அதற்கென்ன, ஆகட்டும்," என்ற பதில் வந்தது.

சுற்றிலு முள்ளவர்களின் சள பள வென்ற பேச்சு மும்முரத்திலும் பிராயணத்தின்போது இயற்கையாக ஏற்படும் அமளி குமளியிலும், இந்த இருவருக்கும் நடந்த சம்பாஷணைச் சைகைகளை வேறுயாரும் கவனிக்க இடமின்றிப் போய்விட்டது.

இரண்டு மூன்று நாட்களாக, மனைவியின் சரஸ சல்லாபங்களால் ஜீ பேய்க் கள் குடித்தவனைப்போல மதிமயங்கி அவளது மரப்பாச்சியானான். அவள் என்ன செய்தாலும், சொன்னாலும் அவன் கடகட வென்று சிரித்துக் குழந்தை போலப்புரளும் நிலைமையை யடைந்துவிட்டான்.

அன்று இரவில் இருவரும் தமாஷாகப் பெசிச் சிரித்துக் கொண்டபோது ஜீ பேய்க் "ஷிங் போ! இதென்ன? உன்விரலி லிருக்கும், தம்பி கொடுத்த வைரமோதிரம் என் முதுகைக் கீறிவிட்டதா? பார்" என்று கொஞ்சினான்.

மங்கி எரிந்த விளக்கைத் தூண்டி அவனது முதுகை உற்று நோக்கினாள் ஷிங் போ. ஒரு துளிரத்தம் கசிந்திருந்தது. மெல்லிய பட்டினால் மிருதுவாகத் துடைத்து விட்டு, "ஒன்றுமில்லையே உறுத்தியிருக்கும். அவ்வளவுதான். இதோ மோதிரத்தைக் கழற்றிப் பெட்டியில் வைத்து விடுகிறேன். படுத்துக்கொள்ளுங்கள்; இப்படித்தூக்கம் விழித்தால் உங்கள் உடம்புக் காகாது" என்று மழலை பேசி அவனைத் தாலாட்டித் தூங்க வைத்தாள். ஆனால் அவள் நெஞ்சு படபடத்தது யாருக்குத் தெரியும்?

பொழுதுவிடிந்தது. சூரியன் மேகங்களின் மறைவில் ஒளிந்துகொண்டான். இயற்கை யன்னை பிசு பிசுவென்ற மழைத் தூற்றல்களினாலும், கம்மிய இடியோசையாலும் ஏதோ ஆழ்ந்த துக்கத்தை வெளியிடுவது போலிருந்தது.

"பொழுது ஏறிவிட்டது. இன்னுமா தூக்கம்? வேலையாட்கள் உங்களது உத்திரவிற்கு வாசலில் காத்திருக்கிறார்களே" என்று இனிமையாகக் கொஞ்சிக் கொஞ்சி கணவனைத் துயிலெழுப்பினாள் ஷிங் போ.

"உடம்பு கனக்கிறது; மயக்கமாகவும் இருக்கிறது. கொஞ்சம் சுடச்சுடத் தேத் தண்ணீர் அனுப்பு. வேலையாட்கள் நாளை வரட்டும்", என்று இழுத்தான் ஜீ பேய்க்.

"அக்கரைக்கு வைத்தியனுக்கு ஆள் அனுப்புகிறேன். யாரடி அங்கே! சுடச் சுடத் தேத்தண்ணீர் சீக்கிரம் கொண்டுவா, உம், ஓடு" என்று வேலைக்காரியை விரட்டினாள் ஷிங் போ.

"காற்றிலும், மழையிலும், வெள்ளத்தின் எதிர்ப் பெருக்கிலும் படகு அக்கரை செல்வது கஷ்டம். வைத்தியன் நாளை வந்தால் காரியம் ஒன்றும் முழுகிப்போகாது", என்று சமாதானம் சொன்னான்.

"எதற்கெடுத்தாலும் உங்களிடம் எட்டிக்குப் போட்டி" என்று மனஸ்தாபப் படுபவளைப் போல் கொஞ்சிப் பேசி நடித்துத் தன் கணவனிடம் நெருங்கி அவனை உற்று நோக்கினாள்.

தந்தம் போன்ற, மஞ்சள் பூத்த அவன் வெண் சரீரம் புகை நிறமாக மாறிவிட்டது. கண்கள் ஒளி மங்கி நீலம் பூத்திருந்தன. பேச்சும் குரலும் மங்கி விட்டன. தன் தளிர்க் கைகளினால் கணவனுக்குத் தேத் தண்ணீரை யூட்டினாள்.

"ஷிங் போ! என்னவோபோல் இருக்கிறது.. இருந்திருந்து மார்பை யடைக்கிறது...



...... புத்தர் பெருமானே ......

கண்களும் மங்குகின்றன....ஆய்விட்டது. நான் போகப்போகிறேன்...." என்று ஈன ஸ்வரத்தில் மூச்சுத் தடுமாறினான்.

"என்ன இப்படி பயப்படுகிறீர்கள்? பிதற்றுகிறீர்களே!"

"இல்லை ஷிங்! நான் போகவேண்டிய...."

"உங்களைவிட்டு நானும், ஒரு நாளும் உயிர் வாழமாட்டேன். உங்களுடன் நானும்......" என்று. கண் மடையைத் திறந்துவிட்டாள் ஷிங்.

"உன் ஆஸ்தி.......யௌவனம்....அழகு ....எல்லாம் வீணாகவா.......உன்னால் முடியாது.......".

"சொத்தை யெல்லாம் தர்மத்திற்கும், கடவுளுக்கும் சமர்ப்பித்துவிட்டு சன்யாசினி மடத்தில் சேர்ந்து பிட்சுணியாகத் திரிவேன்."

"முடியாது...வேண்டாம்...உன்னால்...."

"ஏன் முடியாது? ஆயுள் முழுவதும் வெள்ளையுடுத்து விதவையாகவாவது கழிப்பேன்."

"சீ, பைத்தியக்காரி....உன்னால் முடியவே...முடியாது...."

"எப்படி உங்கள் பிரிவை நான் சாசுவதப் படுத்துவது?" என்று அவன் கால்களைத் தனது கண்ணீரால் நனைத்தாள்.

"என் சமாதியின்மேல் நீ போடும் பிடி மண் உலரும்வரை நீ விதவையாய்த் துக்கம் கொண்டாடினால் போதும்," என்று தன் ஒடுங்கும் பலத்தையெல்லாம் சேர்த்து ஒருவாறு சொல்லி முடித்தான்.

பற்களை நறநற வென்று கடித்தான். மனைவியை ஏறிட்டு விழித்துப் பார்த்தான். ஆயாசம் மேற்கொண்டு தலை சாய்ந்தான்.... கண்கள் மூடின.

புத்த பெருமானே! பெண் என்னும் ஒரு பேய் உனது திருவடிக்கு ஒரு அப்பாவியை அனுப்புகிறாள். அவன் உன் அடைக்கலம்!

தகப்பனிடமும், தம்பியிடமும் இந்த துக்க சமாசாரத்தைத்தெரிவிக்க ஆட்கள்பறந்தோடினர். இருவரும் முறையே வந்து சேர்ந்தனர். மனைவி, தகப்பன், தம்பி மூவரில் மனைவியும் தம்பியும்தான் கோவென்றலறிப் புரண்டு புரண்டு அழுதவர்கள். இவர்களைத் தேற்றுவதே கஷ்டமாகிவிட்டது மற்றவர்களுக்கு.

ஈமக்கடன்கள் ஆரம்பமாயின. பௌத்தபிட்சுக்கள் சடங்குகள் செய்ய வந்து மொய்த்தனர். துக்கம் விசாரிக்க வந்தவர்க்கெல்லாம், சிற்றுண்டிகளும், அபின் உருண்டைகளும் தாராளமாக வழங்கப்பட்டன.

பத்தடி நீளம், எட்டடி சுற்றளவுள்ள ஒரு தேக்கங் கட்டையைக் குடைந்து, பல சித்திர வேலைகள் செய்து, அதனுள்ளே

ஜீ பெய்க்கின் பூத உடல் வைக்கப்பட்டது. வாத்திய கோஷம் முழங்க, கொடிகளையும், குடைகளையும், விசிறிகளையும் ஏந்தி இருவரிசையாகச் சென்றனர் ஆட்கள். உறவினரில் மூவர் தூவெண் ஆடைகளும், சணல் சாக்கு ஆடைகளும் அணிந்து சவப் பெட்டியின் பின் கதறிக்கொண்டே தொடர்ந்தனர். தேர் திருவிழாவைப் போலக் கூட்டம் தொடர்ந்தது.

பதமாக கொழுப்பில் வறுத்த கொழுத்த பன்றிகள், இடியாப்பக் கூடைகள், அபின் உருண்டைகள், பழ தினுசுகள், வாசனைத் தைல வகைகள், விலையுயர்ந்த பட்டுகள், கம்பளங்கள், பொன் வெள்ளி நாணயங்கள் நிறைந்த பைகள் எல்லாம் குழியில் சவப் பெட்டியுடன் அடுக்கப்பட்டன.

இவையாவும், பிரிந்த ஆத்மாவுக்கு ஒரு வருஷத்திற்கு வேண்டியவை யென்பது அந்த நாட்டு நம்பிக்கை.

அவற்றின்மேல் பிட்சுகளின் மந்திர ஓசை முழங்க, பெட்டி தாழ்த்தப்பட்டது. ஒருவர் பின்னொருவராய் ஓரோர் பிடி மண் தூவினர்.

தகப்பன், "என் ஆருயிர்ச் செல்வ மகனே! உனக்கா, நான் இப்படிக் கடமைப் படவேண்டும்?" என்று, தழதழத்த குரலில் கை கால்கள் நடுங்க பிடிமண் போட்டான்.

தம்பி, "அண்ணா, என்னை மன்னிப்பாயா?" என்று உள்ளம் உருகித் தானும் போட்டான்.

மனைவி இன்னது சொல்லி ஆர்ப்பரித்தாள் என்று சொல்ல இயலாது. இராவணன் யுத்தகளத்தில் உயிர் நீத்துக் கிடந்தபோது பத்தினி மண்டோதரி செய்தது (உயிர் நீத்தலைத் தவிர) எல்லாம் ஷிங் போ செய்தாள் என்று சொல்லுதல் மிகை யாகாது. அழுதாயிற்று; தான் கடைசியாய்ப் போட வேண்டிய பிடி மண்ணிற்காகக் கண்களைச் சுற்றிலும் நிலம் நோக்கி உருட்டினாள்.

மழையினால் எங்கும் ஈரமாகவும் சேராகவும் இருந்தது. சமீபத்தில், மேட்டின்மேல் மூங்கிற் புதற்கடியில், கொஞ்சமாக ஈரம் தட்டிய மண் காணப்படவே, அதை எடுத்துப் போட்டாள். தான் போட்ட பிடிமண் மேல் ஓர் வெண்பட்டுக் குடையையும் நட்டாள்.

அவ்வளவுதான், வல்லிக்கொடியே போல் துவண்டு சேடியரின் தோள்களின் மேல் சாய்ந்தாள். "எஜமானி அம்மாள் துக்கத்தால் மூர்ச்சித்து விட்டாள்" என்ற ஆரவாரம் எழுந்து பரவியது எங்கும்.

சிகிச்சைகள் செய்து மூர்ச்சை தெளிய வைத்தவுடன் ஷிங் போ நாற்காலியில் தூக்கிச் செல்லப்பட்டாள். தம்பி கல்லறையின் வாசற்படியில் நின்று வீடு திரும்பும் ஒவ்வொருவருக்கும் இரண்டிரண்டு வெள்ளிகள் (சுமார் ஒரு வராகன்) கொடுத்தான்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு, ஷிங் போ துக்கத்தின் அறிகுறியாக வெள்ளை ஆடைகள் அணிந்து, வெண்குடை பிடித்து, தன் கணவன் சமாதியை அடைந்தாள். தான் போட்ட பிடிமண்ணைச் சாவதானமாக உட்கார்ந்து பரிசோதித்தாள். அதைத் தான் கொண்டு வந்த மயில் தோகை விசிறியால் விசிறி ஆற்ற முயன்றாள்.

அதைக் கண்டவர்கள் "ஐயோ பாவம்! இவளுடைய காதலும் பதி பக்தியும் எத்தகையது!" என்று வியந்தனர்.

தூரத்தில், கால்மைலுக்கப்பால் ஒரு வாலிபன் இரண்டு நாற்காலிகளுடனும் நான்கு 'போயி'களுடனும், அந்த திசையையே பார்த்து, பரபரப்புடன் நின்று கொண்டிருந்தது அவர்களுக்கு எப்படித் தெரியும்!

கீழ்வானம் இருட்டியது. பளீர் என்று கண்களைப் பறிக்கும் மின் வெட்டிற்று. கட பட வென்று உறுமி யிடித்தது. சட்பட்டென்று இங்கொன்றும் அங்கொன்றாக மழைப் பெருந்துளிகள் விழ ஆரம்பித்தன.

ஷிங் போ குடல் தெரிக்க ஓட்டோட்டமாய் இளைஞனிடம் வந்து சேர்ந்தாள்.

"உலர்ந்து விட்டதா?", என்று ஆத்திரத்துடன் வினவினான்.

"இப்படியுமா ஆத்திரப்படுவீர்கள்? பொருமை என்பதே உங்களுக்குக் கிடையாது. உங்கள் தமையனார் எனக்கு இட்ட கட்டளையை நான் ஒருபோதும் மீறவே மாட்டேன்," என்று கடிந்தாள். புன்னகையுடன் ஷிங் போ.

"அதெல்லாம் சரி; நீ போட்ட பிடி மண் உலர்ந்ததா? அதைச்சொல் முதலில்," என்று கெஞ்சினான், ஆஹ் ஷீன்.

"ஆஹா, இன்னுமா உலராதிருக்கும்!" என்று முணுமுணுத்துக்கொண்டே ஓர் நாற்காலியில் தான் உட்கார்ந்து, மற்றொன்றில் அவனை உட்காரும்படி சமிக்ஞை செய்தாள்.

"துரையே! எங்கு செல்வது; உத்தரவு" என்று போயி வணங்கினான்.

"நாங்கள் சந்திக்கும் பழைய இடம்; ஆற்றின் கரை. மடையா! இது தெரியாதா?" என்று சீறினான் ஷீன்.

ஆற்றின் கரையில் ஓர் மரத்தின் வேரில் கட்டி வைக்கப்பட்டிருந்த, தங்களது பழைய மூடுபடகை யடைந்தனர்.

"நல்ல வேளை எல்லாம் சரியாகவே நடந்து விட்டது.......நான் கொடுத்த அந்த மோதிரம். அது எங்கே. அதிலிருப்பது கொடிய நாகவிஷம்......." என்றான் ஷீன்.

கண்மூடித்திறப்பதற்குள், விரலிலிருந்த மோதிரத்தைக் கழற்றி வெள்ளத்தில் வீசி எறிந்து விட்டு "அதோ!" என்று சுழன்று செல்லும் நீர் வட்டங்களைச் சுட்டிக் காட்டினாள் ஷிங் போ. அவன் மேல் ஒய்யாரமாகச் சாய்ந்து கொண்டு அவன் முகத்தைப்பார்த்து மோஹனப் புன்னகை செய்தாள்.

ஆனால் அவன் கொடுத்த அந்த வைர மோதிரம், அவளுடைய பெட்டியில், ஒரு இரகசிய அறையில், ஜொலித்துக் கொண்டிருப்பது அவனுக் கெப்படித் தெரியும்!



குறைந்த சிலவில்
வீடு நிறைந்த வெளிச்சம்
நீடித்த உழைப்பு, பிரகாசம்,
1000-மணி உத்தரவாதம்
ஒரு முறை
எலிக்ஸ் பல்பை
உபயோகித்துப் பாருங்கள்

ஸோல் ஏஜண்ட்ஸ் :
ஆர். எம். எஸ். அன் கோ.
55/57, ராட்டன் பஜார் — மதராஸ்

தென் இந்தியாவில் பிரபலமான இடம்

'பாஷன் சில்க் பாலெஸ்'
45, ரட்டான் பஜார்
மதராஸ்

பட்டு, பருத்தி நூல்
ஜவுளி
வகைகளில் உயர்தர மான சரக்குகளுக்கு சென்ற **49** வருடங்களாகப் பெயர் பெற்ற ஷாப்

ESTABLISHED 1890
Chellaram's
THE OLDEST AND MOST PROGRESSIVE HOUSE
CHELLARAM GIANCHAND

நாணயம், நயம், நாகரிகம், நல் வரவு — இவைகள்கூடியசேவை

'வைட் ஹவுஸ்'
86, வாலாஜா ரோட்
மதராஸ்

பெயரையும் இரு விலாசங்களேயும் நோக்குக **செல்லாராம்ஸ்** செல்லாராம் சியான்சந்து 1890-ம் ஆண்டு ஆரம்பமானது

PYE —லக்ஷக்கணக்கானவர் தேர்ந்தெடுத்தது!

எங்களது வாடிக்கைக்காரரிடமிருந்து, இதனைப்பற்றி அபாரமாகப் புகழ்ந்து கடிதங்கள் ஏராளமாக வந்துள. "சீதோஷ்ண நிலை எவ்வளவு மோசமாயிருப்பினும், பை ரேடியோ ரிஸீவர்கள் திருப்திகரமாக வேலை செய்து வருவது போற்றற்குரியது" என்கிறார்கள்

பை ரேடியோ ரிஸீவர்கள் ஒரு ஆயுள் காலம் உபயோகப்படும்படி அமைத்திருக்கிறார்கள். உஷ்ணம், குளிர், பனி எல்லா விதமான சீதோஷ்ண நிலையிலும் 1000 மணி நேரம் பரிசோதிக்கப்பட்டது. உஷ்ணப் பிரதேசத்தில் உபயோகிக்கையில் ஒரு வித கோளாறு மில்லாமலிருக்க, பேடண்டு வாகுமாடிக் பிரஷ்ஷரால் செய்யப்பட்ட டிரான்ஸ்பார்மர்கள், காயில் சுருள்கள் உபயோகிக்கப்பட்டிருக்கின்றன

பைக்குப் பதில்வேறொன்று வாங்க எண்ணிறல் மற்றொரு பை தான் வாங்கவேண்டும்

மாடல் நெ. **805**

மாடல் 805 ஏ.ஸி, டி.ஸி இரண்டிலும் அமைக்கலாம். 200/250 வோல்டு பலமுள்ளது. 53/80 வாட் கரண்டு செலவாகும். 4 வாட்டு அவுட் புட். உலக முழுதும் இந்தியா பூராவும் கேட்கக் கூடிய 4 வேவ்பாண்டுகள் உளது. ரெக்டிபையருடன் 6 வால்வுகளும், ஆட்டோமாடிக் வால்யூம் கண்டிரோல்களும் குரலைக்கட்டுப் படுத்தும் 4 ஸ்தானங்களும் அமைந்தது



பரீக்ஷித்துப் பார்க்கவும், கருவியைப் பற்றின முழு தகவல்களையும் கேட்டறியவும் உங்களூர் ஏஜண்டுக்கு எழுதுங்கள்:

தவணை முறையிலும் ஏற்பாடு செய்து கொள்ளலாம்

ஸ்பென்ஸர் & கம்பெனி, லிமிடெட், ரேடியோ இலாகா



சுவரும் சித்திரமும்

கேப்டன்
டி. வி. திருவேதி

“சுவரை வைத்துக் கொண்டு தானே சித்திரம் எழுத வேண்டும்” என்பது பழமொழி. இதை நம்முடைய தேக சுகத்தைப் பற்றிய பேச்சுகளில் அடிக்கடி உபயோகிக்கிறோம். ஆனால் நம்மில் எத்தனை பேர் அதைப் பற்றித் தீர யோசித்து, சுவரைப் பலப்படுத்த அக்கரையெடுத்துக் கொள்ளுகிறோம்?

உடம்பில் எவ்விதக் கோளாறுமில்லாமலிருக்கும் வரை “யாரும் நிகரில்லை; எதும் கவலையில்லை” என்பதுபோல ஆடிப் பாடித் திரிகிறோம். எதாவது சிறு தலைவலியே வந்து விட்டாலும் கூடப் பதறிப்போய், எண்ணாததெல்லாம் எண்ணி நெஞ்சம் புண்ணுகிறோம். பெரிய அபாயகரமான வியாதிகளிருக்கட்டும்; இந்த அற்பமான சில்லரை வியாதிகள் கூட நம்மை யணுகாதபடி தடுத்துக்கொள்ள வேண்டிய, முன்ஜாக்கிரதை மாத்திரம் எடுத்துக் கொள்ளுவதில்லை. வியாதி வந்தபின் டாக்டரையும், அனுதாபத்தையும் தேடித் தேடி யலைகிறோம்.

சரீரத்தை வியாதிகளிலிருந்து காப்பாற்றி வைத்துக்கொள்வதென்பது, எதும் பிரம்ம வித்தையல்ல. பிரமாதமாகக் கஷ்டப்பட்டுச் செய்ய வேண்டிய ஒரு காரியமல்ல.

தினசரி கொஞ்சநேரம், அறுபது நாழிகையில் ஒரு நாழிகை, ஒரு வேலையு மின்றி, சும்மா சோம்பேறியாக உட்கார்ந்திருக்கும் நேரத்தில், சுலபமாகச் செய்து கொள்ளக் கூடிய சாதனைதான் சரீரப் பாதுகாப்பு. காசு பணமும் செலவில்லை. கொஞ்சம் உற்சாகமும், உழைப்பு ருசியும் தான் அதற்குத் தேவையான முதல்.

ஒவ்வொரு நாளும் காலையில் படுக்கையைவிட்டு எழுந்தவுடன், ஒரு நாழிகை உடம்பை உழைத்து வேலை வாங்கி விட்டாலே போதும்; இந்தச் சில்லரை வியாதிகள் மட்டு மல்ல, படே படே வியாதிகள் கூடக் கிட்ட நெருங்க யோசிக்கும்; தயங்கும்.

நம்மில் அநேகருக்கு இம்மாதிரி எதாவது முன் ஜாக்கிரதை உழைப்பில் ஈடுபட ஆசையுண்டு. ஆனால் தேகமும், மனமும் கெஞ்சிக் கெஞ்சி “இந்தக் கஷ்டம் வேண்டாமே” என்கின்றன. இது சோம்பலால் எழும் பொய்க்கூச்சல் என்பதையு மறியாமல், “தொலைந்து போ” என்று விட்டு விடுகிறோம். ஆனால் இப்படி உடம்பினிடம், நாம் காட்டும் தவறான அனுதாபம், அந்த உடம்புக்கே நாளா வட்டத்தில், அபாயகரமாக முடிகிறது என்பதை நாம் உணருவதில்லை.

உடம்பு அப்படிக் கெஞ்சும் போது “எனக்குத் தெரியும்; பேசாமல் சொன்னபடி செய்” என்று கொஞ்சம் கடுமையாக அதட்டிவிட்டு, வேலை வாங்குகிறவர்கள்தான், காலக்கிரமத்தில் அதன் நற்பயனை அனுபவிக்க முடியும்.

“நாளை முதல் நான் அப்படியே செய்கிறேன். ஆனால் எந்த மாதிரி தேகப்பயிற்சி செய்யவேண்டும்” என்ற கேள்வி எழுகிறது.

எத்தனையோ பயிற்சி முறைகளிருக்கின்றன. ஒன்று இரண்டா?

உதாரணமாக ரொம்ப சுலபமானதும், சர்வ ரோக நிவாரணியும், சர்வரோக ரட்சணியுமான சிரசாஸனத்தை எடுத்துக் கொள்ளுவோம்.



……முதல் நிலை……

பழகுவதற்கும், செய்வதற்கும் சுலபமானது. பலனோ ஏராளமாகக் கொடுப்பது. எப்போது கண்டு பிடிக்கப்பட்டது என்று சொல்ல முடியாதபடி, நமது ரிஷி முனிவர்கள் காலத்தி லிருந்து வாழையடி வாழையாக வழங்கி வரும் ஆஸ்தி. நம்முடைய பாரத தேசத்தில், தேகப்பயிற்சி முறைகளிலெல்லாம் சிறந்த யோகாசன வரிசையின் சிரோரத்தினம் போல் விளங்குவது சிரசாஸனம். ஆசன வகைகளின் ராஜா என்று வர்ணிக்கப்பட லாயக்கானது.

சிரசாஸனத்தினால் ஏற்படக்கூடிய முதல் பலன், பின்னால் வரக்கூடிய பல வியாதிகளை அது தடுப்பதற்கும் முன், முன்பே சரீரத்தில் ஊறிப்போயுள்ள பல வியாதிகளையும் அடித்து விரட்டி விடுகிறது. மூளை சம்பந்தமான வியாதிகள், நரைமயிர் ரோகம், கண்ணில் ஏற்படும் கோளாறுகள், பலக்குறைவு, ரத்தத்திலுள்ள அசுத்தம், வயிற்றில் சேரும் அபாயங்கள் ஆகியவற்றை, போலீஸ்காரனைப்போல அடித்து விரட்டும் வேகமும், சக்தியு முடையது இந்த ஆஸனம்.

சிரசாஸனம் பழகுவதற்கு ரொம்ப சுலபமானது. வெகு சீக்கிரத்தில் வந்துவிடும்.

காலையில் எழுந்தவுடன் பல் விளக்கி ஸ்னானம் செய்து கொள்ள வேண்டியது. சுத்தமான ஒரு அறையிலாவது, திறந்த வெளியிலாவது, கீழே மெத்தென்று துணியை மடித்துப் போட்டுக் கொண்டு தலை கீழாக நிற்க வேண்டியது. இதுதான் சிரசாஸனம். தலைக்கு ஆதாரமாகவும், உடலின் எடை சமமாக நின்று தாங்கவும் கைகளை உபயோகித்துக் கொள்ளலாம்.

முதல் படத்தில் உள்ளபடி முதலில் உட்கார்ந்து கொள்ளவும். பிறகு இரண்டாவது படத்தில் கண்டபடி காலைத் தூக்க முயலவும். மூன்றாவது படம்தான் சிரசாஸனம். இந்த மூன்று நிலைகளையும் நன்றாகக் கவனித்துத் தெளிவு படுத்திக்கொண்டு, அதன் பின்னர் ஒவ்வொரு நிலையையும் செய்து பழக வேண்டும்.

இந்த ஆஸனத்தை, அதைப் பற்றி அறிந்தவர்களிடமிருந்து நேரடியாகப் பழகிக்கொள்வது



……இரண்டாவது நிலை……

தான் சிறந்தது. அதற்கு சௌகரியங்களில்லாதவர்கள், படத்திலுள்ள நிலைகளைக் கவனித்துப் பழகிக்கொள்ளலாம். அனுபவம் வெகு சீக்கிரத்தில் நிபுணத்துவம் அளித்துவிடும்.

பழகுவதற்கும் சில சுலபமான வழிகள் இருக்கின்றன. ஆரம்பத்தில் பக்கத்தில் ஒருவரை உதவிக்கு நிறுத்திக்கொண்டு கால்களை மேல் நோக்கித் தூக்கி நிறுத்தப் பழகலாம். ஆனால், அவருடைய உதவி யிருக்கிறதென்ற தைரியம் தானிருக்கலாமே தவிர, அவர் பிடித்துக்கொண்டால்தான் கால்கள் நிற்கும், இடுப்பும் கழுத்தும் தாங்கும் என்ற நிலைமை ஏற்பட்டுவிடக்கூடாது.

அப்படி உதவிக்கு ஆள் கிடைக்காதவர்கள், ஆரம்பகாலங்களில் சுவர் மூலைகளில் செய்து பழகிக்கொள்ளலாம். கால்களை ஒரேயடியாக உயர்த்த முடியவில்லை யென்று கவலைப்பட வேண்டியதில்லை. கொஞ்சம் கொஞ்சமாக உயர்த்திப் பழகலாம்; அதில் தப்பில்லை

எப்போதும் தலைக்கடியில் மெத்தென்று இருக்கும்படி ஒரு துவாலையையாவது, மடித்துப் போட்டு வைத்துக் கொள்ள வேண்டும்.

கழுத்தை அப்படி யிப்படி வளைத்து விடாமல் நேராக வைத்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் "பிள்ளையார்பிடித்த...." கதையாகக் கழுத்துச் சுளுக்கிக் கொள்ளும். புதுப் பழக்கத்தில் கழுத்தில் வலியெடுப்பதாகத் தோன்றினால், ஆஸனம் செய்து முடித்த பிறகு, கொஞ்சம் விளக்கெண்ணையைத் தடவி உருவி விட்டுக் கொள்ளலாம்.

இந்த ஆஸனம் செய்தபிறகு வேறு தேகப்பயிற்சிகளையோ, கடினமான வேலைகளையோ உடனே செய்யக்கூடாது. இதைச் செய்து நிறுத்தியவுடன் கொஞ்ச நேரம் ஆஸ்வாசமாக உட்கார்ந்து, எழெட்டுத்தடவை மூக்கினால் நீண்ட மூச்சுகளாக இழுத்துவிட வேண்டும். பிறகு எழுந்து கொஞ்சம் உல்லாச நடை நடப்பது நல்லது. வேறு தேகப் பயிற்சிகளையோ, அல்லது ஆஸனங்களையோ செய்பவர்கள், முதலில் அவற்றைச் செய்துவிட்டு, சிரசாஸனத்தைக் கடைசியாக வைத்துக் கொள்ளவேண்டும்.

ஆஸனம் செய்த அரைமணி நேரத்திற்குப் பிறகு வெறும் பால் மாத்திரம் மிதமான சூட்டுடன் சாப்பிடுவது நல்லது. உப்புக் காரம் நிறைந்த பதார்த்தங்கள், மாமிசம், எண்ணையில் செய்த பதார்த்தங்கள் முதலியவற்றை ஒதுக்கிவிடவும்.



......இரண்டாவது நிலை......

சாதாரணமாக இந்த எச்சரிக்கை விதிகளைக் கவனித்து அனுசரிக்க முடியாதவர்கள், இந்த ஆஸனத்தைச் செய்யாமலிருப்பதே நல்லது.

இதைப்பழகிச் செய்ய விரும்புகிறவர்கள் முதலில் ஒரு நிமிஷ நேரம் செய்ய ஆரம்பித்து, பின்னால், வாரத்திற்கு ஒரு நிமிஷம் வீதம் நேரத்தை அதிகரித்துக் கொண்டுபோகலாம். இப்படியே நாலைந்துவாரம் செய்து நன்ருகப் பழகிய பின், ஐந்து நிமிஷங்கள் வீதம் அதிகரித்துக் கொள்ளலாம். கடைசியாக தினசரி ஒரு நாழிகை அல்லது அரைமணிநேரம் தொடர்ந்து செய்யலாம்.

இந்த ஆஸனத்தைச் செய்வதற்கு வயது பருவம் என்ற பேதமே இல்லை. ஆயுள் உள்ளவரை தினசரி செய்வதால் ஆயுளும் விருத்தியாகும். அதற்கு அபாயகரமாக வரும் வியாதிகளும் கிட்ட நெருங்க பயப்படும். இதைத் தொடர்ந்து செய்துவருகிறவர்களின் ஞாபகசக்தி, சிந்தனை எல்லாம் ரொம்பக் கூர்மையானதாகவும், தீவிர வேகமுடையதாகவு மிருப்பது அனுபவம்.

எனக்குத் தெரிந்து வட இந்தியாவில் ஒரு பிரபல ஆயுர்வேத வைத்தியர், குடல் சம்பந்தமான சில வியாதிகளுக்கு சிரசாஸனத்தையே வைத்தியமாகச் சொல்லுகிருர். அவருடைய யோசனைப்படி சிரசாஸனத்தைப் பழகி, தினசரி அனுசரித்து வந்ததால், ஒருவர் "குடல் அனுபந்தம்" என்ற வியாதியைத் தீர்த்துக்கொண்டு விட்டார்.

"அப்பெண்டிஸிட்டீஸ்" என்னும் இந்தக் "குடல் அனுபந்த" வியாதிக்கு சிரஸாஸனம் ராஜ வைத்தியம் எனலாம். அஜீரணம், மலச்சிக்கல் முதலிய வியாதிகளுக்குக் கைகண்ட மருந்து இது.

இந்த முறையால் வியாதிகள் தீருவது மட்டுமின்றி, உடம்பில் அனாவசியமாக மூலிகைச் சத்தோ, அல்லது மருந்து நெடியோ ஊறுவதற்கும் இடமில்லாமல் போய்விடுகிறது. இயற்கை முறையினால் வியாதி சொஸ்தமடைகிறது.

இந்திய தேசியத் தலைவர்களில் ஒரு ஒப்பற்ற மணியாக விளங்கும் பண்டித ஜவாஹிர்லால் நேரு, இந்த ஆஸனத்தைத் தினசரி செய்துவருகிருர். இதைப்பற்றி அவரது சுயசரிதையில் கூடச் சொல்லியிருக்கிருர்.

இந்த ஆஸனத்தினால் ஏற்படக்கூடிய தேக சம்பந்தமான பலன்களைவிட, மனோநிலை சம்பந்தமான பலனைப் பற்றியும் ஒரு வார்த்தை. இந்த ஆஸனம் நிச்சயமாக நமது விவகார ஞானத்தையும், உலகனுபவப் பண்பையும் உயர்த்துகிறது என்று நிச்சயமாகச் சொல்வேன். எப்படி?

நாம் நேர் நிலையிலிருந்து பார்க்கும் அதே உலகத்தை, தலைகீழாகப் பார்க்கும்போது ஒவ்வொரு வகையிலும் நமது அனுபவத்திற்கு நேர் எதிர்க்கட்சி புலனுகுமல்லவா? இந்த அனுபவம் என்ன சாதாரணமானதா!

முதலெடுப்பில் கொஞ்சம் விசித்திரமாகத் தோன்றினாலும், சிரசாஸனம் செய்கிறவர்களின் மனோபாவம் நாளடைவில், அதிகப் பண்படைந்து விளங்குகிறதென்பது அனுபவம். செயலிலும், சொல்லிலும் ஒரு நிதானத்தையும், கம்பீரத்தையும் தோற்றுவித்து விடுகிறது இந்த ஆஸனம். திரேக நிலையை சமனப்படுத்தி ஒரே நிதானமாக வைப்பது போல, இந்த ஆசனம் மனோநிலையையும் பக்குவப்படுத்தி ஸ்திரப்படுத்துகிறது.



......சிரசாஸனம் : முன்புறம்......



......சிரசாஸனம் : பின்புறம்......

இவ்வளவு அழகான

பட்டும் இருக்கிறதா

பட்டணத்தில் !!!

ஆம்!

கிஷின்சன்ட்

செல்லாராம்

"மாடர்ண் ஷாப்"

181,
மவுண்ட் ரோட்
சென்னைப்பட்டணம்

இவ்விதம் வியந்து பாராட்டக்கூடிய கண்ணியம் வாய்ந்த புடவை
ரவிக்கை
ஜாக்கெட்
வகைகளும்

வாய்ல்
கிரேப்
ஜார்ஜெட்
ஷிவ்வோன் முதலியவைகளும் மற்றும் ஜவுளி தினுசுகளும் நிறைந்த ஷாப்பில் நீங்கள் வந்து வாங்கினல் சந்தோஷமும் இலாபமும் அடைவீர்கள்.

KISHINCHAND CHELLARAM
"THE MODERN SHOP"
181, Mount Road, MADRAS.

விலாசத்தைக் குறிப்பாய்க் கவனியுங்கள்

வாங்கும்போது லால்ஜி கோது அண்ட் கம்பெனியாரின் விலாசமும் எல். ஜி.

L. G. எல். ஜி. மார்க்கும்

பார்த்து வாங்குங்கள்



தேவர்கள் பயந்தது சரியா?

ஸ்ரீ பெ. நா. அப்புஸ்வாமி

முன்னொரு காலத்தில் சகரன் என்ற அரசன் ஒருவன் இருந்தான். அவனுக்கு அறுபதினாயிரம் பிள்ளைகள். அவன் அசுவமேத யாகம் செய்யத் தொடங்கினான்; அதன் பொருட்டு அலங்காரம் செய்த குதிரை ஒன்றை அதன் இஷ்டம் போல் சுற்ற விட்டான். யாகத்தினால் அவன் சிறப்படைந்து விடுவான் என்று அசூயை கொண்ட இந்திரன் அந்தக் குதிரையைக் களவாடி ஒளித்து வைத்தான். அப்போது சகரன் 'குதிரையைத் தேடுங்கள்' என்று தன் பிள்ளைகள் அறுபதினாயிரம் பேரையும் ஏவினான். அவர்கள் எங்கும் போய்த் தேடினார்கள். எவ்வளவு தேடியும் குதிரை அகப்படவில்லை. அரசனிடம் வந்து 'எங்கும் தேடியாயிற்று. ஓரிடத்திலும் குதிரையைக் காணவில்லை' என்று சொன்னார்கள். 'பூமியைத்தோண்டித் தேடிப்பாருங்கள்' என்றான் அரசன். அதன் பிறகு அவர்கள் ஆளுக்கு ஒரு யோஜனை விஸ்தீர்ணமென்று பூமியைப் பங்கிட்டுக் கொண்டு, பூமியைத் தோண்டத் தொடங்கினார்கள். அதைக் கண்ட தேவர்கள் பூமிக்குக் கேடுகாலம் வந்து விட்டது என்று பயந்து பிரம்மதேவனிடம் போய் முறையிட்டார்கள். அவர் அதைக் கேட்டு, 'அப்படி ஒன்றும் கேடு வந்து விடாது. நீங்கள் பயப்படவேண்டாம். வரும் கேடு முழுவதும் அவர்களுக்குத்தான் வரப்போகிறது' என்று தைரியம் சொன்னார். அந்தப்படியே அவர்களுக்கு ஆபத்து நேர்ந்தது. சகரபுத்திரர்கள் தோண்டின இடம் தான் சாகரம். இது இராமாயணத்தில் காணப்படும் கதை.

* * *

வாஸ்தவத்தில், சகரபுத்திரர்கள் தோண்டினதால் பூமிக்குக் கெடுதி உண்டாயிருக்குமா? உண்டாயிருந்தால் என்ன வகையான கெடுதி உண்டாயிருக்கும்? பூமியே இல்லாது தொலைந்து போயிருக்குமா? பூமி முழுதும் சாகரமாக — சமுத்திரமாக — ஆகியிருக்குமா?

* *

பூமியிலுள்ள மண்ணையும் கல்லையும் பாறைகளையும் வெட்டிக் கொண்டே போனால், அவற்றை வாரி அந்தரத்தில இறைத்துவிட முடியாது. ஏனெனில் பூமியினுடைய ஆகர்ஷண சக்தியால் அவை யாவும் பிணிப்புண்டவை. ஆதலால் அவை பூமியை விட்டு வெளியே போகத் திறமை யற்றவை. அவற்றை எவ்வளவு வீசி எறிந்தாலும், நாம் உயர எறியும் கல் மீண்டும் பூமியிலேயே வந்து விழுவது போல, அவை மீண்டும் பூமியையே வந்தடைந்தாக வேண்டும். ஆகையால் சகர புத்திரர்கள், யாதொரு தடையுமின்றி, ஆயிரக்கணக்கான வருஷங்களாகத் தோண்டிக் கொண்டேயிருந்தாலுங்கூட பூமியிலுள்ள மண்ணையும் கல்லையும் பூமிக்கு அப்புறத்திலே — பூமிக்கு வெளியே — தள்ளியிருக்கமுடியாது. ஆனால் மேடுகள் எல்லாவற்றையும் குறைத்திருக்கலாம். மலைகளை வெட்டித் தகர்த்துக் கடலில் கொண்டு கொட்டிச் சமதளமாக்க முயன்றிருக்கலாம். அப்படிச் செய்து கொண்டே போனாலுங்கூட உலகம் முழுவதையும் அவர்கள் சமமாக்கியிருக்கமுடியாது.

ஏன் தெரியுமா?

உலகத்திலே தற்காலத்திலே உயர்வுகளும் தாழ்வுகளும் இருக்கின்றன. பூமியின் நிலப்பரப்பிலே உயர்ந்த இடங்களை மலைகளென்றும், குன்றுகளென்றும், பீடபூமிகளென்றும், சமவெளிகளென்றும் சொல்லுகிறோம். தாழ்ந்து பள்ளமான இடங்களைக் குளங்களென்றும், ஏரிகளென்றும், கடல்களென்றும், சமுத்திரங்களென்றும் சொல்லுகிறோம். பூமியின் மேல் பரப்பிலே நிலமும் நீரும் காணப்படுகின்றன. ஆயினும் நிலத்தின் பரப்பைக் காட்டிலும் நீரின் பரப்பு அதிகம்; நிலத்தின் உயர்வைக் காட்டிலும் நீரின் தாழ்வு அதிகம். பூமியின் பரப்பைப் பத்துப் பங்காகப் பிரித்தால் அவற்றில் மூன்று பங்கே நிலம். மற்ற ஏழு பங்கும் நீர். நிலத்திலே உள்ள மலைச்சிகரங்கள் யாவற்றிலும் மகோன்னதமாக விளங்குவது எவரெஸ்ட் மலைச்சிகரம். அதன் உயரம் கிட்டத்தட்ட ஐந்தரை மைல். ஆனால் பசிபிக் மகாசமுத்திரத்திலே சிற்சில இடங்களிலே உள்ள ஆழமானது ஏழு மைலுக்கு அதிகமாக இருக்கிறது. எந்தக் காரணத்தினாலாவது பூமியின் நிலப்பரப்பு உயர்வு தாழ்வுகள் இன்றி ஒரே சமமாக ஆய்விடுமானால், அப்பொழுது ஏரிகள் கடல்கள் முதலியவற்றிலுள்ள நீர் முழுவதும் தங்குவதற்கென்று தனியான ஓர் இடமின்றி நிலப்பரப்பு முழுவதிலும் பெருகிப் பரவிவிடும். அப்போது என்ன ஆகும்? பூமியில் ஓரிடத்திலும் நிலம் வெளியே தோன்றாது. ஏனென்றால், பூமிக்கு மேலே, பூமி முழுவதிலும், ஒன்றரை மைல் உயரத்திற்கு நீர் பெருகி நிற்கும்! எல்லாம் ஒரே சமுத்திரம், ஒரே சாகரம்.

நிலமும் நீருமாக உள்ள பூமியின் மேற்பரப்பின் நிலைமை இவ்வாறிருக்கட்டும். பூமியின் உட்புறத்திலே என்ன ஆகும்? சகரபுத்திரர்கள் பூமியின் உட்புறத்தை முழுவதும் குடைந்திருப்பார்களா? பூமியின் அடிப்புறம் வரை தோண்டியிருப்பார்களா?

இதைப்பற்றிக் கவனிக்கும் போது ஒன்று நினைவிலிருக்கவேண்டும். பூமிக்கு அடியென்பது கிடையாது. ஏனெனில் முன்காலத்தோர் என்ன எண்ணியிருந்தாலும், பூமி உருண்டைவடிவமானது, அந்தரத்தில் ஆதாரம் ஒன்றுமின்றிச் சுழன்றுகொண்டிருப்பது என்னும் விஷயங்கள் இப்போது யாவரும் அறிந்தவை. ஆதலால் பூமியை நாமோ பிறரோ குடைந்து கொண்டே போனால் — போக முடியுமானால் — எண்ணாயிரம் மைல் குடைய வேண்டிவரும். அப்படிக் குடைந்துவிட்டால் நாம் நம்முடைய நாட்டுக்கு நேர் எதிர்ப்புறத்திலே மண்ணைத் துளைத்துக்கொண்டு, கடலைப் பிளந்துகொண்டு வெளியேவந்து வானவெளியைப் பார்ப்போம். ஏனென்றால் உருண்டை வடிவமாயுள்ள பூமியிலே நமக்கு நேர் அடியிலே உள்ள இடத்தை நாம் வந்து அடைந்துவிடுவோம். அந்த இடம் பசிபிக் மகாசமுத்திரத்திலே, தென் அமெரிக்காவிலுள்ள பெரு நாட்டிற்கு மேற்கே உள்ளது.

ஆனால் நாம் இப்படித் தோண்டுவது சாத்தியமான காரியம் அன்று. பூமியின் உட்புறம் மிகவும் சூடுள்ளது. பூமியைக் குடைந்துகொண்டு நூறு அடி உள்ளே இறங்கினால் சூடு ஒரு டிகிரி (சென்டிகிரேட்) ஏறிவிடும். கீழே, உள்ளே, போகப்போக ஒவ்வொரு நூறு அடிக்கும் சுமார் ஒரு டிகிரீ வீதம் சூடு ஏறிக்கொண்டே போகும். ஆகையால் பூமிக்குள்ளே சுமார் முப்பது மைல் ஆழம் தோண்ட முடியுமானால் அங்கேயுள்ள சூடு

தாங்கமுடியாததாயிருக்கும். அந்தச் சூட்டிலே பாறைகள்கூட இளகி நீராகிவிடும். அங்கேயுள்ள அழுத்தமும் நம்மால் தாங்கமுடியாத அளவு மிகுந்ததாயிருக்கும். ஆகையால் இவ்வாறு குடைந்துகொண்டு போவது மனிதரால் ஒருக்காலும் இயலாத காரியம்.

ஆகையால் பூமியில் உட்புறமானது இப்படித்தான் அமைந்திருக்கிறதென்று நம்மால் நேரில் பார்த்து அறிந்துகொள்ள முடியாது; ஊகத்தினால்தான் அறிந்துகொள்ள முடியும்.

கோடிக்கணக்கான வருஷங்களுக்கு முன்னே பூமியானது சூரியனிலே ஒரு பகுதியாயிருந்தது. பிறகு அது சூரியனிலிருந்து தெறித்துப் பிரிந்து தனியாயிற்று. சுழற்சியின் தன்மையாலும், ஆகர்ஷண சக்தியின் வன்மையாலும் அது சூரியனைச் சுற்றி ஒழுங்காய் ஓடிவரத் தலைப்பட்டது. அன்று முதல் இன்றுவரை ஒழுங்காக அது சூரியனைச் சுற்றி ஓடிக்கொண்டுதான் வருகிறது.

ஒரு காலத்திலே பூமியானது மிகவும் உஷ்ணமான நிலையில் இருந்தது. அது வர வரக் குளிர்ந்து வந்தது. அது குளிரக் குளிர, அதிலுள்ள பொருள்களில் இலேசானவை மிதந்து மேலே வந்தன; கனமானவை அழுந்தி அடியிலே படிந்தன. மேலே மிதந்துவந்த இலேசுப் பொருள்கள் நாளடைவில் ஆறிக் குளிர்ந்து இறுகிக் கட்டியாயின. அவை தாம் பூமியின் மேல்பரப்பாகிய ஓடாயின.

இந்த ஓடு சுமார் பத்துமைல் கனமுள்ளது. அதாவது, பூமியின் குறுக்களவிலே எண்ணூறில் ஒருபாகமே இம்மேல் ஓடு. இதனுடைய திண்மை தண்ணீரின் திண்மையைப்போல் இரண்டு மூன்று மடங்கு உள்ளது. இதற்கு அடியிலே சற்றேறக் குறைய ஆயிரம் மைல் வரையிலும் உலோகங்கள் கலந்த பாறை இருக்கிறது. அதற்கும் அடியிலே உள்ளது கிட்டத்தட்ட முழுமையும் உலோகம். இவ்வுலோகத்தில் பெரும் பகுதி இரும்பாகத்தான் இருக்கவேண்டும்.

இவ்வாறு அமைந்த பூமியை தேங்காய்க்கு ஒப்பிடலாம். தேங்காயிலே வெளிப்புறத்திலே இறு



கிய தோலும், அதற்கு அடியிலே அடர்ந்த நாறும், அதற்கும் அடியிலே—நடுவிலே—இறுகிய கொட்டையும் இருக்கிறதல்லவா? அதைப்போலவே பூமியிலும் மூன்று அடுக்குகள் காணப்படுகின்றன.

இப்பேர்ப்பட்ட அற்புதமான உலகத்திலே, மேல் பரப்பிலே மூன்றில் ஒரு பகுதியாக்கூட இல்லாத நிலப்பிரதேசத்திலே, சில இடங்களிலே நிறைந்தும் சில இடங்களிலே குறைந்தும் எண்ணிறந்த பிராணி வகைகள் வாழ்கின்றன. அவற்றுள் ஒரு சிறுவகைப் பிராணிகளே மனிதர் எனப்படும் நாம். ஆயினும் நமக்குள்ளே எத்தனை சண்டைகள்! இடத்தையும் பொருளையும் உரிமைகளையும் பற்றி எத்தனை போராட்டங்கள்!

பூமியின் மேற்பரப்பாகிய நிலத்தின்மேலே வாழ்பவராகிய நாம், உண்மையிலே பெருங்கடலின் அடிப்புறத்திலே வாழ்கிறோம். ஆனால் இக்கடல் கண்ணுக்குத் தெரிவதன்று; நீரினாலாகிய உவர்க்கடலும் அன்று. கண்ணுக்குத் தெரியாத காற்றுக் கடலே இது. இக்கடலின் ஆழம் எவ்வளவு என்று நினைக்கிறீர்கள்? குறைந்தது இருநூறு மைல் ஆழமாவது இருக்கும்.

இக்கடலானது முழுதும் ஒரே மாதிரியானதன்று. இது பூமியை ஒட்டிய இடத்தில்—அடிப்புறத்தில்—அதிக அழுத்தம் உடையதாயும், மேலே போகப்போக அழுத்தக் குறைவுள்ளதாயும் இருக்கிறது. இருநூறு மைல் ஆழமுள்ளதென்று கருதத்தக்க இக்கடலிலுள்ள காற்று முழுவதையும் எடுத்துக்கொண்டு பார்த்தால், அதில் ஒரு பேர்பாதி பூமியிலிருந்துமூன்றரைமைல் தூரத்துக்குள் திணிக்கப்பட்டும், மற்றொரு பாதி பாக்கியுள்ள நூற்றுத்தொண்ணூற்றுச் சொச்சம் உயரமுள்ள இடத்தில் சிதறியும்



கிடக்கிறது. காற்றின் சராசரித் திண்மை நீரின் திண்மையில் எண்ணூறில் ஒரு பங்கு.

நிலத்திலே வாழும் நாம் மிக முயன்றாலொழியப் பத்துமைல் உயரத்துக்குமேல் ஏறமுடியாது. முயன்று எவ்வளவு உயரம்போனாலும், அங்கே அந்தரத்திலே தங்கி வாழமுடியாது. பூமி மட்டத்திலேதான் வாழ்க்கை புரிய முடியும். உயர்ந்த மலைச் சிகரங்களிலே உறைந்த பனி மூடிக்கிடக்கும். அங்கேயும் தங்கி வாழ முடியாது. கடலினுள்ளேயும் நம்மால் வாழமுடியாது. ஆனால் நம்மைப்போலல்லாத வேறு பல ஜந்துக்கள் கடலினுள்ளே வாழ முடியும்; வாழ்கின்றன. அவையுங்கூடக் கடலிலே ஐந்துமைல் ஆழத்திற்கு அதிகமான ஆழமுள்ள பிரதேசத்திலே வாழ்வது சாத்தியமன்று என்று விஞ்ஞானிகள் சொல்லுகிறார்கள்.

பூமியின் நிலப்பரப்பிலே நாம் வாழும் இடத்திலேயும் எத்தனை வேறுபாடுகள்! பூமியின் நிலப்பரப்பானது உயர்வு தாழ்வுகளினாலும், சூடு குளிர்ச்சிகளினாலும், செழுமை தீமைகளினாலும் மாறுபட்டுக் காண்கிறது. சில இடங்களிலே பனிமூடிய உயர்ந்த மலைகள்; வேறு சில இடங்களிலே தீயைக் கக்கும் சிகரங்கள்; சில இடங்களிலே உடலை நடுக்கித் தோலை உரிக்கும் குளிர்; வேறு சில இடங்களிலே உடலை வாட்டித் தோலைக் கருக்கும் வெய்யில்; சில இடங்களிலே மரங்கள் அடர்ந்த காடுகள்; வேறு சில இடங்களிலே மரமேயற்ற புல்லாந்தரிசுகள்; சில இடங்களிலே பழங்களும் பூக்களும் தானியக் கதிர்களும் நிறைந்த செழுமையான நிலங்கள்; சில இடங்களிலே இரக்கமற்ற நெருப்பைத் தகடடித்துப் பரப்பினாலொத்த வரண்ட பாலைவனங்கள்; சில இடங்களிலே உஷ்ணம்; சில இடங்களிலே குளிர்ச்சி; சில இடங்களிலே சம சீதோஷ்ணம்; சில இடங்களில் மழை; சில இடங்களில் பனி; சில இடங்களில் தேவாமிர்தம் போன்ற நன்னீர் பெருகிய ஏரிகளும் குளங்களும் நதிகளும்; வேறு இடங்களிலே வாயில் வைக்க முடியாதபடி உவர்க்கும் உப்புநீர்க் கடல்.

இவ்வாறு அற்புதமாய் அமையப்பெற்ற உலகத்திலே நாம் வாழ்க்கை புரிகிறோம் என்று எண்ணும்போது நம்முடைய மனமானது ஆச்சரியத்தையும் ஆநந்தத்தையும் ஒருங்கே அடைகிறது. வாழ்க வையகம்!



“என்றைக்கு ஸிம்லா கிளம்புகிறீர்?”

“நான் 14-ம் தேதி கிளம்பலாம் என்றிருக்கிறேன். நீர் என்றைக்குப் புறப்படுகிறீர்?”

“17-ம் தேதிக்கு முன் நாள் நன்றாய் இல்லை. அன்றைக்குத்தான் கிளம்பலாமென்றிருக்கிறேன்.”

“ஒவ்வொரு ஆறு மாதத்திற்கும், குட்டி போட்ட பூனை போல், ஸிம்லாவிற்கும் டில்லிக்குமாக அலையவேண்டி இருக்கிறதே! இதில் நாள் பார்த்து சரிப்படுமா? நமது அப்பாசாமி எவ்வளவோ நாள், நக்ஷத்திரம், சகுனம் முதலியவை பார்த்துத்தான் ஸிம்லாவை விட்டுக்கிளம்பி வந்தான். வந்து ஒரு மாதத்திற்கெல்லாம் டில்லியில் அவன் வீட்டில் ஒரு ஆணியைக் கூட விடாமல் திருடன் க்ஷவரம் செய்து விட்டான். இதிலெல்லாம் எனக்குச் சிறிதும் நம்பிக்கையே இல்லை.”

எப்ரல் மாதம் முதல் தேதிக்குப் பிறகு, இரு சினேகிதர்கள், டில்லியில் சந்திக்கும் போது முதல் முதலாகப் பேசிக் கொள்வது இம்மாதிரியான சம்பாஷணைகள் தான்.

நான் ஸிம்லாவிற்கும் டில்லிக்குமாக அநேக தடவை போய் வந்திருக்கிறேன். ஒவ்வொரு தடவையிலும் பயணத்தில் ஏற்படும் கஷ்டங்களை நினைத்து, “ஏன் தான் வைசிராய் பிரபு விக்ரமாதித்தன் மாதிரி காடு ஆறு மாசம் நாடு ஆறு மாசமாக வாசஞ் செய்கிறார்; நிம்மதியாக, டில்லியிலுள்ள அவருடைய உல்லாசமான மாளிகையிலேயே இருந்து விடக் கூடாதா” என்று தீவிரமாக யோசிப்பதுண்டு.

வருஷத்திற்கு இருமுறை எல்லா சாமான்களையும் மூட்டை கட்டிக் கொண்டு எடுத்துச் செல்வதில், வழியில் சேதமுறுபவை கொஞ்சம் நஞ்சமல்ல. ஒரு மூட்டை அரிசியில் பாதி வழியில் சிந்தி வீணாகப்போனாலும், என் மனைவி கவலைப்படமாட்டாள்; ஆனால் இரண்டு அணா விலையுள்ள அவளுடைய கண்ணாடி ஜாடிகளில் ஒன்று உடைந்து விட்டாலும் போதும், தனது குழந்தைகளில் ஒன்று போய் விட்டது மாதிரியே விசனப்படுவாள்.

வைசிராய் பிரபுவின் சொந்த இலாகாப் பரிவாரங்களும், இந்திய சர்க்கார் சிப்பந்திகளுமாக சுமார் 2000 பேர் பதினைந்து நாட்களுக்குள் ஸிம்லா வந்து சேர்ந்து விட வேண்டுமாகையால், இரயிலில் நிற்பதற்குக் கூட இடமின்றி அவ்வளவு கும்பல் நிறைந்திருக்கும். ஒருவாறு கஷ்டப்பட்டு டில்லியிலிருந்து மலையடிவாரமாகிய கால்கா என்னுமிடம் வரையிலும் போய்ச் சேர்ந்து விடலாம். அதற்கு மேல் தான் பொறுக்க முடியாத வேதனைகள் அனுபவிக்க வேண்டி இருக்கின்றன.

கால்கா என்னுமிடத்திலிருந்து ஸிம்லா சுமார் 59 மைல் தூரமுள்ளது. அங்கு செல்வதற்கு இரண்டரை அடி அகலமேயுள்ள மிகவும் குறுகிய இருப்புப் பாதைகள் போடப்பட்டிருக்கின்றன. இப்பாதைகள் 1903-ம் வருஷம் போடப்பட்டன. இவ்வண்டியில் காலைத் தாராளமாய் நீட்டவே முடியாது. ஒவ்வொரு அறையிலும் குறிக்கப்பட்டுள்ள எண்ணிக்கையுள்ள நபர்கள் உட்காரவேண்டுமானால், ஒருவரோடு ஒருவர் நெருக்கி இடித்துக் கொண்டு சிறிதும் அசையாமல் உட்காரவேண்டும். கால்கா ஸ்டேஷனிலுள்ள ரெயில் சிப்பந்திகள், அவ்வாறு குறிக்கப்பட்டுள்ள எண்ணிக்கையை விடக் குறைவாக எங்கேயாவது உட்கார்ந்திருக்கிறார்களா என்று மிகவும் ஊக்கமாய் கவனிப்பார்கள். ஆனால் அதை விட அதிகமாகவே உட்கார்ந்திருந்தால், அதைக் காணாதது போல் நழுவி விடுவார்கள். இவ்வாறு ஆறு மணி நேரம் உட்கார்ந்திருப்பதை ஒரு பெரிய சித்திரவதைக்குள்ளாவதாகவே கூறவேண்டும்.

முதல் வகுப்புப் பிரயாணிகளின் சௌகரியத்திற்காக, இத்தண்டவாளங்களின் மீது, பெட்ரோலினாலும் டீஸல் இஞ்சினினாலும் இயக்கப்படும் மோட்டார் வண்டிகள் ஓடுகின்றன.

இவற்றைத் தவிர மோட்டார் செல்வதற்காக ஒரு தனி ரஸ்தாவும் அமைக்கப்பட்டிருக்கிறது. இதில் டாக்ஸி வண்டிகள் தான் போகலாம். பஸ் போகக் கூடாது. சாதாரண நாட்களில் இவ்வண்டிகளில், ஒரு ஸீட்டின் வாடகை எட்டு அணா முதல் ஒரு ரூபாய் வரையிலும் இருக்கும்: ஆனால் சர்க்கார் மலையேறும்போது அதே இடத்திற்கு பத்து ரூபாய் வரை கேட்பார்கள். ஆகையால் மிகவும் உயர்ந்த உத்தியோகஸ்தர்கள் தான் இவ்வாறு கஷ்டமின்றி செல்லக்கூடும்.

இம் மோட்டார் பாதையும் இரயில் பாதையும், மலையைச் சுற்றிச் சுற்றி அமைக்கப்பட்டிருப்பதால் அநேகமாய் எல்லோருக்கும் தலை சுற்றல், மயக்கம், வாந்தி, வயிற்றுப்புரட்டல் முதலிய கோளாறுகள் வண்டியில் உட்கார்ந்த உடனேயே ஆரம்பித்துவிடும்.

இக்கஷ்டங்களைச் சகிக்க முடியாமல், ஒருதரம் நான் என் மனைவியிடம் “நீ அடுத்தவீட்டு அம்புஜத்துடன் இரயிலில் ஸிம்லா போய்விடு. என்னால் அதில் புளிமூட்டை போல் அடைந்து கிடக்க முடியாது. நான் கால்நடையாகவே மெதுவாக கால்காவிலிருந்து வந்து சேருகிறேன்” என்றேன்.

அதற்கு அவள் “நன்றாய் இருக்கு! அறுபது மைல் எப்படி கால்நடையாக நடப்பீர்கள்! வழியிலுள்ள காடுகளில் புலி சிங்கம் முதலிய துஷ்ட மிருகங்களெல்லாம் இருக்கும். பேசாமே, என் கூடவே வாருங்கள்!” என்றாள். சில சமயங்களில் காடுகளிலுள்ள புலி சிங்கங்களின் நடுவே இருப்பதேமேல் என்றுகூட புருஷர்கள்—மனதுக்குள் தான்--நினைப்பது உண்டென்பது அவளுக்குத் தெரிந்திருக்குமா! அல்லது இக்காடுகளில் வைசிராய் பிரபு வருஷா வருஷம் வேட்டை ஆடச்சென்று, புலி சிங்கங்களைத் தேடிவிட்டுக் கடைசியாக வான்கோழிகளையும், கவுதாரிகளையும் சுட்டு வீழ்த்திவிட்டு வருவதும் தான் அவளுக்குத் தெரியுமா!

இவ்வருஷம் அவள் தன் பிறந்தகம் சென்று விட்டதால், வாந்தியும் தலைசுற்றலுமின்றி தாராளமாக கால் நடையாகவே செல்வது என்று தீர்மானித்து விட்டேன். என் மனைவியை நான் பரிகசித்த போதிலும், எனக்கு ஒரு புறம் தனியாகச் செல்வதில் பயம்தான். என்னுடன் மூன்றுபேர்களைச் சேர்த்துக்கொண்டேன். அம்மூன்று பேர்களும் வெவ்வேறு மாகாணத்தினர்கள். ஒருவர் பஞ்சாப் தேசத்தவர், ஒருவர் மஹாராஷ்டிரர், ஒருவர் வங்காளி.

நாங்கள் நால்வரும் இரவு மெயிலில் டில்லியைவிட்டுப் புறப்பட்டு விடியற்காலை ஐந்து மணிக்கு கால்கா வந்து சேர்ந்தோம். கால்கா சமுத்திர மட்டத்திலிருந்து 2143 அடி உயரத்திலுள்ளது. இங்கிருந்து ஸிம்லாவிற்கு இரண்டு பாதைகள் செல்லுகின்றன. ஒன்று இரயில் பாதையைச் சேர்ந்தார்ப் போலவே, மோட்டார் வண்டிகளுக்காக அமைக்கப்பட்டிருக்கும் காட்ரோட் என்பது. இதன் நீளம் 55 மைல்கள். மற்



றென்று நாய்க்கடி சிகிச்சைக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் கஸௌலி வழியாகவும், ஸபாத்து என்னும் ஊர்வழியாகவும் செல்லும் குறுக்குப்பாதை. இது காட்ரோட்டை விட சுமார் பத்து மைல் குறைவாக இருக்கலாம். ஆனால் வழி முழுவதும் மிகவும் செங்குத்தானது. காட்ரோட் சிலவிடங்களில் உயர்ந்தும், சில இடங்களில் தாழ்ந்தும் இருப்பதால், சுற்றுப்பாதையாக இருந்தபோதிலும், அதிக முயற்சியின்றி ஏறக்கூடியது. குறுக்குவழியில் இறக்கமென்பது சிறிதுமின்றி, ஒரே ஏற்றமாகவே இருக்கிறது. ஸிம்லாவிலிருந்து திரும்பி வரும்போது இதுதான் மிகவும் சௌகரியமான பாதை.



ஸிம்லாவிலுள்ள வைஸ்ராய் மாளிகை

இவ்விரண்டு பாதைகளில், எதன் வழியாகச் செல்வது என்ற பிரச்னை கால்கா சேர்ந்ததும் உண்டாயிற்று. பஞ்சாபியரும் மஹாராஷ்டிரரும் இரு வேளைகளிலும் ரொட்டியே உண்பவர்கள். ஆதலால், ரொட்டியின் வாசனையைக்கூட அருகில் சேரவிடாத என்னையும், வங்காளியையும் விட அதிக பலசாலிகள் என்றே கூற வேண்டும். அவர்கள் இருவரும் "சிறிது கஷ்டமாய் இருப்பினும் சீக்கிரம் போய் சேர்ந்துவிடுவோமாகையால் குறுக்கு வழியாகவே செல்லவேண்டு"மென்றனர். ஆனால் நானும் வங்காளியும் காட்ரோட் வழியாகவே செல்ல வேண்டுமெனப் பிடிவாதம் பிடித்தோம். கால்நடையாகச் செல்வதென்ற ஏற்பாட்டைச் செய்ததில் மூலகாரணமானவன் நானே ஆதலால், கடைசியில் அவர்கள் இருவரும் என் இஷ்டப்படி இணங்கிவிட்டனர். காலையில் ஐந்து மைலும், சாயந்திரம் ஐந்து மைலுமாக தினசரி பத்து, அல்லது பன்னிரண்டு மைல்களுக்கு மேல் நடக்கக்கூடாதென்ற திட்டத்தையும் நான் ஏற்படுத்திவிட்டேன்.

கால்காவிலிருந்து சுமார் முப்பத்தாறு மைல் தூரமுள்ள கண்டாகாட் என்னும் ஸ்டேஷன் வரையிலும் காட்ரோடும், இரயில் பாதையும் அருகருகேதான் செல்லுகின்றன. சிலவிடங்களில் காட்ரோட் இரயில் பாதையின் கீழே செல்லும்; சிலவிடங்களில் அதைவிட மேலே சிறிது உயரத்தில் செல்லும். அநேக இடங்களில் மலையைக் குடைந்து சுரங்கம் மூலம் இரயில் பாதை அமைக்கப்பட்டிருப்பதால், இரயில் பாதையே கிட்டவழியாகத் தோன்றுகிறது. ஆனால் கண்டாகாட்டை கடந்த பிற்பாடு இரயில் அநேக ஊர்களைச்சுற்றிக்கொண்டு போவதால், கடைசியாக ஸிம்லா சேரும்போது இவ்விரண்டிற்கும் நாலு மைல்தான் வித்தியாசம் இருக்கிறது.

நாங்கள் ஞாயிற்றுக்கிழமை காலை கால்காவை விட்டுக் கிளம்பினோம். முதல் இரவை கோட்டி என்னும் ஊரிலும், இரண்டாவது இரவை தரம்பூர் என்னும் ஊரிலும் கழித்தோம். தரம்பூர் என்பது 4325 அடி உயரமுள்ளது. இதன் சீதோஷ்ண ஸ்திதி மிகவும் ஆரோக்யமானது. க்ஷய ரோகத்தினால் பீடிக்கப்பட்டவர்கள் இவ்விடத்தில் ஆறு மாத காலம் தங்கினால் மிகுந்த அனுகூலத்தை அடைவதாகக் கூறுகின்றனர்.

இவ்விடத்திலிருந்து 5020 அடி உயரமுள்ள பரோக் என்னும் இடத்திற்கு ஏறி, மறுபடியும் 4916 அடி உயரமுள்ள ஸோலன் என்னுமிடத்திற்கு இறங்கவேண்டி இருந்தது. ஸோலனில்தான் மூன்றாவது இரவைக் கழித்தோம்.

ஸோலன் என்பது மிகவும் அழகான இடம். இது ஸிம்லாவிலிருந்து 30 மைல் தூரத்திலுள்ளதால், சிம்லாவிலிருப்பவர்களில் அநேகர் இங்கு சொந்த வீடு கட்டிக்கொண்டு இருக்கின்றனர். விடுமுறை நாட்களிலும், சனி ஞாயிறுகளிலும் மோட்டாரில் ஸிம்லாவிலிருந்து இவ்விடத்திற்கு வந்து அவர்கள் காலம் கழிப்பது வழக்கம்.

கால்காவைவிட்டு ஐந்தாறு மைல் மேலே போனதும் செடிகொடிகளிலும், மரங்களிலும் வித்தியாசம் காணப்படுகிறது. கால்காவில் சாதாரணமாக நாம் காணும் வாழை, மா, வேம்பு, முதலிய மரங்கள் சிறிது சிறிதாக, நாம் மேலே போகப் போக மறைந்துகொண்டே வருகின்றன. மலைச்சாரல்களில் மேல்நாட்டு ஓக், பைன் முதலிய மரங்களே காணப்படுகின்றன.

மறுநாள் அவரவர் தேசத்துப் பழக்க வழக்கங்களையும், மற்றக் கதைகளையும் பேசிக்கொண்டே சிறிதும் சிரமம் தெரியாமல் பதினாறு மைல் தூரம் நடந்துவிட்டோம். புதன்கிழமை இரவை, 5578 அடி உயரமுள்ள கத்லீகாட் என்னும் மலைப்பிரதேசத்தில் கழித்தோம்.

ஒவ்வொரு ஊரிலும், தங்குவதற்கு டாக்பங்களா, சத்திரம், முதலிய அநேக வசதிகள் இருக்கின்றன. எங்கள் உணவை நாங்களே சமைத்துக்கொண்டோம். நாலைந்து பாத்திரங்களும், ஸ்டவும் எங்களுடன்கூட எடுத்துவந்திருந்தோம். எல்லோரும் ரொட்டி சாதம் இரண்டும் உட்கொண்டோம். இப்பயணத்தினால் நான் அடைந்த முக்கிய பலன் ரொட்டி செய்யக் கற்றுக்கொண்டுவிட்டதுதான். அவர்கள் செய்த ரொட்டி வாய்க்கு மிகவும் இனிமையாகவும், ருசியாகவும் இருந்தது. அந்த முறையை என் மனைவிக்கும் கற்றுக்கொடுத்து வீட்டில் தினம் ஒரு வேளையாவது செய்யச் சொல்லவேண்டுமென உறுதி செய்துகொண்டேன். நாம் குழம்புசெய்யும் விதத்தையும் அவர்கள் மிகவும் கருத்துடன் கற்றுக்கொண்டனர்.

இங்கிருந்து ஸிம்லா பத்து மைல் தூரம்தான் இருக்கிறது. மறுநாள் காலை ஐந்து மைல் தூரமுள்ள தாராதேவி என்னுமிடத்தைச் சேர்ந்தோம். இங்கு மலையின் மீது ஒரு கோயில் இருக்கிறது. ஸ்டேஷனுக்கு அருகில் மின்சாரத்தினால், ஒரே சமயத்தில் அநேக பசுமாடுகளைப் பால் கறக்கும் 'டெய்ரி' இருக்கிறது. இவ்விரண்டு இடங்களையும் பார்வையிட்டு வியாழக்கிழமை சாயந்திரம் ஸிம்லா வந்து சேர்ந்தோம்.

எங்கள் பயணத்தையும், நாங்கள் அனுபவித்த ஆனந்தங்களையும் இன்னும் விவரித்தேனானால், ஸிம்லா, டில்லியில் இருக்கும் பிரம்மச்சாரிகளும், என்னைப் போல் தற்காலிகமாகத் தனியாக இருப்பவர்களும் நடையில் ஆரம்பித்துவிடுவார்கள். மோட்டார் ஓடுவதினால் ஏற்கனவே நஷ்டமடைந்துகொண்டிருக்கும் கால்கா—ஸிம்லா இரயில் கம்பெனி உடனே திவாலாகப் போக வேண்டியதுதான். ஆகையால் இதை இத்துடன் நிறுத்திவிட்டு, ஸிம்லாவைப்பற்றிச் சிறிது கவனிப்போம்.



ஸிம்லாவிலுள்ள ஹனுமார் கோயில். இது ஒரு உயர்ந்த மலைச் சிகரத்தின் மேல் அமைந்திருக்கிறது. கோயிலைச் சூழ்ந்து ஏராளமான குரங்குகள் வாசம் செய்கின்றன.

நாணயம்

I

சந்துக்கோடியிலே அந்தச் சின்னக் குட்டி நின்றுகொண்டு கசிந்து கசிந்து அழுவதை என்னல் சகிக்க முடியவில்லே.

"ஏன் தங்கச்சி அழுவரே?" என்று குனிந்து அவளே அன்போடு கேட்டேன்.

அழுக்கடைந்த அந்த முகத்தில் செக்கச் சிவக்க அந்தக் கண்கள் கலங்கியிருந்தன.

"உன் பேர் என்ன, அம்மா?"

"லெச்சுமி!" என்று விசித்துக்கொண்டே சொல்லிற்று அந்தக் குழந்தை. "என் ஒரு அணு எங்கேயோ விழுந்துடுச்சுங்க?"

"சே, இவ்வளவு தானே! அழாதே" என்று ஆறுத லூட்டினேன். "ஒரு அணு தானே போச்சு. இதோ அதுக்குப் பதிலா ஒரு அணு தாரேன். வாங்கிக்கோ. இதையும் தொலேச்சுப்புடாதே! பத்ரமா முடிஞ்சுக்கோ!" என்றேன்.

"இந்தாங்க ஒங்க ஒரணு......"

நான் ஒருஅணுவை நீட்டினதுதான் தாமதம்—உடனே, அந்தச் சின்ன லெட்சுமி அதைத் தனது உள்ளங்கையில் வாங்கிக்கொண்டாள். அதே சமயத்தில் அவளது கண்கள் பக்கத்திலிருந்த கல்லுக் குவியலண்டை தேடின.—அங்கேதானே அவளது ஒரு அ.ணு தொலேஞ்சு போயிருக்கிறது—அதைவிட மனம் வருமா?

லெட்சுமியின் தோளின்மீது உற்சாகப் படுத்த ஒரு தட்டுத் தட்டிவிட்டு நான் என் வழியே நடந்தேன்.

II

போகும்போதே எண்ணங்கள் வட்டமிட்டன.

அந்த ஒரணு, இந்த ஒரணுவுக்குச்சமானம் தான் என்று வயதான நாம் நினேக்கின்ருேம். ஆனுல் குழந்தைகளுக்கோ அப்படியில்லே. ஒவ்வொரு காசும் ஒவ்வொரு காசுதான். ஒரு பொம்மை இன்னெரு பொம்மைக்குச்சமானமேயல்ல அவைகளுக்கு. ஒவ்வொரு பொம்மைக்கும் ஒவ்வொரு அர்த்தமுண்டு. அவைகளிடம் தனித்தனி அன்பு.

நான் சின்ன வயதினனுயிருந்தபோது ஒரு காலணு என் வீட்டு வராந்தா இடுக்கில் விழுந்துவிட்டது. பிறகு அந்தப் பக்கமாக எப்போது போனுலும் அந்தக் காணமற்போன காலணுவைப்பற்றிச்சடக்கென்று நினேப்பு வந்துவிடும். வருத்தப்படுவேன். அப்படித்தானே இருக்கும் இந்த லெட்சுமிக்கும்.

இப்படி யோசித்துக்கொண்டு போகும்போது பின்னுல் சத்தம் கேட்டது. குழந்தையின் தப்படிகள்! அவள்தான்—லெச்சுமி வந்தாள். இறைக்க இறைக்க ஓடிவந்தாள். இரண்டு கைகளேயும் இறுக மூடிக்கொண்டு ஓடி வந்தாள்.

என் அருகே வந்ததும் இரண்டு கைகளேயும் திறந்து காட்டினுள்.

இந்தக் கையிலே ஒரு ஒரணு நாணயம்—அந்தக் கையிலே ஒரு ஒரணு நாணயமிருந்தது.

"சாமி! இந்தாங்க ஒங்க ஒரணு! என்னுது ஆப்புட்டுக் குச்சு!" என்ருள்.

அடடா! எனக்கு மனது அப்போது இருந்த ஸ்திதியை என்னென்று சொல்வேன்! ஏதோ ஒன்று என் தொண்டையை அடைத்தது போலிருந்தது.

"தங்கச்சி, அதை வச்சுக்கோ. இதையும் வாங்கிக்கோ அம்மா!" என்று கூறிவிட்டு என் ஜேபியில் கைவிட்டு இரண்டணுக்காசு ஒன்றை எடுத்து அவளிடம் நீட்டினேன்.

அந்தக் காசை லெட்சுமி விழித்து ஒரு தடவை பார்த்தாள். எங்கேயாவது நான் மனம் மாறிப்போனுலும் போவேனே என்று சந்தேகித்து அதை வாங்கிக்கொண்டு நடந்துவிட்டாள்.

இந்த மாதிரி நாணயம் மிகுந்த ஒரு குழந்தையைச் சந்தித்ததால் "இது ரொம்ப நல்ல தினம்" என்று நினேத்துக் கொண்டேன். மோகன ராகத்தைப் பிகில் ஊதிக்கொண்டே நடந்தேன். நல்ல காரியம் ஒன்று செய்துவிட்டதாக எனக்கு நினேப்பு.

III

சிலநாள் கழித்து நான் அதே சந்துப் பக்கம் போகவேண்டியிருந்தது.

அங்கே யாரோ அழுதுகொண்டு நிற்கிருப்போலிருந்ததே; அது யார்? ஓ! லட்சுமிதான்!

மறுபடியும் அவளுக்கு ஒரணு தொலேந்து போய் விட்டதாம்................அந்த வழியே வந்துகொண்டிருந்த இன்னெரு கனவான் அவள் கையில் ஒரு அணு பர்த்தியாகக் கொடுத்துவிட்டார். இழந்த தனது ஒரணுவையும் லெச்சுமி மீண்டும் தேடுகிருள். அதுவும் கிடைத்துவிடுகிறது. ஓடுகிருள் அந்தக் கனவானேப் பின்தொடர்ந்து........ இத்யாதி இத்யாதி.

போனவள் திரும்பி அதே சந்துக்கோடிக்கு வரும்வரை காத்துக்கொண்டிருந்தேன்.

என்னே அந்தச் சின்னக்குட்டி அடையாளம் கண்டுகொண்டு விட்டாள்.

தன் கையைத் திறந்து காட்டினுள். "பார்த்தீங்களா உங்களுக்கும் அவருக்கும் உள்ள வித்யாசத்தை!" என்று கேலி செய்வதுபோலத் திருதிருவென்று என்னே நோக்கி விழித்தாள்.

அவள் கையில் ஒரு அரை ரூபா நாணயம் பளிச்சிட்டுக்கொண்டிருந்தது.

இந்த லட்சுமி உலகத்தில் உருப்பட்டுப் போவதற்குச் சந்தேகமென்ன?

ஸிம்லா பிரயாணம்

ஸிம்லாவின் சராசரி உயரம் 7100 அடி எனக் கூறலாம். ஷிம்லா என்னும் பதம் நாளடைவில் ஸிம்லா என்று மாறிவிட்டது. இப்போதும் மலேவாசிகள் இவ்விடத்திற்கு ஷிம்லா என்றே கூறுகின்றனர்.

இம்மலேயில் மின்சாரம், ஜலம் முதலிய வசதிகளே அமைப்பதற்கும், பாதைகளேக் கட்டுவதற்கும் ஸிம்லா முனிசிபாலிடியார் இது வரையிலும் 83 லக்ஷ. ரூபாய்கள் செலவழித் திருக்கின்றனர். கவர்ன்மெண்டார் வைசிராயின் மாளிகைக்காக 38 லக்ஷ ரூபாய்கள் செலவழித்திருக்கின்றனர்.

கோடைகாலத்தில் தங்குவதற்குப் பஞ்சாப் கவர்னரும் இவ்விடத்திற்கு வருகிருர். ஸிம்லாவின் வீதிகளில் வைசிராய், பஞ்சாப் கவர்னர், கமாண்டர்-இன்-சீப் மூவர்கள்தான் மோட்டார் வண்டியில் சவாரி செய்யலாம். மற்றவர்கள் குதிரைமீதாவது, ரிக்ஷாவண்டியிலாவது, கால்நடையினுலாவதுதான் செல்லவேண்டும். ரிக்ஷாவண்டிக்கு ஒருமணி நேர சவாரிக்குக் குறைந்தசார்ஜ் ஒரு ரூபாய் இரண்டணு. ஒரு மணி நேரத்திற்குள் எவ்வளவு தூரம் சென்ருலும் இத்தொகையை அளித்துவிடவேண்டும். ஆகையால் இவ்வண்டி தனவந்தர்களுக்குத்தான் ஏற்றது.

ஸிம்லாவின் சீதோஷ்ண ஸ்திதியை நான்கு பாகங்களாகப் பிரிக்கலாம். முதலாவது வசந்த காலமாகிய மார்ச், ஏப்ரல், மே மாதங்கள். இக்காலத்தில் எங்கும் புஷ்பங்களும், காட்டு ரோஜாக்களும் நிரம்பி இருக்கும். எங்கும் பசுமையாகவும் ரமணியமாகவும் உள்ள காக்ஷிகளே காணப்படும். கோடைகாலமென்று கூறப்படும் காலங்களில் இங்கு 73 டிகிரிக்குமேல் உஷ்ணம் அதிகரிப்பது இல்லே.

மழைகாலமென்பது ஜூன், ஜூலே, ஆகஸ்ட் மாதங்கள். மழையென்ருல் சாமான்ய மழை அல்ல. இம்மூன்று மாதங்களுக்குள் சுமார் அறுபத்தைந்து அங்குலம் மழைகொட்டித்தீர்த்துவிடுகிறது. மழை ஓய்ந்து இருக்கும் சிறிது நேரங்களில் நமது வீட்டு வாசல்களிலும், அறைக்குள்ளும் புகைபோல் மேகங்கள் பரவும் காக்ஷி மிகவும் வேடிக்கையாக இருக்கும்.

மழை காலம் தீர்ந்தவுடன் இரண்டுமாதகாலம் அதிக வெய்யிலும் அதிகக் குளிருமின்றி மிகவும் சுகமாக இருக்கும். அக்டோபர் மாதக் கடைசியில் ஸிம்லாவின் ஜனத்தொகையில் முக்கால் பாகம் டில்லிக்கு இறங்கிவிடும். நவம்பர், டிசம்பர், ஜனவரி, பிப்ரவரி இந்நான்கு மாதங்களும் குளிர்காலத்தைச் சேர்ந்தவை. டிசம்பரிலிருந்து பிப்ரவரி வரையிலும் வடக்கில் திபத்திலிருந்து அடிக்கும் குளிர் காற்று, புயல்காற்று, ஐஸ்மழை முதலியவை மனிதர்களின் உயிரைச் சித்திரவதை செய்துவிடும். ஸிம்லாவில் குளிர்காலத்தைக் கழிப்பவர்களின் நிலேமை மிகவும் பரிதாபப்படக்கூடியதே. சுற்றிலும் பனிக்கட்டி சூழ குறைந்தது இரண்டு மாத காலமாவது இருப்பதென்ருல் சாமான்யமானதா!

தியாகவேள்வி

பிரதாபசிங்கன் ஹல்தி கட்டத்தில் சாம்ராஜ்யப் படையை யெதிர்த்துக் கடும்போர் புரிகிறான். ஒரு தேசத்துரோகியின் மோசத்தால் அவன் குதிரை வீழ்ந்தது. சிங்கன் பகைவர் கையிற் படாமல் அரவிலி மலைப் பள்ளத்தாக்கில் ஓடி ஒளிகிறான். அங்கே ஒரு பர்ண சாலை. அதில் சிங்கன், ராணி குணவதி, மகள் சம்பாவதி, மகன் சுந்தர்சிங் இந்நால்வரும் வசிக்கின்றனர். அருகே அருவி, காடு, புல்பூண்டுகள். பாம்பு, கரடி, ஓநாய், வேங்கை முதலிய விலங்குகள் அங்குமிங்கும் திரிகின்றன.

வறுமை, வறுமை! சுந்தர் பசியால் துடிக்கிறான். நேற்றுத் தந்த இரண்டு ரொட்டிகளை உண்ணாமல் ஒளித்துவைத்திருந்தாள் சம்பாவதி. அதைத் தம்பிக்குத் தரப்போகிறாள். அப்போது ஒரு விருந்தாளி வருகிறான்.

"நான் வறியன், விருந்தை எப்படிப் புறங்காண்பேன்?" என்று பிரதாபசிங்கன் மனைவியிடம் வருந்துகிறான். அப்போது சம்பாவதி, தம்பியைக் கதை சொல்லித் துயிலுறுத்தி ஓடிவந்து, "அப்பா, இதோ விருந்தாளிக்கு இரண்டு ரொட்டி" என்று தருகிறாள். "அது போதாதே, கண்ணே!" என்கிறான் தந்தை. "இதோ ஒரு காசு மா வாங்கிவா" என்று தருகிறாள் சம்பாவதி. தந்தை மா வாங்கச் செல்கிறான். அச்சமயம் விருந்தாளி உள்ளே நுழைகிறான். "வாருங்கள்" என்று உபசரித்து, சம்பாவதி இரண்டு ரொட்டிகளைத் தருகிறாள். தாய் பச்சிலைத் துவையல் வைக்கிறாள். விருந்தாளி உண்கிறான். முகமலர்ச்சியுடன் செல்கிறான். சம்பாவதி உணவில்லாமல் பசியால் சுருண்டு விழுகிறாள். அச்சமயம் பிரதாபசிங்கன் ஒரு செய்திகொண்டு வருகிறான். தனது இறைமையை ஏற்றால் அரசுந் திருவுந் தருவதாக அக்பர் அனுப்பிய செய்தியே அது. மனைவியிடம் அவன் அச்செய்தியைச் சொல்லித் தனது வறுமையாற்றாது புலம்புகிறான்.

பிரதாபசிங்கன் :

'இன்னல் இனிஏனோ?—நம்
இறைமையை ஏற்றிடின் ஈவோம் அரசுடன்
பன்னரும் பாக்கியங்கள்'—என்றே
பாதுஷா சொல்கின்றான். யாதுநாம் சொல்லுவோம்?
என்னுடன் கஷ்டப்பட்டாய்—அதை
எண்ணிட வேதனை பண்ணுதென் நெஞ்சமே!
அன்னக் குணவதியே—நாம்
வாய்மையைக் காப்போமோ? வாழ்வை
நினைப்போமோ?

குணவதி :

வறுமைக்கிங் கெல்லை யில்லை—புலி
வாழடர் கானில் இருசிறு மக்கள்
வெறுமைக் குடிலினிலே—பசி
வெந்துயர் செய்திட விம்மி யழுகின்றார்.
பொறுமைக்கும் எல்லை யுண்டு—வீரப்
போருக்குச் சேனைகள் யாரிங் குதவுவார்?
சிறுமை வராதவகை—நாம்
தேச நிலைக் கின்று தக்கதைச் செய்குவோம்....

சம்பாவதி : (உயிர் துடிக்கச் சொல்லுகிறாள்)

ஈன வுடன் படிக்கை—அப்பா
என்றென்றும் வேண்டாம்; இழந்தெல்லாச் செல்வ[மும்,
தீனர்க ளாயினும்—'இவர்
தீரராய் வாழ்ந்தவர், தேசத்திற் கேபலி
ஆனவர்' என்றுலகம்—நம்
ஆண்மையைப் போற்றிடின், அதுவே நமக்கின்பம்!
மானம் பெரிய தப்பா—பிறர்
மாய வலையிலே தாயர் மயங்கிடார்!

சுத்தானந்த பாரதி

கோசப் பெருஞ் படையை—மலைக்
குறவர் சிறுபடை கொண்டு வென்றாய் அந்தச்
சூரத்தை ஹல்தி கட்டம்—என்றும்
சொல்லும் புவிக் கந்த மல்லர்க் கரியதோர்
தீர மிழந்தாயோ—தந்தாய்!
தின்று துயில்வது வோமனி தர்செயல்?
வீரமும் தியாகமுமே—தல
விரத மெனக் கொண்டோம். வீழ்ச்சி நமக்குண்டோ?

காட்டினில் வாழ்ந்தாலும்—இந்தக்
கான நதியெனக் கட்டின்றி வாழுவோம்.
பாட்டுப் பறவையைப் போல்—இந்தப்
பச்சை யியற்கையில் இச்சைபோற் சூழுவோம்.
கேட்டிலும் இன்புறுவோம்—மானக்
கேடுறுஞ் செல்வத்தை ஓடெனத் தள்ளுவோம்!
நாட்டு விடுதலைக்கே—நாம்
நாட்டிய வீர விரதத்தைப் போற்றுவோம்....

சாவின் முன் சொல்லுகிறேன்—இந்தச்
சத்திய வாக்குப் பலிப்பது நிச்சயம்.
தேவி பவானி துணை—இந்து.
தேசத்திலே தர்மம் வாசம் புரிவதாம்.
ஆவி யிழந்தாலும்—நம்
ஆரிய நாட்டினர் வீர மிழந்திலர்.
பூவிற் கிதம் புரிவார்—இந்தப்
புண்ணிய பூமியின் மண்ணிற்கும் வந்தனம்.

பிரதாபசிங்கன் :

போயின துன்ப மெல்லாம்—கண்ணே
புத்துயிர் வந்ததுன் முத்து மொழிகளால்....
தீயினும் வெம்பசியைத்—தாங்கித்
தின்னும் அப்பத்தை அதிதிக்குத் தந்துயிர்

நோயைப் பொறுத்தவளே—தியாக
நோன்பினை நோற்றென்றும் வான்புகழெய்திய
சேயிற் சிறந்தவளே—நம்
தேசத்தினும் உயிர்க் காசையில்லை சொன்னேன்....

போரை முழக்கிடுவேன்—மீண்டும்
போரை முழக்கிடுவேன்—இந்தப்
புண்ணிய பூமி தழைக்கப் பவானியின்
பேரை முழக்கிடுவேன்—வெற்றி
பெற்ற ரஜபுத்ரர் கொற்றக் கொடியோங்கிக்
காரைப் பிளந்தொளிரும்—உன்னைக்
கைகாட்டிக் கூப்பிட்டென் மெய்வினை சொல்லிடும்
சூரத் திறக் குலத்தார்—சொன்ன
சொல்லை மறப்பரோ? வில்லைத் துறப்பரோ?

'வீட்டுச் சுகம் வெறுத்தான்—பாம்பு
வெம்புலி, சிங்கம், வெருட்டித் திரிகின்ற
காட்டுத் துயர் பொறுத்தான்—பாற்
கட்டியும் ரொட்டியும் விட்டுக் கீரையுண்டு
நாட்டிற் கிசை யளித்தான்'—என்று
ஞாலமெல்லாஞ் சிங்க நாதம் புரிவதைக்
கேட்டிடுவாய் மகளே—என்றுங்
கேடில்லை அச்சத்தைச் சாடிய வீரர்க்கே....

[இச் சம்பாஷணையை மறைந்திருந்து கேட்ட விருந்தாளி உள்ளேவர்து பிரதாபசிங்கனை மெச்சித் தழுவிக் கொள்ளுகிறான். அவனே பாதுஷா.]

விருந்தாளி :

உண்மையி துண்மை மொழி—உன்
உயிரினுந் தேசம் உயர்வெனக் கொண்டனை....
திண்மனச் சிங்கம் வெல்க!—துயர்
தீர்ந்ததுன் சிற்றில் அளித்த விருந்தினை
உண்ணும் பெருமை பெற்றேன்—ஐய
உன்வீர மார்பை தழுவிக் களிக்கின்றேன்.
கண்ணின்முன் அக்பரைப் பார்—நீ
காட்டிய தியாகக் கனலென்றும் வாழ்கவே!

[இச்சமயம் விளக்கணைகிறது. பாதுஷா மறைகிறான். மறுநாளே வேண்டிய உதவிகள் வருகின்றன. சிங்கன் மீவாரை மீட்கிறான். அக்னிகுலப் பெருமையை நிலைநாட்டுகிறான்.]



தெருவில் கண்ட தெய்வம்



என். ஆர். ஸுப்ரமணியன்

எழுதியது

இரவு சாப்பிட்டுவிட்டு வீட்டு வாசலில் வந்து நின்றேன். தெருக் கோடியில் வசித்த, எனக்குத் தெரிந்த ஒருவர் வீட்டுக் கலியாண ஊர்வலம் வீதி வழி வந்தது. அவர் என்னைக் கண்டவுடன் ஓடி வந்து, சந்தனம் தாம்பூலம் எல்லாம் கொடுத்து உபசரித்து ஊர்வலத்துடன் வரும்படி வற்புறுத்தினார். எனக்குக் கூட்டத்தைக் கண்டாலே உற்சாகம் வந்துவிடும். அதனால் அதிகம் பிகுப் பண்ணாமல் கூட்டத்துடன் கலந்துவிட்டேன்.

முன்னால் நாதஸ்வரக் கோஷ்டி சென்று கொண்டிருந்தது. அந்த வாத்ய நாதம் ரொம்ப ரொம்ப இனிமையாக இருந்தது. அதனால் மெள்ள மெள்ள முன்னேறி அந்தக் கூட்டத்தில் சென்று கலந்து கொண்டேன். ஆனால் அங்கே கூட்டம் அதிகமாக இருந்ததாலும், தவுலின் நாதத்தைக் கொஞ்சம் தள்ளியிருந்து கேட்டால்தான் சரியாக ரஸிக்க முடியுமென்று தோன்றியதாலும் இன்னும் முன்னேறி கூட்டத்தின் வெளிக்கரையையடைந்தேன். அங்கிருந்து நாதஸ்வர சங்கீதத்தை அனுபவித்துக் கொண்டே ஊர்வலத்தை நடத்திச் சென்றேன்.

ஊர்வலம் தெருவின் கோடியை நெருங்கிக்கொண்டிருந்தது. அது தெருவைத் திரும்புமிடத்தில் கொஞ்சம் ஒதுங்கிக் கொண்டு, அப்படியே வீட்டிற்குத் திரும்பி விடுவதென்று முடிவு செய்துகொண்டேன். அதனால் ஒதுங்குவதற்கு ஒரு உகந்த இடத்தைத் தேடினேன்.

அப்போது, முன்னால் தெருச் சந்தியின் நடு மத்தியில் வைக்கப்பட்டிருந்த ஒரு கூடை பார்வையில் பட்டது.

சாதாரணமாக அப்படி ஒரு கூடை வைக்கப்பட்டிருந்தால் அது என் கவனத்தைக் கவர்ந்திருக்குமோ என்னவோ. இப்போது என்ன காரணத்தாலோ அது என் கவனத்தைக் கவர்ந்தது. கலியாண ஊர்வலம் வரும் வழியில் யாரோ கழிப்புக் கழித்துக் கூடையில் போட்டு வைத்திருக்கிறார்களே என்று மனம் கொஞ்சம் கசந்தது. பரவாயில்லை, அதைத் தொட்டு எடுத்தாவது ஒரு ஓரமாகப் போட்டு விடுவோம் என்று, முன்னால் நடந்து சென்று அதைக் கையிலெடுத்தேன். மனித ஸ்வபாவப்படி அதில் என்ன இருக்கிறதென்று கூர்ந்து பார்த்தேன். மறுபடி கூடையைக் கொஞ்சம் வெளிச்சத்தின் புறம் சாய்த்துப் பார்த்தேன்.

என்னுடைய ஆச்சரியத்திற்கு அளவே யில்லை. நான் எதிர்பார்த்தபடி அதில் கழிப்புக்கழித்த சாமான் ஒன்றுமில்லை. அழகாகக் கட்டப்பட்ட ஒரு மலர் மாலை, தொடுத்த நீளமான சரம் ஒன்று, கொஞ்சம் உதிரிப்பூ, இவைதான் அதிலிருந்தன.

அதைப் பார்த்தவுடன், ஊர்வலத்துடன் இந்தக் கூடையைத் தூக்கிக்கொண்டு வந்த யாரோ அந்தப் பொறுப்பைத் தட்டிக் கழிக்கத் துணியாமல், இப்படித் திருட்டுத்தனமாகக் கொண்டுவந்து வைத்துவிட்டுப்போய் விட்டான் என்று தோன்றியது. அட பைத்தியமே! இப்படியும் செய்வானா ஒருவன் என்று சிந்திக்கையிலேயே ஊர்வலம் கிட்ட நெருங்கி வந்து விட்டது. ஆகையால் கூடையை என்ன செய்வது என்று அவசரமாகச் சிந்திக்க ஆரம்பித்தேன். சிந்தனையிலேயே என்ன செய்கிறோமென்பதையுமுணராமல், கூடைக்குள் கையைவிட்டு மாலையை எடுத்தேன் போலிருக்கிறது. என் பிடியில் தொடுத்த சரமும் சிக்கிக்கொண்டு மாலையுடன் வந்தது. அதனடியில் கிடந்த ஒரு காகிதத்துண்டு என் கவனத்தைக் கவர்ந்தது. தூக்கத்திலிருந்து திடுக்கிட்டு விழித்தவன்போல அவசரம் அவசரமாக அதைக் கையிலெடுத்து ஊர்வல வெளிச்சத்தின் புறம் சாய்த்துப் பார்த்தேன்.

ஒரு பெண்பிள்ளையின் கையெழுத்து! அதை யறிந்தவுடன் என் மனசில் தோன்றிய எண்ணங்கள் ஒரு ஆயிரம் இருக்கும். எல்லாவற்றிற்கும் மேலாக என் கற்பனையில் பிறந்த ஒரு கதைதான் அதிக ரஸமானது.

கலியாணத்திற்கு வந்துள்ள யாரோ ஒரு பெண், நவீன நாகரீக மோஸ்தரில் யாரோ பயலுக்குக் காதல் கடிதம் எழுதியிருக்கிறாள். அது அந்தக் கூடைக்குள் இருக்கிறதென்பதும், கூடை எங்கே யிருக்கிறதென்பதும் அவனுக்குத் தெரியும். ஆகையால் அவன் நிச்சயமாக அதைத் தேடிக்கொண்டு வருவான்.

இந்த முடிவு ஏற்பட்டவுடன் எனக்கு அந்த நாடகத்தைக் கடைசி வரை பார்க்கவேண்டுமென்ற ஆவல் தீவிரமாக எழுந்தது. அதோடு அந்தக் கடிதத்திலும் என்ன எழுதியிருக்கிறதென்று பார்க்க வேண்டுமென்ற ஆர்வமும் எழுந்தது. ஆனால் அதற்குச் சாவகாசமில்லை. ஆதலால் அவசரமாகக் கடிதத்தைப் பழையபடி கூடையிலேயே வைத்துவிட்டு, மேலே மாலையால் மூடி முன்பிருந்தபடியே, அதே இடத்திலேயே கூடையை வைத்துவிட்டு நகர்ந்து கொண்டேன். கூட்டம் நெருங்கி வந்து விட்டது.

கூடையை ஒரு கண்ணால் கவனித்துக் கொண்டே கூட்டத்தினுள் கலந்துகொண்டேன். அதற்காகவே கூட்டத்தை முன்னேற விட்டு விட்டு நான் ஸ்திரமாக நின்று கொண்டேன். ஊர்வலம் ஆதிமுதல் கடைசி வரை என்னையும் கூடையையும் கவனிக்காமலே முன்னேறிச் சென்றது. அந்தக் கூட்டத்தில் என்னைத் தவிர வேறு ஒருவருக்குக்கூட அந்தக் கூடை அங்கே யிருந்தது தெரிந்திருக்குமா என்பதே சந்தேகம்தான்.

அது எனக்கு ரொம்ப ஆச்சரியமாக இருந்தது. என் கற்பனைக் கதையை நான் ஏறக்குறைய உண்மையென்றே நம்பிவிட்டதால், அப்படி அதை யாரும் கவனிக்காதது பெரும் ஏமாற்றமாக விருந்தது. பெண்கள் கூட்டத்தில், அதை அங்கே வைக்க ஏற்பாடு செய்தவள் நிச்சயமாக இருப்பதாக எண்ணியதால், ஊர்வலத்தின் பின் பகுதியில் அவர்கள் சென்றபோது கொஞ்சம் அதிக அக்கரையுடன் கவனித்தேன். ஊஹூம். யாரும் அதைக் கண்ணெடுத்தும் பார்க்கவில்லை.

கூட்டம் பூராவாக என்னைத் தாண்டிச் சென்றுவிட்டது. விளக்கு வெளிச்சமும் தெரு திரும்பிக் கொஞ்சம் கொஞ்சமாக மங்கி மறைந்தது. அது யாருக்காக உத்தேசித்து அங்கே வைக்கப்பட்டதோ அவன் திருட்டுத் தனத்தின் சுபாவமான பயத்தினால்தான் அதைக் கண்டும் காணாதது போலப் போயிருக்கிறான். கூட்டம் கொஞ்ச தூரம் போனவுடன் தானே திரும்பிவந்து அதை யெடுப்பான் என்று தோன்றியது.

அதனால் நான் உடனே அதை யெடுக்காமல் கொஞ்சம் மறைவான ஒரு இடத்தில் போய் நின்றுகொண்டு அதைக் கவனிக்கத் தொடங்கினேன். சுமார் பத்து நிமிஷம் ஆகியிருக்கும். நான் எதிர் பார்த்ததுபோல் யாரும் வரவில்லை. என் பொறுமையும் தளரத் தொடங்கியது.

அந்த சமயத்தில் எங்கிருந்தோ ஒரு நாயொன்று வந்து சேர்ந்தது. மடமட வென்று ஓடிவந்து என்னைக் கண்டவுடன் அது கொஞ்சம் தயங்கி நின்றது. பிறகு கீழ்ஸ்தாயியில் உறுமலில் ஆரம்பித்துக் கொஞ்சம் கொஞ்சமாய்க் குரலை உயர்த்திக் குரைக்கத் தொடங்கியது. குரைத்துக் கொண்டே அது பின்னோக்கி நகர்ந்து தெருவின் திருப்பத்தில், அந்தப் பக்கத்திலிருந்த முனிசிபல் விளக்கடியில் போய் நின்று, நான் அங்கிருப்பதைப் பற்றி பலமாக ஆட்சேபித்துக் கொண்டிருந்தது.

அட சனியனே! இது எங்கிருந்து வந்தது இந்த சமயத்தில், என்று எண்ணினேன். அதை அதட்டி அடித்து விரட்டவும் தைரியம் வரவில்லை. தெரு நாயின் சுபாவம் தெரிந்தவர்களுக்குத் தான் அதன் காரணம் விளங்கும். அதன் குரைப்பு, நான் இவ்வளவு நேரம் காத்திருந்ததை வீணாக்கி விடப்போகிறதே என்ற ஆயாசம் எழுந்தது மனதில்.

மேலும் சில நிமிஷங்கள் சென்றன. 'வெளிச்சம் என்றால் என்ன' என்று கேட்பதுபோல முனகி எரிந்து கொண்டிருந்த அந்த விளக்கடியில், பின்கால்களிலமர்ந்து குரைத்துக் கொண்டே யிருந்தது நாய். யாரும் வரவில்லை. ஊர்வலம் ரொம்ப தூரம் போய்விட்டதென்பதற்கறிகுறியாக, மேளவாத்ய நாதம் ரொம்ப மங்கலாக ஒலித்து, நாயின் குரைப்பில் கலந்து மறைந்தது.

அதற்கு மேலும் அங்கு நிற்கப் பொறுமையற்று மறைவிடத்திலிருந்து வெளியே

வந்தேன். கூடை மாத்திரம் என்ன வந்தாலும் சரி, நான் அசையப் போவதில்லையென்பதுபோல உட்கார்ந்திருந்தது.

நமக்கென்ன? யார் வைத்திருந்தாலும் இருந்துவிட்டுப் போகட்டும் என்ற வைராக்கிய உணர்ச்சியுடன், அங்கிருந்து போய்விட முடிவு செய்தேன். ஆனால் என் கற்பனைக் கதை பொய்யாகிவிட்டதால், அந்தக் கடிதத்தில் என்ன இருக்கிறதென்று பார்க்க வேண்டுமென்ற ஆவல் ரொம்பத் தீவிரமாக எழுந்தது மறுபடி. அதனால் வந்தது வரட்டுமென்று போய்க் கூடையைக் கையிலெடுத்துக் கொண்டு முனிஸிபல் விளக்கடிக்கு நடந்தேன். நான் அதனிடம் வருவதைக் கண்டவுடன், நாய் முன்னிலுமதிக வேகத்துடன் குரைத்துக் கொண்டு அந்த இடத்தை எனக்குக் காலிசெய்து கொடுத்து விட்டு நகர்ந்தது. கொஞ்ச தூரத்தில் போய் நின்றுகொண்டு, முன்போல தன் சொந்த பாஷையில் என்னைப் பற்றி அது என்ன நினைத்ததென்பதை வெளியிட்டுக் கொண்டிருந்தது.

விளக்கடிக்குப் போனவுடன், கூடைக்குள் கைவிட்டு அடியிலிருந்த கடிதத்தை எடுத்தேன். மெள்ள, ஆனால் அளவுக்கு மீறிய ஆவலுடன் அதைப் பிரித்துப் படிக்க முயன்றேன். வெளிச்சமோ ரொம்பச் சோனி. எழுத்தோ பெண் பிள்ளையெழுத்து. அதோடு பென்சிலால் எழுதப்பட்டது. அதனால் கண்களை ரொம்ப சிரமப்படுத்தித்தான் படிக்க முடிந்தது.

அதைப்படிக்க ஆரம்பித்து முடிப்பதற்குள் என் மனதில் தோன்றிய எண்ணங்களையும், உணர்ச்சிகளையும் எடுத்துச் சொல்லவே முடியாது.

அதில்:

"கோயிலில்போய் உன்னைத் தேடினேன். முறையிட்டேன். எனக்கு பதில கிடைக்கவில்லை. நீ அங்கேயில்லையென்று தீர்மானித்து விட்டேன். நீ இங்கேயாவது இருந்தால் உடனே வந்து காப்பாற்று. நானும் குழந்தையும் பசியால் சாகிறோமே; உனக்குக் கண்ணில்லையா?"

என்று எழுதியிருந்தது.

முதல் வரியைப் படித்தவுடன் என் மனதில் ஒரே உற்சாகம். என் கற்பனைப் பெண் அவளுடைய காதலனைத் தேடிக்கொண்டு கோயிலுக்குப் போயிருக்கிறாள். "பேஷ்! நல்ல இடம் பார்த்தாள் சிறுக்கி!" என்று எண்ணினேன். ஆனால் அடுத்த வார்த்தை என்னெஞ்சில் முள் குத்துவதுபோலப் பாய்ந்தது. அந்த வேதனையின் வேகம் போகப் போக வெறிபோல ஏறியது; அந்தச் சில வார்த்தைகளில்தான் எத்தகைய வேகம்! அந்த முதல் வேகம் தீர்ந்து சிந்தனை சிறிது தெளிவடைந்தது. மறுபடி அதை ஒருதரம் படித்தேன். உடனே என் மனசில் ஒரு யோசனை பிறந்தது. யாரோ ஒரு அபலை ஸ்திரீ தன் நாதனைத் தேடியலைந்து அவனுக்காக அதை எழுதி வைத்திருப்பாளோ? அவசரமாக அந்தக் கூடை முதலில் இருந்த இடத்தைப் பார்த்தேன்.

அது குறிப்பாக எந்த வீட்டு வாசலிலும் வைக்கப்பட்டிருக்கவில்லை. ஏறக்குறைய நடுத்தெருவில் நாதியற்றுக் கிடந்தது. அதற்கு எதிரில் இருந்த இடம் ஒரு காலி மனை. இடிந்த குட்டிச்சுவர்களைக் காவலாக வைத்து அதற்குள் ஒரு வைக்கோல் போர் எழுப்பப்பட்டிருந்தது.

ஆதலால் இது குறிப்பாக யாருக்கும், மனிதனுக்காக எழுதப்பட்டிருக்கமுடியாது. ஒருவேளை அந்தப் பெண் துன்பத்தின் தீவிரத்தால் சித்தத் தடுமாற்றம் அடைந்து இப்படி நடுத்தெருவில் கூடையை வைத்திருக்கலாமல்லவா? ஏன், அவள் கோயிலில் போய் தெய்வத்தினிடம் முறையிட்டு பதில் கிடைக்காததால்........ஆம்; அப்படித்தான். "நீ இங்கேயாவது இருந்தால்" என்று அவள் தெய்வத்தைத்தான் குறிப்பிடுகிறாள்.

அவள் யார்? இந்தக் கூடையை இங்கே வைத்தவள், அதிலுள்ள இந்தக் கடிதத்தை யாராவது எடுக்கிறார்களா என்றும், எடுத்துத் தன் உதவிக்கு வருகிறார்களா என்றும் அறிய விரும்புவது தானே இயற்கை. ஆதலால் அவள் இங்கேதான் எங்கேயாவது சமீபத்தில் இருக்கவேண்டும். அப்படியிருந்தால் நிச்சயம் இப்போது வெளிவருவாள் என்று எண்ணினேன்.

என் சிந்தனை வேகத்தில் நான் நாயை மறந்தே போய்விட்டேன். இவனிடம் கத்திப் பயனில்லையென்று எண்ணியோ என்னமோ, அது குரைப்பதை நிறுத்திக் கொண்டு எங்கோ சென்று விட்டது. எப்போது போயிற்றென்பதே தெரியாது.

சில நிமிஷங்கள் மேலே என்ன செய்வதென்று தோன்றாமல் நின்றேன். யாரும்



............சிலையின் கழுத்திலிருந்த மாலையை........

வரவில்லை. அந்தக் கடிதத்தை எழுதியவளிடம் என் மனதில் அனுதாபம் பொங்கியது. ஆனால் அதை எப்படி வெளியிடுவது? அவள் யார்? எங்கே போய்த் தேடுவது?

இது யாரோ பைத்தியத்தின் வேலை. கூடையை முன்பிருந்தபடியே வைத்து விட்டுப் போய்விடுவோம். நமக்கெதற்கு இந்த வம்பெல்லாம் என்று எண்ணி விளக்கடியிலிருந்து நகர்ந்தேன். "அவள் இதை அவனுக்கே எழுதியிருக்கிறாள். அவனுக்குத் தெரியாமலா யிருக்கும் அவள் நிலைமை? நான் யார் இதில் தலையிட? அவனைக் காப்பாற்ற வேண்டுமானால் அதை அவன் எப்படியாவது, யார் மூலமாவது.... ....யார் மூலமாவது! ஏன், என் மூலமே அதை நிறைவேற்ற அவன் எண்ணியிருந்தால்!"

அவ்வளவுதான். கூடையைக் கையிலெடுத்துக் கொண்டு அந்தத் தெருவின் மறுகோடியிலிருந்த கோயிலை நோக்கிப் புறப்பட்டு விட்டேன். ஏன், எதற்காக அந்தக் கோயிலுக்கு என்பதொன்றும் எனக்கே தெரியாது. கால் போனபடி நடந்தேன்.

சுமார் பத்து வீடு தாண்டியிருப்பேன். வலது புறச் சாரியில் ஒரு வீட்டிலிருந்து வந்த ஒரு தீனமான குரல் என் கவனத்தைக் கவர்ந்திழுத்தது. தயங்கி நின்று கவனித்துக் கேட்டேன். மிக மிக இனிமையான குரல். ஆனால் ரொம்ப சோர்ந்து நைந்த குரல். நல்ல தரமான சங்கீதம் போலவிருந்தது. வார்த்தைகள் சரியாகப் புரியாவிட்டாலும், இரவின் அந்த நிசப்தத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாக முழு வார்த்தைகள் காதில் விழுந்தன.

எனக்குத் தெரியும். கிருஷ்ண கர்ணாமிர்த ஸ்லோகங்களில் ஒன்று. எனக்கு எவ்வளவு பரிச்சயமான ஸ்லோகம்! அந்த தீனமான குரலிலே, கூடியவரை சாஸ்திர பூர்வமான இசையாகவந்த அந்த ஸ்லோகம் என் நெஞ்சைக் குழைய வைத்துவிட்டது. என்னை மறந்து கையில் கூடையுடன் நடந்து வீதிப்பக்கமிருந்த ஜன்னல் வழி எட்டிப் பார்த்தேன்.

உள்ளே காணப்பட்ட காட்சி என்னைக் குலுக்கிவிட்டது.

ஒரு சிறு அறை; ஒரு பக்கத்தில் ஒரு காலணாக் காடா விளக்கு சுவற்றில் புகையை அள்ளி வீசிக்கொண்டு எரிந்தது. அதன் எதிரில் ஒரு சிறுவன் ஒரு சிறு கந்தையால் சுற்றப்பட்டுச் சோர்ந்து பிணம் போலக் கிடந்தான். அவன் பக்கத்தில் சுமார் முப்பது வயதுள்ளவளாகத் தோன்றிய ஒரு பெண் பரிதாபகரமான ஏழ்மைத் தோற்றத்துடன் உட்கார்ந்து அந்த ஸ்லோகத்தைப் பாடிக்கொண்டிருந்தாள். அவள் கண்களிலிருந்து கண்ணீர் ஊறி ஓடிக் காய்ந்திருந்த படுகை கன்னத்தில் பளிச்சென்று தெரிந்தது. ஊற்று வற்றிவிட்டதுபோலும்!

அந்த ஜன்னலடியிலேயே சில வினாடிகள் நின்றேன். மின்னல்போல மனதில் ஒரு எண்ணம் உதித்தது. ஒருக்கால் கூடையில் அந்தக் கடிதத்தை வைத்த பெண் அவளாகத்தானிருக்குமோ! அதற்கடுத்த வினாடி நான் அவள் வீட்டுக் கதவைத் தட்டிக் கொண்டிருந்தேன். இரண்டு மூன்று தடவை

தட்டிய பிறகுதான் பதில் வந்தது. அதுவும் என்னை மேலும் திகைக்க வைப்பதாக இருந்தது. "யார்? செட்டியாரா?" என்று கேட்டாள் அந்தப் பெண் மலிந்த குரலில்.

யாரது செட்டியார்? அடேடே! யாருக்கோ யாரோ எழுதிய கடிதத்தைப் பார்த்துவிட்டு என்ன பைத்தியக்காரத்தனம் செய்துவிட்டேன்! எதனால் இன்று என் புத்தி இப்படித் தடுமாறுகிறது என்று யோசித்துக்கொண்டே திரும்பி நடக்க ஆரம்பித்தேன்.

அச்சமயம் ஜன்னல் பக்கத்திலிருந்து "யாரது?" என்று குரல் வந்தது.

நான் தயங்கி நின்று, "செட்டியாரல்ல அம்மா!" என்றேன்.

ஜன்னலிலிருந்தே அவள் நான் போக முயல்வதைப் பார்த்துவிட்டு, "ஐயா! யாரா யிருந்தாலும் கொஞ்சம் நில்லுங்கள்" என்றாள்.

நின்றேன். அவள் கதவைத் திறந்து கொண்டு வெளியில் வந்து "நீங்கள் யார்? நீங்கள் தானே கதவைத் தட்டியது?" என்றாள்.

"ஆம்."

"யாரைத் தேடி வந்தீர்கள்? இந்த வீட்டுச் சொந்தக்காரச் செட்டியார்தான் வாடகை பாக்கிக்காக வந்துவிட்டாரோ என்று பயந்து போய் விட்டேன். அவருக்கு வாடகை பாக்கி கேட்க நேரம் போதே கிடையாது. தினசரி காலையில் கடைக்குப்போகும்போதும், இரவில் 11 மணிக்கு மேல் கடையை அடைத்துக் கொண்டு போகும்போதும் ஒரு தடவை முறையாக வந்து மிரட்டிவிட்டுப் போவார். அவர் தானாக்கும் என்று பயந்து போய்விட்டேன். நீங்கள் யார்?"

"நான் யாரென்பதைப் பிறகு சொல்லுகிறேன். முதலில் இதற்குப் பதில் சொல்லுங்கள். இந்தக் கூடையைப் பற்றி உங்களுக்கு ஏதாவது தெரியுமா?"

அந்த ஸ்திரீ அப்போதுதான் அந்தக் கூடையைப் பார்த்தாள் என்று தோன்றியது. "ஆமாம், நான்தான்....தெய்வத்தின் காதில் என் குரல் பட்டுவிட்டதா! அவர் கண் திறந்துவிட்டதா!.......உங்களை அவர்தான் அனுப்பினரா?" என்றாள் படபடப்பான குரலில்.

என் தொண்டையில் ஏதோ கட்டியாக எழுந்து அடைத்துக் கொண்டது. அவ்வளவு பரிதாபம் நிறைந்திருந்தன அவள் வார்த்தைகள். அவள் அவசரமாக "கொஞ்சம் நில்லுங்கள்; இதோ வந்துவிட்டேன்" என்று கூவிவிட்டு உள்ளே ஓடி அங்கிருந்த காடா விளக்கை எடுத்துக்கொண்டு ஓடி வந்தாள்.

விளக்கு வெளிச்சத்தில் அவளைக் கூர்ந்து கவனித்தேன். நல்ல அழகும் கனிவும் நிறைந்த முகம். ஆனால் துன்பம் என்ற பேய்க் காற்று அதை ரண களப்படுத்தியிருந்தது. அவள் முதல் பார்வையில் முப்பது வயதுடையவளாகத் தோன்றினலும் உண்மையில் அவளுக்கு இருபத்தைந்துக்குள் தானிருக்கும். அவ்வளவு வேதனைப் பட்டிருப்பாள் என்று தோன்றியது.

விளக்கைக் கையில் பிடித்துக் கொண்டே திடமான குரலில் "ஆம்; நான்தான் அதை அந்தத் தெரு முனையில் வைத்தேன்" என்றாள்.

நான் தயக்கத்துடன் "சற்று முன் இந்த வழியாகப் போன ஊர்வலத்துடன் வந்தேன். தற்செயலாக இது என் கண்ணில் பட்டது. அதிலிருந்த கடிதத்தையும் பார்த்தேன். இது வேறு யாருக்காகவோ அங்கு வைக்கப்பட்டதென்று பேசாமல் போய் விட முயன்றேன். ஆயினும் வேறு யாரும் அதைக் கவனிக்காமலே போய்விட்டதால், நானே மறுபடி எடுத்து கடிதத்தைப் படித்துப் பார்த்தேன். யார் எழுதியது அதை, எங்கிருப்பவர் என்பதொன்றும் தெரியாததால், அதோ அந்தக் கோயிலண்டை போய்த் தேடிப் பார்ப்போமென்று புறப்பட்டேன். வழியில் நீங்கள் சற்று முன் சொல்லிக் கொண்டிருந்த கிருஷ்ண கர்ணமிருத ஸ்லோகத்தைக் கேட்டு நின்றேன். ஜன்னல் வழியும் எட்டிப் பார்த்தேன்" என்றேன்.

அந்தப் பெண் பரம சந்தோஷத்துடன் பெருமூச்செறிந்து "தெய்வமிருக்கிறது! ஆம்; நிச்சயமாகயிருக்கிறது. ஆனல் அந்தக் கோயிலில் இல்லை. அங்கிருந்து அதைத் துரத்தி விட்டார்கள். என்னைப்போல் அனாதையாக தெருவில் அலைந்து கொண்டிருக்கிறது. நான் நினைத்தது சரியாகப் போய்விட்டது" என்றாள்.

நான் அவள் மன நிலைமையைக் கண்டு கொஞ்சம் பயந்து விட்டேன். ஆனல், அதைக் காட்டிக்கொள்ளாமல் "அம்மா, நீங்கள் யார்? எதற்காக இந்த மாதிரிக் கடிதத்தை எழுதி வைத்தீர்கள். உங்களைப் பார்த்தால் ரொம்பவும் கஷ்டமடைந்திருக்கிறீர்களென்று தெரிகிறது. கொஞ்சம் விவரமாகச் சொல்ல முடியுமா?" என்றேன்.

அவள் "சொல்லுகிறேன். என் கண் கண்ட தெய்வமாக வந்திருக்கும் உங்களிடம் சொல்லாமலா? என் குழந்தை இனிப் பிழைத்துவிடும். அடுத்த வாரம் அவர் வரும் வரை நான் உயிரோடிருப்பேன். அவரை நான் நிச்சயமாக உயிருடன் பார்ப்பேன். அப்படி உட்காருங்கள். இல்லை, வேண்டாம். உள்ளே வந்து இப்படி உட்காருங்கள். என் கதையைச் சொல்லுகிறேன். ஆனல்.......சத்தம் போடக் கூடாது. குழந்தை தூங்குகிறன். அவன் இதுவரை பசியால் துடித்துத் துடித்து அழுது விட்டு இப்போது தான் சோர்ந்து தூங்குகிறன். அவனை எழுப்பிவிடக் கூடாது" என்றாள்.

அவள் பேச்சும் நடத்தையும் என் மனதில் பெரிய கலக்கத்தை எழுப்பின. தயக்கத்துடனேயே உள்ளே போய் உட்கார்ந்தேன்.

அவள் ரொம்பத் தணிந்த குரலில் தன் கதையைச் சொன்னாள்.

"என் கணவர் இந்த ஊரைச் சேர்ந்தவர் தான். உங்களுக்குக் கூடத் தெரிந்திருக்கும். போன வருஷம் காங்கிரஸ் இயக்கத்தில் சேர்ந்து சிறைக்குச் சென்றாரே, அதோ கோயிலிலிருக்கும் ஸ்வாமியின் பெயருடையவர்........" என்று நிறுத்தினாள்.

"பார்த்தசாரதி என்று பெயரா?"

"ஆமாம்; அது தான். போன வருஷம் அவர் ஜெயிலுக்குப் போகும்போது என்னிடம் முழுசாக நூறு ரூபாய் கொடுத்து விட்டு 'ஜானகி! நீ கவலைப்படாதே. நம்மைவிட ஏழைகளாகவும், துயர்ப்பட்டவர்களாயுமுள்ளவர்களுக்காக நாம் கஷ்டத்தை ஏற்றுக்கொள்ளுவோம். எனக்கு ஆறு மாசத்திற்கு மேல் தண்டனை போட மாட்டார்கள். அதுவரை கொஞ்சம் சிரமப்பட்டாவது காலம் தள்ளு. நான் ஓடி வந்து விடுவேன். குழந்தையைப் பார்த்துக்

......சாலைக் காடா விளக்கு சுவற்றில் புகையை அள்ளி வீசி......

'கொள்' என்று சொன்னார். ஆனால் சர்க்காரில் அவருக்கு ஒரு வருஷம் தண்டனை விதித்து விட்டார்கள்.

"எனக்கோ அவருக்கோ வேறு நாதியோ பந்துக்களோ கிடையாது. ஒரு வருஷம் ஜெயிலென்றபோதே என் மனசு பகீரென்றது. ஆனால் அவரிடம் ஒன்றும் சொல்லவில்லை. பல்லைக் கடித்துக்கொண்டு வெறும் கஞ்சியைக் குடித்துக்கொண்டு காலம் தள்ளினேன்.

"ஆயிற்று; பத்து மாதம் ஆகிவிட்டது. இன்னும் ஒரு வாரத்தில் அவரை விட்டு விடுவார்களாம். ஆனால் எட்டாவது மாதத்திலேயே என் கையிலிருந்த பணமெல்லாம் கரைந்துபோய்விட்டது. பத்து மாதமாக நான் வீட்டு வாடகை கொடுக்கவில்லை. மாதம் ஐந்து ரூபாய்; எப்படிக் கொடுப்பேன். வீட்டுக்காரர் கூடியவரை நல்ல

வர்தான். அவர்தான் என்ன செய்வார் பாவம்! கூடியவரை பார்த்து விட்டு நெருக்க ஆரம்பித்தார். அதனால் சாப்பாடில்லாவிட்டாலும் பரவாயில்லை யென்று, என் கையிலிருந்த காப்பையும் விற்று அவருக்கு முப்பத்திரண்டரை ரூபாய் கட்டினேன்.

"என் வீட்டில் உருப்படியாக இருந்ததை யெல்லாம் விற்றுச் சாப்பிட்டாகிவிட்டது. இந்தக் கந்தல்களும், இரண்டு மூன்று மண் பாண்டங்களும்தான் பாக்கி. அதுவும் பரவாயில்லை. ஆனால்....என் குழந்தை! அதோ சோர்ந்து துவண்டு கிடக்கிறது பாருங்கள். அது சாப்பிட்டு மூன்று நாளாகிறது.......

"இரண்டு நாளாக வெறும் ஜலத்தைப் பிடித்துப் பிடித்துக் கொடுத்தேன் அவனுக்கு. ஐயோ! அவன் துடித்த துடிப்பு! இன்று காலையில் எனக்கு வெறிபிடிக்கும் போலாகிவிட்டது. அதனால் துணிந்து அவனை இடுப்பில் எடுத்துக்கொண்டு தெருவில் பிச்சை கேட்கப் புறப்பட்டுவிட்டேன்.

"ஆனால் எனக்குப் பிச்சை யெடுக்கவும் தெரியவில்லை. என்ன காரணத்தாலோ ஏந்தி நீட்டிய என் கையில் ஒரு தம்பிடி கொடுப்பார் யாரையும் காணவில்லை. சாயங்காலம் வரையில் வெயிலில் அலைந்து அலைந்து சோர்ந்து நடைப் பிணங்களாய் அந்தக் கோயிலுக்குப் போய், குளத்து ஜலத்தில் நாலு கை அள்ளிக் குழந்தைக்கும் கொடுத்து, நானும் குடித்தேன்.

"குழந்தை அந்தச் சோர்விலேயே தூங்கிப் போய் விட்டான். அதோ அந்தக் குளக்கரையில் ஒரு நந்தவனம் இருக்கிறது, பாருங்கள். அதில் நிறையப் பூவிருந்தது. அதை யெல்லாம் பறித்து மாலையாகக் கட்டிக் கொடுத்தால், யாராவது ஸ்வாமி தரிசனத்திற்கு வருகிறவர்கள் இரண்டணாக் காசு கொடுத்து வாங்க மாட்டார்களா என்று தோன்றியது.

"உடனே நார் தேடி யெடுத்துப் பூப் பறித்து மாலை கட்டினேன். ஐயோ! அந்த மாலையைக் கட்டி முடிப்பதற்குள்........ அதைப் பிணமான எனக்கும் என் குழந்தைக்கும் தான் போடவேண்டி யிருக்கும் என்று தோன்றியது. அப்படி யிருந்தது என் நிலைமை. அதிலும் விடாமல் மாலையையும், ஒரு சரத்தையும் கட்டி விட்டேன்.

"அங்கேயே யாரோ எறிந்து விட்டுப் போயிருந்த அந்தப் பீத்தல் கூடையில் அதைப் போட்டு எடுத்துக்கொண்டு குழந்தையையும் தூக்கிக்கொண்டு தள்ளாடித் தள்ளாடி நடந்து கோயில் வாசலுக்குப் போனேன். ஆனால் என் மாலையைப் பணம் கொடுத்து வாங்குகிறவர் யாரையும் காணவில்லை. கடைசியாக நானே அர்ச்சகரிடம் கொடுத்து மாலையை ஸ்வாமிக்குச் சாத்தச் சொல்லிவிட்டேன்.

"ஸ்வாமியிடம் என் உள்ளத்தைத் திறந்து கொட்டி முறையிட்டேன். அங்கே அவரை தரிசிக்கவந்த யாரிடமாவது சொல்லி, என் குழந்தைக்கு ஒரு கவளம் சோறுபோட ஏற்பாடு செய்யும்படி அவரிடம் வேண்டினேன். அவர் காதில் அதெல்லாம் படவேயில்லை போலிருக்கிறது. அவர் அங்கிருந்தாலென்ன அதெல்லாம் படுவதற்கு!

"சாப்பிடாத அந்த தெய்வத்தின்முன் தேங்காய்களையும், பழங்களையும் காட்டிக் காட்டி அவரவர் வீட்டிற்கு எடுத்துக் கொண்டு போய்க்கொண்டிருந்தார்கள். என் குழந்தைக்காக ஒரு வாழைப்பழம் கூட யாரும் கொடுக்கமாட்டேன் என்று சொல்லி விட்டார்கள். ஸ்வாமிக்கு அர்ச்சனை செய்யச் சொல்லி இரண்டணா நாலணாக் கொடுத்தவர்களெல்லாம், காசுபோட்டுக் கற்பூரத்தை வாங்கிப் புகையாக்கினவர்களெல்லாம் எனக்குக் காலணாக் கொடுக்க மறுத்து விட்டார்கள்.

"அப்போது எனக்கு வந்த கோபம்! நல்ல வேளை. என் நாதன் இந்தத் 'தான் தின்னி'களுக்காக ஜெயிலுக்குப் போகவில்லை. என்னைப்போன்ற, என்னிலும் மதிக ஏழைகளுக்காகத்தான் போனார் என்று திருப்திகூடப்பட்டேன். எனக்கு ரொம்பக் கோபம் வந்தது. ஸ்வாமி அங்கே அந்தக் கோயிலில் இல்லை என்று எனக்கு நிச்சயமாகத் தெரிந்துவிட்டது.

"இந்தக் கள்ள மனிதர்கள் அவரை அங்கேயிருந்து துரத்திவிட்டார்கள். அல்லது அவர்கள் கள்ளத்தனம் நன்றாகத் தெரிந்திருந்ததால், அவரே அங்கேயிருந்து எங்கேயோ வெளியே போய்விட்டார்.

"உடனே எனக்கு ஒரு யோசனை தோன்றியது. பாவம்! அவரும் என்னைப் போலத் தெருவில் தானே அலைந்து கொண்டிருப்பார்! சீ! அவருக்காக நான் கட்டிய மாலையை இந்தக் கல்லின்மேல் போடவாவது என்று நினைத்தேன். சுற்றும் முற்றும் பார்த்தேன். அங்கே சன்னதியில் யாருமில்லை. அர்ச்சகர்கூட இல்லை. உடனே குழந்தையை கீழே விட்டுவிட்டு ஓடிப்போய் அந்தச் சிலையின் கழுத்திலிருந்த மாலையைத் தூக்கிக்கொண்டு ஓடி வந்து விட்டேன்.

"இங்கே வீட்டுக்கு வந்தவுடன் இன்னொரு யோசனை தோன்றியது. அதன்படி ஸ்வாமிக்கு ஒரு கடிதம் எழுதி, அந்தக் கூடையில் போட்டு அந்த இடத்தில்—நீங்கள் அதைக் கண்டெடுத்தீர்களே, அந்த இடத்தில் வைத்துவிட்டு வந்துவிட்டேன்.

"இதுவரை குழைந்தையிடம் ஸ்வாமி நிச்சயமாகச் சாப்பாடுடன் வருவார், வருவார் என்று சொல்லிக் கொண்டே யிருந்தேன். அவன் நம்பாமலே, பசியினால் நம்பிக் காத்திருந்து விட்டு மறுபடி அந்தச் சோர்விலேயே தூங்கிப் போய்விட்டான். ஆனால் நான் தூங்கவில்லை. எனக்குத் தெரியும். நீங்கள் நிச்சயம் வருவீர்களென்று. நீங்கள்தான் ஸ்வாமி. வெறுமனே என்னை ஏமாற்றுவதற்காக இப்படி மனுஷவேஷம் போட்டுக்கொண்டு வந்திருக்கிறீர்கள்."

என்று சொல்லிக் கொண்டே வந்தவள் பைத்தியம் போலக் கடகடவென்று சிரிக்க ஆரம்பித்துவிட்டாள். சிரித்துச் சிரித்து அந்த வேகத்திலேயே மூர்ச்சையாகிச் சாய்ந்துவிட்டாள்.

* * * *

இதெல்லாம் நடந்து மூன்று நாட்களாகின்றன. குழந்தை உடல் தேறி சாதாரணமாகிவிட்டான். ஆனால் அந்தப் பெண்—ஜானகி—இன்னும் படுத்த படுக்கையாகவே யிருக்கிறாள். ஆனால் பிரக்ஞை வந்துவிட்டது. நன்றாகப் பேசுகிறாள்.

நான் தேவைக்குத் தகுந்தபடி அவளைச் சந்தித்த விவரமெல்லாம் சொன்னேன். அவள் உடனே எல்லாவற்றையும் ஞாபகப் படுத்திக்கொண்டு விட்டாள்.

அவளுக்கு அதெல்லாம் ஞாபகம் வராமலே யிருந்திருக்கக் கூடாதா என்று தோன்றுகிறது எனக்கு. நான்தான் ஸ்வாமி யென்றும், அவளை ஏமாற்றுவதற்காகவே இந்த வேஷத்திலிருப்பதாகவும் அவள் சொல்லும்போது என் உடல் குன்றுகிறது. இன்னும் நாலைந்து நாள்கழித்து அவள் கணவர் வந்தவுடன், அந்தக் கூடையி லிருக்கும் மாலையை எனக்குப் போட்டு நமஸ்கரிக்கப் போகிறாளாம்.

இப்படி யெல்லாம் அவள் பேசும்போது தான் டாக்டர் வார்த்தைகளில் கூட எனக்கு சந்தேகம் உண்டாகிறது, அவள் புத்தியில் ஏதாவது கோளாறு ஏற்பட்டிருக்குமோ என்று. அவள் பட்டிருக்கும் துன்பத்தின் சாயைதான் அந்த மாதிரிப் பேச்சு என்றும் படுகிறது.



ஆரோக்கியம் பெற்று .... இல்லற சுக மனுபவியுங்கள் !

★

நீங்கள் எப்போதாவது இந்தப் பிரச்னையைப்பற்றி நினைத்ததுண்டா? நல்ல திடமான குழைந்தைகளைப் பெறக் கூடிய் தேகாரோக்கியம் உங்களிடமுண்டா? பெற்றோருக்கும் சரி, தேசத்துக்கும் சரி, அழகிய தேஜஸுள்ள குழந்தை பெருமையளிக்கிறது. **போர்ன்-விடா** அத்தகைய ஆரோக்ய சௌந்தரியத்தைத் தந்து, அது மாருமல் காக்கும். **போர்ன் - விடா** பசியைத் தீர்க்கும் பான மட்டுமல்ல; நல்ல ஜீர்ண சக்தி தரும் பானமும் கூட

★

14,000 டாக்டர்கள் சிபார்சு செய்த முழு சைஸ் டின்

போர்ன்-விடா

இனம் !

விவரங்களுக்கு:

டி. டி. கிருஷ்ணமாச்சாரி
11-14, அரமனேக்காரன் தெரு, சென்னே
என்று எழுதி பெற்றுக்கொள்ளவும்.

"பயிற்சி பெறுகையில், தேகத்துக்கு அவசியமான போஷாக்கு, ஊக்கம், புஷ்டி தரும் உணவாகக் கவனித்துச் சாப்பிடவேண்டும். அந்தப் பலத்தை அதிகரிக்க வேண்டி, தினம் தவருமல் **போர்ன்- விடா**வை அருந்துவதில் நான் நம்பிக்கை உள்ளவன்" என்று பிரபல ஸ்போர்ட்ஸ்காரரும், டிரெயினருமான **பி. டி. சாட்டர்ஜி** சொல்லுகிருர்.

Cadbury's
BOURN-VITA

காட்பரியின்

போர்ன் - விடா

சகலருக்கும் ஏற்ற பானம்

பாரதி நாட்டியம்

சாஹித்ய கர்த்தர் — **கவி சுப்பிரமணிய பாரதி**

நாட்டியம் பிடித்தவர் — **மிஸ் டி. எம். பட்டம்மாள்**

ராகம்—சுருட்டி

பல்லவி

சொல்ல வல்லாயோ கிளியே
சொல்ல நீ வல்லாயோ

அநுபல்லவி

வல்ல வேல்முருகன்—தனையிங்கு
வந்து கலந்து மகிழ்ந்து குலா வென்று
சொல்ல வல்லாயோ !

சரணம்

தில்லை யம்பலத்தே நடனம்
செய்யும் அமரர் பிரான்
அவன் செல்வத் திருமகனை
திடங்கொண்டு
சேர்ந்து கலந்து
மகிழ்ந்து குலாவென்று
சொல்ல வல்லாயோ கிளியே
சொல்ல நீ வல்லாயோ !

அல்லிக் குளத்தருகே ஒருநாள்
அந்திப் பொழுதினிலே அங்கோர்
முல்லைச்செடி அதன்பால்
செய்த வினை
முற்றும் மறந்திடக்
கற்றதென்னே யென்று
சொல்ல வல்லாயோ கிளியே !
சொல்ல நீ வல்லாயோ !

PHOTOGRAPHS & DECORATIONS BY
SJT. C. RAMA RAJU

பல்லவி : சொல்ல வல்லாயோ [1] கிளியே! [2] சொல்ல நீ வல்லாயோ. [3]

அநுபல்லவி : வல்ல [4] வேல் முருகன் [5] தனையிங்கு [6] வந்து [7] கலந்து [8]
மகிழ்ந்து குலாவென்று [9]
சொல்ல வல்லாயோ! [10]

சரணம்: தில்லையம்பலத்தே நடனம்[1] செய்யும் அமரர் பிரான்[2]
அவன் செல்வத் திருமகனை[3] திடங்கொண்டு[4]
சேர்ந்து கலந்து[5] மகிழ்ந்து குலாவென்று[6]
சொல்ல வல்லாயோ கிளியே! சொல்ல நீ வல்லாயோ![7]

அல்லிக் குளத்தருகே 1 ஒரு நாள் 2 அந்திப் பொழுதினிலே 3 ஆங்கோர் 4
முல்லைச் செடி 5 அதன்பால் 6 செய்த வினை 7
முற்றும் மறந்திட 8 கற்றதென்னே யென்று 9
சொல்ல வல்லாயோ கிளியே! சொல்ல நீ வல்லாயோ! 10

சந்திர குப்தரின் ஜயஸ்தம்பம்

எஸ். ஆர்.
எழுதியது

புது டில்லியிலிருந்து சுமார் 8 மைல் தூரத்தில், குதுப்மினருக்குப் பக்கத்தில், 1500 வருஷங்களுக்கு முன் வார்க்கப்பட்ட இரும்பு ஸ்தம்பமொன்று இடிந்த கட்டிடங்களின் மத்தியில், காண்போர் அனைவரும் பிரமிக்கும்படி நிற்கின்றது. இத்தனை வருஷங்களாய் மழையிலும் பனியிலும் நின்றும், சிறிதும் துரு அடையாமலும், இதன்மீது பொறிக்கப்பட்டுள்ள இதன் வரலாறு சம்பந்தமான எழுத்துகள் சிறிதும் அழியாமலும் இருப்பதைக் கண்டு அதிசயிக்காதவர்கள் இல்லை.

டில்லியை ஆண்டு வந்த ப்ருத்வீ ராஜனைப் போரில் தோற்கடித்து மகமதியர் இந்தியாவில் முதல் முதல் தமது ராஜ்யத்தை ஸ்தாபித்தனர். உடனே நாட்டிலிருந்த ஹிந்துக் கோவில்களை எல்லாம் இடித்து, அவை இருந்த இடங்களில் மசூதிகளை அபரிமிதமாகக் கட்டினர். இந்த ஸ்தம்பம் இருக்குமிடத்திலும் ஒரு கோவில் இருந்தது. ஆனால், அதுவும் மசூதியாக மாறிவிட்டது. நடுவில் நின்ற இந்த த்வஜ ஸ்தம்பத்தை மாத்திரம் அகற்றுமல் மசூதிக்கு அலங்காரமாய் இருக்குமென அப்படியே விட்டுவிட்டனர் போலும்.

இந்த ஸ்தம்பத்தின் உயரம் 22 அடி. அடியிலிருந்து மேலே போகப் போக, இதன் குறுக்களவு குறைந்து கொண்டே போவதால், அடியில் பதினறு அங்குலமுள்ள குறுக்களவு உச்சியில் பனிரெண்டு அங்குலமாகி விடுகிறது. இதன் எடை ஆறு டன்னிற்கு மேல் இருக்குமென மதிப்பிடப்படுகிறது.

பூமியின் அடியில் இது 30 அடிக்கு மேல் இருப்பதாக வெகு நாள் வரையிலும் யாவரும் நம்பி வந்தனர். ஒவ்வொரு விஷயத்தையும் மிகவும் உன்னிப்பாக கவனிக்கும் ஜெனரல் கன்னிங்ஹாம் என்பவர்கூட கி. பி. 1871-ல் இவ்வரலாறு உண்மையாக இருக்குமென நம்பிவிட்டார். ஆனல் மறு வருஷம் பெக்லர் என்பவர் நிஜமாகவே தோண்டிப் பார்க்க பூமியிலிருந்து மூன்று அடி ஆழமே காணப்பட்டது. கிழங்குபோல் கனத்திருந்த இதன் பாதத்தின் மீது எட்டுக்கம்பிகளை வைத்து அதன்மீது கற்களால் கட்டி இருப்பதைக் கண்டார்.

துருப்பிடிக்காது இருப்பதினுல் இது சுத்தமான இரும்பா, அல்லது பல உலோகங்களின் கலப்பா என்ற சந்தேகமும் அவர்களுக்கு உண்டாயிற்று. கன்னிங்ஹாம் என்பவர் இதிலிருந்து சிறிது இரும்புத்தூளை ராவி இரசாயனத்தின் மூலம் பரீக்ஷை செய்யும்படி இரண்டு இடங்களுக்கு அனுப்பினர். இவ்விரண்டு இடங்களிலிருந்தும் கிடைத்த விடைகளிலிருந்து நூற்றுக்கு 99·97 சுத்த இரும்பும், ·006 கந்தகமும் இருப்பதாசத் தெரியவந்தது. இப்மாதிரியான வார்ப்பு இரும்பில் காணப்படும் மாங்கனீஸ் இதில் அணுவளவேனும் இல்லை. மாங்கனீஸ் சிறிதுமின்றி, மிகவும் குறைந்த அளவு கந்தசம் அமைந்திருப்பதாலேயே இது துரு அடையாமல் இருக்கிறது என்று அனுமானம் செய்யப்பட்டது.

பொறிக்கப்பட்டுள்ள அக்ஷரங்கள்

அதன்மீது பழய நாகரி எழுத்துகளில் ஆறு வரிகள் செதுக்கப்பட்டுள்ளன. மகமதிய அரசாக்ஷி டில்லியில் ஸ்தாபிதமான பிறகு இதைப் படிக்க வல்லார் ஒருவருமே கிடைக்கவில்லை. சுமார் 100 வருஷங்களுக்கு முன்பு ஜேம்ஸ் பிரின்சப் என்பார் இதன் ஒரு பகுதியின் பொருளை அறிந்து இது தாவன் என்னும் ஒரு அரசனல் தன் ஜயத்தைக் கொண்டாடும்பொருட்டு விஷ்ணுவின் கோவிலில் நிறுத்தப்பட்டது என்று ஒருவாறு கூறினர். 27 வருஷங்கள் கழித்து பாவு தாஜி என்னும் சமஸ்கிருத புலவர் ஒருவர் இதில் குறிக்சப்பட்டிருக்கும் அரசனின் பெயர் சந்திரனென்றும், இது ஐந்தாவது அல்லது ஆருவது நூற்றுண்டில் செதுக்கப்பட்டிருக்க வேண்டுமெனவும் அபிப்பிராயப்பட்டார்.

கி. பி. 1888-ல், டாக்டர் பிளீட் என்பவர் முழுவதையும் பின் வருமாறு மொழி பெயர்த்தார். “மிகவும் கீர்த்தி வாய்ந்தவனும், தனது புஜ பலத்தால் வங்க தேசத்து எதிரிகளைத் துரத்தியவனும், சிந்து நதியின் ஏழு முகங்களைக் கடந்து சென்று வால்ஹிகர்களை ஜெயித்தவனும், தன்னுடைய பராக்கிரமத்தினுலேயே சக்கிரவர்த்தி என்னும் பெயரை உலகில் நிலைநாட்டி வெகுகாலம் ஆண்டவனும், அழகில் பூர்ண சந்திரனின் சகல கலைகளையும் பெற்றவனும், விஷ்ணுவினிடம் பரம பக்தியுள்ளவனும், சந்திரன் எனப் பெயர் கொண்டவனுமான அரசன் இந்த விஷ்ணுவின் ஸ்தம்பத்தை விஷ்ணுபதமெனக் கூறப்படும் குன்றின்மீது நாட்டினன்.”

சந்திரன் எனக் குறிக்கப்பட்டிருக்கும் சக்கிரவர்த்தி கி. பி. 375-413 வரையிலும் மிகவும் சிறப்புடன் ஆண்ட சந்திரகுப்த விக்ரமாதித்யன் என்னும் அரசனே. விஷ்ணுபத மென்னும் ஒரு கிரியின்மீது இது நாட்டப்பட்டதாக மேலே கூறப்பட்ட மொழி பெயர்ப்பிலிருந்து அறிகிறோம். ஆனல் டில்லியிலோ ஒரு குன்றுகூடக் கிடையாது. எங்கும் ஒரே சம நிலம்தான் காணப்படுகிறது. ஆகையால் இந்த ஸ்தம்பம் வேறு ஒரு இடத்திலிருந்து கொண்டுவரப்பட்டிருக்க வேண்டுமென்பது நிச்சயம்.

வின்சன்ட் ஸ்மித் என்னும் சரித்திராசிரியர், டில்லிக்கு அருகிலுள்ள விஷ்ணு ஸ்தலம் மதுராவே யாகையால், அங்கிருந்து இது வந்திருக்க வேண்டுமெனக் கருதினர். இங்கும் மலைகளோ குன்றுகளோ கிடையாதாகையால், இது சிறிதும் பொருத்தமாகத் தோன்றவில்லை.

நமது இதிஹாசங்களான இராமாயணத்திலும், மஹாபாரதத்திலும் விஷ்ணுபதமென்னும் ஸ்தலம் குறிக்கப்பட்டுள்ளது. தசரதரின் மரணத்திற்குப்பிறகு, கேகய நாட்டில் அவன் மாமன் வீட்டிலிருந்த பரதனை அழைத்துவர விரைந்து சென்ற தூதுவர்களின் வழியில், விஷ்ணுபதமென்னும் ஸ்தலம் இருந்ததாக அயோத்யா காண்டம் கூறுகிறது.

குரு க்ஷேத்திரத்திலிருந்து வடக்கே கந்தமாதன மலைக்குச் சென்ற சில யாத்ரிகர்கள், விஷ்ணுபதத்தில் தங்கினதாக மஹாபாரதத்து ஆரண்ய பர்வம் கூறுகிறது. மேலும் வன பர்வத்து 66-வது அத்தியாயத்தினின்றும் விஷ்ணு பதமென்னும் ஸ்தலம் ஸரஸ்வதி, த்ரஷ்த்வதி என்னும் இரு புண்ய நதிகளுக்கும் மத்தியில் இருந்ததாக அறிகிறோம். இந்தத் தகவல்களிலிருந்து தசரத சர்மா என்னும் ஒரு ஆசிரியர், விஷ்ணுபத மென்பது அம்பாலா ஜில்லாவில் சதௌரா என்னும் நகருக்கு அருகிலுள்ள மலைகளிலொன்றில் இருந்திருக்க வேண்டுமெனக் கருதுகிறார்.

(தொடர்ச்சி 48-ம் பக்கம்)

குதுப்தீன் கட்டிய மசூதியின் வாசலில் நிற்கும் ஜயஸ்தம்பம்

கல்யாண டயரி

ஸ்ரீமான்
வி. எஸ். கிருஷ்ணமூர்த்தி
எழுதியது

[நான் மாமா வீட்டிற்கு லீவிற்காக போயிருந்தேன். அவர் பெண் பிரேமாவிற்கு இந்த சித்திரை மாசம் தான் கலியாணம் நடந்தது. நான் போன சமயம் அவள் தன் சிறிய தாயார் வீட்டிற்குப் போயிருந்தாள். பொழுது போக்குவதற்காக அவள் புஸ்தக அலமாரியைக் குடைந்தேன். ஒரு புஸ்தகத்தைப் புரட்டிப் பார்க்கும் பொழுது ஒரு 'டயரி' அகப்பட்டது. அதில் பிரேமா தன் கலியாண விஷயத்தைப்பற்றி குறிப்பிட்டிருந்தவற்றை எழுதுகிறேன். பிரேமாவுக்குத் தெரிந்தால் நிச்சயம் அமர்க்களப்படும். ஆனாலும் இதைப் பிரசுரத்திற்கு அனுப்புவதிலுள்ள ஆவல் பிரமாதமாயிருக்கிறது.]

ஏப்ரல்மீ 15.... இந்தக் கல்யாண கோர்ட்டு இவ்வருஷம் ஆரம்பித்தது போரும் போரும். வீட்டில் இருக்கவே முடியவில்லை. ஒரு நிமிஷம் போவது ஒரு யுகமாய் இருக்கிறது. அப்பாவுக்கும் அம்மாவுக்கும் தினசரி சண்டை. அம்மா, அப்பா எனக்காக வரன் தேடவில்லை என்று 'டோஸ்' விடுகிறாள். அவர் தான் தேடிக் கொண்டுதான் இருப்பதாகச் சொல்லுகிறார். இன்னும் ஒன்றும் மனசிற்குப் பிடித்த வரன் அகப்படவில்லை என்று சொல்லுகிறார். இந்த வருஷம் எனக்குக் கலியாணத்திற்கு அவசரமில்லை என்றும், அடுத்த வருஷம் பார்த்துக்கொள்ளலாம் என்றும் சொல்லுகிறார். அம்மா என் வயதுள்ள பெண்களுக்கெல்லாம் கலியாணமாய் விட்டதென்றும், எனக்கு எப்படியாவது இவ்வருஷம் கலியாணம் செய்துவிடவேண்டும் என்றும் சொல்லுகிறாள்.

ஏப்ரல்மீ 17....நேற்று முழுவதும் அம்மாவும் அப்பாவும் பேசவேயில்லை. நேற்று ராத்திரி தெரு வழியாக இரண்டு மாப்பிள்ளைகளை ஊர்வலமாக அழைத்துக் கொண்டு போனார்கள். அம்மாவின் முகத்தைப் பார்க்க முடியவில்லை. எள்ளும் கொள்ளும் வெடித்தது.

ஏப்ரல்மீ 18....அப்பாவுடன் தினம் சேர்ந்து உட்கார்ந்து கொண்டு சாப்பிடுவது வழக்கம். அம்மா, இலையில் சாதத்தை பரிமாறி விட்டு என் கலியாண பாராயணத்தை ஆரம்பித்து விடுவாள். சில சமயம் அப்பா சொல்லுவது பொய் என்று எனக்குத் தெரியும். சில சமயம் அம்மா, அப்பாவை கோபித்துக் கொள்ளுவது தப்பு என்றும் படும். ஆனால் அம்மா கக்ஷியாவது அப்பா கக்ஷியாவது சேர்ந்து பேச முடியாமல் இருக்கிறது. பெண்கள் தங்கள் கலியாண விஷயமான பேச்சுகளில் தலையிடக்கூடாது என்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். நான் தலையைக் குனிந்து கொண்டு பேசாமல் இருக்கிறதா, அல்லது என்ன பண்ணுகிறது என்று எனக்குப் புரிகிறதில்லை. ஆகையால் அப்பா சாப்பிட்டு விட்டுப் போகட்டும், அப்புறம் நாம் சாப்பிடலாம் என்று இலை போட்டுக்கொள்ளாமல் ஒரு மூலையில் உட்கார்ந்திருந்தேன்.

"பிரேமா! சாப்பிட வரவில்லையா?" என்று கேட்டார் அப்பா.

"பசிக்கவில்லை, அப்புறம் சாப்பிடுகிறேன்" என்றேன்.

"சரி தான். உனக்கு வேறே பந்தியா? இலையைப் போட்டுக் கொண்டு உட்கார்" என்றார்.

அவர் பேச்சைத் தட்ட முடியவில்லை. தினமும் நடக்கிற சண்டைதான். அப்பா சண்டையின் பொழுது என்னையே ஒரு நிமிஷம் பார்த்தார். அம்மாவைப் பார்த்து, "ஏன தினம் இந்த அட்டகாசம் பண்ணுகிறாய்? பிரேமாவையே கேட்போம்" என்று "பிரேமா! நீ இந்த வருஷம் கலியாணம் பண்ணிக்கொள்ளுகிறாயா?" என்று கேட்டு விடப்போகிறாரோ என்று பயந்தேன். கேட்டால் எப்படி வாயைத் திறந்து பதில் சொல்ல முடியும்? நல்ல வேளை அவர் கேட்கவில்லை.

ஏப்ரல்மீ 19....இன்றைக்கு அம்மா குழம்பில் உப்புப்போடவேயில்லை. அப்பா "ஏன் குழம்பில் உப்பு போடவில்லை?" என்று கேட்டார்.

"தென்னை மரமாட்டமா ஒரு பெண் வீட்டில் கலியாண மாகாமல் இருக்கிறது உங்களுக்குத் தெரியவில்லையே. குழம்பில் உப்புப் போடவில்லை என்பதாவது உங்களுக்குத் தெரிகிறதோ இல்லையோ என்று தான் உப்புப் போடவில்லை" என்றாள். அப்புறம் சண்டைதான். என்னைத் தென்னை மரமாட்டமா வளர்ந்திருக்கிறேன் என்று அம்மா சொன்னதில் எனக்கு அம்மாபேரில் கோபம் தான்.

ஸிந்து மாகாண ஹைதராபாத்தில் ஸ்திரீகள் தங்கள் கணவர்களை எல்லாம் விட்டு விட்டு "நாங்களெல்லோரும் கோபிகள்" என்று பிரம்மசரிய விரதத்தை அனுஷ்டிக்க ஆரம்பித்து விட்டார்களென்றும், அவர்களெல்லோரும் பம்பாயிலோ எங்கேயோ 'ஓம் மண்டலி' என்ற இடத்தில் இருப்பதாகவும் பேபர்களில் படித்தேன். நமக்குக் கலியாணமே வேண்டாம் என்று மனம் சலித்துவிட்டது. ஏன் பிரம்மசரிய விரதத்தை அனுஷ்டிக்கக் கூடாது என்று தோன்றுகிறது. பம்பாய்க்குப் போக துணை அகப்பட்டால் இன்றைக்கே கிளம்பத் தயார்தான்.

ஏப்ரல்மீ 20....அப்பா எங்கேயோ வெல்லாம் போய் இருந்தார். அம்மா ஆற்றங்கரைக்குப் போயிருந்தாள். அப்பா மேஜையைத் திறந்து பார்த்தேன். அதில் ஏ. பி. ஸி. டி. என்று குறிப்புகளுள்ள ஒரு அடுக்குப் புஸ்தகம் இருந்தது. அதைத் திறந்து பார்த்தேன். ஒரே ஜாதகமயமாக இருந்தது. எம் (M) என்ற குறிப்புப் பேரேட்டைத் தள்ளிப் பார்த்தேன். மாங்குடி, மாயவரம், என்று 'எம்'மில் ஆரம்பிக்கிற ஊர்களிலுள்ள பையன்களுடைய ஜாதகங்கள் இருந்தன. இவ்வளவு கலியாணமாகாத பையன்கள் இருக்கிறபோது அம்மா எனக்காக ஏன் கவலைப்படவேண்டும்?

ஏப்ரல்மீ 21....யாரோ பாட்டியம்மாள் சீதா கல்யாணம், ருக்குமணி கலியாணம் முதலிய புஸ்தகங்களைப் படித்தால் எனக்கு சீக்கிரம் கல்யாணமாகிவிடும் என்று சொன்னாளாம். ஆகையால் அம்மா அந்தப் புஸ்தகங்களை வாங்கிக்கொண்டு வந்து என்னைப் படிக்கச் சொன்னாள். ருக்மணி கிருஷ்ணனுக்குக் கடுதாசி கொடுத்தனுப்பினாளாம்! அவளுக்கு நிச்சயமாகத் தெரிந்திருந்தது யாரைக் கலியாணம் பண்ணிக் கொள்வதென்று. நான்…………

ஏப்ரல்மீ 22.... நேற்றைய இரவு என் சுயம்வரத்திற்காக 100 அல்லது 150 பையன்கள் வந்திருப்பதாக சொப்பனம் கண்டேன். நான் மாலையை எடுத்துக்கொண்டு யார் கழுத்தில் போடலாம் என்று ஒவ்வொருவராகப் பார்த்துக்கொண்டு வந்தேன். அச்சமயத்தில் பால்காரன் 'அம்மா! அம்மா!' என்று கதவைத் தட்டினான். தூக்கம் கலைந்து விட்டது. விடியற் கால சொப்பனம் பலிக்கும் என்று சொல்லுகிறார்கள். இனிமேல் போகப் போகப் பார்க்கணும்.



"……எவ்வளவு அபஸ்வரமாகப் பாட் பாடி………"

ஏப்ரல்மீ 23.... காலை எட்டு மணிக்கே ஜோஸ்யர் வந்து விட்டார். ராத்திரி பத்து மணி வரையிலும் 'டேரா' போட்டு விட்டார். சாப்பாடு, 'டிபன்' எல்லாம் இங்கே தான். சுமார் இருநூறு ஜாதகம் போல் பார்த்தார். எனக்கே ஜோஸ்ய ஞானம் உண்டாய் விட்டது! இவன் இந்த மடத்தில் இருக்கிறான். அவன் அந்த மடத்திலேறுகிறான். சுக்கிரன் அதோ எட்டிப் பார்க்கிறான். அவன் எட்டிப் பார்க்கவில்லை. இவர்கள் இரண்டு பேரும் சேர்ந்து இருக்கிறார்கள். சனி நீசனாய் போய் விட்டான் என்று பல வார்த்தைகள் அடிக்கடி என் காதில் விழுந்தன. சில ஜாதகங்களுக்கு புத்திர தோஷம் இருக்கிறதென்று அவற்றைத் தள்ளிவிட்டார். அந்தப் பையன்களை நான் கலியாணம்செய்து கொண்டால் எனக்குக் குழந்தையே பிறக்காதாம்! என்ன வேடிக்கை! கலியாணமே இன்னும் ஆகவில்லை. அதற்குள் அடுத்த படியைத் தாண்டிவிட்டார்கள். சில பையன்களுடைய ஜாதகங்களில் புத்திர தோஷம்

அவ்வளவு கடுமையாக இல்லையென்றும், ராமேஸ்வரம் போய்விட்டு வந்தால் பிள்ளை பிறக்கும் என்று சொன்னர். இந்தியா முழுவதும் சுற்றி வந்தால்தான் பிள்ளை பிறக்கும் என்று சொன்னால் எவ்வளவு குஷியாக இருக்கும் ?. புத்திரதோஷமுள்ள பையன்களுக்கு கிராக்கி ஏற்படும். அவர்களையே பெண்கள் கலியாணம் செய்துகொள்வார்கள். கடைசியில் ஜோஸ்பர் பத்து ஜாதகங்களைத் தனியாகப் பொறுக்கி எடுத்துக்கொடுத்தார்.

ஏப்ரல்மீ 24...இன்றைக்கு எனக்கு 'அடுக்களைப் பாரா' வரும் என்று நான் சொப்பனத்திலேகூட நினைக்கவில்லை. அம்மா 'சாதத்தை வடித்து வாழைக்காய் கறி பண்ணு, முருங்கக்காய் சாம்பார் பண்ணு' என்று சொல்லிவிட்டுக் கூடத்திற்குப் போய்விட்டாள். ஜோஸ்யர் நேற்று பத்து ஜாதகங்கள் எடுத்துக்கொடுத்தாரே அந்தப் பையன்கள் எப்படி, அவர்களுக்கு என்ன சொத்து இருக்கிறது, அவர்களுடைய பெற்றோர்கள் எப்படி என்று அப்பா வர்ணித்துக்கொண்டிருந்தார். காலை 8 மணியிலிருந்து மத்தியானம் ஒரு மணி வரையிலும் இதே பேச்சுதான். இது மாதிரி விஷயங்களைக் கேட்க ஒரு கலியாணமாகாத பெண்ணுக்கு எவ்வளவு ஆவல் இருக்கும்? என்றால் முடிந்த வரையில் 'ஸ்கிரீன்' மறைவிலிருந்து ஒட்டுக் கேட்டுக்கொண்டிருந்தேன். ஆனல் அந்தப் பாழும் அடுப்பு நிமிஷத்திற்கொரு தரம் வேண்டுமென்று அணைந்துபோய் விடும். அது திரும்பி எரிய ஆரம்பிக்கப் பத்து நிமிஷம் செல்லும். அதற்குள் அப்பா எவ்வளவோ சுவாரஸ்யமான விஷயங்களைச் சொல்லிவிடுவார். அன்றையதினம் சமையலே ஒரு தினுசுதான். சமையலில் புத்தி செல்லவேயில்லை. குழம்பில் உப்பு போட்டோமோ இல்லையோ என்று மறுபடியும் உப்பு போட்டேன். அப்பா சாப்பிடும் பொழுது "பிரேமா! நீ சமைத்தாயா? என் குழம்பிலே உப்பு ஜாஸ்தியாய் இருக்கிறது ?" என்று கேட்டார். நான் சிரித்துக்கொண்டு இருந்துவிட்டேன். ஜோஸ்யர்

...டியுமோ அவ்வளவு அபஸ்வரமாகப்

ஒரு பையனின் ஜாதகம் ரொம்ப நன்றாயிருக்கு என்று சொன்னராம். அந்தப் பையனின் பெற்றோர்களைப் பார்ப்பதற்காக அப்பா கிளம்பிப் போய்விட்டார்.

ஏப்ரல்மீ 25.... அப்பா இன்றைக்குத் திரும்பி வந்துவிட்டார். அந்த பையன் இருப்பது ஒரு குக்கிராமமாம். அந்த பையன் பாகத்திற்கு 50,000 ரூபாய்க்கு சொத்து வருகிறதாம். அவர்கள் கேட்கும் வரதக்ஷிணையை அப்பா தருவதாகச் சொல்லி விட்டாராம். அந்தப் பையனும் மற்றவர்களும் நாளைக்கு என்னைப் பார்க்க வருவதாகச் சொன்னர். சிவ சிவா! பட்டணத்தில் பிறந்து வளர்ந்துவிட்டு குக்கிராமப் பையனுக்கா போய் வாழ்க்கைப்பட வேண்டும்? எருமை மாட்டைக் குளிப்பாட்டவேண்டும். எருமைச் சாணி தட்ட வேண்டும். காப்பி என்கிற பேச்சே கிடையாது. எனக்கோ தினம் இரண்டு வேளையும் காப்பி சாப்பிடவேண்டும். நானே இந்தக் காலத்து தர்பார். அந்தப் பட்டிக்காட்டில் சினிமா ஏது, டிராமா ஏது ? சிவில் ஜெயில் தான். பையனுக்குப் படிப்பே கிடையாதாம். அதைக் கட்டிக்கொண்டு எப்படித்தான் காலம் கழிக்கப்போகிறேனே எனக்குத் தெரியவில்லை. கிராம வாழ்க்கையைப் பற்றிப் புலவர்கள் பிரமாதமாக வர்ணித்திருக்கிறார்களே, யாராவது ஸ்திரீகள் கிராம வாழ்க்கையைப் பற்றிப் புகழ்ந்திருக்கிறார்களா? அப்படி ஒருத்தி அதுமாதிரிப் புகழ்ந்திருந்தால், அவளைப் போய் ஒரு மாசம் குக்கிராமத்தில் இருக்கச் செய்தால், தான் சொன்னது தப்பு தப்பு என்று கன்னத்தில்போட்டுக் கொள்ளுவள்; நிச்சயம்.

ஏப்ரல்மீ 26 .... இன்றைக்கு அந்தப் பையன் என்னைப் பார்க்க வந்திருந்தான். அம்மா அவனுக்கு என்னை நமஸ்காரம்பண்ணச்சொன்னள். தூரத்தில் வரும்பொழுதே ஆசாமியைக் கடைக்கண்ணால் பார்த்தேன். தலையில் தேங்காய்க்குடுமி. குடுமியுள்ள பேர் வழிகளைக் கண்டாலே எனக்குப் பிடிக்கிறதில்லை. வருஷத்திற்கு ஒரு தடவை க்ஷவரம் பண்ணிக்கொள்ளும் முகத்தையும், தலையையும் அன்று பளபளவென்று க்ஷவரம் செய்துகொண்டிருந்தான். பிரஸன்ன மகிஷாசுரனைப்போல நீண்ட முகம். அந்த முகதேஜஸைப்பற்றிச் சொல்லவே வேண்டாம். அட்டைக் கருப்பு. இடுப்பில் ஐயனர் குளத்தில் தோய்த்து செம்மண் காவியேறியிருந்த வேஷ்டி. அப்பா என்னைப் பாடச் சொன்னர். ஒரு பாட்டுத்தான் பாடினேன். அதை எவ்வளவு அபஸ்வரமாகப் பாடலாமோ அவ்வளவு அபஸ்வரமாகப் பாடினேன். என் பாட்டைக் கேட்டுவிட்டு என்னைக் கலியாணம் செய்துகொள்ள மாட்டேன் என்று சொல்லட்டும் என்று நினைத்தேன்.

ஏப்ரல்மீ 27....இதென்ன கூத்து! அந்தப் பையனுக்கு என்னைப் பிடித்திருக்கிறதாம்! என்னைத் தவிர வேறு ஒரு பெண்ணையும் கலியாணம் செய்துகொள்ளமாட்டேன் என்கிறனும். நான் செய்த பாவம் அவனை அப்படிச் சொல்லச் சொல்லுகிறது. அவனுக்கு ஜோடியாக குக்கிராமத்திலே, எருமைச்சாணி தட்டுகிற பெண் ஒன்றும் அகப்படவில்லையா? நான்தான அகப்பட்டேன்? அப்பாவிற்கும் அம்மாவுக்கும் என்னைக் குக்கிராமத்திலே தள்ளத்தான் இஷ்டம். "பிரேமா! அந்தப் பையனைக் கலியாணம் செய்துகொள்ள உனக்கு இஷ்டம்தான ?" என்று அப்பா கேட்டார். நான் அழுதேன். எனக்குச் சம்மதமில்லை என்று அப்பாவும் அம்மாவும் அறிந்துகொண்டு, அந்தப் பையனைவிட உசத்தியான வரன் எனக்கு கிடைக்காது என்று உபதேசம் பண்ணினர்கள். அவர்கள் சொல்லுவதை நான் காதில் போட்டுக்கொள்ளவே யில்லை. ராத்திரி சாப்பிடாமலே படுத்துக்கொண்டேன்.

ஏப்ரல்மீ 28...இன்றைக்கு இரண்டு பேரும் அந்த குக்கிராமத்துப் பையனைக் கலியாணம் செய்து கொள்ளும்படி மோவாக்கட்டையைப் பிடித்துக் கெஞ்சினர்கள். அந்தப் பையனுக்கு என்னைக் கலியாணம் செய்து கொடுப்பதாக நிச்சயம் செய்தால் நான் கிணற்றில் குதித்துவிடுவேன் என்று கண்டிப்பாய் சொன்னேன். அப்புறம் அவர்கள் அந்தப் பேச்சையே எடுக்கவில்லை.

ஏப்ரல்மீ 30...இன்றைக்கு ஒரு பையன் என்னை வந்து பார்த்தான். ஏதோ கம்பெனியில் நூறு ரூபாய் சம்பளமாம். கிராப்பு புல் சூட்; இந்தக் காலத்து 'பேஷன்'; பாதகமில்லை என்று நினைத்தேன். குக்கிராமத்துப் பையனுக்கு இவன் எவ்வளவோ உசத்தி அல்லவா ?

மேமீ 1....அந்த பையன் "எனக்கு பெண் பிடிக்கவில்லை" என்று சொல்லி அனுப்பிவிட்டானும். தான் என்கிற கர்வம் அந்தப் பையனுக்கு. அவனுக்கு எங்கள் வீட்டில் சம்பந்தம் செய்ய இஷ்டமில்லையென்றால் என் அழகில் ஏன் குறைகூற வேண்டும்? நான் அழகில்லையாம்! ஊரிலெல்லாரும் நான் ரொம்ப அழகு, என் அழகைப் படம் எழுதிப் பார்க்கவேண்டும் என்று சொல்லும்பொழுது இவன் இப்படி சொல்லியிருக்கிறன்! கண்ணில் ஏதோ கோளாறு போலிருக்கு. கண்ணாடியில் என் அழகைப் பார்த்து வியந்தேன். பிரம்மா இனிமேல் என்னைவிட அழகுள்ள பெண்ணை சிருஷ்டிக்க வேண்டியதுதான்.

மேமீ 2....அப்பா இன்றைக்கு எனக்கு ஒரு திருடன்தான் சரி என்று ஒரு திருடனை அழைத்து வந்தார். அந்தத் திருடர் என்னை பார்த்தவுடனேயே என் உள்ளத்தைத் திருடிக்கொண்டு போய்விட்டார். டில்லியில் இருநூறு ரூபாய் சம்பளமாம். தகப்பனரும் பிள்ளையும் தானும். அவர்மட்டும் தான் என்னைப் பார்க்க வந்திருந்தார். வேறு ஒருவரும் வரவில்லை. மன்மதன்போல் இருந்தார். அவர் பேசுவது தேவகானம்போல் இருந்தது. 'ஸ்கிரீன்' மறைவிலிருந்து கொண்டு அவரைப் பார்த்துக்கொண்டு இருந்தேன். அம்மா என்னைப் பாடச்சொன்னள். இன்றைய தினம் என்னை அறியாமலேயே நான் ரொம்ப அழகாகப் பாடினேன். அவர் என்ன சொல்லுவாரோ என்று திரிசங்கு சுவர்க்கத்திலே இருந்தேன். அவர் என்னைக் கலியாணம் செய்து கொள்ளத் தனக்கு இஷ்டம்தான் என்று சொல்லிவிட்டார். அப்பா

டில்லியில் இருக்கும் தன் சிநேகிதரைப் போய், பையனின் தகப்பனுரைப் பார்க்கும்படி தந்தி அடித்தார். இன்றைக்கு ஏழெட்டுத் தந்திகள் டில்லிக்கும் பட்டணத்திற்கும் பறந்தன. பையனின் தகப்பனர் பதினுயிரம் ரூபாய்க்குக் குறையமுடியாது என்று கண்டிப்பாய் சொல்லிவிட்டாராம். அப்பா ஐயாயிரம் ரூபாய்க்குமேல் ஒரு தம்படிகூட கொடுக்க முடியாது என்கிருர்.

மேமீ 3....அவரே தான் டில்லிக்குப்போய் அப்பாவிடம் சொல்லுவதாக கிளம்பிப் போய்விட்டார். "அந்த வரன் கிடைத்தால் உன்பாடு வேட்டைதான். நீ வைத்தது சட்டம்" என்கிருர் அப்பா. கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமல் போய்விடப் போகிறதே என்று பயமாய் இருக்கிறது.

மேமீ 6....இன்றைக்குக் காலையில் தந்தி வந்தது. "இஷ்டமில்லை" என்று தந்தி அடித்திருப்பாரோ என்று பயந்தேன். நல்ல வேளை! அப்படி ஒன்றும் இல்லை. "நீங்கள் வரதக்ஷிணையே கொடுக்கவேண்டாம். இஷ்டப்பட்ட சீர்கள் செய்தால் போரும். எப்ப முகூர்த்தம் வைக்கப்போகிறீர்கள்?" என்று கண்டிருந்தது. அப்பா உடனே ஜோஸ்யரைக் கூப்பிட்டனுப்பித்தார். அடுத்த ஞாயிற்றுக்கிழமை முகூர்த்தம் ரொம்ப நன்ருயிருக்கிறது என்று ஜோஸ்யர் சொன்னுர்.

உடனே டில்லிக்குத் தந்தி பறந்தது. அவர்களுக்கும் அந்த முகூர்த்தம் சம்மதம் தான் என்று தந்தி வந்தது. உடனே பந்துக்களுக்குத் தந்தி பறந்தது. பாதிப்பேர் இரண்டு நாளில் வந்துவிடுவார்கள். இனிமேல் கலியாணமாகி, சம்பந்திப்பேர் ஊர் போகும் வரையில் டயரி எழுத 'டயம்' இருக்காது என்று தோன்றுகிறது.

மேமீ 11....இன்றைக்குத்தான் கலியாணம்.

மேமீ 15....சம்பந்திப்பேர் இன்றைக்கு ஊருக்குப் போய்விட்டார்கள். அவர் அடிக்கடி கடிதம் போடுவதாகச் சொன்னுர். அப்பாபேருக்கு எழுதுவாரோ, அல்லது நேரே எனக்கே எழுதப் போகிருரோ தெரியவில்லை.

சந்திரகுப்தரின் ஜயஸ்தம்பம்

(45-ம் பக்கத் தொடர்ச்சி)

இதை அங்கிருந்து கொண்டு வந்தது யார், எப்போது கொண்டு வரப்பட்டது என்னும் கேள்விகளுக்குச் சரியான பதில் இன்னமும் கிடைக்கவில்லை. "அனங்க பாலன் என்னும் தோமர அரசன் 1109-வது சம்வத்சரத்தில், அதாவது கி. பி. 1052-ல் டில்லியைக் கட்டினுன்" என்று இந்த ஸ்தம்பத்தின் மற்ருெரு பாகத்தில் வெட்டப்பட்டுள்ளது. ஆதலால் இவ் வரசனுலேயே இது இங்கு கொண்டு வந்திருக்கப்படலாம் என்று சிலர் அனுமானிக்கின்றனர்.

இந்தக் கம்பத்தைப் பற்றிய கதைகள் அநேகம் ஜனங்களிடையே உலாவி வருகின்றன. டில்லி என்று இந்நகருக்குப் பெயர் வந்ததற்கே இதுதான் காரணம் எனச் சிலர் கூறுகின்றனர்.

அனங்க பாலனுல் இங்கு இது நாட்டப்பட்ட பிறகு ஒரு விருத்தாப்பிய பிராமண பண்டிதர் அவன் எதிரில் தோன்றி "இந்த ஸ்தம்பம் மிகவும் ஆழமாய், பூமியைத் தாங்கும் வாசுகியின் தலையைத் தொடும்படி நடப்பட்டிருப்பதால், அழிவில்லாத இந்த ஸ்தம்பம் உள்ள வரையிலும் உன்னுடைய வம்சத்தினர்கள் இந்நாட்டை சுகமாய் ஆட்சி புரிவர்" என்ருர். அரசன் அப்பிராமணரின் வார்த்தைகளை நம்பவில்லை. இது வாசுகியின் தலையைத்தொடுவது எவ்வாறு சாத்தியமாகும் என்று எண்ணி இந்த ஸ்தம்பத்தை மறுபடியும் வெளியில் எடுத்து இதன் ஆழத்தைக் காண்பிக்குமாறு கட்டளை யிட்டான். அவ்வாறே தோண்டி வெளியில் எடுக்கப்பட்டபோது அதன் அடியில் இரத்தம் ஒழுகுவதை யாவரும் கண்டனர். உடனே அந்த அந்தணர் "இது வாசுகியின் தலையின் இரத்தம்; என் வார்த்தைகளை நீ சிறிதும் நம்பாததினுல், இக்கம்பம் முன்போல் சரியாய் பொருத்த முடியாமல் போகக் கடவது. உன் வம்சத்தினர்களும் டில்லியில் நீடூழி வாழ மாட்டார்கள்" என்று சபித்து விட்டார்.

ஸ்தம்பத்தைப் பழையபடி நாட்ட முயன்றபோது அது முன்போல் ஸ்திரமாய் நிற்கவில்லை. ஹிந்தியில் 'டீலீ' என்ருல் தளர்வான அல்லது ஸ்திரமில்லாதது என்று பொருள். இதிலிருந்து தான் டில்லி என்ற பெயர் உண்டானதாகக் கூறுகின்றனர். தோமர வம்சம் நசித்து மகமதிய ஆட்சி டில்லியில் தொடங்கினதற்கும் இது தான் காரணமாம்.

இதற்கு அதிர்ஷ்டமளிக்கும் ஒரு அபூர்வ சக்தி இருப்பதாக இன்றும் கருதப்படுகிறது. ஒருவன் கம்பத்தின் மேல் முதுகை வைத்து நின்று, தன் இரண்டு கைகளையும் பின்புறமாக வளைத்து விரல்களைக் கோர்த்துக் கொள்ளக் கூடுமானுல், அவ்வாறு செய்யக் கூடியவன் மிகவும் அதிர்ஷ்டமுள்ளவனெனக் கருதப்படுகிறது. அங்கு செல்பவர்கள் ஒவ்வொருவரும் தனக்கு அதிர்ஷ்டம் உண்டா என்று இவ்வாறுசெய்து பார்ப்பது உண்டு.

11-வது நூற்ருண்டிற்குப் பிறகு டில்லிக்கு விஜயம் செய்த மேல்நாட்டினர்களில் அநேகர் இந்த ஸ்தம்பத்தைப்பற்றி விவரித்திருக்கின்றனர். அவர்கள் கூறும் விஷயங்கள் ஒன்றிற்கு ஒன்று பொருத்தமின்றி மிகவும் வேடிக்கையாக இருக்கின்றன.

மகமத் துக்லக் அரசனிடம் சில வருஷங்கள் வசித்து வந்த இபன் படூடா என்னும் துருக்கி தேசத்து யாத்ரீகன், இந்த ஸ்தம்பம் எந்த உலோகத்தினுல் செய்யப்பட்டதென்று ஒருவருக்கும் தெரியாதென்றும், ஹிந்துக்களில்சிலர் இது சப்த தாதுவால் செய்யப் பட்டதெனக் கூறுவதாகவும் குறித்திருக்கின்ருன்.

ஐரோப்பாவிலிருந்து இந்தியா வரையிலும் கால்நடையாகவே நடந்து வந்து, சூரத்தில் கி. பி. 1617-ல் இறந்த தாமஸ் கார்யட் என்பவன், டில்லி என்னுமிடத்தில் தான் கிரேக்கிய வீரன் அலக்சாண்டர், புருஷோத்தமன் என்னும் இந்திய அரசனை எதிர்த்துத் தோற்கடித்ததாயும், அந்த ஜயத்தைக் குறிக்கவே பித்தளையினுல் செய்யப்பட்ட இந்த ஸ்தம்பத்தை அலக்சாண்டர் அங்கு நாட்டியதாயும் கூறுகிருன். அலக்சாண்டருக்கும் இதற்கும் அவன் எவ்வாறு முடிச்சுப்போட்டான் என்பது யாவருக்கும் மர்மமாகவே இருக்கிறது.

ஜிஹாங்கிரின் தர்பாருக்கு இங்கிலாந்தின் தூதராக வந்த ஸர் தாமஸ் ரோ என்பவருடன் எட்வார்ட் டெரீ என்ற ஒரு சீமைப் பாதிரியும் வந்திருந்தார். இந்த ஸ்தம்பத்தைக் கண்டு இது சலவைக் கல்லினுல் செய்யப்பட்டதென்றும், இதன் மீதுள்ள எழுத்துகள் க்ரீக் எழுத்துகள் என்றும் அவர் எழுதி இருக்கிருர். எழுத்துக்கள் தான் அவருக்குப் புரியவில்லை என்ருலும், கருப்பாய் இருக்கும் இந்தக் கம்பம் அவர் கண்களுக்கு சலவைக் கல்லாகத் தோற்றம் அளித்த காக்ஷி நமக்கு வியப்பை உண்டாக்குகின்றது.

ஔரங்கசீபின் சபைக்கு வந்திருந்த வெனிஸ் தேசத்து நிக்கலோ மானுசி என்பவன், இதில்இருக்கும் எழுத்துகள் சீன எழுத்துகள்எனச் சிலர் கூறுவதாக எழுதி இருக்கிருன்.

கி. பி. 1844-ல் இந்தியாவில் சுற்றுப் பிரயாணம் செய்து ஒவ்வொரு விஷயத்தையும் மிகவும் உன்னிப்பாக கவனித்து ஒரு புத்தகம் எழுதியுள்ள வில்லியம் ஸ்லீமான் இது வெண்கலத்தினுல் செய்யப்பட்ட ஒரு ஸ்தம்பம் என்று குறிக்கின்ருன்.

உலகிலேயே மிகவும் புராதனமான இரும்புக் கம்பம் இதுவே என்பதில் சிறிதும் ஐயமில்லை. யந்திரங்கள் அற்ற அக்காலத்தில், சாதாரண உலைக்கள மொன்றில் இவ்வளவு பெரிய ஸ்தம்பத்திற்கு வேண்டிய இரும்பை முதலில் உருக்கி, பிறகு வார்ப்பு எடுத்தல் எவ்வாறு சாத்திய மாயிற்று என்று மேல்நாட்டு இஞ்சினீயர்கள் எல்லாம் ஆச்சரியப்படுகின்றனர். சுமார் 25 அடி அகலமுள்ள ஒரு உலைக்களத்திலிருந்து உண்டாகும் தீக்ஷண்யமும், அனலும் சுமார் 10 அடிக்குமேல் வீசும். அப்படி இருக்க கிட்ட நெருங்கி அதை எவ்விதம் சுத்தியால் அடித்து உருவாக்கினர்? மின்சார விசையினுல் மிகவும் வேகத்தினுல் அடிக்கும் பெரிய சம்மட்டிகளும், 2000 அல்லது 3000 டிகிரீ சூடு கொடுக்கக்கூடிய உலைக்களங்களுமுள்ள இக்காலத்தில் கூட மேல் நாட்டு இஞ்சினீயர்கள், கொஞ்சம்கூட இணைப்பேயற்ற, 16 அங்குலம் குறுக்களவுள்ள வார்ப்புக் கம்பங்களுக்கு மேல் செய்ய முடியுமா என்பதை நிச்சயமாய்க்கூறமுடியாது என்று ஒரு பிரமுகர் கூறினுர்.

பழங்கதையும், பண்டைப் பெருமையுமே யானுலும், இந்தக் கம்பம் நமது பாரத நாட்டின் புராதன கால நாகரீகத்தின் உயர்வுக்கு நிரந்தர சாக்ஷியாக நிற்கிறது.

"ஏகாதிபத்தியங்கள் தோன்றின; ஏகாதிபத்தியங்கள் மறைந்தன. நான் அந்த வேடிக்கைகளையெல்லாம்பார்த்துக்கொண்டு நிற்கிறேன்" என்பது போல இந்த ஜயஸ்தம்பம் நிற்கிறது. அது மாத்திரம் வாய் திறந்து மனித பாஷையில் பேச முடியுமானுல்! எத்தனை "சக்ரவர்த்திகள்" தோன்றித் தோன்றி மறைந்துள்ளனர் என்று எத்தனையை அற்புதமான கதைகளெல்லாம் கேட்கலாம்!

ஸிம்மகட்டில் பலியான சிங்கம்

......சிவாஜியால் கட்டப்பட்ட தாணுஜி ஞாபகச் சின்னம்......

"கோபன்"

எழுதியது

சிவாஜி என்ற பெயரைக் கேட்டவுடனேயே, அவனது தீரச் செய்கைகளே நம்முடைய மனக்கண் முன் நிற்கின்றன. தமது நாட்டை அன்னியரின் கைப்பிடியிலிருந்து காக்கவும், மஹாராஷ்டிர தேசத்தினரின் அடிமைத் தன்மையைப் போக்கவும், உதித்த மஹாபுருஷன் என்று கருதி, இன்னும், மஹாராஷ்டிரர்கள் இவ்வீர புருஷனைப் பூஜித்து வருகின்றனர்.

அவனது பலத்திற்கும், வெற்றிகளுக்கும் அவனது தளகர்த்தர்களே காரணபூதர்கள். அவ்வித தளகர்த்தர்களில் தாணுஜி மாலுஸ்ரே என்பவனும் ஒருவன். அவனது வீரச் செய்கைகளும், தனது தலைவனுக்காகத் தன் உயிரை மாய்த்துக்கொண்ட விதமும், மஹாராஷ்டிர தேசத்திற்கு ஒரு தனிப் பெருமையை அளிக்கின்றது.

சிம்மகட் என்பது சிவாஜியின் முக்கிய கோட்டைகளில் ஒன்று. இது பூனுவிலிருந்து தென்மேற்கில், சுமார் 15 மைல் தூரத்தில், புலேஷ்வர் என்னும் ஒரு மலைத் தொடரின் உச்சியில் உள்ளது. சமுத்திர மட்டத்திலிருந்து, இது 4162 அடி உயரமுள்ளது. இதைச்சுற்றி மதில்களுக்குப் பதிலாக மனிதர்களால் சிறிதுகூட ஏற முடியாதபடி, 40 அடிக்குமேல் உயரமுள்ள செங்குத்தான பாறைகள் இயற்கையாகவே அமைந்துள்ளன.

இது சிவாஜியின் கைக்கு வருவதற்கு முன்பு, இதற்குக் கோண்டனு என்றபெயர் வழங்கிவந்தது. சிம்மத்தைப் போன்ற சம்பிரமுள்ள கோட்டை ஆதலால், சிவாஜி இதற்கு சிம்மகட் என்ற பெயரைச் சூட்டினுன்.

ஆனுல் 18 வருஷங்கள் கழித்து மிகவும் சிரமப்பட்டு மொகலாயர்கள், இக்கோட்டையை மறுபடியும் கைப்பற்றிக் கொண்டனர்.

சுமார் ஐந்து வருஷங்கள் கழிந்தன. ஒரு நாள் சிவாஜியின் தாய், ஜீஜாபாய் அதைத் தன்மகன் மறுபடியும் கைப்பற்றியே தீர வேண்டுமெனத் தீர்மானித்து விட்டாள்.

சிவாஜி அச்சமயம் ராஜ்கட் கோட்டையில் வேறு அலுவலாய் இருந்தான். தன்னிடம் உடனே புறப்பட்டு வரும்படி ஒரு தூதுவனை ஜீஜாபாய் போக்கினுள். தன்னை வந்து வணங்கிய மகனைத் தன்னுடன் சதுரங்கம் ஆடவரும்படி அழைத்தாள்.

மூன்று ஆட்டங்கள் ஆடினர். மூன்று முறையும் சிவாஜி தோற்று விட்டான். வேடிக்கையாகக் கேட்பதுபோல், ஜீஜாபாய். "மூன்று முறை தோற்றதற்காக, உன் கோட்டைகளில் ஒன்றை எனக்குத் தருகிருயா?'' என்றுள்.

"ஆகா, என்னிடம் இருப்பவைகளில் எதைவேண்டுமானுலும் கோருங்கள். நான் கொடுக்கத் தயார்'' என்றுன்.

இம்மொழியைத் தான் ஜீஜாபாய் மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். உடனே அவள் "அப்படியானுல் சிம்மகட் கோட்டையை எனக்குக் கொடு" என்றுள்.

"அது இப்போது என் வசத்தில் இல்லையே" என்று தயங்கினுன் சிவாஜி.

ஜீஜாபாய் ஒரே பிடிவாதமாக, அக்கோட்டைதான் வேண்டுமென வற்புறுத்தினுள்.

சிம்மகட்டில் அப்போது ஒளரங்சீபின் கவர்னராக இருந்தவனின் பெயர் உதயபன். அவன் மிகவும் பலசாலி. அவனது வலுவைப்பற்றி அநேக வதந்திகள் உலவின.

இவ்வசாத்திய வேலையைச் செய்து முடிக்கவல்லவன், தன் தோழனுன தாணுஜியே என்று சிவாஜிக்கு உடனே தோன்றியது. 12,000 பேர்கள் அடங்கிய ஒரு பட்டாளத்துடன் உடனே புறப்பட்டு வரும்படி அவனுக்குச் செய்தி அனுப்பினுன்.

தாணுஜி அச்சமயம் கொங்கண தேசத்தில் உம்ராதே என்னும் தன் கிராமத்தில், மறுநாள் நடக்கவிருந்த தன்மகனின் விவாகத்திற்காக ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தான். சிவாஜியின் நிருபத்தைக் கண்டவுடன், மணச்சடங்குகளை நிறுத்திவிட்டு தனது வீரர்களுடன் ராஜ்கட்டிற்குக் கிளம்பி விட்டான்.

1670-ல் பிப்ரவரி மாதத்தில் ஒருநாள் நள்ளிரவில், தாணுஜி தனியாக தானே சிம்மகட்டிற்கு அடியிலுள்ள ஒரு கிராமத்திற்குச் சென்று, உளவறிந்து வந்தான். கோட்டையின் வாசல்களில் ஒன்றுன கல்யாணி வாசலே எதிர்ப்பதற்குத் தகுந்த இடம் என்று தீர்மானிக்கப்பட்டது.

மறுநாள் தனது முழு சேனையுடன் தாணுஜி கல்யாணி வாசலின் அடியில் வந்து இறங்கினுன். தன்னுடன் பழக்கப்பட்ட கோர்பட் என்னும் உடும்பு ஒன்றையும் கொண்டு வந்திருந்தான். அதன் வாலில் உறுதியாக ஒரு கயிற்றைக்கட்டி விட்டு விட்டால், செங்குத்தான பாறைகள் மீதும், மனிதர்கள் சாதாரணமாய் ஏறமுடியாத இடங்கள் மீதும், சுலபமாய் ஊர்ந்துசென்று உச்சியை அடைந்துவிடும். அங்கு ஒரு கற்பாறை மீதோ, அல்லது மரத்தின் அடியையோ தன் முன்னங்கால்களினுல் மிகவும் வலுவாய் பிடித்துக்கொள்ளும். அதன் பிடி குரங்குப் பிடிதான். வாலிலுள்ள கயிற்றைப் பிடித்துக்கொண்டு ஒரு மனிதன் சுலபமாய் ஏறலாம்.

கோர்பட் உச்சியை அடைந்ததும், தாணுஜி ஒரு சிறு பையனை ஒரு நூல் ஏணியுடன் கயிற்றின் மூலமாய் மேலே அனுப்பினுன். நூல் ஏணி மேலே கட்டப்பட்டதும், முதலில் தாணுஜியும் அவன் பின்னுல் சுமார் 50 பேர்களும் ஏணி மூலமாய் மேலே ஏறிவந்தனர். கல்யாணி வாசலுக்கு அருகில் உறங்கிக்கொண்டிருந்த காவற்காரர்கள், சல சலவென்ற ஓசையைக் கேட்டு விழித்துக்கொண்டுவிட்டனர். தாணுஜியின் சேனையின் ஒரு பாகம் கீழேயும், மற்றொரு பாகம் கல்யாணி வாசலுக்கு வெளியில், கதவைத் தம் ஆட்கள் திறந்ததும் உள்ளே பாய்வதற்கும் தயாராய் காத்திருந்தனர். மேலே இருந்த அபாரமான சேனைக்கு எதிரில் இந்த ஐம்பது பேர்கள் என்ன செய்ய முடியும்?

தாணுஜி 10, 15 ஆட்களை, உட்புறத்தில் தாள் இடப்பட்டிருந்த கதவைத் திறக்கும்படி அனுப்பிவிட்டு, மற்றவர்களுடன் காவற்காரர்களை எதிர்த்தான். அதற்குள் செய்திகோட்டை முழுவதும் பரவிவிடவே, சேனை முழுவதும் ஆயுதங்களுடன் வந்து தாணுஜியின் ஆட்களை சூழ்ந்துகொண்டது.

மிகவும் கடுமையான போர் மூண்டது. தாணுஜி முதலில் தனது இடதுகையை இழந்தான். அதைச் சிறிதும் பொருட்படுத்தாமல் மேலும் போர் புரிந்துக்கொண்டிருக்கும்போது, 4, 5 பேர்கள் சூழ்ந்து கொண்டு தாணுஜியை ஒரேசமயத்தில கத்தியால் குத்தவே, ஒன்றும் செய்ய முடியாதபடி கீழே விழுந்து உயிர் துறந்தான்.

அவன் மடிந்ததைக் கண்டு அவனுடைய ஆட்கள், மேலும் அதிக உக்கிரகம் கொண்டு போர் புரிந்தனர். இதற்குள் கதவும் திறக்கப்படவே வெளியிலிருந்த தாணுஜியின் ஆட்கள் உள்ளே நுழைந்து தாக்கினர். சிவாஜியால் அனுப்பப்பட்ட மற்றொரு படையும் உதவிக்கு அங்கு வந்து சேர்ந்தது. உதயபன் போரில் உயிர் இழந்தான். தலைவன் மடிந்ததைக் கண்டு, அவனுடைய ஆட்கள் ஓட்டம் பிடித்தனர். மஹாராஷ்டிரர்களே போரில் ஜயம் பெற்றனர்.

சிவாஜி இச்செய்தியைக் கேட்டதும் "சிம்மகட்டை நான் அடைந்தது உண்மைதான். ஆனுல் அதற்குப் பதிலாக என் சிம்மத்தை நான் இழந்து விட்டேன்'' என்று வருத்தமுற்றுன். கோட்டையில் தாணுஜி உயிர் இழந்த இடத்தில், ஞாபகக் குறி ஒன்றை சிவாஜி எழுப்பினுன்.

கடைசியாக 1818-ல் மார்ச் முதல் தேதி முதல், இக்கோட்டை ஆங்கிலேயர் வசம் வந்து விட்டது. அப்போது அவர்களுக்கு இதிலிருந்த கஜானுவிலிருந்து கிடைத்த பொருள்களின் பெருமானம், 50 லக்ஷத்திற்கு மேல் இருந்ததாகக் கூறப்படுகிறது. இங்கு கிடைத்த கணபதியின் தங்க விக்ரகமொன்றே, சுமார் 5 லக்ஷம் பெருமானமுள்ளதாய் இருந்தது.

தற்காலத்தில் மலையின் உச்சியில் காணப்படுவது இடிந்த மதில்களும், கோட்டை வாசல்களுமே. மற்ற புராதனக்கட்டிடங்கள் எல்லாம் மறைந்து விடவே, எங்கும் பறந்த வெளியையே காண்கிறோம். சிவாஜியால் நாட்டப்பட்ட தாணுஜியின் ஞாபகச் சின்னம் சமீபத்தில்தான் புதிப்பிக்கப் பட்டது.

கம்பிகளால் அடைத்த கூண்டுக்குள்ளிருந்து ஆறு "கிளிகள்" பேசுகின்றன. ஆனால் அது "கிளிப் பேச்சாகவா" இருக்கிறது! சக்கரத்திற்குள் சக்கரம் சுற்றும் வேடிக்கையை, கிளிக் கூண்டிலிருந்து வரும் விவாதத்தில் கேளுங்கள்

கிளிக்கூண்டு

(வ. ரா.)

எங்கள் கிளிக்கூண்டில், நாங்கள் ஆறு பேர்கள், அதாவது மெம்பர்கள். கிளிக்கூண்டு என்பது மாதக்கட்டணம், சட்டதிட்டம், வயது தாரதம்யம், ஏற்றத் தாழ்வு அந்தஸ்து முதலிய எதுவுமில்லாத, எங்கள் கிளப்; நாங்கள் கூடுகிற இடம். கூண்டு என்ற வார்த்தையிலிருந்து, நாங்கள் மரக்கிளை வாசிகள் என்று எண்ணிக் கொள்ளுவது தவறாகும்.

எங்கள் கூண்டு, எங்கள் 'மொட்டை மாடி வெட்ட வெளி'யிலேதான். ஓய்வு நேரம் கிடைக்கும்போதெல்லாம், நாங்கள் அங்கே கூடுவோம். எங்கள் சபைக்குத் தலைவர் கிடையாது. முன்னாடி யார் 'வெட்ட வெளியிலே' போய் உட்கார்ந்துகொள்ளுகிறாரோ, அவர் தான் அன்றைக்குத் தலைவர். வெயிலைக் கூடப் பார்க்காமல், மாலை நேரங்களில், நான் அனேகமாக 'வெட்டவெளியில்' கலந்து கொள்ளுவேன்; ஆகவே, தலைமைப் பதவி, எனக்கு வழக்கமாய்ப் போய்விட்டது.

மெம்பர்கள் எல்லாரும் வந்து சேர்ந்த பிறகு தான், கூட்டம் ஆரம்பிக்கிறது என்ற வழக்கம் எங்களிடம் கிடையாது. அவரவர்கள், சௌகரியம் போல வந்து கொண்டிருப்பார்கள், போய் கொண்டிருப்பார்கள். ஆகவே, வந்தவர்களை வைத்துக் கொண்டு, கூட்டம் தொடங்கிவிடும்.

நாங்களே சொல்லிக் கொண்டால் நன்றாயிராது. எங்கள் மெம்பர்கள் எல்லோரும் அபூர்வமான பேர்வழிகள். கட்சி பிடித்தால், விடமாட்டார்கள். ஒரேகூச்சல்தான். தலைவன் என்ற முறையில், நான் எவ்வளவோ சொல்லிப்பார்த்தாலும், கட்சியை ஆணித்தரமாகச் சொல்ல வேண்டுமென்ற ஆசையால், அடங்கவே மாட்டார்கள். தலைமைப் பதவி எனக்குத் தேவையில்லை என்று சொல்லிப் பார்த்தேன். தலைவரின் எதேச்சாதிகாரம், ஜன நாயகத்துக்கும் சுதந்திரத்துக்கும் விரோதம் என்று, சொல்லி வைத்ததுபோல, எல்லோரும் ஒரே காலத்தில் சேர்ந்து கூப்பாடு போடுவார்கள்.

எனவே, சபையை நடத்துகிற தலைவன் என்பது போய், சபை நடத்துகிற தலைவன் ஆனேன். இது ஜன நாயகத்துக்கு பூரண வெற்றி என்று அவர்கள் சொல்லுவார்கள். ஆனால் நெருக்கடியான சந்தர்ப்பங்களில், அவர்கள், தலைவன் சொல்லுவதை மீறி நடப்பதில்லை. ஆகவே, சபை உடைந்து போகாமல், நடந்து வந்தது.

அங்கத்தினர்கள் :

நாங்கள் ஆறு பேர்கள் என்றேனே, அவர்கள் யார், யார் என்று சொல்லவேண்டாமா? எங்களுக்குள் உயர்வு தாழ்வு இல்லாததால், யாரை முன்னால் சொல்லுவது, யாரை பின்னால் சொல்லுவது என்ற வரிசைக்கிரமம் தேவையில்லை. முதலிலே, எங்கள் சாமராஜன். அவன், ஏதோ சைகிள் பழுது பார்க்கிற கடையில் வேலையிலிருக்கிறான். அவனுக்கு சைகிளிலே, பிராணன். சைகிள் மயம் பிரபஞ்சம் என்பது அவனுடைய திடமான எண்ணம்.

அவன் ஏறுகிற சைகிளுக்கு, ப்ரேக் தேவையில்லை. கைப்பிடி வேண்டியதில்லை; ஆசனம் வேண்டாம். லைட் வேண்டாம். தேசிங்குராஜன் நீலவேணிக் குதிரையின் பேரில், எவ்வளவு லாகவமாகச் சவாரி செய்ததாக சொல்லப்படுகிறதோ, "அவ்வளவு லாகவமாகவும் அதற்கு மேலும், நான் 'தொத்தல்' சைகிளிலும் சவாரி செய்வேன்" என்று சாமராஜன் சொல்லுவான். எங்களுக்குள் 'சத்தியம்' என்ற ஒரு கட்டுப்பாடு இருப்பதால், அவன் சொல்லுவதை, நாங்கள் மட்டுமல்ல, நீங்களும் நம்பத்தான் வேண்டும்.

சாமராஜன் இன்னொரு வகையிலே நிபுணன் என்பது எனக்கு நிச்சயமாய்த் தெரியும். சென்னையில், எந்த ஓட்டலில், எந்த சாமான், என்றைக்கு அல்லது எப்பொழுது, நல்ல மாதிரியாக கிடைக்கும் என்பதை, ஒரு விநாடிகூடத் தயங்காமல் சொல்லுவான். "நீ சாமராஜன் அல்ல; நீ சாப்பாட்டு ராஜன்" என்று நாங்கள் சொன்னால், அதை அவன் பிரம்மானந்தத்துடன் வரவேற்று அனுபவிக்கும் காட்சியைப் பிடித்து, 'போட்டோ பந்தய'த்துக்கு அனுப்பலாம் என்பது எங்கள் துணிவு.

சாமராஜன், ஊசியைப்போல இருப்பான். அவன் வயிறு இருக்கிற இடமே தெரியாது. மூன்று பேர் சாப்பிடக்கூடியதை அவன் ஒரு தட்டு தட்டிவிடுவான். அப்பொழுதும் அவன் வயிறு இருக்கிற இடமே தெரியாது. "எனக்கு குதிரை உடல்" என்று சாமராஜன் சொல்லிச் சிரிப்பான். சைகிள் ரிபேரில் அவன் 'கொம்பன்' ஆனதால், அவனுக்கு பணத்தட்டு கிடையாது. ஆனால், காசு மிஞ்சியும் நாங்கள் பார்த்ததில்லை. வருகிற காசெல்லாம் குதிரை உடலுக்கு அர்ப்பணம்! அவன் என்ன செய்வான்?

மெம்பர் மூர்த்தி

அடுத்த மெம்பர் மூர்த்தி. இவன் ஆஜானுபாகு; ஆறு அடிக்கு அதிகமாகவே உயரம். உயரத்துக்கு தகுந்தால்போல உடம்பு கனம். அசல் பீமசேனன் தான். இவனுக்கு வேலைத் தொந்திரவே கிடையாது. இவனுடைய அண்ணன் சம்பாதிக்கிறார்; இவன் சாப்பிடுகிறான். சகோதரர்கள், இப்படி பாகப் பிரிவினை செய்து கொண்டிருக்கிறார்கள் போலிருக்கிறது. மூர்த்தியின் முழுப்பெயர் என்ன என்று நாங்கள் விசாரித்ததில்லை. மூர்த்தி என்றாலே அடையாளம் தெரிந்து விடுகிற பொழுது, அதைக் காட்டிலும் முழுப்பெயர் எதற்காக?

அரசியலைப் பற்றி விவகாரம் செய்வதிலே தான், மூர்த்திக்கு ஆசை. "பிறந்தாலும் ஹிட்லராய்ப் பிறக்கணும்" என்பான் மூர்த்தி. அவன் அப்பொழுது, ஜன நாயகத்துக்கே, திடுக்கிடும்படியாக, அர்த்தம் சொல்லுவான். மூர்த்தியின் தொண்டை, சின்னத் தொண்டையல்ல. எட்டு ஊருக்கு கேட்கும். அடுத்திருக்கும் ஒன்பதாவது ஊருக்குக் கேட்குமா, கேட்காதா என்று (தயை செய்து) என்னைக் கேட்க வேண்டாம். எட்டூருக்குக் கேட்கும் என்று அவன் சொன்னது. ஆகவே ஒன்பதாவது ஊரைப் பற்றி அவனைக் கேட்டால் தான், சந்தேகத்தைத் தெளிந்து கொள்ள முடியும்.

அழகி

அடுத்த மெம்பர் அழகி. அவளுடைய வீட்டில் எப்படி, அவளைக் கூப்பிடுகிறார்களோ, அது எங்களுக்குத் தெரியாது. அழகி என்பது நாங்கள் அவளுக்குக் கொடுத்த பெயராகும். எப்பொழுதும், அவள் கலைகளின் மேன்

மையையும், இயற்கையின் அழகையும் பற்றித்தான் பேசுவாள். சென்னைக்கு வந்து போகும் சினிமாப் படங்கள் யாவும் அவளுக்கு தலை கீழாய்ப் பாடம். தமிழில் இதுவரையிலும் வெளி வந்திருக்கும் நாவல்கள் எல்லாவற்றையும், அவள் எப்படியோ படித்திருக்கிறாள்.

பொதுவாக இலக்கியத்தில், சிறப்பாக, நர்த்தனக் கலையில் அவளுக்கு தனிக் காதல். அவள் கல்லூரி மாணவி. வகுப்பு பரீட்சையில் எத்தனை பரிசுகள் வழங்கினாலும், அவைகள் எல்லாம் அழகிக்கு வந்து சேர, சூழ்ச்சி செய்து விடுகின்றன. பாவம்! அவள் என்ன செய்வாள்? பரிசுகள், இந்த மாதிரி சூழ்ச்சி செய்தால், அவைகளை எல்லாம் வரவேற்காமல் இருந்தால், அது, அவைகளை அவமரியாதை செய்ததாக ஆகிவிடாதா? இவளுடைய தொண்டையும் "ஸன்னத் தொண்டை" அல்ல. மூர்த்தியின் தொண்டை எட்டூருக்குக் கேட்குமென்றால், இவளுடைய தொண்டை, ஏழு ஊருக்காவது கண்டிப்பாய்க் கேட்கும்!

ஈசுவரி

அடுத்த மெம்பர் ஈசுவரி. இவள், பத்திரங்களில் எழுதுவதுபோல, "வீட்டுத் தொழில், குடித்தனம் செய்கிறவள்." பொழுது விடிந்து, பொழுது போகிற வரையில், இவளுக்கு வீட்டு வேலைதான், சரியாயிருக்கும். "அங்கே யிருக்கிற பாத்திரம் சுத்தமா யிருக்கிறதா? இங்கே யிருந்த கத்தரிக்கோல், இடத்தை விட்டுப் பெயராமல், வாயைப் பொத்திக் கொண்டு சும்மாக் கிடக்கிறதா" என்பதைப் பற்றித்தான் இவளுக்குக் கவலை. வீட்டு சாமான்களெல்லாம், இவளுக்கு, குழந்தைகளைப் போல. எதுவும் ஒழுங்கு தவறி நடக்கக் கூடாது என்பது இவளுடைய கொள்கை.

ஏதோ, மெய்மறந்த வேளையில், "பெண்கள் வீட்டுக்கு ராணிகள்" என்று பெரியார் ஒருவர் சொல்லிவிட்டாராம். அதை இவள் பிடித்துக் கொண்டு விட்டாள். ஆகவே, இவள், வீட்டில் ராணியாகவும், இவளுடைய புருஷன் சேவகனாகவும் நடந்து கொள்ளுவார்களாம்! பெண்களின் உரிமைகளை எப்படியாவது காப்பாற்றியாக வேண்டும் என்று சொல்லுவாள். "ஆணும் பெண்ணும் 'சரி, நிகர் சமானமாக' இந்த நாட்டில் வாழும் காட்சியைப் பார்த்த பின்னர் தான், நான் இறந்துபோக வேண்டுமென்பது என் ஆசை. நாசமாய்ப் போகிற எமன் என்ன எண்ணிக்கொண் டிருக்கிறானோ?" என்று ஈசுவரி சொல்லுவாள். "மனிதர்கள் மட்டும் நெறிபோடிருக்கட்டும்: உலகத்தில் நோய் இருக்குமா? சிட்டாய்ப் பறக்காதா? எமனுக்கும் சண்டைக்கும் இடமே இருக்காதே" என்றும் சொல்லுவாள்.

அடுத்த படியாக நான். என்னைப் பற்றி உங்களில் பலருக்குத் தெரியும்: மற்றும் பலருக்குத் தெரியாது. தெரிந்தவர்கள், தெரியாதவர்களுக்குச் சொல்ல வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன். சாத்தியமானால் செய்யலாம். சாத்தியமில்லாமல் போனால், செய்ய வேண்டாம். "அடி பிடி கட்டாயம்" இல்லை.

ரோஜா பாப்பா

கடைசியாக எங்கள் "ரோஜா." ரோஜா, பாப்பா. அவளுக்கு இன்னும் நான்கு வயது பூர்த்தியாகவில்லை. சரோஜாவிலிருந்து, "ச"வைத் திருடிவிட்டு, எங்கள் ரோஜா பாப்பாவுக்கு பெயர் வைத்திருக்கிறோம் என்று அவசரமாக தீர்ப்பு சொல்லி விடப்படாது. எங்கள் ரோஜா, ரோஜா தான். சரோஜாவிலிருந்து துண்டு செய்யப்பட்டவள் அல்ல.

ரோஜாவுக்கு, அபிநய நர்த்தனம் என்றால் அடங்காத ஆனந்தம். அவள் அபிநயம் பிடித்து நர்த்தனம் செய்யும் பொழுது, அவளுக்கு இந்த உலக நினைப்பே இருப்பதில்லை. தன்னையே மறந்து விடுவாள். வெண்ணெய் திருடிக் சண்ணனை அவள் பிரார்த்தனை செய்வதைப் பார்க்க, நீங்கள் எல்லோரும், ஒரு நாள், எங்கள கிளிக் கூண்டுக்கு ஏன் வரக் கூடாது? அதற்கு, 'உங்கள் ஜன்மம் புண்ணியம் செய்ததாயிருக்கவேண்டும்.'

அனேகமாக, ரோஜாப் பாப்பா தான் எங்கள் சபை நடவடிக்கைகளைத் துவக்குவாள்.

ப்ருந்தாவன வாசா
ப்ரளய கால நாசா
கோபிகா ரமணா
கோபாலா, பூபாலா

என்று பாடி, பாப்பா அபிநயம் பிடித்து நர்த்தனம் செய்வாள். அவள் அபிநயம் பிடிக்க ஆரம்பித்ததும், மூர்த்திக்கு மூக்குக்கு மேலே கோபம் வந்துவிடும். அவன் தனது 'எட்டூருக்கு கேட்கும்' தொண்டையிலே,

பிஸ்கோத்து வாசனே
பீரங்கி யாளனே
'சட்' டென்று வாராய்
'பட்'டென்று தீராய்

என்று கத்தத் துவக்கி விடுவான். அழகிக்கு உடனே கோபம் வந்து விடும். "மூர்த்திக்கு கொஞ்சம்கூட மரியாதை தெரியவில்லை. குழந்தை 'டான்ஸ்' பண்ணுகிறது. அதுவும் ரொம்ப அழகாய், டான்ஸ் பண்ணுகிறது என்ற நினைப்பே இல்லாமல், பிஸ்கோத்தையும், பீரங்கியையும் கூப்பிடுகிறானே? என்ன அநியாயம்?" என்று அழகி ஆத்திரப் படுவாள்.

இட்டலியும் பிஸ்கோத்தும்

"ஆமாம்! வெள்ளைகார பிஸ்கோத்து, நம்ம இட்டலிக்கு ஈடாகுமா? பிஸ்கோத்து எந்

மூலைக்கு காணும்? இட்டலி என்றால், முடையாற சாப்பிடலாம்" என்பான் சாமராஜன். "மனிதன், மூடையாற சாப்பிட வேண்டுமானால், பீரங்கி ஆட்சி இருந்தால் தான் முடியும்" என்பான் மூர்த்தி.

"பீரங்கி ஆட்சிக்கு தப்பித்து, சாப்பிடுவதற்கு, மனுஷாள் கூட உலகில் பாக்கி இருப்பார்களோ? கலைகளை ரஸிக்காதவர்கள் தான், பீரங்கியைக் கும்பிடுவார்கள். கலை என்பது மனித இயல்புக்கு அறிகுறி. பீரங்கி என்பது ராட்சதத் தன்மைக்கு அடையாளமாகும். கலைகளினுடைய சுவாரஸ்யத்தை அறிய முடியாதவர்கள், இந்த மண்ணில் ஏன் பிறக்கிறார்கள் என்று தெரியவில்லை" என்று அழகி சொல்லுவாள்.

"புண்ணியம் செய்தவர்கள், இந்த பூமியில் பிறப்பார்களா? அதுவும் பெண்கள் ஏன் பிறக்கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. எல்லா வகையிலும் சின்னத்தனம் அடைவதற்காகவா?" என்று ஈசுவரி தனது மனக்குறையைச் சொல்லிக்கொள்வாள்.

இதற்கிடையே, எதுவும் நேராதது போல ரோஜா "டான்ஸ்" ஆடிக் கொண்டேயிருப்பாள். நாங்கள் எல்லாரும் கொலுவிலிருக்கிற பொம்மைகள் என்று அவளுடைய எண்ணமோ, என்னவோ? தங்கள் தங்கள் மனக் குறையைச் சொல்லிக் கொண்டவர்கள், என்னுடைய மௌனத்தைப் பொறுத்துக் கொண்டிருப்பார்களா?

"நமது தலைவருக்கு(!)த்தான் ஒரு மனக் குறையும் இல்லை போலிருக்கிறது. அவர், மோனக் கடலில் ஆழ்ந்து போன காரணம் என்ன? ஒருக்கால் பாமரர்களுக்கு எட்டாத நிஷ்டையில், அவர் மூழ்கிப் போயிருக்கலாம். மௌனம் எல்லாவற்றிற்கும் சாதகம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறாரோ" என்று மூர்த்தி கிண்டலாகக் குத்துவான்.

சக்கரத்திற்குள் சக்கரம்

எனக்கு சிரிப்பு வரும். "மனக் குறை இல்லாத மனிதர்கள் உலகில் இருக்க முடியாது. சில மனக் குறைகளுக்கு ஆசைகள் என்று பெயர். மற்றும் சில மனக்குறைகளுக்கு, இலட்சியங்கள் என்று பெயர். சாமராஜனுடைய இட்டலி ஆசைக்கு மனக் குறை என்று பெயர். காந்தியின் அஹிம்சை ஆசைக்கு, இலட்சியம் என்று பெயர். சாமராஜன், மனக்குறை என்ற சிறிய சக்கரத்துக்குள் சுற்றி அலைகிறான். சைகிளில் தான்! காந்தியோ, இலட்சியம் என்ற பிரம்மாண்டமான சக்கரத்தைச் சுற்றி வருகிறார். இந்த இரண்டு சக்கரங்களுக்குள்ளே, எத்தனை சக்கரங்கள் இருக்கின்றன தெரியுமா?" என்றேன்.

"வேதாந்தம்! அஹிம்சை! இந்த தேசத்தைப் பாழாக்கின வேதாந்தமும் அஹிம்சையும் யாருக்கு வேண்டும்? அரசியலில் சுதந்திரத்துக்கு உழைக்க முடியாதவர்கள் எல்லோரும் தர்ம சாஸ்திரம் பேசுகிறார்கள்; கலை அபிவிருத்தி என்று கூச்சல் போடுகிறார்கள். அஹிம்சை உபதேசம் செய்கிறார்கள். இட்டிலி சாப்பார் பேச்சுப் பேசுகிறார்கள்" என்றான் மூர்த்தி.

உடனே சாமராஜன், அழகி, ஈசுவரி, எல்லாரும் சேர்ந்து, "மூர்த்தி மனிதன் அல்ல. அவன் ஆள் கொல்லி. அதிகார ஆசை கொண்டவன். சர்வாதிகாரப் பைத்தியம் பிடித்தவன்" என்று சத்தம் போட ஆரம்பித்து விட்டார்கள்.

பாப்பா நெஞ்சம்

ரோஜாப் பாப்பாவோ, இதொன்றையும் கவனிக்காமல், ஒரு பொம்மையோடு பேசிக் கொண்டிருப்பாள். "க்ருஷ்ணா, உனக்குக் கோபமோ? உன்னை வெண்ணெய் திருடன்னு சொன்னேனே? அதுக்கு கோபமோ? நீ, வெண்ணெயை இப்படி தினம் திருடிண்டு போய்ட்டா, எங்க அப்பாவுக்கும் அம்மாவுக்கும் நெய் வாண்டாமோ? எங்க அழகிக்கு வாண்டாமோ? என் பங்கு வெண்ணெயை, வேணும்னா, நீ திருடிண்டு போ. நான் உன்னை கோவிச்சுக்கமாட்டேன். அவா பங்கு வெண்ணெயை, நீ தொடலாமோ? நான் சொல்றதை, நீ கேப்பியா, மாட்டியா?" என்று கிருஷ்ண பொம்மையோடு வாக்கு வாதம் செய்து கொண்டிருப்பாள்.

ரோஜாப் பாப்பாவின் உள்ளம் எனக்கு இருக்கப்படாதா என்று நான் எண்ணிக் கொண்டிருக்கையில், "குழந்தைகள் எல்லாம் இப்படி வளர்ந்தால், தேசம் உருப்பட்டுப் போய்விடும். இதனாலே தான், நாம் இரண்டாயிரம் வருஷத்து பழுத்த அடிமையாயிருக்கிறோம்" என்று மூர்த்தி சீறி விழுவான். "தின்பதை மறந்து சோனியாப் போனால், நம்மை, எல்லாரும் கீழேதள்ளி, மிதிக்கத் தான் செய்வார்கள்" என்று சாமராஜன் இட்டலியின் மகத்துவத்தைப்பற்றிப் பேசுவான்.

"நாசுக்கான கலைகளை மறந்தால், வித்தை இந்த நாட்டில் தங்கி யிருக்குமா? கலைகள் மறைந்து போனால், நாகரிக மேது? எல்லாரும் முட்டாள்களாக ஆவோம். பிறகு, அடிமையாகப் போவதற்கு, சந்தேகமென்ன?" என்று அழகி பிரலாபிப்பாள்.

"பெண்ணுக்குத் தான் கற்பு, ஆணுக்கு கற்பு இல்லை. ஆண் எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்ற நெறி, ஒரு நாட்டில் இருக்குமாகில், அந்த நாட்டில் ஆணும் பெண்ணும் சமுதாயமாக அடிமைப்பட்டுப் போக வேண்டியது தான். ஒரு கண்ணுக்கு வெண்ணெயும் ஒரு கண்ணுக்கு சுண்ணாம்பும் என்பது அடுக்காத தர்ம சாஸ்திரம். நியாய புத்தியை இழந்த நாட்டிலே சுயமரியாதையும் 'சொரணை' உணர்ச்சியும்எங்கிருந்து வரும்?" என்று ஈசுவரி சிறிய உபன்யாசம் செய்வாள். "கோழைகளாய்ப்போய், அஹிம்சைப் பேச்சு பேசிக்கொண்டிருந்தால், நமக்கு விடுதலை ஏது? ஆகாயத்தில் பறக்கணும். நீரில் மூழ்கி, ஸப்மாரின் கப்பலில் லீலைகள் செய்யவேண்டும். பெரிய பெரிய ஆலைகளை உண்டாக்கி, நாட்டின் செல்வத்தைப் பெருக்க வேண்டும். அரசியலில் விடுதலையை, முதலில் அடையவேண்டும். இல்லாவிட்டால், இட்டிலி சுப்பனுக்கு இட்டிலி கிடைக்காது. கலைப்பிரியை அழகிக்கு, வித்தையே கண்ணில் படாது. கற்பைப் போற்றும் ஈசுவரியம்மாள், நினைக்கிறது மாதிரி, நல்ல நெறியை, இந்த தேசத்தில் காண முடியாது" என்று மூர்த்தி, ஆவேசத்துடன், முழங்குவான்.

அவரவர் கட்சி

"க்ருஷ்ணா! கோபித்துக் கொள்ளாதே" என்பாள் ரோஜா பாப்பா. இவ்வளவு பேச்சும், எனக்கு இன்பமாயிருக்கும். எங்கள் கிளிக்கூண்டைப் போலத் தான், இந்தியா எங்கேயும் இப்பொழுது இருந்து வருகிறது. சக்கரத்துக்குள் சக்கரம், கூட்டத்துக்குள் ஒரு கூட்டம்! சச்சரவு. அபிப்பிராய பேதம்! பொதுவாக, எல்லா அம்சங்களையும் சேர்த்துப் பார்த்து யோசிப்பதற்கு சக்தியில்லாமல், அவரவர்கள் தங்கள் தங்கள் பேச்சையே பெரிதாகப் பேசிக் கொண்டிருக்கிறார்களே என்று நான் எண்ணுவேன்.

ஆனால், அவர்கள் ஏதோ தாறுமாறாகப் பேசுவதைப்போல இருந்தாலும், அவர்கள் ஒவ்வொருவர் சொல்லுவதிலும் சிறிது உண்மை இருக்கிறது போல, தோன்றுகிற தல்லவா? ஆனால், எது பெரியது, எது சிறியது என்ற விவேகம் அவர்களிடம் இல்லை என்பது தெளிவு.

"மனிதன் உருவத்தில் மனிதனாக இருந்தாலும், உயிரில் அதாவது வாழ்க்கையில், இன்னும் தனது மனிதத்தன்மையை பூரணமாகக் காண்பிக்கவில்லை. அந்தத்தன்மை இதுதான் என்று இதுவரையிலும் 'முழுசாக' கண்டு பிடிக்கவுமில்லை. அந்த மனிதத்தன்மை இன்னதென்று தெரிந்து விட்டால், "எதைத் தின்னலாம்? எப்படி அரசியல் நடத்தவேண்டும்? எந்தெந்தக் கலைகளை எவ்வாறு அபிவிருத்தி செய்யவேண்டும்? தர்ம சாஸ்திரத்தை எப்படித் திருத்தி அமைத்து, அதை அமுலுக்குக் கொண்டு வரலாம்" என்பது போன்றவை தெளிவுபடும்.

என்திசை காட்சி

"இதைத்தான், காந்தி கண்டு பிடிக்க முயன்று வருகிறார். மனிதத்தன்மை இப்படித்தான் இருக்கவேண்டுமென்று நிறுத்து, எடைபோட்டு, தடைகட்டி விட்டால், பிறகு, எதையும், ஓடுகிற ஓட்டத்திலே செய்து முடித்துவிடலாம்."

இந்த மாதிரி நான் எங்கள் கிளிக்கூண்டில் பேசுவேன். மறுபடியும் அவர்கள் முணுமுணுப்பார்கள். வெறும் சோம்பல் வேதாந்தம் என்பார்கள். வாழ்க்கையில் அவர்களுக்கு இருக்கும் ருசியினாலே, அவர்கள் அந்த மாதிரி முரட்டுத்தனமாகப் பேசுகிறார்கள் என்பது உண்மை. மனிதனுக்கு "தன்திசை"க் காட்சி மட்டும் போதாது. "எண்திசை"க் காட்சி வேண்டும். இதற்கு, அவனுக்கு ஏராளமாக கற்பனையும், திடசித்தமும், சலிக்காத உழைப்பும் இருக்கவேண்டும். மனக்கசப்பு என்ற வலைக்குள் சிக்கிக்கொள்ளாத அன்பு மனிதனிடம் இருக்குமாகில், அவன் எட்டு திசைகளையும் அச்சமின்றி நோக்கலாம்.

எங்கள் கிளிக்கூண்டிலிருந்து, சின்னஞ் சிறு கிளிகளான நாங்கள், தமிழ் நாட்டுக்கும் உலகத்துக்கும்கூட, "கிள்ளை மொழி" பேசக்கூடியது இதுதான்.



‘பரித்ராணாய துஷ்க்ருதாம்’

“சிட்டி” காட்டும் வழி



இதை எதிர்ப்புக்கிளர்ச்சி ஒன்று வேண்டும். கீதை வட மொழியில் இயற்றப்பட்டது என்ற காரணத்தை உத்தேசித்து மட்டுமல்ல. “கண்ணன் காட்டிய வழி” என்று அதைப் புகழ்ந்து கொண்டிருக்கிறாரே, பிரதம மந்திரி சி. ஆர்.——அவரே நேரில் வந்து கீதையைக் கட்டாயப் பாடமாக வைப்பதில்லை என்று உறுதிமொழி கொடுத்தாலும் சரி; மேற்சொன்ன இயக்கத்தை ஆரம்பித்தே தீரவேண்டும்.

இதனால் எத்தனை பேர் சிறை செல்வதாயிருந்தாலும் சரி; எத்தனை பேர் உண்ணாவிரதமிருக்க நேரிட்டாலும் சரி; ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய கடைசி இரதத் துளியின் நிழல் இருக்கும்வரை, போராடியே தீரவேண்டும். மகாத்மா காந்தி தம்முடைய கொள்கைக்கு கீதையை அடிப்படையாகக் கொண்டிருப்பதுதான் வரப்போகும் இந்த இயக்கத்திற்குக் காரணம் என்று சிலர் நினைக்கக் கூடும். அதுவுமல்ல. சுபாஷ் பாபு தோன்றிய பின், மகாத்மா காந்தி போன இடமே தெரியவில்லையே; அவரைப்பற்றி இப்பொழுது என்ன கவலை? தவிர, இது சுபாஷ் பாபுவின் முன்னேற்றக் கட்சியின் இடது பகுதி என்று நினைபபதும் தவறு. இது அரசியல் சம்பந்தமற்றது என்பதை, முதலிலேயே தெரிவித்து விடுகிறேன்.

இது மதசம்பந்தமானதுமல்ல. கீதை எந்தக் குறிப்பிட்ட மதத்தினரையாவது புண்படுத்துகிறது என்ற காரணம் கொண்டும், இந்த இயக்கத்திற்காக நான் பாடுபடவில்லை. எந்த மதத்தினரும் இந்த எதிர்ப்பில் தாராளமாய்ச் சேர்ந்துகொள்ளலாம். மேலும் கீதை முழுவதும் ஒழிய வேண்டும் என்பதும் இந்த இயக்கத்தின் லட்சியமல்ல. “கீதை கிழிய!” என்பது, இந்த இயக்கத்தின் போர்க் குரல் அல்லவென்பதை, இப்பொழுதே தெரிவிக்க விரும்புகிறேன். கீதை உண்மையா பொய்யா என்பதும் இந்தக் கிளர்ச்சிக்கு சம்பந்தமுள்ள விஷயமல்ல.

கீதையில் ஒரே ஒரு பகுதியை மட்டும்தான் இந்த இயக்கம் கண்டிக்கிறது. கீதையில் ஏதோ முக்கியமான ஒரு ஸ்லோகத்தைப் படித்தால், கீதை முழுதுமே படித்தாற்போல என்று கீதை பக்தர்கள் சொல்லுகிறார்கள். அதேபோல் கீதையில் ஒரே ஒரு ஸ்லோகத்தை மட்டும் மாற்றி விட்டால்கூட இந்த இயக்கத்தின் லட்சியம் நிறைவேறியதாக வைத்துக்கொள்வோம். இந்த ஒரு ஸ்லோகத்தை மாற்றும் பிரச்னையில், தம்முடைய ஸ்தானத்தை ராஜிநாமாச் செய்து, மறு தேர்தலுக்கு நிற்கட்டுமென்று ராஜாஜிக்கு ஒரு அறை கூவல் விட்டிருப்போம். ஆனால் இதில் அரசியல் சம்பந்தமில்லாததால் பேசாமலிருக்கிறோம்.

இந்த இயக்கம் முழுவதும் கலையை—எழுத்துக் கலையைக் காப்பாற்றுவதற்காகவே ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அதிலும் முக்கியமாக நாவல்களின் முறையையும், போக்கையும் சீர்குலையாமல் பார்த்துக்கொள்வதற்கு, இம்மாதிரியான புது முறையான அஸ்திவாரம் அவசியமாகிறது. பெரிய பெரிய காங்கிரஸின் கொள்கையையே மாற்ற வேண்டுமென்று, தலைவர்கள் பாடுபட்டுக் கொண்டிருக்கும் போது, கலைஞர்களும் எழுத்தாளர்களும் பேசாமலிருப்பது நியாயமல்ல.

அப்படி என்ன நாவலுக்கும் கதைக்கும் ஆபத்து வந்து விட்டது? இந்தப் பிரச்னையை ஆத்திரப்படாமலும், வெளியேற்றம், மறியல் முதலிய ஆர்ப்பாட்டங்கள் செய்யாமலும் ஆராயவேண்டியது நம் கடமையாகிறது. நாவல் எழுதுவதற்கு முக்கியமாக என்ன வேண்டும்? பேனாவும் காகிதமும்? கேவலம் பாட்டுகள் எழுதுவதற்குக் கூடத்தான் வேண்டும். கதையமைப்பில் எது முக்கியம் என்று கேட்கிறேன். கதா நாயகன், கதா நாயகி என்று சிலர் சொல்லக் கூடும். அது தவறு.

கதா நாயகனும், நாயகியும் அவசியமேயில்லையென்று நான் சொல்லத் தயாராயில்லை. கதைக்கு அவர்களும் தேவைதான். ஆனால் ரொம்பவும் அவசியமான பாத்திரம், கதா நாயக நாயகிகளைப் பல கஷ்டங்களுக்கு உள்ளாக்கி, கதைக்கு சுவாரஸ்யம் கொடுக்கும் துஷ்டன் தான்.

கதா நாயகனும் நாயகியும்—தலைவனும் தலைவியும் என்றே சொல்வோம்; தமிழாயிருக்கட்டுமே—ஒருவரையொருவர் காதலிப்பதோடு நின்றுவிட்டால் கதை ஏது? நடுவில் ஒரு துஷ்டன் தோன்றி, அவர்களை இம்சித்தாலன்றி அவர்களுடைய காதல் வளரப் போவதில்லை. ஆனால் கதாசிரியர்கள் அவனுக்கு ஏதாவது நன்றிக்கின்றி செலுத்துகிறார்களா? கிடையாது; கடைசியில் அவனைக் கொன்றுவிடுகிறார்கள்; அல்லது அவன் செய்த குற்றங்களுக்காக அவனைச் சிறையிலடைத்துவிடுகிறார்கள். அவனுடைய உதவியால், கதை முடியும் வரை உயிரோடு இருந்த தலைவனும் தலைவியும், ஒரு சொட்டுக் கண்ணீர் கூட அவனுக்காகச் சிந்தாமல் சந்தோஷமாய்க் காலம் கழிக்கிறார்கள். இந்த துஷ்டர்கள், கதைப் போக்கில் முக்கிய பாத்திரங்களுக்குக் கஷ்டங்கள் விளைவிக்கிறார்களே ஒழிய அவர்களைக் கொல்வதேயில்லை. கடைசியில் தலைவன் தலைவி சந்தோஷத்திற்காக, தன் உயிரையும்,இந்தத்துஷ்டன் தியாகம் செய்கிறான். இவனை இரக்கமின்றிக் கொலை செய்வது மல்லாமல், தூஷிப்பதும் நியாயமா?

கொலைகாரர்களும், முக மூடிக் கள்வர்களும் தங்களுடைய சாமர்த்தியத்தைத் தியாகம் செய்து, தங்களைப் பிடிக்கும், கதைத் தலைவனுக்கு வேண்டிய துப்புக் கொடுத்து உதவாவிட்டால், சிறந்த துப்பறியும் நாவல் எழுதுவதெங்கே? உண்மையில் அந்தக் குற்றவாளிகளுக்கல்லவா மெடல் கொடுத்துக் கதையை முடிக்கவேண்டும்!

நாவல்களுக்குப்போவானேன்? பழைய புராணங்கள் இதிகாசங்கள்—ஏன் ராமாயணத்தையே எடுத்துக்கொள்வோமே. தாடகை என்ற பெண்மணி இல்லையென்று வைத்துக் கொள்வோம். ராமன் உதவியை விஸ்வாமித்திரர் நாட ஏதாவது தேவை இருந்திருக்குமா? சீதா கல்யாணம் தான் நடந்திருக்குமா? கைகேயியின் பரோபகார சிந்தையினாலல்லவா ராமன் காட்டுக்குப் போக நேர்ந்தது? கைகேயி அப்படிப்பட்ட வரம் கேட்கா விட்டால், ராமாயணம் மூன்றாவது அத்தியாயத்தோடு நின்றிருக்க வேண்டியது தான். வால்மீகியும் கம்பனும் எழுத்துலகத்தில் பெயர் பெறுவது அப்பொழுது தெரியும்!

இன்னும் கொஞ்சம் பார்ப்போம். ராவணன் மாத்திரம் கொஞ்சம் நல்ல குணமுடையவனாயிருந்திருந்தால்,ராமனுக்கும் சுக்ரீவனுக்கும் நேசம் ஏற்பட்டு அசைக்க முடியாத அயோத்தி—கிஷ்கிந்தை அச்சு அரசியல் உலகத்திற்குக் கிடைத்திருக்குமா? ஹநுமான் என்ற பெயரே கேட்டிருக்க முடியுமா? அப்புறம் ‘ஹநுமான்’ பேப்பர் ஏது, நான் எழுதுவதை நீங்கள் படிப்பதெங்கே?

ஏன், மகாபாரதத்தின் கதா நாயகனான துரியோதனனையே எடுத்துக் கொள்ளுவோமே. சூதாட்டத்தில் அவன் கொஞ்சம் கெட்டிக்காரன் என்றால், அப்படியா அவனை ஒரு ராக்ஷஸன் போலக் கருதும்படி செய்வது? அவன் மாத்திரம் பாண்டவர்களிடம் அன்புகொண்டு, காட்டுக்கு அனுப்பாமலிருந்தால் தெரியும், தற்கால தமிழ் டாக்கி முதலாளிகள் படும்பாடு! படமெடுப்பதற்கு கதைகளே இல்லாமல் திண்டாடி அலையவேண்டியிருக்கும். நல்ல கதைகளுக்கும், சம்பவங்களுக்கும் வசதி அளித்தார்களே இந்த “துராத்மாக்கள்.” இவர்களுக்கு நாம் யாராவது கொஞ்சமாவது நன்றி செலுத்துகிறோமா?

“கைகேயி கபே”, “ராவண விலாஸ் டாக்கீஸ்”, “துர்யோதனன் பிக்சர்ஸ்”, என்று ஏதாவது பெயர்கள் வைத்து அவர்களுடைய ஞாபகத்தை நீடித்தோமா? கிடையாது. அதனால் தான் இந்தக் காலத்தில் ஒரு தாடகையோ, துச்சாதனனோ ஒருவருக்கும் பிரத்யக்ஷமாவதில்லை. காலம் கெட்டுப்போய் விட்டது, சார், கெட்டுப்போய் விட்டது. இல்லாவிட்டால் காங்கிரஸ்காரர்கள் இந்த மாதிரி வரிகளைப் போட்டு... மறந்து விட்டேன்—இது அரசியல் விஷயமல்ல.

இருந்தாலும் அரசியல் விஷயங்களிலிருந்து மேற்கோள் காட்டாமலிக்க முடியவில்லை. சென்னையில் நீலன் சிலையிருந்ததே,நினைவு இருக்கிறதா? ஏன் இருக்கும்? கெட்டவர்களிடம் உங்களுக்குக் கொஞ்சமாவது நன்றியிருந்தாலல்லவா இருக்கும்? அதை எடுத்ததுமல்லாமல், உலகத்தில் சட்டசபைகளுக் கெல்லாம் தாயார் என்று சொல்லப்படும் பிரிட்டிஷ் பார்லிமெண்டின் மூக்கையும் உடைத்தாரே பிரதம மந்திரி சி. ஆர்., அவர் என்ன சொன்னார், தெரியுமா? ‘நீலன் சிலையை வங்



......அசைக்கமுடியாத அயோத்தி—கிஷ்கிந்தை அச்சு......

காளக் குடாக்கடலில் எறியக்கூடாது. அதை உடைத்தெறியக் கூடாது. பொருட்காட்சி சாலையில் வைத்துக் காப்பாற்றவேண்டும். நமது தேச சரித்திரத்தின் சம்பவங்களில், அது ஒரு சின்னமாக விளங்கவேண்டு' மென்று சொல்லியிருக்கிறார். நீலனும் அவனுடைய சிலையும் நமது தேசத் தொண்டர்களின் சத்தியாக்ரக உணர்ச்சிக்கு எவ்வளவு உதவி செய்திருக்கின்றன! இதே மாதிரி, பிரசித்தி பெற்ற புண்ணியவான்களின் ஞாபகத்தையும் நீடிக்க நாம் ஏதாவது செய்ய வேண்டாமா?

ஆனால் ஒரு விஷயம். மகாபாதகன் என்ற பட்டத்தைப் பெற்ற நீலன் சிலையை, இப்படிக் காப்பாற்றிய ராஜாஜியும், "கண்ணன் காட்டிய வழி" யில் கீதையை ஆதரித்து எழுதியிருப்பது தான் வருந்தத்தக்க விஷயமா யிருக்கிறது.

ஆம்—இந்த கீதைதான் எப்படி வந்தது என்று கேட்கிறேன். கீதை ரஸிகர்களுக்கு இது வருத்தம் கொடுப்பதா யிருக்கலாம். ஆனால் உண்மையைச் சொல்வது என் கடமையா யிருக்கிறது.

கிருஷ்ணன் தூது சென்றானே, அப்பொழுது துரியோதனன், தன்னுடைய ராஜ்யம் முழுவதையும் பாண்டவர்களுக்குக் கொடுத்திருந்தால்—யுத்தம் ஏது; கீதோபதேசம் ஏது? "கண்ணன் காட்டிய வழி" எழுதுவதற்குப் பதிலாக ஏதாவது நாவல்தான் எழுத வேண்டும். அல்லது "சிட்டி காட்டும் வழி" என்று தானே எழுத நேர்ந்திருக்கும்.

அப்பேர்ப்பட்ட துரியோதனனின் நல்லெண்ணத்தினாலும், தீர்க்க தெரிசனத்தினாலும் உற்பத்தியான கீதையில், பகவான் என்ன சொல்லுகிறார், தெரியுமா? துஷ்டர்களைக் கொல்லவும், நல்லவர்களைக் காப்பாற்றவும் தான் இவர் வந்து சேர்ந்தாராம். ரொம்பவும் அவசியம் பாருங்கள்! "என்னடா துஷ்டர்களில்லாவிட்டால் உலகம் நடக்குமா? இதிகாச புராணங்கள் ஏற்படுமா?" என்று சிறிதாவது நினைத்தாரா?

துஷ்டர்களில் தலைசிறந்த துரியோதனன் உதவியா லல்லவா, நாம், கீதை மூலமாகக் கொஞ்சம் முதல் அத்தியாயம் படிக்க முடிகிறது என்பதை நினைத்தாரா? ஏன் நினைக்கிறார்? அவர்களை நாசமாக்க வந்தவருக்கு நன்றி ஏது? பாதி மகாபாரதத்திலேயே துரியோதனன் தற்கொலை செய்து கொண்டிருந்தால் தெரியும்!

ஐயா, நல்லவர்களை வேண்டுமானால் காப்பாற்றட்டும். அவர்களுக்குத்தான் தங்களைக் காப்பாற்றிக்கொள்ளும் சக்தி கிடையாதே. துஷ்டர்களைக் கொல்லுவானேன்? கற்பனைக்கும், கலைக்கும் முக்கியமான தூண்களான துஷ்டர்களைக் காப்பாற்றினால் தான், எழுத்தாளர்கள் சௌக்கியமாய் வாழ முடியும் என்பதை அறிந்த ஒவ்வொரு கலைஞனும், மேற்சொன்ன ஸ்லோகத்தை ஆக்ஷேபித்து சத்யாக்ரகம் செய்வார்களென்பது நிச்சயம்.

துஷ்டர்கள் என்றால் உங்கள் வீட்டுக் கிள்ளுக்கீரையோ? பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை தூஷிக்கிறீர்களே. அது இல்லாவிட்டால் உங்களுக்கு மகாத்மா காந்தி கிடைத்து விடுவாரோ? இல்லை, கேட்கிறேன்.

ஒரு காந்திக்கும், அவருடைய வலது கைகளும், இடது கைகளுமாக விளங்கும் தலைவர்களுக்கும் வேண்டுமானால் "துஷ்டன்" "எதிரி" என்று யாருமே இல்லையென்று இருக்கலாம். "நாங்கள் சத்யாக்ரகிகள். ஆகையால் எங்களுக்கு எதிரிகளே கிடையாது. ஆகையால் நியாயத்திற்கும், சத்தியத்திற்கும் விரோதமாக யாராவது பேசினால் அவர்கள் மனதை மாற்றி, சத்தியத்தை அறியச் செய்வதுதான் எங்கள் முறை. அதுதான் எங்கள் சத்யாக்ரகத்தின் லட்சியம். ஆகையால் எங்களுக்கு எதிரிகள், வெற்றி தோல்விகள் என்பதெல்லாம் கிடையாது" என்று அவர்கள் வேண்டுமானால் பேசலாம்.

ஆனால் துஷ்டர்களைச் சேர்த்துத்தான் கதைகளும், நாவல்களும் எழுத முடியும் என்று நினைக்கும் கதாசிரியர்களை—ஏன் புராண, இதிஹாச ஆசிரியர்களையும் சேர்த்துத்தான்—கேட்கிறேன். நானும் சத்யாக்ரகம் செய்து உங்கள் மனதை மாற்றும் அந்த சுலபமான முறையைக் கைக்கொள்ளப் போவதில்லை. அதைவிடக் கடினமான வாத முறையிலேயே உங்களைக் கேட்கிறேன்.

வேண்டிய மட்டும் கெட்டவர்களையும், துஷ்டர்களையும் உபயோகித்துக் கதைகள் கட்டுவது, கடைசியில் அவர்களைக் கொல்வது என்றால் என்ன நியாயம், சார்! இந்த மாதிரியான கொள்கையை ஆரம்பித்துப் பிரசாரம் செய்யும் கீதையை எதிர்க்கவேண்டுமா இல்லையா? அப்படித்தான் துஷ்டர்கள் வேண்டா மென்றால் முதலிலேயே நாசம் செய்து விடுவதுதானே. ஆனால் பிறகு சம்பவங்கள் நடப்பது எப்படி? கதைப்போக்குக்கு உதவிசெய்த துஷ்டர்களைக் காப்பாற்றுவது கதாசிரியரின் கடமையல்லவா? ஆனால், சொந்தக்காரர்களைக் கொன்று, யுத்தம் புரியும்படி தூண்டும் கீதையில், இந்த நியாயம் எப்படிக் கிடைக்கும்!

நான் மேற்கோள் காட்டியது ஒரே ஒரு ஸ்லோகம்தான். இன்னும் எத்தனை ஸ்லோகங்கள் இப்படி இருக்கின்றனவோ! கீதை எதிர்ப்பு இயக்கத்தார் முதல் முதலில் செய்யவேண்டிய வேலை இதுதான். உடனே ஒரு மகாநாடு கூட்டி, துரியோதனன் உருவப் படத்தைத் திறந்து வைக்க வேண்டும். கதை புராணங்களில் வரும் துஷ்டர்களைப் பாராட்டித் தீர்மானங்கள் நிறைவேற்ற வேண்டும். பிறகு ஒரு சப் கமிட்டி நியமித்து, கீதையைப் பரிசீலனை செய்து, மேற் சொன்னபடி துஷ்டர்களை தூஷிக்கும் ஸ்லோகங்களையெல்லாம் பொறுக்கி எடுக்கவேண்டும். பொறுக்கி எடுக்கப்பட்ட ஸ்லோகங்களை, ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் மாற்றி ஒரு சட்டம் கொண்டு வராவிட்டால், ஆரிய மொழிக் கல்லூரிகளில் மறியல் ஆரம்பமாகும் என்று பிரதம மந்திரிக்கு ஒரு இறுதிக் கடிதம் அனுப்பவேண்டும். அதோடு நின்றுவிடாமல் நல்லவர்களுக் கெல்லாம் ஒரு வரி போடவேண்டு மென்றும் பிரதம மந்திரிக்கு வற்புறுத்த வேண்டும். மதுவிலக்கினால் ஏற்பட்ட நஷ்டத்திற்கு வரி போட்டுத்தானாக வேண்டும் என்று அவரே சொல்லியிருக்கிறார். சேலம், சித்தூர், கடப்பை முதலிய ஜில்லாக்களில், மதுவிலக்கினால் குற்றங்களே குறைந்து விட்டனவாம். உலகத்தில் துஷ்டர்கள் குறைந்து வருவதற்கு இது அத்தாட்சியல்லவா? ஆகவே, அப்படி மதுவையொழித்து நல்லவர்களானவர்களிடமிருந்து வரி வசூல் செய்ய வேண்டாமா? வரிபோடுகிறாரோ இல்லையோ, அதைப்பற்றி நமக்குக் கவலையில்லை. கீதையை மாற்றும் விஷயத்தில் மாத்திரம் நாம் கொஞ்சம்கூட விட்டுக் கொடுக்கக் கூடாது. இந்தக் கிளர்ச்சியைப் பற்றிய மற்ற விவரங்களை "துஷ்டன்" பத்திரிகையில், அவ்வப்பொழுது பார்த்துக் கொள்ளலாம்.



என். சிதம்பர சுப்பிரமணியன்
எழுதியது

உடனே புறப்பட்டு வரும்படி எனக்கு மேலிருந்து உத்தரவு வந்து விட்டது. பண அரக்கன், தன் அடிமைகளைச் சிறிது நேரம் கூடச் சும்மாயிருக்கவிடமாட்டான். ஓய்வு கொடுக்காமல் அவர்களை விரட்டிக் கொண்டிருக்க வேண்டும். எனக்கும், என் எஜமானர்கள், தாமதிக்காமல் புறப்பட்டு வந்துவிடும்படி எழுதியிருந்தார்கள். நான் மேற்கொண்டு வந்த காரியத்தை இரண்டு நாள் முன்பே முடித்து விட்டேன். திருவனந்தபுரம் ஊரையும், அங்கு பார்க்க வேண்டிய காட்சிகளையும் பார்ப்பதில், இரண்டு நாட்கள் செலவழித்தேன். சுற்றுப்புறமிருக்கும் இடங்களையும், சுற்றிப் பார்க்க வேண்டுமென்பது என் ஆசை. அதற்குள்ளாக எனக்கு 'அழைப்பு' வந்துவிட்டது.

மற்ற இடங்களைப் பார்த்தாலும் பார்க்காவிட்டாலும், கன்யாகுமரியையாவது, பார்த்துத்தான் விடுவது என்பது என் தீர்மானம். தெற்குக் கோடியில் அவ்வளவு தூரம் வந்துவிட்டு கன்யாகுமரி முனையைப் பார்க்காமல் திரும்ப, என் மனம் இடம் கொடுக்கவில்லை. சௌந்தர்ய தேவதை, கன்னி ரூபத்தில் வீற்றிருந்து அரசு புரியும் சுந்தரமான பூமியல்லவா அது! கடலும் பூமியும், கடலும் வானும் ஒன்று சேர்ந்து ஜாலம் காட்டும் அற்புத ஸ்தானம். அந்த விசித்திரம் நிறைந்த, அற்புதத்தைக் கண்டு களிக்க என் மனம் கொந்தளித்துக்கொண்டிருந்தது.

கணபதி, ரத்னம்—(சென்னைவாசிகள்; தற்செயலாக அவர்களும் ஜோலியாக அங்கு வந்தவர்கள்) நானுமாக, மூவரும் அன்றே கன்யாகுமரிக்குக் கிளம்புவது என்று தீர்மானித்தோம். அப்பொழுது மணி பகல் இரண்டு. எங்களுக்கு சூரியாஸ்தமனம் பார்க்க வேண்டுமென்ற ஆசை. ஆகவே சூரியாஸ்தமனத்திற்குள் அங்கு போகவேண்டுமென்பது எங்கள் சங்கல்பம். அதற்குள் போய்ச் சேர்ந்துவிடலாமென்று தெரிந்தவர்கள் சொன்னார்கள்.

ஒரு ரூபாயும், சில்லரை சக்கரங்களும் (திருவாங்கூர் நாணயம்) கொடுத்துவிட்டு, நாகர் கோவில் பஸ்ஸில் ஏறிக் கொண்டோம். திருவாங்கூர் சமஸ்தானத்தில், பஸ் போக்கு வரவு வியாபாரத்தை, ராஜாங்கத்தாரே நடத்துகிறார்கள். பஸ் கண்டக்டர்களில் அனேகம் பேர் பி. ஏ. படித்தவர்கள். பஸ் சுமார் இரண்டரை மணிக்குத் திருவனந்தபுரத்தை விட்டுப் புறப்பட்டது. சினிமாப் படங்களில் 'டாஹிடி' 'ஹானலூலு' முதலிய பஸிபிக் தீவுகளைப் பார்க்கும்போது அந்தக் காட்சிகளைக் கண்ணாரக் காண வேண்டுமென்ற ஆசை கிளம்பும். ஆனால், மலையாள ராஜ்யத்தில் இயற்கைக் காட்சிகளைக் காணும்போது, எங்கோ யிருக்கும் பஸிபிக் தீவுகளுக்குப் போவானேன், இவ்வளவு சமீபத்திலிருக்கும் அழகான பூமியை விட்டு விட்டு, என்று தோன்றிற்று. மலைச்சரிவுகள், வானளாவிய மரங்கள், எங்கும் பசேலென்று விளங்கும் தாவர வகைகள்; ஒரு பக்கத்தில் பிரும்மாண்டமானதோர் தென்னஞ்சோலை; அதற்குப் பக்கத்தில் அகண்டதானதோர் ஏரி; அதில் நீந்திக்கொண்டு போகும் படகுகள்; ஈரம் வற்றாத கூந்தலை அழகாக முடிந்து கொண்டு நிற்கும் கேரள மங்கையர்; மலைகளுக்கு முகத் திரையிடும் மேகங்கள்; இப்படி விதவிதமான காட்சிகளைக் கண்முன் நிறுத்துகிறது, மேற்குத் தொடர்ச்சி மலையை அண்டி நிற்கும் அந்தச் சேர நாடு.

கண்கள் மாத்திரம் வேண்டியபடி விருந்தினப மனுபவித்துக் கொண்டிருக்கவில்லை. ஒரு ஊரில் அன்னாசிப்பழம் வாங்கினோம். அன்னாசிப்பழம் சாப்பிடவேண்டுமானால், திருவாங்கூருக்குத் தான் போகவேண்டும். தளதளவென்று, ரஸம் நிறைந்த அந்த அன்னாசித் துண்டத்தை வாயில் போட்டுக் கொண்டால் அரைக் கால் விநாடியில் அப்படியே கரைந்துவிடும். எல்லாமே அங்கு மிக மலிவு. அன்னாசியோ அசாத்ய மலிவு. ருசியோ தேன் தான்.

ஆனால், பஸ்ஸிலே உட்கார்ந்து கொண்டு கார்முழுவதும் ஈ மொய்க்கும்படி செய்யவில்லை. இரண்டு பழங்களை வாங்கி மூட்டை கட்டிக் கொண்டோம். ஒரு ஊரில் இளநீர் வாங்கிக் குடித்தோம். மற்றோர் ஊரில், வறுத்த முந்திரிப் பருப்பு, பை நிறைய வாங்கிப் போட்டுக் கொண்டு, கொரித்துக் கொண்டிருந்தோம். ஒவ்வொரு ஊரிலும், ஏதாவது வாங்கிக்கொண்டே போனோம். அவைகளை விஸ்தரித்துக் கொண்டு போவானேன்?

சுமார் ஐந்து அல்லது ஐந்தரை மணிக்கு நாகர் கோவில் வந்து சேர்ந்தோம். நாகர் கோவில் வந்தவுடனேயே, தமிழ் நாட்டு எல்லையை மிதித்து விட்டோம் என்பது நன்கு தெரியும். திருவாங்கூர் சமஸ்தானத்திலிருந்தாலும் தமிழர் நாடு தான் அது. தேங்காய் நார் உரிக்கும் ஈரத் தலை மங்கையர்க்குப் பதில், நெல் குத்திக் கொண்டிருக்கும், தொள்ளைக் காதுப் பெண்மணிகள் தான் தோன்றினர். மலைப் பிராந்தியத்திற்குப் பதில் சமபூமி. ஆச்ரமங்கள் போன்ற குடிசைகளுக்குப் பதிலாக, சாதாரண வீடுகள்.

திருவனந்தபுரம் பஸ், நாகர் கோவில் வரையில் தான் போகும். கன்யாகுமரிக்கு, வேறு வண்டியில் போகவேண்டும். குமரி முனைக்கும், நாகர் கோவிலுக்கும் சுமார் பத்துப் பன்னிரண்டு மைலிருக்கும்.

அவசர அவசரமாக அங்கு ஒரு ஹோட்டலில் காப்பி சாப்பிட்டுக் கொண்டோம். சூரியன் யாத்திரை முடியும் தறுவாயிலிருந்தது. சூரியன் அஸ்தமிக்கு முன், அங்கு சேர்ந்துவிட வேண்டுமென்னும் ஆசை, எங்களை உந்தித் தள்ளிக் கொண்டிருந்தது. ஏனென்றால், வேறு சந்தர்ப்பம் இல்லை. மறுநாள் காலை ஒன்பது மணிக்குக் கிளம்பி விடுவதென்று தீர்மானம்.

நாகர்கோவிலிலிருந்து, எங்களுக்கும், சூர்யனுக்கும் பந்தயம் ஆரம்பித்து விட்டது. எவ்வளவோ மைல் வேகத்தில் போகும் சூர்யனை, இருபது மைல் வேகத்தில் போய்க்கொண்டிருந்த நாங்கள், எப்படியாவது பிடித்துத்தான் தீருவது என்று ஆத்திரப்பட்டுக் கொண்டிருந்தோம். நிமிஷத்திற்கு நிமிஷம் கடியாரத்தைப் பார்ப்பதும், சூரியனைப் பார்ப்பதும், எவ்வளவு மைல் இன்னும் பாக்கி என்று கேட்பதுமாக, பக்கத்திலிருந்தவருக்கு மிகவும் சிரமத்தைக் கொடுத்துக் கொண்டிருந்தோம். சூரியன் வேகம் எங்கே? மோட்டாரின் வேகம் எங்கே? எங்கள் மனோ வேகமெங்கே? எங்கள் மனம் சூரியனிடம் சென்று, அவன் இரதத்தைப் பிடித்து நிறுத்தமுயன்றது. "உங்களுக்கு வேண்டிய அவகாசம் இருக்கு, ஸார்" என்றான் ட்ரைவர். ஆனால் எங்களுக்கு நம்பிக்கையில்லை. எங்கள் மனம் பொங்கிக் கொண்டிருந்தது.

அங்கு போய்ச் சேர்ந்தபோது, சூரியாஸ்தமனத்திற்கு சுமார் அரைமணி நேரத்திற்குக் குறைவாகத்தான் இருந்தது. இருந்தாலும் இவ்வளவு வேகமாக ஓடி வந்து சேர்ந்திருக்கும் எங்கள் பிரயாணம், வியர்த்தமாகவில்லை என்று மிகவும் சந்தோஷமடைந்

தோம். சத்திரத்தில், வேஷ்டி துணி மணிகளையும், அன்னசிப் பழங்களையும் போட்டுவிட்டு, கடற்கரைக்கு ஓடினோம். அது ஒரு சிறிய கிராமம் தானே. சமீபத்திலேயே இருந்தது கடற்கரை. ஒருவாறு, குமரியை அடைந்தோம்.

வலது பக்கம் கடல், இடது பக்கம் கடல், முன்பக்கம் கடல். மூன்று பக்கங்களையும், சூழ்ந்து கொண்டு, உன்னை விழுங்குவேன் என்று மனிதனைக் கூவி அழைப்பதுபோல், பூமியைத் தழுவி நிற்கும் வானவளையம். காலம் இடம், இதை மீறி நிற்கும் பிரம்மாண்டமானதொரு நித்யவஸ்துவை, அடையும் வாசற்படியாக விளங்கிற்று அது. காலத்தையும், இடத்தையும் விழுங்கி, ஏப்பமிட்ட, அந்த மஹா சமுத்ரமானது, கம்பீரமாகத் தன் ஆயிரம் கைகளையும் வீசிக்கொண்டு வரவேற்கிறது. ஆயிரங் கைகளைக் கொண்ட சமுதர ராஜன், ஏதோ ஒரு வாத்யத்தை வாசித்து, கோஷித்துக் கொண்டிருந்தான். பல வர்ணங்களைக் கொண்ட ஆகாயம், அதற்குச் சரியாக நிருத்யம் செய்து கொண்டிருந்தது. இந்த அகண்டமான அரங்க மேடை எதற்கு? அதன் சபா நாயகன் யார்? பூமிக்கும் ஆகாயத்திற்கும், ஆகாயத்திற்கும் கடலுக்கும் நடுவே நின்று, ப்ரமித்து நின்ற என்னிடமிருந்து, என் உள்ளம் விடுபட்டு எல்லையற்ற, முடிவற்ற, அழிவற்ற அழகின் கடலில் ஒன்றுபட்டு நின்றது.

"சூரியன் தெரியவில்லை, ஸார்" என்றார் நண்பர். நாங்கள் போனது மே மாதம். சித்திரைக் கடைசி: அப்பொழுது உத்தராயணம். அதாவது சூரியன் வடமேற்கில் அஸ்தமிக்கிறான். தக்ஷிணாயனமாயிருந்தால், தென் மேற்கில், அதாவது நடு சமுத்திரத்தில் சூர்யன் விழும் காட்சி பிரம்மானந்தமாயிருக்கும். இப்பொழுது, வடமேற்கில் விழுந்து கொண்டிருக்கும் சூரியனை, சிறிது தூரத்திலிருந்த மணல் திட்டு மறைத்துக் கொண்டிருந்தது. "ஸார், அந்த மணல் திட்டு கிட்டத்தான் இருக்கிறது. அங்கே போய்விட்டால், எப்படியும் சூரியனைப் பார்த்து விடலாம்" என்று யோசனை கூறினார் ரத்னம். சரி என்று அந்தத்திட்டை நோக்கி வேகமாக ஓடினோம். அந்த திட்டை அடைந்தபோது அங்கும் சூரியன் தெரியவில்லை. அதைவிடப் பெரிய ஒரு மேடு அதற்கப்பால் மறைந்துகொண்டிருந்தது. ஆனால் நாங்கள் ஒன்றையும் லட்சியம் செய்யவில்லை. அந்த மேட்டிலும் ஏறினோம். ஓடும் வழக்கம் ஒருவருக்கும் கிடையாது. அதிலும் மணல் மேடுகளில் ஓடுவதென்றால், சொல்லவேண்டியதில்லை. ஆனால், சாகப்போகும் தறுவாயிலிருக்கும் நோயாளியைப் பார்க்கப்போகும் உறவினர்களைப் போல, ஒரு மனத்தினர்களாய், ஒன்றையும் பொருட்படுத்தாமல் மேலும் மேலும் ஓடிச் சென்று, அந்த 'சாகும்' சூரியனைப் பார்க்கத் தவித்துக் கொண்டிருந்தோம். சுமார் ஒரு மைல் தூரம் ஓடியிருப்போம். கடைசி மேட்டை அடைந்து விட்டோம். 'நல்ல வேளை! இன்னும் சூரியன் விழவில்லை. விச்ராந்தியாகப் பார்க்கலாம். இனி மறைப்பதற்கு ஒன்றும் கிடையாது' என்று குதூகலத்துடன் உட்கார்ந்துகொண்டு, வியர்வையைத் துடைத்துக் கொண்டு சிரம பரிகாரம் செய்துகொண்டோம்.

சூரியன் பிறப்பதும் வளர்வதும், உயர்ந்த நிலையிலிருந்து அரசு செலுத்துவதும், பின் வீழ்வதும், மறைவதும், தினசரி நடக்கும் நாடகம் அங்கே. அந்த மூன்று கடல்களுக்கும் மத்தியிலே, அவனுடைய சகல லீலைகளும் முடிவடைந்து விடுகின்றன. பிரம்மாண்டமான அந்த அழகு வெள்ளத்திலே, சக்திக் கடலிலே, ஞாயிறு தினசரி நுரை போல் தோன்றி மறைகிறான்.

சூர்யனின் அந்திம காலத்தை ஆவலுடன் எதிர்பார்த்து நின்றோம். இங்கே, உலகத்தை ப்ரகாசிக்கச் செய்யும் ஒளி அவிந்து போவதைப் பார்ப்பதில் ஆனந்தம் கொண்டு நின்றோம். ஆனால் மனுஷ்ய ஜீவனின் ஒளி அவியும் போது மாத்திரம் ஏன் துக்கப்பட்டுக் கலங்கவேண்டும்! சூரியன் ஓய்வு நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. எங்கள் ஆசை இன்னும் சில நிமிஷங்களில் பூர்த்தியாகப் போகிறது. ஒருவரை ஒருவர் பார்த்துக் குதூகலித்துக் கொண்டிருந்தோம். ஆனால்..... பஞ்சபூதங்களுக்குமுன் மனிதன் எமமாத்திரம்? அந்தக் காலம் அந்த நாட்டில் மழைக்காலம். திடீரென்று எங்கிருந்தோ வந்த மேகங்கள் சூர்யனைச் சூழ்ந்து கொண்டன. சூர்யனுக்கும் மேகத்திற்கும் பகைமையிருந்தாலும், சுத்தவீரனைப்போல், தன் பகைவன் வீழ்தலைச் சாதாரண மனிதர் பார்ப்பானேன் என்று மறைத்துவிட்டான் மேகராஜன்.

'காதமாயிரம் மோர்கணத் துள்ளே
கடுகியோடும்கதிரினம் பாடி
ஆதவா னை வாழ்த்திட வந்தேன்
அணிகொள் வான்முகம் காட்டுதி சற்றே.'

என்ற பாரதியின் வாக்கு ஞாபகம் வந்தது. அந்தப்பிரார்த்தனை சூர்யன் காதில் விழவில்லை. மேகம் விலகவில்லை. அன்று அஸ்தமனமாகிவிட்டது. பாரத வர்ஷத்தின் கோடிக்கு எங்களைத் தள்ளிக்கொண்டு போன ஆசையிலும் அஸ்தமனமாகி விட்டது.

மனம் உடைந்துபோய், வேறு வழியின்றி, இதரக் காட்சிகளையாவது பார்ப்போமென்று, சமுத்திர ஜலத்தண்டை போனோம். எங்கு பார்க்கினும் பாறை. சிறிதும் பெரிதுமான குண்டுக் கற்கள், யானைகள்போல் நின்று கொண்டிருந்தன. மதயானையின் மேல் பாயும் சிங்கங்கள் போல அவற்றின்மீது பிரதி க்ஷணமும் அலைகள் பாய்ந்து சிதறிக்கொண்டிருந்தன. சிதறி வழிந்தோடும் நுரை பால்போல்மிதந்துவந்தது. வெகு சமீபத்தில் ஏறும்படியாகவும், வழுக்காமலுமிருந்த ஒரு சிறு பாறையி லேறிக்கொண்டு, இந்த யுத்தத்தைப் பார்த்துக் கொண்டு நின்றோம். நாழியாகி விட்டது.

இருட்ட ஆரம்பித்துவிட்டது. இருட்டிவிட்டால் வழிதெரியாது. எந்தத் திக்கில் எங்கு இருக்கின்றோம் என்று எங்களுக்குத் தெரியாது. எப்படியும் ஊரை அடைந்து விடலாம் என்ற நம்பிக்கை. திரும்பினோம்; நாங்கள் வந்த அடிச் சுவடுகளைக் காற்றும் மணலும் மறைக்கவில்லை. ஆனால், பாதி வழியிலேயே இருட்டி விட்டது. எப்படியோ உத்தேசமாக நடந்து பெரிய பாதையை அடைந்துவிட்டோம். எங்கள் கவலை நீங்கிற்று. நரி முதலிய ஜந்துக்களிடம் அகப்பட்டு விடுவோமோ என்ற அனாவசியமாக ஏற்பட்ட பயம் தீர்ந்தது.

அன்று இரவில் கோவிலுக்குச் சென்று குமரியைத் தரிசித்தோம். நித்ய யௌவன ரூபத்தில் அந்தக் கன்னிகை காதலனை நோக்கித் தவம்செய்து கொண்டிருக்கிறாள். ஸம்ஹார மூர்த்திதான் அவள் காதலன். அவள் அழிவை வரித்தாள். சிவன் வந்தான்.

ஆனால், அழிவு நாடகத்தை அவ்வளவு சீக்கிரத்தில் நடத்த விரும்பவில்லை. "பிரளயம் வரட்டும் பிரியே! சிருஷ்டிக்கு அவச்யம் ஏற்படட்டும், உன்னைக் கொள்கிறேன்," என்று திருப்பி அனுப்பி விட்டான். யுகாந்தரத்தை நோக்கி இப்பொழுது காத்து நிற்கிறாள். எல்லாம் கலைந்து, கலந்து ஒன்றாகும் போது, அவளும் காதலுடன் ஐக்யமாவாள். அழிவிலே—எல்லாம் ஒன்றாகும் பிரளயத்திலே—அவள் காதல் கைகூடும்; நித்ய யௌவன ஸௌந்தரியமும், நிர்மூலமாக்கும் சக்தியும் அங்கே, அப்போது இரண்டறக் கலக்கும்.

அம்மன் முகத்திலிருந்த ஒரு வைரம் மின்னிக்கொண்டிருந்தது. அணையாத தீபம் போல அது பிரகாசித்துக்கொண்டிருந்தது. அந்த ஒளி சமுத்ரத்தில் வெகு தூரம் வரையில் தெரியுமாம். படகோட்டிகளும், மாலுமிகளும் கலங்கரை விளக்கமென்று கூட நினைப்பார்களாம். அப்படி நினைத்ததால் அநேகம் படகுகளுக்குச்சேதம் ஏற்பட்டிருந்ததாம். அதற்காக அந்தக் கீழ் வாசற் கதவை எப்பொழுதும் மூடியே வைத்திருக்கிறார்கள். வருஷத்தில் ஏதோ ஒரு நாள்தான் அதைத் திறப்பார்களாம். கோவிலைச் சுற்றிச் சுற்றிப் பார்த்து இன்புற்று, வெகுநேரம் கழித்து சத்திரத்துக்கு வந்து அன்னசிப் பழத்தில் 'பிரளயம்' உண்டு பண்ணினோம்.

"பெருங்காய சக்ரவர்த்தி"

N K
REGISTERED TRADEMARK
N.K.S

1 பௌன் விலை ரூ. 1—14—0

சரீர ஆரோக்யத்தையும் நாசிக்கு மணத்தையும் நாவுக்கு ருசியையும் மனதுக்கு திருப்தியையும் அளிக்கும்

அநேக நற்சாக்ஷி பத்திரங்களும் தங்க மெடல்களும் பரிசு பெற்ற

"டெக்கான் குயின்"

மிஸ்கி பெருங்காயம்

அனேக லக்ஷக்கணக்கான மக்கள் உபயோகித்து சந்தோஷப்பட்டு வருகிறார்கள்

எங்கும் கிடைக்கும்

தலைமை ஆபீஸ் : பம்பாய்

நாரன்தாஸ் கேசூர்தாஸ் & ஸன்ஸ்,
1-204, கோவிந்தப்ப நாய்க்கன் தெருவு,
ஜி. டி., மதராஸ்

Tel : "Raju"

Phone : 81

P. A. Raju Chetty & Bros.,

JEWELLER,

COIMBATORE.

எப்பொழுதும் ரெடி!

நகைகளும், வைரங்களும்

வெள்ளி பாத்திரங்களும்.

செப்டம்பர் மாதம் கடைசியில்

வெளி வருகிறது

"கச்ச தேவயானி" ஒரு வருஷத்துக்கு முன் வெளி வந்தது. அதிலுள்ள அற்புத சீன்கள் இன்றைக்கும் உங்கள் மனக்கண் முன் நிற்கிறது. நேற்றுத்தான் கண்டதுபோல் நினைக்கிறீரல்லவா? இதை யெல்லாம் மறக்குமுன், காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள வேண்டும்.

ஸ்ரீ பி. வி. ராமானந்தமும், ராதா பிலிம் கம்பெனியும் ஆந்திர தேச முழுமையும் புகழ்பெற்றவர்கள்; புராணப் படங்கள் தயாரிப்பதில் இணையற்றவர;

அவர்கள் தயாரிக்கும் மூன்றவது புராணச் சித்திரம்

'பாண்டுரங்க விட்டல்'

(தெலுங்கு)

பக்த புண்டரீகனுல் இயற்றப்பட்ட மஹா-பக்த விஜயத் திலிருந்து, எடுத்து அமைக்கப்பட்டது இப்படக் கதை

விவரங்களுக்கு:

பி. வி. ராமானந்தம் & ராதா பிலிம் கம்பெனி

72, ரஸ்ஸா ரோட் :: டாலிகஞ்ஜ் :: கல்கத்தா

1939 பில்கோ - டிராபிக் ரேடியோக்கள்

அகில அலைகளிலும் ஒலி அளிக்குமாறு அமைக்கப்பட்டவை!



சீதோஷ்ண ஸ்திதியால் பாதிக்கப்படாதவை!

அகில தேசங்களுக்கும் ஏற்றவாறு பாகங்களும்

அமைப்பும் கொண்டவை!

மாடல் **39-720 6** வால்வ்கள் **A C**
3 வேவ் பாண்டுகள் **13·6—555** மீடர்
வரை இடைவிடாத அலைகள்
ரூபாய் **375/.**

பில்கோ ரேடியோக்களிலேயே ஒரு அலாதியான ரகத்தை சிருஷ்டித்திருக்கிறது. உலகத்தின் எந்த பாகத்திலும், வருஷம் முழுவதும் ஒலி அளிக்குமாறு இவை அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்தப் புதிய பில்கோக்கள் — உள்பாகங்கள், பெட்டிகள் உள்பட — மிகவும் கொடிய சீதோஷ்ண ஸ்திதியையும் சமாளிக்குமாறு அமைக்கப்பட்டிருக்கின்றன. எல்லா அலைகளிலும் ஒலி அளிக்கும். அதிக ஸ்டேஷன்களைக் கேட்கவும்.

கீழ்க்கண்ட இடத்தில் பார்வையிட்டு கேளுங்கள் :

சென்னை ராஜதானிக்கு (சமஸ்தானங்கள் உள்பட) ஸோல் டிஸ்டிரிபியூடர்கள் :

மஹமத் இப்ராஹிம் & கோ.

(மேன்மை தங்கிய கவர்னருக்கு நியமனம் பெற்றவர்கள்)

26-27, ராட்டன் பஜார் — — மதராஸ்

"எதிர்பாராதது", "கோபாலகிருஷ்ணா" சென்ற ஒளிப்பாதையிலே செல்வது

பிரபாத்தின் மகோத்புதமான சித்திரம்

சாந்தாராமின்

'வாழ்க்கை வாழ்வதற்கே'

நட்சத்திரங்கள் :

சாந்தா ஹூப்ளேகார் *'சியாம் சுந்தர்' புகழ்* **சாஹூ மோதக் கௌரி சுந்தராபாய்**

முதலியோர்

இத்துடன் **தியானேச்வர்**

இதைத் தயாரித்தவர்கள் யார் என்கிறீர்கள்?

துகாராம், கோபாலகிருஷ்ணா முதலியவற்றைக் கொணர்ந்த

பதேலால், தாம்லே தான்

புக்கிங்குகளுக்கு :

பேமஸ் பிக்சர்ஸ், பெங்களூர் ஸிடி

'Grams: **Famousfilm**

Phone: **2158**

மகா போதம்

—கு. ப. ராஜகோபாலன்—
எழுதியது

1

அன்று பௌர்ணமி; ஸுஜாதை 'வெள்ளென' எழுந்திருந்து பசுவைக் கறந்து பால் காய்ச்சிப் பாலன்னம் தயாரித்தாள். தன் காதலன் உடம்பு கலகலப்பாக ஆகவேண்டுமென்று இஷ்ட தேவதையை வேண்டித் தொழப் புறப்பட்டாள்.

ஸுஜாதை அந்த அதிகாலைப் பொழுதில் உருவெடுத்து வந்த உதயகன்னி போலவே இருந்தாள். சிகப்பு உடலில் மஞ்சள் பட்டாடை உடுத்திருந்தாள். கோவிலுக்குப் போவதால் நீராடி நெற்றிக்கிட்டுக்கொண்டு, தூய்மையே நடந்து செல்லுவது போல இருந்தாள். அழகும் பருவமும், பாலும் இனிப்பும்போலக் கலந்து, அவள் முகத்தில் தெளிவை நிரப்பின. அதில் கம்பீரமும், அமைதியும் சாந்தமும் தென்பட்டன. அவளுடைய நடையிலேயே ஒரு அடக்கமும் பெருக்கும் இருந்தன.

அவள் கோவிலுக்குப்போகும் வழியில்தான், நைரஞ்ஜரைக் கரையில் அந்த அரசமரம். அதன் அடியில்தான் ஸ்வர்ண விக்கிரகம் போன்ற அந்த வடிவம் கல்போலச் சமைந்து, தவத்தில் இருந்தது. கண் மூடிய அந்த மோன முகத்தில் சொல்லொணுத் துயரம் தேங்கி இருந்தது. மூடியிருந்த அந்த விசாலமான கண் இமைகளில் என்ன சாந்தம், அமைதி! பத்மாஸனத்தில் அமர்ந்திருந்த அந்த உருவமே, அந்த இடத்தில் கோவில் கொண்டெழுந்து ஒரு ஜோதிலிங்கம் போல இருந்தது. அதைக் கண்டு கண்டு ஸுஜாதை பல நாட்களாக பிரமித்திருக்கிருள். கிராமத்தார்கள், வழிப்போக்கர்கள் எல்லோரும் "யாரோ தபஸி, சாது!" என்று திரும்பிக் கூடப் பார்க்காமல் போய்விடுவார்கள். ஸுஜாதைக்கு மட்டும் அந்த தேஜப் புஞ்சத்தைக்கண்ட நிமிஷ முதல், அதனிடம் ஒரு லயிப்பு ஏற்பட்டு விட்டது. கொடுமையான தவத்தில் இறங்கிய அந்த மகா துக்கத்தைக் கண்டதும், அவள் மனதில் ஒரு மகத்தான இரக்கம் சுரந்தது.

2

தூரத்தில் நின்று அந்த மௌன மூர்த்தியை ஆழ்ந்து கவனித்து உருகுவாள். அசைவற்ற அந்த வலிமையைக் கண்டு பிரமித்துப் போவாள். அன்று அவள் கண்ட காட்சி அவளை மெய்மறக்கச் செய்தது.

மகாபிநிஷ்கிரமணத்திற்குப் பிறகு சித்தார்த்தன் 'எத்தைத் தின்ருல் பித்தம் தெளியும்' என்றது போன்ற வேட்கைகொண்டு, உண்மையைக் காண எல்லா வழியையும் பின்பற்றி, ஒவ்வொன்ருகப் பரீக்ஷை பார்த்தார். நாடு, வீடு, மனைவி, மகன், பந்துக்களைத் துறந்தது முதல் வழி; ஆபரண அலங்காரங்களைத் துறந்தார்; தம் உடைவாள் கொண்டு தம் சிகையை அறுத்துக்கொண்டார். ஆகாராதிகளைக் குறைத்து நியமத்திற்குக் கொண்டு வந்தார்; தாபஸர்களைத் தேடிச் சென்று அவர்களுடன் பழகிப் பார்த்தார். எங்கும் உண்மையைக் காணேம். எங்கும் அகங்காரம், காமம், மமதை, குரோதம் முதலியன மண்டிக் கிடந்தன.

அலைந்து அலைந்து பார்த்துக் களைத்துப் போய், ஸத்சங்கத்தில் கூடத் தெளிவு ஏற்படாதது கண்டு, வெறுப்புற்று, சித்தார்த்தன் கடைசியாக, நைரஞ்ஜரைக் கரையில் ஒரு அரச மரத்தடியில் உட்கார்ந்து விட்டார். இருபத்தெட்டு நாள் அல்லும் பகலுமாக, அந்த மரத்தடியில் உட்கார்ந்த வண்ணம் யோசனை செய்தார். அறிவுத் தாகம் மேலிட்டு மெய் மறந்தார். உண்மையை அறியவேண்டும் என்ற ஆவேசம் மேலிட்டு, மூச்சையும் பேச்சையும் நிறுத்தினர். இருபத்தெட்டு நாட்களில் உடல் இளைத்து காஷ்டம்போல் ஆயிற்று. ஆனுல் அப்பொழுதுதான் கொஞ்சம் கொஞ்சமாக அறிவு தெளிவாகிக்கொண்டு வந்தது. நெருப்பின்மேல் இருக்கும் சாம்பல்போல, உடல் சதை அகல அகல, உள் ஜோதி விளக்கம் கொண்டது. சரீரம் இளைக்க இளைக்க, ஞானம் பெருகிற்று.

அப்பொழுது தான் அவருக்கு ஒரு ஒளி தெரிந்தது. எங்கெங்கோ தேடித் திரிந்த உண்மையை, அங்கேயே, தனதுள்ளேயே காணலாம் என்று ஊகம் செய்ய முடிந்தது முதல் முதலாக.

இருபத்தொன்பதாம் நாள் காலையில் உதயத்தின் ஒளியோடு ஒளிமங்கையாக ஸுஜாதை வந்தாள்.

3

அவள் ஒரு இடைப்பெண். பலனென்னும் இடையனின் மகள். இஷ்ட தேவதைக்குப் படைப்பதற்கான பாலன்னம் அவள் கையில் இருந்தது.

அன்று சாக்கிய முனியின் சுத்த தவவடிவம் அவள் மனதை விசேஷமாகக் கொள்ளை கொண்டது. மெலிந்துபோன அந்த மேனியை அன்று கண்டதும் அதனிடம் ஒரு மகாப்ரேமை கொண்டாள் அவள். மட்டற்று அவள் உள்ளத்தில் சுரந்த இரக்கம் அன்று கட்டு மீறிற்று.



காதலனை மறந்தாள் ஸுஜாதை. தன் நிலையை மறந்தாள்; வழிபடும் கடவுளையே மறந்தாள். வேற்றுமையையும் மறந்தாள். இருபத்தெட்டு நாள் உபவாஸத்தால் வாடிச் சோர்ந்துபோன அந்த இளம் முகத்தைக் கண்டு இளகினுள். திடீரென்று அருகிற் சென்று, தைரியமாக பாலன்னத்தை எடுத்து தன் கையாலேயே குழந்தைக்கு ஊட்டுவது போல ஊட்டினுள். அந்த அன்னத்துடன் . ஸுஜாதை புத்தருக்கு மகா போதத்தையும் ஊட்டினுள்.

ஒளி கொண்டுவந்த அந்த உத்தம ஸ்வரூபத்தினிடமே அவர் உண்மையைக் கண்டார். பிரேம பூரிதமான அந்த தயை உருவம், துக்க நிவாரணத்தையே முடிவாகக் கொண்ட சத்திய சதுஷ்டயத்தை பளிச்சென்று அவருக்கு விளக்கிக் காட்டிற்று.

ஆமாம்! துக்கம் ஒரு உண்மை. அதன் காரணமான துக்கோற்பத்தியும் உண்மை; அதன் பலனுன துக்க பரம்பரையும் உண்மை. துக்க நிவாரணம் இந்தத் தொடர்பின் முடிவு. அதுவும் உண்மையாகத்தான் இருக்க வேண்டும்.

ஸுஜாதை புத்தனுக்கு அதைத்தான் விளக்கினுள்.

பிறப்பு இறப்பிலிருந்து துக்கத்தைப் பிரித்து எடுக்க முடியாது. வாழ்க்கையில் துக்கக் கலப்பற்ற ஆனந்தம் என்பது இருக்க முடியாது. எனவே உண்மையை அறிந்தவர்களுக்கு துக்க நிவாரணம் என்ற ஒரே மார்க்கம் தான் இருக்கிறது.

ஜீவகாருண்யமும் அஹிம்ஸையும் தான் புத்தன் கண்டறிந்த தத்துவத்தின் சாரம்.

ஸுஜாதை ஊட்டிய அன்னம் புத்தனுடைய சோர்வையகற்றித் தெளிவு கொடுத்தது. கண்களைத் திறந்து பார்த்தார். ஸுஜாதையைக் கண்டு ஆத்மசாந்தி பெற்ருர்.

அன்பே அவர் முன் நின்றது போல் நிம்மதி அடைந்தார். அன்பு வெற்றி அளிக்கும்; அன்பு பிறப்பின் தோல்வியை அகற்றும். அன்பு அன்னம்; அன்பு உயிர்.

சித்தார்த்தன் தவத்திலிருந்து துள்ளி எழுந்தார்; போதி சத்துவ ஸ்வரூபமாக வெளியேறினுர். அன்பென்ற அதிசய சமயத்தைப் புகட்டக் கிளம்பினுர். உலகம் ஒரு முகமாக எழுந்து அவரைப் பின் பற்றிற்று.

முற்றிலும் இந்திய மூலதனம்

முற்றிலும் இந்திய நிர்வாகம்!!

தி ஸௌத் இந்தியா
பயர் & ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி
(கோயமுத்தூர்) லிமிடெட்

தலைமை ஆபீஸ்: **ரேஸ் கோர்ஸ் ரோடு, கோயமுத்தூர்**

கிளை ஆபீஸ்: **157, பிராட்வே, மதராஸ்**

இன்றைக்கே உங்கள் **ஆயுளை** இன்ஷ்யூர் செய்துகொள்ளுங்கள்

மற்றும் **பயர் (FIRE)** இன்ஷ்யூரன்ஸும் செய்து வருகிறோம்

ஊக்கமும், நாணயமும், செல்வாக்கும் உள்ள ஏஜண்டுகள் தேவை

முழு விபரங்களுக்கு தலைமை ஆபீசுக்கு எழுதவும்.

G. வேணுகோபால், B. A.,
மானேஜர்.

தேசம் தன் வணக்கத்தை
ஹன்ஸாக்கு
தெரிவிக்கிறது

●

ஆச்சரியகரமான மதுவிலக்குக் காமிக்

பிராந்தி புட்டி

“ஜெய ஜெய பாரத
பாக்ய விதாதா!”

பிரம்மசாரியில் நடித்த நடிகர்கள்; அதைத்
தயாரித்த கம்பெனி—இதைவிட அத்
தாக்ஷி வேறு வேண்டுமா?

மீனாக்ஷி விநாயக் ஆஷலதா

முதலியோர் நடித்தது

●

புக்கிங்குகளுக்கு:

பேமஸ் பிக்சர்ஸ்,
பெங்களூர் ஸிடி

'Grams: **Famousfilm** *Phone*: 2158

" வாய் பேசா உயிரெல்லாம்
வாய் பெற்றங்து
வாதாடி வழக்கிட்ட
வாரீ தென்னத்
தாய்போலும் தயவுடைய
தரும மூர்த்தி "

—ஸ்ரீ தேசிக விநாயகம் பிள்ளை.

ஸ்ரீ அரவிந்த ஆசிரமம்

"வில்லன்"

எழுதியது

●

ஆத்ம ஞானம் பெறவேண்டி ஒருகுரு அல்லது ஆசாரியனைச் சரணடைந்து, அவருடன் வாசம்செய்யும் சீடர்களின் கூட்டமே ஆசிரமம் எனப்படுவது. இத்தகைய ஆசிரமங்கள் பண்டைப் பாரத நாட்டில் மலிந்து கிடந்தன. ஆன்மஒளிபெற்றபல முனிபுங்கவர்கள் வனாந்திரங்களில் ஆசிரமங்கள் அமைத்துக்கொண்டு, தங்களை நாடி வந்த சீடர்களை வரவேற்று, அவர்களுக்கு வாழ்க்கையின் ரகசியங்களையும், கடவுளைப் பிரத்யட்சமாகக் கண்டு உய்யும் வகையையும் போதித்து வந்தனர். இன்றும் இவ்வித ஆசிரமங்கள் ஆங்காங்கு இருந்து வருகின்றன.

சமீபத்தில் நமது நாட்டில், சிறியதும் பெரியதுமான பலவித ஆசிரமங்கள் கிளம்பி யிருக்கின்றன. சிலவற்றில் ஆசிரமவாசிகள் சதா தியானம், அல்லது தவம் செய்வதிலேயே ஈடுபட்டிருக்கின்றனர். சில யோக சாஸ்திரங்களையும், நியமங்களையும் பாடம் சொல்லி, மாணவர்களைப் பயிற்சி செய்யும் கலாசாலைகளாகவிருக்கின்றன. சில வெறும் சமயக் கூட்டமாகவோ மடமாகவோ இருக்கின்றன. இன்னும் சிலவற்றில் நூல் நூற்றல், தறிகளில் நெய்தல் முதலிய தொழில்களே பிரதானமாக நடைபெறுகின்றன. வேறு சில சன்மார்க்க வாழ்வைப் போதிப்பதுடன், கஷ்ட நிவாரணம், பஞ்ச நிவாரணம், நோயாளிகளுக்கு சிசுருஷை செய்தல் முதலிய சமூகத் தொண்டுகள் ஆற்றி வருகின்றன.

ஒரு அத்தியாத்மப் பயிற்சிக் கூடம்

ஸ்ரீ அரவிந்தரது ஆசிரமம் ஒரு தனி ரகமான ஆசிரமமாக விளங்குகிறது. அது மேற்குறித்த சில ஆசிரமங்களைப் போல ஒரு சமயக் கூட்டமோ, மடமோ, சமூக சேவை, பொருளுற்பத்தி முதலியவைகளில் ஈடுபட்டுள்ள ஸ்தாபனமோ, யோக சாஸ்திரங்களையும்,நியமங்களையும் பகட்டுடன் பாடங்கள் பிரசங்கங்கள் மூலமாகப் பயிற்சி யளிக்கும் கலாசாலையோ அல்ல. அத்தியாத்ம வாழ்வில், பரிபூரணமாக ஈடுபடுவதற்கு அந்தராத்மாவின் அழைப்பு பெற்று, ஸ்ரீ அரவிந்தரின் அத்தியாத்ம தத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட, அவரது பூரண யோக முறையைப் பின்பற்றவும், அவரது கட்டுப்பாடுகளுக் கிணங்கி, அவரது பார்வையின் கீழ் யோக சாதனையையும் யோக வாழ்வையும் நடத்தவும் உள்ளங் கொண்டு, அவரைக் குருவாகச் சரணடைந்து, அவரால் அங்கீகரிக்கப்பட்டு, ஆதரிக்கப்படும் சீடர்களின் கூட்டமே ஸ்ரீ அரவிந்தரது ஆசிரமமாகும்.

அது நாடு, சமயம், சமூகம், அரசியல், கைத்தொழில் இவை போன்ற எவ்வித நோக்கிலும் சம்பந்தப்படாத, கலப்பற்ற ஒரு யோகாசிரமமாகும். உள் ஜீவனின் வளர்ச்சி யொன்றே அதன் பிரதானக் கருத்து. உணர்வை விரிவுபடுத்திக் கொள்ளவும், கடவுள் உண்மைக்கு உள்ளத்தைத் திறக்கவும், இச்சைகளை வெல்லவும், ஒவ்வொரு மனிதனிடமும் உள்ளே மறைந்து நிற்கும் பரமனைக் கண்டு, மனிதனின் சாதாரண இயற்கையை உருமாறுதல் செய்யக்கூடிய, மனோதீதமான உபநிடதங்கள் கூறும் 'விஞ்ஞான' உணர்வை (supramental consciousness) இறங்கச்செய்து, அதைத் தன்னுள் வளர்த்து விருத்திசெய்யவும், இயற்கை அன்னையின் உயர்ந்த லட்சியமாயும், இறுதியான பரிணாமமுமான அதிமானுஷம் அல்லது தேவகுலம் இவ்வுலகில் நிரந்தரமாகச் ஸ்தாபிக்கப்படுவதற்கு வேலைசெய்யவும், அங்கு சாதகர்கள் பயிற்றப்படுகின்றனர்.

சுருங்கக் கூறின், ஸ்ரீ அரவிந்த ஆசிரமமானது ஸ்ரீ அரவிந்தரின் யோக வழியின் மூலமாக, பூரண தெய்வ வாழ்க்கையை அடைவதற்கு ஏற்பட்ட ஒரு அத்தியாத்மப் பயிற்சிக்கூடமே யாகும்.

ஆசிரமத்தின் ஆரம்பம்

ஸ்ரீ அரவிந்தர் 1908-1909-ல் அலிபுரம் சிறையில் பெற்ற யோகானுபவங்களையும், அதன் பின் அவர் செய்துவந்த யோக சாதனைகளையும் பரிபூரணப்படுத்தும்பொருட்டு, வங்காளப் பொது வாழ்வைத் துறந்து, 1910 ஏப்ரல் 4-ந்தேதி புதுச்சேரியை யடைந்தார். புதுச்சேரியில் ஏகாந்த வாசம் செய்கையில், அவரது அனுபவங்கள் மேன்மேலும் விரிந்து பூரணமடைந்தன. அது சமயம் அவரது வீட்டில், 4 அல்லது 5 சீடர்கள் அவருடன் வசித்து வந்தனர். கொஞ்ச காலத்திற்குப் பின், மற்றும் சிலர் அவரது அத்தியாத்ம மார்க்கத்தைப் பின்பற்ற வந்தனர். 1920-ல்



......ஸ்ரீ அரவிந்தர்......

......ஸ்ரீ அரவிந்தர் வசிக்கும் மாடி......

ஸ்ரீ அன்னை அவரைச் சேர்ந்த பிறகு, சீடர்களின் தொகை நாளுக்கு நாள் அதிகரிக்கவே, உன்னதமான வாழ்க்கையின் பொருட்டு சர்வத்தையும் துறந்து, அவரைச் சேர்ந்தவர்களின் சம்ரட்சணைக்காகவும், சமூகமாகச் சேர்த்து அவர்களுக்கு வழிகாட்டவும், தக்க ஏற்பாடுகள் செய்வது அவசியமாயிற்று. அதன்பொருட்டும், பொதுவாக ஸ்ரீ அரவிந்தரின் அத்தியாத்ம வேலைக்காகவும் அவருக்களிக்கப்பட்ட பணமும், அவரைச் சரணடைந்த சாதகர்கள் அவருக்கு அர்ப்பணம்செய்த சொத்துக்களும், இவ் வழியில் செலவழிக்கப்படலாயின. அவ்வப்போது ஏற்பட்ட தேவைக்குத் தக்கபடி சில வீடுகள் விலைக்கும் குடிக்கூலிக்கும் எடுக்கப்பட்டன.

அவ்வீடுகளை ஒழுங்காகவைத்துக்கொள்ளவும் பழுது பார்க்கவும் சுகாதார வாழ்க்கை நடத்தவும், நாட்டின் பல பாகங்களிலிருந்தும், பல வெளிநாடுகளிலிருந்தும் வந்தவரும், பல்வேறு அந்தஸ்து நிலைமைகளிலிருந்தவருமான சாதகர்களை ஒன்றுசேர்த்து, வழிநடத்தவும், நாளடைவில் பல திட்டங்கள் வகுக்கப்பட்டன. முன்னேற்பாடும், குறித்த ஆரம்பமுமின்றி இவ்வண்ணம் நாளடைவில் அவரைச் சுற்றி வளர்ந்த ஆசிரமத்தின் ஆரம்பம் இதுவேயாகும்.

சாதகர்களின் கூட்டம்

இன்று ஸ்ரீ அரவிந்தரது யோகத்தைத் தங்களது ஜீவிய வேலையாக எடுத்துக்கொண்டு, சாசுவதமாக ஆசிரமத்தில் தங்கி சாதனை செய்பவர்கள், ஆண் பெண் பாலர்கள் உள்பட, சற்றேறக்குறைய 200 பேர்கள் இருக்கின்றனர். இவர்களிற் பெரும்பாலோர் வங்காளத்திலிருந்தும், குஜராத்திலிருந்தும் வந்தவர்கள். சுமார் இருபது தமிழர்களும் பத்து ஆந்திரர்களுமிருக்கின்றனர். மற்றவர்கள் பீகார், ஐக்கிய மாகாணம், பாஞ்சாலம், ஹைதராபாத், கன்னடம் முதலிய பிராந்தியங்களிலிருந்து வந்தவர்கள்.

ஐரோப்பியர் சிலரும் இருக்கின்றனர். மேலும் இந்நாட்டிலிருந்தும், வெளி நாடுகளிலிருந்தும் பலர் முன்னதாக அனுமதி பெற்று, சிலமாதங்கள் ஆசிரமத்தில் தங்கி சாதனை செய்வோரும், ஸ்ரீ அரவிந்தரின் பக்தர்கள் பலர் அனுமதி பெற்று, வருஷம் மும்முறை அவர் தரிசனமளிக்கும் நாட்களில் வந்து, தரிசனம் செய்துவிட்டுச் செல்வோருமுண்டு.

சாதனை முறை

ஸ்ரீ அரவிந்தரின் யோகம் வேதாந்தத்தையே அடிப்படையாகக் கொண்டிருப்பதால், பண்டை யோக முறைகளிலுள்ள முக்கியமான அம்சங்க ளெல்லாம்

......ஆசிரம வீடுகளில் ஒன்று......

சாதகர்களின் பரிபூரண அனுபவத்திற்காக, அவரவர்களின் இயல்புக்குத் தக்கபடி கையாளப்படுகின்றன. ஆனால் உள்ளொளியைப் பெருக்குவதின் பொருட்டு, ஊனை வாட்டி உருக்குவது போன்ற கடினமான புறத்துறவு இங்கு கையாளப்படுவதில்லை.

ஸ்ரீ அரவிந்தரது யோகசாதனைக்கு மன உபதேசங்களோ, குறிப்பிட்ட நியமம், நிஷ்டை, மந்திரங்களோ யாதொன்றும் அவசியமில்லை. உண்மையான சம்பூரணமான சமர்ப்பணமே முதன்மையாக வேண்டுவது. சிறிது பெரிது என்பதின்றி ஒவ்வொரு கருமமும், ஒவ்வொரு எண்ணமும், ஒவ்வொரு இச்சையும், ஒவ்வொரு உணர்ச்சியும், எல்லாவற்றையும் ஒவ்வொரு நிமிஷமும் கடவுளுக்கே அர்ப்பணம் செய்துவிட வேண்டும்.

சாதகர்களின் சரண் உண்மையாகவும், பரிபூரணமாகவும், ஒளிவுமறைவின்றியும், பலனை எதிர்பார்க்காமலும் செய்யப்பட வேண்டும். கடவுள் தேட்டமும், உள்ளுக்குள்ளே சதா எரிந்து கொண்டிருக்கும் தெய்வ ஆர்வமும், ஏகாக்கிர சிந்தையும் மிகவும் அவசியம். தெய்வ சக்தியின் சாநித்தியத்திற்கும், அவள் சாதகர்களது ஆதாரத்தில் இறங்கி, அவர்களை வழி நடத்திச் செல்லுவதற்கும், அவர்கள் தங்களது உள்ளத்தைத் திறந்து வைத்துக் கொண்டு, அவளது அருளைநாடி இடைவிடாமல் அழைக்க வேண்டும்.

கடவுளை நோக்கிச் செல்லும் இயக்கங்களைத் தவிர, மற்ற எந்த இயக்கங்களுக்கும் உள்ளத்தில் இடங்கொடுக்காமல், உஷாராகவிருக்கவேண்டும். மன அமைதியுடனிருந்து, உள்ளுக்குள்ளே உள்ள சைத்திய புருஷனை (Psychic being)க் கண்டுபிடித்து, அதையே முன்னுக்குக் கொண்டு வந்து, மனம் உயிர் உடல் எல்லாமும், ஜீவனின் ஒவ்வொரு பாகமும் அதன் பரிபூரண ஆதிக்கத்திற்கு இணங்கும்படி செய்ய வேண்டும். கடவுளிடத்திலும் குருவினிடத்திலும் யோகத்திலும் பரிபூரண நம்பிக்கை கொண்டு, என்றும் தளராத ஆர்வத்தை மேன்மேலும் எழுப்பிக் கொண்டு கடவுளுணர்வை மேன்மேலும் எழுப்பிக் கொண்டே போகவேண்டும்.

இச்சாதனை நடக்க நடக்க, உள்ள மலர்ச்சியும், ஆன்ம அனுபவமும் அன்னையின் அருளும் தவறாமல் ஏற்படுகின்றன. இவையேற்பட யேற்பட "விஞ்ஞான" சக்தியும் (Supramental Force) கீழிறங்கி வந்து, ஜட உடல் உட்பட ஜீவனின் எல்லா பாகங்களையும் உருமாற்றி கடவுள் மயமாக்குகிறது. இந்த யோக சாதனையில் இவ்வுரு மாறுதலே மிகவும் பிரதானம். மேலும் பரிபூரண அமைதியும் சாந்தமும் மிகவும் அவசியம். பக்தி பரவசத்தை வெளிப்படக் காட்டும் குதித்தல், கூக்குரல், அழுகை, சிரிப்பு, ஆட்டம் முதலியவைகளுக்கு இச்சாதனையில் இடமில்லை.



......ஸ்ரீ அரவிந்தர் வாசம் செய்யும் வீடு......

சாதகர்கள் குறித்த காலங்களில், ஸ்ரீ அன்னையைத் தரிசித்து, அவர் நடத்தும் தியானங்களில் கலந்துகொண்டு, அவரை வணங்கி அருள் பெறுகின்றனர். ஆனால் அவர்கள் ஸ்ரீ அரவிந்தரை, வருஷத்தில், ஸ்ரீ அன்னை பிறந்த நாள் (பிப்ரவரி 21), ஸ்ரீ அரவிந்தர் பிறந்த நாள் (ஆகஸ்டு 15), ஸ்ரீ அரவிந்தர் தமது அத்தியாத்ம வாழ்வில் ஒரு மகானுபவத்தை யடைந்த நாள் (நவம்பர் 24), இம்மூன்று தினங்களில் தான் நேரே தரிசித்து, அவரது அருளைப் பெற முடியும். ஆயினும் சாதனை விஷயமாகவும், அத்தியாத்ம விஷயமாகவும், சாதகர்கள் விடும் வினாக்களுக்கு அவர் கடித மூலமாக விடையளிப்பதுண்டு. இவ்வண்ணம் அவர் அளித்த விடைகளினுடையவும், அவ்வப்போது செய்து வந்த உபதேசங்களினுடையவும் முக்கிய பாகங்கள், 'ஸ்ரீ அன்னை', 'இவ்வுலகின் புதிர்', 'யோகச் சுடரொளி', 'யோக ஆதாரங்கள்' என்னும் நூல்களில் வெளிவந்துள்ளன.

ஆசிரமத்தில் ஜாதி மதம் முதலிய வித்தியாசங்கள் கிடையாது. சாதகர்கள் பல ஜாதி, மதம், நாடுகளிலிருந்து வருகின்றனர். ஆசிரமத்தைச் சேர்ந்தவுடன் அவர்கள் எல்லோருக்கும் ஸ்ரீ அரவிந்தரின் சீடர்கள் என்ற ஒரே பதவிதான் உண்டு. ஆசிரமத்தில் குடும்ப வாழ்க்கையோ, காம இச்சைகளை வளர்க்கக்கூடிய உறவோ, சம்பந்தமோ கிடையாது. சாதகர்களின் எல்லா சம்பந்தங்களும் ஸ்ரீ அரவிந்தருடையவும் ஸ்ரீ அன்னையுடையவும் மூலமாகவே ஏற்படுகின்றன.

...... ஆசிரம வீடுகள் — ஒரு தோற்றம்......

சாதகர்களது உடல் நலம், அத்தியாத்ம நலம், முதலிய எல்லாவற்றிற்கும் ஸ்ரீ அரவிந்தரும் ஸ்ரீ அன்னையும் முழுப் பொறுப்பேற்றுக்கொண்டு, அவர்களது உட்புற நிலைகளுக்கும் தேவைகளுக்கும் ஆத்ம வளர்ச்சிக்கும் ஏற்ப, அவரவர்களைப் பல்வேறு வழிகளில் நடத்தி வருகின்றனர்.

ஆசிரமப் பணிகள்

ஆசிரமவாசிகள் ஒவ்வொருவருக்கும் ஸ்ரீ அன்னையால் குறிப்பிடப்பட்ட ஒரு 'பணியுண்டு. அதை அவர்கள் நிலைமைக்குத் தக்கபடி, சேர்ந்தோ தனித்தனியாகவோ செய்கின்றனர். சிலர் மடைப்பள்ளி, போஜன சாலை முதலியவை சம்பந்தமான வேலைகளைச் செய்கின்றனர். சிலர் தோட்டங்களைப் பயிர் செய்கின்றனர். இன்னும் சிலர் கட்டட வேலைகள், வேலைக்காரர்களைக் கண்காணித்தல் முதலியனவும், ஆசிரமத்தின் பொது வாழ்வுக்குரிய பலவிதமான வேலைகளையும் செய்கின்றனர். வேறு சிலர் சித்திரம், சங்கீதம், பூத்தையல் முதலிய நுண் கலைகளில் கவனஞ் செலுத்துகின்றனர். மேலும் சாதகர்கள் ஓய்வு நேரங்களில் கலை, இலக்கியம், சாஸ்திரம் முதலிய நூல்களைப் படிப்பதிலும் மொழிகளைக் கற்பதிலும் ஈடுபடுகின்றனர்.

வாழ்க்கையைத் தெய்வ வாழ்க்கை யாக்கல்

இவ் வாசிரமத்தில், வாழ்க்கையானது ஒரு உத்கிருஷ்டமான கலையாகப் பயிலப்படுகின்றது. இங்கு வாழ்வை யெல்லாம் கடவுளது அழகு, இசை, சம்பூரணம், தூய்மை, வலிமை முதலியன நிரம்பியதாக ஆக்கவும், உன்னதமான "விஞ்ஞான" உண்மையையும், உணர்வையும் முதலில் சிலரிடத்திலாவது நிலைக்கச் செய்து, உலகம் உய்வதற்கு வழிகாட்டவும், பெரியதொரு முயற்சி செய்யப்பட்டு வருகிறது.

......ஆசிரம ஆஸ்பத்திரி......

ஸ்ரீபாதமலை

கே. சபாநாதன்

எழுதியது

கொழும்பு கோட்டை ஸ்டேஷனிலிருந்து, இரவு பத்து மணியளவில் புறப்படும் ரயில்வண்டி யொன்றில், நானும் என்னுடைய நண்பர் சிலரும் ஏறினோம். அன்று வண்டியில் நிற்பதற்கே இடமின்றி ஆண்களும் பெண்களும், முதியோரும் இளைஞரும், குழந்தைகளும் குட்டிகளுமாகப் பல சிங்களவர் வந்து, எங்கள் பெட்டியில் ஏறிவிட்டார்கள். மூச்சு விடுவதே கஷ்டமாயிருந்தது. வண்டி எப்பொழுது புறப்படும் என்று எதிர்பார்த்த வண்ணமிருந்தோம். வண்டி புறப்படத் தொடங்கியதும் அதற்குள் இருந்தவர்கள் ஒருமித்து "சாது! சாது!!" என்று பெருங் கூக்குரலிட்டார்கள்.

"நீங்கள் எங்கே செல்கின்றீர்கள் ?" எனப்பக்கத்திலிருந்த சிங்களவர் ஒருவரைக் கேட்டேன்.

"ஸ்ரீபாதத்தைத் தரிசிக்க வேண்டுமென்று எழு வருடங்களாக எடுத்த பிரயாணம், இம்முறைதான் புத்தர் பெருமானுடைய அனுகிரகத்தால் பூர்த்தியாயிற்று. சாது! சாது!!" என்று கைகளைத் தலைமேற் குவித்து, கண்கள் நுண் துளியரும்பக்குறித்ததோர் திசையை நோக்கிக் கும்பிட்டார். புத்த நாமங்களை யுச்சரிப்பதிலும், வழி நடைக் கீதங்களைப் பாடுவதிலும், இராப் பொழுதினைப் பத்தி நெறியிற் கழித்தார்கள். நாங்களும் நித்திரையின்றிச் சிவராத்திரியாகக் கழித்தோம்.

வைகறையில் தினகரன் குண திசையில் உதயமாகுதற்குச் சிறிது முன்பாக, அடி வானம் வெள்ளை வெளேரென வெளுத்திருந்தது. அத்தகைய மங்கலான ஒளியில் முகிற் கூட்டங்களுக் கூடாக,

"அளக்கலாகா வளவும் பொருளும்
துளக்கலாகா நிலையுந் தோற்றமும்,
வளந்தரும் வண்மை"

யுடைய மலை யொன்று வானளாவி, ஏனைய மலைகளினின்றும் தான் எவ்வகையாலும் உயர்வுடைத்தாகக் கருதி, தினகரனை இரத்தினத் தீவத்தில் வரவேற்குங் கடமை தனக்கே யுரியதாதலின், முன்னின்று முகமன் காட்டி நின்றது. அன்றியும், புத்தருடைய பாதப் படிமை அமைக்கப்பெற்ற உச்சி இம்மலைக்கே யுரித்தாதலின், பொழுது நாட்டிற் புகுமுன், தினகரனும், புன்முறுவல் பூத்த முகத்துடன் தன், கிரணங்களாகிய கைகளால், இம்மலையினை வணங்கியபின்னரே இத்தீவிற்குள் நுழைவது வழக்கம்போலும். இம்மலையின் தோற்றத்தை வண்டியிலிருந்து கண்ட மக்கள் "சாது சாது" எனக் கூறிக் கும்பிட்டார்கள்.

இம்மலையை ஏறிப்பார்த்தற்கு ஹட்டன் வழியாகவும் இரத்தினபுரி வழியாகவும் செல்லலாம். மலையின் உச்சியினை யடைவதற்கும், எளிதாக ஏறுவதற்கும், பங்குனி சித்திரை மாதங்களே சிறந்தன. இம்மலையடிவாரத்திலுள்ள வழி அத்துணைத் துன்பம் பயப்ப தொன்றன்று. ஆனால் மலை யுச்சிக்கு ஏறிச் செல்லச் செல்ல, பாதை

மிகவும் செங்குத்தாயிருத்தலின், மக்கள் பிடித்துக் கொண்டு ஏறிச் செல்வதற்கென, இருப்புக்கம்பிகள் இரு பக்கத்தும் போடப்பட்டிருக்கின்றன. பல தேயங்களிலிருந்தும் பௌத்தர்கள், முஸ்லீம்கள், இந்துக்கள் முதலாய பல மதத்தினரும், திரள் திரளாக ஆண்டுதோறும் வந்து தரிசிப்பார்கள்.

சமந்தம், சமந்தகூடம், சமனொளி, சமன்ல, சிவனொளி பாதமாலை, பாபா ஆதமலை முதலிய பல பெயர்கள் இம்மலைக்குண்டு. இஃது ஆங்கிலத்தில் 'Adam's Peak' எனப் பெயர் பெறும். சிங்கள சரித்திர நூலாகிய மகா வம்சத்தில், தெய்வங்களுள் தலைமை வாய்ந்த சுமன கூடத்து மகாசுமனன், வணங்குவதற்குரிய பொருளொன்றை ஈந்தருளும்படி, புத்தர் பெருமானிடம் கேட்டானெனக் கூறப்பட்டிருக்கின்றது. 'சுமன ஆலய' எனுஞ் சொல், சிங்கள மொழியில், சமனலய வென்றாகி, பின்னர் 'சமனல' வென மருவி வழங்கப்படுகின்றது. தேவர்களுட் சிறந்த 'சுமன' என்பவர் இம்மலையில் வீற்றிருந்து, யாத்திரிகர்களுக்கு இடையூறு வராமற் காப்பாற்றி வருகின்றாரெனவும், புத்தர் பெருமானின் உபதேசம் பெற்றுய்ந்த சாரணர்களுள் தலை சிறந்தவர் இவரே யெனவும், பௌத்தர்கள் நம்புகின்றார்கள். மக்களேயன்றித் தேவர்களும் வணங்கும் பெருமை வாய்ந்த, திருவடிச் சுவட்டினையுடைய மலையென, யாவரும் நம்புமாறு எழுந்த கதையெனக் கருதற்கிடமுண்டு.

இனிச் சமன் என்பது லக்ஷ்மணனைக் குறிக்குமெனவும், இவன் இராமபிரானுடன் திரும்பிச் செல்லாது, தன் உடன் பிறந்தானெனக் கருதிய விபீஷணனுடன் இலங்கையிலிருந்து, ஒரு பகுதியை நீதி நெறி தவறாது ஆண்டு வந்தானெனவும், இவன் அரசாட்சிக் குள்ளிருந்த மலை இவன் பெயரால வழங்கப்பட்டு வந்த தெனவும், இவன் இறந்த பின், இவனை ஓர் தெய்வமாக, இரத்தின புரியிலிருந்து இரண்டு மைல் தூரத்திலுள்ள "சமன் தெய்யோ" கோவிலிலும், சமந்த கூடத்திலுள்ள சமன் ஆலயத்திலும், சிங்களவர் வழிபட்டு வருகின்றார்களெனவும் சிலர் கருதுகின்றனர்.

பௌத்தர்கட்குச் சிறுதெய்வ வழிபாடு இல்லையெனினும், இலங்கையிலுள்ள பௌத்தர்கள் தமிழ் கடவுளரை வணங்குவது வழக்கம்.

இன்னும் 'சமனல' எனுஞ் சிங்களச் சொல், வண்ணாத்திப் பூச்சி யெனவும் பொருள்படும். ஆண்டு தோறும் குறித்ததோர் காலத்தில், பல திசைகளிலிருந்தும், இம்மலையை நோக்கி வண்ணாத்திப் பூச்சிகள் ஏராளமாகச் செல்வது வழக்கம். இக்கருத்தும் நினைவு கூர்தற் பாலதாம். சமந்த கூடபர்வதம் என்பதற்குச் சிகரங்களாற் சூழப்பட்ட சிகரம் எனப் பொருள் கூறுவர் சிலர்.

இம்மலையின் உச்சிமீ மிசை அறவியங்கிழவோன் அடியினைப் படிமைகளிருத்தலின், இம்மலை, கடவுட் பத்தியுடையா ருள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் ஆற்றல் வாய்ந்துளதென்பதற் கையமின்று. கௌதம புத்தருடைய திருவடிச் சுவடு பதிந்த விலையுயர்ந்த நீல ரத்தினம் ஒன்று, இம்மலையுச்சியில் பதிக்கப்பட்டிருக்கின்றதெனவும், கௌதம புத்தருக்கு முன்னிருந்த மூன்று புத்தர்களும் தத்தம் பாதச் சுவட்டினை இக்கல்லின்மேல் பொறித்துள்ளார்களெனவும், இனிவரும் கடைசிப் புத்தரும் இக்கல்லின் மேல் தமது பாதச் சுவட்டைப் பதிப்பாரெனவும் ஐதிகமுண்டு. மலைமீ மிசை அடைப்புக்குள் உள்ள ஒரு பெருங் கற்பாறையானது, பாதச் சுவடுகள் பதிந்த நீல ரத்தினத்தைப் பாதுகாத்தற்காக, அதனை உள்ளே வைத்து, அதன்மேற் சிமேந்தினாற் கட்டப்பட்ட தொன்றாகும். உச்சியிற் காணப்படும் சித்திரவேலையற்ற மிகப் பெரிய திருவடி உருவம், அதன்கீழ் மிகுந்த கவனத்துடன் வைத்துப் பாதுகாக்கப்

பட்டுவரும் நீல ரத்தினத்தை நினைவூட்டற்கு, சுண்ணக் கல்லிற் செதுக்கப்பட்டுள்ளது.

பௌத்தர்களுக்குள் இம்மலை வணக்கம் எப்பொழுது தொடங்கிற்றென, இற்றை ஞான்று துணிந்து கூற முடியவில்லை. துட்ட கைமுனு காலத்திலேயே, இம்மலையில் பௌத்த குருமார் இருந்தனரென, இவ்வரசனுடைய வரலாற்றைக் கூறும் மகாவம்சத்தில் குறிப்பாலுணரக் கிடக்கின்றது. எனினும், அக்காலத்தில் இம்மலை ஓர் யாத்திரைத் தலமாகவேனும், இங்குள்ள பாதச்சுவடு தொழுதற்குறிய தொன்றாகவேனும் கருதப்பட்டு வந்த குறிப்புக்களில்லை.

கி. மு. 104-ல் சிங்காசனமேறிய வலகம்பாகு எனும் அரசன், ஐந்துமாத ஆட்சியின் பின்னர், தமிழரால் துரத்தப்பட்டு மலை நாட்டிற்குள் ஓடியொளித்தான். அங்ஙனமிருக்கும் பொழுது, ஒரு நாள், ஒரு மாய மானைக் கண்டு துரத்திச் சென்றான். அது மலையுச்சிக்குச் சென்று மாயமாய் மறைய, அவ்விடத்தில் ஸ்ரீ பாதத்தை அரசன் கண்டான். பின் அதைச் சூழ இரும்புத் தூண்களை நிறுத்திக் கட்டுவித்தான்.

கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகக் கருதப்படும் சீத்தலைச் சாத்தனாரும், இம்மலையின் சிறப்பினைக் குறிப்பிட்டிருக்கின்றார். அதனையும் எடுத்துக் காட்டுவாம். மணிமேகலை யென்பவள் பௌத்த சமயப் பிக்குணியாகிய தீவதிலகையைக் கண்டு "பூங்கொடியன்னாய்! யார் நீ" என்று வினவ, அப்பிக்குணி விடையிறுக்கு முகத்தான், இம்மலையின்பெருமையினையும் குறிப்பிட்டிருக்கின்றார்.

"ஈங்கித னயலகத் திரத்தின தீவத்
தோங்குயர் சமந்தத் துச்சி மீமிசை
யறவியங் கிழவோ னடியிணை
யாகிய
பிறவி—யென்னும் பெருங்கடல்
விடூஉ
மறவி நாவா யாங்குள தாதலிற்
றொழுது வலங் கொண்டு வந்தே
னீங்குப"

(மணிமேகலை—
பாத்திரம் பெற்ற காதை)

கி. பி. 1153-ல் முதலாம் பராக்கிரமவாகு இம்மலைக்கு நடந்து சென்று, சமன் தேவாலயத்தையும் கட்டுவித்தான் என 'இராசாவழி' கூறும். சில அரசர்கள், இம்மலைக்கு யாத்திரை செய்யும் தொண்டர்களின் செலவுக்காக, சில கிராமங்களையே தர்ம சாதனஞ் செய்திருந்தார்கள். சிலர் யாத்திரை செய்வோரின் வசதிக்காகச் சத்திரம், சாவடி, அம்பலம் முதலியவற்றை யமைத்தார்கள்.

இனிச் சைவர்கள் இம்மலையினைச் சிவனொளி பாதமலையெனக் கொண்டு, சிவபெருமானுடைய திருவடி பதிந்த பெருமைவாய்ந்த தலமெனப் போற்றுகின்றார்கள். சமன், இலங்கா தீவத்திற்குச் சிறப்பாகவுரிய குறிஞ்சி நிலத் தெய்வமெனவும், அவனுடைய ஒளி காலும் மலை 'சமனொளி' யாயிற்றெனத் தமிழ்ப் பண்டிதரொருவர் குறிப்பிட்டார். இஃது அததுணைப் பொருத்தமுடையதாகத் தெரியவில்லை. சமனொளியைச் சைவர்கள் எளிதில் சிவனொளியாக்கிவிட்டார்கள் போலும். "வாலறிவன் நற்றாள், மலர்மிசை யேகினான் மாணடி வேண்டுதல் வேண்டாமை யிலானடி" எனத் திருவள்ளுவ நாயனாரும் திருவடியைப் புகழ்ந்திருக்கின்றார். சைவ நூல்களில் திருவடியினுண்மைப் பொருளை விளக்கு முறைகள் பலவுள. எனினும் பாத பீடிகை வணக்கம் சைவர்கட்குடன்பாடன்றெனவே கருதுகின்றேன். அன்றியும் இம்மலையைப்பற்றி தமிழ்ப் புராணங்களும் மௌனஞ் சாதிக்கின்றன.

பல வருடங்களாக இம்மலையின் பாதுகாப்பு, தமிழ் ஆண்டிகளிடம் இருந்ததென்பதைச் சிங்கள சரித்திரம் குறிப்பிடுகின்றது. இராசசிங்கன் பௌத்த குருமார்கள் யாவரையும் இம்மலையினின்றும் துரத்திவிட்டு, சைவ ஆண்டிகளை அமர்த்தினான்.

இனிக் கிறிஸ்தவர்கள் ஏதன் தோட்டத்தினின்றும் துரத்தப்பட்ட ஆதாம், பாவ மன்னிப்புப் பெறும்பொருட்டு, இம்மலையுச்சியில் ஒற்றைக் காலில் நின்று தவஞ் செய்தாரெனவும், அவருடைய திருவடிச் சுவடே அங்குள்ளதெனவும் கூறுகின்றார்கள். ஆனால் இங்ஙனம் கோடற்கு, அவர்களுடைய நூல்களில் தக்க ஆதாரம் உண்டோவென ஐயுறுகின்றேன். சில முஸ்லீம்கள் இத்திருவடிச்சுவடு ஆதம் என்பவருடையதெனவும், முதன் முதலாக இம்மலை வணக்கத்தைத் தாங்களே தொடங்கினார்களெனவும், இதனால்இம்மலை பாபா ஆதமலை யெனப் பெயர் பெற்றதெனவும் குறிப்பிடுகின்றார்கள்.

இங்ஙனம் எல்லாச் சமயத்தவரும் இம்மலையைத் தத்தம் சமயத்திற்கிழுத்துக்கொள்ள முயல்கின்றார்கள். எனினும் இவற்றாற் சிறிதளவேனும் நிலை குலையாது, ஒரே தன்மைத்தாய் வானளாவி உயர்ந்து நின்று, எல்லாச் சமயத்தார்களையும் தன்கைத்தே யிழுக்கும் ஆற்றலொடு விளங்குகின்றது. இம்மலை யுச்சியிலுள்ள பாதச் சுவட்டினைக் காண்பதற்கு, மலையடிவாரத்திலிருந்து பல படிகளைக்கடந்து செல்வதையொப்ப, இறைவன் திருவடி நீழலை யடைவதற்கு அமைந்த படிகளே பல சமயங்களாகும். என் தெய்வம் உன் தெய்வம் என்று சமயவாதஞ் செய்வதில் காலத்தை வீணே கழிக்காமல், எல்லாச் சமயத்திற்கும் அதீதராய்க் கடவுள் ஒருவர் இருக்கின்றார், எனும் சமரச நன்னிலையைப் போதித்து நிற்பது ஸ்ரீ பாதமலை யொன்றேயன்றோ?

லோத்ரா

ஸ்திரீகளின் வரப்பிரஸாதம்

ஸ்திரீகளுக்கு ஏற்படும் கோளாறுகளுக்கு சிறந்த நிவாரணி

பெண்மணிகள் ஆரோக்யத்தையும் சந்தோஷத்தையும் அபிவிருத்தி செய்யும் உன்னத டானிக்

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்

தயாரிப்பவர்கள் :

கேசரி குடீரம், மதராஸ்

கிரஹத்தை அழகுபடுத்தக் கூடியதும் பார்ப்பவர்களுக்கு பிரமிப்பும், ஆனந்தமும் அளிக்கக்கூடிய, பல வர்ணமுள்ள மிருகப் படங்களும், நல்ல அழகிய "பேபி" முதலிய வசீகரமான படங்களும், காட்சிப் படங்களும்—

டீபாய் மேஜை கண்ணாடி பிரோக்களில் அலங்கிர்தமாய் வைக்கக்கூடிய (Brass or Nickle flower vases) பூ பாத்திரங்களும்—

காதிலும் கழுத்திலும் அணியக்கூடிய "ரோல்ட் கோல்ட்" வெள்ளி மாலைகளும், லோலாக்குகளும்—

ஸாரி புடவைகளில் வைத்துத் தைக்கக்கூடிய வித விதமான உயர்ந்த விலையுள்ள அழகிய "ஸாரி பாடர்களும்" ("Saree Borders")

எங்கவிடம் கிடைக்கும்

எங்கள் காட்சி சாலையைப் பார்த்தால் உண்மை விளங்கும்

THOMAS RODRIGO & SONS

165, BROADWAY (opp. Loane Square)

Post Box 1209 Phone: **3834** Tel.: **RELIGART**

MADRAS G. T.



வண்டி மாடுகளின் விண்ணப்பம்

"தேவிதாஸன்"

நாட்டில் பிறந்த பெரியோரே—பல
நாளும் சாத்திரம் கற்பவரே
கேட்டு எம்குறை தீருமையா—நாளும்
கேட்டுக்க ளெம்மை யாக்கா மலே.

வேதன் படைக்க நீரும்வந்தீர்—அந்த
வேதன் படைக்கவே நாங்கள் வந்தோம்
வாதேது நீதியில் உண்டோவையா—எம்மை
வருத்தப் படுத்தலும் ஏனோ வையா ?

ஆவி புலவிடும் நாள்வரையில்—நாம்
ஆடியும் பாடியும் திரிவோ மையா
ஆவி யகன்றிடின் ஆவதென்ன ?—சற்று
ஆழ்ந்திதை நீரும் அறியு மையா.

மூக்கைக் குத்திக் குடைந்ததிலே—நைந்த
முறுக்கிய கயிற்றை மாட்டு கின்றீர்
நோக்கம்போ லெம்மை நடத்திடவே—நீர்
நுட்பமாகக் கண்ட முறையோ யிது ?

காலிலே லாடங்கள் தைப்பதுமேன்—எம்மைக்
கண்டபடி ஓட்டி யலைப்பதற் கோ !
சாலவே வேதனை நாங்கள் பெறல்—நீதி
சாத்திரங் கா ணுமிந்தச் சரியோ ?

தட்டு வண்டி யென்று சொல்லுகின்றீர்—அதில்
தளுக்காக யெம்மையும் மாட்டு கின்றீர்
முட்டி யடித்தெழு புயலினைப்போல்—எம்மை
முடுக்கிநீர் களிப்பும் கொள்ளு கின்றீர்.

வீடுகள் கட்டிட வேண்டிடினோ—எமக்கு
வேலைகள் பற்பல விதித் திடுவீர்
நாடி யதிலோர் பேரதிருக்க—நீங்கள்
நல்குவீரோ எமக் குரிமை ஐயா !

பண்டங்கள் சுமந்து வந்திடுவோம்—அவை
பார்க்கவு மெமக்கிலை உரிமை ஐயா
கொண்டுபோய் இல்லுள்ளே கொட்டிடுவீர்—சிறு
கூறுமெமக் கவற்றில் இல்லா மலே.

பத்துப் பனிரண்டு பேரமர்வீர்—எம்மைப்
பாய்ந்து பாய்ந்துமே ஓடச் செய்வீர்
மெத்தப் பல்வரி காட்டிடுவீர்—இன்னும்
மேலே மேலே யென் றோட்டிடுவீர்.

பசிக்கும் வேளையில் உணவுமுண்டோ—தாகம்
பற்றிடுங் காலையில் நீரு முண்டோ
கசிந்து கண்கள் கலங்கிடினும்—நீர்
கருணை வைப்பதும் உண்டோ வையா!

ஆயிரம் மூட்டைகள் அமர்த்திடுவீர்—எம்மை
அயரா திழுத்திடச் செய் திடுவீர்
தாயில்லாப் பிள்ளைகள் போலவையா—நீர்
தந்திடும் பணிகட்கு முந்து கின்றோம்.

ஆற்றின் குறுக்கெம்மை ஓட்டுகின்றீர்—வண்டி
ஆரக்கால் மணலினில் புதைந்து கொண்டால்
தாற்றுக்கோல் கொண்டெம்மைக் குத்துகின்றீர்—மேலும்
தப்புதண் டாக்களும் பேசு கின்றீர்.

இழுத்துச் சென்றிட வியலாமலே—வழி
இடறி விழுந்து படுத்து விட்டால்
தழும்பு பிறந்திடத் தாக்குகின்றீர்—தீய
தந்திர மும்பல இயற்று கின்றீர்.

வண்டிக்கு வண்டி போட்டியிட்டு—எங்கள்
வாலையுங் கடித்து முடுக்கு கின்றீர்
முண்டியும் மூச்சை யடக்கியுமே—நாங்கள்
முன்வண்டி முன்னே செல்லா விட்டால்

சண்டித்தனம் நாங்கள் செய்து விட்டோம்—என்று
சாடுகின்றீர் கைகள் சலிக்கு மட்டும்
உண்டோ இலையோ இரக்கமையா—உங்கள்
உள்ளத்தே சற்றெமக் குரையு மையா.

கட்டுத் தளர்ந்திடும் நாள்வரையில்—எம்மிடம்
கருது கின்றீர் நல்ல பணிகளையா
கட்டுத் தளர்ந்தபின் நீரெமக்குச்—செய்யும்
கைமா றெண்ணிற் கும்பி பற்றுதையா.

கடுகத் தனையும் நன்றியின்றி—எம்மைக்
கறியாக்கிக் கொள்ளும் கயவரிடம்
விடுத்துப் பணமும் பெற்றிடுவீர்—எங்கள்
விம்மலும் வீணாகப் போமோ ஐயா.

வெற்றி யாருக்கு?

தி. நா. சுப்பிரமணியன்

"சக்காவர்த்தி அவர்கள் முகம் என்னவோ போலிருக்கிறதே. ஏன்?"

"அதெல்லாம் ஒன்றுமில்லை"

"இல்லை. முகத்தில் முன்னிருந்த பொலிவு காணப்படவில்லை."

"இப்பொழுது தான் படுக்கையினின்றும் எழுந்தேன். இன்னும் முகம் கழுவி உடம்பு குளிக்கவில்லை. அதனால் ஏதாவது அப்படித் தோன்றலாம்."

"சக்கரவர்த்தி அவர்கள் என்னை மன்னிக்க வேண்டும். நான் தங்களுடன் சென்ற ஆறு மாத காலமாகப் பழகிவருகிறேன். பல சமயங்களில் அகால வேளைகளிலும் தங்களுடன் தங்கி இருக்கிறேன். ஆயினும் தங்களை இப்படிப் பார்த்ததில்லை."

"ஏன், நான் எப்படி இருக்கிறேன்? எப்பொழுதும் போலத்தானே."

"இல்லை, தங்கள் முகம் முன்போலச் சிவப்பாக இல்லை. வெளுத்திருக்கிறது."

"இயற்கையின் வேறுபாடுதான். இந்து தேசத்தில் சூரியன் உக்கிரகமாகக் கொளுத்திவந்தான். அதற்குப் பழக்கப்படாத என போன்றவர்களுக்கு, அது தாங்கவில்லை. இயற்கையாகவே சிவந்த உடம்பு, வெய்யில் தாங்காமல் கோவைப் பழம்போலச் சிவந்து விட்டது. இந்து தேசத்தை விட்டு மலைப் பிரதேசத்திற்கு வந்து விட்டோம். பாரசீகத்துள் நுழையப் போகிறோம். மலைச் சிகரங்களுக்கிடையில் வீசும் குளிர்ந்த காற்று உடம்பில் பட்டு, ஓர் இன்பத்தை உண்டாக்கி வருகின்றது. அதனால் அந்தச்சிவப்பு மாறி வருகிறது. இதுதானே. என்னவோ பிரமாதப் படுத்துகிறாயே?"

"வைத்தியத் தொழிலை நான் இன்று நேற்று செய்பவனல்ல. எங்கள் வமிசத்தவர்கள் தலைமுறை தலைமுறையாக வைத்தியம் செய்பவர்களே. எனக்கு இப்பொழுது அறுபது வயதாகிறது. சென்ற நாற்பது வருஷங்களாக நானும் வைத்தியம் செய்து வருகிறேன். ஒருவர் முகத்தைப் பார்த்தே, அவருக்கு வைத்தியம் செய்வதில் நாங்கள் பெயர் பெற்றவர்கள் என்பதை நீங்களும் அறிவீர்கள்."

"சரி அப்படியானல் நீதான் சொல், எனக்கு என்ன செய்கிறது என்று. என்னை ஏன் கேட்கிறாய்?"

"உங்கள் கண்ணில் ஒரு சுழல் தோன்றுகிறது. அதைச்சுற்றிலும் சிறு கோடுகளும் காணப்படுகின்றன. ராத்திரி நீங்கள் சரியாகத் தூங்கவில்லை."

இதைக் கேட்டதும் மன்னன் 'ஹா ஹா' என்று உரக்கச் சிரித்தான்.

"ராத்திரி பிணம்போலத் தூங்கினேன். படுக்கையில் படுத்துக் கண்களை மூடியது தான் தெரியும். அதற்குப் பிறகு இப்பொழுதுதான் எழுந்திருந்தேன். இதற்கு மத்தியில் என் மீது யானையை விரட்டியிருந்தாலும் நான் விழித்திருக்கமாட்டேன்."

வைத்தியன் சிறிதுநேரம் யோசித்தான்.

"தாங்கள் ராத்திரி எப்பொழுது படுக்கைக்குச் சென்றீர்கள்?"

"ஏன் இரண்டாம் ஜாம முடிவில்".

"அதுதான் காரணம். தாங்கள் இரவு முற்பகுதி முழுவதும் கண் விழித்திருந்தீர்கள். அத்துடன்........மதுபானமும்........ஸ்திரீ சல்லாபமும்........இருந்திருக்கவேண்டும்........."

"சீ! வாயை மூடு அதிகம் பேசாதே."

"என்னை மன்னிக்கவேண்டும். ராஜ வைத்தியனுடைய கடமைகளுள் இதுவும் ஒன்று. அதனாலேதான் தங்களுக்குத் தெரிவிக்கிறேன்........அது தங்களுக்கு அயர்ச்சியைக் கொடுத்திருக்கிறது. அந்த அயர்ச்சியாலேதான் தலை கால் தெரியாமல் நித்திரை செய்திருக்கவேண்டும். அதனாலேதான் தங்கள் உடலில் ஒருவிதத் தளர்ச்சி இப்பொழுது தென்படுகிறது."........

சக்கரவர்த்திக்கு மகாகோபம் வந்து விட்டது. கண்களில் தீக்கனல் பறந்தது. பற்களை நறநற வென்று கடித்தான். பேசுவதற்கு நா எழவில்லை.

அவன் வைத்தியனைச் சிறிது நேரம் விழித்துப் பார்த்தான். அவ்வளவுதான். அவனுக்குத் தலை சுற்றியது. ஒன்றும் புரியவில்லை. உடல் தளர்ந்திருந்த நிலையில் பிரமாதமாக உண்டான கோபத்தால், அவனுடைய ரத்தம் கொதிப்பை அடைந்தது. மூளை குழம்பியது. எதையும் செய்யச் சக்தியற்றவனாகப் படுக்கையில் சாய்ந்தான்.

ஏவலாளர்கள் ஓடோடியும் வந்தனர் அவனை ஆச்வாசப்படுத்த. ஒருவன் அவனைத் தூக்கி உட்கார வைத்தான்; மற்றவன் பக்கத்தில் பல தலையணைகளை முட்டுக் கொடுத்துத் தாங்கிப்பிடித்துக்கொண்டான்.

வைத்தியனுக்கு முதலில் உடல் வெலவெலத்து விட்டது. ஒருவாறு சமாளித்துக்கொண்டு எழுந்து தன் கூடாரத்துக்கு ஓட்டமாக ஓடினான். இரண்டு கிண்ணங்களில் ஏதோ மருந்தை ஊற்றிக்கொண்டு திரும்பி வந்தான்.

அப்பொழுதும் ஏவலாளர்கள் சக்கரவர்த்திக்குச் சைத்தியோபசாரங்கள் செய்துகொண்டிருந்தார்கள். அவனுடைய மயக்கம் தீரவில்லை. குளிர்ந்த தண்ணீரை வாரி முகத்தில் அடித்து விசிறிக்கொண்டிருந்தார்கள்.

வைத்தியன் சக்கரவர்த்தியின் தாவாய்க் கட்டையைத் தன் இடது கையால் பிடித்து அழுக்கிப் பற்களை நீக்கி, தான் கொண்டு வந்திருந்த கிண்ணத்தை அந்த இடுக்கில் கொடுத்தான். அதிலிருந்த பானத்தைப் பருகும்படி மன்னனைக் கெஞ்சும் குரலில் வேண்டிக் கொண்டான்.

மருந்தில் கொஞ்சம் உள்ளே சென்றதும் மன்னன் களை தீர்ந்தது. சிறிது கண் விழித்துப் பார்த்தான். உரத்த குரலில் "கொண்டா சாராயத்தை" என்று உத்தரவிட்டான்.

வேலைக்காரன் ஒருவன் வெளியே போகத் திரும்பினான். ஆயினும் அவன் வைத்தியன் முகத்தைக் கண்டதும் அப்படியே நின்றுவிட்டான். சற்றைக்கெல்லாம் ஒருவரிடமும் சொல்லிக் கொள்ளாமல் வெளியே நழுவி விட்டான்.

வைத்தியன் சக்கரவர்த்தியைப் பலவிதமாகக் கெஞ்சினான் சாராயத்தைச் சாப்பிட வேண்டாம் என்று. "அதற்குப் பதிலாக இந்தப் பானகத்தைச் சாப்பிடுங்கள். இதிலும் மது கலந்திருக்கிறது. ஆயினும், அதில் உள்ள விஷம் எடுக்கப்பட்டுவிட்டது. ஹிமாலயத்தில் உள்ள பல மூலிகைகளைக் கொண்டு தங்களுக்காகவே தயாரிக்கப்பட்டது. ஒரு வேளை சாப்பிட்டாலே போதும். உங்கள் உடலில் காணப்படும் தளர்ச்சி பறந்துவிடும்" என்றெல்லாம் வேண்டிக் கொண்டான்.

சக்கரவர்த்திக்கு அன்றைப் பகல் பொழுது முழுவதும் இருக்கையே கொள்ளவில்லை. ஜுரம் வந்துவிட்டது; உடல் நெருப்புப் பறக்கச் சுட்டது. அதன் பயனாக உடலில் மிகுந்த தளர்ச்சியும் மனச் சோர்வும் உண்டாயின. எதிரில் வந்தவர்கள் மீது எல்லாம் எரிந்து விழுந்தான்.

அவன் பகல் பொழுது முழுவதையும் வைத்தியன் தயாரித்த பானகத்தையும் சாராயத்தையும், மாறிமாறிக்குடித்துக் கழித்தான். எப்பொழுது சூரியன் சாயப்போகிறான் என்பதை எதிர்பார்த்திருந்தான். அந்திப் பொழுதில் வீசும் குளிர்ந்த காற்று அவன் உடல் தாபத்தைத் தணிப்பதுடன் மனத்திற்கு ஒரு மாறுதலையும் உண்டு பண்ணுமன்றோ? அன்றி தூர்த்தர்களும் பேயும் நடமாடும் ராக்காலத்தைக் கண்டால் காமாந்தகர்களுக்கும் கொண்டாட்டம் தானே.

சக்கரவர்த்தி தன் காலம் முழுவதையும், மதுவையுண்டு மங்கையர்களிடம் இன்பம் நுகர்வதில் செலவிட்டவன். அவன் அங்ஙனம் இருந்தது கிரேக்க தேசத்தில் மட்

டும் அல்ல; வெற்றிக்கொள்ளப் படை எடுத்துச் சென்ற பாரசீகம், இந்தியா முதலிய தேசங்களிலும் அவன் வாழ்க்கை அவ்விதமே நடந்தது. பாசறை என்ற வித்தியாசம்கூடக் கிடையாது.

வெற்றிகொண்ட தேசங்களின் பெண் மக்களில் அழகானவர்களை யெல்லாம் கூடி அவன் தன் வேட்கையைத் தணித்துக்கொண்டான்; அவர்கள் கற்பை அழித்தான். படைத்தலைவர்களையும் வீரர்களையும் சிறிதும் தடுக்கவில்லை. அவர்களும் 'மேய்வதை' ஒரு விவதமாக அங்கீகரித்து வந்தான். அவர்களுள் யாராவது, ஒரு பெண்ணைத் தன் மனைவியாகப் முறைப்படி ஏற்றுக்கொள்ள விரும்பினால், அவனுக்கு வேண்டிய ஸௌகரியங்களை அளித்து வந்தான். கிழக்கும் மேற்கும் ஒன்றுசேர விரும்பினன் போலும்.

பொழுது சாய்ந்தது. உலகத்தை இருள் கவ்விக்கொண்டது. அலெக்ஜாந்தர் மனத்தையும் அந்தகாரம் சூழ்ந்துகொண்டது.

அவன் இரவுப் பொழுதை எவ்வளவு ஆவலுடன் எதிர் பார்த்திருந்தானே அவ்வளவு தூரம் வெறுத்தான். பெண்களுடன் கூடி இன்பம் அனுபவிக்க வேண்டிய மனச் சந்துஷ்டியையும், உடல் வலிமையையும் இழந்த அவன் அதை வெறுப்பது இயற்கை தானே.

தேகத்தில் வலிமை குன்றி தளர்ச்சி மேலிட்ட காலத்தில்தான், ஒவ்வொருவனும் தான் முன்பு செய்த பாப கிருத்யங்களுக்காகப் பச்சாத்தாபப் படுவான். அப்பொழுதுதான் அவன் மனக் கண்ணுகிய திரையின்மீது அவனுடைய செய்கை ஒவ்வொன்றும் பளிச்சென்று தெரியும். அதேபோலத்தான் அலெக்ஜாந்தர் மனத்திலும், அன்றையத் தினம் பழைய நிகழ்ச்சிகள் யாவும் ஒன்றன்பின் ஒன்முகத் தோன்றின.

ஆம். அவனுடைய தற்போதைய நிலைக்கு அவன்தான் பொறுப்பாளி. அவன் தன் குரு ஸாக்ரடீஸ் கூறிய புத்திமதிகள் பிரகாரம் நடந்திருந்தால், இவ்விதம் நேர்ந்திருக்காதே.

கிரேக்கதேசத்து அறிஞரான ஸாக்ரடீஸ் அலெக்ஜாந்தரைக் குழந்தைப் பருவமுதல் அறிவார். அவர்தான அரசகுமாரனைத் தந்தையின் ஸ்தானத்திலிருந்து வளர்த்தவர். எப்பொழுதும் அவனுடைய க்ஷேமத்தையே கோரினவர்.

"குழந்தாய்! நான் கூறியவற்றை நீ கட்டாயம் அனுஷ்டித்துத் தான் ஆகவேண்டும். அதில் சிறிதும் தவறக்கூடாது. அவற்றுள் முக்கியமாக ஹிந்துஸ்தானத்திலே நீ வெற்றி கொண்ட மன்னர்கள் காணிக்கையாகக் கொடுத்த கன்னிகைகளை மட்டும் ஏற்றுக்கொள்ளாதே. அவர்களை ஏற்றுக் கொண்டாலும் ஒரு காலும் அவர்களுடன் இன்பம் அனுபவிக்காதே. ஆணையிட்டுக் கூறுகிறேன். அந்தப் பெண்களை நீ தொடக்கூடாது. இல்லையேல், உன் ஆயுள் முடிவுககாலம் வந்துவிட்டது என்று எண்ணிக்கொள்."

அலக்ஜாந்தர் தன்னுடைய திக்குவிஜய யாத்திரைக்குப் புறப்படுவதற்கு முன்னுல் ஸாக்ரடீஸ் அவனுக்கு இவ்விதம் பல உபதேசங்களைச் செய்தார்.

ஸாகரடீஸ் கூறியபடி அவன், புருஷோத்மன் காணிக்கை செலுத்திய அந்த ஸர்வாங்க ஸுந்தரி, விஷக் கன்னிகையாக இருப்பாளா?

இச்சந்தேகம் மன்னன் மனத்தை அலைக்க ஆரம்பித்துவிட்டது. அதனை உடனே தீர்த்துக்கொள்ள விரும்பினன்.

"அழைத்துவா அந்த வைத்தியனை" என்று ஒரு வேலையாளைக் கூப்பிட்டு உத்தரவிட்டான்.

வைத்தியனும் வந்தான். சக்கரவர்த்தி சக்தியிழந்து படுக்கையின் மீது விழுந்து கிடந்தான். தன் உடல் வலிமைஎல்லாவற்றையும் ஒருங்கே சேர்த்து அதன் பலத்தால் எழுந்து உட்கார்ந்தான்.

"வைத்தியரே! உம்முடன் வந்த பெண்ணைப்பற்றி எல்லோரும் என்னவோ சொல்லுகிறார்களே, அது வாஸ்தவம்தானு?"

"வைத்தியன் இந்தக் கேள்வியை எதிர் பார்க்கவில்லை. திடீரென்று சக்கரவர்த்தி இவ்விதம் கேட்டதும் அவனுக்கு என்ன பதில் கூறுவது என்று புரியவில்லை. சற்று அப்படியே உட்கார்ந்திருந்தான்; ஆனுல் சும்மா யிருக்கவில்லை. சக்கரவர்த்தியின் உடல் நிலையைக் கூர்ந்து கவனித்து வந்தான்.

விஷம் தன்னுடைய வேலையைச் செய்துவிட்டது. புருஷோத்தமன் காணிக்கை செலுத்திய பெண்ணுடன்கூடி இன்பம்அனுபவித்த சக்கரவர்த்தி, அவளிடமிருந்து இன்பத்துடன், விஷத்தையும் தன் உடலில் பெற்றுக்கொண்டான். அந்த விஷத்தின் சேஷ்டை வெளிக்குத் தெரியாதவாறு வைத்தியன் பக்கத்திலேயே இருந்து அடிக்கடி மாற்றுக்களைக் கொடுத்து வந்தான். இவ்வளவையும், அவன் சக்கரவர்த்தியோ மற்றவர்களோ அறியாதவாறு செய்து முடித்தான்.

இனி எந்த வைத்தியனும் ஒன்றும் செய்துவிட முடியாது.

"சக்கரவர்த்தி இப்படிக் கேட்டால் நான் மறைக்க முடியுமா? நீங்கள் கேட்டது வாஸ்தவம்தான். அந்தப்பெண் விஷக் கன்னிகை தான்."

இதைக் கேட்டதும் அலெக்ஜாந்தருக்கு மிகுந்தகோபம்உண்டாயிற்று. வைத்தியனும் அதைச் சிறிது சிறிதாக வளர்த்துவந்தான்.

"என்ன, வாஸ்தவமாகவா? உனக்கு எப்பொழுது முதல் இது தெரியும்."

"ஆதிநாளிலிருந்தே தெரியும். உண்மையைக் கூறப்போனுல், அந்தப் பெண் உடலில் சிறுகச் சிறுக விஷத்தைச் செலுத்தியவனும் நான்தான்."

"உம்.........."

"அதனுல்தான் அந்த விஷத்தின் சேஷ்டை உங்கள் உடலில் தோன்ருதவாறு எனக்கு மாற்றுக்கொடுக்க சௌகரியமாக இருந்தது."

"என்னைக் கொல்லவேண்டி விஷக் கன்னிகையைப் பரிசளித்த மன்னன் அதை மாற்ற வைத்தியனை அளிப்பானேன்?"

"முதலிலேயே இந்தச் சந்தேகம் உண்டாகி விட்டால் விஷத்தைச் சீக்கிரம்போக்கி விடலாம். இப்பொழுதோ விஷம் உடலில் ஊறி விட்டது. இனி எந்த வைத்தியனும் உதவ முடியாது."

சக்கரவர்த்திக்குத் தலை சுழல ஆரம்பித்து விட்டது. ஒன்றும் புரிய வில்லை.

"என்ன?"

"ஆம் தங்கள் ஆவி உடலிலிருந்து சிறிது நேரத்திற்கெல்லாம் பிரிந்துவிடும். தாங்கள் கடவுளைப் பிரார்த்தித்துக் கொள்ளுங்கள்.

"இந்தச் சமயத்தில் நான் தங்களுக்கு ஒன்று ஞாபக மூட்ட விரும்புகிறேன். நீங்கள் எங்கள் அரசன் 'புருஷோத்தமனை வஞ்சகமாக, இரவோடு இரவு ஆற்றைக் கடந்து பின் புறமாக வந்து தாக்கி, வெற்றி கொண்டீர்கள். புருஷோத்தமனும் வஞ்சகமாக இப்பொழுது தங்களை வெற்றி கொண்டான். உங்களிருவரில் வெற்றி யாருக்கு?"

சக்கரவர்த்திக்கு அதற்கு மேல் கேட்கப் பொறுக்கவில்லை. கத்தியை உருவிக் கொண்டு வைத்தியனைக் கொன்று வீழ்த்த ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தான். அப்படியே குப்புற விழுந்து உயிர் துறந்தான்.

உயர்தரமான இரும்பு பெட்டிகளுக்கு, M. நாராயணசாமி முதலியார் & சன்ஸ், 58 பிராட்வே, மதராஸ்

பி. எ. பி. எல்

எழுதியது

கீழ்க்கோர்ட்டில் தீர்ப்பு எனக்கு பாதகமாகிவிட்டது. பட்டணத்தில் ஹைக்கோர்ட்டில் அப்பீல் செய்ய முடிவு செய்தேன். கால தாமதம் செய்யாமல் சென்னைக்குப் புறப்பட்டு விட்டேன். மைலாப்பூரில் எனக்கு தூரத்து பந்து ஒருவர் அட்வகேட்டாய் இருந்தார். அவரிடம் என் வழக்கைக் கொடுத்து ஹைக்கோர்ட்டில் அப்பீல் செய்யச் சொல்லுவதாக உத்தேசம்.

எழும்பூர் ஸ்டேஷனில் இறங்கியவுடனேயே எனக்கு "நாமிருப்பது பட்டணம்" என்ற நினைவு வந்துவிட்டது. பட்டணத்தைப் பற்றியும், அங்குள்ள சிலரின் புத்திசாலித்தனம், தந்திர சாமர்த்தியங்களைப் பற்றியும் முன்பே நிறையக் கேள்விப் பட்டதுண்டு. அதனால் வண்டியை விட்டு இறங்கும்போதே கையிலிருந்த ஒரே பொட்டலத்தை இறுகப் பிடித்துக் கொண்டேன். பொட்டலம் நீளமாக பார்க்கிறவர்களுக்கு ரிக்கார்டுகளைச் சேர்த்துக் கட்டி வைத்திருப்பது போலத் தோன்றும்படி இருந்தது.

வண்டியை விட்டு இறங்கும் போதே "என்னய்யா சௌக்கியமா?" என்று கேட்டுக் கொண்டே வந்து சேர்ந்தார் ஒருவர். அவர் எனக்கு முன்பு ஒரு தடவை பட்டணம் வந்திருந்த போது பரிச்சயமானவர். அவ்வளவுதான். ஆனால் அவர் ரொம்ப சொந்தத்துடன், பல வருஷங்கள் நெருங்கிப் பழகியவர் குரலில் அப்படிக் கேட்டுக் கொண்டு வந்ததைக் கண்டவுடன், பொட்டலத்தின் பிடி முன்னிலும் மதிகமாக இறுகியது.

அவர் கண்கள் அதைக் கவனித்துவிட்டன. உடனே உற்சாகத்தோடு "என்ன கட்டு அது ஏதாவது கேஸோ? ஹைகோர்ட் அப்பீலோ?" என்று கேட்டார்.

அவருக்கு பதில் சொல்ல முடியாமல் மென்று விழுங்கிக் கொண்டே "ஆமாம், இல்லை" யென்றே முணுமுணுத்துத் தலையை ஆட்டிவிட்டு நகர்ந்தேன். ஆனால் அவர் விடுவதாக காணவில்லை.

உற்சாகம் குறையாமலே "என்ன கேஸ்! ஸிவிலோ கிரிமினலோ? எதுவானாலும் நீங்கள் கவலைப்படவேண்டாம். நம்ப வக்கீல் இருக்கிறார். அப்பீல் பக்கம் ஜட்ஜுகளெல்லாம் அவருக்கு வேண்டியவர்கள். அவரிடம் அழைத்துக்கொண்டு போகிறேன். நீங்கள் கவலைப்படவேண்டாம். எங்கே பார்ப்போம்; அது என்ன கேஸ்?" என்று பேசிக் கொண்டே வெடுக்கென்று பொட்டலத்தை இழுத்துக் கையிலெடுத்துக்கொண்டார்.

எனக்கு உடம்பு குன்றிப் போய்விட்டது. என்னடா இவன் இவ்வளவு சொந்தமும் உரிமையும் பாராட்டுகிறானே என்ற எண்ணம் ஒரு பக்கம். அந்தப் பொட்டலத்தைப் பிரித்துப் பார்த்துவிடப் போகிறானே என்ற பயமும் கூச்சமும் ஒரு பக்கம். அவனைத் தடுக்க முயன்று கையை உயர்த்தினேன். நான் சொல்ல வந்ததைக் கூடச் சொல்ல விடாமல் தடுத்து அவர் "இருங்களேன்; பார்ப்போம். வாருங்கள் நேரே அவர் வீட்டிற்கே போவோம். அங்கேயே குளித்துப் பலகாரம் ஏதாவது வரவழைத்துச் சாப்பிட்டுக் கொள்ளலாம்" என்று சொல்லிக்கொண்டே பொட்டலத்தைப் பிரித்து விட்டார்.

எனக்கு அவமானத்தால் உடல் குன்றிப்போய் விட்டது. பொட்டலத்தைத் திறந்தவர் கடும் புளிப்பைச் சுவைத்தவர் போல முகத்தைக் கோணிக் கொண்டு பொட்டலத்தைத் தொப்பென்று கீழே போட்டு விட்டார். அதற்குள்ளிருந்த காதறுந்த என் செருப்பு ஜோடி கீழே விழுந்து புரண்டது. அவர் கீழே போட்டதைக் கண்டு திரும்பிப் பார்த்த சுற்றியிருந்தவர்கள் சிரித்தனர்.

அந்த மனிதர் தன் ஏமாற்றத்தை விட அவமானத்தையே பெரிதாகக் கொண்டு என்னை "நீயும் ஒரு மனிதன்தானா?" என்பதுபோலப் பார்த்து விட்டு அங்கிருந்து பேசாமல் நழுவி விட்டார். நானும் பேசாமல் செருப்புகளைப் பொறுக்கிப் பழயபடி பொட்டலமாகச் சுற்றிக் கொண்டு புறப்பட்டேன்.

அன்று பகலில் நான் ஹைக்கோர்ட்டுக்குப் போனபோது தான் தெரிந்தது, அவர் ஒரு கோர்ட்டுக் கங்காணி என்பது. வக்கீல்களுக்குக் கட்சிக்காரர்களைப் பிடித்துக் கொடுத்துக் கமிஷன் வாங்குகிறவராம்.

மைலாப்பூருக்குச் சென்று என் பந்துவின் வீட்டை யடைந்தேன். அவர் என்னை அன்றே ஹைக்கோர்ட்டுக்குக் கூட்டிக் கொண்டு போனார்.

மனசு படபடக்க பரிட்சைக்குப் போகும் பையனைப் போல ஹைக் கோர்ட்டுக்குள் அடியெடுத்து வைத்தேன். முதல் முதலாக உள்ளே நுழையும் பொழுதே கண்ட காட்சி மனசில் என்னவோபோலப் பட்டது. ஏறக்குறைய முற்றிலும் இருள் சூழ்ந்திருந்த வழிகளின் வழியாக என்னை மாடிக்கு அழைத்துக் கொண்டு போனார். அங்கே வழக்காட வருகிறவர்கள், கேஸ் ஆரம்பித்து முடிவடைவதற்குள் இடைக்காலத்தில் அடையும் மன நிலைமையை குறித்துக் காட்டுவது போலிருந்தன அவ்வழிகள். அல்லது போட்டி, பொறாமை முதலிய இருள்களின் காரணமாக வழக்குகளைத் தொடுத்தும் நடத்தியும், கடைசியில் தீர்ப்பு என்னும் ஒளியைக் காண்கிறார்களே, அதைக் குறிப்பதாகவும் இருக்கலாம். 'பொய்யின் நடுவில் மெய் மறைந்திருக்கிறது' என்ற தத்துவத்தைக் குறிப்பது போலவுமிருந்தன அந்த இருள் வழிகள்.

என் பந்து என்னை வக்கீல்களின் உடுப்புகளை மாட்டி வைக்கும் அறைக்கு அழைத்துக் கொண்டு போனார்.

அது பெயரளவில் - தான் உடுப்பு அறை என்று தோன்றிற்று. உடுப்பு அறையிலே புடலங்காய்க்கு என்ன வேலை? 'தெர்மாஸ்பிளாஸ்க்' வரவேண்டிய அவசியமென்ன? ஒரு புல்லாங்குழல் கூட வைக்கப்பட்டிருந்தது. இது ஒரு கல்யாண வீட்டு ஸ்டோர் ரூம் மாதிரி, சகல சாமான்களும் நிறைந்து இருப்பானேன் என்று விசாரித்தேன். ஒவ்வொரு வக்கீலும் தன் தன் உடைகளை வைத்துக் கொள்வதற்காக ஒவ்வொரு டிராயர் தரப்பட்டிருக்கிறதாம். அந்தந்த வக்கீல்கள் தங்கள் உடைகள் மட்டுமல்ல, தங்கள் வீடுகளுக்கு



......இருள் சூழ்ந்திருந்த வழி......

கொத்தவால்சாவடியி லிருந்தோ, வேறு இடங்களிலிருந்தோ வாங்கிக்கொண்டு போகும் பலவித சாமான்களுக்கும் பத்ரமான "அஞ்சல் ஸ்டேஷ"னாக விளங்குகிறது இந்த உடுப்பறை. சில ஏழை வக்கீல்களுக்கு பணப் பெட்டி, இரும்புப் பெட்டியாகவும் இந்த அறை யிருக்கிறதாம். இதை யெல்லாம் வெளியே சொல்லலாமா? அட்வகேட்டுகளின் உடை எனக்கு வியப்பாக இருந்தது. நாக்கை நீட்டுவது போலத் தோன்றும் நாடாக்களும், விறைப்பாக நிற்கும் கழுத்துப் பட்டையும், கருப்பு நிறக் கோட்டும், கருப்புக் கவுனும் எல்லாம் அர்த்தம் விளங்காத ஆச்சரியமாக இருந்தது எனக்கு.

அதைப்பற்றி விசாரித்த போது, அந்த கௌனில் விசேஷ அர்த்தமிருப்பது தெரியவந்தது.

அந்த கௌனின் பின்புறத்தைக் கொஞ்சம் கவனித்தால், அதில் பைபோல அமைத்திருப்பது தெரியும். எதற்காக அப்படி வைத்திருக்கிறதாம் தெரியுமா?

• முன் காலங்களிலெல்லாம், பாரிஸ்டர்கள் ஒருவருக்காக கட்சியாடினால், அதற்காகக் கூலி பேசி பேரம் செய்ய மாட்டார்களாம். அப்படிச் செய்யக் கூடாதாம். ஆகையால் கட்சிக்காரர்களே தங்கள் சக்திக்கும், இஷ்டத்திற்கும் ஏற்றபடி பணத்தை, அவர்களுக்குத் தெரியாமல் அந்தப் பையில் போட்டுவிடுவார்களாம். அதற்காகவே பிரத்யேகமாக "பகோடா" என்ற பெயருடைய நாணயங்கள் உபயோகிக்கப் பட்டனவாம். நமது மோகரா மாதிரி நாணயங்களாம் அவை.

இப்போதுதான் இந்தக் கொள்கை அனுஷ்டானத்தி லில்லையே! நம்ம ஜனங்களும், இந்தக் கொள்கை அனுஷ்டானத்தி லிருக்க வேண்டு மென்று விரும்புவதாகவே தோன்றவில்லை. நம்ம வக்கீல்களுக்கும் இப்படிக் காமா சாமா வென்று, ஒரு கௌனைப் போட்டுக்கொள்வதில் சந்தோஷமில்லை யென்றும் தெரிகிறது. ஆகையால் நம்ம காங்கிரஸ் சர்க்கார், ஹைக்கோர்ட்டு வக்கீல்கள் உடை விஷயத்தில் ஏதாவது சீர்திருத்தம் கொண்டுவந்தால், நன்றா யிருக்குமே என்று நினைத்தேன.



...புஸ்தகங்களைப் புரட்டிப் புரட்டி...

அங்கேயிருந்து, ஹைக்கோர்ட்டு வக்கீல்களெல்லாம், சேர்ந்து நடத்தும் சங்கத்திற்கு என்னை அழைத்துக் கொண்டுபோனார். எனக்குத் தெரிந்தவரையில் வெளியூர்களிலுள்ள வக்கீல்கள், இந்தப் பட்டணத்தார் மாதிரி, பெரிய பெரிய புஸ்தகங்களைப் புரட்டிப் புரட்டிச் சட்டத்தைப் பார்த்ததை நான் கண்டதே யில்லை. அவர்களுக்கு, இந்த தேசத்திலேயுள்ள சட்டமெல்லாம் மனப்பாடம் போலவும், அந்த ஞாபகத்தி லிருந்து, அவ்வப்போது வேண்டிய சட்டத்தைப் பற்றிய தகவல்களை வரவழைத்துக் கொள்வதுபோலவும் பேசுவார்கள். ஆனால் இங்கே பட்டணததில் அடேயப்பா! அடுக்கடுக்காகப் புஸ்தகங்களை வைத்துக் கொண்டல்லவா சட்டம் பார்க்கிறார்கள்.

...வக்கீல்கள் ஹோட்டல்...

என் மனசில் பட்டதைச் சொல்லுவதில் தப்பென்ன? பட்டணம் வக்கீல்கள் இப்படி ஒரேயடியாகப் புஸ்தகங்களையே நம்பி யிருப்பதும் எனக்குப் பிடிக்கவில்லை. வெளியூரார்கள் அப்படி ஞாபசத்தையே நம்பிப் பேசுவதும் எனக்கு நம்பிக்கை யளிக்கவில்லை.

அங்கே யிருந்து, ஹைக்கோர்ட்டு வக்கீல்களெல்லாம் கூட்டுறவு சங்கமாக நடத்தும் காப்பி ஹோட்டலுக்குப் போனோம். அதிலே வரும் லாபத்தைப் பின்னால் தாங்களே பங்குபோட்டுக் கொள்ளலாமென்று, அவர்கள் இப்படி ஹோட்டல் நடத்துகிறார்களாம். அது லாபகரமா யிருக்கலாம்—ஆனால் இந்த ஹோட்டலை நடத்த இவர்களுக்குச் சாவகாசமெங்கிருந்துகிடைக்கிறது என்று எனக்கு ஆச்சரியமாக இருந்தது.



...சுகமாகத் தூஙகிக்கொண்டு...

வக்கீல் தொழிலில் இப்போது ஏற்பட்டுள்ள மந்தத்திற்கு, இந்த ஹோட்டல் ஒரு அடையாளம் என்று எனக்குப் பட்டது. வக்கீல் தொழிலையே பூராப் பூராவாக நம்பியிருப்பதை விட, இப்படி வேறு தொழில்களிலும் அனுபவம் பெறுவது நல்லதுதான்.

வக்கீல்கள் சங்க அறையிலே, சில அட்வக்கேட்டுகள் ரொம்ப நிதானத்துடன் சுகமாகத் தூங்கிக்கொண்டிருந்தார்கள். தொழில் நிலைமை எப்படி யிருக்கிறதென்பதற்கு இதுவும் ஒரு அடையாளம் என்று பட்டது எனக்கு.

என் பந்து கேஸ் தஸ்தவேஜுகளை யெல்லாப் படித்துப் பார்த்தார். முடிவில் "இதில் அப்பீலுக்கு இடமில்லை. ஹைக்கோர்ட்டில் அதுதான் ஊர்ஜிதமாகும்" என்றார்.

எனக்கு அவர் வார்த்தைகளில் நம்பிக்கையில்லை. ஆகையால், வேறு வக்கீலிடம் போனேன். "வழக்கில் "பாயிண்ட" இருந்தால்தானே? கெட்டிக்கார வக்கீல் ஆர்குமென்டிலேயே......" என்றார் அவர். வழக்கை அவரிடம் ஒப்படைத்து விட்டு ஊருக்குப் புறப்பட்டேன்.

இன்னும் சிலநாள் கழித்து அவரிடமிருந்து கடிதம் வந்தது. "அப்பீல் பக்கம் ஜட்ஜு கொஞ்சம் கடுமையானவர். அதனால் நம்ம அப்பீலை ஏற்றுக் கொள்ள முடியாதென்று தள்ளி விட்டார்" என்று எழுதி யிருந்தார்.



..." அஞ்சல் ஸ்டேஷனாக "...

"அதோ தெரிகிறதே, அந்த மொட்டைக் கோபுரத்தைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?"

"ஒரு மொட்டைக் கோபுரம் என்றுதான்."

"அது சரிதான். அந்தக் கோபுரத்தைப்பற்றி ஒரு பெரிய கதை இருக்கிறது; இருக்குமென்று உனக்குப் பட்டதுண்டா?"

"அப்படியா! அப்படியானால் அந்த அதிசயக் கதை இப்பொழுது தங்கள் தயவால வெளியாகட்டுமே."



ஏ. ராம்நாத் டாகர்

எழுதியது

நான் என் நண்பன் சோமனாத்தின் வேண்டுகோளுக்கிணங்கி, கோடை விடுமுறையைக் கழிப்பதற்காக பவ நகரத்திற்குப் போயிருந்தேன். அவன் வீட்டு மேல் மாடியிலிருந்து பார்த்தால், தொலைவில் வானுற ஓங்கி வளம் பெற வளர்ந்திருந்த ஒரு தென்னஞ் சோலையும், அதன் நடுவே, ஒரு மொட்டைக் கோபுரமும் காக்ஷி யளிக்கும். அந்தக் கோபுரத்தைப் பற்றித் தான் மேற்கண்டவாறு எங்களுக்குள் சம்பாஷணை ஏற்பட்டது. சோமனாத் தெரிவித்த அதிசயக் கதையை அவன் தெரிவித்தவாறே எழுதுகிறேன்.

பத்தாம் நூற்றாண்டின் இறுதியிலும், பதினோராம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் பிரசித்தி பெற்றுவிளங்கிய பட்டினங்களுள், பவநகரமும் ஒன்றாகும். அக்காலத்தில் இதை தலை நகராகக்கொண்டுபிரதிவவமிசத்து அரசர்கள் ஆண்டு வந்தனர். நான் கூறும் இக்கதை நிகழ்ந்த காலத்தில், இந்நகரை அவ்வமிசத்துள் தலைசிறந்து விளங்கிய சந்திரபாலன் என்னும் அரசன் பரிபாலித்து வந்தான்.

அன்றையதினம் மன்னன் சந்திரபாலனின் மகவின் ஆண்டு நிறைவை,மக்கள் மகிழ்வாக, மிக்கச் சிறப்புடன் கொண்டாடுகின்றார்கள். அரண்மனையில் எங்கு பார்த்தாலும் ஒரே குதூகலம், அந்தப்புறத்தில் திவ்யமாக அலங்கரிக்கப் பட்டிருந்தபொற் தொட்டிலில் இராஜ மகவு விடப்பட்டிருந்தது. சந்திரபாலரும் அரசி இந்து மதியும் மிகவும் பரிவோடு அந்தத் தொட்டி லருகில் நின்று தங்கள் குதலை புரிந்திடும் லீலைகளாகிய பேரானந்த வாரியில் மூழ்கி யிருந்தார்கள். அச்சமயம் மந்திரி மதிவல்லபர் அங்கு தோன்றி "பவானியின் ஆலயத்திற்குச் செல்வதற்கு யாவும் சித்தமாகிவிட்டன" எனத் தெரிவித்தார். உடனே அரசர் குழந்தையுடனும் அரசியுடனும் ஆலயத்திற்குப் புறப்பட்டார்.

மக்கட் பேறின்றித் தவித்த மன்னனால், பத்து வருடகாலம் மிகவும் சிரமப்பட்டு, பற்பல தேசங்களிலிருந்தும் சிற்பிகளை வரவழைத்து, நருமதை நதியின் கரையில், அற்புதமாக அமைக்கப்பட்ட கோவில். அதில் குடிகொண்டிருந்த பவானியின் மேனி முழுதும் ஸ்வர்ணமயமானது. கிடைத்தற்கரிய நவரத்தினங்கள், பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும், பவானியின் பீடத்தினுள் புதைக்கப்பட்டிருந்தன. தவிரவும் திராவிட தேசத்துச் சிற்பிகளைக் கொண்டு திறமையாக எழுப்பப்பட்ட உன்னதமான கோபுரத்தின்மேல், பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த தங்கக் கலசம் நவரத்தினங்கள் நிறைந்தது.

இவ்வளவு போதாதா கஜனிமகம் மதுக்கு; வந்துவிட்டான் நிர்மூலமாக்க. அதுவும் எபபேர்ப்பட்ட சமயம்? பூஜை வேளையில் கரடி நுழைந்ததுபோல், அரசன் தனக்கு மக்கட்பேறு ஈந்த அம்பிகைக்கு நன்றி செலுத்தும் வேளை; அடங்கா மகிழ்ச்சியால் அவனியை மறந்த சமயம்.

அம்பிகையின் ஆலயம் முழுவதும் ஜெகஜ்ஜோதியாய் மின்னுகின்றது. அபிஷேகாதிகள் யாவும் முடிந்து அர்ச்சனை நடந்து கொண்டிருந்தது. மகிஷா சூர மர்த்தனி போல் அலங்கரிக்கப்பட்டிருந்த விக்ரகத்தின் முகம், ரௌத்திராகாரமாய் விளங்கியது இன்னும் சிறிது நேரத்தில் ஏற்படப் போகும்கோரயுத்தத்தில், அவள் கொள்ளப் போகும்; ஏராளமான நரபலியைக் குறித்தது போலும்! ஒரே இரத்தின மயமான ஆபரணங்கள் பூட்டிய பவானியின் மேனி, இரத்தக் களறியில் விழுந்து புரளப்போகும் வீரர்களின் மேனியை நினைவூட்டிற்று. ஆச்சு; அர்ச்சனை முடிந்து விட்டது. சந்திரபாலர் தம்கையிலிருக்கும் மகவை பவானியின் பாதங்களில் விட்டு, மெய்மறந்து பரவசமாக இருகரமும் கூப்பி அம்பிகையை வணங்கினார்.

அர்ச்சகர் தீபாராதனையைத் தொடங்கினார். அது கைதவறி கீழே விழுந்தது. மறுபடியும் அவர் அதை எடுத்துக் வைத்துக் கொளுத்தினார். 'கண, கண' என்று மணிகள் ஒலித்தன. அர்ச்சகர் தீபத் தட்டைத் தூக்கி ஆராதனை செய்ய ஆரம்பித்தார். ஒருதரம் கையைச் சுற்றினார்; மறுதரம் சுற்ற, கையைத் தூக்கினார். 'தடார்' என்ற சப்தம் கேட்டு யாவரும் திடுக்கிட்டனர். அதைத் தொடர்ந்து குழந்தையின் வீரிட்ட அழுகையும் எழுந்தது.

பவானியின் முடியில் பிரகாசித்துக்கொண்டிருந்த நவரத்தின கசிதமான கிரீடம் எங்கே? என்ன ஆச்சர்யம்! அம்பிகையின் முடி எவ்விதம் கழன்று கீழே கிடத்தப்பட்டிருக்கும் மகவின் மேல் விழுந்தது?

அரசனும் அரசியும் குழந்தையினிடம் பாய்ந்து சென்றனர். அரசர் குனிந்து மகவை வாரியெடுத்தார். அவர் எடுத்த அவசரத்தில், அவர் ம்குடமும் பவானியின் பாதங்களில் விழுந்து உருண்டோடிற்று. ஆனால் அவர் அதைப் பொருட் படுததவில்லை. குழந்தைக்கு ஏதாவது அடிபட்டு விட்டதோ என்று அதை உச்சந்தலையி லிருந்து உள்ளங்கால்வரை கவலையோடு ஆராய்நதார். குழந்தைக்கு ஒன்றும் நேரவில்லையென்று தெரிந்தபின் தான அவருக்கு சரியாக ஸ்வாசம் வந்தது.

இவற்றை யெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த அர்ச்சகர், நேர்ந்து விட்ட தவறிற்காக அரசர் தன்னைக் கோபிக்காமல் இருக்கும் பொருட்டு, அரசரின் அடிகளில் பணிந்து "இவ்விதம் நேர்ந்ததும் ஒரு சுப சூசகம் தானென்று எனக்குப் படுகிறது. தேவியின் மணிமுடி குழந்

THE COIMBATORE COFFEE STORES, Coimbatore are genuine suppliers of pure Niligiri Coffee Seeds.

-தையின் மேல் விழுந்ததால் அது வருங் காலத்தில் ஒரு பெரிய சக்ரவர்த்தியாய் விளங்கும் என்று தோன்றுகிறது'' என்றார். அரசரும், அது பவானியின் கருணைச் சூசகம் என்றே நம்பி, அவள் அருளை வியந்து பரவச மெய்தி பலவாறு துதித்தார்.

அச்சமயத்தில் கூட்டத்தில் ஒரு ஆரவாரம் ஏற்பட்டது. அரசரை உள்ளிட்ட யாவரும் அதை அறியவேண்டித் திரும்பிப் பார்த்தனர். கூட்டத்தை விலக்கிக்கொண்டு சில வீரர்கள் குடல் தெரிக்க ஓடி வந்தனர். யாவரும் திகைத்து அவ்வீரர்களையே இமை கொட்டாமல் பார்த்தனர்.

"மகாராஜா! மோசம்! மோசம்!! அபாயம்! அபாயம்!! கஜினி முகம்மது தன் சேனைகளோடு நகருக்குள் நுழைந்துவிட்டான். அவன்படைகளில் ஒரு பகுதி அரண்மனையை வளைத்துக் கொண்டிருக்கிறது. மற்றொரு பகுதி இதோ ஆலயத்தை நோக்கி வந்துகொண்டிருக்கிறது" என்று அவ்வீரர்கள் அரையும் குறையுமாக இரைக்க இரைக்க மொழிந்தனர்.

வீரர்கள் அதைச் சொல்லி வாய் மூடவில்லை. அதற்குள் ஆலயத்திற்குள் குழப்பமும் வெளியே பேரிரைச்சலும் ஏற்பட்டது. திடீரென்று ஏற்பட்ட இந்த அதிர்ச்சியை அரசரால் தாங்க முடியவில்லை. கஜினி மகமதோ மகா மூர்க்கன். கோவில்களைக் கண்ட இடங்களில் நாசம் செய்பவன்; விக்ரகங்களை உடைத் தெறிபவன். பக்திச் சிரத்தையுடன் தன்னால் பிரதிஷ்டை செய்யப்பட்ட பவானியின் மேனியை அத்தகைய பாதகன் தீண்டவிடுவதா? இதை மனதினால் கற்பனை கூடச் செய்துப் பார்க்கப் பிடிக்கவில்லை அரசருக்கு.

மதிவல்லபர் அரசரை அணுகி "வேந்தே! தலைக்குமேல் வெள்ளம் போய்விட்டது. இனி எதிர்ப்பதில் பிரயோஜனம் இல்லை. கஜினி மகம்மதுடன் சமாதானம் செய்து கொள்வதுதான் சிறந்த வழி" என்று சொன்னார்.

ஆனால் அரசர் அதற்குள் ஒருவித முடிவிற்கு வந்துவிட்டார். எனவே மந்திரியையும், பொறுக்கி யெடுத்த சில வீரர்களையும் தன்னுடன் நிறுத்திக்கொண்டு, பிரதானி-

......அம்பிகையின் முடி கழன்று......

-களை அங்கிருக்கும் வீரர்களைக் கொண்டு முடிந்தவரை கோயிலின் வாயிலைக் காக்கும் படி கட்டளையிட்டார்.

கோவிலின் மதிலின்மேல் நின்று போரிட்டுக்கொண்டிருந்த வீரர்கள் யாவரும் சோர்ந்து போனதையும், அவர்கள் ஒவ்வொருவராக 'பொத், பொத்' என்று கீழே விழுந்துகொண்டிருப்பதையும் கஜினி மகம்மது கண்டான். உடனே தன் வீரர்களை யெல்லாம் திரண்டு சென்று கோயிலின் வாயிலைத் தாக்கச் சொன்னான். மகம்மதின் சேனைகள் ஒரே யடியாய் கதவின்மேல் சாய்ந்து, அதை உடைக்கத் தொடங்கின. எவ்வளவோ தீரமாக எதிர்த்தும் உள்ளிருந்தவர்களால் இரண்டு நாழிகைக்குமேல் சமாளிக்க முடியவில்லை.

கதவுகள் பிளந்து சிதறியது தான் தாமதம், கஜினியின் சேனை வெள்ளம் "திமு திமு" வென உள்ளே புகுந்தது.

கோவிலின் துவஜஸ்தம்பத்தடியில் சந்திரபாலர் எதிர்ப்படும் வீரர்களை யெல்லாம்

* * *

வெட்டிச் சாய்த்துக் கொண்டிருந்தது புலப்பட்டது. அவர் கொஞ்சம்கூட கலங்கினவராகக் காணப்படவில்லை. அதற்கு மாறாக அவர் முகத்தில் ஒரு விதத்திருப்தி குடி கொண்டிருந்தது. ஹா! அதோ ஒரு வீரனின் ஈட்டி அவர் மார்பில் பாய்ந்து விட்டது. கடைசீ வரை போராடிய சந்திர பாலர், வீரசுவர்க்கம் புகுந்து விட்டார். இனி ஒரு பிராணி கூடக் கிடையாது கஜினி மகம்மதை எதிர்ப்பதற்கு.

* * *

விக்ரக நிக்ரகனான கஜினி, ஓங்கிய வாளோடு அதி வேகமாக கர்ப்பக் கிரகத்தை அடைந்தான். ஆனால் அவன் அங்கே கண்டதென்ன? விக்ரகம இருந்த இடம் காலி! பவானி பீடத்தோடு பெயர்க்கப் பட்டிருந்தாள். அது இருந்த இடத்தில் இப்பொழுது ஒரு பள்ளத்தைத் தவிர வேறொன்றும் காணப்படவில்லை. பல்லை நற, நற, வென்று கடித்தான். கோபாவேசத்தினால் கையிலிருந்த வாளால் அங்கு எரிந்து கொண்டிருந்த சர விளக்குகளைத் தவிடு பொடியாக்கினான். தன்வீரர்களை அழைத்து விக்ரகத்தைத் தேடக் கட்டளை யிட்டான். சிறிது நேரத்தில் கோவிலைச் சுற்றி கொள்ளிவாய்ப் பிசாசுகள்போல், கஜினியின் ஆட்கள், கையில் தீவட்டிகளுடன் விக்ரகத்தைத் தேடத் தொடங்கினர். மறுநாள் காலை வரை தேடினார்கள். பவானி அங்கு இருந்தால் அல்லவா அவர்கள் கையில் சிக்குவாள்? அவள் தான் இந்து மதியோடும், அரசிளங் குழவியோடும், கோவிலின் பின்னால் கொக்கரித்துக் கொண்டோடும் நருமதை நதியோடு கலந்து விட்டாளே!

விக்ரகம் மாயமாய் மறைந்து போயிற்று. மிஞ்சியிருந்தது கோபுரந்தான். ஆகவே கஜினி மகம்மது தன் கோபத்தை யெல்லாம் அதன்மேல் திருப்பினான். பத்து வருஷ காலம் பல தேசத்துச் சிற்பிகளைக் கொண்டு நிர்மாணிக்கப்பட்ட அந்த கோபுரம் பத்தே நாழிகையில் சிதைக்கப்பட்டது. வந்த வரையில் ஆதாயம் என்று கஜினி மகம்மது பொற் கலசத்தையும் அரசாங்க கஜானாவையும் கொள்ளையிட்டுச் சென்றான். அன்று இக் கோபுரம் பிரதிவ வமிசத்தவர்களுடன் தானும் அத்தகைய கோர முடிவை யடைந்தது. அன்று சிதைந்த இக் கோபுரம், இவ்வளவு விஷயங்களைத் தன்னுள் அடக்கி வைத்திருக்கிறதென்று இன்று ஒருவருக்கும் தெரியாது. அதைக் கட்டிய அரசனும், அவன் வமிசமும் அடியோடு மறைந்து விட்டனர். ஆனால் அவனுடன் சிதைந்த இது மாத்திரம் அந்தக் கோர சம்பவத்திற்கு சாட்சியாக நிற்கிறது.

* * *

மேலே யுள்ளபடி என் நண்பனால் விவரிக்கப்பட்ட அதிசயத்தின் அதிசயமாக இன்னொரு விஷயம் இருக்கிறது. அதையும் விளக்கிவிடுகிறேன். இச்சரித்திரத்தைக் கேட்டதும், அச்சிதைந்த கோபுரம் என் சிந்தையைப் பெரிதும் கவர்ந்துவிட்டது. மறுநாள் அதைப் பார்த்து வரலாம் என்று சென்றேன்.

அக்கோயில் மிகவும் பாழடைந்து காணப்பட்டது. பாதி மொட்டையாகக் காட்சி யளித்த கோபுரத்தின்மேல் ஒரு வேப்ப மரம் முளைத்திருந்தது. கோவிலின் பின்னால், நருமதை இருகரையும் நுரைத்து கம்பீரமாக ஓடிக்கொண்டிருந்தாள். கோவில் கர்ப்பக்கிரகத்தினுள் எவ்வித சிலையும் காணப்படவில்லை. இதையெல்லாம் பார்த்ததும் என் நண்பன் தெரிவித்த சரித்திரம் இன்னும் ஆழமாக என் மனதில் பதிந்தது.

அந்தக் கோவிலையும், அதன் பரிதாபகரமான சரித்திரத்தையும்பற்றி, இன்னும் அதிகமான தகவல்கள் கிடைக்கக்கூடாதா என்ற ஆவல் எழுந்தது என் மனசில். கோவிலின ஸ்தாபிதம் முதலிய தகவல்கள், அங்கு ஏதாவது கல் வெட்டுகளில் செதுக்கியிருக்கிறார்களாவென்று பார்க்க முயன்றேன்.

அப்பொழுது திடீரென்று இடியும் மின்னலுமாக பலத்த மழை பிடித்துக் கொள்ளவே பக்கத்திலிருந்த தென்னஞ் சோலைக் காவற்கார கிழவனின் குடிசைக்குச் சென்றேன். அவன் என்னைப் பிரியமாக வரவேற்று ஒரு ஓலைப்பாயை விரித்து உபசாரம் செய்தான். நாங்கள் இருவரும் சம்பாஷித்துக் கொண்டிருக்கும்போது, பயங்கரமான சப்தத்தோடு எங்கோ ஒரு இடி விழுந்தது. ஒரு கணம் எங்கள் இருவர் உடலும சில்லிட்டுப் போயிற்று.

பிறகு கிழவன் சொன்னான். "இப்பிடித் தாங்க சாமி! சுமாரா இருபத்தஞ்சு வருஷத்துக்கு முன்னாலே, ஒரு இடி இந்தத் தோப்புலே இருக்குது பாருங்க, அந்தக் கோவில் கோபுரத்து மேலே உளுந்துச்சுங்க. அதிலேருந்துதாங்க அது அப்படி மொட்டையா நிக்குது.''

"அப்படின்னா அதுக்கு முன்னாலே நன்னா இருந்துதா?" என்று நான் வியப்புடன் வினவினேன்.

"நல்லாக் கேட்டீங்க போங்க! அதுக்கு முன்னாலே அந்தக் கோவில்லே ஜாம் ஜாம்னு மூணு வேளையும் பூசை நடக்குங்களே. இடி வுளுந்து கோபுரம் போனதிலேருந்து தாங்க எல்லாம் நின்னு. போச்சு."

Buy your coffee needs from THE COIMBATORE COFFEE STORES, Coimbatore.

ஆருடம் !

ஜோதிடம் !

இனம் ! முற்றிலும் ! இனம் !

ஆருடக் கலாதேவியின் பிரசன்னம்

ஸ்ரீ காயத்ரீ தேவியின் வரப்ரசாதம்

வி. நரசிம்மய்யங்கார்
ராகவ விலாஸ்
நெ. 4 நாலாவது தெரு, கோபாலபுரம்
சென்னை :

தாங்கள்கொடுத்த **காயத்ரீ ரக்ஷை** யினால் என் குடும்பத்தில் உண்டான மகத்தான சௌபாக்யங்களைப் பற்றி உங்களிடம் மகிழ்ச்சியுடன் அறிவித்துக் கொள்கிறேன். மேலும், தங்கள் ஜோஸ்யப் பலன்கள் அப்படியே பலிக்கின்றன.

உங்கள் அன்பார்ந்த,
வி. நரசிம்மய்யங்கார்

ராவ்பகதூர் வி.ஆர். அய்யங்கார்
(டெலிகிராப் டைரக்டர்)
2—9—1938-ல் எழுதியது

லலிதா ஜோதிஷப் பிரோவைச் சேர்ந்த புரொபஸர். ஆர். ஸ்வாமினாதய்யர் . . . ஜாதகங்களை ஸ்புடம் பண்ணுவதிலும், பலன்கள் கூறுவதிலும் காட்டும் திறமையைப்பற்றி நான் ஆச்சரியப்பட்டேன்.

வி. ஆர். அய்யங்கார்.

ராவ்பகதூர், ஜி. ஏ. நடேசன்
(இந்தியன் ரிவ்யூ, ஆசிரியர்)
மாஜி-ஷெரீப் 14-4-38-ல் கூறியது:-

பிரபல ஜோஸ்யர் புரொபஸர் ஆர். ஸ்வாமினாதய்யர், நான் கேட்காமலிருக்கையில், என்னைப்பற்றி இரண்டு முக்யமான எதிர்கால பலன்கள் கூறினார். அவை பலித்தபோது நான் ஆச்சரியப்பட்டேன்.

ஜி. ஏ. நடேசன்

பாலயோகினி, பக்த குசேலா, தியாக பூமி முதலியவற்றின்
டைரக்டர் :
கே. சுப்ரமண்யம்
என்ன சொல்லுகிறார் பாருங்கள்
மதறாஸ் யுனைடெட் ஆர்ஸ்ட்டிஸ்ட் கார்ப்பரேஷன்,
பிலிம் தயாரிப்போர், டிஸ்ட்ரிபியூட்டர்கள் :
7, பெல்ஸ் ரோட், திருவல்லிக்கேணி
மதராஸ்
1939 மேமீ 31உ

மதராஸில் பிரபல ஜோஸ்யரென்று புகழ்பெற்ற புரொபஸர் ஆர். சுவாமினாதய்யரிடம் என் ஆயுளில், பல முறை ஆருடமும், ஜோஸ்யமும் கேட்டிருக்கிறேன். என் வாழ்நாளில் அவை முக்யமான கட்டங்களாகும்.

அவர் கூறிய பலன்கள் ஒவ்வொன்றும் உண்மையானதுடன், அவர் குறிப்பிட்ட காலத்திலேயே நடந்தன. அவர் அளித்த **ஸ்ரீ காயத்ரீ ரக்ஷை**யின் மகத்துவத்தை திருப்தியுடன் அனுபவித்தேன்.

இத்துடன் **ஒரு தங்க மெடல்** பரிசளிக்கப்பட்டது.

(Sd.) **கே. சுப்ரமண்யம்**

உங்கள் எதிர்காலத்தைப் பற்றி இனிக் கவலை வேண்டாம். ஆருடக் கேள்விகளுக்குப் பதில் ஸ்ரீ காயத்ரீ உபாசனையால் சொல்லுகிறேன். உங்களுக்கு எதிர்காலத்தில் நடக்கவேண்டிய முக்யமான 5 கேள்விகள் ஒரு புஷ்பத்தின் பெயருடன் எழுதி அனுப்பவும். மறு தபாலில் பதில் பரிகாரத்துடன் எழுதி அனுப்பப்படும். பூஜை, தபால், அட்வர்டைஸ்மென்ட், சிலவிற்காக அணா 0-9-0-க்கு, இந்தியன் போஸ்டல் ஆர்டர் வாங்கி அனுப்பவும். மேல் நாட்டு நேயர்கள் ஒரு ஷில்லிங், பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர் அனுப்பவும்.

ஜோதிடக் கலாதேவியின் உண்மை

ஒரே சிலவில் இருவருக்கு பலாபலன் அனுப்பப்படும்
உடனே எழுதுங்கள்

1940-ம் வருடத்திய மாதவாரியான பலாபலன் (அச்சிட்டது)

1940-வருடத்திற்கு மாதவாரியான பலன் வேண்டியவர், தங்கள், பிறந்த வருடம், மாதம், தேதி, தன், மனைவியின், பிறந்த, வருடம், மாதம்தேதி, நக்ஷத்திரம், அல்லது பெயர் எழுதி அனுப்பவேண்டும். மனைவிக்கு பலாபலன் தேவையில்லை யானால் தம் மூத்த பிள்ளையின் வருடம், மாதம், தேதி, நக்ஷத்திரம் அல்லது பெயர் எழுதி அனுப்பவும். யாருக்கானாலும், இரண்டு பேருக்கு, புருஷன், மனைவி, அல்லது, தகப்பன், பிள்ளைக்கு பலாபலன் மாதவாரியாக பார்த்துக்கொள்ளலாம். 1940-ம் வருட பலன் வேண்டியவர்கள் அணா 0-9-0-க்கு இந்தியன் போஸ்டல் ஆர்டர் வாங்கி, அனுப்பவேண்டும்.

வெளிநாட்டு நேயர்கள் ஒரு ஷில்லிங் பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர் அனுப்பவும் பலாபலன் 1940-ம் வருடம் ஜனவரிமீ 1உ முதல் டிசம்பர் 31 தேதி வரை, மாதவாரியாக உள்ளது.

ஸ்ரீ காயத்ரீ தேவியின் பிஜாக்ஷர ரக்ஷை

ஆயுள் பூராவும் பலன் தரக்கூடியது :—

தங்கத்தில் செய்த ரக்ஷை விலை	ரூ. 44—8—0
வெள்ளியில் செய்த ரக்ஷை விலை	ரூ. 22—8—0

பூராவும் முன்பணமாக அனுப்பவும். ரக்ஷையின் விவரத்திற்கு 0—1—0 ஸ்டாம்பு அனுப்பவும்.

டி. பி. சுவாமினாதன், பி. ஏ.
புஷ்பகிரீ
திருச்சூர், 4—2—39

அன்புமிக்க ஐயா,

சிறிது காலத்திற்கு முன் தங்களுக்கு நான் 5 பிரச்னங்களனுப்பினேன் அவற்றுக்குக் காலதாமதமின்றி பதில் வந்தது. நீங்கள் சொன்ன மாதிரியே, நான் பி. ஏ. பரீக்ஷையில், கௌரவத்துடன் 'பாஸ்' செய்தேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தங்கள் அன்புமிக்க,
(Sd.) **டி. பி. சுவாமினாதன், பி.ஏ.**

எம், சுப்ரமணியன்,
பெருமாள் குளம் கிழக்கு வீதி
மதுரை 9—6—39

அன்புள்ள புரொபஸரே,

நீங்கள் நெ. 2 கேள்விக்கு உத்திர மளித்தாற்போல பலன் கிடைத்தது பற்றி சந்தோஷம். நான் 1938 ஜுலை 12உ முதல் காரைக்குடி வீனஸ் பிக்சர்ஸில் அஸிஸ்டெண்டு டைரக்டராக அமர்ந்து விட்டேன்.

இங்ஙனம் அன்புள்ள,
எம். சுப்பிரமணியன்

டி. எஸ். மணி
1-A, சௌத் பாரேட்
பெங்களூர் 16—6—39

அன்புள்ள சுவாமினாதய்யருக்கு

சமீபத்தில் நீங்கள் அனுப்பிவைத்த ஸ்ரீ காயத்ரீ ரக்ஷை வந்த சிறிது காலத்திற்குள், அற்புதமான பலன் கிடைத்துளது. வருகிற நாட்களில் இன்னும் அமோகமான அதிர்ஷ்டம் அளிக்கும் என நம்புகிறேன்.

இங்ஙனம்,
(Sd.) **டி. எஸ். மணி.**

Prof. R. சாமிநாத அய்யர்

ஜோதிஷர் & ஸ்ரீ காயத்ரீ உபாசகர்

நெ. 7, பிலிப்ஸ் தெரு, : : ஜி. டி. மதராஸ் (4)



பண்டு நீ பரிந்தளித்த பசுங்கருணைத் தேனாற்றில்
மொண்டு நீர் கொண்டுவந்தேன் முதுமைசெயுங் களைதீராய் !

காவிரியே நான், பாட்டி ! கருணைப் பெருங்கடல் நீ
ஆகிலுமென் சிறு கப்பம் அகமகிழ்ந்தே கொள்வாயே.

சிந்திய புனலிற் செடிமுளைத்துப் பழுக்கும்
பைந்தேனின் மேலினிக்கும் பாவாய் பறித்துண்பாய் !

கதைக்கு காலுமில்லை தலையுமில்லை

கௌசல்யானந்தனன்
எழுதியது

ஸ்ரீமான் கோபு 'விசித்திர ஒளி' என்னும் பத்திரிகையின் ஆசிரியர். அவர் எழுதும் விஷயங்கள் மாத்திரம் ரொம்பவும் அபூர்வமானதாகவே இருக்கும்.

ஒரு சமயம், அவர், இதுவரையில் ஒருவராலும் நினைத்துக்கூட இருக்க முடியாத விஷயமொன்றை உலகத்துக்கு உதவ ஆவல் கொண்டு அபாரமான யோசனையில் ஆழ்ந்தார்.

திடீரென்று ஞானோதயம் ஆகப்பெற்றவராய் ஒரு குதி குதித்தார். மூக்குக் கண்ணாடி அவர் மூக்கில் ஏறிற்று. பவுண்டன் பேனா கையில் தாவிற்று. பேப்பரின்மேல் தலைப்பு எழுதப் பட்டது.

உடனே இப்படியும் அப்படியுமாக அதைக் கவனித்தார்.

"கதைக்குக் காலுமில்லை
தலையுமில்லை"

"இது என்னடா வேதனை! ஆனால் ஒரு கதை என்பது முண்டமாகவா இருக்கும்? நல்ல வேடிக்கை! அப்படிப்பட்ட கதையும் இருக்க முடியுமா? ஆனால் இந்தமாதிரி ஒரு வழக்கச்சொல் உண்மையில்லாமல் உலகத்தில் நிலைத்து நிற்கமுடியுமா? இதைப் பற்றி என்னென்னமோ எல்லாம் சொல்லுகிறார்கள். ஒன்றும் திருப்தியாகவே இல்லை. இதன் அர்த்தம் என்னவாகத்தானிருக்கும்?" என்று யோசித்துக் கொண்டே நாற்காலியில் சாய்ந்தார்.

* * *

'ஓ' என்று அலைகளின் வரிசை ஒன்றன்பின் ஒன்றாக கோஷித்துக்கொண்டே கரையை ஹதம் செய்து விடுவதற்காகவே போல வந்துகொண்டிருக்கின்றன.

ஆனால், நல்ல விவேகமுள்ள ஒருவனை, வீணைகள் அண்டியும், அசைக்க முடியாமல் திரும்பி விடுவது போல், அந்த அலைகளும் உத்ஸாகமில்லாமல் வந்தவழியே திரும்பிவிடுகின்றன.

அலைகள் ஒலிக்கும், கடற்கரையில் அங்கங்கே உட்கார்ந்து கொண்டு வம்பளப்பவர்களின் த்வனிக்கும் ஒருவிதமான வித்யாஸமும் தென்படவில்லை.

கோபுவின் பார்வை நான்கு பக்கமும் செல்லுகிறது. தூரத்தில் அமைதியாக இருப்பது போல் காணப்படும் சமுத்திரத்தின் உடலுக்கும், கரையில் மௌனமாக வீற்றிருப்பவர்களுக்கும் யாதொரு பேதத்தையும் அவர் காணவில்லை.

மெதுவாக ஜலத்தோரமாகவே மணலில் அடையாறு பக்கம் நடக்க வாரம்பித்தார்.

சூரியன் தன் கிரணங்களை ஒடுக்கிக்கொண்டு மேற்கே தாழ்வதில் அவர் கவனம் செல்லுகிறது.

"ஆகா! எவ்வளவு உயர்ந்தவர்களானாலென்ன? இந்த உலகத்தில் முடிவில் தாழ்வு எல்லோருக்கும் சமமே" என்னும் எண்ணம் உதிக்கின்றது.

இருள் கொஞ்ச கொஞ்சமாக கனத்து அப்படியே உலகத்தை ஒரே யடியாக மூடிக்கொள்ளும் வேகத்துடன் பாவி வருகிறது.

"அட தெய்வமே! கண்ணிருந்தென்ன? பொருள்கள் இருந்தென்ன? எது இருந்தென்ன? ஒன்றும் இல்லை என்று சொல்லும்படிதானே, அஞ்ஞானம் இப்படி மனிதனை முழு மூடனாகச் செய்துவிடுகிறது. கஷ்டம்!" என்று மனம் வேதாந்த மார்க்கத்தில் திரும்பி ஓடுகிறது.

இவ்விதம், தான் காணும் ஒவ்வொன்றைப் பற்றியும் ஒவ்



"ஆஹா! எவ்வளவு உயர்ந்தவர்களானாலேன்ன? இந்த உலகத்தில் முடிவில் தாழ்வு எல்லோருக்கும் சமமே" என்பதைக் காட்டி நிற்கின்றது அந்திவானம்.

கேர்ப்ப ஸஞ்சீவி :—கெர்ப்பிணிகளின் மலஜலக் கோளாறுகளுக்கும் கெர்ப்பத்தை ரக்ஷிக்கவும் கோபால ஔஷதாலயம், சீயாழி.

அதிர்ஷ்டம்
(தமிழ்)
சூர்யகுமாரி V. V. சடகோபன் செல்லம்
தமயந்தி சுப்பு பஞ்சு
முதலியோர் நடித்தது

தேச முன்னேற்றம்
(தமிழ்)
மாதிரிமங்கலம் நடேசய்யர் M. லக்ஷ்மணன்
S. R. பத்மா செல்லம் ருக்மணி
முதலியோர் நடித்தது

மயூராவின்
பக்த அருணகிரி
(தமிழ்)
தேவாரம் C. சங்கரலிங்கம் T. N. மீனாக்ஷி
முதலியோர் நடித்தது

கோகிலா
(ஹிந்தி)
சபிதாதேவி மோதிலால் மாயா பானர்ஜி
நடித்தது

நிரந்தரகீதம்
(ஹிந்தி)
சுரேந்திரா, B.A., LL.B மாயா பானர்ஜி
நடித்தது

பிரதிபா
(ஹிந்தி)
துர்காகோட்டே ஹீராபாய்
நடித்தது

விபரங்களுக்கு:
மயூரா பிலிம்ஸ் லிமிடெட்
தந்தி: மயூரா] சென்னை [Post Box: 343

வொருவிதமாக எண்ணமிட்டுக் கொண்டே, வெகுதூரம் வந்து விட்டபடியால், நின்று திரும்பி நடக்க முடிவு செய்தார்.

அவர் மிகவும் தைரியசாலி தான். இருந்தாலும் அந்த சமயம், அந்த ஏகாந்தமான இருண்ட இடத்தில் அவர் மனது சொல்ல முடியாத கலவரத்தை அடைகிறது.

திரும்புவதற்கு ஒரு அடி எடுத்து வைத்தாரோ இல்லையோ அவ்வளவுதான். 'தட தட' வென்று அவர் மார்பு அடித்துக் கொள்கிறது. கை கால்கள் வெலவெலத்து விட்டன. வாய் பேச முடியவில்லை.

இரண்டு கைகளையும் பரப்பிக் கொண்டே அசைந் தசைந்து ஒரு கோர உருவம் அவரிடம் நெருங்கிற்று. 'ஓ' என் றலறினர் கோபு.

"நில்லுங்கோ, பெரியவீரே! ஆசிரியரே! என்னை உமக்கு ரொம்ப நாள் பழக்கமில்லையா? ஓகோ! இருட்டில் கண் தெரியவில்லையோ? சரிதான் அப்போ நானே என்னைப்பற்றிச் சொல்லி விடுகிறேன்.

"அதான்னு; நான்தான், தெரியவில்லையா? வாராவாரம் ஊரைச் சுற்றிவர, ஒவ்வொரு விதமாக அழகு பண்ணி அனுப்புகிறீரே; அந்த நான்தான். இன்னும் தெரியவில்லையா? சூ! சமீபத்தில் நீங்கள் என்னை அலங்காரம் பண்ணி அனுப்பிய மாதிரி உங்களுக்கே என்னைத் தெரிந்து கொள்ள முடியவில்லைபோலிருக்கிறது! நான்தான் 'கதை'. இப்போது தெரிஞ்சுதா?"

"சரி; இதுவரையில் என்னைச் செய்துவைத்த கோலத்தை எல்லாம் பொறுத்துக்கொண்டு உமக்கு வேண்டிய பணம் சம்பாதித்துக் கொடுத்தேன். அதற்கு என்ன நன்றி காட்டினீர்! உம்! என்னை இந்த வாரம் முண்டமாகவா அடிக்கப் பார்க்கிறீர்? 'கதைக்குக் காலுமில்லை தலையுமில்லை' என்று ஒரு ஜோடிப்பிற்கு ஆரம்பித்து இருக்கிறீர்! நீர் பலே உத்தமர். எந்த தேவதைக்கு ஐயா என்னை பலியிடுவதாக உத்தேசம்?"

"ஓகோ! காதல் தேவதைக்கா? அப்புறம் சாதல் தேவதைக்கா? நல்லது, என்னை அந்த அலங்காரம் நீர் செய்வதற்கு முன் உம்மையே அந்த திவ்யாலங்காரம் செய்து நான் உமக்குக் காட்டி விடுகிறேன்" என்று சொல்லிக்கொண்டே கையிலேந்திய வாளை ஓங்கி வீசிற்று அந்த கோர உருவம். சடசடவென்று மின்னலும், இடி யோசையும் ஒரே சமயத்தில் கிளம்பின.

இடுப்பிற்குக் கீழ்பாகம் தரையைத் தொடாமல் கிழே நிற்கிறது. கோபுவின் முண்டம் அந்தரத்தில் அசைகிறது. அவர் தலை அம் முண்டத்தின் மேலே முழம் உயரத்தில் விழிக்கிறது.

"என்ன! என் அன்புள்ள ஆசிரியரே! இதுதானே நீர் என்னைச் செய்ய நினைத்தது. இப்போது நீர் உம்மையே பார்த்துக் கொள்ளும். உம்! கதைக்கா காலுமில்லை தலையுமில்லை! நீங்கள அவளை முண்டமாகச் செய்யாமல் இன்பமாக அலங்கரித்தால் அவள் அப்போது தேவதை போலல்லவா இருப்பாள்! உம்" என்று நிதானமாகப் பேசிற்று உருவம்.

உடனே கோபுவின் தலைபாகம் வாயைத்திறந்து மிகவும் பரிதாபகரமான குரலில்.

"கதையே! நான் என்னமோ கதை எழுத நினைத்ததற்கு இப்படியா என்னைச் சித்திரவதை செய்யவேண்டும்? உன்னை நான் எந்தவிதத்தில் காதல் தேவதைக்கு பலியிட நினைத்தேன்?" என்று விக்கி விக்கி அழுது கொண்டே கேட்டது.

கதைக்குச் சிரிப்பு வந்துவிட்டது. "ஆசிரியரே! எந்தவிதத்திலென்று கேழ்க்கிறீர். கேளும். காதல் தேவதை மனதில் தானே வந்து உட்காருகிறது. மனதிற்கு இடம் ஹிருதயமில்லையா? ஹிருதயத்தின் இருப்பு எங்கே? இந்த முண்டமான உடலில் தானே."

"சரி, இந்த காதல் தான், செட்டியார் பொம்மை மாதிரி ஒரு சமயவாவது படுப்பதென்றில்லாமல், எந்த இடமானாலும் சடக்கென்று நிமிர்ந்து உட்கார்ந்து விடுகிறதே. அது தெரியுமோ? இப்படி அது நிமிர்ந்து உட்காருவதற்கு எங்கேயாவது காலை அபேக்ஷிக்கிறதா? முண்டத்தைத் தானே அபேக்ஷிக்கிறது. முதலில் அது நிற்பதற்கு உறுதியான கால் ஏது?"

"இன்னும் கேளும். காதல் விவேகத்தை விரும்புகிறதா? காதல் பிரத்யக்ஷமானவுடன் தான் விவேகம் பறந்து விடுகிறதே!"

"இந்த விவேகம் உண்டாகும் இடம் மூளை. மூளையின் ஸ்தானம் எது தெரியுமோ? அதான் சிரஸு."

"இப்போது தெரிகிறதா? காதல் காதல் என்று காதலையே முக்கிய நோக்கமாக வைத்துக் கொண்டு மிருகத்தனத்தையே போதிக்கும் கதைகளையும் கட்டுரைகளையும் எழுதி, உலகத்திற்கு உதவி புரிவது காலும் தலையும் இல்லாத அதாவது நிலையும் விவேகமு மில்லாத முண்டத்தை அல்லது காதல் விஷயத்தை உண்டு பண்ணுவதென்று! இப்பொழுதாவது என்னை இந்த வாரம் நீர் செய்ய நினைத்தது புரிந்ததா?"

"இன்னொரு விஷயம். இதோ பாரும். எப்படி உமக்கு சிரஸு உடல், கால்கள் மூன்றும் முக்கியமோ, அப்படியே, விவேகத்தின் துணை பெற்ற காதல், நிலையான சாய்கால் பெற்றால் அழகில்லையா?

"ஆகையால் என்னை இந்த வாரம் அம்மாதிரி பூரணமான அழகுபடுத்துவதானால், உம்மை

காம கேசரி:—இந்திரியக் கட்டும், தாது நஷ்டத்திற்கும், நபும்ஸத்துவத்திற்கும். கோபால ஔஷதாலயம், சீயாழி.

யும் பழையபடியே செய்து விடு கிறேன்'' என்றது.

கோபுவின் தலை ஆனந்த பாஷ்பம் சொரிய ''அப்படியே செய்கிறேன்'' என்றது. அதன் குரல் நடுங்கியது.

ரதிபோன்ற ஒரு பெண் மணி முன், மதனன் போல் கோபு ஸர்வாங்க சுதந்தரனாக நிற்கிறார். கதையின் அந்தத் தோற்றத்தைக் காணக் காண அவர் புளகாங்கித மாகிறார்.

கதை, ''ஆசிரியரே! இப்போது என்னைப் பார்ப்பது எப்படி இருக்கிறது! நான் இனி உம்முடைய உடைமை.'' என்று சொல்லிக் கொண்டே, அவரை இறுகப்பிடித்து அணைத்துத் தழுவியது.

ஒரு மணி நேரத்திற்கு முன் யோசித்துக்கொண்டே நாற்காலியில் சாய்ந்த கோபு பரமானந்தத்துடன் கண்ணை விழித்துக் கொண்டார். ''அடே! நினைத்ததென்ன. அதற்குத் தகுந்தது போல் கண்ட கனவுதானென்ன? நல்ல விசித்திரம், கதைக்கு வாக்களித்தபடியே உயர்ந்த கதையொன்று சித்தரிக்கவேண்டும்'' என்று தீர்மானித்து, ''இருட்டில்வெளிச்சம்'' என்னும் தலைப்பின் கீழ் ஒரு அதியற்புதமான கதை எழுத வாரம்பித்தார். அவருடைய அந்தப் பூரண அங்க வமைப்பும் அழகும் கொண்ட கதை இன்னும் பல ஆயிர வருஷங்கள்வரை சிரஞ்சீவியாக நிலைத்திருக்குமென்று விமரிசர்கள் புகழ்ந்தார்கள்.

ஹநுமான் பாங்க் லிமிடெட்

(ஸ்தாபிதம் 1933)

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ் : தஞ்சாவூர்

கிளை ஆபீஸ்கள் :

மாயவரம், கும்பகோணம், நாகப்பட்டணம், சீர்காழி, திருத்துரைப்பூண்டி, பட்டுக்கோட்டை, பொறையார்

அதிகாரம் பெற்ற மூலதனம்	....	ரூ. 1,00,000—0—0
சப்ஸ்கிரைப் செய்யப்பட்டது	....	,, 83,265—0—0
செலுத்தப்பட்ட மூலதனமும் ரிஸர்வ் முதலிய மற்ற நிதிகளும்		,, 99,379—0—0
30—6—39-ல் வொர்க்கிங் பண்டுகள்		,, 8,02,482—14—3

எல்லாவிதமான பாங்க் அலுவல்களும் கவனிக்கப்படும்

டைரக்டர்கள்

1. திவான்பகதூர் N. ஸ்வாமிநாதய்யர், ரிடையர்ட் சீப் என்ஜினியர் பிரஸிடெண்ட்
2. S. நாராயணஸ்வாமி அய்யர், ரிடையர்ட் டிஸ்டிரிக்ட் ரிஜிஸ்திரார்
3. M. R. நடேசய்யர், ரிடையர்ட் எக்ஸிகியூடிவ் என்ஜினியர்.
4. T. வெங்கட்டராமய்யர், ரிடையர்ட் என்ஜினியர்.
5. டாக்டர் T. S. வரதாச்சாரியார், நாகப்பட்டணம்.
6. A. நடேசய்யர், ரிடையர்ட் எக்ஸைஸ் இன்ஸ்பெக்டர்.
7. A. கணபதி அய்யர், பாங்கர் & மிராசுதார், மாயவரம்.
8. T. K. சீனிவாச ராவ், மிராசுதார்.
9. R. சுப்பையர், மிராசுதார், மிலட்டூர்.
10. S. விஸ்வநாதய்யர், மானேஜர்.
11. K. V. கிருஷ்ணமூர்த்தி அய்யர், மானேஜிங் டைரக்டர்.

படமுதலாளிகளே!

உங்களுடைய சினிமா படங்களின் பாட்டுகள் **ஓடியன் ரிகார்டுகளில்தான்** மிக உயர்வாகவும், வெகு நன்றாகவும் இருக்கின்றன.

ஏனென்றால்

- மிக உன்னத டெக்னிக்
- உயர்தர பின்னணி சங்கீத கோஷ்டி
- ஒவ்வொரு ரிகார்டு எடுப்பதற்கும் பிரத்யேக கவனிப்பு
- மிகவும் விரிவானவும் உயர்ந்த முறையிலும் விளம்பரங்கள்
- மிகவும் திறமை வாய்ந்த விற்பனை இலாகா

இவை யாவும் சேர்ந்து இருப்பதுதான்

ஸரஸ்வதி ஸ்டோர்ஸ்

மவுண்ட் ரோடு — மதராஸ்



கண்ராட்டி கார்பன்

சினிமா கார்பன்களிலேயே முதல் ஸ்தானம் வகிப்பது!

○

நல்ல பிரகாசமான வெளிச்சத்திற்கும், மெதுவாக நின்று எரிவதற்கும் பிரசித்தி பெற்ற

கண்ராட்டி கார்பன்

களையே உபயோகியுங்கள்

○

விபரங்களுக்கு :

ஸரஸ்வதி ஸ்டோர்ஸ்

மவுண்ட் ரோட் - மதராஸ்

சு. உமைதாணு பிள்ளை

பைந் தமிழ்ச் சோலையில்—கவிக்குயில்
பாங்குடன் பாடுது கேள்!
நந் தமிழ்க் கேற்ற குயில்—ஒரு
நாகரிகக் குயில். 1.

முத் தமிழ்க் கடலில்—தினம்
மூழ்கிக் குளிக்கும் குயில்
புத்துயி ரளித்துத்—தமிழைப்
புதுமை யாக்கும் குயில். 2.

செந்தமிழ் நாட்டுச்—சிறுவர்
சிறுமியர்க் கேற்ற குயில்
சந்தப் பாடல் களை—நாளும்
சலியாது பாடுங் குயில். 3.

கண்ட விட மெலாம்—முழக்கிக்
கருத்தை யள்ளுங் குயில்
அண்டை யிலிருந்து—இசையை
அழகாய்ப் பாடுங் குயில் 4.

எட்டிப் பிடிப்பவர்—கையில்
இனிதா யமருங் குயில்
விட்டுப் பிரியாக் குயில்—நாளும்
விருப்பை ஊட்டுங் குயில். 5.

புத்தனைப் பாடுங் குயில்—என்றும்
புத்தி புகட்டுங் குயில்
சுத்தமா யிசையை—நாளும்
சொக்கிப் பாடுங் குயில். 6.

கொடி யினைப் பாடி—தேசக்
கொதிப்பை ஊட்டுங் குயில்
மடமையைப் போக்கி—நல்ல
மகிழ்ச்சி தருங் குயில். 7.

காங் கிரஸ் கப்பலை—கவிதைக்
கடலில் விட்ட குயில்
ஆங்கிலப் பாடலை—அறிந்து
அழகாய்ப் பாடுங் குயில். 8.

பக்த மீரா வில்—மனதைப்
பரவசப் படுத்துங் குயில்
சக்திப் பாடல்களில்—ஒரு
சக்தி ஊட்டுங் குயில். 9.

பாரதி பாடல்களில்—மனதைப்
பறி கொடுக்குங் குயில்
பாரத மாதாவை—நாளும்
பணிந்து பாடுங் குயில். 10.

பைந் தமிழ்ச் சோலையில்—கவிக் குயில்
பல்லாண்டு வாழ்கவே
நந் தமிழ் மொழியும்—ஓங்கிய
நாளும் வளர்கவே. 11.

ஹம்ஸா போட்டோ வொர்க்ஸ்

தலைமை ஆபீஸ்:
உறையூர்

பிராஞ்ச் ஆபீஸ்:
பெரியகடை வீதி

திருச்சினப்பள்ளி

உயர்தரமான போட்டோ படங்கள்! கட் அவுட்!! பானர்ஸ்!!! சீலைடு!!!! போர்டுகள்!!!!!

உயர்ந்த முறையில் குறித்த காலத்தில் செய்து கொடுக்கப்படும்.



வி. சந்தானம்

எழுதியது

எச்சரிக்கை:

இப்போது வாசகர்களை ஒரு அபாயகரமான வழியில் அழைத்துச் செல்லப் போகிறேன். இருபுறமும் கருக்குள்ள ஒரு கத்தியின் மீது, நீங்கள் நடக்க வேண்டி யிருக்கிறது. இந்நிலைமையில் நீங்கள், கீழே வருவதை, அந்தக் கத்தியின்மேல் நடப்பதிலுள்ள அவ்வளவு கவனத்துடன், படிக்க வேண்டும். கொஞ்சம் அலட்சியம் காட்டினாலும்கூட, அதாவது நான் சொல்லப் போவதில் சிறிது நகைச் சுவையை ரஸிக்க முயன்றால் கூட உங்களுக்குத் தடம் தவறிவிடும். அதன்பின் வருவதற்கு நான் பொறுப்பாளி யல்லவென்பதை இப்போதே, இங்கேயே, இந்த ஆரம்ப கட்டத்திலேயே சொல்லி விடுகிறேன். பிறகு உங்களிஷ்டம்.

கழுதைகளைப்பற்றி ஒரு ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்பது என்னுடைய வெகு நாளைய ஆசை. இது ஜனநாயகம் தழைத்தோங்கும் காலத்தில் தான் சாத்யமாகும் என எண்ணி, பொறுமையுடனிருந்தேன். காரணம் சொல்லாவிடில் என்னுடைய பொறுமையை நீங்கள் கொண்டாட மாட்டீர்கள்.

ஜனங்கள் என்பதை ஒரு கடலாகவும், கழுதைகள் என்பதை ஒரு புயலாகவும் வைத்துக்கொண்டால், ஜனநாயகம் என்ற கப்பலை, சகிப்புத் தன்மை என்ற சாதனத்தை கொண்டுதான் கவிழாமல், கரைதட்டாமல் 'ஹார்பரு'க்குக் கொண்டுவர முடியும்.

ஆதலால், கழுதைகளைப்பற்றிய என்னுடைய ஆராய்ச்சிகளை நான் எழுதவும், அதை நீங்கள் படிக்கவும், சகிப்புத்தன்மை மேலோங்கி நிற்கும் ஜனநாயக காலமே ஏற்ற காலமென்பதை நீங்கள் ஒப்புக்கொண்டுதான் ஆக வேண்டும்.

* * *

எதற்காக இந்த அனாவசிய பீடிகை என்று நீங்கள் என்னைப் பரிகாசக் கேள்வி கேட்பீர்கள். இது ஜனநாயக காலம் என்பதைமாத்திரம்உங்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன்.

உலகத்தில் ஆண்டவன் சகலத்தையும் சிருஷ்டிக்கும் போதே, கழுதையையும் உலகிற் களித்தான் என்பதை மிகமிக சிரமப்பட்டுக் கண்டுபிடித்தேன். பகவான், கழுதையை அறிந்தே சிருஷ்டித்தானா? அல்லது தெரியாத்தனமாக சிருஷ்டித்து விட்டானா என்பதைப்பற்றி, புராண இதிகாசங்களைப் புரட்டி, பதினைந்து தினங்கள் ஆராய்ந்து பார்த்ததில் இந்த உண்மை புலனாயிற்று.

வெயில் இருந்தால் தான் நிழலின் அருமை தெரியும்; சேறும் நாற்றமும் இருந்தால் தான் சுத்தத்தின் அருமை தெரியும். அதுபோல கழுதை இருந்தால்தான் 'கழுதையற்றவை' அல்லது விஷயத்தின் பெருமை துலங்கும். இதற்காகத்தான் ஆண்டவன் கழுதையை சிருஷ்டித்தார். என்னமோ கழுதையை கேவலப்படுத்தி விட்டதாக ஜனநாயக காலே, எதிர்க்கட்சி வாத புருஷர்கள்கோபித்துக்கொள்ளக் கூடாது. அப்படிச் சொல்கிறவர்கள் 'நான் ஒரு கழுதை' "விசிறி ரஸிகன்" என்று கூறிக்கொண்டு, கக்ஷிபேசக் கிளம்பினால் மெஜாரிட்டி இவர்களுக்கு எதிராக இருக்குமென்பது நிச்சயம். மெஜாரிட்டி, கிஜாரிட்டியெல்லாம் கட்டுப்படுத்தாது என்ற முன்னேற்ற வாதம் பேசினால், அப்புறம் ஜனநாயகமில்லை. ஜனநாயகத்தில் தான் எதிர்கட்சி என்பதும், அவர்கள்வாதம் பொறுமையுடன் கேட்கப்பட வேண்டுமென்பதும் உண்டு. இப்போது புரிகிறதா, நான் கழுதையைப்பற்றிய ஆராய்ச்சிக்காக ஜனநாயகம் வரும் வரை காத்திருந்த காரணம்!

கழுதையைச் சற்று விலக்கி வைத்துவிட்டு, மனுஷ்ய சமூகத்தினரை தப்பாக நினைக்காதீர்கள்; உதாரணத்திற்காக மட்டும்தான் கவனிப்போம்.

மனுஷ்யக்கூட்டம் அவர்களால் நிறுவப்பட்ட ஒரு நியதிப்படி இயங்கிக்கொண்டு போகிறது. குடியரசு என்றால் தலைவன்; முடியரசு என்றால் ராஜா; இம்மாதிரியாக அங்கங்கே உள்ள சம்பிரதாயப்படி ஆட்சியும் நடந்து வருகிறது. இப்படியே நடந்தால் ஸ்வாரஸ்யம் இருக்குமா? கொஞ்சம் உப்பு, உரைப்புவேண்டாமா? நியதிப்படி நடக்காது, இயற்கைக்கு முரணாக ஒருவன் நடந்தால், அவன் எவ்வளவு சீக்கிரம் பிறர் கண்ணில் படுகிறான்; விளம்பரம் பெறுகிறான்! உதாரணமாக மேனாடுகளில் 'ஆர்சின் லூபின்' என்றால் ஜகப்பிரசித்திபெற்ற திருடன் என்பார்கள். இங்கிலாந்தில் ராஜாவிற்கு எவ்வளவு கீர்த்தி உண்டோ அவ்வளவு இவனுக்கும் உண்டு. ராஜா கீர்த்தி வழக்கமான விஷயம்; திருடன் கீர்த்தி அசாதாரணமான, ரஸமான விஷயமல்லவா?

* * *

இவ்வளவு சிரமப்பட்டு விளக்கிய பின்னர், கழுதைக்கு வெள்ளி மூக்கு இருப்பதும், காது நீளமாக இருப்பதும், அதனுடைய ஒரு தினுசான மோகனப் பார்வையும் [நான் நேரில் கண்டது] எதற்காக வென்பது உங்களுக்குப் புரிந்துபோயிருக்கும். மற்ற மிருகங்களினின்று தனித் திலங்கத்தான் இந்த விசேஷ அம்சங்களைக் கடவுள் அதற்குஅமைத்தார்என்பதற்கு, என்னிடம் ஆதாரங்களிருக்கின்றன.

* * *

கிண்டல் என்ற கருத்தின் சாக்ஷாத்காரமான சித்திரம்தான் கழுதை. இதனால் கிண்டலே தொழிலாகக் கொண்டவர்களையெல்லாம், கழுதை யென்று தர்க்க சாஸ்திரத்தைப் பிரயோகித்து, என்னைச் சந்தியில் இழுத்து விடாதீர்கள். விஷயத்தை மாத்திரம் கவனியுங்கள்.

பொறுமையை எடுத்துக் கொள்ளுங்கள். ஞானத்தில் பிறந்த, அர்த்தம் நிறைந்த, பொறுமை, தெய்வீகத் தன்மை வாய்ந்ததென்பார்கள். ஆனால் அறிவுக் குறைவை மறைக்க, உள்ளத்திலே உணர்ச்சியும், வீர்யமும், துடிதுடிப்பும் இல்லாத வரட்சி ஒருவன் 'பொறுமையாக இருக்கிறேன்' என்றால் ....பாருங்கள்!

கழுதையின் பொறுமையைப் பற்றி இதுவரை யாரும் கவிதைகள் ஏதும் இயற்றவில்லையென்பது, ரொம்ப ரொம்ப வருந்தத்தக்க ஒரு விஷயமாகும். யாரும் கவிதை இயற்றாதது கழுதையின் குற்றமல்ல என்பது தான், இதிலே வருத்தத்தை அதிகரிப்பதாக இருக்கிறது.

கட்டுரையின் ஆரம்பத்தில் நான் செய்த எச்சரிக்கையை ஞாபகப்படுத்திவிட்டு-அதுதான், கூரிய கத்தியின்மேல் நடக்கிற விஷயம்—உங்களையே கேட்கிறேன். சொல்லுங்கள் பார்ப்போம். கழுதையின் பொறுமை ஞானத்தில் பிறந்த, அர்த்தம்

குரு தாளகம்:—காசம், ஈளை, இருமல், க்ஷயம் இவைகளுக்கு மாலை ஜ்வரத்தை நிறுத்தும் கோபால ஔஷதாலயம், சீயாழி.

நிறைந்த அந்த ரகமா? அல்லது பிந்தியதா? ஜாக்கிரதை! தடம் தவறிவிடப்போகிறது! கொஞ்சம் தயங்கி யோசித்தே முடிவு கட்டுங்கள்.

உங்கள் பதில் எதுவானாலும் அது சரிதானென்று, நீங்களே பல கேள்விகளைக் கேட்டு எடை போட்டுப் பாருங்கள். உலகம் தோன்றிய நாள்முதல், இன்றுவரை மனிதனால் முடிவு கட்ட முடியாமல் தனித்து நிற்கும் ஒரு பிரச்னை இது.

இப்படி பெரியபெரிய அறிவாளிகளாலும் முடிவு சொல்ல முடியாத ஒரு மர்மத்தை அடக்கிக்கொண்டிருப்பதால் தான், கழுதையிடம் அந்த மகத்தான சுயேச்சையுணர்ச்சி—சுதந்திர தாகம்—ததும்புவதைக் காண்கிறோம். அதற்குரியவர்கள் அதை எப்படி வளர்க்கட்டும், இல்லை கட்டிப்போடட்டும். அது விடுதலையடைந்து தன் ஆருயிர் நண்பன் குட்டிச்சுவரிடம் போய்ச் சேர்ந்துவிடும்.

"கழுதை கெட்டால் குட்டிச் சுவரில்" என்று மிக மிக மிகப் புராதனமான ஒரு பழமொழி வழங்குகிறது. அதை எத்தனைபேர் ஆராய்ச்சி உள்ளத்துடன் உச்சரித்து பார்த்திருப்பார்கள்?

ஏன், நானே இந்த நிமிஷம் வரை அதைப்பற்றி அந்த தினுசில் யோசித்ததில்லையே. இதை எழுதிக்கொண்டு வரும்போதே, இந்தக் கருத்து என்னுள்ளத்திலிருந்து மின்னலடித்ததுபோலப் புறப்பட்டுவிட்டது.

நெருப்புக் கோழியைப்பற்றி ஒரு விஷயம் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? வேட்டைக்காரர்கள் தூரத்திலனால், அது மணலில், ஏதாவது ஒரு பள்ளத்தில் தலையை புதைத்து வைத்துக்கொண்டு நின்றுவிடுமாம். அதாவது, அதன் கண்களுக்கு வேட்டைக்காரர்கள் தெரியவில்லை; ஆகையால் அவர்களுக்கும் தான் இருக்குமிடம் தெரியாது என்ற எண்ணமாம். அதேபோல ஸ்ரீகழுதையாரும்....அடேடே! எழுத்து வேகத்தில் என்ன மரியாதை பொறி பறக்கிறது!....குட்டிச் சுவரையே திரும்பத் திரும்பத் தேடிச் செல்வதில், உலகத்திற்குப் புரியாத ஒரு ஆழ்ந்த மர்மம் நிறைந்த கருத்து இருக்கிறதென்பது தான் என் அபிப்பிராயம்.

அந்த மர்மத்தைக் கண்டு பிடிப்பவர் மனித ஜாதிக்கு மகத்திலும் மகத்தான நன்மை செய்தவராவார். உலகம் இன்னும் பல ஆயிரம் வருஷங்கள் வரை, அவர் பெயரை மறவமால் போற்றிக்கொண்டிருக்கும் என்பது நிச்சயம்.

திரும்பத் திரும்ப மனிதர்கள் தங்களைத் தாங்களே ஆட்சிபுரிந்து கொள்ளும் முறைகளை, சமூக அமைப்புகளை மாற்றியமைத்துக் கொண்டேயிருக்கிறார்கள். சமூக சட்ட திட்டங்கள் தலைகீழாகப் புரள்கின்றன. நாகரிகங்கள் வெள்ளமாக பெருகி வடிகின்றன். என்னதான் நடக்கட்டுமே; கழுதை மாத்திரம் குட்டிச்சுவர் மேல் சலிப்படைவதேயில்லை.

உலகத்தில் ஒரு பெரிய புரட்சி தோன்றி, குட்டிச்சுவர்களே இல்லாத நிலை ஏற்பட்டுவிட்டால் கழுதைகள் என்ன செய்யும்? அந்த பயங்கர நிலைமையைப்பற்றி நினைக்கும்போதே என் கண் இமைகள் நனைந்துவிட்டன. கழுதை ஜாதியின் அந்த மகத்தான துக்ககரமான நிலைமையைப் பற்றி எண்ணும்போது... ஊஹூம்!....வேண்டாம்.

எவ்வளவு பாரம் ஏற்றினாலும் ஒரு வார்த்தைகூட ஆட்சேபிக்காமலும், ஒரு வார்த்தை பதில் சொல்லாமலும், பொறுமையையே பூஷணமாகப் பூண்டு சுமந்து செல்லும் கழுதை, உலகத்தில் தன் மனதிற்குகந்த ஒரே தோழனை குட்டிச்சுவரின் சல்லாபமுமின்றி வாழும் அந்தபயங்கர, பரிதாபகரமான நிலைமை வந்துவிட்டால்..........யார் கண்டார்கள்; எத்தகைய புரட்சிகள் நேருமோ!

......விந்தையினும் விந்தை!......காகிதத்தையே மென்று தின்றுவிட்டது.

கழுதைக்கு நிர்ணயமான கொள்கை கிடையாது; நிர்ணயமான உணவு கிடையாது; எங்கும் போகும் வரும். எதையும் உண்ணும். எதுவும் செய்யும். ஆஹா! எவ்வளவு சரளமாக ஓடுகிறது வர்ணனை!

இவ்வளவு உற்சாகமான எழுத்தைத் தூண்டும் கழுதையைப் பற்றி, இதுவரை மகா கவிகள் யாரும் ஒரு காவியம்கூட இயற்றி வைக்காததுதான், எனக்கு ரொம்பநாள்வரை ஆச்சரியமாக இருந்தது. கடைசியில் மிக்க சிரமப்பட்டு உண்மையைக் கண்டு பிடித்துவிட்டேன்.

யாரோ பெயர் தெரியாத ஒரு புலவர் "நீள்காதருலா" என்று ஒரு நூல் இயற்றினாராம். ஒரு காலத்தில் அது தமிழில் மட்டுமன்றி, பிற பாஷைகளில்கூட ரொம்பப் பிரபலமாக ஆயிற்றாம். அந்தக் காலத்தில் அச்சு, புஸ்தகங்கள் ஒன்றும் கிடையாது. அதனால் அந்த உலா ஓலைச்சுவடியில் பொறிக்கப்பட்டதாம். ஆனால், அதற்கு இன்னொரு பிரதி எடுத்துவைத்துக்கொள்ள வேண்டுமே யென்று, யாருக்குமே தோன்றாமல் போனதுதான் துர்பாக்கியம்.

அந்த உலா வெளி வந்தது முதல், கழுதைகளின் வாழ்க்கை நிலையே மாறிவிட்டதாம். மனிதர்கள் அவற்றை முற்றிலும் புதிய மரியாதையுடனும், கௌரவமாகவும் நடத்த ஆரம்பித்து விட்டார்களாம்.

ஆனால்...ஆனால்...கழுதைக்கு வந்த இந்தப் பெரிய அதிர்ஷ்டத்தை வெளியிட்ட பேனாவாலேயே, அதைத் தொடர்ந்து வந்த துரதிர்ஷ்டத்தையும் எழுத நேர்ந்துவிட்டதே என்று என் கை பதறுகிறது. பதறி என்ன பயன்! உள்ளதை மறைக்க முடியுமா?

ஒருநாள் ஒரு கழுதை, நீள் காதருலா எழுதிய புலவர் வீட்டு வாசல் பக்கம் போயிற்றாம். அப்போது வீட்டில் எல்லோரும் பின்கட்டில் வேலையாக இருந்தார்கள் போலிருக்கிறது. வீட்டின் முன்புற நடையில் ஒரு பலகையின்மேல் அந்த உலாவைப் பொறித்த சுவடிக்கட்டு இருந்ததாம். சுவடியின் மனத்தைவிட, அதிலடங்கியிருந்த விஷயத்தின் கவர்ச்சி தாங்க முடியாமலிருந்திருக்க வேண்டும். கழுதை மடமடவென்று உள்ளே புகுந்து.... உம்....அப்புறம் நடந்ததை ஏன் கேட்கிறீர்கள்? உலகத்தின் பாஷைகள் எல்லாவற்றிலும் மொழிபெயர்த்துக் கொண்டாட வேண்டிய யோக்கியதையுடைய நீள் காதருலா அன்றோடு மறைந்து விட்டது!

அன்று முதல்தான் கழுதைகளுக்கும் காகிதத்தின்மேல் அந்த அபாரமான ருசி பிறந்ததாம். அந்தச் சுவடியைத் தின்ற கழுதை அதன் ருசியைப்பற்றி மற்றக் கழுதைகளுக்குச் சொல்லியிருக்கிறது. அதுமுதல் கழுதைகளெல்லாம் சுவடி வேட்டையில் இறங்கிவிட்டன!

பின்னால் காகிதம் கண்டுபிடிக்கப்பட்டு, அச்சும் வந்த பிறகு அந்த வேட்டை முன்னிலுமதிக வேகமாக நடக்கத் தொடங்கியது.

இப்பொழுது தெரிகிறதா கழுதைக்கும் காகிதத்திற்கும் இவ்வளவு நெருங்கிய உறவு வந்ததன் காரணம்! "என்னடா! கழுதை மாதிரி காகிதத்தை...." என்கிறார்களே!

கழுதைக்குத்தான் காகிதத்தைத் தின்னும் உரிமையுண்டு; காகிதத்தைக் கழுதைதான் தின்னும் என்ற அசைக்க முடியாத சட்டம்கூட உலகில் ஏற்பட்டுவிட்டது. மனிதன் காகிதத்தை வாயில் வைத்துக் கொள்ளுமுன்பே கழுதையாகி விட்டுத்தான் அப்படிச் செய்கிறான் என்பது என் மனோதத்துவ ஆராய்ச்சி முடிவு.

எனக்குத் தெரிந்த ஒரு கழுதை—காகிதக் கதையைக் கேட்டால் உங்களில் பலர் மூர்ச்சையையே யடைந்துவிடுவீர்கள்.

ஒரு நியூஸ் பேப்பரில் கழுதைப் படம் அச்சடித்திருந்தது. அந்தக் காகிதம் கடைக்குப் போய் பொட்டலமாக மாறி, கடைசியாகக் காற்றிலடித்துக் கொண்டு வரப்பட்டு, ஒரு கழுதை கட்டியிருந்த இடத்தை யடைந்தது. கட்டப்பட்டிருந்த கழுதைக்கு நீள்காதருலாவின் ருசி தட்டிவிட்டது. கட்டி லடங்காத ஆவலுடன், கட்டை யவிழ்க்கவும், காகிதத்தை எட்டிப் பிடிக்கவும் முயன்றது; முடியவில்லை.

ஆனால் அந்தக் கழுதையின் ஆத்ம சக்தி வெளிப்பட்டுவிட்டது. அது, கட்டி யிருந்த கழுதையிடமிருந்து தாவி, காகிதத்திலிருந்த படக் கழுதையில் ஆவாஹனமாகிவிட்டது. ஆகா! என்ன ஆச்சரியம்! விந்தையினும் விந்தை! காகிதத்திலிருந்த கழுதை, தான் அச்சடிக்கப்பட்டிருந்த காகிதத்தையே நாவால் வளைத்துப் பிடித்திழுத்துத் தின்றுவிட்டது!

இதைவிடத் தெளிவாக, கழுதையின் காகித ருசியை எடுத்துக் காட்ட ஒரு கதை சொல்லிவிட முடியுமா?

கழுதை காலால் தான் உதைக்கும். முன்னால் நின்று மூக்கைப் பிடித்து இழுத்தாலும், பின்பக்கம் திரும்பித்தான் உதைக்கும். இதுதான் கழுதைக்குணம் என்பது. நேரில் நின்று குறிபார்த்து அடிக்காது. கழுதை குதிரையுமல்ல; காளையுமல்ல; இதையாரும் மறந்துவிடக்கூடாது.

மிருக வர்க்கத்திலும், மற்றும் பக்ஷி வர்க்கத்தில் சிலவும் கூட்டம் கூட்டமாக இருப்பதைப் பார்த்திருப்பீர்கள். உறவும் சம்பந்தமும் வைத்துக் கொண்டிருப்

சுவர்ண அப்ரகம்:—நீரில் இனிப்பு (Diabetes Mellitus) பலஹீனத்திற்கும், கோபால ஔஷதாலயம், சீயாழி.

பதைக் கண்டிருப்பீர்கள். ஆனல் கழுதைகள் மந்தை மந்தையாக மேய்வதைக் கண்டிருக்கிறீர்களா? இரண்டு கழுதைகள் நீண்டநேரம் அவ்வளவாகச் சேர்ந்திருப்பதில்லை—உலகத்தினருக்கு கடவுள் அருளிய கண்கண்ட வரப்பிரசாதம் இது ஒன்று தான். அவைகள் ஏகாங்கிகள். மனுஷ்ய அறிவுக்கு எட்டாத, லோக சம்பந்தமில்லாத மகா வேதாந்திகள். ஏகாங்கியாக, தனித் தனியாக இவைகள் இருக்கின்றனவல்லவா? இதன் காரணமென்னவென்பதைக் கூட்டி, கழித்து, பெருக்கி வகுத்து ஆராய்ச்சி செய்ததில், இதுதான் கழுதை வாதம் என்ற உண்மையைக் கண்டுபிடித்தேன். இதை மனுஷ்யன் அறிந்தபாஷையில் கூறவேண்டுமானல் ஏகாங்கி வாதம் எனக் கூறலாம்.

பூகம்பத்தையும், புயலையும், துரோகிகளையும், வஞ்சகர்களையும் சுயநலமிகளையும், புளுகர்களையும், உத்தமர்கள் மத்தியிலே பகவான் படைத்தார். அப்பேர்ப்பட்ட ஸ்வாமி கழுதைக்குப் பேசும் சக்தியும் கொடுக்காமல் இருந்தாரே, அவர் கருணையே கருணை!

* * *

ஜனநாயக காலே, கழுதை உபயோகஹா என்னவென்பது என்னுடைய சமீபகால ஆராய்ச்சியாகும். இது சம்பந்தமாக சில விஷயங்கள் கூறவேண்டியிருக்கிறது.

“சட்டம் ஒரு கழுதை” “என்னப்பா காது நீளுதே; மூக்கு வெளுக்கிறதே”, “மாமியார் கழுதைபோல் ஆனளாம்” என்ற இது போன்ற கழுதையைக் குறிக்கும் வாக்கியங்கள் சட்டத்திலும், இலக்கியத்திலும் இடம் பெற்றுவிட்டன. கழுதைகளுக்கு எழுதத் தெரிந்தால், பேசத்தெரிந்தால், அவை எழுதியும் பேசியும், அறுபத்தைந்தாவது கலையென ஒரு தனிக் கலையையே உலகத்திற்கு அளித்திருக்கும். இங்கெல்லாம் நான் மனுஷ்ய சமூகத்தினரை அச்சாணியாக வைத்துக் கொண்டு, இந்த ஆராய்ச்சி உருளையை ஓட்டியுள்ளேனு என நீங்கள் சந்தேகமே படக்கூடாது. அப்படிச் சந்தேகப்பட்டால், ஆரம்பத்தில் உள்ள எச்சரிக்கையை மீண்டும் படித்து தைர்யப்படுத்திக்கொள்ளுங்கள். உங்களுக்கு புரியவேண்டுமே என்பதறகாக மனுஷ்ய பாஷையில் கூறுகிறேன். கழுதை பாஷை உங்களுக்கு புரியாது. கழுதைகளும் புது எழுத்துக் கண்டு பிடித்து, இன்னும் கழுதை பாஷைப் பிரசாரத்தை ஆரம்பிக்கவுமில்லை.

* * *

கழுதையை மனுஷ்யர்கள் பல விஷயத்தில் உபயோகப் படுத்துகிறார்களாதலால், அதனை விடுத்து, விசேஷமாக ஜன நாயகத்தில் அரசியல் துறையில் கழுதைகள் எப்படி உபயோகப் படுத்தப்படுகின்றன என்பதை உங்களுக்குத் தெரிவிக்கத் தான் போகிறேன்.

கழுதை கிண்டலின் சித்திரமல்லவா? இவைகளை அறிந்த ஒரு சாரார், தேர்தல் காலத்தில் இவைகளை வெகு ஜோராக பயன்படுத்திக் கொண்டனர். “நான் தான் எதிர்க்கட்சி அபேட்சகன்” என்று எழுதப்பட்ட அட்டை தாங்கிய கழுதைகள் தெருக்களில் ஒரு சாரரால் ஓட விடப்பட்டன. “எனக்கே ஓட்டு போடு” என ஒரு அபேட்சகன் பெயரை எழுதி, கழுதை மேல் கட்டி ஓடவிடுவார்கள். வேண்டாத அபேட்சகர் வீட்டின் முன்னே, முளையடித்து, நாலைந்து கழுதைகளை கட்டி ஏக காலத்தில் கத்த விடுவார்கள்.

ஜனநாயக காலத்தில் கழுதைகளைப் பலர் பலவிதமாக உபயோகித்துக்கொள்கின்றனர். கழுதைகளைக் கொண்டு ஒரு “ஸ்டிரைக்” நடத்தியதாக, சென்ற வருஷம் வட இந்தியாவிலிருந்து செய்தியொன்று வந்தது, வாசகர்களுக்கு ஞாபகமிருக்கும். இப்போது இந்த கழுதையம்ச பிரசாரம் குறைந்து வருகிறது. இது மிகவும் வருந்தத்தக்கதாகும். இவ்வளவு உபயோககரமான ஒன்றைப் பயனின்றி விட்டுவைப்பது, உலகப் பொருளாதாரக் கணக்குப்படி மனித ஜாதிக்கே பெரும் நஷ்டமல்லவா?

கழுதை ஒரு சர்வதேச வாசி. கழுதையில்லாத தேசம் அநேகமாக எங்குமே யிருக்காது. “உலகக் கழுதைகளே! சேர வாருங்கள்” என்று கூறிக்கொள்ள உண்மையான யோக்யதை வாய்ந்தது கழுதைகள் தான். ஏனெனில், கழுதைகள் குணத்திலும் ரூபத்திலும், செய்கையிலும் எங்கும் ஒரே மாதிரியாகவே இருக்கின்றன.

* *

மனுஷ்ய உலகத்திலே சங்கீதத்தில் ஏழு ஸ்வர ஸ்தானங்கள் உண்டு. கழுதைகளுக்கும் ஸ்வர ஸ்தானங்கள் உண்டு. ஆனல் ஸ்வரங்கள் எண்ணிக்கை எல்லைக்குட்பட்டவையல்ல. குஷி பிறந்தால் ஸ்வரங்கள் எண்ணிக்கை வளரும். மனுஷ்யஜாதி ஸ்வரக் கிரமம் கீழிருந்து மேலேபோகும். கழுதை ஜாதி ஸ்வரம் உச்சியிலிருந்து கீழே வரும். காட்டு சாரீரத்தில் ஆரம்பித்து, கதவு இடுக்கில் அகப்பட்ட எலிக் கூச்சலில் முடியும். சங்கீதத்தில் கழுதைக் கல்பனைக்கு ஈடு வேறு எதையும் சொல்வதற்கில்லை. அதனல் தான் இந்தக் காலத்தில், சில சங்கீத வித்வான்கள் ஸ்வரம் பாடுவதை கழுதை ஸ்வரங்களுக்கு ஒப்பிட்டு சில விமர்சகர்கள் எழுதுவது, கழுதை உலகத்தில் பலமாகக் கண்டிக்கவும், மறுக்கவும் படுகிறது.

இதோ முடித்து விட்டேன்.

இந்த ஜனநாயக உலகத்தில் ராஜீய விஷயங்களில் சிலர், கழுதையின் பிரத்தியேக யோக்கியதைகளான, முற்போக்கு வாதம் முதலியவற்றைக் கைக்கொள்ள முயலுகிறார்கள். அனாதிகாலம் தொட்டு, கழுதைகளின் ஏகபோக உரிமையாக இருந்துவரும் இந்த வாதத்தை மனிதர்கள் கைக்கொள்ளுவதை நான் பலமாக ஆட்சேபிக்கிறேன்.

கழுதை கத்தினல்தான் நல்ல சகுனம். மனிதர் கழுதையாக மாறிக்கத்துவது........ உளறல்.... ஊளை.... ஊஹூம்! சரியான வார்த்தை கிடைக்கவில்லை எனக்கு.



வெள்ளைப்பறவை

"நாணல்"

1

வெள்ளைப் பறவை யொன்று துள்ளிப் பாய்ந்தது—துளி
வெண்மை கலந்த நீல வான வெளியில்;
தெள்ளத் தெளிந்த நீல மடுவினுள்ளே—ஒரு
தெய்வக் கனற் பிழம்பு பாய்ந்த தென்னவே.

2

மீனும் கதிரும் எழில் வெண்ணிலவுமே—ஆன
மின்னும் இழைகள் பின்னிச் செய்த நாணொடு
வான வளைவு காணும் வண்ண வில்லிலே—இந்த
வையம் படைத்த வில்லி எய்த பாணமோ?

3

வைகறை யென்ற ஒளி வாள் வலியனும்—மதி
வண்ண மலர் சூடி வரு கந்தல் மகளும்
வைய மெங்கும் ஓய்விலாமல் ஆடி வந்திடும்—வளர்
நாட்டியத்திலே மலர்ந்த நாத முல்லையோ?

4

மோனப் பெருங் கடலின் சாந்த வமுதாய்—அண்ட
முற்றும் பரந்த முதற் புன் முறுவலோ?
கூனிக் குறுகியுளம் குமுறுகின்ற—என்னைக்
கூப்பிட்டணையு மருட் கோலக் கரமோ?

5

வெள்ளைப் பறவை யொன்று துள்ளிச் சென்றது—ஒளி
வெள்ளமெனப் புரண்ட வான வெளியில்;
சொள்ளைக் கதைகள் பேசி சோறு கெஞ்சிடும்—என்
சோம்பர் மனம் நிமிர்ந்து தன்னை வென்றது.

நவ தாம்பிரம்:—வாதம், வாயு, blood pressure, கீல் வாயு, ஸர்வாங்க வாதம் இவைகளுக்கும்; கோபால ஔஷதாலயம், சீயாழி.

"நாட்டியத்திலே மலர்ந்த நாதமுல்லையோ!"

"இதோ இப்படி வாங்கோ — இந்தப் பக்கம் — அங்கே கல்லிருக்கு — ஆ, சொன்னேனே, கேட்டேளா?"

அவள் கை மேலே பட்டதும் ஸாகருக்கு மயிர்கூச் செரிந்தது. தடுக்கிக் கீழே விழ விருந்தவனை, அவள் கை பிடித்து சமாளித்தது.

"ஏ, கோதை, நீயும் குருடு, நானும் குருடு. உனக்கு மாத்திரம் வழி எப்படித் தெரிகிறது!"

"நீங்கள் நடுவிலே குருடு, நான் முதலிலேயே குருடு, இதான் வித்தியாசம்! —

எல். எஸ். ராமாமிருதம்.

பருந்து 'கிருந்து' எடுத்துக் கொடுக்கணுமா? — ஊம். கட்டு 'கிட்டு' கட்டணுமா? குசினியிலே ரொட்டி கிட்டி திருப்பணுமா? ஊம்! — 'பெட்பான்' சமூவணுமா? — ஊம்! — எல்லா வேலையும் செய்வேன்."

சுவாரஸ்யத்தில் ஸாகர் தன் கஷ்டத்தை ஒரு கணம் மறந்தான்.

"கோதை, உனக்கு எதையாவது பார்த்த நினைவிருக்கிறதா?"

"இருக்கு. ஒண்ணே ஒண்ணு மாத்திரம்."

"என்ன அது?"

இதோ இங்கே பெஞ்சு இருக்கு — ஒக்காருங்கோ!"

பெஞ்சின் மேல் சாய்ந்தான். தென்றல், அவன் நெற்றியில் வீசியது. அங்கு நின்ற வியர்வை குளிர்ந்தது. குபீல் குபீலென்று பன்னீர்ப் பூவின் நறுமணம் வீசியது.

கோதை கீழே சிமிட்டித் தரையில் உட்கார்ந்து கொண்டு, மயிரைக் கோத ஆரம்பித்தாள். அவள் முகத்திலும், உடலிலும் குரலிலும் யௌவனம் சொட்டியது. சிட்டுக் குருவி போன்று சின்னஞ் சிறியள். ஆஸ்பத்திரி உடைதான் அணிந்திருந்தாள். ஒரு சிவப்புப் பாவாடை, அதன் மேல் ஒரு சிவப்பு ஜாக்கெட், அவ்வளவு தான். மாசற்று ஒன்றும் படைக்கலாகாது என்று வைராக்கியங்கொண்ட பகவான், அவள் பேரழகிற்கும், ஒரு பெரு மாசு வைத்திருந்தாற் போன்றிருந்தன அவள் கண்கள் — இரு பெருங்கடல்கள் போன்ற கண்கள் — ஆனால் அலையற்று, எப்பொழுதும் அசைவற்று, நிசப்தமே நிரம்பிய கடல்கள் — வாதாம் பருப்பை யொத்த அவள் மேட்டு விழிகளின் பாப்பாவின் மேல், வெண் திரையிட்டிருந்தது.

"இன்னிக்கென்ன சமாச்சாரம்? — டாக்டர் என்ன சொன்னார்?" என்றாள் கோதை.

"பொட்டையானது பொட்டையானது தான் — இனி சரிப்படாது என்று சொல்லி விட்டார் — கோதை! — நான் என்ன பண்ணுவேன்? மோசம் போனேனே!!" என்று தலையிலடித்துக் கொண்டான் ஸாகர்.

கோதை அவனை சமாதானப்படுத்த முயலவில்லை. அப்படிச் செய்தால், அவன் துக்கம் அதிகரிக்கும் என்பதை அவள் நன்கறிவாள். மயிரை மும்முரமாகக் கோத ஆரம்பித்தாள்.

சற்று நேரம் இருவரும் மௌனமாயிருக்தனர்.

"கோதை! உனக்குக் கண் போய் எத்தனை நாளாயிற்று?"

"எனக்கே ஞாபகமில்லை —" என்று சொல்லிக் கொண்டே கோதை ஒரு சிடுக்கை 'வெடுக்' கென்று விடுவித்தாள்.

"எனக்கு மூணு வயசாறப்போ, ஏதோ மாந்தம் மாதிரி வந்து, அப்படியே கண்ணை இழுத்துண்டே போயிடுத்தாம் — அவ்வளவு தான் எனக்குத் தெரியும்."

"கோதை! உனக்கு இப்பொழுது என்ன வயதாகிறது?"

"பதினாறு —"

"அப்பா! பதின்மூன்று வருஷம்!" ஸாகர் பெருமூச்செறிந்தான்.

"கோதை, உன்னைப் பார்க்க ஒருவரும் வருவதில்லையா? இதோ இங்கிருக்கும் இத்தனை வியாதியஸ்தர்களையும் பார்க்க, அவரவர் உறவினர்கள், எத்தனையோ பேர் வருகிறார்களே; இதோ என்னைப் பார்க்க தங்கமணி வருகிறாள்; அது மாதிரி உன்னைப் பார்க்க ஒருவரும் வருவதில்லையா? —"

"என்னைப் பார்க்கவா?" — அவள் முகத்தில் குறும்புப் புன்னகை தவழ்ந்தது.

"நான் தான் எல்லாரையும் பாக்கறேனே?"

"எனக்குப் புரியவில்லை."

"என்ன புரியவில்லை? இதோ பாருங்கோ — ஒங்களுக்கு வழி தெரியவில்லை — இதோ வழி காண்பிக்கிறேன். நீங்கள் இப்போ சொன்ன உறவு மனுஷாளெல்லாம் ஒரோரு சமயத்தில் — முகத்தில் கண்ணிருந்தும், ஒரு வார்டுக்குப் பதிலா ஒரு வார்டிலே புகுந்தோ — இல்லாட்டா ஆஸ்பத்திரியிலே எங்கேயோ ஒரு மூலையிலே புகுந்து, எங்கேயோ ஒரு மூலையிலே அகப்பட்டுண்டோ அவஸ்தைப் படுவா — அவாளுக்கு வழி காண்பிக்கறவள் நான் தான்."

ஸாகர் சிரித்தான். "நான் அதைக் கேட்கவில்லை. உனக்கு உறவு கிறவு இல்லையா, அப்பா, அம்மா? —"

கோதை மயிரைத் தளர்த்தியாகப் பின்ன ஆரம்பித்தாள்.

"அப்பா, நான் பொறக்கறத்துக்கு முன்னாலேயே, எங்கேயோ போயிட்டாப் போலிருக்கு — அம்மாவும் எங்கே யிருந்து வந்தாள்னு தெரியவில்லை — நான் பிறந்ததே இந்த ஆஸ்பத்திரியிலே தான் —" (அமைதியான அவள் குரல் சற்று நடுங்கியது.) — "பொறந்த பத்தாம் நாளே, அம்மாவைப் பரலோகத்துக்கு உருட்டிப் பிட்டேன். இங்கேயிருந்த ஒரு ஆயாக் கிழவி என்னை எடுத்து வளர்த்தாள். அவள் தான் எனக்கு 'கோதை'ன்னு பெயர் வெச்சாள். அவளும் எனக்கு நாலு வயசானதும் போயிட்டா. அப்புறம் — என்ன? — அவ்வளவுதான் — நான் அனாதை!"

கோதை தலை நிமிர்ந்தாள். அவள் கண்கள் பன்னீர்ப்பூவின் பரிமளம் வரும் பக்கம் பாய்ந்தன.

"எனக்கு சொந்தமில்லாத இடமே கிடையாது. கட்டுப்பாடும் கிடையாது.

"இதோ, வரேன்" என்று கூவிக் கொண்டே எங்கேயோ ஓடிப்போய் விட்டுத் திரும்பி வந்தாள்.

"இதோ, இதென்ன பாருங்கோ. நன்னா தொட்டுப்பார்த்துச் சொல்லுங்கோ."

"இது ரோஜாப்பூ. வாசனையிலேயே தெரியறதே!"

கோதை பூவை யெடுத்துக் கன்னத்தி லொற்றிக் கொண்டாள்.

"இதனுருவமோ, அல்லது இதைப் போல ஒரு உருவமோ பார்த்த ஞாபகமிருக்கு."

"எப்போது?"

"நான் குழந்தையா யிருந்தப்போ. ஆனால் இப்போகூட, நடுவிலே நடுவிலே, அது என் கண்ணுக்கு முன்னாலே தென்படறது. ஏதோ கனா மாதிரியா யிருக்கு. ஒரு வேளை கனாத்தான் கண்டேனோ என்னமோ? ஏதோ சின்னக் குளம் மாதிரியிருந்தது. அதிலே ஒரு ரோஜாப்பூ; இதைவிட ரொம்பப் பெரிசு; ரொம்ப அழகு; அதன் நடுவிலே அசைஞ்சு ஆடிண்டிருந்தது. அந்தப் பூவைப் பார்த்ததும், எனக்கு என்னமோ அதைத் தொடணும்னு ஆசையாயிருந்தது. தண்ணுக்கிட்டப் போனேன். அந்தப் பூவும் தலையை ஆட்டிண்டே என் கிட்ட வந்தது. அதைத் தொடக் கையை நீட்டினேன். அனேகமாய் தொட்டுட்டேன். அப்போ 'தடார்'ன்னு ஏதோ பாராங்கல் மாதிரி கனமா, கெட்டியா குறி வெச்சாப்போலே என் மேலேயும் அந்தப் பூவின் மேலேயும் விழுந்தது."

வெகு ஸ்வாரஸ்யமாய்க் கேட்டுக்கொண்டிருந்த ஸாகர், சற்று நேரம் காத்திருந்துவிட்டு "அப்புறம் என்ன?" என்றான்.

"என்ன, ஒண்ணுமில்லை! ஒரே இருட்டுதான்! அப்போதே முதற்கொண்டு இப்போ வரையிலும் ஒரே மாதிரியாய்த் தானிருக்கு என் பார்வை — ஏதோ கல்லு மாதிரி விழுந்தது என்னேனே, அப்பொழுதுதான் எனக்கு மாந்தம் வந்திருக்கணும்னு நினைக்கிறேன்."

"இப்போதுகூடத் தோன்றுகிறது என்றாயே, அதெப்போது?"

பின்னலின் முடிவில் டேப்பை சொருக்கு முடிச்சுப் போடும்வரையில் சும்மாவிருந்து விட்டு, பிறகு, முழங்காலில் கைகளைக் கோர்த்துக் கொண்டு சொல்ல ஆரம்பித்தாள்.

"ஆனால் அது என் மனசில் ஏற்படும் பிரமைன்னு நினைக்கிறேன். நல்ல மாதிரியாப் பேசறவா—இல்லை—நிஜமாகவே நல்ல மாதிரியா இருக்கறவாளோடே பழக நேர்ந்தாலும்—பேச நேர்ந்தாலும்—இல்லை—தொட நேர்ந்தாலும் சரி. அந்தப் பூ என் கண்முன்னாலே தோணற மாதிரியாயிருக்கு—குழந்தைகளைத் தொடறப்போ தான், அது ரொம்ப நன்னாத் தெரியறது—"

ஸாகர் பரவசமடைந்தான்.

"கோதை! என்ன அற்புதமாய் வர்ணிக்கிறாய்? நீ பேசுவது கவிதையாயல்லவா இருக்கிறது!—நான் படித்த புத்தகங்களில் கூட, ஹிருதயத்தைப் பூவிற்குத்தான் ஒப்பிட்டிருக்கிறது. ஹிருதய கமலம்!—ஆஹா!!—"

"கவிதையுமில்லை, களிமண்ணுமில்லை. கண்டதைத்தான் சொல்றேன். 'கண்ணைக் கெடுத்த தெய்வம் மதியைக் கொடுத்தது'ன்னு பழமொழிகூடச் சொல்லுவாளே, கேட்டதில்லையா? கண்ணு போச்சே யொழிய, மற்ற அறிவெல்லாம் தீட்டி வச்சாப்போலே நிற்கறது. ஒரோரு சமயத்திலே நான் கண்டுபிடிக்கற விஷயமெல்லாம் எனக்கே ஆச்சரியமாயிருக்கு. இவாளிவாள், பொய் சொல்றா, நிஜம் சொல்றா என்கிறது, அவா குரலிலிருந்தே கண்டுபிடிச்சுடறேன்—எவ்வளவோ சன்னமான சப்தமெல்லாம் நன்னா என் காதுக்கு எட்டிவிடறது. உதாரணமா ஒங்க தங்கமணி உங்களைப் பார்க்க வராப்பிலே இருக்கு—ஒங்க வண்டிச் சத்தம் கேக்கறது—நான் போயிட்டு வரேன்."

"இல்லை, பரவாயில்லை. நீ இங்கேயே இரு—"

2

தங்கமணியின் நடை ஒய்யாரத்தைக் கண்டு, என்னென்னமோ நடைக்கு உபமானமாக எடுத்துச் சொல்லுகிறார்களே, அதெல்லாம் தலை கவிழும். எதிரில் போனவர் வந்தவரெல்லாம் ஒரு தடவை அவளைத் திரும்பிப் பார்த்தனர். தங்கமணிக்கு அதில் பரம திருப்தி. நீண்டு தொங்கிய பின்னலின்மேல் மேலாக்கைப் போட்டு மறைத்துக்கொண்டு, ஏதோ ஒரு பெரிய கவிஞன், கடலின் இக்கரையில் நின்றுகொண்டு அக்கரையைக்காண முயல்வதுபோன்று, முகத்தின் பாவத்தைத் திருப்பி வைத்துக் கொண்டு, கால் கொலுசு "கலீர் கலீர்" என நடந்தாள்.

"தங்கமணீ!" ஸாகர் குரலின் கனிவும் குழைவும் சொல்லி முடியாது. தேவியை மானஸீக பூஜை செய்யும் பக்தனின் குரல் போன்றிருந்தது அவன் குரல். கட்டுக் கட்டிய அவன் கண்கள் அவள் நிற்கும் திக்கை நோக்கித் தவித்தன.

"வா, இப்படி உட்கார்—இதோ, இவளைப் பார்த்திருக்கிறாயா?"

தங்கமணி கோதையை நோக்கினாள். கோதையின் முகபாவம், சலனமற்ற தண்ணீர்போல அமைதியா யிருந்தது. ஆனால் தங்கமணிக்கு அவ்வமைதி தென்படவில்லை. சிற்றுளியை வைத்துச் செதுக்கினாற் போன்ற, அவளுடைய அழகிய முகத்தில், அவள் அழகையே ஏளனம் செய்வது போன்றிருந்த, அவளுடைய கண்களின் குருட்டின் பயங்கரத்தைத்தான் கண்டாள்.

"இவள்தான் கோதை—எனக்கு ரொம்பவும் ஒத்தாசையா யிருக்கிறாள். இவளும் இங்கில்லையானால் என்னால் இங்கு இருக்கவே முடியாது."

"சரிதான், நான் போறேன்!" என்று எழுந்தாள் கோதை.

"கோதை!—போகாதே கோதை!—போய்விட்டாயா? கோதை!"

"இல்லை, இதோ இருக்கேன்" என்று சிரித்தாள் கோதை.

"தங்கமணி, கோதை ரொம்ப சமத்து, கேட்டையா? நான் விழுந்து விழுந்து புத்தகங்களில் படித்துத் தெரிந்துகொண்டதெல்லாம் அவள் 'அ, ஆ' கூடத் தெரியாமல், அனுபவத்தில் கண்டறிந்து சொல்லுகிறாள்." திடீரென்று பரவசத்துடன் "கோதை, கோதை இவளைத் தொடேன். தொட்டுப் பார்த்துச் சொல்லு."

கோதை சிரித்துக்கொண்டே தொடுவதற்குக் கையை நீட்டினாள்.

"தங்கமணி! கோதை ஒரு ஆளைத் தொட்டுப் பார்த்தே, அவரவர் குணாதிசயங்களைக் கண்டறியலாம் என்கிறாள்; நான் அவளை நம்புகிறேன்."

தங்கமணி அருவருப்புற்று மேலாக்கைத் தன்னைச் சுற்றி இன்னும் இறுக்கிக்கொண்டாள்.

முல்லை மலர்

—

1. வெள்ளைக் கில்லை கள்ளமென்றே
   வெள்ளை உடலும் வேண்டினையோ?
   பிள்ளாய்! உந்தன் விநப்பிற்த
   பெரியோ னநளும் சுரந்தானோ?

2. சின்ன உநவில் வந்திடினும்
   சிறந்த தணங்கள் பெற்றாயே
   உன்னி யிதனை ஆய்ந்திடுவார்
   உநவால் தணத்தை உணர்வாரோ?

3. பச்சைப் பசிய பூங்காட்டில்
   பதுங்கி நீயு மிருப்பாயே
   இச்சை கொண்ட மக்களுனை
   எளிதில் கொய்து மேதவரோ?

4. பாரத நாட்டுப் புகழ்மணிகள்
   படிந்த யிந்தப் பூந்தரையில்
   ஆர்ந்து வளர்ந்து வந்ததினால்
   அரிய மணம் நீ பெற்றாயோ?

5. நல்லோர் சேர்க்கை நலனென்றே
   நாவலர் கூறிய கூற்றெல்லாம்
   வல்லோய்! நீயும் எங்கட்கு
   வந்து நன்கு காட்டினையே!

6. உங்கள் குலத்தி னொருகொடிக்கன்
   றுயர்ந்த பாரீ தேரீந்தான்;
   பொங்கும் உங்கள் புகழையெலாம்
   புகல எளியேற் காகிடுமோ!

கோட்டாறு: தே. ப. பெருமாள்.

"சரிதான், என்ன விளையாட்டு வேண்டிக் கிடக்கு! வைத்தியன் என்னசொன்னான் உங்களுக்கு?" அவள் குரலில் கவலை தொனித்தது. ஆனால் அது அவன் உடம்பைப்பற்றிய கவலையல்ல. அவளைப்பற்றிய கவலையே.

ஸாகர் தலைகுனிந்த வண்ணம் சற்று நேரம் பெஞ்சின் கைப்பிடியின்மேல் நகத்தால் கீறினான்.

"தங்கமணி, என் கண் போனது போனதுதான்."

தங்கமணியின் கண்கள் சுழன்றன. வாய் மலர்ந்தது. இனி குருட்டு அகமுடையானுடன் காலம் கழிக்கவேண்டிய பயங்கரம் மெள்ளத் தலை காட்டியது. பயத்தால் கைகள் மார்மேல் குவிந்தன.

"வைத்தியர் ஒன்றும் பிரயோஜனமில்லை என்று கை விட்டு விட்டார். நாளை, நாளையன்றைக்கு வீட்டிற்குப் போய் விடலாம். பகவான் எனக்கு தைரியத்தைக் கொடுக்க வேண்டும். தங்கமணி! கோதை ரொம்ப தைரியசாலி. ரொம்பவும் துரதிர்ஷ்டசாலியாயிருந்தபோதிலும்—கோதை, கோதை!!"

ஆனால் கோதை அங்கில்லை.

3

"கோதை, நீ எனக்கு ரொம்பத் தெம்பை யுண்டாக்கி யிருக்கிறாய். இரண்டு நாளைக்கொரு தடவையாவது, நீ கட்டாயம் வீட்டிற்கு வந்துபோக வேண்டும். வண்டியனுப்புகிறேன். என்ன, போய் வரட்டுமா?"

"செய்யுங்கள்!"

குதிரை வண்டி பறந்தோடிய பிறகும் வெகு நேரம் வரை கோதை ஆஸ்பத்திரி வாயிலில் நின்றிருந்தாள். அவள் முகத்திலும் புன்னகை வெகு நாழிகை தங்கியிருந்தது. குழந்தையின் களங்கமற்ற வெற்றிக்களையும், அனுபவத்தின் ஆழ்ந்த யோசனையும், அப்புன்னகையில் ஒருங்கே பொருந்தியிருந்தன.

தங்கமணி வண்டியில் ஏறும் பொழுது, கோதை அகஸ்மாத்தாய், அவளைத் தொட்டுவிட்டாள். தங்கமணி உடுத்தியிருந்த உயர்ந்த பட்டுச் சேலையின் நளினத்தை கோதை, தன் விரல்களால் தொட்டுப் பார்த்து அறிந்து கொண்டு விட்டாள். அத்துடன் அவள் குணத்தையும் அறிந்து கொண்டு விட்டாள்.

4

"தங்கமணி, தங்கமணி, நீ எங்கிருக்கிறாய்?"

"என்ன?" என்று கடுகடுத்துக் கொண்டே வந்தாள் தங்கமணி.

அகமுடையான் குருடனாயிருந்தால் ஒரு சௌகரிய முண்டு. தைரியமாய், அவன் முன்னாலேயே நின்று கொண்டு, முகத்தைக் கடு கடுத்துக் கொள்ளலாம். அவன் இஷ்டத்திற்கு விரோதமாக, கோண வகிடு எடுத்துக்கொள்ளலாம். சல்லாப் புடவையணிந்து கொள்ளலாம்.

"தங்கமணி, இப்படி வந்து உட்காரேன். எங்கே அவசரம்! ஏதாவது ஒரு புஸ்தகத்தையெடுத்துப் படியேன், கேட்கிறேன்."

வெறுப்புடன் ஒரு புஸ்தகத்தை யெடுத்துக்கொண்டு எதிரில் வந்து உட்கார்ந்தாள்.

"இல்லை, படிக்க வேண்டாம். கொஞ்ச நாழிகை பேசிக்கொண்டிருக்கலாம்."

படக்கென்று புஸ்தகத்தை மூடினாள்.

"தங்கமணி, உன் முகத்தைப் பார்த்து இத்துடன் சரியாய் ஒரு மாதமாகிறது."

தங்கமணி எதிரிலிருந்த கண்ணாடியில் முகத்தைப் பார்த்துக் கொண்டாள். அவளுக்கே சிரிப்பு வந்தது, தன் கோணவகிட்டையும், சாந்துப்பொட்டையும், பௌடர் ஒற்றின முகத்தையும் பார்த்தால், அவன் என்ன சொல்வான் என்பதை நினைத்துக் கொண்டபொழுது.

"'ஸ்வபாவமாயிரேன், ஸ்வபாவமாயிரேன்,'னு அடிச்சுக்காரளே, அதென்ன ஸ்வபாவமோ?"—என்று சலித்துக் கொள்வாள்.

அவள் பிறந்த வீட்டில் அளவுகடந்த ஏழ்மை. அவன் அவளுடைய அழகில் மயங்கி, அவளைக் கலியாணம் செய்து கொண்டபொழுது, உண்மையிலேயே அவள் முகத்திலும், உடலிலும் நடை உடை பாவனைகளிலும், சேற்றில் பிறந்த செந்தாமரையின் உயர்ந்த, நிஷ்களங்கமான இயற்கை வனப்பு வீசியது. ஆனால் இப்பவோ! க்ரீமும், வாசனைத் தைலமும், பவுடரும் அமர்க்களம்தான். சோற்றுக்கே பஞ்சமாயிருந்த ஒரு ஸ்திதியிலிருந்து, நேரே ஸ்வர்க்கத்திற்கு மாறவே, அவள் தலை திரும்பிவிட்டது. அதுவும் சென்ற ஒரு மாதமாய் அவன் கண் குருடானதிலிருந்து அவள் மனம் போன போக்குத்தான்—தனிக்காட்டு ராஜா.

"தங்கமணி! இல்லை, என்னால் இப்படிச் சும்மா உட்கார்ந்து கொண்டிருக்க முடிய

வில்லை. என்னை ஜன்னலண்டை கூட்டிக் கொண்டுபோ — சூரியாஸ்தமனத்தைப் பார்க்க முடியாவிட்டாலும், அதன் ரச்மி யாவது என்மேல் படட்டும்.''

அவள் தன்னைக் கூட்டிக்கொண்டு போகும் வரையில் அவன் காத்திருக்க வில்லை. தட்டுத் தடுமாறி ஜன்னலண்டை போய் நின்றான்.

"தங்கமணீ! இங்கு வா!''

அச்சமும் அருவருப்பும் கலந்த முகத் துடன் அவன் பக்கலில் போய் நின்றாள்.

"தங்கமணி! இந்த நேரத்திற்குத்தான் உன்னை நான் முதலில் சந்தித்தது, ஞாபக மிருக்கிறதா? கிணற்றடியில் தண்ணீர்

.... தளர்த்தியாகப் பின்ன ஆரம்பித்தாள்......

இழுத்துக் கொண்டிருந்தாயே, நேற்று மா திரியிருக்கிறது; குருவிக்காரிபோல, முழங் காலுக்குமேல் சற்று தூக்கிய உன் வெங் காயக் கலர் பாவாடையும், அதன் மேல் சுற்றியிருந்த பச்சைத் தாவணியும், அதில் ஒரு கிழிசலும், உன் கழுத்திலிருந்த பச் சைக் கண்ணாடி மணியும்.......தங்கமணீ! உன்னிடத்தில் வனதேவதையின் அழகிருக் கிறது!"

மனவெழுச்சியால் அவன் முகமெல்லாம் சிவந்து விட்டது. அவன் கை அவள் கையை நாடியது.

தங்கமணி அச்சத்துடன் கையை இழுத் துக் கொண்டாள். நல்ல நாளிலேயே அவன் அரிய பிரியத்தையும், களங்கமற்ற ஆர்வத் தையும் அறிந்தவளில்லை. அல்லது அறிந் தும் லக்ஷியம் செய்தவளில்லை. அதுவும் கண் குருடான பிறகு அவனைப் பார்த்தால் சாதாரண மனுஷாம்சமாகப் படவில்லை.

இயற்கையிலும், அதன் அழகிலும் தோய்ந்து தோய்ந்துருகும் அவன் மனதின் ஆர்வமெல்லாம், தடங்கலில்லாமல் ஓடிக் கொண்டிருக்கும் தண்ணீர், எதிரில் தோன் றிய துவாரத்தில், திடீரென்று விழுந்து மறைவதுபோல், அவன் கண்ணின் வழி வெளிப்பட முடியாமல், அவன் உடலி லேயே, ஊடுருவி, அவனை வருத்தத் தலைப் பட்டது. அவன் அவளைத் தொட்டதும் அவள் உடம்பு சிலிர்த்தது. 'ஜிவ்'வென்று அவளுள் பாய்ந்தாற் போன்றிருந்தது.

ஏற்கனவே சற்று குழிந்த அவன் கண் கள், இப்பொழுது பார்வையற்று இரண்டு பிலங்கள் போன்றிருந்தன.

பயங்காத்துடன் கையை உதறிக்கொண்டு "இதோ வரேன்!" என்று சொல்லிக் கொண்டே கீழே இறங்கிப் போய்விட் டாள்.

ஸாகர் அப்படியே தூணில் சாய்ந்து கொண்டு நின்றான்; அவன் நெற்றியில் வியர்வை அரும்பியது.

5

"தங்கமணீ!"

"அறுபது நாழியும் இதான் வேலை!" என்று மொண மொணத்துக் கொண்டே மயிரை இன்னுங் கொஞ்சம் அழுத்தி வாரி னாள். அவள் முகத்தைச் சுளித்ததும், கண் ணாடி பிம்பத்தின் கன்னத்தில், ஒரு சிறு பள்ளம் தெரிந்தது. உடனே அந்த இடத் தில் கொஞ்சம் க்ரீமை வைத்து அப்பினாள் அவசரத்தோடு.

"தங்கமணீ!''

"என்ன?'' என்று இரைந்தாள்.

தாழ்வாரத்தில் அவன் தடுக்கி விழுந்து கொண்டு வரும் சப்தம் கேட்டது.

"தங்கமணீ! நீ என்ன இப்பொழுது பழைய மாதிரியில்லையே! என்ன பண்ணு கிறாய்? என்ன, பழையபடி ஆரம்பித்துக் கொண்டு விட்டாயே! பௌடர் வாஸனை வீசுகிறதே?''

"ஒண்ணுமில்லை'' என்று சொல்லிக் கொண்டே பவுடர் டப்பியை மூடினாள்.

மெல்ல மெல்ல தள்ளாடிக் கொண்டுவந்து ஒரு நாற்காலியில் சாய்ந்தான்.

"தங்கமணி! வரவர உன்னைக் காண்பதே துர்லபமாய்விட்டதே! என்னைக் கண்டால் ஓடி ஓடி ஒளிந்து கொள்கிறாயே. எங்கே யாவது போகப் போகிறாயா?''

"ஆமாம். சர்க்கஸ் வந்திருக்காம். பக்கத் தாத்து மாமியாத்திலே எல்லாரும் போறா. நானும் அவாளோடு போகப் போறேன்.''

"தங்கமணி! அப்புறம் இன்னொரு நாள் போகலாமே.''

"இல்லை, இன்னிக்குத் தான் கடைசி நாளாம்'' என்று சீப்பின் பற்களைக் கிறிக் கொண்டே முனகினாள்.

"தங்கமணீ! இங்கே தான் ஒரு அரை மணி நேரம் என்னுடன் பேசிக்கொண்டி ரேன்—எனக்கு என்னமோ மாதிரி யிருக் கிறது.''

"கண்ணைக் கட்டிண்டு கத்தி யெல்லாம் எறியறானும்'' என்று வ்பவஸ்தை யில்லா மல் மொணமொணத்தாள்.

"தங்கமணி, நான் இங்கே கண்ணைக் கட்டிக்கொண்டு கத்துகிறேனே, அது உனக் குப் பெரிதாகப் படவில்லையா?''

"ஆமாம்! இடியும் மின்னலுமா, பிர மாதமா மழை பெய்யறபோது கண்ணைக் கவிச்சுண்டு போய்ப் பாக்கணும்னு நான் தான் சொன்னேனோ?'' இத்தனை நாள் வயிற்றினுள் அமுக்கி வைத்திருந்த ஆத்தி ரம், எரிச்சலெல்லாம் திடீரென்று வெளிப் பட்டது.

ஸாகர் அடிபட்டாற் போன்று சிலிர்த் தான்.

"தங்கமணீ! நான் மின்னலோட்டத் தைத் தான் கவனித்தேன்...''

"சரி. பாத்ததன் பலனை நன்னாப் படுங்கோ. அதுக்கு நான் என்ன பண்றது? நான் கண்டிப்பாய்ப் போகத் தான் போறேன்'' என்று சொல்லிக்கொண்டே எழுந்தாள்.

"தங்கமணீ! தங்கமணீ!'' என்று கத றிக்கொண்டே ஸாகர் அவள் முந்தானையைப் பற்றினான்.

"சரிதான் விடுங்கோ. எப்போ பார்த்தா லும் இதான் வேலை'' என்று உதறி விட்டுப் போய்விட்டாள்.

ஸாகர் அப்படியே உட்கார்ந்திருந்தான். வாசலில், வண்டிச் சப்தம் ஓய்ந்தது. பிணத்தை நாற்காலியில் சாய்த்து வைத் தாற் போன்று உட்கார்ந்திருந்தான்.

இடியும் மின்னலுமாய் குமுறிக் கொண்டு, மழை பிடித்து, இரண்டே நிமிஷத்தில் வலுத்துவிட்டது. ஒரே சரமாரி.

ஸாகர் எழுந்து போய் ஜன்னலண்டை நின்றான். திடீரென்று அவனுக்கு உடம் பில் களைப்பு வந்துவிட்டது. கண் குருடாய்ப் போனபொழுதே, அவனுக்கு உலகம் அஸ்த மனமாய் விட்டபோதிலும், வாழ்க்கையின் அஸ்தமனத்தை இப்பொழுதுதான் அவன் கண்டான்.

திடீரென்று எல்லாம் வெறுத்துவிட் டது. கையைத் தூக்கக்கூட சக்தியற்றுப்

போய்விட்டது: உடம்பிலும் மனதிலும் அவ்வளவு சோர்வு. அவன் கால்கள் ஜீவனற்று நடுங்கின. அவன் கீழே விழுவதற்கு முன்னால், அவன் கையை, இன்னொரு கை பிடித்து நிலை நிறுத்தியது.

குருடனின் பரபரப்புடன் அந்தக் கையைத் தொட்டுத் தொட்டு உணர்ந்து விட்டு "கோதை! கோதை!" என்று அலறி அதை இறுகப் பற்றினான். சாகப்போகிறவனின் பிடியா யிருந்தது அவன் பிடி.

"என்னோடு வந்துடுங்கள்" என்றாள் கோதை. அவள் குரல் திடமாக இருந்தது. அதிலிருந்த அமைதியும், அழுத்தமும், தைரியமும் அவனைப் பச்சைக் குழந்தையாக்கின.

"கோதை! நீ எப்படி வந்தே இப்போ இந்த மழையிலே! செத்துப் போய்விட்டால் தேவலை என்றிருக்கிறது எனக்கு."

கோதை அதற்கு ஒன்றும் பதில் சொல்லவில்லை.

மறுபடி கேட்டான், "கோதை! எப்படி வந்தே நீ இப்போ?" என்று.

கோதை "அன்னிக்கு உங்கள் தங்கமணி வண்டியில் ஏறினபோது அவளைத் தொட்டுப் பார்த்தேன். இந்த வெளிக் கண்ணை அணைத்துவிட்ட தெய்வம், என் அகக் கண்ணை ரொம்பப் பிரகாசமாக்கி விட்டது. வாருங்கள் போவோம்" என்று அவன் கையைப் பற்றி இழுத்தாள்.

ஸாகர் பரபரப்புடன் "கோதை! எவ்வளவு கருணையும், ஸௌந்தரியமும் நிறைந்த அகக் கண்ணை உனக்குக் கொடுத்திருக்கிறது தெய்வம்! என்னை எங்கே கூப்பிடுகிறாய்?" என்றான்.

"என் குடிசைக்கு."

ஸாகருக்குத் திடீரென்று வாழ்க்கை மறுமலர்ந்தது. மனக் கண்கள் திறந்தன. அவள் கையைப்பற்றி, அவள் முன் செல்ல, பின் தொடர்ந்தான். வாசல் எல்லாம் திறந்தபடியே யிருந்தது.

வாசல்படி தாண்டும்போது மனவெழுச்சியுடன் "கோதை! என் கண்களை தெய்வம் எதற்காக அப்படி அணைத்துவிட்டது என்று புரியாமல் ரொம்ப துக்கமடைந்தேன். தெய்வத்தின்மேல் எனக்கு ஆத்திரம்கூட வந்தது. ஆனால்............ஆனால்" என்றான்.

கோதை அவனை மறித்து "இப்படி இடது பக்கமாக ஒதுங்கி நடங்கள். அங்கே ஒரு பள்ளமிருக்கும்" என்று அவனை ஒதுக்கினாள்.

நல்ல மழை; தெருவில் முழங்கால் மட்டும் ஜலம். அவர்கள் இருவரைத் தவிர ஒரு ஈ காக்கை கூட இல்லை. மழை இன்னும் மும்முரமாயிற்று.

ஒரு குருடை, இன்னொருகுருடு நடத்திச் செல்லும் அந்தப் புனிதக் காட்சியை, விந்தையெனக் கருதும் பாமரர் பார்க்காமலிருக்கும் பொருட்டே, பகவான் மழையை முடுக்கியது போலிருந்தது.



கவிதைப் பெண்

"சோமன்"

1. மான்விழி யாளெனை நோக்கி விழித்தனள்
மன்மத னம்பவள் கண்வழி பாய்ந்தது.
தேன்மொழி யாளொன்றும் தேர்ந்துரை யாதொரு
தெய்வதப் புன்னகை செய்துமறைந்தாள்;

2. மனத்தினி லோர்புது மலர்ச்சியுங் கொண்டேன்
வாழ்வினி லோர்புது வேகமுங் கண்டேன்;
கனவில் இரவினில் கண்டவக் கன்னிகை
கண்வழி சென்றென் னெஞ்சி லமர்ந்தாள்.

3. இதயம் மறுத்தது எதனிலும் இசைய,
இருவிழி எதனையும் நோக்க மறுத்தது.
உதயம் அந்தி எனும்நினை வின்றியே
உணர்வெலா மவள்பால் ஒன்றிக் கிடந்ததால்.

4. உவகையி லுதித்த காதலும் பின்னர்
உளத்தினை ஐயோ உருக்கிய தம்மா!
அவளெங் குள்ளனள் அவளெங் கென்றே
அவனி முழுமையும் அலைந்தலுத் தேனே.

வேறு

5. விதியை வெறுத்தும் விரகமெரி யுமென்தன்
மதியை வெறுத்தும், மயங்கித் துடிக்குங்
கதியையும் ரமிக்க பயலையும் வெறுத்துமிச்
சதிசெய் யரம்பையை வெறுத்தில னம்மா.

6. நதியின் கரைதனிலே நல்லதோரி ரவினிலே
மதியின் நிலவினிலே சென்றேன் மதிமயங்கி
விதியின் முடிவை விரும்பியே சென்றே
நதியுங் காதலிசை பாடிந கர்ந்த தம்மா.

7. நிலவுதான் நெஞ்சில் அமுதைப் பொழிந்திட
தொலைவி லொருசிறு புள்குரலெ ழுந்திட
நிலையுங் குலைந்தது நேர்மையு மொழிந்தது
அலைவிடு மேக்கக் கடலோ அக்குரல்.

8. இதயப் புள்ளினை 'வா'வென் றழைக்கும்
சதயப் புள்கொல், சாகரப் புள்கொல் மற்
றுதயப் போழ்தி லுவகையி லழுந்தி
உதயப் பண்ணை உருக்கும் புள்கொலோ?

9. தன்னை மறந்தனன் தன்மை இழந்தனன்,
என்னை மறந்ததும் உலகு மறந்தனன்,
நின்னை மறந்திலன் நீயுமந் நேரமே
'உன்னை மறக்கிலன்' என்றுதித் திட்டாய்!



பர்மா பர்மியர் புத்தர் பொங்கிகள்

மாஸ்டர். எஸ். ராஜம்

தமிழர் பர்மாவில் குடியேறி பல நூற்றுண்டுகளாகிவிட்டன. காடாக இருந்த அந்த நாட்டின் பெரும் பகுதிகளை, இந்தியாவிலிருந்து சென்றவர்கள் வெட்டித் திருத்திப் பலன்தரும்



...பர்மாவிலுள்ளதிலெல்லாம் பெரிய புத்த விக்ரகம்...

நிலங்களாக ஆக்கினர். ஆயினும் காலப்போக்கில், அந்நாட்டு மக்களிடையே புகுந்த மனக் கசப்பு, வேற்றுமை யுணர்ச்சி ஆகிய கோளாறுகளால், இன்று, அங்கே இந்தியரின் நிலைமை கவலைக் கிடமானதாக ஆகிவிட்டது.

சமீபகாலத்திற்கு முன் அங்கு நடந்த கலகங்களைப் பற்றிய செய்தி, இந்தியா முழுவதையுமே கவலைக்கு உள்ளாக்கிவிட்டது. அங்கு குடியேறியுள்ள இந்தியரின் சொத்துகளுக்கும், உயிர்களுக்கும் பெரிய அபாயம் தோன்றியிருக்கிறதென்று எண்ண இடமேற்பட்டது.

பர்மாவையும், பர்மியர்களையும் நேரில் சென்று கண்டு பழகியிருப்பவர்கள், இந்தச் செய்திகளைக் கேட்டுத் திகைத்துப் போயிருப்பார்கள். அஹிம்சா மூர்த்தியாகத் திகழும் புத்தரின் மதத்தைக் கைக்கொண்ட பர்மியர்கள்—வாழ்க்கையை ஒரு உல்லாச யாத்திரையாகக் கருதி, பட்டுப் பூச்சிகள் போலக் கவலையற்றுப் பறந்து திரிய விரும்பும் பர்மியர்—இவ்வளவு குரோதத்திற்கும், கொலை பயங்காரத்திற்கும், எப்படி இடம் கொடுத்தார்கள் என்பதே புரியாமல் அவர்கள் பிரமிப்பார்கள்.

இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன், இந்தியாவில் பிறந்து அங்கே பரவிய பௌத்த மதம் ரொம்ப ரொம்ப பலமாக வேரூன்றி யிருக்கிறது. அந்த மதத்தின் சாயை இன்னும் அவர்களது வாழ்க்கையிலும், நகரங்களிலும் படர்ந்து தெரிகிறது.

என்னுடைய பர்மா பிரயாணத்தில் முதல் முதலாக என் மனதைக் கவர்ந்தது, பிரம்மாண்டமான ஒரு புத்த விக்ரகம்தான். ரங்கூன் ஹார்பர், ஐராவதி நதிக் காட்சிக்களை கண்டவுன் என் மனதில் எழுந்த வியப்பைவிட, ஆயிரம்பங்கு அதிக பிரமிப்பை விளைவித்தது அந்தச் சிலை.

ரங்கூனிலிருந்து ஐந்து மைல் தூரத்திலுள்ள "பாக்டா" விலிருந்து புறப்பட்டவுடன், முதல் முதலாக நான் கண்ட காட்சி அந்த புத்த விக்ரகம்தான். பிரம்மாண்டமான அளவுடைய அந்தச் சிலைதான் பர்மாவிலுள்ள புத்த விக்ரகங்களிலெல்லாம் பெரிய தெனலாம். பக்கத்திலுள்ள படத்தில், விக்ரகத்தின் அருகில் காணும் மனித உருவங்களின் அளவைக் கொண்டு, அந்தச் சிலையின் அளவை ஊகிக்கலாம். அதைப் பார்த்தவுடன் என் மனதில், அன்று அசோக வனத்தில் சிறை யிருந்த சீதாப் பிராட்டியின் முன் நின்ற, அனுமானின் விஸ்வரூபச் சிந்தனை பளிச்சென்று தோன்றியது. அந்த வானளாவிய உருவத்தைக் கல்பனையால் எட்ட முயலுவதற்கு, இந்த புத்தர் சிலை ஒரு தூண்டுகோலாக நின்றது.

பர்மியர்களின் காசித் தலம் ஸ்வேடகான் என்று நான் என் பள்ளிக்கூட நாட்களில் படித்திருக்கிறேன். அதை நேரில் போய் பார்க்க வேண்டுமென்று என் மனம் துடித்துக்கொண்டிருந்தது. பர்மாவில் சமயம் கிடைத்த முதல் நாளே அங்கே சென்றேன்



......இடிந்த கோபுர பீடத்தில் இன்னொரு சிகரம்......

ஸ்வேடகான் கோபுரமே ஒரு தனியழகு. பல அளவுகளிலும், தோற்றங்களிலுமமைந்த புத்த விக்ரகங்கள் சூழ, மாடி மாடியாகக் கட்டப்பட்டுள்ள அந்த கோபுரங்கள், ஜப்பானிய நாகரிகம் கலந்த பர்மியக் கலையின் பிரத்தியட்சச் சின்னங்களாக நிற்கின்றன.

பர்மாவில் இன்றளவும் புத்த மத ஜ்வாலையை அணையவிடாது காப்பாற்றி வருபவர்கள் பர்மியப் பொங்கிகள்தான். அவர்களது வாழ்க்கை நெறியும், சட்ட திட்டங்களும் மிக மிக உயர்ந்தவை.

பர்மாவில், ஒவ்வொரு பர்மியனும் ஒரு நாளைக்காவது பொங்கியின் அந்த மஞ்சள் உடைகளை யணிந்து, பொங்கிகளின் "சானி"ல் (மடம்) வாசம் செய்யாவிடில், தன்னை ஒரு உண்மையான பௌத்தனாகக் கருதமாட்டான். அந்த உடைகளுக்கும், பொங்கி வாழ்வுக்கும் அவ்வளவு மதிப்பிருக்கிறது.

பொங்கியாக வாழ முடிவு செய்யும் பர்மியன் ஒவ்வொருவனும், அதற்காக ஏழு வருஷ காலம் விசேஷப் பயிற்சி பெறவேண்டும். யோக சிந்தனை, பலனைப் பரித்தியாகம் செய்யும் உயர்ந்த கொள்கைப் பயிற்சி, பௌத்த மதக் கோட்பாடுகளைப் பற்றிய கல்வி, ஆகியவற்றில் அந்த ஏழு வருஷங்களும் கழிக்கப்படுகின்றன.

பொங்கியின் தினசரி வாழ்க்கை உறுதியான கட்டுப்பாடுகளும், நியமங்களும் கொண்டது. தினசரி அதிகாலையில் குளிர்ந்த ஜலஸ்நானத்துடன், அவர்கள் வாழ்க்கையைத் தொடங்குகிறார்கள். அதன்பின் தியானத்தில் அமர்கிறார்கள்.

தினம் ஒரு வேளைதான் உண்பார்கள். அதுவும் கோஷ்டி கோஷ்டியாக, நகரத்து வீதிகளிலும், கிராமங்களிலும் சுற்றிப் பிட்சையெடுத்தே உண்பார்கள். பொங்கிக்கு ஜாதிமத பேதங்கள் கிடையாது. யாருடன் வேண்டுமானாலும் கூடியிருந்து உண்பார்கள். ஆனால் அவர்களது மடத்திற்குள்தான் சாப்பிடுவார்கள். பட்சிகள், மிருகங்களையும் கூடவைத்துக்கொண்டு சமபந்தி போஜனம் செய்வார்கள்.

பிற்பகலிலும், மாலையிலும் அவர்கள் மத விசாரங்களிலும், போதனைகளிலும் காலம் கழிக்கிறார்கள். இரவில் மறுபடி ஒரு ஸ்நானம், ஒரு கப் டீயுடன் அவர்கள் நாள் முடிவடைகிறது.

இவ்வளவு உயர்ந்த கொள்கைகளும், நியமங்களு முடைய

......ஒரு நாளைக்காவது பொங்கி உடையில்......

பொங்கிகள், சமீபகாலக் கலவரங் களுக்குக் காரணமாக இருந்தார் கள் என்ற செய்திகள் மனதை எவ்வளவு துன்புறுத்துகின்றன!

ஸ்வேடகானைப்போல, அடுத்த படியாக பர்மாவிற்கு வருபவர்கள் மனதைக் கவருவது பெகு. இங் குள்ள ஒரு கோபுரத்தின் சிகரம் இடிந்து விழுந்து கிடக்கிறது. பர் மியர்களுக்கு கோவிலைவிட கோபு ரம்தான முக்கியமாம். ஆகையால் விழுந்து கிடக்கும் சிகரத்தையே பீடமாக வைத்து அதன்மேல புதியதாக ஒரு கோபுரம் கட்டி யிருக்கிறார்கள். இந்தப் புதிய கோபுரம் அழகு நிறைந்த சித்திர வேலைப்பாடுகளுடன் விளங்கு கிறது.

ஸ்வேதலாங் என்னுமிடத்தில், ஒரு தகரக் கொட்டகைக்குள் படுத்துறங்கும் மாதிரி அமைக்கப் பட்டபிரம்மாண்டமான ஒருபுத்த விக்ரக மிருக்கிறது. இந்த விக் ரகம் சுண்ணும்பு செங்கலால் ஆக் கப்பட்டுள்ளது. இதன் நீளம் சுமார் நூற்றிருபது அடி.



... ஸ்வேதலாங்கிலுள்ள புத்த விக்ரகத்தின் பாதம் ...



......இடியால் சிதறிய பெகு கோபுரம்......

இந்த விக்ரகம் பர்மியச் சித்திரக்கலை யைப் பற்றிய ஆராய்ச்சி செய்ய விரும்பு கிறவர்களுக்கு ஒரு சிறந்த சாதனமாகும். காதிலிருந்து தொங்கும் குண்டலங்களும், மெல்லியதாக சாமுத்திரிகா லட்சணம் விளங்கச் செதுக்கப்பட்டுள்ள கைகளும், புத் தரின் தெய்வீக அம்சத்தை எடுத்துக்காட் டும் அழகுகளாக அமைந்துள்ளன.

விக்ரகத்தைச் சுற்றிப் பார்த்து வருகிற வர்கள், அதன் பாதங்களின் அழகைக் கண்டு வியக்காமலிருக்க முடியாது. இங்கே தரிசனத்திற்கு வருகிறவர்கள், பெட்டி பெட்டியாக மெழுகு வத்திகளை வாங்கி, தங்கள் கையாலேயே ஏற்றி வைத்து, விக்ர கத்திற்கு மலர் சாற்றி, முழங்கால் மண் டியிட்டு வணங்குகிறார்கள்.

விக்ரகத்தின் அருகிலுள்ள குளத்தில் அழகாகத் துள்ளி விளையாடும் பொன்னிற மீன்கள் நிறைந்திருக்கின்றன. தரிசனத் திற்கு வருகிறவர்கள், பக்கத்திலுள்ள கடை களிலிருந்து "பொறி" வாங்கி இந்த மீன்க ளுக்குப் போடுகிறார்கள். அவை மந்தை மந்தையாய், பொன்னொளிமின்ன ஓடிவந்து உண்பது நேத்ரானந்தமாக இருக்கிறது.

பர்மிய ஜனங்களின் உடையலங்காரங் களே கண்ணுக்கினிய ஒரு காட்சி. வித விதமானவர்ண உடைகளை யணிந்து, அவர்கள் தலையில் ஒரு கைக் குட்டையை ஒரு தினுசாகக் கட்டுகிறார்கள். அதைக் கட்டும் பாணியே, அவர்களது உல்லாச வாழ்க்கை மனப்பான்மையை எடுத் துக் காட்டுவதுபோல இருக்கும். பர்மியர்கள் பொது வாக அன்பும், தாராள புத்தியும் படைத்த வர்கள். ஆனால் உணர்ச்சி வேகம் நிறைந்த வர்கள்; ஆகையால் வெகு சீக்கிரத்தில்—தொட்டவுடன்—பொங்கி யெழுந்து விடக் கூடியவர்கள்.

சமீபகாலத்திற்கு முன் நடந்த கலவரக் கலகங்களில்கூட, சில பர்மியர்கள், குரோத மனப்பான்மையின்றி, அங்குள்ள இந்தியர் களுக்கு ஏராளமாக உதவி செய்தார்கள்.

பர்மிய ஸ்திரீகள் சுயேச்சை யுணர்ச்சி யும், உழைப்பும், புத்திகூர்மையு முடைய வர்கள். பர்மியக் குடும்பத்தில் அவள் தான் ராணி. புருஷர்கள் வேலை செய்யும் உற்சாக மற்றவர்கள். ஆதலால் பெரும் பாலும், ஸ்திரீகளிடமிருந்து பராமரிப்பை எதிர் பார்க்கும் நிலைமையிலிருக்கிறார்கள்.

பர்மியக் கலைகளும், தொழில்களும் ரொம்ப ரஸமானவை. அரக்கு வேலைக ளில், நமது கண்டத்திலேயே, அவர்கள் பிரத்யேகமாகப் பிரசித்திப் பெற்றவர் கள். அந்தத் தொழிலின் பிறப்பிடமே பர்மாதான் என்னலாம். ஆயினும் அவர் கள் தயாரிக்கும் சாமான்களில், சீன தேசத் துப்பாணி கலந்திருக்கிறது. அவர்களது தினுசு தினுசான மாதிரிகளை அவர்கள்

......ஸ்வேடகான் கோபுரம்......

அணைக்கும்போது பாரக்க ரொம்ப ரஸமாக இருக்கும்.

பர்மாவிற்கு ஒரு முறை போய் வருவது ஒருவரது வியவகார ஞானத்தையும், அனுபவத்தை யும வளர்க்கப் பேருதவியாக இருக்கிறதென்று சொல்லலாம். அந்த நாட்டின் அழகிய காட்சி களும், உல்லாச வாழ்க்கையில் மோகம் கொண்ட ஜனங்களும், புத்த மடாலயங்களும, பொங்கி களும் யாவும் மனதைக் கவரு கின்றன.

ரங்கூன் ஹார்பருக்குள் நுழையும்போதே, தூரத்திலி ருந்து, தங்கமயமாகப் பிரகாசித் துக்கொண்டு காட்சியளிக்கும் ஸ்வேடகான் கோபுரத்தின் கம் பீரத் தோற்றம், நெஞ்சில் எழுப் பும் உணர்ச்சி வேகம், ரங்கூனை விட்டுப் புறப்படும்போதும் எழு கின்றது.

ரங்கூனை விட்டுப் புறப்படும் போது, கடலில் எங்கள் கப்பலு

......பர்மிய பிட்சு அல்லது பொங்கி......

டன் விளையாடிய கடல் பறவைகள் என் மனதைக் கவர்ந்துவிட்டன. கூட்டம் கூட் டமாக அவை அங்கு விளையாடுகின்றன. பெரும்பாலும் இந்தப் பறவைகளின் உடல் வெண்மையாவும், சிறகுகள் சிவப்பு அல்லது கருப்பாகவும்இருக்கின்றன.

இந்தப் பறவைகள் நாற்பது ஐம்பது மைல் தூரம்வரை கடலில் கப்பலைத் தொடர்ந்துவருகின்றன. பர்மாவுக்கு வந்து போகிறவர்களை அவை, கப்பலுடன் வந்து வழியனுப்புவது போல இருக்கிறது. அவை நடுக் கடலில் மிதக்கும் 'கப்பல் வழி காட் டிக்குடங்கள்' போல, நிம்மதியாக ஜலத்தின் மேல் அமர்ந்து, மீன்களைப் பிடித்துத் தின்கின்றன.

இவை புத்தி கூர்மையும் தீரமும் உள்ள பறவைகள். கப்பல் மேல் தட்டிலிருந்து பிரயாணிகள் நீட்டும் உணவுத் துண்டு களை இவை அருகில் வந்து கொத்திச் செல்லுகின்றன. ஒரு பறவைக்



......பள்ளிகொண்ட புத்தர்......

குக் காய்ந்து இறுகிப்போயிருந்த ஒரு துண்டு ரொட்டியைப் போட்டபோது, அது புத்தி கூர்மையுடன், அந்தத் துண்டைக் கடல் நீரில் நனைத்து ஊறவைத்து விட்டுத் தின்றது!

பிரிட்டிஷார் முதல் முதலாக பர்மாவிற்குள் நுழைந்ததற்கு, இந்தப் பறவைகள் தான் காரணமென்று சொல்லுகிறார்கள். முதல் பிரிட்டிஷ் கப்பலை இந்தப் பறவைகள்தான் பர்மாவுக்கு வழிகாட்டி அழைத்துச் சென்றனவாம்.

இந்தக் கதையில் எவ்வளவு உண்மையிருந்தாலும் சரி. பொதுவாக இவற்றை "மாலுமிகளின் நம்பிக்கை" என்று அழைக்கிறார்கள். இவை எங்கள் கப்பலை வழி யனுப்பிய வேடிக்கையைக் கண்டு நானடைந்த வியப்பை மறக்கவே முடியாது.



......மாலுமியின் நம்பிக்கை......

அதேபோல நான் பர்மாவில் கழித்த அந்த சந்தோஷ நாட்களையும் மறக்கமுடியாது. ஊருக்குப்போகிறோம், உற்றார் உறவினரைச் சந்திக்கப் போகிறோம் என்று மனதில் எழும் சந்தோஷத்தையும் மீறி, பர்மாவை விட்டுப் போகிறோமே என்ற வருத்தம் எழுந்தது மனதில் என்றால் பர்மா என் மனதை எப்படிக் கவர்ந்து விட்டது என்பதைச் சொல்லவேண்டுமா?

இன்று பர்மாவிலிருந்து எழும் "போ பாமா" (பர்மா பர்மியருக்கே) என்ற கூச்சல் காதில் விழுகிறது. பத்திரிகைகளில் வரும் செய்திகளைப் படிக்கும்போது மனம் கலங்குகிறது.

இந்தியர் பர்மாவுக்குப் போனது சரித்திரமாகிவிட்டது. அவர்கள் அங்கு வெறும் கையுடன் போனவர்களுமல்ல. நமது நாகரிகம், மதக் கோட்பாடுகள் ஆகியவற்றைக்கொண்டு சென்று, அங்கே பரப்பினார்கள். பின்னால் நமது முதலும் அங்கே சென்றிருக்கிறது. பிரிட்டிஷார் பர்மாவை இந்தியாவுடன் சேர்ப்பதற்காகச் செய்த யுத்தங்களின் செலவும், இந்தியாவின் கணக்கி



......ஸ்வேடகான் படிக் கோபுரம்......

லேயே எழுதப்பட்டது. ஆனால் இன்று பர்மாவை இந்தியாவிலிருந்து பிரிக்கும் போது, நம்மவர்களது உயிருக்கும், உடைமைக்கும் அபாயம் விளைவிக்க முயலுவதைக் கண்டு மனம் கலங்காமலிருக்க முடியுமா?

பர்மியர்கள் சுகவாசப் பிரியர்கள். ஆகையால் நம்மவர்கள் அங்கு போய், அந்த நாட்டையும் வளப்படுத்தி, அவர்களது சிறு தொழில்களையும் தாங்களே செய்து கொடுத்து, ஊன்றிக்கொண்டார்கள். அதேபோல அந்த நாட்டில் பெரிய வியாபாரங்களுக்கும் முதல் போட்டார்கள்.

பர்மாவின் முக்கியமான வியாபாரங்கள் வெள்ளையர் கையிலிருக்கிறது. ஆனாலும் நம் நாட்டவரும் அந்த நாட்டு வியாபாரத்தில் ஒரு முக்கியமான பகுதியை வகிக்கிறார்கள்.

இவ்வாறு பல நூற்றாண்டுகளுக்கு முன்—நமது சோழமன்னர்கள் காலத்தில்—ஆரம்பித்த பர்மா—இந்திய உறவில் இவ்வளவு கசப்பை விளைவிக்க முயலுகிறவர்களை எண்ணும்போதுதான், மனம் அதிக வேதனையடைகிறது.

ஆயிரத்தைச் சம்பாதியுங்கள்! **இந்திய** ஆயிரத்தைச் சேகரியுங்கள்!

வாசனைத் திரவியங்கள்

நல்ல வாசனைத் திரவிய வியாபாரம் செய்வதற்கான வஸ்துக்கள் எம்மிடமே விற்பனைக்குக் கிடைக்கின்றன. மிகப் பெயர்பெற்ற (Pico's Horse Brand Industrial Perfumes) பிகோஸ் (குதிரை மார்க்கு) "சுதேசி" கைத்தொழில் வாசனைத் திரவியங்கள்தான். சிறந்த கூந்தல் தைலங்கள், சோப்புகள், ஊதுவத்திகள், வாசனைப் புகையிலை, பாக்கு, பொடி, ரோஸ்வாட்டர், பன்னீர், ஓமம் வாடர், வாசனை எண்ணெய்கள், வாசனைப் பவுடர், (முகத்தில் பூசிக் கொள்ளும் பவுடர்) இதர நவீன நாடகமேடைக்கான அழகுண்டாக்கும் டாய்லெட்டுகள் இவற்றைச் செய்யத் தகுந்த பொருள்களைப் பெற்றிருக்கின்றன. எல்லாவிதமான வாசனைப் புஷ்பங்களின் ரஸமும், சுகந்தப் பொடியும், கலர்களும் எம்மிடம் மலிவான விலைக்குக் கிடைக்கும். விலை அன்னிய தேசத்தைவிட நூற்றுக்கு 25—30 வீதம் குறைவு. எனவே சுதேசி சாமான்களை ஏன் வாங்கக் கூடாது? இலவச கேட்லாகிற்கு எழுதவும். கடிதங்கள் ஆங்கிலத்தில் எழுதவும்.

D. G. GORE,
(PERFUMERS)
31, MANGALDAS ROAD, — BOMBAY, No. 2

டி. ஜி. கோரே,
(வாசனைத்திரவிய வியாபாரிகள்)
31, மங்கள்தாஸ் ரோட் — பம்பாய், நெ. 2.

சிம்ப்ளெக்ஸ்

Simplex



தற்கால தியேட்டர்களின் தேவையைப் பூர்த்தி செய்ய வல்லது **"சிம்ப்ளேக்ஸ்"** டாக்கி கருவிகளே; டபிள் எக்விப்மெண்டு சிம்ப்ளேக்ஸை உபயோகிப்பதால், ரீலை மாற்றவும், சுற்றவும் காலதாமதமாவது இல்லை. **சிம்ப்ளேக்ஸ் டபிள் எக்விப்மெண்டு** வைத்திருப்பவர்களுக்கு அரைமணிக்கொரு தரம் ரீலை எடுப்பதும், போடுவதும், சுற்றுவதும் போன்ற கர்ணாடகக் காலத்தொல்லைகளிராது. **சிம்ப்ளேக்ஸின்** அருமையான உழைப்பையும், அதன் தொனியையும் கண்டு, பலர் பரம திருப்தி கொண்டிருக்கிறார்கள். அதனால் தாங்கள் கண்ட லாபத்தையும்பற்றி பெருமையாகச் சொல்லுகிறார்கள்.

★

டூரிங் சினிமாக்களுக்கென்றும், நிரந்தர தியேட்டர்களுக்கென்றும் போர்ட்டபிள் மாடல்களும், ஸ்டாண்டார்டு மாடல்களும் ஸ்டாக்கிலுள. டாக்கி மெஷின்களுக்குள் குறைந்த விலையில், நல்ல டபிள் எக்விப்மெண்டு **சிம்ப்ளேக்ஸ்** ஒன்றே.

★

கொலம்பியா கார்பன்: 'ஆர்க் மிர்ரர்'களுக்கேற்ற உயர்ந்த ரக கார்பன் 'கொலம்பியா' ஒன்றுதான் என்பதை அதை உபயோகித்தவர்கள் அத்தாட்சியுடன் கூறுகிறார்கள். அதோடு அவர்கள் மறுபடி வேறெதையும் உபயோகிப்பதில்லை என்பதிலிருந்தே **'கொலம்பியா கார்பன்'**களின் மேன்மை தெரியவரும்.

ஸோல் ஏஜண்டுகள்:

சென்ட்ரல் டாக்கி எக்விப்மெண்ட் கம்பெனி,

தலைமை ஆபீஸ்: **கல்கத்தா** | **1/18 மவுண்டு ரோடு, மதராஸ்** | கிளை: **டெல்லி**

Every Thing for Printers

Apply to:

MODERN MACHINERY COMPANY

Telephone No. 4246

1, Phillips Street, G. T., MADRAS.

Stockists of:

John Kidd's Printing Inks and Roller Composition
English Brass Rules
,, Leads
,, Wires and Staples
,, Forme Furniture

Importers of:

Cylinder Presses
Treadle Platens
Cutting Machines
Wire Stitching Machines
Perforating Machines
Corner Rounding, Eyeletting and Punching Machines
Numbering Machines
Lead & Rule Cutters and Mitering Machines, Etc., Etc.
TYPES—Book and Jobbing

Sole Agents for:

The Types and Brass Rules of Messrs. H. Berthold A. G. Berlin.

Manufacturers of:

Ruling Machines, Binders' Cutting Presses, Sewing Presses, Cases, Cabinets, Stands and all Printers' Accessories.



முதல் பிடில்

ந. பிச்சமூர்த்தி

நடு நிசி. ஒரு சின்னக்குரல்—குழந்தை கத்துவது போல. ஒரு நீண்ட எதிர்க்குரல்—சமாதானம் சொல்லுவதுபோல. சின்னக்குரல் பழுத்து வேதனை அடைந்தது. எதிர்க்குரல் ஏங்கிக் கனிந்து ஓலமாயிற்று. தெருவாசிகளின் தூக்கம் கலைந்தது. ஒவ்வொருவராக எழுந்து மாடியிலிருந்து இருளில் கூர்ந்து பார்த்தனர். முதலில் ஒருவர் கண்ணிலும் ஒன்றும் படவில்லை. ஆனால் திகிலை விளைவிக்கும் அந்த ஓலம் மட்டும் நிதானமாய் போகப்போக உயர்ந்து கொண்டே போயிற்று. கடைசியில் அந்தக் குற்றவாளிகள் தட்டுப்பட்டார்கள். இரு காதலர்கள்! ஒரு வீட்டின் கூரையின் மேல் உட்கார்ந்து காதலியைக் கூவிஅழைத்துக்கொண்டிருந்தது ஆண்பூனை. நாலுஅடி தூரத்தில் ஒரு ஜன்னலின் உட்புறத்திலிருந்து பெண்பூனை ஆறுதல் சொல்லிக்கொண்டிருந்தது. அந்த காதலர்களுக்கு இனிப்பான அந்த சல்லாபம், தெரு வாசிகளுக்கு கர்ண கொடூரமாய் இருந்தது.

"சூ சூ" என்று ஒருவர் மாற்றி ஒருவராகக் கத்தினார்கள். காதலுக்கு கண்மட்டுமல்ல, காதுகூட கிடையாதுபோல் இருக்கிறது. பூனைகள் இருந்த இடத்தைவிட்டு நகரவுமில்லை. காதல் தீ மூளப் பாடுவதை நிறுத்தவுமில்லை.

நிமிஷத்திற்கு நிமிஷம் பாட்டு ஓங்கி, இரவின் நிசப்தத்தில் பயங்கரத்தின் பிரத்யக்ஷ உருவாயிற்று. வந்த ஆத்திரத்தில் தெருவாசி ஒருவர், எதையோ எடுத்து பூனையைப்பார்த்து விட்டெறிந்தார். அதற்குப் பிறகு எழுந்த குரல் மாறியிருந்தது. ஒரு நீண்ட ஓலம், அவ்வளவு தான். அப்புறம் ஆண்பூனையின் குரல் கேட்கவில்லை. மீளவும் நடுநிசியின் மோனம்....

மறுநாள் காலை மாடியில் ஒரு ஆண்பூனை செத்துக்கிடந்தது. வீட்டுக்காரர் அதைத்தூக்கி கொல்லை மைதானத்தில் எறியச் சொன்னார்.

பூனையின் சவம் மெத்தென்ற பொருள்மீது வந்து விழுந்தது.

"என்ன மேலேவந்து விழுகிறாய்" என்றது அந்த மெத்தென்ற பொருள்.

"கோபித்துக் கொள்ளாதே. நான் வேண்டுமென்று செய்யவில்லை. பிசகு அந்த வீட்டு மனுஷன் மேலே" என்று சமாதானம் சொல்லிவிட்டு, பூனையின் உடல், மேலே கேட்டது. "அது போகட்டும். என்னைப்போல நீயும் ஏதாவது செய்துவிட்டு இந்த மாதிரி தண்டனை அடைந்திருக்கிறாயா என்ன—மைதானத்திலே ஈ மொய்த்துக் கிடக்கிறாயே?"

அங்கே கிடந்தது செத்துப் போன பந்தயக் குதிரை ஒன்று.

"என் எஜமான் ஒரு இந்தியன். பந்தயப்பித்து. எனக்கு முந்தி எத்தனையோ குதிரையை வாங்கி வளர்த்து, பந்தயம் ஓட்டியிருக்கிறான். ஆனால் அவனை பிடித்த துரதிருஷ்டம் ஒரு தடவை கூட ஜயிக்கவில்லை. ஜயம்தான் கிட்டவில்லையே, இந்த விஷயத்தை அடியோடு மறந்து விடக் கூடாதா? அதுதான் இல்லை. கடைசித் தடவை என்று சபதம் கூறிக்கொண்டு தன் சொத்து முழுவதையும் விற்று என்னை வாங்கினான். எனக்காக அவ்வளவு கஷ்ட நஷ்டப்பட்ட மனிதனுக்கு நான் துரோகம் செய்யவில்லை. பந்தயத்தில் முதலாவதாகவே வந்துகொண்டிருந்தேன். ஜனங்களுடைய உத்சாகத்தையும் என் எஜமானனுடைய கர்வத்தையும் வர்ணிக்கத்தரமல்ல. பந்தயம் முடியும் இடம்வந்தது. என்ன காரணத்தாலோ என் கால்தடுமாறி, கீழே விழுந்துவிட்டேன். முன்னங்கால் இரண்டும் என்னுயிற்றே, எழுந்திருக்க முடியவில்லை. நான் கீழே விழுந்ததும் இரண்டாவதாக வந்துகொண்டிருந்த இரும்பு வர்ணக் குதிரை ஜயித்து வெற்றிமாலை சூடிற்று. என் எஜமானன் பந்தயவெறியன் அல்லவா? என்மீது பிறந்த வெறுப்பில் கைத்துப்பாக்கியால் அந்த இடத்திலேயே சுட்டுப்போட்டுவிட்டு திரும்பிப் பார்க்காமல் போய்விட்டான். அதுமுதல் அவனுக்குப் பித்துப் பிடித்து விட்டதாம். இந்த மைதானத்தில் என்னைத் தூக்கி எறிந்துவிட்டார்கள். ஒரு வாரமாக இங்கே கிடக்கிறேன்—கேட்பாரற்று. இப்பொழுது நீ வந்து சேர்ந்திருக்கிறாய்—தோழனாக." என்று சொல்லி நிறுத்திற்று குதிரையின் சவம்.

"அப்பொழுது சரிதான். என்னைக்கொன்றவன் மீது பழிவாங்க வேண்டுமென்று நினைத்துக் கொண்டேன். நீ சொல்வதைப்பார்த்தால் மனித ஜாதியையே பழிவாங்க வேண்டுமென்றுதோன்றுகிறது. எப்படிப் பழிவாங்குவோம் சொல்லு" என்றது பூனை.

"நாம் பழிவாங்க யோசிக்க வேண்டாம். தானாக நடக்கும் பார்! மனிதன் மண்மீது இருக்கும் மட்டும் நம்மை மறக்கமுடியாமல் ஆகிவிடும் பாரேன்."

"எனக்கென்னவோ இதில் நம்பிக்கை இல்லை. வசவுக்கு வசவு, பிறாண்டலுக்குப் பிறாண்டல், கொலைக்கு கொலை—இதுதான் நான் அறிந்த சட்டம்."

"பின்னொரு சட்டமும் உண்டு. மரத்தை வெட்டுகிறார்களே, அதற்காக, கோடாலிக் காரனுக்கு நிழல்தரமாட்டேன்என்கிறதா?"

"இதெல்லாம் மனிதன் சொல்கிற கட்டுக்கதை. எனக்குப்புரியாது. என் கருத்தை அப்பொழுதே சொல்லிவிட்டேன். பிறகு உன்னிஷ்டம். ஆனால் ஒன்று. நான்மாத்திரம் தனித்து நின்றால் என்ன செய்ய முடியும்? நீ சொல்கிறபடி கேட்கிறேன்."

"வா வழிக்கு. நாம் இருவரும் மனம் ஒற்று சும்மாக் கிடந்தால் அதுவே பழி வாங்குவதற்கு மேல் பலனளிக்கும் பாரேன்...."

இரண்டு மூன்று நாளைக்குப் பிறகு அந்த மைதானத்தின்வழியாகவந்தான் ஒரு பித்துக்குளி இந்தியன். வாய் ஓயாமல் குதிரைகளைப்பற்றி பாடிக்கொண்டிருந்தான். மைதானத்து ஓரத்தில் ஒரு பெரியமரம் வளர்ந்திருந்தது. அதன் அடிபாகத்தில் போய் நின்றுகொண்டு, குதிரைகளைப்பற்றி ஒருஆவர்த்தம்வைத்துவிட்டு, ஒரு பத்து கஜம் விழுந்தடித்து ஓடினான்.

குதிரையின் சிதைந்த உடல் கண்ணில் தட்டுப்பட்டது. அதன் அடர்ந்த வெள்ளை வால்மயிர் அவன் கவனத்தை இழுத்தது. ஒரு பிடிமயிரை உருவி எடுத்துக் கொண்டு ஓடினான். பூனையண்டை கம்பிகள்போல் இறைந்து கிடந்த நரம்புகள் தடுக்கிவிட்டன. அவற்றில் நாலைந்தைப் பொறுக்கி எடுத்துக்கொண்டான். நடுவழியிலே, பொன் வர்ணத்தில் ஒரு பிரம்பு கிடைத்தது. அதை எடுத்து குதிரை வால் மயிரால் ஒரு வில் கட்டினான். நான்கு கஜத்திற்கப்பால் ஒரு காய்ந்த மரமொன்றிருந்து. அதனடிப்பாகத்தில் ஒரு பொந்து. அங்கு போய் உட்கார்ந்தான். கை விஷமம் செய்ய ஆரம்பித்தது. கையிலிருந்த நரம்பை எடுத்து பொந்தின் வாயில் நெடுக்காகக் கட்டினான். வில்லை எடுத்துக் குறுக்காக இரண்டு தரம் இழுத்தான். சுத்தமான ஸ்வரங்கள் எழுந்தன. அனுபாசமாக பிறந்தது ஒரு புதிய சங்கீத வாத்யம். அதுதான் முதல் பிடில்!

நல்ல காபியென்றால் உடனே கோவை, கோயம்புத்தூர் காபி ஸ்டோர்ஸ் பெயர்தான் ஞாபகம் வரும்

விடிந்தது

பி. வி. சுப்ரமண்யம்

எல்லோரும் விடுமுறை நாட்களை சுலபமாகக் கழிப்பதற்கு ஒரேவழிதானுண்டு. அது, சாப்பிட்டுவிட்டு சுகமாகத் தூங்குவதே. ஏன், நானும் அப்படிச் செய்தேன் என்றே வைத்துக்கொள்வோமே.

ஆனால் எதற்கும் என் நண்பன் கைலாசம் இருந்தானே, அவன் ஒரு விதிவிலக்கு. அவன் போக்கே தனி. அதுவும் இந்த வருஷம் லீவுக்கு இங்கே வந்த போது சுத்தப் பைத்தியம் போலக் காணப்பட்டான். முன்னைப்போல் என்னோடு கூட கலகல வென்று பேசுவதில்லை. ஏதோ, தனிமையில் யோசனை செய்து கொண்டே உட்கார்ந்திருப்பான். திடீரென்று எதையோ நினைத்துக்கொண்டு பெருமூச்சு விடுவான். ஏனோ! ஒருவேளை "நாடகமே உலகம்—உலகமே ஒரு நாடக மேடை" என்றெல்லாம் கேட்டுக் கேட்டு, உலகத்தினிடத்திலேயே ஒரு வெறுப்பு வந்து விட்டதோ என்னமோ. யார் கண்டது?

விடுமுறை நாட்களில் பதினைந்து ஓடி மறைந்தன. சனியன் பிடித்த நாட்கள் பள்ளிக்கூட மிருந்தால் ஓடவே ஓடாது. லீவு விட்டாய் விட்டதல்லவா, இனிமேல் கிண்டி குதிரைப்பந்தயத்தில் குதிரைகள் ஓடுகிற மாதிரி நாக்கைப் பிடுங்கிக்கொண்டு ஓடும்.

இதற்கிடையில் கைலாசமும் ஏதோ ஒரு ஊருக்குப் போய் விட்டான். போகும் போது மட்டும் 'போய் வருகிறேன்' என்று ஒரு வார்த்தை சொன்னானே ஒழிய, போய் வெகு நாள் வரைக்கும் கடிதமே போடவில்லை. ஒரு நாள் சாப்பிட்டு விட்டுத் திண்ணையில் உட்கார்ந்திருந்தேன். போன 'கிரிஸ்துமஸ்' விடுமுறைக்கு வந்தபோது வாங்கிக்கொண்டுவந்த ஒரு பத்திரிகை கிடந்தது. எடுத்துப் படிக்கலாம் என்று எண்ணிக் குனிந்தேன்.

யாரோ வரும் காலடிச்சத்தம் கேட்டது. "யாரது?" என்றேன்.

"ஐயா. எஸ். கிருஷ்ணமூர்த்தி பி. எ., நீங்கள் தானா?"

கேட்டது தபால் காரன். கடிதம் போடுவதைவிட, வருவதாயிருந்தால் தான் எனக்குக் குதூகலம். 'ஆம்' என்றேன்.

அவன் மூக்குக் கண்ணாடியை எடுத்துப் போட்டுக்கொண்டு கால் மணி தேடிய பிறகு ஒரு கடிதத்தைக் கண்டு பிடித்துக் கொடுத்தான். அது கைலாசத்தினிடமிருந்து வந்திருந்தது. இவ்வளவு நாள் தாமரை இலைத்தண்ணீரைப்போல் இருந்துவிட்டு, திடீரென்று கடிதம் போட்டதில் ஏதோ விசேஷம் இருக்கத்தான் வேண்டும் என்று எண்ணியதில் தப்பொன்றுமில்லை. அந்த வயதில் எல்லோரையும் பிடிக்கும் வியாதி அவனையும் பிடித்துவிட்டது! அழகில் ரவீந்திர நாதரையும், ஆர்வத்தில் பாரதியையும் மிஞ்சி உணர்ச்சிகளைக் கொட்டி இருந்தான் கைலாசம். 'பைத்தியம் பிடித்தவன் போல் இருந்தான்' என்று சொன்னேன். இல்லை, இல்லை, தவறிப் போய்ச் சொல்லிவிட்டேன். அது ஏக்கம். காதலின் ஏக்கம். இதோ அவன் கடிதம்:

"என் அரிய கிட்டு,

இவ்வுலக மேற்போக்கை மாத்திரம் கவனித்து, உள்ளிருப்பதை அறியாதவர்கள் என்னை இரக்கமில்லாமல் மதிப்பிடுவது போல், நீயும் "கைலாசம் மாறிவிட்டான். புதியவனாகப் போய் விட்டான். வாய் திறந்து பேசக்கூட மாட்டேன் என்கிறான். அவனுக்கு வந்த மகிமை! 'சட்டம் படிக்கப்போய் விட்டோம்' என்ற கர்வம்" என்றெல்லாம் நினைக்கமாட்டாய் என்று நம்புகிறேன். நமக்குள் இருப்பது ஆத்ம நட்பு. பாஷை, பேச்சு, இவைகளைத் தாண்டி நிற்பது.

"கிட்டு, எல்லை காணமுடியாத துன்பத்தை மனதிலடக்கிக்கொண்டு, அமைதியைத் தேடி உன்னிடம் வருகிறேன். இந்தக் கடிதம் எழுதுவதிலேயே எனக்கு நிம்மதி உண்டாகிறது. மனத்திலிருக்கும் பாரம் கொஞ்சம்குறைந்ததுபோல் தோன்றுகிறது. அப்பா, நிம்மதி என்பது கொஞ்சமாகிலும் எனக்கு வருமா?

"என்னுடைய இந்த சீர்கெட்ட நிலைமைக்குக் காரணமெல்லாம் உனக்கு நன்றாகத் தெரியுமென்று எண்ணுகிறேன். இதில் புதிதென்ன இருக்கிறது? 'துக்கம், கஷ்டம், கவலை இவைகளுக்கு மூலாதார மெல்லாமே பெண்கள் தானே! இதற்காக இவ்வளவு வருத்தப் படுவானேன்' என்று ஒரேயடியாக என்னைக் கொன்றுவிடாதே. மற்ற பெண்களையும் சொன்ன அதே மூச்சில் சரோஜாவையும் பற்றிச் செல்லலாமா?

"கடைசியில் அவளை யாரோ ஒரு பிரம்மஹத்திக்கு இழுத்துக் கொடுக்க தீர்மானித்து விட்டார்கள். அவன் ரொம்பப் பெரிய பணக்காரனும்! ஆம்! மனித சுபாவமே அதுதானே. பணம், பதவி இவைகளிலுள்ள ஆசையை நம்மால் அவ்வளவு சுலபமாக அடக்கிவிட முடிந்தால், நாம் இச் சுவையற்ற வாழ்வை, ஒரே நிமிஷத்தில் திருத்தியமைத்து, நவ யுகத்தையே சிருஷ்டிசெய்துவிட மாட்டோமா? என்னிடம் பணம் இல்லை. ஆகையால் உண்மை யழகின் மேன்மையையும், சந்தோஷ வாழ்க்கையின் இருப்பிடத்தையும் தூரந்திலிருந்தே பார்த்துத் திருப்தியடைகிறேன். 'எனக்குக் கிடைக்காமல் போயிற்றே' என்று எண்ணி எண்ணி ஏங்குகிறேன். ஐயோ, எனக்கே இப்படி திசை தெரியாமலிருக்கிறதே, அவள் மனம் எப்படி மயங்குமோ, தன் கனவு

மலர்கள் கருகிக் கரியாவதைக் கண்டு....? கைலாசம்!

எனக்குத் தலை சுற்றிற்று. சொல்லமுடியாத குழப்பம் ஆச்சரியம்! "போனாலும் போனான்—ஒரு சரியான பேர்வழி தான் சட்ட கலாசாலைக்குப் போயிருக்கிறான்" என்ற ஆச்சரியம் என் மனதை விட்டு அகலவே இல்லை. மின் வெட்டுகள் போலல்லவா மனதிலெழும் கேள்விகளுக்கு பதில் சொல்லியிருக்கிறான். நான் அவனுக்கு எந்த விதத்தில் உதவி செய்யமுடியும்? நானும் அவனும் சேர்ந்துபபடித்த காலத்தில் "சரோஜினி" என்ற ஜபத்தை நான் அவனிடம் கேட்டிருக்கிறேன். வெகுநாளாக அவர்கள் மனம் ஒன்றுபட்டிருந்தனவென்பது எனக்குத் தெரியும்.

இதற்குப் பிறகு அவன் கடிதமே போடவில்லை. எத்தனை நாட்கள்தான் கிராமாந்திரத்தில் காலம் தள்ளுவது? மேலும் என் மாமா என்னைச் சென்னையில் வந்து இருந்துவிட்டுப் போகும்படி எழுதிவந்த நச்சு வேறு! ஆக எல்லாமாகச் சேர்ந்து என்னை மூட்டை கட்டி பட்டணத்திற்கு அனுப்பி வைத்தன.

ஒருநாள் டிராமிலிருந்து இறங்கி, ஹைக்கோர்ட்டுக்கு எதிரில் போய்க்கொண்டிருந்தேன். மாலை ஏழு, ஏழரை மணி இருக்கும். 'மசண்டை' வேளை. யாரோ எதிரில் போய்க்கொண்டிருந்தது மாத்திரம் தெரிந்ததே ஒழிய ஆளின் அடையாளம் தெரிந்துகொள்ள முடியவில்லை. திடீரென்று கைலாசம் ஞாபகம் வந்தது. அவன் நடைதான் அது. அவன் தான் போய்க்கொண்டிருந்தான்.

அவனைக் கூப்பிட்டே இருப்பேன். சட்டென்று, என் மனதில், 'அவனைப் பின்பற்றிக் கொண்டுபோய், திடீரென்று அவன் கண் முன் தோன்றி, அவனை ஆச்சரியத்தில் முழுக அடிக்க வேண்டும்' என்னும் விளையாட்டு எண்ணம் தோன்றியது. நான்

உயர்தரமான இரும்பு பெட்டிகளுக்கு, M. நாராயணசாமி முதலியார் & சன்ஸ், 58 பிராட்வே, மதராஸ்

அவனைக் கூப்பிடவில்லை. கடற்கரை வரையில் அவனைப் பின் தொடர்ந்தேபோய், கொஞ்ச தூரத்தில் நானும் உட்கார்ந்தேன். இதற்குள் நன்றாக இருட்டிவிட்டது.

களங்கமற்ற வானத்தில் நட்சத்திரப் புஷ்பங்கள் வாரி இறைக்கப்பட்டிருந்தன. அலைகள், சுதந்திரமற்ற அடிமையின் மனம் போல், கரையில் வந்து மோதுவதும் திரும்பிப் போவதுமாக இருந்தன. பெட்டிப் பாம்பாக அடங்கி உட்கார்ந்திருந்தான் கைலாசம் தனிமையில். அவன் முகத்தைப் பார்த்தது முதற்கொண்டு எனக்குச்

சொல்லமுடியாத வேதனை மனதைச் சங்கடம் செய்தது. என் விளையாட்டு புத்தியைக் கண்டு நானே வெறுத்தேன். அவன் இளைத்துத் துரும்பாய்ப் போயிருந்தான். மனத்திலிருக்கும் கவலைகளைக் கூட எய்த்துவிடவேண்டுமென்ற உத்தேசம் போலிருக்கிறது! "எடுத்த மானிட ஜென்மம் வீணாகப் போகுதென் குறை தீர்ந்த பாடில்லை" என்று அடக்கிய குரலில் பாடினான்.

அந்தப் பரிதாபகரமான காட்சியை அதற்கும் மேல் என்னால் பார்க்க முடியவில்லை. "டேய், கைலாசம். ஏய்!" என்று அவனைக் கூப்பிட்டேன். திடுக்கிட்டுப் போய் அவன் என் அருகில் வந்தான். "யாருடா, கிட்டுவா? எப்போது வந்தாய் இந்த ஊருக்கு?" என்றான், கட்டு மரக்கட்டை யொன்றின் மேல் உட்கார்ந்து கொண்டே.

"ஒரு வாரமாகிறது" என்றேன். "அதிருக்கட்டும் நீ எப்பொழுது பட்டணத்திற்கு வந்தாய்? உடம்பு என்ன இப்படி இருக்கிறது-எலும்பாய், ஏண்டா?"

கைலாசம் ரொம்ப அசட்டையாக "ஆமா, உடம்புக்கு என்ன வந்தது,கேடு? எப்படி இருந்தால் என்ன?" என்றான்.

பிறகு இருவரும் பேசவில்லை. ஏதேதோ யோசனை செய்து கொண்டே உட்கார்ந்திருந்தோம். கடைசியில் அவனே ஆரம்பித்தான். "ஏண்டா, கிட்டு. உனக்குச் சரோஜனியைப்பற்றி எழுதி இருந்தேனே இல்லியோடா."

"ஆம்; அந்தக் கல்யாணம் ஆகிவிட்டதா?"

அவன் சிரித்தான். பேய்ச் சிரிப்பு! "ஐயோ பாவம். உனக்கெப்படித் தெரியப் போகிறது, ஊரே அல்லோல கல்லோலப் பட்டது!"—என்று என் வயிற்றில் புளியைக் கரைத்தான்.

"ஏண்டா, என்னநடந்தது சொல்லேன்" என்றேன்.

அவன் சொல்ல ஆரம்பித்தான்: "கல்யாணத்திற்கு ஏற்பாடுகளெல்லாம் வெகு தடபுடலாக நடந்து கொண்டிருந்தன. இருந்தாலும், அவளுக்கு அந்தக் கல்யாணத்தில் கொஞ்சம்கூடப் பிரியம் இல்லை என்று எனக்குத் தெயுயும். என்ன நடந்தாலும் நடக்கட்டுமென்று துணிந்து அவளைத் தனியாகச் சந்தித்துக் கேட்டேன். அவளும் என்னோடு வந்துவிட தயங்காமல் ஒப்புக் கொண்டாள். இருவருமாக இந்த ஊருக்கு வந்து சிந்தாதிரிப்பேட்டையில் ஒரு வீட்டு மாடியில் தங்கினோம். மூன்றாவது மாடி!"

"குழந்தையைக் காணோம்" என்று ஆரவாரம் பேப்பரில் கிளம்பும், சரோஜாவின் பெற்றோர்களிடமிருந்து என்று எதிர்பார்த்தேன். வெளியே அவ்வளவு பகிரங்கமாகத் தெரிந்து விட்டால், வீட்டு கௌரவம் காற்றில் பறந்துவிடும் என்னும் எண்ணமோ என்னமோ தெரியவில்லை. அந்தப் பேச்சையே காணோம். கொஞ்சநாள் வரைக்கும் கரைகாண முடியாத ஆனந்தக் கடலில் முழுகிக்கிடந்தோம். அப்பொழுதே நான் இறந்திருக்கக்கூடாதா!"

"ஏன்?"

"பிறகு தான் தெரிந்தது. அவள் ஒரு அபாயகரமான வியாதியுள்ளவள் என்று. பாதிராத்திரியில் கதவைத் திறந்துகொண்டு வெளியே கிளம்பி விடுவாள். அந்த மாடியின் கைப்பிடிச்சுவர் இருக்கிறதே, அதன் மேல் நள்ளிரவில் ஏறி நடப்பாள்! தூக்கத்தில் நடக்கும் பயங்கர வியாதி! பயங்கரமென்றால் அதற்குமேலில்லை. ஏனெனில் மூன்றாவது மாடியிலிருந்து தவறிக் கீழே விழுந்தால் எங்கே விழவேண்டும் தெரியுமா—? கல் முற்றத்தில்..."

எனக்கு மயிர்க்கூச்செறிந்தது. மெள்ளத் தலை யசைத்தேன். அவன் சொன்னான்;

"இந்த மாதிரி வாரத்துக்கு ஒரு தடவையோ இரண்டோ, மூன்றோ, எனக்குத் தெரியாது. நானே நாலு தடவை பார்த்திருக்கிறேன். ஐயோ கிட்டு! ஒரு நாள் காலையில் நான் எழுந்திருந்து ஜன்னலுக்கு வெளியே எட்டிப் பார்த்தேன். சரோஜா கிடந்தாள்—மண்டை சிதறி...."

அதற்குமேல் அவனால் பேச முடியவில்லை. கண்ணீர் தாரை தாரையாக அவன் கண்களிலிருந்து வழிந்து கொண்டிருந்தது.

மறுநாள் என்னைத் தேடிக்கொண்டு கைலாசம் வருவான் என்று எதிர்பார்த்தேன். அவனுக்கு என் மாமா வீடு மிகவும் நன்றாகத் தெரியும் அவன் வரவில்லை.

காலையில் எழுந்திருந்து காபி சாப்பிட்டதும், கைலாசத்தைப் பார்ப்பதற்காகப் புறப்பட்டேன். போகிற போக்கில் முதல் நாள் அவன் அரைகுறையாகச் சொல்லிவிட்டுப் போன அட்ரஸ் ஞாபகத்திலிருந்தது. அங்கே - அவன் வீட்டில்-ஏகக் கூட்டம். உள்ளே போக முடியவில்லை. போலீஸ் பந்தோபஸ்து அதிகமாயிருந்தது. 'என்ன விசேஷம்' என்று வேடிக்கை பார்ப்பவர்களில் ஒருவனைக் கேட்டேன். ஒரு கிழவி தகவல்கொடுத்தாள்.

"ஒரு வாரத்திற்குமுந்தி, யாரோ ஒரு பொண்ணு மாடியிலே இருந்து விழுந்து செத்துப் போச்சு. என்னமோ வியாதியாம். இன்னிக்கி, அதும் புருசனும் .... அதுவும் விழுந்து செத்துப் போச்சு! அதுக்கும் அதே வியா...."

நான் அதற்கு மேல் ஒன்றும் கேட்கவில்லை.

உள்ளே போகவும் இல்லை;
சக்தி யில்லை.



வர்த்தகம், விருத்தியாக கம்பெனி முன்னேறுகிறது

மூன்றுவதீ வருஷ மதிப்பு, எங்களுக்கு அதிக பலமும், பங்குதாரர், பாலிஸிதாரர்கள் முதலியோருக்கு அதிக லாபத்தையும் கொடுத்திருக்கிறது.

பாலிஸிதாருக்கு அளிக்கப் பட்ட போனஸ் 1000-த்துக்கு இந்த மூன்று வருஷத்துக்கு

பூரண ஆயுள் ரூ. 54.
எண்டோமெண்டு ரூ. 45

பங்குதாரருக்களிக்கப்பட்ட லாபப் பங்கு (dividend) 7% வருஷத்துக்கு

10-வது ஞூ வியாபார மதிப்பு ரூ. 45,00,000 (சுமார்)

சொத்து மதிப்பு ரூ. 15,00,000-க்கு மேல்

இந்தப் பிரதான கம்பெனியில் இன்றே சேருங்கள்

காமன்வெல்த் அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்

பூனு 2

விவரங்களுக்கும், நிபந்தனைகளுக்கும் எழுதுக:

பிராஞ்சு காரியதரிசி
22 பிராட்வே, மதராஸ்

அல்லது

ஆர். என். அபயங்கர், பி.ஏ.எல்எல்.பி.
மானேஜிங் ஏஜண்டு
11, புத்வார்பெட், பூனு

பிராஞ்சுகள் :— பம்பாய் — கல்கத்தா — டில்லி — ஆமதாபாத்

இந்தியா பூராவும் ஏஜன்ஸிகள் உண்டு

எல்லாவிதமான ப்ளாக்குகள்சுத்தமாக செய்து தரப்படும்

எம். ஸி. அப்பாசாமி செட்டி & கோ.
14, ஜோன்ஸ் தெருவு, மண்ணடி, மதராஸ்

BENGAL SILK STORES

76, Godown Street, Madras

காதி
ஸில்க்

நாம் ஆங்கிலம் கற்பானேன்?

நமது பாஷை நமது கல்வி நமது நாகரிகம் இவைகளின் விருத்தியைக் கருதி, நாமே, நமது நாட்டில் ஆங்கிலத்திற்கு உயர்ந்ததோர் இடம் கொடுக்கக் கடமைப் பட்டிருக்கிறோம்....



புரொபஸர்

கே. ஸ்வாமிநாதன்

● ● ●

இந்தக் கேள்விக்கு முதல் விடை மற்றும் சில கேள்விகளே: நாம் சங்கீதம் கற்பானேன்? கனிமரம் வளர்ப்பானேன்? எள்ளில் எண்ணெயைப் போல் 'பகிரங்க ரகசியமாய்' ஆங்கில இலக்கியத்தில் இன்பம் நிறைந்திருப்பதால், இன்பத்தை நாடுவோர் ஆங்கிலத்தை நாடுகின்றனர்.

"ஆங்கிலத்தின் இனிய சுவை நமது கண்ணுக்கும் கைக்கும் எட்டினாலும், வாய்க்கும் நாவுக்கும் எட்டாது" என்று சொல்லி, நம்முள் சிலர், ஆங்கிலத்தைத் தள்ளிவிடப் பார்க்கிறார்கள். இந்தக் கொள்கை நமது அனுபவத்துக்கும், பகுத்தறிவுக்கும் முற்றிலும் முரணாயிருக்கிறது. "லியர்," "ஒதெல்லோ" நாடகங்களின் இறுதியங்கங்கள், பாட்டம் (Bottom), பால்ஸ்டாப் (Falstaff) பேசி நடிக்கும் கட்டங்கள், ஹார்டியின் நாவல்கள், இவற்றைப் படித்து ஆயிரக்கணக்கான தமிழர்கள் கண்ணீர் சொரியவில்லையா, வயிறு வலிக்கச் சிரிக்கவில்லையா? பல நூற்றாண்டுகளாய்ப் பேச்சற்றுப் போன ஸம்ஸ்கிருதம், கிரீக்கு, லத்தீன் முதலிய பாஷைகளிலுள்ள இலக்கியங்களை, லக்ஷக் கணக்கான ஜனங்கள் ரஸபூர்வமாய் அனுபவிக்கவில்லையா? இலக்கியத்தின் ஸௌக்ஷ்மங்கள் ஒரு புறமிருக்க, கணிதம், பௌதிகம், தத்துவம் முதலிய சாஸ்திரங்களிலும், ஆங்கிலத்தின் மூலம் நம்மவர் அடைந்திருக்கும் ஆனந்தத்திற்கு அளவே இல்லை.

"மஹாத்மா காந்தி ஆங்கிலத்தில் புதிய ஏற்பாடு, தோரோ, ரஸ்கின், டால்ஸ்டாய் அருளிய உபதேசங்கள், இவற்றைப் படிப்பதிலும், தம்முடைய அழகிய அறிக்கைகள், தலையங்கங்கள் முதலியவற்றை ஆங்கிலத்தில் வரைவதிலும், பண்டித ஜவஹர்லால் ஆங்கிலக் கவிகளை மனப்பாடம் பண்ணுவதிலும், தமது சுயசரிதையை இயற்றுவதிலும், கடமையொன்றைச் செலுத்தினார்கள்; சந்தோஷம் கொள்ளவில்லை" என்று யார் சொல்லத் தயார்?

தாகூர், ஸரோஜினி தேவி, ராதாகிருஷ்ணன், பட்டாபி ஸீதாராமையா, ஸத்யமூர்த்தி, இவர்களின் பேச்சைக் கேட்ட மேனாட்டார் சிலர், இவ்விந்தியப் பெரியார், தேனில் மூழ்கின ஈக்களைப் போலே, ஆங்கிலச் சொற்றொடர்களில் மதியிழந்தனர் என்று ஸ்துதி - நிந்தை செய்திருக்கிறார்கள்.

1935 வருஷத்திய இந்திய அரசாங்கச் சட்டம் அமுலுக்கு வந்தவுடன், இந்த ஆனந்தம் அத்தனையும் மறைந்துவிடும் என்று எண்ணுவதற்குக் காரணம் ஒன்றையும் காணோம். உண்மையிலே, அடிமை மனப்பான்மை குன்றக்குன்ற, ஆங்கிலத்தின் மூலம் நமக்கு சித்திக்கக் கூடிய ஆனந்தம் அதிகரிக்குமே யொழிய ஒருகாலும் குறையாது.

'ஆனந்தம் என்பது தனிமனிதனுக்குப் போதிய நோக்கமாயிருக்கலாம்; அதன்பொருட்டு அவன் பணத்தைச் செலவழிப்பதும் சிரமத்தை மேற்கொள்வதும் இயல்பே. ஆனால் ஒரு சில மனிதருக்கு ஆனந்தம் விளைவிக்கும் பொருட்டு, அரசாங்கத்தார் பொதுஜனங்களிடமிருந்து வசூலிக்கும் வரிப்பணத்தைச் செலவழித்து, ஆங்கிலக் கல்விக்குரிய வசதிகளை ஏற்படுத்துவது நியாயமா?' என்ற கேள்வி ஒரு நாள் கிளம்பலாம்.

'பிறவியால் சிறுபான்மையராகிய ஐரோப்பியருக்கும், முஸ்லிம்களுக்கும் தத்தமக்குரிய தனிக் கல்வி கற்பிக்கத் தனி ஸ்தாபனங்கள் நிற்கும்வரை, கொள்கையால் சிறுபான்மையராகிய ஆங்கிலப் பித்தர்களின் கல்விச் சௌகரியங்களைக் குறைப்பது சட்டவிரோதம்' என்று வாதிக்கலாம். ஆனால் இந்த வாதம் பிற்போக்கானது, அனாவசியமானது. ஏனென்றால், ஆங்கிலத்தைக் காப்பாற்ற, கவர்னர்களின் விசேஷப்பொறுப்பைக் கூவியழைப்பது, கரும்பு தின்னக் கைவிலங்கு கேட்பது போலாகும்.

நமது பாஷை, நமது கல்வி, நமது நாகரிகம் இவைகளின் விருத்தியைக் கருதி, நாமே, நமது நாட்டில் ஆங்கிலத்திற்கு உயர்ந்ததோர் இடம் கொடுக்கக் கடமைப் பட்டிருக்கிறோம்.

இன்று இந்தியாவில் நூற்றில் ஒருவருக்கு 'இங்லிஷ் தெரியும்' என்ற பேர் இருக்கிறது. ஆனால், உண்மையில், ஆங்கிலத்தை ஆழமாய் உணர்ந்து, ஒரு சுதேச பாஷையையும் நன்றாய் எழுதப் பேச அறிந்தவர்கள், ஆயிரத்தில் ஒருவர் கூடக் கிடையாது. அறைகுறையாய் ஆங்கிலம் கற்றவர்களும், ஆங்கிலம் மட்டும் கற்றவர்களும் பொது ஜனங்களுக்குச் செய்யக்கூடிய நன்மை வெகு சிறிது; பொது ஜனங்கள் எவ்விதக் கல்வியு மில்லாமல் இருந்தால் அவர்களுக்கு எங்கிருந்தும், யாராலும், நன்மை சித்திக்காது. நூற்றில் நூறு பேருக்குச் சுயபாஷையில் கல்வியும், நூற்றில் ஒருவருக்காவது ஆங்கிலத்தில் பாண்டித்தியமும் உண்டானால், ஒழுக்கத்தில் ஒற்றுமையும், சிந்தனையில் சுவாதீனமும் கூடிய ஒரு புதிய இந்திய நாகரிகம் பிறப்பது சாத்தியமாகும். பலவானுக்குத்தான் உணவால் பலம்சித்திக்கும்; நமது சொந்த பாஷையும், சொந்த நாகரிகமும் சக்தியற்றிருந்தால், பிறரிடமிருந்து நமக்கு வரக்கூடிய நன்மை ஒன்றுமில்லை.

நாம் நல்ல நிலைமையிலிருந்தால்; ஆங்கிலத்திலிருந்து நமக்கு வரக் கூடிய நன்மை யாது? ஆங்கிலத்தை எந்த முறையில் உபயோகித்தால் அது நமக்குச் சிறந்த பயன் தரும்?

ஐரோப்பியர், ஆங்கிலோ இந்தியர், ஆங்கிலத்தையே தாய் பாஷையாய்க் கொண்ட வெகு சில இந்தியர், இவர்களைத் தவிரப் பிறருக்கு, அதாவது 100ல் 95 பேருக்கு, ஆங்கிலம் ஒரு கல்விச்

ஓடியன்
கிராமபோன்
ஊசிகள்

ரிகார்டுகளை பாதுகாப்பதுமன்னியில் சுத்தமான நாதத்தை பிரதிபலிப்பது. அழகிய டப்பிகளில் கிடைக்கும். இன்றே வாங்கி உபயோகியுங்கள்.

ஸரஸ்வதி ஸ்டோர்ஸ்,
மவுண்ட் ரோடு :: மதராஸ்

கோவை, கோயம்புத்தூர் காபி ஸ்டோர்ஸ், உங்களுக்கு நல்ல காபி கொடுக்கும்

சாதனமாக உதவாது. தாய் பாஷை மூலம் தான் நாம் ஆங்கிலம் உள்பட எல்லா விஷயங்களையும் கற்கவேண்டும். ஆங்கிலம் உணவு என்ருல், தமிழ் நமக்கு மூச்சு. மூக்கில் சோற்றை அடைத்துக் குழந்தையை வளர்ப்பதுபோன்ற நமது கல்வி முறை வீணுய்ப் போனது ஆச்சரியமில்லை.

குழந்தைகளின் மூளை தாய் பாஷை பயின்று சற்று வளர்ந்த பின், அதாவது பன்னிரண்டாவது வயது முதல், எல்லா உயர்தரப் பள்ளிக்கூடங்களிலும், கலாசாலைகளிலும் ஆங்கிலம் கற்பிக்கப்பட வேண்டும். இந்தியருள் பெரும்பாலோர் அறியும் பாஷை ஹிந்தி; உலகத்தாருள் பெரும்பாலோர் அறியும் பாஷை ஆங்கிலம். தாய்—பாஷையுடன் இவ்விரண்டு புற பாஷைகளையும் நமது மாணவர்களுக்குக் கற்பிப்பது நியாயம்.

ஆனுல், விஞ்ஞானம், நவீன இலக்கியம் முதலிய துறைகளில் நமது நாடு முன்னேற்றம் அடையவேண்டுமானுல், ஆங்கிலம் இன்றியமையாததொரு துணைக்கருவி; இந்தத் துறைகளில் ஆங்கிலம் செய்யக்கூடிய கைங்கரியம் வேறு எந்த பாஷையாலும் சாத்தியமாகாது என்பதில் சந்தேகமில்லை.

இந்திய சர்வ கலாசாலைகளை இங்கிலீஷ் அல்லது ப்ரெஞ்சு அல்லது (1933-ம் வருஷத்துக்கு முந்திய) ஜெர்மன் சர்வகலா சாலைகளோடு போதன முறைகள், ஆராய்ச்சி முறைகள், ஆசிரியரின் பாண்டித்யம், மாணவரின் தகுதி, இவற்றில் ஒவ்வொன்றையும் எடுத்துச் சீர்தூக்கிப் பார்த்தால், நமது "உயர்தரக் கல்வி"யின் தாழ்வு விளங்கும். சுமார் 15 வருஷ காலமாகத் தான் இந்திய சர்வ கலாசாலைகள் இவ்விதம் ஒப்பிட்டாவது பார்க்கக்கூடிய நிலையை யடைந்திருக்கின்றன. தமிழ் நாட்டிலிருந்து பௌதிகத்துக்கு ஒரு ராமனும், ஒரு சந்திரசேகரனும், கணிதத்துக்கு ஒரு விஜயராகவனும், ஒரு சிவசங்கர நாராயணனும் தோன்றி யிருக்கிறுர்கள். இரண்டொரு சாஸ்திரங்களில் இரண்டொரு நிபுணர் தோன்றினுல் இருநூறு லக்ஷம் தமிழர் திருப்தி யடையலாமா?

ஒரு மதம் அல்லது ஒரு ராஜீயக் கக்ஷி பரவுவதற்கு இறுமாப்பும், பிரசாரமும் நல்ல துணைகள் என்று சிலர் நினைக்கலாம்; ஆனுல், இவர்கள் கூட வித்தை வளருவதற்கு உண்மையும், அடக்கமும் அவசியம் என்பார்கள். வெவ்வேறு தேசத்தாரின் அறிவையோ அறிவின்மையையோ அளக்கும் கருவியாகப் பொதுப் பாஷை ஒன்று வேண்டும். தற்காலம் ஜப்பான் முதல், ரஷியா, பிரான்ஸ், ஜெர்மனி உள்பட அமெரிக்கா வரை உலகமெங்கும் உயர்தரக் கல்விக்குப் பொதுப் பாஷையாய் உபயோகப்படுவது ஆங்கிலமே.

உலகத்திலுள்ள வித்தைகளுக்கெல்லாம் திறவு கோலாய்ப் பயன் படுவதுடன், ஆங்கிலம் ஓர் அரிய நாகரிகத்துக்கும் இருப்பிடமாய்த் தனிச் சிறப்புப் பெற்றிருக்கிறது. இந்த நாகரிகத்தின் நிஜ ஸ்வரூபத்தை இந்தியாவிலும், தென் ஆப்பிரிக்காவிலும் காண முடியாது. அதன் உற்பத்தி ஸ்தானமாகிய இங்கிலாந்திலேதான் காணலாம். ஹூக்லி நதி கங்கையா, சாக்கடை நீரா என்ற சந்தேகம் கிளம்பலாம்; இது போலவே சில வெளி நாடுகளில் தோன்றும் ஆங்கில நாகரிகம் ஒரு சீரழிந்த வஸ்து. சுயமான ஆங்கில நாகரிகத்தை விரிவாக வர்ணித்தல் இங்கு இயலாது; அதன் முக்கிய குணங்களை மட்டும் குறிக்கலாம்.

பக்ஷபாத மின்மை, எந்தப் பிரச்னையையும் தீர விசாரித்து ஒரு முடிவுக்குவரும் பொறுமை, எவருக்கும் சுவாதீனம் அளிக்கும் தாராளம், ஸ்தாபனங்களிடம் பக்தி விசுவாசம், சொன்ன சொல் தவறுமை, இவை அதன் சிறப்பு லக்ஷணங்களில் சில.

இந்த நாகரிகத்தின் சிறப்பை அவர்கள் உள்நாட்டு வாழ்க்கையிலும், அவர்கள் இலக்கியத்திலும் பார்க்கலாம். தந்திரத்தால் பிறரை வென்று புகழுக்குப் பாத்திரராகும் கதாநாயகர்களை, பல நாட்டு இலக்கியங்களிலும் காணலாம். ஆனுல், ஆங்கில இலக்கியத்தில் கிடையாது. புத்திக் கூர்மையை விட, நடத்தை நேர்மையே சிறந்த லக்ஷணம் என்பது ஆங்கிலேயரின் நெடுங்கால நம்பிக்கை.

நமது இந்திய நாகரிகம் ஆங்கில நாகரிகத்தைப் போலவே மிச்ரமானது. இந்து முஸ்லிம் அம்சங்களுடன் ஆங்கிலேய அம்சங்களும் அதில் கலந்திருக்கின்றன; இன்னும் பல ஆங்கிலேய அம்சங்கள் வந்து சேர்தல் நலமே. வெகு காலமாய் இங்கிலாந்தில் கிரீக்கு, லத்தீன் நூல்களும், நமது நாட்டில் அரபிக், பெர்ஷியன், ஸம்ஸ்க்ருத நூல்களும் வழங்கி வந்திருக்கின்றன; அதுபோலவே, சகல விதமான ஆங்கில நூல்களும் நமது கலாசாலைகளில் (இனிமேலாவது தாய் பாஷை மூலம் கற்பிக்கப்படும் என்பதில் சந்தேகமில்லை. வித்தை விஷயத்தில் 'பிறருடையது' என்று தள்ளி வைப்பது நம்முடைய வழக்கமில்லை. ஞானமும், சீலமும் எங்கிருந்து வந்தாலும், அவற்றை ஏற்று நம் வசப்படுத்திக் கொள்வதுதான் நம்முடைய தர்மம்.

இதுவரை ஆங்கிலப் படிப்பினுல் நமது கலைகளுக்கும், சமூகத்துக்கும் உண்டாயிருக்கும் அனுகூலம் வெகு சிறிது; இனிமேல் உண்டாகக் கூடிய நன்மைக்கோ அளவே யில்லை. ஏனென்ருல், சுயேச்சையாய், சந்தோஷமாய் உட்கொள்ளும் உணவுதான் உடம்போடு ஒட்டும்; பயந்தோ, வற்புறுத்தலின்மேலோ, துராசையின்மேலோ வாயில் அடைத்தது ஒட்டாது.

காந்தியும், ஜவஹர்லாலும் எவ்வளவு லாகவமாய் ஆங்கிலத்தைக் கையாளுகிருர்கள்! லக்ஷக் கணக்கான மற்ற இந்தியர்கள் ஆங்கிலத்தைப் படித்துவிட்டு என்ன தவிப்புத் தவிக்கிருர்கள்! நிர்ப்பயமான சுவாதீன மனப்பான்மைக்கும், அடிமை மனப்பான்மைக்கும் உள்ள வித்தியாசம் இதுதான்.

வருங்காலத்தில் நம்முள் பலரும் ஆங்கிலத்தை நிர்ப்பயமாய், சுவாதீனமாய்க் கற்று, ஆங்கில நாகரிகத்தின் குணங்களைக் கிரகித்து, நமது தாய்பாஷையின் மூலமாகவும், நேர்மையான நடத்தையின் மூலமாகவும், நமது நாட்டுக்கு நன்மை புரிவார் என்பது நிச்சயம்.

என்ன புஸ்தகம்!

நாவலா? போகிறவழிக்குப் புண்ணியம் காட்டும் ஏதாவது புராணமா?

ஓடியன்

செருகளத்தூர் சாமா பாடிய சிந்தாமணி டாக்கியின் சிறந்த பாடல்!

ஸரஸ்வதி ஸ்டோர்ஸ்
மதராஸ்

உயர்தரமான இரும்பு பெட்டிகளுக்கு, M. நாராயணசாமி முதலியார் & சன்ஸ், 58 பிராட்வே, மதராஸ்

ஜயா ஹிந்துஸ்தான் பிலிம்ஸ்
தயாரிப்பு

தயாராகி விட்டது!
வெள்ளித்திரைக்குத் தயாராகி விட்டது !!

நம் பிரதம மந்திரி புகழ்ந்த

விமோசனம்

என்னும்

மதுவிலக்கின் வெற்றியைச் சித்தரித்துக் காட்டும் தமிழ் பேசும்
சமூகப் படம்

சென்னை சங்கித வித்யாசாலை மாணவிகள் நடிக்கும் சிறந்த படம்

இவர்களுடைய நடிப்பைப் பற்றி பிரமுகர்களும் பத்திரிகைகளும்! கூறுவதைக்
கேளுங்கள்

டைரக்ஷன் :
டி. மார்க்கோனி

ஸ்டுடியோ :
ஜயா பிலிம்ஸ்
சென்னை

“குழந்தைகள் இவ்வளவு ஆச்சரியமாய் நடிப்பார்கள், நாடகம் இவ்வளவு ரஸிக்கத் தக்கதாய் இருக்கும் என்று நினைக்கவே இல்லை. ....இந்த நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும் போது நமது தமிழ் நாட்டின் நாடகக் கலைக்கும் இந்த ஜன்மத்தில் விமோசனம் உண்டு என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டது.”

—“கர்நாடகம்” ஆனந்தவிகடன்

“என்மனதை, என் தேகத்திலிருந்து பிரித்து எடுத்துக் கொடுக்க முடியுமானால், இச்சிறுமிகளுக்கு நான் கொடுத்து விடுவேன். குழந்தைகள் நடித்த நாடகம் எனக்குப் பிடித்திருக்கிறது.”

—ராஜாஜீ

“இந்த அபூர்வப் பிறவிகளான குழந்தைகளின் திறமையைத் தமிழ் நாட்டார் அனைவரும் கண்டு ரஸிப்பது நல்லது.”

—ஹநுமான்

கதை, வசனம், பாட்டு :
“ சசி ”

மியூஸிக் டைரக்ஷன் :
ஸ்ரீமதி எஸ். ஆர். ரமணி
எல். டி. (மியூஸிக்)

சென்னையிலும்

கீழ்க்கண்ட ஊர்களிலும் ஆகஸ்டு மாதத்தில் கண்டு களிப்புறுங்கள் :

மதுரை	—	ஸிட்டி சினிமா
கோயம்பத்தூர்	—	ராதா தியேட்டர்
திருநெல்வேலி	—	ராயல் டாக்கீஸ்
பெங்களூர்	—	ஆபரா டாக்கீஸ்
காஞ்சிபுரம்	—	முருகன் டாக்கீஸ்
ஆரணி	—	ஸ்ரீ லக்ஷ்மி டாக்கீஸ்
காரைக்குடி	—	ஸ்ரீ கிருஷ்ணா டாக்கீஸ்
தூத்துக்குடி	—	லெக்ஷ்மிகாந்தா டாக்கீஸ்
சேலம்	—	சுந்தரம் டாக்கீஸ்

“விமோசனம்” டாக்கிப் பாடல்களை ஓடியன் பிளேட்டுகளில் கேட்டு மகிழுங்கள்.

விவரங்களுக்கு :
ஹிந்துஸ்தான் பிலிம்ஸ் லிமிடெட்
பிராட்வே : : சென்னை



அட்டைக்கோட்டையின் ஆட்டம்

வத்தலக்குண்டு
பி. எஸ். சங்கரன்

ஹநுமான் வாசகர்களுடன் ஒரு சிக்கலான விஷயத்தைப் பற்றி விவாதிக்க வேண்டுமென்கிற ஆசை. ரொம்பவும் நாசூக்காகவும், தடங்தவறுமலும் நான் எழுதி, நீங்களும் விருப்பு வெறுப்பற்ற நிர்மலமான ஹிருதயத்துடன் இதைப் படித்து யோசித்தால், ஏதாவது பலன் நிச்சயமாகக் கிடைக்கும் என்கிற நம்பிக்கைதான் இந்தக் கட்டுரையை எழுதத் தூண்டுகிறது.

விஷயம் பிராமணர்—பிராமணரல்லாதார் பிரச்னை. வெகு காலமாகப் புகைந்து கொண்டிருந்து, சென்ற பத்து வருஷங்களுக்கு முன், அதன் ஆபோகணக்கிரமத்தில் உச்சஸ்தாயியை அடைந்து, அதற்குப்பின் சட்டசபைத் தேர்தல் காலத்தில் ஏறக்குறைய அழிந்து விட்டதாக நாம், எல்லோரும் நினைத்துக் கொண்டிருக்கும் ஒரு பிரச்னை இது. வகுப்பு வாதத்திற்கு நேர் முறணை, தேசிய பிரளயத்தில் அமிழ்ந்து மறைந்து போனதாக நம்மில் அநேகர் நம்பிக்கொண் டிருக்கிற ஒரு விஷயத்தைப்பற்றி, இந்தக் கட்டுரை எழுதுவது சம்பிரதாய விரோதமாகவும், அணைந்த தீயைக் கிண்டிவிடுவதுபோலவும் பலர் சஞ்சலப்படலாம். ‘அப்படியே ஒரு சிறிதுவகுப்புவாதம் நம்மிடையே இருந்தாலும், அது அநேகமாய் சௌக்யமாகி விட்ட ஒரு கொடிய நோயின் தழும்புதான்; தானகவே காலக்கிரமத்தில் மறைந்து போகக்கூடிய தழும்பைக் கீறிவிடுவது சமூக ஒற்றுமைக்கு பாதகம் விளைவிக்கும்’ என்று நம்புகிற அன்பர்கள் பலர், கொஞ்சம் ஆயாசப்படலாம்.

என்னுடைய கட்சி இந்த வியாதி இன்னமும் தீரவேயில்லை என்பதுதான். தீராதது மட்டுமல்ல ; நமது கண்ணுக்குப் புலப்படாமல், ஆனல் வெகு கொடூரமாக, தனது உச்ச நிலையிலிருக்கிறது இந்த நோய். இந்த நோயின் தற்போதைய அதியாச்சர்யமான விசேஷம் என்னவென்றால், நம்மெல்லோரையும் ஏமாற்றி, மாயாவிபோல் நம்மையறியாமலே நம்மைப் பற்றிக் கொண்டிருப்பதுதான். அது மட்டுமல்ல. இத்தனை வருஷங்களாக, வகுப்பு வாதத்திற்கும், ஜாதித்துவேஷத்திற்கும் விரோதமாகக் கிளர்ச்சி நடந்து, ஒருவித சமரச மனப்பான்மையை உண்டாக்கியிருப்பதால், தற்பொழுது இந்த வியாதி தன்னை பிடித்திருப்பது தெரிந்தவன், தன்னிடம் இருக்கும் துவேஷ மனப்பான்மையை மறைத்து வைக்கிருன். துவேஷத்திற்குப்போக்கும் காட்டாமல், அதை மறைமுகமாக வளர்த்து வருவதில்தான் பெரிய அபாய மிருக்கிறது. இந்த அபாயகரமான நிலைமை, நம்மிடையே அதிதமாகப் பற்றிக் கொண்டு வருகிறது என்பதுதான் என் கட்சி.

இந்த பிராமணர் — பிராமணரல்லாதான் வேற்றுமை எப்படி வந்தது, எப்பொழுது வந்தது, வந்திருக்கவேண்டிய நியதி உண்டா இல்லையா என்பனவற்றைச் சற்று ஆராய்ந்தால், கொஞ்சம் சுலபமாக இந்தப் பிரச்னையைத் தீர்த்துவிடலாம்.

தென்னிந்தியாவின்—முக்கியமாக தமிழ் நாட்டின்—சென்ற 500 வருஷத்திய சமூக வாழ்வின் மாறுதலை நன்ருக கவனித்தவர்களுக்கு இந்தப் பிராமண — பிராமணரல்லாத பேதம் ஆச்சரியத்தை விளைக்காது. மேட்டிலே பொழிகிற மழை ஜலம் பள்ளத்திற்கு வராமல் தீராததுபோல், சென்ற ஐந்து நூற்ருண்டுகளாக நமது நாட்டில் ஏற்பட்டிருக்கிற ராஜீய, பொருளாதார, சமூக மாறுதல்களின்பயனுக, இந்தப் பிரச்னை இப்பொழுது வந்துதான் தீர வேண்டும். 18-ம் நூற்ருண்டில் ஏற்பட்ட இயந்திரப் புரட்சி, வியாபாரப் பெருக்கு இவற்றின் பலனுக, மேற்கு தேசங்களில் இந்த நூற்ருண்டின் துவக்கத்தில் ஏற் பட்ட முதலாளி — தொழிலாளி சண்டை எவ்வளவு தவிர்க்க முடியாத விளைவோ, அதே போல் தான், நமது நாட்டில் பிராமணர் — பிராமணரல்லாதார் போராட்டமும்.

ஹிந்து சமூகத்தின் உயிர் நாடியான வேத தத்துவங்களைக்காட்டிலும், புராணங்களையும் புறச்சின்னங்களையும் அதிகம் மதிக்க ஆரம்பித்த தினத்திலேயே, நமது சமூகத்தின் அசைக்க முடியாத அஸ்திவாரத்தில் சுரங்கம் வைத்தாகி விட்டது. இது வேண்டுமென்று செய்யப்பட்டதல்ல. எந்த ஒரு நாகரிகத்திற்கும் நாளடைவில் ஏற்படக் கூடிய சிக்குத்தான். சமூகப் பொதுவில் நாளடைவில் வளர்ந்து வந்த இந்த வியாதியை, சமூகத்தின் தலைவர்கள் கவனியாமல் சயநலம் காரணமாக சும்மா இருந்துவிட்டதன் பலன் ஜாதி மாற்சரியம். அக்ரமம் விளைவிப்பவனைக்காட்டிலும் அக்ரமத்தைப்பார்த்து ‘சகித்துக் கொண்டு, தன் வேலையை சரிவரச் செய்யாதவன் தான் சமூகத்தின் பரமதுரோகி. இதை பாரதியார் பாஞ்சாலி சபதத்தில் அழகாக வியாக்கியானித்திருக்கிருர். பீஷ்மர், துரோணர் முதலியவர்களுடைய செயலற்ற தன்மைதான், பாரதப்போரின் காரணம் என்கிருர் கவி. துரியோதனன் சபையில் பாஞ்சாலியை இழுத்து வந்த பொழுது, தங்களுடைய கையாலாகாத் தன்மையை மறைப்பதற்காக, சாஸ்திரத்தில் இடங்தேடின அன்றையதினமே, பாரதப்போருக்கும், க்ஷத்திரிய தர்மநாசத்திற்கும் வழிதேடி விட்டதாகச் சொல்கிருர் பாரதியார். இதே தவறைத்தான் சென்ற இரண்டு மூன்று நூற்ருண்டுகளாக, இந்து சமூகத்தின் நாகரிக வளர்ச்சிக்குப் பாதுகாப்பாளர்களாக இருக்கவேண்டிய பிராமணர்கள் செய்து வந்திருக்கிருர்கள்.

நமது சமூகக் கப்பல் தற்செயலாக மேனுட்டு நாகரிகம், ஆக்ரமிப்பு என்ற பாறைகளில் மோதியபொழுது, கப்பலை சரியாகவும் நடத்தாமல், அல்லது கப்பலோடு கப்பலாகத் தாங்களும் முழுகிச் சாகாமல், பாறைகளில் தங்களுக்குத் தங்க இடங்தேடிக் கொண்டார்கள். அதல்லாமல் வீரமாகக் கப்பல் கவிழ்ந்திருந்தாலும் ஒரு புது ஜீவவேகத்துடன் நமது நாகரிகம் உயிர்த்தெழுந்திருக்கும். ஆனல் பழி முழுமையையும் பிராமணர்களின்மேல் போடுவதற்கும் இல்லை. ஜீவனோபாயம் குறுக்கிட்டது. • புறச் சின்னங்களைக் கண்டு மற்ற ஜாதியாருக்கு ஏற்பட்டிருந்த சலிப்பு மேலோங்கி, பிராமணன் தன் பொய் கௌரவத்துடன் வாழ்வது இனி முடியாது என்று ஆகிவிட்டது. கல்வியறிவைத் தன் சொந்த சொத்தாக ஆக்கிக்கொண்டிருந்த மேல் ஜாதியார்கள்—சமூகத் தலைவர்கள்—தங்கள் கல்வியைக் கேவலம் சேவகத்தொழிலில் உபயோகப்படுத்தினர்கள். சேவகத் தொழிலுக்கு இருந்த அகௌரவம், கௌரவமாக மாறியது. இந்தப் பொய் கௌரவத்திற்குப் போட்டி ஏற்பட்டது.

அடிமை மோகத்தில் கௌரவங் கண்டு ஓடிய பிராமணன், தனக்கும், புராதனமானதும் ஹிமயமலைபோல் தூயதுமான ஹிந்து தர்மத்திற்கும் சம்மந்தமில்லாமல் செய்து கொண்டாவது போனனு? அதுதான் இல்லை. மதத்தின் மீது நம்பிக்கை பூரணமாகஇல்லை; அல்லது தனக்குக் கவலை இல்லை. ஆனல் அந்த மதத்தின் பெயரால், தனக்குத் தொன்று தொட்டுக் கிடைத்து வந்த கௌரவம் மட்டும் வேண்டுமென்ருன். அதற்



காகச் சாதியாசாரக் கோட்டைகளை அதிக வலுவாக்கினான். தொழிலினால் ஏற்படவேண்டிய சமுகப் பாகுபாடு, பிறப்பினால்தான் என்று உறுதிசெய்தான். பிறப்பிலே தான் உயர்வும் தாழ்வும் என்கிற சித்தாந்தத்தை, பாமர ஜனங்களிடம் பரவச்செய்து, அந்தக் கட்டிடத்தின் மேல் வீற்று, சென்ற நூற்றாண்டு பூராவாகவும் அரசு செலுத்தினான்.

வேதகாலங்கள் தொடங்கி, மகாஞானிகளும், மகரிஷிகளும் வாழையடி வாழையாகக் காப்பாற்றி அழிக்க இயலாத செல்வமாகக் கொடுத்த அறிவை, தன்னுடைய சொந்த ஸ்தானத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக கோட்டை கட்டிக்கொள்வதில் உபயோகித்துவிட்டான். எத்தனை விதிகள்! எத்தனை சம்பிரதாயங்கள்! என்னென்ன வேறுபாடுகள்! ஆகாயத்திலுள்ள நட்சத்திரங்களைக் காட்டிலும் அதிகமான உபஜாதிகள்! எந்த எதிரியாலும் இடிக்கப்பட முடியாத கோட்டை மீது, பிராமணன் உட்கார்ந்து கொண்டு விட்டான்.

எவ்வளவு பலமுள்ள அடக்குதலுக்கும் ஒரு விடுதலையுண்டு. இந்த அடக்குமுறையிலிருந்து விடுதலையடைய நடந்த-நடந்து வருகிற போராட்டத்தைதான் நாம் கண்கூடாகக் காண்கிறோம். இந்தப் போராட்டம் அமுக்கப்பட்டவர்கள் மாத்திரம் நடத்தவில்லை. மேல் ஜாதி என்று சொல்லிக்கொண்டு தனியரசு செலுத்தி வந்த ஜாதியாரும் சேர்ந்து நடத்தினார்கள். இன்னமும் சொல்லப்போனால், மேல் ஜாதி என்று சொல்லப்படுகிறவர்களில் சிலர்தான், இந்தப் போருக்கு அங்குரார்ப்பணம் செய்தார்கள். ஒரு பொய்யான அநாகரிகமான கோட்டையின் பாதுகாப்பில் வாழ்வது, தங்கள் கௌரவத்திற்கு ஒத்ததல்ல என்று நினைத்தனர் சில பிராமணோத்தமர்கள். இந்த வார்த்தையை எழுதும் பொழுது நான் மிகவும் யோசித்து நிச்சய பூர்வமாக எழுதுகிறேன். பிராமணர்களில் ஒரு சிலர் தான் தீர்க்க தரிசனத்தோடும், தைரியத்தோடும் இந்தக் கோட்டைக்கு உலை வைக்க ஆரம்பித்தார்கள். இந்த ஜாதிக் கட்டுப் பாடுகளை உடைத்தெறிய, காலம் சென்ற சுப்ரமணிய அய்யர், சதாசிவ அய்யர், வ. வெ. சு. அய்யர், பாரதியார் முதலியவர்கள்தான் ஆரம்பம் செய்தது.

சென்ற நூற்றாண்டின் கடைசி வருஷங்களிலும் இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலும் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் போருக்கு பிராமணர் பிராமணரல்லாதார் போராட்டம் என்ற பெயர் கொடுத்து, ஜாதி சமத்வ வெறியையும், பின் தங்கிப்போன ஜாதிகள் முன்னேறவேண்டுமென்ற ஆவலையும் கிளப்பியது, காலஞ்சென்ற பிராமணரல்லாதார் தலைவர்களான தியாகராய செட்டியாரும், டி.எம். நாயரும் தான். பின்னால் இந்த இயக்கத்திற்குத் தன் முழு சக்தியையும் கொடுத்து உதவியது ஈ. வே. ராமஸ்வாமி நாய்க்கர் அவர்கள்தான். இவருடைய முறையைப் பற்றி இரண்டொரு வார்த்தை சொல்லாமல் மேலே போகமுடியாது. ஜாதித் துவேஷத்தைக் கொடூரமான முறையில் கிளப்பிவிட்டார். எல்லா ஜாதிக்கும் பொதுவில் இருக்கும் பழக்கங்களுக்கெல்லாம் பிராமணர்களை ஜவாப்தாரிகளாக்கி அவர்கள்மீது எல்லை கடந்த வெறுப்பை உண்டாக்கிவிட்டார். இன்றைய தினம் நமக்கு இந்த வெறுப்புணர்ச்சி கேவலமானதாகத் தெரியலாம். ஆனால் வெறுப்புணர்ச்சியைக் கிளப்பாமல் இயக்கம் வெற்றி பெறமுடியாது.

எந்த இயக்கமும் வெற்றிபெறுவதற்கு இரண்டு வழிகள் உண்டு. ஒன்று அன்பின் வழி. வேத மார்க்கம்; சாத்வீக முறை. மற்றொன்று மனிதனின் கீழ்த்தரமான உணர்ச்சிகளைக் கிண்டிவிட்டு, யுத்த வேகத்தை அதிகரித்து வெற்றி பெறுதல். முந்தியவழி — அன்பின்வழி — மகாத்மாகாந்தி ஒருவரால்தான் முடியும். மற்றவர்கள் மனிதர்களாகத்தான் இருக்க முடியும். ஆகவே ஸ்ரீ. ஈ. வே. ரா. பிந்திய வழியைக்கையாண்டதற்காக அவர் மீது குற்றம் சுமத்துவது அழகல்ல. கருப்பு நிறத்தைப் பார்த்து 'நீ ஏன் வெள்ளையாக இல்லை' என்று கேட்பதுபோலத்தான். பலனைப்பற்றி மட்டும் கவலையுடன், எந்தவழியானாலும் சரியென்கிற கொள்கையுடையவர்கள் ஸ்ரீ ஈ. வே. ரா. மீது குற்றங் கூறுவதற்கு இடமில்லை. ஏதாவது வழியில் ஜீவனோபாயம் நடத்தினால் சரி என்கிற கொள்கைக்கு வந்துவிட்ட, சராசரி பிராமணனுக்கும் இந்த துவேஷத்தைக் கண்டு, பயப்படவேண்டிய அவசியமில்லாமல் போய்விட்டது.

இது வரை எழுதியது பழைய கதை. தற்போதைய நிலை என்ன? இது மிகவும் கஷ்டமான கட்டம். இன்னும் இருபது வருஷங்களுக்குப் பின்னால் எழுதுகிறவன் நிஷ்பக்ஷபாதமாக எழுதவும் ஆராயவும் முடியும். இன்று நாம் எழுதுவது என்பது அவ்வளவு சாத்தியமல்ல.

கோட்டை தகர்ந்து விட்டது. சென்ற இருபது வருஷத்திற்கு முன்னாலிருந்த கட்டுப்பாடு ஒழிந்துவிட்டது. அமுக்கப்பட்ட ஜாதியாரிடம் தன்னம்பிக்கையும், சுயகௌரவ மனப்பான்மையும் ஏற்பட்டு விட்டது. மேல் ஜாதியார் என்று சொல்லிக்கொண்டிருந்தவர்கள் காலத்தோடு ஒத்துப் போகத் துவங்கிவிட்டார்கள். பழைய தலைமுறையைச் சேர்ந்த சிலர் மட்டும், பூரண நம்பிக்கையுடன் சில சம்பிரதாயங்களை அனுஷ்டித்து வருகின்றனர். அவர்கள் நேராகவோ தவறுதலாகவோ உண்மை என்று நம்புகிறவரை, அவர்களுடைய அந்தரங்கத்தை சந்தேகிப்பதைக்காட்டிலும், நம்முடைய உண்மையில் பூரண நம்பிக்கையோடு மேலேறவேண்டும். இனிமேல் அவர்களை வெறுக்கக் கூடாது. கடைசிவரை யுத்தம் செய்து தோற்றவர்களிடம் மதிப்புவைப்பதுதான் நாகரிகம். இந்த அநாகரிகத்தைக்கூட சகித்துக் கொள்ளலாம். ஆனால் சண்டை ஓய்ந்து போனபின், ஆயுதத்தைப் பிரயோகிப்பதும், நம்முடன் கூடச் சேர்ந்து சண்டை போட்டவர்கள், பழைய தலைமுறைக்குச் சொந்தமானவர்கள் என்பதற்காக ஜாதியின் பெயரால் வெறுப்புக் காட்டுவதும் மன்னிக்க முடியாத குற்றம்.

தற்பொழுது நம்மிடையே இந்தக் குற்றம்தான் பரவிவருகிறது. இதைத்தான், மாயாவி போல் நம்மைப்பற்றி நிற்கும் மறைமுகமான நோய் என்று சொன்னேன். இது நிஜமில்லையா என்பதை நிதானபுத்தியாளர்கள் யோசிக்கட்டும். ஸ்ரீ ஈ. வே. ரா. கட்சியார்கள் இன்னமும் துவேஷ புத்தியை வளர்க்கிறார்கள். அவர்கள் செய்வது பற்றி நாம் கவலைப்படவேண்டாம். ஒரு பெரிய நோக்கத்தை சுயநலத்திற்கு உபயோகித்துக்கொள்கிறார்கள். ஆனால் இந்த நோய் தன்னறியாமல் சீர்திருத்தக்காரர்களிடையே பரவிவருகிறதைக் கண்டு மாற்று செய்ய வேண்டிய காலம் வரவில்லையா? பிறப்பினால் மேல் கீழ் என்கிற கொள்கையை ஒப்புக்கொள்ளாத பிராமணர்களிடம் இன்னமும் துவேஷத்தை வளர்த்துக்கொண்டு போகிறவர்கள், காங்கிரஸ் காரர்களிடையே அதிகரித்து வருகிறார்களே, இதற்கு ஏதாவது மாற்று இல்லையா என்று பொறுப்புள்ளவர்கள் யோசிக்கட்டும்.

சென்ற இரண்டு வருஷத் தேர்தல்கள், செய்கைகள் எல்லாவற்றிலும், இரகசியமாக, இந்த துவேஷத்தை மனதில் வைத்துக் கொண்டு காரியங்களை நடத்துபவர்களுடைய ஹிருதயம், மதுரைக் கோயிலுடன் சேர்ந்து திறக்கப்படுமா?

Bauer

டாக்கி ப்ரொஜக்டர்களிலேயே தலை சிறந்து விளங்குவது



பவர்

இனிமையான சப்தம்

தவறாத உழைப்பு

பூரண திருப்தி

இந்த விசேஷ குணங்கள் பொருந்தியிருப்பதால்தான் சென்ற 2¼ வருஷ காலத்தில் சுமார் 500 ப்ரொஜக்டர்கள் விற்றிருக்கின்றன.

டிஸ்டிரிபியூட்டர்ஸ்

ஸரஸ்வதி ஸ்டோர்ஸ்

மவுண்ட் ரோட் — மதராஸ்

நிஜ நீலகிரி காப்பிக்கொட்டை, கோயம்புத்தூர் காபி ஸ்டோர்ஸுக்குப் போகணும்

மரகதத்தின் கலியாணம்

வி. அனந்தகிருஷ்ணன் பி. ஏ.

திருநெல்வேலியிலிருந்து திருச்செந்தூருக்கு ரயிலில் போகும்போது, தாதங்குளம் ஸ்டேஷன் தாண்டியதும் வலது பக்கமாகப் பார்த்துக் கொண்டே போனால், எங்கும் பச்சைப் பசேலென்று வயற்காடு மயமாகத் தோன்றுகிறது. தாமிரவர்ணிப் பாசனமல்லவா? அந்த மோகனப் பச்சைகளின் நடுவிலே, கூப்பிடு தூரத்தில் இடிந்த வீடுகள் பல ஒரு கூட்டமாய் நிற்பதைக் காண்கின்றோம். அதுதான் 'கால்வாய்' என்ற ஊர். அந்த ஊரின் க்ஷேமத்தை, அந்த ஊர்க் கோயிலில் உள்ள சாஸ்தா கவனித்து வருகிறாராம்.

கால்வாய் கிராமம் வெள்ளரிப் பிஞ்சுக்குப் பேர்போனது. இன்னும் சரளைக் கல்லுக்கும் கருங்கல்லுக்கும், இரவோடிரவாய் உத்திரங்களைத் திருடிச் செல்லும் வீரர்களுக்கும் பேர்போனது.

அவ்வூரின் க்ஷேமத்தை வானத்திலிருந்து சாஸ்தா கவனித்துக் கொண்டிருந்தது போலவே, இகலோகத்திலிருந்து கவனித்துக் கொண்டிருந்தவர் அவ்வூர் கிராம முன்சீப் ஸ்ரீமான் குளத்து அய்யர்.

அய்யர் ரொம்ப நல்ல மனுஷர். நல்ல என்றால், அப்படி இப்படியில்லை. அவராலே என்னென்ன வெல்லாம் ஆகவேண்டுமோ அவ்வளவையும் அவர் செய்வார். விஷகடி முதல் பில்லி சூனியம்வரை மந்திரவாதம் தெரியும். தங்க பஸ்பம் முதல், பேதி மாத்திரைவரை அவரிடம் ஸ்டாக்கில் இருந்து கொண்டே இருக்கும். காது குத்துவது முதல், கரையேத்தம் வரையிலும் ஜோசியம் பார்த்துச் சொல்லுவார். அந்த ஊரில் தந்தி வந்தால் அவர்தான் வாசிக்கவேண்டும். ரெவினியூ இன்ஸ்பெக்டர் வந்துவிட்டாலோ கேட்கவேண்டாம். கலியாணங்களுக்கு சின்ன மேளம் வகைக்குத் திருநெல்வேலிக்கு வில்வண்டியில்போய் தேவடியாளைக் கூட்டிக் கொண்டுவர, அவர்தான் போகவேண்டும். பெரிய மேளத்திற்கும் அப்படியே. எல்லா விஷயங்களும் தெரியும் அவருக்கு. அவ்வளவு தானே.

இவ்வளவு தெரிந்திருந்தும் அவரிடம் பெருமை என்பது கடுகத்தனைக் கூடக் கிடையாது. அவருடைய தயாள குணத்தைப்பற்றி ஏன் கேட்கிறீர்கள்? அடடா! அந்த சாஸ்தா கோவிலிலே வருஷாபிஷேகம் வரணும். அப்போ பார்க்கணுமே அவர் தாராளத்தை.

அந்த கி. மு. குளத்துவையருக்கு சேஷன் என்றொருபிள்ளை. அவனுக்கு 35 வயசு ஆகப்போகிறது என்றாலும், தெருவிலே கிட்டி விளையாடுகிற கிச்சன்கூட அவனை "டேய், சேஷா" என்றுதான் கூப்பிடுவான். சேஷன் பழுத்த பறங்கிக் காய் மாதிரி இருப்பான்.

சேஷனுக்கு ஒரு பெண். அவள் பெயர் மரகதம். வயது 11 தான் ஆகிறதென்றாலும் வெகு பார்வையாயிருப்பாள். மயில் தோகைபோலிருக்கும் தலை.

சேஷன் வாட்ட சாட்டமாய் இருப்பான். ஷோக்காய் ஜரிகை வேஷ்டியைப் பட்டத்தார் வைத்துக்கட்டி, கழுத்திலும் ருத்திராக்ஷம்போட்ட ஜரிகை அங்கவஸ்திரத்தையும் மாட்டித் தெருத்திண்ணையில் உட்கார்த்திவிட்டால், அவனுக்கு லக்ஷ ரூபாய்க்கு எவனும் ஜாமீன் கொடுப்பான். சோப்புத் தேய்த்து மட்டும் குளித்தானென்றால் தங்கரேக்குப் போலிருக்கும் அவன் தேகம்.

குளத்துவையர் நித்தியம் அவனிடம் ஒரு தடவையாவது "அம்பி, வயிறு நிறையச் சாப்பிட்டயோடா? வயத்தெப் பாத்தா சாப்பிட்டு நாலு நாள் ஆச்சுபோலிருக்கே" என்பார். சிலசமயங்களில், ராத்திரிகளில் வாசல் திண்ணையில் உட்கார்ந்து வெற்றிலை இடித்துக் கொண்டே "அடே! ராவிலே, காலாகாலத்தில் படுத்துக்கொண்டு தூங்கடா! உடம்புக்காகாதடா!" என்று ஊர் முழுதும் கேட்கும்படி உபதேசம் செய்வார். அவனும், "அப்போதே படுத்துண்டுட்டேனே அப்பா!" என்று பாதித்தூக்கத்தில் பதில் சொல்லுவான். மகா அசமந்தம். அந்த அசமந்தத்துக்கு வந்து பிறந்த மரகதமோ வெடிசுட்டி. எப்போ பார்த்தாலும் கலகலப்பாகப் பேச்சும் சிரிப்புமாக இருப்பாள். அவள் முகத்தைப் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் போலிருக்கும். கள்ளம் கபடு துளிக்கூட முகத்தில் கிடையாது. படிப்பிலே மகா கெட்டி. தாத்தாவிற்கு கண் சூக்ஷ்மம் குறைய ஆரம்பித்ததுமுதல் அவள்தான் தாத்தாவுடைய செக்ரட்டேரி.

......நிச்சலமான தண்ணீரில்......

அறுபது நாழியும்—மரகதம், வெற்றிலைப் பெட்டி; மரகதம், தாகத்துக்குத் தீர்த்தம்; மரகதம், சுண்ணாம்புக்கு ஜலம், என்று சொல்லி அவள் பிராணனை வாங்கி விடுவார்.

அத்தியாயம்—2

ஒரு நாள் காலையில் கி. மு. குளத்துவையர் திண்ணையில் தாராளமாக நீட்டி இடத்தை அடைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார். அவருடன்பக்கத்து வீட்டுப் பத்மனுபய்யரும் இருந்தார். வழக்கம் போல், கி. மு. மரகதத்தைக் கூப்பிட்டுத் தாகத்துக்குத் தீர்த்தம் கொண்டு வரச் சொன்னார். இரண்டு மூன்று தடவைச் சத்தம் போட்ட பிறகு, "ஏன், தாத்தா, கூப்பிட்டீர்களா?". என்று கேட்டுக் கொண்டு மரகதம் உள்ளிருந்து வந்தாள்.

"ஏண்டி, எங்கே போயிருந்தே? உன்னைக் கூப்பிட்டு என் தொண்டைத் தண்ணீரெல்லாம் வத்திப்போச்சே. சரி, இருக்கட்டும். ஒரு பேலாவில் குளிர்ந்த தீர்த்தம் கொண்டுவா முதல்லே" என்றார்.

அப்படியே மரகதம் கொண்டு வந்து கொடுத்தாள். பத்மனுபய்யரிடம் தண்ணீர் வேண்டுமா என்று கேட்டார். அவரும் வேண்டுமென்று சொல்லவே, மரகதத்தைப் பார்த்து "உன் மாமனுருக்குக் கொஞ்சம் தீர்த்தம் கொண்டுவாம்மா" என்றார்.

அதற்கு மரகதம் "போங்க தாத்தா. உங்களுக்கு இதுதான்வேலை. என்னவாவது கேலிபண்ணிக் கொண்டே இருக்கணும்" என்று சொல்லிக் கொண்டே உள்ளே சென்றாள். தண்ணீர் கொண்டு வந்ததும் அதைப் பப்பு அய்யர் முன்னால் "டக்" என்று வைத்துவிட்டு உள்ளே ஓடி விட்டாள். பத்மனுபய்யருக்கு சின்ன வயதிலிருந்து வழங்கிவரும் செல்லப் பெயர் 'பப்பு' வையர்.

"என்ன, சுந்தரம் நேற்றுத்தான் வந்தான்போலிருக்கிறது" என்றார் கி. மு.

"ஆமாம், பரீக்ஷை முடிந்து விட்டது வந்திருக்கிறான். மெட்ரிகுலேஷன் பாஸாயிடுத்துன்னா திருச்சினாப்பள்ளிக்கு அனுப்ப

For pure Coffee Seeds? Go to the COIMBATORE COFFEE STORES, Coimbatore

ணும் மேல்வாசிப்புக்கு" என்றார் பப்புவையர்.

பேச்சு அப்படியே லோகாபிராமமாக வளர்ந்து, வெற்றிலைப் பையை எலிகடித்து விட்டதில் வந்து முடிந்தது. இரண்டு பேரும் காப்பி சாப்பிடச் சென்றார்கள் அவரவர்கள் வீட்டுக்கு.

பப்பு அல்லது பத்மனபய்யர் ஒருமாதிரி மனுஷர்; பிடிவாதக்காரர். கொ—க்—க்—க்—க் என்று பேச ஆரம்பித்து விட்டால், பக்கத்தில் மனிதர்கள் இருக்க முடியாது. கங்காபிஷேகம் செய்து விடுவார். அறுபது நாழிகையும் புகையிலையைவாயில் அடைத்துக் கொண்டு, புளிச், புளிச் சென்று துப்பிக்கொண்டிருப்பார். கி. மு. வைப்போல் அவ்வளவு சொத்துக்காரர் அல்ல என்றாலும் சுமாராகச் சொத்து இருக்கிறது. அவருக்குச் சுந்தரம் ஒரே பிள்ளை.

சுந்தரம் கருப்புத்தான். கருப்பாயிருந்தாலும் மோசமான கருப்போடு சேர்ந்ததில்லை. முகலக்ஷண முள்ளவன். வேடிக்கை வேடிக்கையாகப் பேசி யாரையும் சிரிக்கச் செய்துவிடுவான். அது ஒரு சாமர்த்தியம் அவனுக்கு. 5 வருஷத்திற்கு முந்தி ஒரு



......பின்னல் ராஜு வந்ததை......

விஷயம் பேசிக்கொண்டிருந்தால், அது என்னவென்று அப்படியே சொல்லுவான் இன்றைக்கு. ஞாபகசக்தி ஜாஸ்தி. ஒரு விஷயத்தைச் சொன்னாலும் சட்டென அதை கிரகித்துக் கொள்வான். ஆனால் ஒன்றுதான் அவனிடமிருந்த கெட்ட குணம். அதிலேயும் ஒரு விசேஷம் என்னவென்றால், அவன் பொடி போடுவது ரொம்பப் பேருக்குத் தெரியாது.

கால்வாயில் ஜனங்களே ரொம்பக் குறை. அதிலேயும் படித்தவர்கள் வள்ளிசாகக் கிடையாது. படித்தவர்கள் என்றால் நான் எம். ஏ., பீ. ஏ-க்களைக் குறிக்கிறேன். தமிழ்ப்படிப்பும் குழிப் பெருக்கலும் தெரியாதவர்கள் ஒருவர்கூட கிடையாது அங்கே.

சுந்தரம் ஒருவன் தான் எப்படியோ அயலூரில்கூடப் போய் படித்துவிட்டான். அவனால் அந்த ஊருக்கே ஒரு பெருமை. கி. மு. கூட சில சமயங்களில் "ஏது, இந்தப் பயல் நம் தலைக்கல்லவா கல் வைத்து விடுவான்போலிருக்கிறது," என்று தமாஷாக நினைத்துக்கொள்வார். ஆனால், தனக்கு வாரிசாக, நல்ல மேதையுடன் விளங்க, ஒருவனாவது தலையெடுக்கிறானே என்பதைக் குறித்து அவருக்கு பரம திருப்தி. ஆனால் அதை வெளிக் காட்டிக்கொள்வதில்லை.

அவ்வூரில் எல்லோருமே சுந்திரத்திடம் அன்பாய் இருப்பார்களென்றால் கி. மு. வின் பேத்தி மரகதமும் அன்பாய்த்தான் இருப்பாள் என்று சொல்லவேண்டுமா? அதுவும் அடுத்த வீடும் அடுத்தவீடும். சின்னக் குழந்தை முதலே இருவரும் மரப்பாச்சி வைத்துக்கொண்டு விளையாடிக்கொண்டு காலம் கழித்தவர்கள். எல்லாவற்றுக்கும் மேலாக, கற்றோரைக் கற்றோரே காமுறுவர் என்று எங்கேயோ படித்திருக்கிறேன். எப்படி வைத்துக் கொண்டாலும் சரி. இவர்கள் இருவரும் ஒருவரை யொருவர் கடைக்கண்ணால் பார்த்துக் கொள்வார்கள்.

இரண்டு வீட்டுக் காரருக்கும், இந்தக் கலியாணத்தை நடத்திவிட வேண்டும் என்று ரொம்ப ஆத்திரம் இருந்தது. கிட்டத்தட்ட விஷயங்கள் நெருங்கித்தான்வந்து கொண்டிருந்தன. ஆனாலும் இந்தக் காலத்தில் எதையும் நிச்சயம் சொல்ல முடிகிறதில்லை யல்லவா?

அத்தியாயம் 3.

கால்வாய் கிராமத்தைச் சுற்றி பத்துமைல் விஸ்தீர்ணத்திற்குள் நாளது வரை நாகரிகம் தலை யெடுக்கவில்லை. சில வருஷங்களாகத்தான் ரயில் வண்டிச் சப்தம் அங்கு கேட்க ஆரம்பித்திருக்கிறது. ஆலை இயந்திரங்களின் புகை அங்குள்ள சுத்த ஆகாயத்தைக் கெடுக்க மார்க்கமேயில்லை. தலைகீழாக நின்றாலும், அங்குஒருவன் ஒரு மாதத்திற்கு 10 ரூபாய்க்குமேல் செலவழிக்கமுடியாது. மார்க்கமில்லை.

எங்கு பார்த்தாலும் தோப்பும் துரவும். ஆற்றில் ஸ்படிகம் போன்ற தண்ணீர் கூழாங்கற்களுடன் கொஞ்சி விளையாடும். ஆற்றோரத்தில் உள்ள 'படுகை' என்று சொல்லப்படும் தோப்பு, வன தேவதைகளின் சாச்வத நிலையமாக இருக்க யோக்யதையுள்ளது. அங்கு, யோகியர் உள்ளத்தில் நிலவுவது போன்ற அமைதி நிரந்தரமாக நிலவும். கவிஞனின் உள்ளம் அகண்டமாக விரிந்து, ஆகாசத்துடன் கலக்கும் இடம் அதுவே. இந்தத் தோப்புக்கு அப்பால் குளத்துவையருடைய வயற்காடு இருக்கிறது.

ஊரடியில் இருக்கும் எல்லா வயல்களுக்கும்போல, இந்த வயல்களுக்கும் ஆபத்து அதிகம். பயிர் நன்றாக வளர்ந்திருக்கும் போது, பள்ளர்கள் அசந்து மறந்து இருந்துவிட்டால் ஊர் மாடுகள் விழுந்து நாசக் கேட்டை செய்துவிடும். குளத்துவையருக்கோ காரில் தீவு; பிசானத்தில் அதை ஈடு செய்வதற்கே போல், பயிர் கண் கொள்ளாமல் செழுமையாக வளர்ந்திருந்தது.

கி. மு. விற்கு ஒரு மாசமாக இராத் தூக்கம் கிடையாது. பண்ணையாட்களை இரவும் பகலும் கண் விழிக்கச் செய்து உஷாராக இருந்தார். பண்ணையாட்களும் கண் அடையாமல் காவல் புரிந்தனர். இரவுகளில் தூக்கம் வராமலிருக்க களியும் பாட்டுமாகக் கழித்தனர். கள்ளுக்காக கி. மு. வும் சில்லரைக் கொடுத்து வந்தார். காரியம் கெட்டால் கி. மு. கண்ணைப் பிடுங்கி விடுவார் என்பதை அவர்கள் அறிவார்கள். ஆதலின், அவரை ஏமாற்ற முயலவில்லை.

நாட்கதிரும் கொண்டுபோ யாகிவிட்டது. அசற்கு மங்கள ஹாரத்தி எடுத்து உள்ளே கொண்டு போன பின், கோலாகலமாக தேவாராதனம் நடைபெற்றது. அன்றைய தினம் பப்புவையருக்கும் சுந்திரத்திற்கும் கி. மு. வீட்டில் விருந்துக்கு கேட்கவேண்டுமா?

அடுக்களையிலிருந்து மரகதம் எட்டி எட்டிப்பார்க்கிறாள் என்பதைக் கண்டதும், சுந்திரத்தின் குஷிக்கு அளவே இல்லாமற் போயிற்று.

மறுநாள் அதிகாலை:

வயற்காட்டில் இரவு முழுதும் கண்விழித்ததால் அலுப்புற்று, பண்ணையாட்களில் ஒருவன் தவிர மற்றவர்க ளெல்லோரும் படுகையில் கால்மாடு தலைமாடாக உறங்கினார்கள். விழித்திருந்த மாசானமும் குளிர் தாங்காமல், உடம்பு முழுவதும் போர்த்திக் கொண்டு ஓரோர் நிமிஷம் கண்ணைமூடித் திறந்தான்.

இன்னும் சூரிய ரச்மிகள் மரங்களைத் துளைத்துக்கொண்டு வரவில்லை. சிறிது அப்பால், ஆட்டிடையர் சிலர் தங்கள் ஆடுகளுடன் இரவு அங்கேயே முகாம் செய்திருந்தனர். ஆடுகள், குளிர் தாங்காமல் ரோமத்தைச் சிலிர்த்து உப்பிக்கொண்டு "மா, மா" வென்று எண்ணிலடங்காத ஸ்வரங்களுடன் கத்திக்கொண்டிருந்தன. அவைகளுடன் பக்கத்தில் ஒரு ஓலைக் கூடாரத்திற்குள் இளங்குட்டிகள் "ஞா, "ஞா" வென்று கத்திக்கொண்டிருந்தன. இவைகளை பந்தோபஸ்து செய்வதற்காக வந்திருந்த ஒரு நாய் மண்ணைத் துளைத்து அதில் சுருண்டு மடங்கி கண்ணே விழியாமல் படுத்துக்கிடந்தது.

சூரியன் உயர உயர, புல் முனைகளில் முத்துப்போல் ஒட்டிக்கொண்டு வைரம்போல் டால் வீசிய பனித்துளிகள் மாயமாய் மறைந்துகொண்டிருந்தன: ஆடுகளும் தேகத்தைச் சிலிர்த்துத் தம்மேல் படிந்திருந்த பனித்திவலைகளை யுதிர்த்துக்கொண்டிருந்தன. அந்த நாய் ஒரு தடவை எழுந்து உடலை நெளித்துக் கொடுத்துக் காதைச் சடசடவென்று அடித்துக்கொண்டது. மாசானமும் முட்டாக்கை நீக்கி ஸ்வராஸ்யமாக சோம்பல் முறித்தான்.

எழுந்திருந்து வயற்காட்டைப் பார்வையிடும் நோக்கத்துடன் புறப்படும்போது, எதிர்க்கோடியில் ஏதோ தென்படவே, சிறிது உற்று நோக்கினான். ஆம்! மாடுகள் வயலில் விழுந்து மேய்ந்துகொண்டிருந்தன! ஒரே கூப்பாடு போட்டுக்கொண்டு, கூடச் சேர்ந்தவர்களை எழுப்பினான். அடித்துப் புரண்டு எல்லோருமாகக் குறுக்கே விழுந்து ஓடினர். இவர்களின் ஓலத்தைக் கேட்டதுமே பாதி மாடுகள் ஓட்டமெடுத்தன. கடைசியாக ஒரு பசு மீந்து நின்றது. அது பூரண கர்ப்பம். விரைவாக ஓட முடியவில்லை. ஆதலின் காவற்காரர்கள் இதன் சமீபத்தில் வந்த பின்னும், இதனால் தப்ப முடியவில்லை. ஒருவன் தன் கையிலிருந்த தடியால் ஒரு அடி போட்டான். அது பசுவின் இடுப்பில் விழுந்தது. "அம்மா" வென்று அலறிக்கொண்டே பசு கீழே விழுந்துவிட்டது. இடுப்பு முறிந்துபோய் விட்டது.

உயர்தரமான இரும்பு பெட்டிகளுக்கு, M. நாராயணசாமி முதலியார் & சன்ஸ், 58 பிராட்வே, மதராஸ்

இதைக்கண்டு, பண்ணை யாட்களே திடுக்கிட்டுவிட்டனர். இவ்விதம் நேருமென்று அவர்கள் கனவிலும் நினைக்கவில்லை. தூக்க வெறியில் செய்வது தெரியாமல் அடித்துவிட்டனர். தவிரவும், அது பப்பு வையரின் "சிறுத்தை"ப் புலிப் பசு. எவ்வளவோ தூக்கிவிட முயற்சித்தும் அவர்களால் முடியவில்லை.

இதற்குள் செய்தி எப்படியோ கிராமத்திற்குத் தெரிந்துவிட்டது. கொஞ்சம் கொஞ்சமாகப் பரவி, பப்பு அய்யர் காதிலும் விழுந்துவிட்டது. கேட்கவேண்டுமா அவருக்கு? அவரோ மகா அவிவேகி. ஆதலின் வாயில் போடுவதற்கென்று எடுத்த புகையிலையை அப்படியே விட்டெறிந்துவிட்டு இரண்டாம் வேஷ்டியைக்கூட எடுத்துக்கொள்ளாமல் வயற் காட்டை நோக்கி தலைவிரிகோலமாய் ஓடி வந்தார். இதை அறிந்த கி. மு. விற்கு பெரிய காபுராவாகிவிட்டது. அவரும் பின்னாலே வந்திருப்பார். ஆனால் அவரால் நடக்க முடியாது.

பசுவைக் கண்டதும் "ஹா" வென்று அலறிவிட்டார். "ஏ—ஏ—எந்தப் பயலடா இதை அ-அ-அ-அடித்தான்? எந்தக் கழுதேடா 'அடிக்கச்சொன்னான்? அவன் ம—ம—மணிக்கட்டையை நா....ன் மு—மு—முறிக்கவில்லை யென்றால் நான் ப—ப—பப்புவையனில்லை" என்று என்ன வெல்லாமோ சொல்லிக் கூத்தாடினார். பண்ணைக்காரன்கள் ஒருவனாவது வாய்திறக்கவில்லை. கி. மு. வின் ஆட்கள் என்பதை யறிந்ததும், கி. மு. வை வாயில் வந்தபடி யெல்லாம் திட்டி, நொறுக்கி, அவர் குடும்பத்தை பத்து தலைமுறை வரையும் வாழ்த்தி தாம்—தீம் என்று குதித்தார். இதற்குள் சுந்திரம் அங்கு வந்து, தகப்பனாரைச் சமாதானம் செய்து அழைத்துச் சென்றபாடு பிரம்ம பிரயத்தினமாகப் போய்விட்டது.

அன்றுமுதல் கி. மு. வீட்டாருக்கும் பப்பு வையர் வீட்டாருக்கும் சண்டை. ஒருவரை யொருவர் முகாலோபனம்கூடச் செய்வது கிடையாது. ஒருவர் கிழக்கைப்பார்த்து நின்றால், மற்றொருவர் மேற்கு நோக்கித் திரும்பிச் செல்வார். இப்படியாகிவிட்டது.

இரண்டு குடும்பங்களின் சண்டைகளால் அநேக காதலர்கள் பிரிய நேர்ந்ததை வர்ணித்து, காவியங்களும் கதைகளும் அநேக பெரியார்களால் எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தக் காதலர்களில் பலர் தம் தம் வீட்டாருக்குச் சொல்லாமல் ஓடிவிட்டதாக கதைகளை ஓட்டுகிறார்கள். நம் நாட்டிலே அம்மாதிரி கதை கூட எழுதமுடியாது. சுந்தரம் 16 வயதுப் பையன்; மரகதம் 11 வயதுச் சிறுமி. தாய் தகப்பன்மார் இப்படிக் கொடிய விரோத பாவம் கொண்டிருக்கையில், தாங்கள் தங்களின் மனோபாவத்தை மாற்றிக்கொள்ள வேண்டுமா, வேண்டாமா என்பதைப்பற்றி அவர்களால்முடிவு கூறவே முடியவில்லை. ஆனால் சுந்திரம் எப்போதாவது தோட்டத்தில் தண்ணீர் இறைத்துக் கொண்டிருந்தால், மரகதம் கொல்லைப்புறத்தில் பாத்திரம் தேய்த்துக் கொண்டிருப்பாள். சுந்தரம் கோயிலில் சுவாமி தரிசனம்செய்து கொண்டிருந்தால், மரகதம் அங்குள்ள விளக்குகளுக்கு எண்ணெய் ஊற்றிக்கொண்டிருப்பாள்.

சிலநாட்கள் சுந்திரம் ஆற்றுப்பக்கம் செல்வான், முகம் கழுவி பல் விளக்கி வருவதற்காக. அப்பொழுது அனேகமாக குடத்தை இடுப்பில் வைத்துக்கொண்டு மரகதம் வருவாள். அவள் வருவதைப்பார்த்த நிமிஷத்திலேயே, சுந்திரத்தின் மார்பு "திடும், திடும்" என்று அகாரணமாய் அடித்துக் கொள்ளும். ஏன், அவளைக் காணும்போதெல்லாம், அவனுக்கு என்னவோபோலிருந்தது. ஆனால் அவள் மறைந்துவிட்டால், எதையோ இழந்துவிட்டது போன்ற உணர்ச்சி உண்டாகிவிடும்.

அத்தியாயம் 4.

ஒருவருஷம் ஆகிவிட்டது. சுந்திரம் இண்டர் மீடியட்டில் சேர்ந்து முதல் வருஷ பரீக்ஷை எழுதிக்கொண்டிருந்தான் திருச்சினாப்பள்ளியிலே. அவன் தகப்பனாரோ அந்தக் கிராமத்து கி. மு. வைத் தொலைப்பதற்காக, ஏதேதோ மொட்டைக் கடுதாசிகளுக்கும் வியாஜ்யங்களுக்கும் உதவி பண்ணிக் கொண்டிருந்தார்.

மரகதம் வயதுப் பெண்ணாய்விட்டாள். குடும்பத்தின் செழுமைத் தோற்றம் அவளிடம் நன்றாகப் பிரகாசித்தது. அந்த வருஷமே கலியாணம் செய்யாவிட்டால், ஊரார் நாப்புக் கூறுவார்கள் என்று பண்ணையாரின் நாட்டுப்பெண் தொல்லைப்படுத்த வாரம்பித்தாள்.

"ஏன் உங்களைத் தானே!" என்றாள் பண்ணையாரின் மனைவி ஒருநாள். அந்த அம்மாள் பெயர் மங்களேஸ்வரி என்பது.

பண்:—ஆமாம் என்னைத்தான்; இப்பொழுது என்னவேண்டு மென்கிறாய்?

மங்:—குதிர்போல பேத்தியை வச்சுக்கிண்டு கலியாணம் செய்யாமலிருந்தால் ஊர்க்காரர்கள் என்ன சொல்லமாட்டார்கள்?

பண்:—அதற்கு என்ன செய்யவேண்டு மென்கிறாய்?

மங்:—ஏதாவது பிள்ளையைப் பார்த்து தாலிக்கட்டச் சொன்னால்ல தேவலை!

பண்:—அதை நீதான் செய்யேன்!

மங்:—நன்றாயிருக்கு! இதுவெல்லாம் புருஷாள் செய்கிற காரியமா! பெண்டுகள் செய்கிற காரியமா? ஊர்க்காரர்களுக்கெல்லாம் கலியாணம் நடத்தி வைக்கிறீர்களே, இந்த வீட்டுக்கு மாத்திரம் செய்து வைப்பதற்குள் புத்தி மந்திச்சுப் போய்விட்டதா?

பண்:—அப்புறம்.

மங்:—அப்புறமும், மட்டப்புறமும். கலியாணத்தைப் பண்ணி வச்சுப்பிட்டு மறுகாரியம் பாருங்கோ.

பண்:—உத்திரவு.

மங்:—வேடிக்கை அப்புறம் இருக்கட்டும் நடக்கிற காரியத்தைப் பாருங்கோ.

பண்:—எல்லாத்தையும் நீயே பேசிவிட்டால், எனக்குப் பேசுவதற்கு என்ன இருக்கிறது?

மங்:—சரி சரி.

உண்மையில் கி. மு. விற்கு மனதிற்குள்ளே ஒருபெரும்போர் நிகழ்ந்துகொண்டிருந்தது. சரியான வரன் யார் என்றுதன்னாலான மட்டும் வலைபோட்டு அரித்தும், சரியான பேர்வழி ஒருவரும் அவர் மனதிற்குப் படவில்லை. அடுத்த வீட்டு சுந்தரத்தின்மேல் இத்தனை நாளாகக் கண் வைத்திருந்தார். வெண்ணெய் திரண்டு வருகையிலேயே, தாழி உடைந்த்துபோல் அந்த எண்ணத்தில் மண் விழுந்துவிட்டது. சண்டையை மறந்து பெண் கொடுக்கவும் அவருக்கு இஷ்டம்தான். ஆனால் இந்த விஷயமாக முதன்முதலாக அவ் வீட்டாரிடம் பேசுவதற்கு அவர் நாணினார். அவர் மனம் அச்செயலை ஆதரிக்கவில்லை. பப்புவையர்தான் முதலில் வந்து கேட்கட்டுமே என்ற எண்ணம். ஆனால் அவர் தன் பிள்ளையின் கலியாண விஷயமாகச் சிறிதுகூட கவனம் செலுத்தி வந்ததாகத் தெரியவே யில்லை. ஆகவே பரம சங்கடப்பட்டார்.

'டேய் சேஷா!" என்று பிள்ளையைக் கூப்பிட்டார் அவனுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்வதற்காக. "என்னடா வெறுமனே உட்கார்ந்து கொண்டிருந்தால் போதுமா? பெண்ணுக்குக் கலியாணம் செய்யவேண்டாமா? வயசு ஆகிக் கொண்டு வருகிறதே!"

"ஆமாம்"

"ஆமாம் என்றால் போதுமா? உன் ஆம்படையாளுடைய இஷ்டம் என்னவென்று கேட்டாயா?"

"கேட்டேன். அவள், அவளுடைய அண்ணாவின் பிள்ளைக்குக் கொடுக்கவேண்டுமென்று சொன்னாள்."

"பார்க்கிறதுதானே!"

"எனக்கென்ன தெரியும்?"

K. P. CASTOR OIL WORKS

GUARENTEED FOR PURITY

Delicately perfumed
Excellent for Toilet
and Hair dressing
Second to None

CERTIFICATES OF MERIT FROM EMINENT DOCTORS.

BEWARE OF CASTOR OIL WORKS COIMBATORE IMITATIONS

"உ-ம்" என்று கி. மு. யோசிக்க வாரம்பித்து விட்டார்.

மரகதத்தின் மாமன் மகன் பெயர் ராஜகோபாலன். பட்டணத்துப் பிள்ளை பார்ப்பதற்கு லக்ஷணமாயிருப்பான். பெரிய வீட்டுப்பிள்ளை. வெகு டாப்பு ஜெரப்பாய் 'டிரஸ்' பண்ணிக்கொள்வான். ஒரு விஷயத்தில் ராஜு (ராஜகோபாலன்) சாக்ஷாத் ஸ்ரீராமபிரானையும் மீறிவிட்டான்; அதாவது பிதுர் வாக்கிய பரிபாலனத்தில்; எப்படியென்றால், அவனுடைய தகப்பனார் அவனை பள்ளிக்கூடத்தில் எந்த வகுப்பில் சேர்த்தாரோ, அதே வகுப்பில் அவன் பல வருஷங்களானபோதிலும் மாறாமலிருந்து வந்தான்.

ராஜு பள்ளிப் படிப்பில் மோசமே தவிர உலகப் படிப்பில் மேதாவி. அவனுக்குத் தெரியாத சிகரட் வகைகள் கிடையாது. சினிமா வுலகில் அவனுக்கு அபார பாண்டித்தியம். கடைசியாக வெளியான 'மெட்ரோகோல்ட்வின்' படம் என்ன? அதில் யார்யார் ஆக்ட் செய்திருக்கிறார்கள்? அவர்களின் பூர்வோத்திரங்கள் என்ன? ஒரு நாளைக்கு அவர்கள் எத்தனை தடவை முகத்தை அழகு படுத்திக்கொள்வார்கள் என்பதெல்லாம் அவனுக்கு தலை கீழ்ப் பாடம்.

இந்த சமயத்தில் ராஜுவிற்கு கால்வாய்க்கு வரவேண்டுமென்ற கடிதத்தின் மேல் கடிதம் வந்து கொண்டிருந்தது. ஆதலின் விடுமுறை நாட்களை, இம்முறை கால்வாயில் கழிப்பதென்ற எண்ணத்துடன் புறப்பட்டான்.

ஏற்கனவே கால்வாய் ஒரு பெரிய மடிசஞ்சி என்று விவரிக்கப்பட்டிருக்கிறது. ஆதலின் ராஜுவின் வருகை ஒரு திருநாளாகக் கருதப்பட்டது. 'பிளேஸர்' கோட்டைப் போட்டுக்கொண்டு தெருவில் பவனி செல்லத் தொடங்கிவிட்டால், அவனைக்காண ஆண்பெண்பாலரனைவரும் கண்ணனைக்காண வந்திருந்த மதுராபுர மக்கள்போன்று வீட்டு வாசலில் கூடி விடுவர். தத்தம் வீட்டுப் பெண்களை, இவனுக்கு கலியாணம் செய்து கொடுக்க முடியவில்லையே என்று ஏங்கிய நெஞ்சம் கொஞ்சமன்று.

புதுமையான எந்தவஸ்துவையும் கவனிப்பது பெண் மக்களின் இயல்பு. அதற்கிணங்க மரகதத்தின் இள மனது ராஜுவை நோக்கி வளைய ஆரம்பித்தது. அவனுடைய ஆர்பாட்டங்களோ, எந்தச் சிறுமியையும் மயக்கிவிடக் கூடியவை. எப்போது பார்த்தாலும், நாகரிகம், மாடர்ன், சீமையிலே பட்டண மோஸ்தர், இப்படி வார்த்தைகளைச் சொரிந்துகொண்டிருப்பான். அவன் பேசுவதைக் கேட்டால் 'குப்பைக் காட்டி'லிருப்பவர்களெல்லாரும் மறுநாளே தூக்குப் போட்டுக்கொண்டு செத்தால் உலகுக்கு க்ஷேமமோ என்று தோன்றும்.

மரகதத்தின் தாயும் மருமகன் வரவைத்தான் எதிர் நோக்கி தபசு செய்துகொண்டிருந்தாள். வேலியும் ஓணானும் ஒன்று சேர்ந்து கொண்டால் கேட்பானேன்.

ஒருநாள் சாயங்காலம் மரகதம் பக்கத்திலிருந்த ஆற்றில் தண்ணீர் கொண்டுவருவதற்காக இடுப்பில் குடத்தை எடுத்துக் கொண்டு சென்றாள். காரணத்தோடேயே அவளை அவள் தாயார் வெகு நாகரிகமாக சிங்காரித்திருந்தாள். அவளுடைய இயற்கை அழகே தனி காட்டு ரோஜாவைப் போல இருக்கும். அதைக் கொஞ்சம் பளிச்செனப் பண்ணுவதற்கு நகை நட்டுகள் சேர்ந்துவிட்டன.

தண்ணீர்க்கரையில் சிறிது நேரம் யோசனையிலாழ்ந்தவள் மாதிரி நின்றாள். காரணம் வேறு ஒன்றுமில்லை. அவளது பிம்பம் நிச்சலமான தடாகத் தண்ணீரின் அடியிலிருந்து காட்சி தரவே, அந்த மோஹன காட்சியைப் பார்த்த வண்ணமே நின்றுவிட்டாள். பின்னால் ராஜு வந்ததை அவள் கவனிக்கவில்லை. அவன் கை தட்டியது கூட அவள் செவியில் விழவில்லை.

சமாதி கலைந்தவுடன் அம்மாஞ்சி ராஜு தன் அருகில் நிற்பதைக் கண்டதும், லஜ்ஜை அவளைப் பிடித்துக் குலுக்கியது. சிறிது நேரம் நாணத்தின் மிகுதியால் செய்வது என்னவென்று தெரியாமல் அவள் மூளை குழம்பி நின்றது. தான் தனியாக இல்லை என்பதை யுணர்ந்ததும் அவள் கால்கள் அவசர அவசரமாக அவளை வீட்டுக்கிழுத்தன. தண்ணீரை மொண்டுகொண்டு புறப்பட்டு விட்டாள்.

அதற்குள் ராஜு "அத்தங்கா! உன்னைத்தேடித்தானே நான் இங்குவந்தேன் அதற்குள் அவசரமா?" என்றான்.

பதிலில்லை.

"ஏன், பேசக்கூடாதா? அப்படி நான் என்ன குற்றம் செய்துவிட்டேன்? அல்லது வெட்கமா?.........."

"வீட்டுக்குப் போகவேண்டும். தாயார் வெய்வாள்"

"அதைப் பற்றி நீ பயப்படவேண்டாம். நான் பார்த்துக் கொள்கிறேன். இப்படி வா."

பெண்களைப் பற்றி ராஜுவிற்கு அதிகம் தெரியும். அவர்களை வளைத்துப் பிடிக்கும் வித்தை அவன் சுண்டுவிரல் நுனியில் இருக்கும். ஆகவே நாகரிகத்தின் வாசனையே அறியாத மரகதத்தை வளைப்பதாபெரிய காரியம்?

எப்படியோ ஜெகஜ்ஜாலம் செய்து மரகதத்தைப் பேச்சுக் கிழுத்துவிட்டான்.

"முக்யமான விஷயம் உனக்குச் சொல்லணும்னு வந்தேன். நீ இப்படி வெட்கப்படவே வேண்டாம். இதைத்தான் பட்டிக்காட்டு மோஸ்தர் என்று அடிக்கடி ஒரு மாசமாகச் சொல்றேனே, உனக்குப் புரியவில்லையா? எதற்காக நீ என்னிடம் லஜ்ஜைப் படவேண்டும். நான் ஆம்படையானாகிவிட்டேனா, அல்லது நீதான் ஆம்படையாளாகி விட்டையா" என்று ஏதேதோ வளர்த்தினான் பேச்சை.

"நான் ஆத்துக்குப் போறேன்" என்று முகத்தைச் சுளித்துக்கொண்டே திரும்பினாள்.

"இல்லேடி அத்தங்கா. நமக்கு இந்த வருஷம் கல்யாணம் நடக்கப்போகிறதில்லை. அது நிச்சயம். அப்படியிருக்கச்சே இந்த வெக்கம் என்னத்துக்கு? இப்போ கல்யாணம் கிடையாது? உம்."

உடனே சட்டென்று மரகதம் திரும்பி பேச்சைக் கவனிக்கும் தோரணையில் நின்றாள்.

"ஏன் இந்த வருஷம் கல்யாணமில்லை?" என்று கேட்டதுபோல் தெரிவித்தது அவள் புருவம்.

"ஏன் என்று கேட்கிறையா? உனக்கு வயது பன்னிரண்டுதானாகிறது, தெரியுமோன்னோ. இப்போ சாரதா சட்டம்னு ஒருசட்டம் பண்ணியிருக்கா—சர்க்கார்பண்ணின சட்டம். அந்தச் சட்டப்படி 14 வயதானால்தான் நீ கல்யாணம்பண்ணிக்கலாம்—உங்கப்பாவோ சர்க்கார் உத்யோகஸ்தர்; சட்டத்தை மீறுதவர். ஆகவே இன்னும் ரெண்டு வருஷம் கழிச்சுத்தான் எல்லாம். ஏன் இப்போ இருந்தே லஜ்ஜைப் படணும்னு கேக்கறேன்" என்றான் ராஜகோபாலன்.

மரகதம் லஜ்ஜையை யெல்லாம் தடாலென்று உதறி விட்டாள்.

"அம்மாஞ்சி! அப்படின்னா அதுவும் ஒரு நல்ல சேதிதான். என்னைப்போல பட்டிக்காட்டுப் பெண்ணை, நீங்க ஏன் கட்டிக்கொண்டு அவஸ்தைப்படணும்னு அப்பவே நினைச்சேன். உங்க நாகரிகமென்ன சம்பிரதாயமென்ன—இது என்ன குக்கிராமம்; இங்கே வளர்ந்தவ நான்—இதைச் சொல்லணும்னு நான் நினைச்சுக்கொண்டிருந்தேன். இப்போ அப்படீன்னா இல்லியா? நான் போயிட்டுவரேன்" என்று திரும்பினாள்.

"அதான் அத்தங்கா! இன்னும் இரண்டு வருஷத்திலே நீ நல்ல நாகரிகமெல்லாம் பழகிக் கொண்டு........." என்று ராஜகோபாலன் ஏதேதோ பேசிக்கொண்டிருந்தான்.

"இரு! இரு காத்துக் கொண்டிரு!" என்று சொல்வதுபோல கழுத்தைநெளித்துவிட்டு மரகதம் போய்விட்டாள்.

* * *

வருகிற வழியிலே ஸ்வாமி ஊர்வலமாக வந்து கொண்டிருந்தார். இடுப்புக் குடத்தை அங்கொரு திண்ணையில் வைத்து விட்டு, ஈஸ்வரனுக்கு சம்பிரதாயத்தை யொட்டி நமஸ்காரம் செய்தாள் மரகதம்.

அப்போது அகஸ்மாத்தாக அங்கே சுந்தரமும் வந்தான். மரகதத்தைப் பார்க்காததுபோல் பார்த்து விட்டு ஸ்வாமி படிச்சட்டத் தருகே சென்று கை நீட்டினான்.

சோமனாத குருக்கள், "என்னடா அம்பி! உங்கப்பாவுக்கும் கி. மு வுக்கும் நடந்து வந்த கேஸ் ராஜியாகிவிட்டதாமே. பேஷ்! நீங்க ஊரிலே ரெண்டு பெரிய குடும்பமும் இப்படி மோதிக்கொண்டிருந்ததால், கோயில் காரியங்களுக்குக் கூட குந்தகங்களிருந்தது. இப்போ ராஜியானது சாஸ்தாவின் ஆக்ஞையடா!" என்றார். சுந்தரம் விபூதி பிரசாதத்தை வாங்கிக்கொண்டு நெற்றியில் இட்டுக்கொண்டு, மரகதத்தையும் ஒரு பார்வை பார்த்துவிட்டுப் போய்விட்டான்.

அவன்தான் காரியமாகப் பார்த்தான். அவள் எதற்காக அவனைப் பார்த்துவிட்டு நாணிக் கோணிக்கொண்டு போகவேண்டும்!

This News May Change your Entire life!

If you are unhappy, discouraged and things seem to go wrong

Consult **Prof. MURALE**

(The Twentieth Century Wizard & The Modern Society Seer)

THE GREATEST PALMIST, OCCULTIST & ASTROLOGER ETC., ETC.

At B. 1/192, (Near Market) ROYAPETTAH HIGH ROAD, MADRAS.

Prof. N. G. Ranga B. Litt. (Oxen) M.L.A., (Central) *says*:—"I have consulted Prof. MURALE, Palmist & Astrologer and has studied my hand most carefully. I was astonished at the uncanny ability.—I am sure he has great ability in this direction."

நல்ல காபி—கோவை கோயம்புத்தூர் காபி ஸ்டோர்ஸில் கிடைக்கும்

வெ. வேதமூர்த்தி

எழுதியது

“முடிசார்ந்த மன்னரும் முடிவிலொரு பிடிசாம்பராய் மண்ணாவது” கண்டு, இந்த வாழ்க்கையை ரொம்பத் துச்சமாகப் பேசுகிறார் பட்டினத்தார். பூத உடல் மண்ணோடு மண்ணாகி, மறைந்து விடுவது தவிர்க்கமுடியாத உண்மை என்பதைக் கண்டு, மனிதரில் சிலர், தங்கள் புகழுடல் நீள் நெடுங் காலம் உலகில் நிலைத்திருக்க வேண்டுமென்று, ஏதேதோ செய்கிறார்கள்.

பத்துத் தலையும் இருபது கைகளும் கொண்ட, ஒரு அதிசயப் பிறவி யிருந்தது என்று கதைகள் சொல்லவில்லை. அவன் ராவணன், அவன் செய்த செய்கை எப்படிப் பட்டது என்று மகாகாவியம் ஒன்று பேசுகிறது. இப்படிச் சில செயல்கள் செய்து பெயர் நிலைத்து விட்டவர்கள் சிலர்.

வேறு சிலர் இம்மாதிரிக் காவியத்திற்குரிய எதும் செய்யா விட்டாலும், காலத்தை எதிர்த்து நிற்கும் கட்டிடமாக இயற்றி வைத்துவிட்டுப் போய்விட்டார்கள்.

இந்தியாவிலுள்ள தாஜ்மகல் என்னும் சலவைக்கல் கவிதையைக்கண்டு, உலகமே வியந்து நிற்கிறது. ஆனல் எகிப்தியப் பாலைவனங்களின் நடுவில் காலத்தின் வேகத்தையும் மீறி, கம்பீரமாக நிற்கும் “பிரமிட்”டுகள் என்ற சமாதிக் கோபுரங்களைக் கண்டு பிரமித்து நிற்கிறார்கள் யாவரும்.

முதல் பிரமிட் கட்டப்பட்ட கதையும், விவரங்களும் இன்றும் நிலைத்து நிற்கின்றன.

ஐயாயிரத்து ஐநூறு வருடங்களுக்குமுன், புராதன காலத்தில் எகிப்தை சியோப்ஸ் அல்லது கூபு என்ற அரசன் ஆண்டு வந்தான். தற்காலத்தில் இருப்பதுபோல், அக் காலத்திலும் எகிப்திய ராஜ்யம், பொன்னைப் போன்று பிரகாசிக்கின்ற வெண்ணிற மணற் பாலைவனங்கள் நிறைந்த பிரதேசமாகத்தானிருந்தது. ஆனல் ராஜியத்தின் நடுவே வெகு அழகாக நைல் நதி ஓடிக்கொண்டும், அதன் இரு புறங்களிலும் அடர்ந்து, செழிப்புற்று, பச்சைப்பசேல் என்று கண்களுக்கு ரம்யமான தோற்றத்தைத் தரும், அழகிய புல் தரைகளும், தோட்டங்களும் கூடியதாகவுமிருந்தது.

இப்பொழுது ஜீஸே என்று சொல்லப்படும் பாலைவனத்தின் ஒரு பாகத்தில், அக்காலத்திலும் கூட ‘ஸ்பிங்க்ஸ்’ என்றதொரு உன்னத உருவம் சிங்கத்தின் உடலோடும், மனிதத் தலையுடன் கூடியதாகவும் இருந்தது. இது ஒரேகல்லில் செதுக்கப்பட்டு, இருபத்தைந்து ஆட்கள் உயரத்துடன், காலச் சக்கரத்தின் கதியை வென்று, இன்றும் நிற்கிறது. இதை எம் மன்னர், எக்காலத்தில் நிறுவினர் என்று நாம் அறியோம். ஆனல் இது வெகு அழகாகவும் கம்பீரமாகவும், பாலைவனத்தின் காவல்காரனைப்போல் திகழ்கிறது.

இத்தகைய ஸ்பிங்ஸின் கம்பீரமான தோற்றமும், ஒய்யாரமான பார்வையும், உயரமும், மகத்துவமும்தான் சியோப்ஸ் மன்னனை, தனக்குகந்ததும், அநேக ஆயிர வருடங்கள் இருக்கக்கூடியதுமான ஒரு சமாதியை நிர்மாணிக்க ஆவலை ஊட்டிற்றோவென நாம் ஐயுறவிருக்கிறது.

இம் மாபெரும் எகிப்திய ‘பாரோ’ தன்னை பிற்காலத்தியவர்கள் எந்நாளும் மறக்காமலிருக்கவும், தன் புகழ் எந்நாளும் இப்பூவுலகில் திகழவும் காலத்தை வெல்லக்கூடியதும், அசைக்க முடியாததுமான ஓர் ஞாபகச் சின்னத்தைக் கட்டும்பொருட்டு, நீண்டநாள் ஆலோசித்து ஓர் முடிவுக்கு வந்தான். உலகத்தில் அதுவரை நிர்மாணிக்கப்படாத ஓர் ஞாபகச் சின்னத்தைக் கட்டி, தான் இறந்த பிறகு தன் சடலத்தை அதில் வைக்கவும் ஏற்பாடு செய்தான். சதுரங்க அடி பாகத்துடன், கோபுரப் பாங்கில் ஒரே கல்லில் கட்டினுல், அது வெகு காலத்திற்கு நீடித்திருக்குமெனக் கருதி, கட்டிட நிர்மாணத்தைப்பற்றிப் பிரகடனம் செய்தான்.

‘பாரோ’வின் உத்திரவுகளைக் கேட்டு, உடனே ஆலோசனையாளர்கள் வேலைக்கு வேண்டிய ஆட்களைத் திரட்டலாயினர். அவர்கள், யுத்தத்தில் கைதியாக்கப்பட்டவர்களையும், ஆயிரக் கணக்கான அடிமைகளையும், கொண்டு அராபிய மலைகளில் கல் உடைக்கச் செய்து, கட்டிட வேலையை ஆரம்பித்தனர்.

இன்னும் சிலர், அடிமைகளைப் பெரிய படகுகள் கட்டச்செய்து, அவைகளின்மூலம் நைல் நதியின் வழியாககற்பாறைகளைக்கொண்டு வரச் செய்தனர். மற்றும் சிலர் நதிக் கரையிலிருந்து, கட்டிடம் நிர்மாணிக்கப் படும் இடத்திற்கு போக்கு வரவிற்கு சாதனமாக தக்க பாதைகளை அமைத்தார்கள். அகலமாயும், சமமாகவும் ரோடுகள் அமைக்கப் பத்து வருஷங்கள் பிடித்தன. படகுகளிலிருந்து கற்பாறைகளை, பெரிய மரங்களின் அடிப்பாகங்களால் ஆகிய உருளைகளின் உதவியால், புரட்டிக்கொண்டு வந்து சேர்த்தார்கள்.

பிறகு கட்டிட நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டது. நூறாயிரம் பேர் கொண்ட அடிமைப்படைகள் சூரிய வெப்பத்தைத் தாங்க முடியாமல் சிரமப்பட்டு, பகல் முழுவதும் (சூரிய உதயத்திலிருந்து அஸ்தமனம் வரை) வேலை செய்தனர். முதலில் அஸ்திவாரம் போடப்பட்டு, கற்பாறைகளை நன்ருய் பதிக்கப்பட்டு மேற்சுவர்கள் கட்டப்பட்டன. மணற் பாறைகளால் படிகள் போல் செய்துகொண்டு வேலையாட்கள் கற்களைத் தூக்கிச்சென்றனர். கட்டிடம் பெரியதாக ஆக, பாதைகளை அமைத்துக் கொண்டே போயினர். கடைசியில் அடிப்பாகத்திலிருந்து உச்சிவரைக்கும், ஒருநீண்ட பாதை அமைக்கப்பட்டது. இப்பாதையின் மூலம்தான் சில பெரிய கற்கள் சுமார் இருபது அடி நீளமும்; அநேக டன் கனமுமுள்ளவை, மேலே கொண்டு போகப்பட்டன. கோபுரம் கட்டி முடிந்த பிறகு இப்பாதைகள் இடிக்கப்பட்டன.

பெரிய பாறைகள் ஒன்றின் மேல் ஒன்ருக வெகு ஜாக்கிரதையாகவும், அழகாகவும் பொருத்தி வைக்கப்பட்டபடியால், அநேக ஆயிரம் வருடங்கள் சென்றும், இப்பொழுதுகூட ஒரு மயிரிழை புகக்கூடிய சந்துகள்கூட இல்லாமல் இருக்கிறது. பிறகு கோபுரம் முழுதும் ஒரு சமமான கற்பாறையால் மூடப்பட்டது. ஆனல் பிற்காலத்தில் இதை எடுத்து விட்டார்கள்.

அடிக்கடி மன்னர் சியோப்ஸ் கட்டிட வேலையைப் பார்வையிட மெம்பிஸியிலுள்ள, தன் அரண்மனையிலிருந்து, பரிவாரங்களுடன் புறப்படுவார். இச்சமயங்களில் அரண்மனையிலிருந்து ஒரு மகத்தான ஊர்வலம் ஆரம்பித்து, பாலை வனத்தைக் கடந்து, கட்டிட வேலை நடக்கும் இடத்தை அடையும்.

ஊர்வலத்தின் முன்பு பணியாட்கள் வாயால் கூச்சலிட்டும், தடிகளின் உபயோகத்தைக் கொண்டும் ஜனங்களை விலக்கிக் கொண்டு போவார்கள். இவர்களுக்குப் பின்னர் அரசருடைய மெய்க்காப்பாளர்கள் வாளேந்தி வருவர். அதற்கப்புறம் அரசருடைய ரதம் தங்க முலாம் பூசப்பட்டு, வெகு அழகாக கண்ணைக் கவரும் பலவித வர்ணங்களால் தீட்டப்பட்டு, நான்கு புரவிகளால் இழுக்கப்பட்டு வரும். அந்த ரதத்திலே ‘பாரோ’வானவர் நேர் எதிரே தன் பார்வையைச் செலுத்திக்கொண்டு, கம்பீரமாகக் கையில் எகிப்திய ராஜ சின்னங்களான ஆயக்கோலும், சவுக்கும் ஏந்தி நிற்பார்.

உயர்தரமான இரும்பு பெட்டிகளுக்கு, M. நாராயணசாமி முதலியார் & சன்ஸ், 58 பிராட்வே, மதராஸ்

அரச பெருமான் தலையில் வெகு அழகாகவும், தங்கத்தால் ஆகியதுமான கிரீடம் தரித்திருப்பார். அதைச் சுற்றி ஒரு நாகப் பாம்பு படம் எடுத்துக் கொண்டிருப்பதுபோல் செதுக்கப்பட்டிருக்கும். இப்பாம்பு ஒரு கடவுளின் சின்னமாகும். அந்த நாகம், யுத்தத்தில் 'பாரோ'வின் எதிரிமீது நெருப்பைக் கக்கிக் கொன்றுவிடுமாம். வெகு மிருதுவான, துல்லிய உடையை அணிந்து, அதற்குமேல் தங்க ஜரிகைகளால் ஆகிய அரைச் சட்டையும் போட்டுக்கொண்டிருப்பார். தன் இடுப்பைச்சுற்றி ஒரு அரைக் கச்சு தரித்து, அதிலிருந்து ஒரு நரியின் வாலைத் தொங்கவிட்டிருப்பார். தோள்களின் மீது, ஒரு துல்லிய வஸ்திரத்தையும் தரித்திருப்பார். முகத்தில், தங்கத்தால் ஆகிய ஒரு கூரிய நுனியை உடைய பொய்த் தாடியையும் தரித்திருப்பார்.

'பாரோ'வின் இரு புறத்திலும் நெருப்புக் கோழிகளின் இறகுகளால் ஆகிய விசிறிகளை விசிறிக்கொண்டு வருவார்கள் பலர். இவருடைய ரதத்திற்குப் பின்னுல், பல சாதாரண ரதங்கள் மீது இளவரசர்கள், கனவான்கள், மதகுருக்கள் முதலியவர்கள் ஏறிப் பின் தொடருவார்கள்.

மேற்கூறிய ஊர்வலம் 'பிரமிட்டை' அடைந்தவுடன் வேலை செய்துகொண்டிருக்கும்அடிமைக் கூட்டங்கள், தரையில் விழுந்து 'பூமியை முகருவார்கள்.' (அதாவது அரசனுக்கு தங்கள் மரியாதையைத் தெரிவிக்க நமஸ்கரிப்பார்கள்) பிறகு கொஞ்ச நேரம் பாரோவானவர் எறும்புக் கூட்டங்கள் போல் அடிமைகள், தன் பூத உடல் நிரந்தரமான சாந்தியடையும் பொருட்டுக் கட்டும் கட்டிட வேலையைப் பார்வையிடுவார்.

இவ்வுன்னதக் கட்டிடத்தை நிர்மாணிக்க இருபது வருடங்கள் பிடித்தன. இக் கோபுரமானது அளவற்று வியாபித்து, பார்ப்போர் மனதில் ஆச்சரியத்தை உண்டுபண்ணத் தக்கவாறு, பல மைல்களுக்கப்பாலேயே தெரியும் உச்சியுடன் அமைந்திருக்கிறது. இதன் உயரம் நானூற்று எண்பது அடி. அடிப்பாகம் எழுநூற்று அறுபத்து நான்கடிச் சதுரமாக அமைந்திருக்கிறது.

சியோப் மன்னரின் இந்தஅரிய சாதனையைப்பற்றி ஒரு அராபிய எழுத்தாளர் "இவ்வுலகத்திலுள்ள ஒவ்வொன்றும் காலத்தைக் கண்டு பயப்படுகிறது; ஆனுல் காலமே 'பிரமிட்டைக் கண்டு பயமுறுகிறது" என்று எழுதியுள்ளார்.

தன் குடிகளை ஐம்பது ஆண்டுகள் மிக்க நியதியுடன் ஆண்ட பிறகு, சியோப் மன்னர் இம்மண்ணுலகை விட்டு விண்ணுலகிற்கு ஏகினுர். அக்காலத்தில் எகிப்தியர்கள், இறந்தவர்களுடைய சரீரத்தை வெகு காலத்திற்கு நாற்றமெடுக்காமல் வைத்துக்கொள்ள சுகந்தமிடுவது வழக்கம். சியோப்பின் சரீரம் அதே முறையில் பதனிடப்பட்டது.

இச்சடங்குகள் எல்லாம் முடிந்தபிறகு, வாசனையூட்டப்பெற்ற சடலமானது துல்லிய வெண்மையான வஸ்திரங்களால் சுற்றப்பட்டு, அதன்மேல் அபூர்வமான நகைகளும், நவரத்தின மாலைகளும், தங்க தாயத்துகளும், வைக்கப்பட்டன. பிறகு நல்ல வாசனையோடு கூடியதும், தங்க வேலைப்பாடுகள் அமைந்ததுமான சந்தணமரப் பெட்டியில்வைக்கப்பட்டது. இப்பெட்டியானது முறையே இரண்டு மூன்று அழகான பெட்டிகளில் வைக்கப்பட்டது. இவ்வாறு இச்சடங்குகள் எல்லாம் முடிய நூறுநாட்களுக்கு மேலாகிவிட்டது. பிறகு அடக்கம் செய்ய ஊர்வலமாகக் கிளம்பி 'பிரமிட்டை' அடைந்தார்கள்.

ஊர்வலத்தைத் தொடர்ந்து, இளவரசர்களும், கனதனவான்களும் புரோகிதர்களும், துக்கத்தின் அறிகுறியாக, தங்களது தலைகளை மொட்டையடித்துக் கொண்டு, இடுப்பில் வெள்ளைவஸ்திரம் தரித்து, சிறுத்தைப் புலியின் தோலை அங்கவஸ்திரமாக அணிந்து சென்றுர்கள்.

பிரேதவண்டியைத்தொடர்ந்து அநேக அடிமைகள் அரசனின் சொந்த சாமான்களையும், அவர் வேட்டைக்கு உபயோகித்த ஆயுதங்களையும், அரண்மனையில் அவர் உபயோகித்துவந்த மரச் சாமான்களையும், இதைத் தவிர அநேக ஜாடிகளில் திராக்ஷைப் பழ ரஸங்களும், எண்ணெய், வாசனை சாமான்கள் முதலிய எல்லாவற்றையும் தூக்கிக்கொண்டு வந்தனர். எகிப்தியர்கள், இறந்தோருக்கு, இவை அவர்களுடைய பிந்திய ஜீவியத்திற்கு தேவையாயிருக்குமென எண்ணினர்.

கடைசியில் இவ்வூர்வலம் கோபுரத்தின் அருகிற்சென்று நின்றது. கட்டிடத்தின் சமமான பக்கத்தில் விடப்பட்டிருந்த திறப்பின் வழியாக, கட்டிடத்தின் மத்தியிலுள்ள அறைக்கு புரோகிதர் மந்திரம் ஓத, சவப் பெட்டியை எடுத்துச்சென்று, அகண்ட சிவப்புக் கற்களால் ஆகிய கல்லறையில் வைத்தனர். பிறகு கல்லறை மூடப்பட்டு, அதைச்சுற்றி அரசனுடைய உடைமைகள் வைக்கப்பட்டன. வெளி வழியை நன்ருய் அடைத்து ஒருவரும் உள்ளே போய் மரித்தோரை தொந்திரவுசெய்யாதிருப்பதற்காக வழியே தெரியாதபடி கட்டிவிட்டார்கள்.

இன்னும் அநேக ஆண்டுகள் சென்றபோது சியோப்பின் 'பிரமிட்டிற்கு' சமீபத்தில் காப்ரா என்ற அரசனுல் ஒன்றும், மூன்ருவதாக மென்கோரா என்ற அரசனுல் மற்றொன்றும் கட்டப்பட்டன. ஆயினும் இவை மூன்றும், இதுவரையில் மனித சமூகத்தால் கட்டப் பட்டவைகளில் தலைசிறந்து விளங்குகின்றன. இவை இன்றும் உலகத்தின் பெரிய ஏழு அதிசயங்களின் முதன்மையில் குறிப்பிடப்படுகின்றன.

.......என்ன இனிமையான நாதம்.
—அவர்

....எவ்வளவு அழகான தோற்றம்.
—இவர்

சென்னை திருச்சி



இன்னும் சகல ரேடியோ உலகையும் கேட்கலாகும் "ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்" ஏ. ஸி. டி. ஸி. ரேடியோ ரிஸீவர்

மாடல் 672

உங்களுக்கு கிடைக்கும் கரண்ட் ஏ. ஸி. யாகிலும் டி. ஸி. யாகிலும், இதில் 13 மீடர் முதல் 580 மீடர்வரை சகல ரேடியோ உலகையும் கேட்கலாம்

இந்திய ஸ்டேஷன்களும் குறிக்கப் பட்டுள்ளது

விலை ரூ. 350 மட்டுமே

உங்களுக்கு பிரியமான ரிகார்டு சங்கீதத்தையும் இந்த "எச். எம். வி." ரிகார்டு பிளேயரின் மூலம் எலக்டிரிக் கரண்டினுல் பாடுவித்து கேட்டானந்திக்கலாம்

மாடல் 122 AC

விலை ரூ. 55

நீங்கள் கேட்க வேண்டிய சில "ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்" ரிகார்டுகள்

ஸ்ரீமதி வஸந்த கோகிலம்

எனக்குன்னிருபதம் —N. 18061
கிளிக்கண்ணி & தில்லை ஸ்தலம்-N. 18064

ஸ்ரீமதி வஸுந்தரா

பச்சைமா மலை—பாசுரம் — N. 18062
புதிய பஜனை கீதங்கள் — N. 18063
அரிய தேசீய கீதங்கள் — N. 18056

எல்லா எச். எம். வி. வியாபாரிகளிடமும் கிடைக்கும்

"ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்"

டைரக்ஷன்:-
ராஜாசாண்டோ
கதையமைப்பு, வசனம்:-
"இளங்கோவன்"
பாட்டு:-
பாபநாசம் சிவன்
நட்சத்திரங்கள்:
எம். கே. தியாகராஜ பாகவதர்
பாப்பா. லக்ஷ்மிகாந்தம்
எஸ். எஸ். ராஜாமணி
செறுகளத்தூர் சாமா
பாலசரஸ்வதி
நடித்த:
திருநீலகண்டர்
விவரங்களுக்கு:- திருச்சி தியாகராஜ பிலிம்ஸ், திருச்சி.
"RAJU"

என் காமிராவுக்கு திடீரென ஒரு நாள் பயித்தியம் பிடித்து விட்டது!

"விட்டேனா பாரு! என்னையும் இதர காமிராக்களையும் கடுமையாக வேலை வாங்கும் அந்த டைரக்டர்களையும் ஆக்டர்களையும் பழிக்குப் பழி வாங்கியே திருவேன்" என்று கொக்கரித்துப் புறப்பட்டது. அதன் லீலையின் பயன் இவை.

சுப்புணி ஐயா! நிமிர வேலை வாங்குறீரே, சரியா?

யோகீ என்கிருங்களே! உமக்கு தூக்கமில்லையா.

ஸாண்டோ! மாட்டிக்கினீரா?

டங்காப்பாடம் கூட படிக்காமே தமிழ்க் காரர்களை ஆட்டுறயே.

ஏ கோத்தமங்கலம்! பேனாவை விட்டுட்டு எங்களையுமா படுத்தரே.

அருமையாகப் பாடுகின்ற முசிரி ஐயா! நீங்ககூட எங்களை நிமிர வேலை வாங்கினீரே; மறப்பேனா?

படித்த பிரமுகர்கள் வெள்ளித்திரைக்கு வருகிறார்கள் !

உயர்தர நடிப்பு !

இனிய கானம் !

பிரஸிடென்ஸி
அமெச்சூர்ஸ்
சபையோர்

ஜயா பிலிம்ஸ்
தயாரிப்பு

டைரக்டர் :
G. பட்டு அய்யர்

உதவி டைரக்டர்:
S. பாலசுப்பிர
மண்யம், B.A.

ஸ்டூடியோ :
ஜயா பிலிம்ஸ்

மன்மத விஜயம்

(தமிழ் பேசும் படம்)

நடிகர்கள் :

பிரபல அமெச்சூர் நடிகர்	ஸ்ரீமான் M. சுப்ரமணியன் (எலக்டிரிகல் இன்ஸ்பெக்டர்)	—	மன்மதன்
சிந்தாமணி புகழ்	மிஸ் K. அரங்கநாயகி	—	இரதி
பரத நாட்டிய சிறுமி	பேபி லலிதா (ஸ்ரீமான் M. சுப்பிரமணியன் அரும் குமாரி)	—	மோஹனு

C. R. ஸ்ரீனிவாஸன்	—	இந்திரன்	A. சங்கரன்	—	பரமசிவன்
V. K. பார்த்தசாரதி	—	பிரஹஸ்பதி	S. P. சீதாலக்ஷ்மி	—	பார்வதி
S. பார்த்தசாரதி	—	சூரபத்மன்	M. ஷண்முகசுந்தரம்	—	நாரதர்
G. V. சர்மா	—	தாரகாசுரன்	A. சந்தானம்	—	நந்தி
K. R. ஸ்ரீனிவாஸன்	—	சிங்கமுகன்	மாஸ்டர் வெங்கட்	—	ஹாஸ்யம்

இப்படத்தின் பாடல்களை H. M. V. ரிகார்டுகளில் கேளுங்கள்

விவரங்களுக்கு :

திருச்சி, சேலம், வடஆற்காடு, செங்கல்பட்டு ஜில்லாக்கள்,
பர்மா இவைகளுக்கு பூர்ண உரிமை பெற்றவர்கள் :
காண்டினென்டல் பிக்சர்ஸ்
கார்ப்பரேஷன்
பெங்களூர் சிடி

இதர இடங்களுக்கு :
விஜயா & கம்பெனி லிமிடெட்
மிர்ஜாப்பூர் ஹவுஸ்
மைலாப்பூர் :: மதராஸ்



கடல் கடந்த தமிழ்

தகோபா தமிழ் கல்வெட்டு—

எஸ். ஆர். பாலசுப்ரமணிய அய்யர். எழுதிய

கடல்கடந்த தமிழ் என்ற தலைப்பின் கீழ், நமது பெருந் தமிழ்க் குரவரான சாமிநாத ஐயரவர்கள் 'கலைமகளி'ல் எழுதியுள்ள கட்டுரை ஞாபகம் வரலாம். அதில் கடல் கடந்து சென்ற தமிழ்ச் சுவடிகளைப் பற்றி அவர்கள் எழுதியுள்ளார். இக்கட்டுரையில் சற்றேறக் குறைய ஆயிரத்து நூறு ஆண்டுகளுக்கு முன், தமிழர்கள் திரை கடலோடி, ஸியாம் நாட்டில் விஷ்ணு கோயில் ஒன்று ஆக்கி, ஏரி ஒன்று திருத்தி, அதன் கரையில் தமிழிலும், பல்லவ லிபியிலும்ஒருகல்வெட்டும் பொறித்து வைத் திருக்கிறார்கள் என்பதைப் பற்றி எழுதுவோம்.

நம் நாட்டிற்கு கிழக்கே யுள்ள குணகடலுக்கும் அப்பால் பர்மா நாட்டுக்குத் தெற்கே யுள்ளதும், ஸியாம் ராஜ்யத்தைச் சேர்ந்தது மான தகோபா என்ற ஊர் ஒன்றுளது. இத் தகோபா என்பதும் எகிப்துநாட்டு பூகோள சாஸ்திரியான தாலமி (Ptolemy) என்பவரால் 'தகோலா' (Takola) என்று குறிப்பிடப்படுவதும் மிலிந்த பன்ஹோ (Milinda Panho) என்ற பௌத்த நூலில் கூறப்பட்டிருக்கும் தக்கோலம் (Takkola) என்ற ஊரும் ஒன்றாகவே இருக்கலாம் என்பது சில ஆராய்ச்சிக்காரர்களின் அபிப்பிராயம்.

கங்கை கொண்ட சோழரான இராஜேந்திர சோழரின் மெய்க்கீர்த்தியில் இந்நகர் "கலைத்தக்கோர் புகழ் தலைத் தக்கோலமும்" என்று புகழப்பட்டிருக்கிறது. இவ்வூரின் சமீபத்தில் அளவற்ற இந்திய நாகரிகச் சின்னங்கள் உள்ள ஊர்கள் அநேகம் இருக்கின்றன.

இப் பூபாகம் வெள்ளி ஈயம் (tin) விளைகின்ற நாடு. இந்தியர்கள் அக்காலத்தில் சுரங்க வேலை செய்த அடையாளங்களை இன்னும் நாம் காணலாம். இவ்வூருக்கு அருகே 'கிரா' (Kra) தீபகல்பம் உள்ளது. இப்பாகத்தின் வழியே தான் இந்திய, சீனா, மலேயா அராபிய வ்யாபாரிகள் பலமான கடல் வியாபாரத்தை நடத்தி வந்தார்கள். தகோபா என்பது முக்கிய துறைமுகப் பட்டினமாக இருந்திருக்க வேண்டும். இது தகோபா என்ற நதியின் முகத்துவாரத்தில் உள்ளது.

முகத்துவாரத்தி லிருந்து நதியோடு மேலே சென்றால் அதன் இடக்கரையில் ஒரு மலை தென்படும். இதைக் "கோபிரா நரை" (Khao-Phra-Narai) 'நாரணன் (விஷ்ணு) மலை' என்று அழைக்கின்றனர். இதனருகில் மூன்று உருவங்கள் — மகா விஷ்ணு, ஸ்ரீதேவி, பூதேவி— உள்ள ஒரு சிலைக் கல்லும், அதன் பக்கத்தில் ஆறு வரிகள் உள்ள கல்வெட்டும் உள. இக்கல் வெட்டை 1902-ஆம் ஆண்டு பூர்க்கு (H. W. Bourke) என்ற இஞ்சினீயர் கண்டு பிடித்தார். அது முதல் அநேக வித்வான்கள் அக்கல் வெட்டின் வாசகத்தைப் படித்து அதன் உண்மையை விளக்கி எழுதியிருக்கிறார்கள்.

அதன் வாசகம் சுமாராகப் பின் வருமாறு :—

(1) ....வர்ம[ர்]க்த
(2) மார்தாங்க [ர]ங் கூறுடையா
(3) ர்தொட்டகுளம் பேர் ஸ்ரீ [அவனி]
(4) நாரணம் மணிக்கிராமத்தார் [க்]
(5) தும் சேனமுகத்தார்க்தும்
(6) ....பதாக்தும் அடைக் கலம்—

இந்த லிபியின் 'உருவத்திலிருந்து இக்கல்வெட்டு சுமார் 8-வது அல்லது 9-வது நூற்றாண்டினதாய் இருக்கலாமென்று சொல்லலாம்.

ஏதோ ஒரு அரசர் (வர்மர்— அவருடைய முழுப் பெயரும் ஆண்டும் மறைந்து போயின— ஆண்டகாலத்து நாங்கூர் உடையார் என்பவர், அவனி நாரணம் என்ற ஒருபெரிய ஏரியை வெட்டினார் என்றும் அதை மணிக்கிராமத்தார், சேனா முகத்தார்....... முதலியவர்களின் ரக்ஷையில் வைத்தார் என்றும் பொருள்கொள்ள இடங்கொடுக்கிறது. மலையின் பெயரோ நாரணன்மலை. செதுக்கப்பட்ட விக்கிரகங்களோ விஷ்ணுவும் அவருடைய இருதேவிகளான ஸ்ரீதேவியும், பூதேவியும். நாங்கூர் உடையான் என்ற பெயரிலிருந்து இத்தர்மத்தைச் செய்தவர் திருநாங்கூரிலிருந்து சென்ற தமிழ் நாட்டவர் என்று அறிகிறோம். திருநாங்கூர் என்பது தற்காலம் தஞ்சாவூர் ஜில்லா சீர்காழித்தாலூக்காவிலுள்ள ஒரு பிரபலமான விஷ்ணு ஸ்தலம். இங்கே அநேக விஷ்ணு ஆலயங்கள் உள. பண்டைச் சோழர்களின் பிரதம துறைமுகப் பட்டினமும், தலைநகருமான, காவிரிப்பூம்பட்டினத்திற்குச் சமீபத்திலுள்ளது. இத்திருநாங்கூரிற் பிறந்த குமுதவல்லியாரை (திரு) ஆலி (திருவாலி திருநகரி என்பது தற்காலப் பெயர்) நாட்டுத் தலைவரும் 'சோணாட்டரசரின் கீழ்ச்சேனைத் தலைவருமான திருமங்கை மன்னர்' மணந்துகொண்டார். ஆகையால் தகோபா தர்மத்தை இயற்றியவருக்குச்



காபியா ? கோவை, கோயம்புத்தூர் காபி ஸ்டோர்ஸில் வாங்குக

சிறந்த விஷ்ணு ஸ்தலமான திருநாங்கூர், தாய் நாடாய் இருந்திருக்க வேண்டும். சோழர்கள் வலி குன்றிய பிறகு, பல்லவர்கள் சோழ நாட்டை ஆண்டார்கள். அக்காலத்தில் வியாபாரத்தில் ஈடுபட்டு அயல் நாடுகளுக்குச் சென்ற சோழ தேசத்தவர்களில் இவர் ஒருவராயிருக்க வேண்டும். தங்கள் மதத்தையும், பழக்க, வழக்கங்களேயும், கலாசாரங்களேயும் இந்தியர்கள் தாங்கள் குடியேறிய நாடுகளிலும் பரவச்செய்தார்கள்.

மணிக்கிராமம் என்பது ஒரு வணிகக் கூட்டத்தாரின் பெயர். தமிழ் நாட்டுக் கல்வெட்டுக்கள் மூலமாய் மணிக்கிராமம், அஞ்சு வண்ணம், வளஞ்சியர், நானுதேசி-திசை-ஆயிரத்து-ஐநூற்றுவர், என்ற பலவியாபாரக் கூட்டத்தார்களேப்பற்றி அநேக அரிய விஷயங்கள் கிடைத்துள்ளன.

மணிக்கிராமத்தார் என்பவர்களேப் பற்றி சங்க நூல்களில் யாதொரு விவரமும் கிடைக்கவில்லே. வடநூல்களில் இக்கூட்டத்தாரர்க்கு 'வணிக்கிராமம்' என்று பெயர் உளது. திருவனந்தபுரத்திலுள்ள ஒரு கிறிஸ்துவ மாதாகோயிலே மணிக்கிராமத்தாரும், அஞ்சு வண்ணத்தாரும் ரக்ஷித்து வந்தார்கள். (தற்காலம் புதுக்கோட்டை சமஸ்தானத்திலுள்ள) கொடும்பாளூரிலுள்ள மணிக்கிராமத்தார், சேலத்தில் செய்த தானத்தைக் குறிக்கும் சாஸனம் பின் வருமாறு.

(1) ஸ்வஸ்தி ஸ்ரீ கோவிராஜ கேசரி பன்மற்கு யா

(2) ண்டு மூன்றவது கோடும்பாளூர் மணிக்கி

(3) ராமத்து வியாபாரி மஞ்சல் மனிய [மா]

(4) த்தாண்டன் மாசிநாளில் ஸ்ரீ கோ இலில் வை

(5) த் [த] க்கழஞ்சின் வாய் இருபத்தைந்து பிராமண

(6) ரை ஆண்டுவரை பஸிசை ஊட்டவை [த்] தபொன்

(7) இங்கழஞ்சு காத்த [ா] நடித்தலேமேல்

(8) ன இறக்தவான்.........

(9) ....

தஞ்சை ஜில்லா தில்லே ஸ்தானத்திலுள்ள மற்ருெரு கல்வெட்டுப்படி மதுரைகோண்ட கோபரகோசரி (அதாவது பராந்தகச் சோழன்-பட்டம். கி. பி. 907 காலத்தில்) யின் 27-ம் ஆண்டில் ஆதித்தபுரத்து மணிக்கிராமத்து வியாபாரி ஒருவர், திருநெய்த்தானத்து மகா தேவர்க்குத் திருவிளக்கு எரிக்க ஒரு தர்மம் செய்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

மற்ருெரு கல்வெட்டுப்படி, மணிக்கிராமத்தார் ஒருவர் குற்றஞ்செய்தால் அவர்களின் கூட்டத்தாரே அதை விசாரணே செய்யலாமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

அரசாங்க அதிகார வரம்பு கடந்த இவ்வித உரிமைகளேயும் (extra territorial rights) இவர்கள் அனுபவித்து வந்தார்கள். ஆகவே மணிக்கிராமத்தாரின் நிலேமை ஒருவாறு அறியக் கிடக்கிறது. மேலும் தற்காலம் காவிரிப்பூம் பட்டினத்துக்கு அருகாமையில் "மணிக்கிராமம்" என்ற கிராமம் ஒன்று உளது. இந்த கோபாக் கல்வெட்டில் கூறப்பட்டிருக்கும் மணிக்கிராமத்தார் காவிரிப்பட்டினத்தின்றும் மலேயா நாட்டுக்குச்சென்ற வியாபாரிக் கூட்டத்தாராகவே இருக்க வேண்டும். அந்நிய வியாபாரிகளின் இருப்பிடத்தைக் காக்க, வணிகர்கள் சேனேகளேயும் வைத்திருந்தார்கள். இக்கல்வெட்டில் குறிப்பிட்டிருக்கும் சேனு முகத்தார் என்பவர்கள் இவ்வியாபாரிகளின் காவலுக்காகப் படைவீடுகளில் ஸ்தாபிக்கப்பட்ட வீரர்களேயே குறிக்கும்.

அவனி நாரணன் என்ற விருது, பல்லவ அரசரான மூன்ருவது நந்திவர்மருக்கு (சுமார் கி. பி. 826-850) உடையது என்று கல்வெட்டுக்களாலும் நந்திக்கலம்பகம் என்ற தமிழ் நூலாலும் அறிகிருேம். நந்திக் கலம்பகத்திலேயே பல்லவர்களின் கடற்படையின் வலிமை கூறப்பட்டுள்ளது.

ஆகவே பல்லவ அரசர்களின் (மூன்ருவது நந்திவர்மர்) காலத்தில், தமிழர்கள் கடல் கடந்து மலேயா முதலிய அயல்நாடுகளோடு பலமான வியாபாரத்தை நடத்தி வந்தார்கள்என்றும், அவ்வியாபாரக் கூட்டத்தாரின் நன்மைக்காகத் தங்கள் சமயக் கோயில்கள் கட்டி, குல தெய்வமாகக் கொண்டாடின விஷ்ணுவுக்கு உருச் சிலேயும் நிறுத்தித் தொழுது வந்தார்கள் என்றும், நாம் எளிதில் அறியக் கிடக்கிறது. அக்காலத்து வியாபார நிமித்தம்வெளிநாடுகளிற் குடியேறினவர்கள், தங்கள் தாய் பாஷையைஅயல் நாட்டில் மறக்காமல் அம்மொழியிலேயே தக்க சிற்பியைக்கொண்டு கல்வெட்டும் பொறித்து வைத்திருக்கிருர்கள் என்ருல் அவர்களின் மத ஆர்வத்தையும், தேசாபிமானத்தையும், தாய் மொழியில் பற்றையும் நாம் கொண்டாட வேண்டியது அவசியமாகும். இவ்விதச் சிறந்த நோக்கங்களுக்குச் சின்னமாக இருப்பது தகோபாவிலுள்ள ஒரு சிறு தமிழ்க் கல்வெட்டே ஆகும்.

இந்தியர்கள், கடல்கடந்து அயல் நாட்டு வளப்பத்தை அறியாத 'கிணற்றுத் தவளேகள்' என்று சில சரித்திராசிரியர்கள் சென்ற நூற்ருண்டில் அபிப்பிராயம் கொண்டதுண்டு. அரணுக இருந்து உள்நாட்டார் வெளிச் செல்லாமலும், அயல் நாட்டார் உட்பிரவேசிக்காமலும் கடல் தடுத்ததென்று அவர்கள்எண்ணினுர்கள். ஐரோப்பியர்கள் கடல் மார்க்கமாய் இந்தியாவுக்கு நேரான வழியைக் கண்டுபிடித்த பிறகே, இந்தியாவின் தனித்துநிற்கும் தன்மை (Isolation) மாறினது என்று அவர்கள் எண்ணினதுண்டு. ஆனுல் கொஞ்சகாலமாய் நடந்துவரும் ஆராய்ச்சிகளிலிருந்து, இந்தியர்கள் கடல் தாண்டுவதற்குப் பயங்கொண்டதெல்லாம் ஐரோப்பியர்கள் இந்தியாவுக்கு வந்த பிறகுதான் என்று ஏற்படுகிறது. குறைந்தது கிறிஸ்தவ அப்த காலமுதல் பல்லவ, சோழ, விஜய நகர அரசர்கள் ஆண்ட காலம்வரை இந்தியர்கள் கடல் வியாபாரத்தில் உன்னத நிலேமையை அடைந்திருந்தார்கள் என்றும், அளவற்ற திரவியத்தைத் தேடித் தாய்நாட்டின் வளத்தைப் பெருக்கினுர்கள் என்றும் அறிகிருேம்.

Note—

For further particulars see
Hultzsch—J. R. A. S.
T. A. G. Rao—E I.
K. A. N. Sastri—J. B. R.

ஓரியண்டல் கவர்ன்மெண்டு ஸெக்யூரிடி லேப் அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

ஒரு கம்பெனியின் வருஷாந்திர அறிக்கை, அதன் டைரக்டர் இன்னினுர், கம்பெனியின் சொத்து மதிப்பும் வியாபார விஸ்தாரமும், இவையே அதற்குப் புகழும் பெருமையும் தருவன. இந்த அம்சங்கள் பூராவையும் திருப்தி செய்வது ஓரியண்டல் கவர்ன்மெண்ட் ஸெக்யூரிடி லேப் அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட், 1874-ஆூத்தில் ஆரம்பிக்கப்பட்ட இக்கம்பெனி இந்தியாவில் பிராபல்யமும், மதிப்பும் வாய்ந்தது.

இக்கம்பெனி வருஷா வருஷம் புதிது புதிதாகத் தொழிலே விரித்து வளர்த்து வந்திருக்கிறது. அதனுல் இதன் 'இன்வெஸ்ட்மெண்டிலிருந்து' $4\frac{3}{8}$% லாபம் வருஷவாரியில் கிடைத்து வருகிறது. இதை 'ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் புக்'கில் பார்த்து தெரிந்துக்கொள்ளலாம். பிரிமீயத்திலிருந்து வரும் வருமானத்துக்கும், செலவுக்கும் தராதரத்தை நோக்கினுல், 1937-ல் 22·9% ஆக இருந்தது 1938-ல் 22% ஆகி யிருப்பது சந்தோஷிக்கத் தக்கது. பாலிஸிதாரர் விஸ்தரிப்பு முதலியவற்றைப் பற்றி ஏற்கெனவே 'ஹநுமான்' வாரப் பதிப்பில் வெளியிடப்பட்டுள்ளது.

ஆகவே, ஓரியண்டல் க. ஸெ. லே. அஷ்யூரன்ஸ் கம்பெனியின் செல்வாக்குப்பற்றி அதிகம் கூறத் தேவையில்லே.

"சதிநடனே தாளமிசை யிரண்டு மொன்றென"

செக்கடி மாடுகள்

எஸ். சங்கரன்

எழுதியது



தந்தை

பார்வதியின் மேல் ஏற்பட்ட அபார காதலினாலோ, அல்லது ஏதோ ஓர் அமானுஷிக சக்தியினால் தூண்டப்பட்டதினாலோ, கைலாஸமய்யர் அவளைக் கல்யாணம் செய்து கொள்ளவில்லை. ஆனால், மானிடனாய்ப் பிறந்த ஒவ்வொருவனும் மணம் செய்துகொள்ள வேண்டுமென்ற கடமையை, நியதியை, உத்தேசித்தே விவாகத்திற் கிசைந்தார். அவர் பெற்றோர்களோ உறவினர்களோ இதைப்பற்றி, அவரிடம், ஒருசிறு வார்த்தைகூட கேட்கவில்லை. மேலும் அவர் தனக்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த ஜீவனின் குணாதிசயங்களைப்பற்றியோ, நிற பேதங்களைப் பற்றியோ எண்ணிப் பார்க்கவு மில்லை. அல்லது அப்படி எண்ணிப் பார்க்க, தனக்கு உரிமை யுண்டு என்றுகூட அவருக்குத் தோன்ற வில்லை.

பெற்றோர்கள் தனக்காக நிச்சயித்திருக்கும் ஒரு ஸ்த்ரீயை—அவளிடம் என்ன குறைகளிருந்தாலும், அவள் எப்படி இருந்தாலும் சரி—தன் வாழ்க்கையின் சங்கிலியுடன் பிணைத்துக்கொள்ள வேண்டும். இது தான் அவர் கொள்கை. ஆகவே, யாதொரு நூதனமுமின்றி விவாகம் இனிது நிறைவேறிற்று.

பார்வதியுடன் அவர் நடத்திய இல்லறம் மிகவும் சாதாரணமானது. வாழ்க்கையின் மேடு பள்ளங்களில் அகப்பட்டு அல்லல்பட வேண்டுமென்று அவர் ஆசைப்படவில்லை. திரும்பித் திரும்பி ஒரே பாதையில், யாதொரு கொள்கையு மின்றி ஒரே எண்ணத்துடன் சுற்றி வரும் செக்கு மாட்டைப்போல் அவர் வாழ்ந்து வந்தார்.

சின்னாட்களில் பார்வதி தன் ஞாபகார்த்தமாக ஒருபுதுஜீவனை,பதிக்கு அளித்துவிட்டு, ரஸமற்ற இவ்வுலகத்திலிருந்து விடுதலையடைந்தாள். பார்வதியின் பரிசான ராமஸ்வாமியை கைலாஸம் தன்னைப்போலவே வளர்த்து வந்தார். தந்தை தனயன் என்ற வாஞ்சையாலல்ல. தாயில்லாக் குழந்தை, அதை வளர்ப்பது தன் 'கடமை' என்ற பச்சாத்தாபத்துடன் தான்.

காலச்சக்கரத்தின்முள் சிலவருடங்களைத் தாண்டினதும், கைலாஸம் கமலம் என்று மற்றொரு பெண்ணை மணந்து கொண்டார். ஆனால் அவள் மறு வருஷத்திலேயே கிருஷ்ணஸ்வாமியை பிரசவித்துவிட்டு, அந்தப் பிரசவ அறையிலேயே உயிரை நீத்தாள். காலக்கிரமத்தில் குழந்தைகள் குமரன்களாயினர்.

தனயர்கள்

கிருஷ்ணஸ்வாமி மகா சுறு சுறுப்புள்ளவன். ஒரு நிமிஷமும் அவனால் சும்மா இருக்கவே முடியாது. அவன் சின்னஞ்சிறு உதடுகளில் புன் சிரிப்பு சதா தவழ்ந்து கொண்டிருக்கும். விளையாட்டுகளில் எப்பொழுதும் அவனுக்குத்தான் முதல் பரிசு. உல்லாஸமாக உடுப்பதும், ஊர்சுற்றுவதுமாக அவன் பொழுதைக் கழித்து வந்தான். ஆகையால் சந்தோஷகரமாகவும் ரஸமாகவும் அவன் வாழ்க்கை மலர்ந்தது.

ராமஸ்வாமியின் விதியே வேறு மாதிரி. கிருஷ்ணஸ்வாமியை அவன் சகல விதத்திலும் ஒத்திருந்தாலும், சரியான பராமரிப்பும், தூண்டுதலும் இல்லாததால், அவன் ஜீவியம் சப்பென்றிருந்தது. கைலாஸத்தைப்போலவே, அவனும் செக்கு மாட்டின் ஸ்திதியை அடைந்தான். உலகம் விரிந்த கைகளுடன் அவனைவரவேற்கவில்லை. ஏதோ கஷ்டத்துடன் சிரமப்பட்டு அவன் நடமாடினான் என்று தான் சொல்லலாம். நாளாவர்த்தியில் ராமஸ்வாமியும் மணம் செய்து கொண்டான். மக்களைப் பெற்றான். ஆனால் ஒன்றிலாவது ஜீவ களை யில்லை.

தர்மபுரியிலிருந்து கிருஷ்ணஸ்வாமி பக்கத்து ஊரிலுள்ள முனிஸிபல் ஹைஸ்கூலில் படித்துக் கொண்டிருந்தான். ஆனால் அதேபோல் ராமஸ்வாமியையும் படிக்க வைக்க வேண்டுமென்று ஒருவருக்கும் தோன்றவில்லை. அதைப்பற்றி ஒருவரும் கவலைப்படவில்லை. ஆகவே கைலாஸத்தின் மரணப் படுக்கை யண்டை ராமஸ்வாமி ஒருவன் தான் காணப்பட்டான்.

தந்தையின் நிலைமை வர வர மோசமாகிக் கொண்டே வந்தது. அந்த அறையில் சூன்யம் நிரம்பியிருந்தது. கட்டிலில் அனேக இடங்களில் கயிறுகள் அறுந்து காணப்பட்டன. ஒரு மூலையில் புழுதிப்படலங்களால் மூடப்பட்ட, ஒரு ஸரஸ்வதி படம் தொங்கிக்கொண்டிருந்தது. அதனடியில் ஜீவனை கொக்கியில் வைத்துக்கொண்டு எரிந்து கொண்டிருந்த ஒரு குத்து விளக்கு, கூடிய வரையில் காற்றுடன் மன்றாடிவிட்டுக் கடைசியில் வீரஸ்வர்க்க மடைந்தது.

அந்த பயங்கரமான அந்தகாரத்தினூடே, தந்தையைக் கூர்ந்து கவனித்தான் ராமஸ்வாமி. கைலாஸம் பெருமூச்சு விட்டுக்கொண்டே கூறலானார்.

"அப்பா! ராமஸ்வாமி! கிருஷ்ணன் சிறு குழந்தை. அவனைக் கைவிட்டு விடாதே! அவனைக் காப்பாற்றுவது உன் கடமை".

கைலாஸத்தின் மூச்சு மெதுவாக அடங்கிக் கொண்டே வந்தது. ராமஸ்வாமியின் தொண்டை அடைத்துக் கொண்டது. ஆயினும் சமாளித்துக் கொண்டு "அப்பா! அந்தக் கவலை உங்களுக்கு வேண்டாம். அவனை நான் கைவிடமாட்டேன்" என்றான்.

கைலாஸம் அறையை மற்றொரு தரம் பயங்கரமாகப் பார்த்துவிட்டு..."மறக்காதே ....கி...ரு....ஷ்....ண....ன்.... ரா...ம்....ப....நல்....ல...வ...ன்..." அத்துடன் அவர் ஆத்மா இவ்வுலகத்தை விட்டு விடை பெற்றுக் கொண்டது.

அண்ணன்

அவ்வூர் முனிஸிபாலிடியில் ராமஸ்வாமி ஒரு குமஸ்தாவாக அமர்ந்தான். அவன் படிப்பிற்காக ஒரு செல்லாக் காசுகூட செலவழிக்கப்படாததால், அவன் பெற்ற சம்பளமும் மிக சொல்பமாகவே யிருந்தது. ஒரு குமஸ்தாவிற்கு வேண்டிய யோக்யதைகளில் அனேகம் ராமஸ்வாமியிடம் கிடையாது. ஆயினும் கைலாஸமய்யரின் செல்வாக்கை உத்தேசித்து, அவ்வேலை அவனுக்கு அளிக்கப்பட்டது: அவன் தன் விதியை ஒருவாறாக அறிந்து கொண்டான். உயிர்போகும் வரை அந்த குமஸ்தா வேலைதான் அவன் விதி.

அவ்வேலையை விட்டுவிட்டால் அவன், அவன் மனைவி, குழந்தைகள் இவ்வளவு பேரும் பட்டினி கிடப்பதைத் தவிர வேறு வழியில்லை. ஆகவே ராமஸ்வாமி சம்பளத்தைப்பற்றி அவ்வளவாக கவலைப்படவில்லை. எப்பொழுதாவது, யாராவது, ஜாதகக்கட்டுடன் அவன் வீட்டிற்கு வருவார்கள். ஆனால் ராமஸ்வாமியின் தாட்சண்யத்தினாலும் உள்ளதை உள்ளபடி உரைக்கும் 'கெட்ட' குணத்தினாலும், அவன் கற்றிருந்த அந்த உபரித் தொழிலும் அத்தொழில் வருவாயற்று க்ஷீண தசையடைந்தது. இந்த லக்ஷணத்தில் கிருஷ்ணஸ்வாமியை 'முன்னுக்கு'க் கொண்டு வருவதற்காக, அச்சிறு குடும்பம் அசாதாரணமான சிக்கனத்தைக் கையாள வேண்டிவந்தது.

ஜம்புகேச்வர வீதியிலுள்ள பாழடைந்த அந்தச் சிறுகோவில் ஒன்றுதான் ராமஸ்வாமியின் 'அனுவசிய'ச் செலவு! எப்பொழுதாவது கிடைக்கும் ஒரு தேங்காய், சில மாலைகள், கொஞ்சம் எண்ணை, இவைகளுடன் அந்த விக்ரகம் திருப்தியடைந்து வந்தது.

ஆனால், அந்த நான்கு சுவற்றிற்குள் தான் ராமஸ்வாமி மனித வர்க்கத்தில் அபூர்வமான சமத்துவத்தை அறிந்தான். முனிஸிபல் ஆபீஸ் ஏழை குமஸ்தா முதல், சேர்மன், ஜமீந்தார் ஆகிய சகலரும், மேல் வேஷ்டியை இடுப்பில் கட்டிக்கொண்டு தலை குனிந்து நடக்கும் காக்ஷியை ராமஸ்வாமி அந்த நான்கு சுவற்றிற்குள் தான் கண்டான்.

உயர்தரமான இரும்பு பெட்டிகளுக்கு, M. நாராயணசாமி முதலியார் & சன்ஸ், 58 பிராட்வே, மதராஸ்

ஆனால் வெளியே ராமஸ்வாமிக்கு அடிக்கடி தன் கொள்கை, கடமையைப் பற்றி சந்தேகம் தோன்றிக்கொண்டே யிருந்தது. அவனுக்கு உடந்தையாக கக்ஷி பேச ஒருவரும் முற்படவில்லை. "யாரோ ஒருவனுக்காக, தன் குடும்பம் சிக்கனக் கத்திரியிலகப்பட்டு துண்டிக்கப்படுவதை அவன் மனைவி விரும்பவில்லை. இன்னும் ரங்கன் வேறு அவனை அடிக்கடி நிந்தித்துக்கொண்டிருந்தான். ரங்கன் நாளொன்றுக்கு 14 மணி நேரம் செட்டி கடை யொன்றில் உழைத்துவிட்டு, பிரதிப் பலனாக தன் குடும்பத்தை 'பட்டினியால் சாகாதவாறு' பார்த்துக்கொண்டிருந்தான். அவனுக்கு இந்தக் கடமை, சத்யம், மனச்சாக்ஷி ஆகிய பைத்தியக் காரத் தனங்களெல்லாம் பிடிக்காது. "இது பெரிய முட்டாள் தனம். நாள் முழுதும் நாயாக உழைத்து, ஒரு வேலையுமின்றித் திரியும் அவனுக்கு ஏன் நீ உதவி செய்யவேண்டும்?" இது ரங்கன் சித்தாந்தம்.

"நாம் ஒருவருக்கொருவர் உதவி செய்ய வேண்டும். இதைத்தான் சாஸ்திரம் சொல்லுகிறது." இது ராமஸ்வாமியின் சமாதானம். ரங்கனுக்கு உண்மையில் ராமஸ்வாமியிடத்தில் அபிமானம் உண்டு. அவனிடம் ஒரு தனி குணத்தை ரங்கன் கண்டிருந்தான்.

"ஆமாம் அப்பா! உன் தம்பிக்கு நீ உதவி செய்யவேண்டியதுதான். வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால் உதவி செய்வதற்கும் அவன் சுகத்திற்காக உன்னை நீயே அடிமைப் படுத்திக்கொண்டு சாவதற்கும் வித்தியாசமுண்டு. நியாயமாகப் பார்த்தால் அவன் கெடுவது உன்னால் தான்"

ஆனால் சம்பாஷணை இத்துடன் முடிவடைந்து விடும். ஏனெனில் ராமஸ்வாமி ஒரு ராமபாணத்தை வைத்திருந்தான். "தகப்பனார் சாகும் பொழுது...." என்று அவன் ஆரம்பித்ததும், ரங்கன் பதில்பேசாமல் வாயை மூடிக்கொள்வான்.

ஆகவே வெளியில் ராமஸ்வாமி தன் கொள்கையை ஸ்திரப்படுத்த முடியாமல் திண்டாடுவான். அந்த பாழடைந்த கோவிலின் கர்ப்பக்ருகத்தினுள், மங்கின குத்து விளக்கின் வெளிச்சத்தின் நடுவில், ஸ்ரீ கிருஷ்ண விக்கிரகத்தைப் பார்க்கும் போதெல்லாம் ராமஸ்வாமியின் உள்ளம் உறுதிப்படும்.

தம்பி

நாளடைவில் ராமஸ்வாமி வயிற்றைக் கட்டி வாயைக்கட்டி அனுப்பி வந்த பணத்தினால், கிருஷ்ணஸ்வாமி ஒரு பி. ஏ. பட்டத்தைப் பெற்றான். முன்போலவே, குஷியான அவன் ஆடம்பர வாழ்வில் யாதொரு வித்தியாசமும் காணப்படவில்லை. அவன் விவாக விஷயத்திலும் ராமஸ்வாமி பெரும் தோல்வியே அடைந்தான். எவ்வளவோ கஷ்டப்பட்டு, தன் நிலைமைக்கேற்ற பெண்களை தெரிந்தெடுத்திருந்தும், கிருஷ்ணசாமி ஒரேயடியாய் மறுத்துவிட்டான். ராமஸ்வாமிக்கு வயிற்றில் 'பக்' என்றது.

"ஏனப்பா! அவர்கள் உயர்ந்த வம்சத்தைச் சேர்ந்தவர்கள். ஒரு குடும்பத்தை நிர்வகிக்கும் சக்தி வாய்ந்தவர்கள். இன்னும்...."

"அண்ணா! என்னால் முடியாது. அவர்கள் சுத்தக் கர்நாடகம். நாகரிகம் துளி கூடத் தெரியாத நாட்டுப்புறங்கள். நான் வாசுதேவய்யர் பெண் லலிதாவைத் தான் கல்யாணம் செய்து கொள்ளப்போகிறேன்" என்றான்.

ராமஸ்வாமிக்கு இது பெரிய ஏமாற்றத்தையே விளைவித்தது. அவன் உலகத்தை அறிந்தவன். வாழ்வு கரைகளை உடைத்துக் கொண்டு பெருகியோடும் ஒரு காட்டாறு. அதில் தள்ளப்பட்ட நாம் அதை நீந்திக் கடக்க முயற்சித்தால் அபாயமாகவே முடியும். அதன் போக்கின்படியே சென்று, சந்தர்ப்பம் ஏற்பட்டால் மிதந்து வரும் மரக்கட்டை முதலியவற்றைத் துணை கொள்ளலாம். இதுதான் ராமஸ்வாமியின் கொள்கை. ஆகவே கிருஷ்ணஸ்வாமியின் பொறுப்பற்ற நாடோடி வாழ்க்கைக்குத் தகுந்த, சிக்கனவதியான ஒரு மங்கையை மணம் செய்விக்க வேண்டுமென்பதே அவன் விருப்பம்.

வாசுதேவய்யர் முற்போக்குள்ள—அதாவது வேண்டாத விஷயங்களிலும் பழக்கங்களிலும் இறங்கும் துணிவுள்ள—ஒரு தீவிர வாதி. அவர் வீட்டுப் பெண்களின் காபி, பவுடர், சோப்பு, அலங்கார வகையராக்கள் இவைகளுக்கு மட்டும் சுமார் மாதம் பத்து ரூபாய்களுக்கு குறையாமல் ஆகும். மேலும் எதிர்காலத்தைப்பற்றி நிலையற்ற கிருஷ்ணஸ்வாமி, சம்சார சாகரத்தின் தன்மையை அறியாத ஒரு பெண்ணை—லலிதாவை—மணக்க விரும்புகிறானென்று தெரிந்ததும் ராமஸ்வாமி பட்ட மனக் கஷ்டத்திற்களவில்லை.

........அவன் நண்பர்களுக்கு சீட்டாடும் இடமாக........

"கிருஷ்ணா! அவர்கள் பணக்கார குடும்பம்! உன்னால் அப்பெண்களை வைத்து சம்ரக்ஷிக்க முடியாது. கோடியாத்து பஞ்சாபிகேச சாஸ்திரிகளின் கடைசிப் பெண் பார்வதியை கல்யாணம் செய்துகொள். மேலும் வாசுதேவய்யர் வீட்டுப் பெண்களுக்கு ஆசாரமென்பதே தெரியாது."

"ஆசாரமா? அதற்கும் கல்யாணத்திற்கும் என்ன சப்பந்தம்?"

"இருக்கிறது; அனாசாரத்தினால் தான் வாழ்க்கை பாழ்படுவதெல்லாம்."

"அண்ணா! உன் புத்தி கெட்டுவிட்டது. நீ பட்டணததில் கொஞ்ச காலமாவது இருக்கவேண்டும்."

"அதெல்லாம் நடவாது. பார்வதியைத் தான் நீ விவாகம் செய்துகொள்ளவேண்டும்."

"அண்ணா! அப்பா செத்துப் போகும் பொழுது......."

முதல் முட்டு

வழக்கப்படி கிருஷ்ண்ஸ்வாமி லலிதாவை கல்யாணம் செய்துகொண்டு தனிக்குடித்தனம் செய்யலானான். ராமஸ்வாமியின் முயற்சியினால் தாலூகா ஆபீஸில் அவனுக்கு ஒரு குமாஸ்தா வேலை கிடைத்தது.

"அப்பாடா! இனிமேலாவது நிதானமாக மூச்சுவிடலாம். சில நல்ல உடைகள் வாங்கிக்கொள்ளலாம்" என்று சந்தோஷப்பட்டான் ரங்கன்.

ஆனால் ராமஸ்வாமி பழைய தோரணையிலேயே "அவன் தகப்பனார் உயிரோடிருந்தால் இச்சிறு வேலையில் அவனைப் பார்க்க சம்மதித்தே இருக்கமாட்டார்" என்றான்.

ரங்கன் சிறிது ஆத்திரத்துடனேயே "ஏன்? இது அவனுக்கு ஒரு நல்ல ஆரம்பம்தான். முன்னேற்ற ஏணியில் அவனை ஏற்றிவிட்டாய். இனிமேல் தானாகவே முன்னுக்கு வரவேண்டியது அவன் பொறுப்பு. யார் கண்டார்கள்? ஒரு காலத்தில் அவன் பெரிய உத்தியோகம் வகித்து உன கடனைபெல்லாம்கூட திருப்பிக் கொடுத்தாலும் கொடுத்துவிடுவான்."

"இந்த மாதிரி விஷயங்களில் நாம் பிரதிப்பலனை எதிர்பார்க்கக்கூடாது. சாஸ்திரம் அப்படிச் சொல்கிறது".

"சரிதான். ஆனால் அதே சாஸ்திரம் 'வாங்கின கடனை திருப்பிக்கொடு.' என்று கூடச் சொல்லுகிறதே."

ராமஸ்வாமி அதை மறுக்க முயலுவதில்லை.

கிருஷ்ணஸ்வாமி கடனைத் திருப்பித்தரவில்லை. ஆனால் சில நாட்களுக்குள்ளேயே,

உயர்தரமான இரும்பு பெட்டிகளுக்கு, M. நாராயணசாமி முதலியார் & சன்ஸ், 58 பிராட்வே, மதராஸ்

முகத்தை தொங்கப்போட்டுக்கொண்டு வந்தான். அநேக சுற்றுவளைச்சல்களுக்குப் பிறகு தான் வேலையை ராஜிநாமா செய்து விட்ட சந்தோஷ சமாசாரத்தை, மெதுவாக அண்ணனிடத்தில் பிரஸ்தாபித்தான். ராமஸ்வாமியின் ஹ்ருதயம் 'டக்' கென்று நின்றுவிடும் போலாய்விட்டது. "என்ன? வேலையை • விட்டுவிட்டாயா? உனக்கு பைத்தியம் பிடித்துவிட்டதா என்ன?"

ஆனால் ராமஸ்வாமிக்குத்தெரியும். அவன் அவமானங்களென்பது "புதிதாகச்சேரும் குமஸ்தாக்களின் சிற்சில குறைகளை நிவர்த்தித்தல்" என்பது. அதற்காக அவன் வேலையை—இவ்வளவு கஷ்டப்பட்டு சம்பாதித்த வேலையை—விட்டு விடுவானென்று ராமஸ்வாமி கனவிலும் நினைக்கவில்லை."

இரண்டாவது முட்டு

"அண்ணா! எப்படியானாலும் சரி, எனக்கு அங்கே வேலைசெய்யப்பிடிக்கவேயில்லை. எல்லாம் ஜீவகளையின்றி சூன்யம் நிரம்பியிருக்கிறது. எனக்கு எலக்ட்ரிகல் என்ஜினீயராக வேண்டுமென்று ஆசையாயிருக்கிறது. இந்தக்காலத்தில் எல்லாம் மின்சாரத்தில் தானிருக்கிறது. நேற்று பேப்பரில் பார்த்தேன். ஒரு'கோர்ஸ்' இருக்கிறது. மொத்தம் 300



ரூபாய்தான் செலவு. அண்ணா! நீ கட்டாயம் உதவவேண்டும்."

"முன்னூறு ரூபாய்! என்னால் ஒரு போதும் முடியாது."

கடைசியில் ராமஸ்வாமி முன்னூறுரூபாய் கடன் வாங்கி அருமைத் தம்பியை என்ஜினீயரிங் கோர்ஸில் சேர்த்தான். இந்த பணத்தை கிருஷ்ணஸ்வாமி தனக்கு கிடைக்கும் லாபத்திலிருந்து திருப்பித் தந்து விடுவதாகப் பேச்சு. ஆனால் அங்கே ஒரு லாபமும் வரவில்லை. பாதிப்படிப்பு முடிவதற்குள் அவனுக்கு அதில் வெறுப்பு தட்டலாயிற்று.

மூன்றும் முறை

ஆகையினால் மறுபடியும் கிருஷ்ணஸ்வாமி ராமஸ்வாமியுடன் பழைய நாட்டுப்புறத்திலேயே மிகக் 'கஷ்டப்பட்டு' வசிக்கவேண்டி வந்தது.

ஒரு நாள் கிருஷ்ணஸ்வாமி வெகு அவசரமாக ஓடிவந்தான். "ராமு! இந்த கஷ்டத்திற்கெல்லாம் ஒரு வழி கண்டு பிடித்து விட்டேன். என் எதிர்காலத்தை நிச்சயம் செய்துவிட்டேன்."

"என்ன?" என்றொரு அர்த்தமற்ற கேள்வியை கேட்டான் ராமஸ்வாமி.

"அண்ணா! இங்கேதான் இந்தக்காலத்தில் எல்லாம் மோட்டார்களில்தானிருக்கிறது. மோட்டார்கள் ஜாஸ்தியாக ஆகத்தான் நமக்கு விமோசனம் பிறக்கப்போகிறது".

"பஸ் ஸர்வீஸ் நடத்தப்போகிறாயா?"

"இல்லை ராமு! அது முட்டாள்தனம். நமது ஊர்க்கோடியிலுள்ள ராமசந்திரா மோட்டார் கம்பெனி திவாலாய்விட்டது. அவர்கள் அதை விற்றுவிடத் தயாராயிருக்கிறார்கள். அதை எனக்காகமட்டும் வாங்கிவிடு. பிறகு பார்".

"உனக்கு மெகானிஸம் தெரியாதே".

"பரவாயில்லை. என்னால் சமாளிக்க முடியும். இது தான் கடைசித்தடவை. அப்பா இறக்கும்பொழுது........"

வேறு வழியில்லாமல் ராமஸ்வாமியும் ரங்கனும், பரலோகப்ராப்தி யடைந்திருந்த ராமசந்திரா மோடார் கம்பெனியைச் சென்று பார்வையிட்டார்கள். நாலு கிழிந்த டையர்கள், இணைப்பற்ற இரண்டு மூன்று சக்கரங்கள், காலதேவனின் கோபத்திற்காளான பாதி போயிருந்த ஒரு மோட்டார் மேல்மூடி, இன்னும் உபயோகமற்ற கொஞ்சம் ஸ்க்ரூ ஆணிகள், இவைதான் அதன் ஆஸ்திகள்.

"குமஸ்தா வேலையைப்போல் அவனால் இதை உதறித்தள்ளிவிட முடியாது. இந்தத் தடவை மட்டும் பார்க்கப்போகிறேன்" என்றான் ராமஸ்வாமி.

"என்ன? நீ பணம் கொடுக்கப்போகிறாயா?" என்று ஆச்சரியத்துடன் வினவினான் ரங்கன்.

"ஆம்" என்று மௌனமாக தலையை அசைத்தான் ராமஸ்வாமி.

"சந்தேகமில்லை, நான் பைத்தியக்கார கும்பலில்தான் வசிக்கிறேன்" என்று தலையைத் தொங்க போட்டுக்கொண்டான் ரங்கன்.

கிருஷ்ணா மோட்டார்வொர்க்ஸ், ஆரம்பத்திலேயே முடிவின் ருசியை சுவைக்க ஆரம்பித்து விட்டது. சில பஸ் சொந்தக்காரர்கள் சில சாமான்களை கடனுக்கு வாங்கினார்கள். ஆனால் அதற்கு பணம்கொடுக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணம் அவர்களுக்கு உண்டாகவில்லை. அவன் நண்பர்களுக்கு சீட்டாடும் இடமாக அது உபயோகிக்கப்பட்டது.

இருளில் ஒளி

வீட்டு வாசலில் கிருஷ்ணஸ்வாமி அவனை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். ராமஸ்வாமி 'இழந்த' இன்பங்களை கிருஷ்ணஸ்வாமி 'இருமடங்காக' அடைந்திருந்தான். தன் சகோதரனின் நிலைமையைக் கண்டதும் கிருஷ்ணஸ்வாமிக்கு கொஞ்சம் நம்பிக்கை வந்தது.

"அண்ணா! நான் தோல்வியுறுவதின் காரணம் எனக்குத் தெரிந்து விட்டது."

"நானும் அப்படித்தான் நினைக்கிறேன்"

"அண்ணா! எல்லாம் இந்த ஊர்தான் காரணம். சகலமும் சூன்யமடைந்துகிடக்கிறது. முன்னுக்கு வர வழியே இல்லை, அண்ணா! நான் ரங்கூனுக்குப் போகப்போகிறேன்"

ராமஸ்வாமியின் வளைந்த முதுகு சிறிது நிமிர்ந்தது. "நீ போய்விட்டால் உன் மனைவி, இருக்கிற குழந்தை, பிறக்கப் போகும் குழந்தை இவர்களை யார் காப்பாற்றுவார்கள்?"

கிருஷ்ணஸ்வாமியின் குரலில் பரிதாபம் தொனித்தது. "அண்ணா! நீ காப்பாற்றுவாய்! நான் மறுபடியும் வந்து கூட்டிக்கொண்டு போகும் வரையில் அவர்கள் இங்கேயே இருப்பார்கள்."

"அது ஒருபோதும் நடக்காது" என்று சொல்லிவிட்டு ராமஸ்வாமி நேரே கோவிலை நோக்கிச் சென்றான்.

எங்கும், சில குருட்டு விளக்குகளைத் தவிர, ஒரே இருட்டாயிருந்தது. வாழ்க்கைப் போராட்டங்களை எதிர்க்க முடியாமல் களைப்புற்று, சக்தியற்று இடிந்துபோய் ஒரு படிக்கட்டில் உட்கார்ந்து கொண்டான் ராமஸ்வாமி. நினைவு அவனை ஆதி காலத்திற்கு அழைத்துச் சென்றது. தனக்குப் பிறந்த முதல் குழந்தையைக் கண்டதும் அவன் என்னவெல்லாமோ எண்ணினான்.

ஆனால் அதே குழந்தை. குச்சிக்காலும் குச்சிக்கையுமாக கோர உருவத்துடன் பசியை சதா அனுபவித்துக்கொண்டு இப்பொழுது திரிகிறான். தன் மனைவி? அவள் சகலத்தையும் ராமஸ்வாமிக்கு தத்தம் செய்திருந்தாள். ஆனால் அவைகளை கிருஷ்ணஸ்வாமிக்காக தானம் செய்து அவன் கண்ட பலன்? ஒன்றுமில்லை. "அவனுக்கு நான் வேண்டியது செய்யவில்லையா? தகப்பனார் இறக்கும்பொழுது.......... பகவானே! எனக்கு விமோசன மில்லையா?"

அந்த சில விளக்குகளும் அணைந்து விட்டன. ஒரு வௌவால் இவன் முகத்தில் அடித்துக் கொண்டு சென்றது. கர்ப்பக்ருகத்தின் கதவு திறந்திருந்தது. ராமஸ்வாமி உண்மையிலேயே பயந்து போனான். சாஷ்டாங்கமாகவிக்ரகத்தின்முன்னால்விழுந்தான்.

அந்தகாரத்தை துளைத்துக் கொண்டு எழுந்தது ஒரு குரல். "ராமஸ்வாமி! ராமஸ்வாமி." அவன் மூச்சை அடக்கிக் கொண்டு செயலற்றுக் கிடந்தான். அந்தக் குரல் மறுபடியும் கூப்பிட்டது.

"ராமஸ்வாமி! நீ வேண்டியது செய்தாய் விட்டது. இனிமேல் உன்னிடம் அவன் ஒன்றும் எதிர்பார்க்கக் கூடாது" அந்த ஒரு குரல் பதினாயிரம் குரல்களாக அவன் காதைத்துளைத்தன.

கொஞ்ச நேரம் கழித்து எவ்வளவு நேரமென்று அவனுக்குத் தெரியாது—ராமஸ்வாமி புது மனிதனாக வெளியே வந்தான்.

"கிருஷ்ணா? நான் யோஜனை செய்தாய் விட்டது. உன் மனைவியையும் நீ கட்டாயம் கூட்டிக்கொண்டு போகவேண்டும். அவர்களில்லாமல் உன்னால் தனித்திருக்க முடியாது."

"அதெப்படி முடியும் அண்ணா? யோஜனை செய்து பார்; நம்முடைய..."

"முடியும். முடிந்தாக வேண்டும்" என்று கூறிவிட்டு உள்ளே சென்று விட்டான் ராமஸ்வாமி, ஒரு தீர்மானத்துடன்.

அண்ணன், தம்பி, ரங்கன்

ரங்கூனில் கிருஷ்ணஸ்வாமி தன் பொறுப்பிலேயே விடப்பட்டு விட்டதால் கஷ்டப்பட்டு ஜீவித்தான். நாளாக ஆக படிப்படியாக உயர்ந்து கொண்டே வந்தான். அவன் சொல்வது வழக்கம்: "எல்லாம் அந்த நாட்டுப்புறத்தினால் தான். ஜீவனற்ற பொந்து. என்னைப் போன்றவர்களுக்கு முன்னுக்கு வர இடமே யில்லை, ஆனாலும் என் ஒன்று விட்ட அண்ணன் ஒருவன் இருந்தான். எப்பொழுதும் அவன் கர்நாடக வழிகளில் நான் கட்டாயப்படுத்தப்பட்டேன். நல்லவன் தான். ஆனால் சுத்த கர்நாடகம். என்னை ஒன்றில்லாவிட்டால் ஒன்று, இப்படியாக அனேக மூட வழிகளில் பிரவேசிக்கச் செய்தான், பாவம்! பைத்தியக்காரன்!"

ஆனால் ராமஸ்வாமியின் மனைவி ஒரே வரியில் "அடியம்மா! என் குழந்தைகளும் வயிறு நிறைய சாப்பிடப் போகிறதா என்றிருந்தேன்" என்று முடித்துவிடுவாள்.

சில சமயங்களில் பேச்சின் நடுவில் ராமஸ்வாமி கூறுவான். "அப்பா செத்துப் போகும்பொழுது..........." ஆனால் ரங்கன் இடைமறித்து "போதுமே! உனக்கும் அலுத்திருக்கும்" என்று முடித்துவிடுவான்.

உயர்தரமான இரும்பு பெட்டிகளுக்கு, M. நாராயணசாமி முதலியார் & சன்ஸ், 58 பிராட்வே, மதராஸ்

கரும்பு இனித்தது

"பெரிய கருப்பன்" எழுதியது

"இன்னைக்குத் தாங் குட்டி கரும்பு இனிச்சுச்சு" என்று சந்தோஷத்துடன் சொல்லியபடி நுழைந்தான் கருப்பன்.

"வாயைக் கொப்பிளிச்சிட்டிருப்பே" என்றாள் காளி. நிமிர்ந்து பார்த்தாள். கருப்பன் எப்பொழுதும் போலில்லே. அவன் நாக்கை வளைத்துக் கடிப்பதையும், மூச்சுக்கொரு தடவை முக்குவதையும், அவனுடம்பில் இருக்கும் விபூதிப் பூச்சுக்களையும், காணாது கண்டவன்போல் விழிப்பதையும், பைத்யத்தைப்போல் அங்க சேஷ்டை செய்வதையும் கண்டாள்.

மறுபடியும் கருப்பன் சொன்னான்:-"வாய் மட்டுமா கொப்புளிச்சேன்! காலு முகம் கழுவி! வேட்டியைத் தொங்கவிட்டுக்கட்டி! பெரிய சைவரய்யா வாட்டம் திருநூத்தைப் பூசிக்கிட்டு! பனமட்டைச் செருப்பைக் களட்டி வாசல்லெ வச்சுப்புட்டு, நொளைஞ்சேம் பாரு அளகு மலையான் கோவிலுக்குள்ளெ! ஆ! ஆ! ஆ!" என்று.

அதற்குமேல் அவனால் சொல்லமுடியவில்லை. நாக்குத் தழதழத்தது. இருகண்ணிலும் ஆநந்த பாஷ்பம் பொங்கியது. உதடு எதையோ முணுமுணுத்தது. ஆஹா! விவரிக்க முடியாத ஆநந்தத்தை, கேவலம் அவன் எப்படிச் சொல்லமுடியும்! மறுமலர்ச்சி எழுத்தாளனாக இருந்தால் ஏதோ வார்த்தை தெரிந்து எழுதுவான். அவனோ! மருமலர்ச்சி மனிதன்!

கரும்பு, சுந்தரராஜப் பெருமாள், அழகு மலைக் கோவிந்தன், பதினெட்டாம்படியான், கருப்பன் இவைகள், பழமுதிர்சோலையில் குடிகொண்ட கருணையுதிர்க்கும் கடவுளர்களின் திருநாமங்கள். சமீபத்தில் இங்கு நடந்த ஆலயப்பிரவேச ஆநந்தத்தை அள்ளிப்பருகியவர்களில் கருப்பனும் ஒருவன். அவனுடைய அதிர்ஷ்டமே அலாதி. அவன் இதை எதிர்பார்த்து அங்கு போகவே இல்லை. 1931ம் வருஷத்தில் மாடுவாங்க மதுரைக்குச் சென்றான். சட்டமறுப்பு சத்தியாக்ரகியானான். அன்று அழகர் கோவிலுக்குச் சென்றான்; அமிர்தத்தை அள்ளி உண்டான்.

கருப்பனும் காளியும் மெய்மறந்து நின்றார்கள். வெவ்வேறு விதத்தில்; காளி திகைத்து நின்றாள். கருப்பன் லயித்து நின்றான். பொங்கிய கோபத்தினிடையே "அட்படீனா நீயுமா கோயிலுக்குள்ளர மொளஞ்சே?" என்று சூடாகக் கேட்டாள்.

கரு:—ஆமா.

கா:—அடெப்பாவி! குடிகெட்டுப் போச்சே!

கரு:—சீ. குடி வாந்துச்சுன்னு சொல்லு. கெட்டது கருப்பன் குடி இல்லைகுட்டி; கள்ளுக் குடி.

கா:—சத்தியமா?

கரு:—ஆஹா—இதில் என்ன குட்டி ஒளி மறவு. சந்தோசமா மொளைஞ்சேன். கையைக் கட்டிக்கிட்டு கடவுளை நெனைச்சுக்கிட்டு மொளைஞ்சேன்.

கா:—அட ஒன்சதுரம் நடுங்கல்லையா?

கரு:—நடுக்கமென்ன குட்டி! கொள்ளையடிக்கரவன் கூட நடுங்கரானில்லை. கோவிலுக்குள்ளரப் போரவன் ஏன் நடுங்கணும்? அதெல்லாம் ஒண்ணுமில்லை.

கா:—நெசமா?

கரு:—பின்னையென்ன பொய்யா? அப்படி ஒண்ணுமில்லை; சும்மா அம்மாசி இருட்டுலே புதுப்பாதையிலெ நடக்கரவன் கணக்கா லேசா வெருக்கு வெருக்குன்னு தான் இருந்துச்சு.

கா:—சுத்தி நின்னவுகளெல்லாம் ஒண்ணும் சொல்லல்லியா?

கரு:—நீ யென்னகுட்டி சும்மா கிளாசுக் கேளுவி யெல்லாம் கேக்கிரெ?

கா:—இதுதானே மச்சா — நாங்கேக்காமே. பொரகு!

கரு:—மொளஞ்சேன்; மொத நான் அவுகபக்கம் பாக்கவே இல்லை. பொம்பளைக் கூட்டத்திலெ மொளஞ்ச ஆம்பிளையாட்டம், குமிஞ்ச தலை நிமிராமெப் போனேன், வாய் ஆடிக்கிட்டே இருந்துச்சு. எங்காரியம் முச்சூடும் என்னமோ மிசினாட்டம் ஓடிச்சு; சாமி கீமி எல்லாங் கும்பிட்டேன். பொரகு கொஞ்ச நேரத்துக் கப்பரம்தான் எனக்குத்தன் நினைப்பு வந்துச்சு. ஆஹா! வெளியெ வாரப்ப அந்தத் தருமராசாக்கள்ளாம் செஞ்ச மருவாதியும், ஓவசாரமும் சொல்லி முடிப் போகாது.

கா:—ஆமா. மொதவே குப்பையிலெ ஒதுக்கிப்பிட்டாகள்ளெ? அதுக்காக இப்போ!

கரு:—குண்டுமணி மங்கல்லெ குட்டி! இப்பதாங் கண்டாக; எடுத்துப் பதனமாப் பொட்டீலெ வச்சுக்காராக.

காளியின் முகத்தில் முத்து முத்தாக வியர்வை அரும்பியது. கண்ணைத் துடைத்துக் கொண்டாள்.

கரு:—என்ன குட்டீ அளுகிரே?

கா:—இல்லை—எங்க அண்ணனை நெனைச்சேன்.

கரு:—பொறுக்கல்லை; பொறுத்துப்பாக்காமெ, சொல்லிக்கிட்டே இருந்துட்டு மதம் மாரீட்டான். என்ன பலன்? குருக்கத்தியா இருந்தவன், குரோட்டன்சாப் போனான். அம்புட்டுத்தான்—இப்ப அந்தப் பயலும் கோவிலுக்குள்ளர வந்திருந்தான்னா ஆடீருவான்.

"இருந்தாலும்—மச்சான் நீ போயிருக்கப்படாது" என்று காளி தீர்க்கஆலோசனையின்பின் கூறினாள். அது தலைக்கு மூத்தபிள்ளையிடம் எதிர்க் கக்ஷித் தகப்பனார் "நீ யேன் தம்பி காங்கிரஸ் கூட்டத்துக்குப்போனே" என்று கேட்பது போல பரிதாபமும், வெறுப்பும், பச்சாத்தாபமும் கூடி இருந்தது.

கரு:—சீ! அவிட்டுப்பய மவளெ! போனாக்க என்ன? சுத்தமாத் தானே போனேன்.

கா:—என்னை என்ன மருக் கோளின்னா பாத்தே. ஒனக்கு எப்பிடிச் சுத்தம் வரும்?

கரு:—வாரெதெ என்ன குட்டி. நான் அப்போவெ போயிருந்தா வீட்டுக்கு வந்து ஒன்னைக் கண்டிருக்கமுடியுமா? அளகு மலையான் கண்ணைப் பிடுங்கிருவாரே!

கா:—போவாத இடத்துக்குப்போயிட்டு இப்படி வந்து சொல்லுரியே. ஒனக்கு வெக்கமில்லை! குடி குடிச்ச வாயோடெ சாமி, சங்கரான்னு சொல்லலாமா? தோலுரிச்ச கையாலே தோப்புக்கரணம் போடலாமா? இதெல்லாம் உனக்கு ஏன் தோணல்லெ. கோவிலுக்குள்ளறப் போனவன் சேரிக்குள்ளர வந்து நொளஞ்சிருக்கியே. குடிகாரன் வேலை.

கரு:—அடிபோகுட்டி; வேரெ போக்கிடமில்லை, கடைக்குள்ளர நொளஞ்சுக்குட்டு இருந்தேன். பத்துமனுசன் கூடர இடத்திலே நாமும் கூடணும்னு ஒவ்வொருத்தனுக்கும் ஆசைஇருக்காதா? அதுக்கு அந்த எடந்தான் தோதா இருந்துச்சு. கையை ஓங்கிக் குட்டி வெளியே தொரத்தரவங் கிடையாது. கலையமும் சேந்திச்சு; இனி நீயே பாரு. இந்தப் பய கலையத்தைத் தொட்டா கண்ணவிஞ்சு போகும்.

கா:—கலையத்தை விட்டாமட்டும் போதுமா, மத்தத் தொழிலெல்லாம்?

காந்தி ஜோஸியர்

உங்களது எதிர்கால பலன்களை மாதவாரி விவரமாக ஒரு வருஷத்திற்கு எழுத ரூ 3. வராந்திர பலனை எழுத ரூ. 10. எதிர்கால சந்தேகங்களைத் தெரிந்துகொள்ள 5 கேள்விகளுக்கு பதில் எழுத ரூ. 1. கிரஹசார தோஷங்கள் நீங்கி எல்லாக் காரியங்களிலும் ஜெயமடைய ஜய வசிகரணி கவசம் ரூ. 2-8, வி. பி. செலவு 0-5-0. ஜனனகால விவரம், ஜாதக நகல் அல்லது முழுப்பெயர், கடிதம் எழுதும் போதுள்ள நேரம், சுமார் வயது, தொழில் இவைகளைக் குறிப்பிட்டு எழுதவும்.

சென்னை 'சுதேசமித்திரன்' எழுதுவதின் சாராம்சமாவது: "......தனி நபர்களுக்குப் பலன்கள் கூறுவதில் ஏற்கனவே புகழுடன் விளங்கும் ஸ்ரீ ஆச்சாரியார் இப்போது உலகப் பிரச்னைகளிலும் தமது ஞானத்தை ஈடுபடுத்தி வெற்றியைக் கண்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும்."

வி. கே. சடகோபாச்சாரியார், ஹநுமான் ஆச்ரமம், திருத்தணி S. I.

கரு:—தொடப்பம் தொடைக்க மாட்டம்னுச் சுன்னு அதுக்கு ரோக்கிதை யில்லை. நான் பாக்கர தொழிலைப் பாக்கத்தான் வேணும். இந்தக் குடிக்ரது, கொல்லரது இதுகளைத் தொலைச்சுட்டு சுத்தமா இருந்தா போதும்.

கா:—இல்லெ மச்சான்: கக்குசு கூட்ரியே.

கரு:—என்? என்ன குத்தம்? ஆத்தா மகனுக்குக் கூட்டல்லியா.

கா:— தோலு உரிக்கரெ?

கரு:—அரிச்சந்திரன் மொதத்தான் குட்டி உரிச்சாரு. உரிச்சாத்தானெ செருப்பு, வாத்யத்துக்குத் தோலு....ஆமா புலித் தோலு, மாங் தோலு இதெல்லாம் பெரியவுங்க போட்டுக்கராகளெ!

கா:—உச்சந்தலென்னு எச்சிக்கலெம்பெ. பொணங்கூடச் சுடுரியே மச்சான்.

கரு:—அது பாவமா? குத்தமா? ஊரைச் சுத்தமா வச்சுக்கரவனெ ஊரு ஒதிக்கித் தள்ளனுமா? பட்டணத்துச் சாமி தாயாரை அவரே சுட்டாராம். மலையாளத்துப் பக்கத்திலே யாரோ ஐயமார்களேகூட சுடுவாங்களாம்.

கா:—என்னமோ மச்சான். இல்லாத வளக்கமெல்லாம் ஒனக்கு இருக்கு.

கரு:—இல்லாத வளக்கமா? எது? முந்தியும் நம்பள்ளே ஒத்தர் கெளம்பினுரு, கோயிலு கோயிலுன்னு கக்கண்டுக் கட்டியாட்டம் உருகி, கடாசிலே துணிஞ்சு தீயிலெ குதிச்சு வந்து, கோயிலுக்குள்ளெ கொளஞ்சிருக்காரு.

கா:—நீ தண்ணிலெகூட இன்னக்கித் தனெ முளுகியிருக்கே.

கரு:— ஒருத்தர் தீயிலெ முளுகினது போதாதா?

கா:— அவர் ஒருத்தர் முளுகினுப்பலெ ஒலகத்துக்கு?

கரு:—ஒலகத்துக்கு ஒரு காந்தி போதுங் குட்டி. பாப்பாரகொலத்துக்கு ஒரு வைத்தியனுதய்யர் போதும். பரப்பிள்ளைங்களுக்கு ஒரு நந்தனுர் போதும்; அவர் விளுந்த நெருப்புத்தான் குட்டி பள்ளுப்பரை நெஞ்சுலெயெல்லாம் பத்தி, கோயிலு கோயிலுன்னு சொல்லச் சொல்லிச்சு. அந்தக் காந்தல் இன்னுக்கித்தான் எனக்கு அடங்கிச்சு தெரியுமா?

கா:— அப்பவானு கோயிலுக்குள்ளரப் போகலாமா? பாவமில்லையா? போயித்துச் சேரிக்குள்ளர வரலாமா?

கரு:— அதைக்கேளு நாயம். அங்கே போயித்துச் சேரிக்குள்ளர வரப்போலாஞ்சனையாத்தான் இருக்கும். நந்த வனத்துக்குள்ளர மொளெஞ்ச காக்கா கசாப்புக் கடையை நாடி வரதில்லையாக்கும்? ஆனு இனிப்பாரு இன்னக்கி பூரிச்ச பூரிப்புலெ ரெண்டு நாளுலெ சேரியை சொர்க்கமாக்கிப் பிடுவேன்.

கா:— இந்தா ரெண்டு சருகைப்போடு; ஏன் மச்சான்! மொதவெ மருதையிலே தானும் தொரந்து விட்டாக?

கரு:— ஆமா அழுகர புள்ளையை ஆத்தா தானே எடுத்து இடுக்குவா! புள்ளைகளெல்லாம் கூடி கண்ணுலெ தண்ணி விட்டிச்சு. ஆத்தா கண்ணைத் தொரந்து பாத்துக் கையைக் காட்டிக் கூப்பிட்டா. இனி அந்த மாமனுக்குத்தான் என்னக்கி........

கா:— அது யாரு?

கரு:— அவருதான் ஸ்ரீரெங்கத்துலே படுத்திருக்காரே பள்ளி கொண்ட பெருமான். அவருக்குத்தான் என்னக்கி மனசு தொரக்குதோ தெரியல்லை.

கா:— மாமன் சொத்து மருமகனுக்குக் கெடைக்கும். சந்தேகமே கிடையாது.

கரு:— அது எப்படி?

கா:— எப்படியா? நேத்துப் பொரந்த புள்ளைகூட சந்திரனைப்பார்த்து மாமான்னு கூப்பிடுது. ஒலகத்திலேயே மொதச் சலுகை மாமனுக்கும் மருமகனுக்கும்தானே.

கரு:— அம்மான் பொண்டாட்டிதான் நம்ம வங்குசத்துக்கே விரோதமாச்சே.

கா:—இருந்துட்டுப் போகுதே. லெச்சுமி விரோதமா இருந்தா தேங்கா தான் வாங்க முடியாது! கும்புடவுமா முடியாது! அதிலேயும் மச்சான், நீங்க இப்படிக் குடிச்சுக் கூத்தாடிக்கிட்டுத் திரிஞ்சா, எந்தப் பொம்பளைக்குத்தான் ஒங்க மேலே எரக்கம் வரும்.

சிறிது யோசித்தாள் காளி. பிறகு "ஆமா மச்சான், இன்னொரு சேதியில்லெ; இப்ப நம்ப சீரங்கத்து ஐயா தானும்லெ கோயில் மந்திரி?"

கரு:—ஆமா, அவர் தான். பள்ளுப்பரைன்னு உசிரா நெனைப் பாரு. வெகுநாளாக் கோயில் தருமத்திலெ வளந்த எலியல்லாம் அவரைப் பூனையா நெனைக்குது. பெரிய மந்திரி ஐயாவுக்கும், மத்த எல்லா மந்திரிங்களுக்கும் நம்ம கோயிலுக்குள்ளெ நொளைஞ்சா அவுக மனசுக்குள்ளர கடவுள் நொளஞ்சப்புலெ தோணுது. என்ன செய்யரது.

கா:—ஏஞ் செய்யப்படாது?

கரு:—அடிபோ குட்டி. வீட்டுலெமொதப் பொரந்த புள்ளையாட்டம், ஊரானுக்கும் ஒடப்பொரந்தவனுக்கும் தொக்கா மாட்டிக்கிட்டு மருகராக. முன்னுலெ போனுக்கடிக்குது, பின்னுலெ போனு ஒதையுது. அதுலே சவாரி பண்ணிக்கிட்டு அவுக அவ்வளவையும் பாதுகாக்கவேண்டிருக்கு.

அவன் சொல்லி வாய்மூடுமுன் வெளியே இருந்து. "டே கருப்பா வாரியாடா மருதைக்குப் போவம்" என்று கேட்டுக் கொண்டே செங்கனும், இன்னும் பத்து ஹரிஜனங்களும், விபூதி தூளிதராய் உள்ளே நுழைந்தார்கள். பதறி எழுந்தாள் காளி. அந்தப் பரிசுத்த ஜனங்களின் கண்களில் படாமல், மீன் வற்றல் கருவாடு முதலியவைகளை ஒதுக்கி வைத்தாள். தாங்கமுடியாத வெட்கமும், அவமானமும் குடிகொண்டிருந்தது அவள் முகத்தில்.

"கேளுவி யென்னடா? இந்தாக் கௌம்பிட்டேன்" என்று முண்டாசைக் கட்டிக் கொண்டு கிளம்பினுன் கருப்பன்.

கூவிக்கொண்டே "மச்சான்; நானும் வாரேன் மச்சான்" என்று கெஞ்சினுள் காளி.

கரு:—வேண்டாம் குட்டி, பொரகு போவலாம்.

"என்? ஏதாவது எதிர்ப்பு இருக்கோ?" என்றுன் செங்கன்.

கரு:—நம்பதான் என்ன, பாவமே பண்ணுதவங்களா? நம்ம பாவப் பலன் போல சில பேரு எதித்துக்குட்டும் இருக்காக.

சே:—ரொம்பக் கடுமையோ?

கரு:—அப்படி ஒண்ணுமில்லெ, சும்மா காத்துலெ தூசி பரந்தாப்பிலெ.

கா:—இல்லை மச்சான் எனக்குக் கேக்கக் கேக்க மனசு துடிக்குது. அந்த ஊருக்குப்போய், ஆத்தா மீனுச்சியையும், அந்தப் புண்ணியவான் வைத்தினுதய்யாவையும் கும்பிட்டு வந்தாத்தான் ஜம்மம் கடைத்தேரும்.

கரு:—நல்லா வா. கௌம்பு; நாயுடு ஐயாவையும் சேத்துக் கும்பிடு. பாக்காத கண்ணு பாவம் பண்ணினது.

பாரம்பரிய அநுபவ சித்தியான சாஸ்திரீய மருந்துகள்

குழந்தைகளின் வயிற்றுக் கட்டிகளுக்குச் சிறந்தது

கும்பகோணம் டாக்டர் வாசுதேவ பிள்ளை A.M.A.C. அவர்களின்

பாலகல்பம்

லிவர் ஹவுஸ்

8, பார்த்தசாரதி சுவாமி தெரு, :: திருவல்லிக்கேணி

உயர்தரமான இரும்பு பெட்டிகளுக்கு, M. நாராயணசாமி முதலியார் & சன்ஸ், 58 பிராட்வே, மதராஸ்

தயாராகிறது !

லக்ஷக்கணக்கான பொருட் செலவில்

ஜே !

K. L. V. வசந்தா தேவி
P. S. ஞானம் : S. S. கொக்கோ
M. R. ராதா : S. D. சுப்பையா
மற்றும் பல
கீர்த்தி வாய்ந்த நக்ஷத்திரங்கள்
நடிக்கும்

சந்தியாவளி

சமூக தமிழ் சித்திரம்
○
T. R சுந்தரம், B.A., B.Sc. (Leeds)
மேல் பார்வை
○
டைரக்ஷன் :
S. சொடாணி
○
வசனம், பாடல் :
S. வேல்சாமி கவி
○
ஸ்டுடியோ :
மாடர்ன் தியேட்டர்ஸ்
லிமிடெட், சேலம்

அவள் ?
காதலை நினைத்தாள்
அவன் ?
கடமையை நினைத்தான்
கடைசியில் ?
கண்ணற்ற கபோதி ஆனன் ?
முடிவோ ?

?

என்றும்
கண்டிராத இனிய
கதைப் போக்கு

தயாராகிறது!
'சதி மகானந்தா'
பக்தியின் காதல் பதியின் காதலாகி, வெற்றி யடைந்த பதிவிரதா சிரோன்மணியின் கதை

Miss N. பாகீரதி
„ T. R. சுப்புலக்ஷ்மி
„ P. S. ஞானம்
„ V. R. ஜீவரத்னம்
S. D. சுப்பையா பாகவதர் & C. S. செல்வரத்தினம் பிள்ளை, C. V. V. பந்துலு.

கைவசம் :
சதி அகல்யா
பத்ம ஜோதி
மாயா மாயவன்
சந்தனத் தேவன்

விவரங்களுக்கு :

மாடர்ன் தியேட்டர்ஸ் லிமிடெட், சேலம்



'என்னல் முடியாது' என்று கை விரிக்கலாகாது

உங்கள் ஆயுளை நம்பியிருப்பவர்கள் யார் தெரியுமோ? நீங்கள் இன்ஷ்யூர் செய்து கொள்ளாவிடில், உங்கள் மனைவி மக்கள்தான் மோசம் போவார்கள். நீங்கள் மரணமடைய நேரிட்டால், அவர்களுக்குத்தான் நஷ்டம். அவர்கள் அப்படிக் கஷ்டப்படும்படி விட லாமா? சொல்லுங்கள், அவர்களுக்கு அப்புறம் யார்தான் துணை? இல்லை, அவர்களை வேரொருவர் ஆதரவில் தான் விட்டு வைக்க லாமா?

இதையெல்லாம் தீர யோசித்துப் பார்த்து, சீக்கிரமாக உங்களூர் ஏஜண்டிடம் இன்ஷ்யூரன்ஸைப்பற்றிக் கேளுங்கள். அல்லது எங்களுக்கு எழுதிக் கேளுங்கள்.

நேஷனல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்

(தலைமை ஆபீஸ் : கல்கத்தா.)

Branch Office: நேஷனல் இன்ஷ்யூரன்ஸ் பில்டிங்ஸ் எஸ்பிளனேட், சென்னை

Sub-Branch Offices :

171, New Street, MADURA. | Devanga Bank Buildings Kempegowda Road, BANGALORE CITY.

பட்டினியும் புகையிலையும்

வித்துவான் -
முசிரி - சுப்பிரமணிய அய்யர்
எழுதியது

பொதுஜன நன்மைக்காகப் பாடுபடும் நமது காங்கிரஸ் கவர்ன்மெண்டார் சில நாட்களுக்குமுன் புகையிலைக்கு 'வரி' விதிக்க வேண்டுமென்று தீர்மானித்தார்கள். அன்று முதற்கொண்டு சர்க்கார்பேரிலும், புகையிலையின்பேரிலும் அதிகக்கோபம் எனக்கு வந்து விட்டது. வரியை விதித்தார்களே யென்று சர்க்கார்பேரில் கோபம். வரி விதிக்கும்படியான கெட்ட குணங்களை இந்தப் பாழும் புகையிலை வைத்துக்கொண்டிருக்கிறதே யென்று அதன் பேரில் கோபம்.

ஜனங்களின் நன்மைக்காகவே எந்தக் காரியமும் செய்கிற சர்க்கார்பேரில் கோபித்துக் கொள்வது சரியல்ல. அப்படி கோபித்துக்கொண்டாலும் ஏதாவது தப்பு தண்டா வந்து சேரும். ஆகையால் என்கோபத்தை புகையிலையின்பேரில்தான் காண்பிக்கலாம். அந்தக் கோபத்தை எந்த விதத்தில் தெரிவிப்பது யென்று பலநாள் யோசனை செய்தேன். நேற்றுக் காலையில் தீர்மானத்திற்கு வந்து புகையிலை உபயோகிப்பதை நிறுத்தி விட்டேன்! நிறுத்தி விட்டேன்!! நிறுத்தியே விட்டேன் !!!

புகையிலை உபயோகிப்பதை நிறுத்தினது முதல், நான் ஒரு பெரிய சாதகம் செய்து யோகஸித்தி யடைந்ததாகவே கருதுகிறேன். எப்பொழுதுமே வெற்றிலை பாக்குப் புகையிலைபோட்டு, ஒரே சிகப்புக் காவியாயிருக்கும் பற்களெல்லாம், நேற்றுப்பூராவும் வண்ணான் சலவை செய்தது போல் வெண்மையாக விளங்குகின்றன. சாப்பிடுகிற நேரம் தூங்குகிற நேரம் தவிர, மற்ற நேரங்களிலெல்லாம், ஆடு தழை தின்பதுபோல், ஒரே வெற்றிலை பாக்குப் புகையிலை மயமாயிருந்த பற்களும் வாயும், ஒருநாள் முழுமையும் வெளுத்திருந்தன!

இதுவரை ஒரு நாள் என்பது இவ்வளவு நீண்டிருக்கும் என்பதே. தெரியாம லிருந்தேன். நமக்கு ஒருவருஷம் கணக்கானல், தேவர்களுக்கு ஒருநாள் கணக்கென்று சொல்லுவார்கள். ஒரு வேளை புகையிலை உபயோகிக்காத நல்ல குணத்தால், எனக்கே தேவாம்சம் வந்து விட்டதோ வென்று சந்தேகம் வந்து விட்டது. கடவுள் திடீரென்று என் முன் வந்து "புறப்படு தேவலோகத்திற்கு'' என்று கூப்பிடுவாரோவென்று கூடப் பயந்தேன்.

"அடே யப்பா அதுக்குள்ளேயா மணி நாலு ஆயிடுத்து! டயம்போனதே தெரியல்லயே!" என்று அநேகம்பேர் சொல்லிக் கேட்டிருக்கிறேன். முந்தாநாள் வரையில் அது உண்மையென்றே நானும் நினைத்ததுண்டு. ஆனால் நேற்றிருந்து, நாள் ஒன்றுக்கு அறுபது நாழிகை நேரந்தான் என்கிற கணக்கு சுத்தப்பொய் யென்று தெரிந்து கொண்டேன். "டயம் ஆயிடுத்து'' என்று சொல்லுபவர்கள் புகையிலையின் மூன்று வித உபயோகங்களில் ஏதாவதொன்றை அனுஷ்டிக்கிறவர்களாயிருக்க வேணும்.

அப்படியல்லாமல் என்னைப்போல் ரோஷக்காராயின் (நான் செய்தது போல, நெஞ்சடைக்க, கடைக்கண்ணால் வெற்றிலைப் பெட்டியைக் கடாக்ஷித்து விட்டு) "என்ன பொழுதே போகவில்லையே!'' என்று சொல்வார்கள்.

பெரியவர்களுக்கு கீழ்ப்படிந்து நடக்கும் நாட்களில், வீட்டில் ஒருவரும் இல்லாத வேளையில் புகையிலையைப் போட்டுக்கொண்டிருக்கும் சமயத்தில், திடீரென்று பெரியவர்கள் வீட்டிற்குள் வந்துவிட, புகையிலைச் சாற்றைத் துப்புவதற்கு முடியாமல் விழுங்கிவிட்டேன். பிறகுபட்ட பாடு கடவுளுக்குத்தான் தெரியும். அந்த நாளிலிருந்தே இந்தச் சனியன் பிடித்த புகையிலையை விட்டுத் தொலைக்கவேண்டுமென்று யோசித்துக்கொண்டிருந்தேன். புகையிலையின்பேரில் எனக்கு த்வேஷமே கிடையாது. புகையிலைப் பழக்கத்தில் தான் என் கோபம் பூராவும். நம்மில் அநேகம் பேர்களுக்குப் பழக்கங்களை விடமுடியாது. எவ்வளவு புத்திமான்களாயிருந்தாலும் 'பழக்கம்' என்னும் பிசாசு மனிதனைத் தன்வசம் ஆக்கிவிடும்.

கெட்ட பழக்கங்களை யுடையவர்கள், தான் செய்வது அவ்வளவு பிசகான காரியமல்லவென்று ஒரு விதமாய் ஸ்தாபித்துக் கொள்ளத்தான் முயற்சிப்பார்கள். அதாவது 'புகையிலை போடுவது மலச்சிக்கலை நீக்குகிறது சார்' என்று சொல்வார்கள். "வெற்றிலை பாக்குப் போட்டுக்கொண்டால் நாக்குத் தடித்துப் போகிறது. அதற்குப் புகையிலை உபயோகித்தால்தான் சரியாயிருக்கிறது'' என்று சிலர் கக்ஷி.

"சார், எனக்கு இரண்டு வருஷத்துக்கு முன்னே பல் வலி உபத்திரவமாயிருந்தது. புகையிலை போட்டால், பல் வலி நின்று விடுமென்று சிலபேர் சொன்னதின்பேரில் உபயோகித்தேன்" என்று சிலர்.

"யாராவது வந்து என்னவாவது கண்டபடி கேள்விகள் கேட்கிறார்கள். அவர்களுக்கு பதில்சொல்லாமலும் இருக்கமுடியவில்லை. சொன்னாலும் ஆபத்து. இந்த உபத்திரவத்துக்காக நான் வெத்திலை பாக்குப் புகையிலை போட்டுக்கொண்டு உட்கார்ந்து விடுவேன். அப்புறம் யார் எது வேணுமானாலும் கேழ்க்கலாம்; எனக்குப் பயமில்லை. கைஜாடையாக அவர்களுக்குப் பதில் சொல்லிவிடுவேன். பிற்பாடு சமயம்போல மாற்றிக்கொள்ளவும் சௌகரியமாயிருக்கும். இதை உத்தேசித்துத்தான் சார் நான் புகையிலை போடரது'' என்று ஒரு கோஷ்டி.

சிலபேர் விகடம் பண்ணித் தப்பித்துக்கொள்பவரும் உண்டு. "என் தாத்தா அவருக்குத் தகப்பனர் எல்லோரும் புகையிலை போடாமல் இருந்தார்கள். பாருங்கோ அவர்கள் ஒருவராவது உயிருடன் இல்லை. அவர்கள் புகையிலை போடாததால் இறந்துவிட்டார்கள்'' என்றார் ஒரு ப்ருஹஸ்பதி.

ஆனால் உண்மையில் மேற்சொன்ன காரணங்கள் யாதொன்றைக் கொண்டும் புகையிலையை உபயோகிப்பதில்லை. இந்தக் கெட்ட பழக்கம் ஏதோ ஒருசமயம் நம்மை அறியாமல் பிடித்துக் கொண்டு விடுகிறது. சனீச்வர

சுவர்ண பூபதி:—நரம்புத் தளர்ச்சிக்கும், தாது க்ஷீணத்திற்கும் தங்கம் சேர்ந்த ஓர் உயர்ந்த பிரயோகம், கோபால ஔஷதாலயம், சீயாழி.

பகவான் கூட ஏழரை வருஷத்திற்குப் பிறகு விட்டுவிடுவார். ஆனல் புகையிலைபோன்ற வஸ்துக்கள் சனீச்வர பகவானைக் காட்டிலும் மஹா பெரியவாள்! ஆயுள் முடிந்தாலொழிய விடாதவை.

இந்த மாதிரி வஸ்துக்களை உபயோகிப்பதைக் காட்டிலும், அதற்காக மனதைப் பறி கொடுப்பது தான் துக்ககரமான விஷயம். கெட்ட பழக்கங்களுக்கு அடிமையாய்ப் போகாமலிருப்பதற்கும், மனேதிடம் ஏற்படுவதற்காகவுமேதான், அநேக விரதங்களை நம் முன்னேர்கள் ஏற்படுத்தியிருக்கிருர்களென்று நினைக்கிறேன்.

உதாரணமாக, ஏகாதசியன்று நல்ல பசிவந்த பிறகு, ஒருவனை தன் முன்னிலையில் உட்கார வைத்து நல்ல சாப்பாடாக சாப்பிடச்சொல்லி, தானும் சாப்பிட்டால் தேவலையென்ற எண்ணம் கொஞ்சங்கூட வராமல் ஒருவன் இருந்தால், அவனே தீரன் என்று சொல்வேன். ஏகாதசியன்று பட்டினி கிடந்து புண்யம் கிடைப்பதைவிட, தினமும் சாப்பிட்டு வரும் பழக்கத்தை நிறுத்தி, ஆத்மாவை உடலுக்கு அடிமையாக்காமல் செய்யவேண்டுமென்பதே முதல் கருத்தாயிருக்கவேண்டும்.

அப்படிப்பட்ட அடிமைத்தனத்துடன் நான் நேற்று சண்டை போட்டு ஜயித்தேன். நான் எப்படி அந்தத் தீரமான காரியம் செய்தேன் என்பதை உங்களுக்கு விவரித்துச் சொல்ல இஷ்டப்படவில்லை.

வீட்டைவிட்டு வெளியில் புறப்பட்டால், ஒவ்வொரு வெற்றிலை பாக்குக் கடையையும்—அடே..........யப்பா!—தெருவுக்குத் தெரு எத்தனை வெற்றிலைப் பாக்குக் கடைகள்!—புகையிலை போட்டுக் கொண்டு ஆனந்தம் அநுபவிக்கும் மஹா ஜனங்களையும் பார்த்து மனது சஞ்சலப்படும். "சார்! வெத்தலை போட்டுக்குங்கோ; நல்ல சிவபுரி புகையிலை வச்சிருக்கேன்" என்று சொல்பவர்களிடம், ஏதோ ஜனன காலம் முதற்கொண்டு புகையிலை இன்னதென்றே தெரியாத சாது போல, வேண்டாமென்றும் சொல்வதென்ருல் என்ன சாமான்ய காரியமா!

ஏதோ ஒரு ராக்ஷதனைக் கொன்றுவிட்டு வாளைக் கையில் வைத்துக்கொண்டு, ஜயபேரிகையுடன் திரும்பினேம் என்று சொல்வதற்கில்லை. இரண்டு வீட்டிற்கொரு வெற்றிலை பாக்குக் கடையையும், 'சிவபுரி' 'வேதாரண்யம்' 'அசல் பாலக்காடு' 'வடக்கன்' 'மீனம்பாளையம்' என்றெல்லாம் கொட்டையெழுத்தில் கூப்பிடும் அசுர கணங்களையுமெல்லாம் ஜயித்து, வீடு திரும்பி வர வேண்டுமென்ருல் சாதாரண காரியமா!

அப்பா! பொழுது விடிந்தது; என் விரதத்திற்கும் விடியுங்காலம் ஏற்பட்டுவிட்டது. நேற்று ஜயித்தேன் என்கின்ற தைர்யத்துடன், (நானுக புகையிலைக்கு கருணை காண்பித்து) வெற்றிலை போடலாம் என்று நினைக்கும்போதே சந்தோஷமுண்டாகிறது.

"அடே கருப்பா! எதிர்த்த கடையில்போய் நல்ல சிவபுரி புகையிலை ஒரு பொட்டலம் வாங்கிண்டுவா?" என்று சொல்லும் போதே நாக்கில் ஜலம் ஊறுகிறது.

மதராஸ் டி. சி. என்.
கோல்டன் மெடல் ஜ்வல்லரி மார்ட்

பலவித அழகிய வளையல்கள்

அசல் தங்க வளையல்களைவிட பிரகாசத்திலும் நிறத்திலும் குறைந்ததல்ல.

கறுக்காது

2 வருஷம் உத்திரவாதம். மிகவும் அழகாக இருக்கும்.

பெரிய சைஸ் 2" அகலமும் அதற்கு மேற்பட்டதும் ஜதை ரூ. 300

மத்திய சைஸ் $1\frac{3}{4}$" முதல் 2"க்குள் ஜதை .... ரூ. 280

குழந்தை சைஸ் $1\frac{3}{4}$-க்கு உட்பட்டது ஜதை .... ரூ. 200

வி. பி. செலவு 1 ஜதை முதல் 6 ஜதை வரை அணு 8

அணிந்திருக்கும் வளையலின் சுற்றளவை இங்கியால் ஒரு காகிதத்தில் குறித்து அனுப்பவும்.

டி. சி. நாகலிங்கப்பா & கோ,
280, வால்டாக்ஸ் ரோடு :: பார்க் டவுன், மதறஸ்

தறிப்பு:—"ஹநுமான் ஆண்டு மலர்" பெயரைக் குறிப்பிட்டு எழுதுகிறவர்களுக்கு மாத்திரம் விலையில் ரூபாய்க்கு ஒரு அணு வீதம் கமிஷன் கொடுக்கப்படும்.

2 அணு பெறுமானமுள்ளதும், பல அழகிய படங்களுள்ளதுமான எமது கேட்லாக் இனும்.

குறிப்பு:—ஸிலோன், பர்மாவுக்கு வி. பி. சார்ஜு அணு 12. F. M. S.-க்கு ரூ. 2- ஆர்டருடன் முன் பணம் அனுப்பவும்.

சினிமா அபிமானிகள் விரும்பும் சிறந்த நடிகர்கள் நடித்த

மதுரை வீரன்

(மிகுந்த வெற்றியுடன் பல இடங்களில் இப்பொழுது ஓடிக்கொண்டிருக்கிறது)

*

சுந்தரமூர்த்தி நாயனர்

*

மிஸ் கமலா

ஆகிய மூன்று படங்கள் புக்கிங்குகளுக்கு தயார்!

* * * *

எதிர்பாருங்கள்!

இரு தமிழ்ப் புராண மணிகள்

பக்த கோராகும்பார்

பக்த ஜனபாய்

விவரங்களுக்கு:

ராஜா பிலிம்ஸ் லிமிடெட்
142, பூந்தமல்லி ஹைரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை

உயர்தர
மைசூர் & குடிவாடா
வெண்ணெ, நெய்கள்
எங்கே!

கண்ணன் பட்டர் ஹவுஸில்
142, ஆதியப்ப நாய்க்கன் தெரு,
Opposite Kothawal Bazaar
மதருஸ்

ருது வர்த்தனி:—ஸ்திரீகள் ருது சூலைக்கும், மாதாந்திரத்தைக் கிரமப்படுத்தவும்; கோபால ஔஷதாலயம், சீயாழி.

உயிர்வாழ உரிமை

ஏ. ஜி. வி.

மனிதனுடைய உயிர் அவனுக்குச் சொந்தமன்று. தன் உயிரை விடுவதற்கு எந்த சமுதாயத்திலும், எக்காலத்திலும் மனிதனுக்கு உரிமை இருந்ததே கிடையாது. இன்றைய உலகில் கூட தற்கொலைக்கு முயற்சிப்பது எல்லா நாடுகளிலும் குற்றந்தான். பிராணனை விடுவதற்கு மனிதனுக்கு உரிமையில்லை யென்றால், உயிர் வாழ உரிமை யுண்டு என்றுதான் அர்த்தம். உயிர் வாழ உரிமை என்பதற்கு விரிவான பொருளுண்டு. ஒரு மனித உயிரை வாங்குவதற்கு அல்லது அதற்குத் தீங்கிழைப்பதற்குப் பிறர் முயற்சித்தாலும் குற்றந்தான். இதுவும் தொன்றுதொட்டு இருந்துவரும் நியதி. எனவே, மனிதனைத் தன்னிடமிருந்தும் பிறரிடமிருந்தும் காப்பாற்றுவது சமூகத்தை நடத்திச் செல்லும் சர்க்காரின் கடமையென்பதை யாரும் மறுக்க முடியாது. இந்த உண்மையை அடிப்படையாக வைத்துக் கொண்டு ஆராயப் புகுந்தால் பல ருசிகரமான எண்ணங்களும் சமூக நியாய, அநியாயங்களைப் பற்றிய கருத்துக்களும் தோன்றும்.

உயிர் வாழ உரிமை

'உயிர் வாழ உரிமை' யென்றால் சந்தோஷமாகவும், சௌக்யமாகவும் வாழ்வதற்கு உரிமை என்றுதான் அர்த்தம். அம்மாதிரி வாழ்க்கையை நடத்துவதற்கு எல்லா சாதனங்களையும், சௌகர்யங்களையும் செய்து தரவேண்டியது சமூகத்தை நடத்திச் செல்லும் சர்க்கார்களின் கடமை. தற்கொலையும், கொலையும், சரீர கஷ்ட நஷ்டங்களும் கூடாது என்று சட்டமியற்றிவிட்டதால் மட்டும், எந்த சர்க்காரும் தன் கடமையைச் செய்துவிட்டதாகக் கருத முடியாது; உயிர் வாழ்வதற்குள்ள உரிமையை உத்தரவாதம் செய்துவிட்டதாக ஏற்படாது. மனிதனுக்கு அடிப்படையாயுள்ள அவசியங்கள் போதிய புஷ்டியுள்ள ஆகாரம், சுகாதாரமான வீடு, செய்வதற்கு வேலை, புத்தியைப் பெருக்கிக் கொள்வதற்காக கல்வி அடிப்படையான சுதந்திரம்—இவைதான். குறைந்த பக்ஷம் இவற்றையாவது உத்தரவாதம் செய்யாத எந்த சர்க்காரையும் நாகரிகமுள்ள சர்க்கார் என்று சொல்ல முடியாது.

இன்றைய நிலைமை

இப்பொழுது உலகில் இருந்துவரும் நிலைமை என்ன? எல்லா நாடுகளிலும் பெரும்பான்மையாயுள்ள தொழிலாளரும், விவசாயிகளும், மத்திய வகுப்பினரில் ஏழைகளும் சந்தோஷத்தையும் சௌக்கியத்தையும் அனுபவித்து வருவதாக யாரும் துணிந்து சொல்ல மாட்டார்கள். ரஷ்யா, ஸ்வீடன், நார்வே, மெக்ஸிகோ போன்ற ஒரு சிலதேசங்கள் நீங்கலாக மற்ற எல்லா தேசங்களிலும் வேலையில்லாதார் பிரச்னை தீர்க்கப்படாமல் நாளுக்கு நாள் நெருக்கடியாகி வருகிறது.

சம சந்தர்ப்பமில்லை

பள்ளிக்கூடங்களிலோ, ஆஸ்பத்திரிகளிலோ, சர்க்கார் காரியாலயங்களிலோ, பொதுஸ்தாபனங்களிலோ, நீதி மன்றங்களிலோ ஏழைக்கும் பணக்காரனுக்கும் சம சந்தர்ப்ப மிருந்து வருவதாக யாரும் சொல்லமாட்டார்கள். ராம்ஸே மாக்டொனல்ட், காபெல் லெரோ, ஸர். டி. முத்துஸ்வாமி அய்யர், ஹென்ரி போர்ட் போன்ற சிலரின் உதாரணத்தை எடுத்துக்காட்டி, சம சந்தர்ப்பமில்லாமல் அவர்கள் எப்படி உன்னதஸ்திதியை அடையமுடிந்தது என்று சிலர் கேட்கலாம். அந்தக் கேள்வியைக் கேட்பவர்கள் சற்று சாவதானமாய் யோசிப்பார்களானால் உண்மை புலப்படும். அவர்களில் ஒரு சிலர் சந்தர்ப்ப விசேஷங்களினாலும், அவற்றுடன் சாமர்த்தியக் கலப்பினாலும் முன்னுக்கு வந்தவர்கள். ஆனால் அவர்களைப் போன்றோரின் எண்ணிக்கை வெகு வெகு சொற்பமே. அதற்கு நேர்மாறாக சம சந்தர்ப்ப வசதிகள் இல்லாமையால் எத்தனை பேரறிஞர்களும் அபாரமான சாமர்த்திய முள்ளவர்களும் இருளில் இடந்தெரியாமல் மறைந்தனர். மறைகின்றனர் என்று சிந்தித்தால், இப்போதைய ஏற்பாட்டின் கீழ் சம சந்தர்ப்பமே இல்லை யென்பது புலனாகும்.

இயந்திரமும் மனிதனும்

இன்றைய நிலைமைக்கு மூல காரணத்தை ஆராய்ந்தால்தான் பரிகாரமும் புலப்படும். இயந்திரங்களைத் தொழிலபிவிருத்திக்கு மனிதன் உபயோகிக்க ஆரம்பித்து சுமார் 160 வருஷங்களாகின்றன. அதுவரை உலகில் நிலைமை இவ்வளவு மோசமாயிருக்கவில்லை. குறைந்த உழைப்பின் மூலம் அதிகமான பண்டங்களை உற்பத்தி செய்து, அவற்றின் கிரயத்தைக் குறைத்து, அதன்மூலம் மனித வர்க்கத்தின் சந்தோஷத்தை அதிகப்படுத்துவதே, இயந்திரங்களை சிருஷ்டித்தோரின் உண்மையான நோக்கமாய் இருந்திருக்கக் கூடும். ஆனால் இயந்திரங்களை பணக்காரர்கள் தான் வாங்கி உபயோகிக்க முடிந்தது. தொழில்முறைப் புரட்சி (Industrial Revolution) ஏற்படுவதற்கு முன்னமேயே, பிறரை அடிமைப்படுத்தி அவர்கள் மீது ஆதிக்கம் செலுத்தி, ஒரு சிலர் சுக போகங்களை யெல்லாம் ஆண்டு அனுபவிக்கும் சுரண்டல் தத்துவம், ஏகாதிபத்திய ரூபத்தில் நிலைநாட்டப் பெற்றுவிட்டது. இந்த ஏகாதிபத்தியங்களுக்கிடையே போட்டியும் போராட்டமும் இருந்து வந்ததால் பல சிக்கல்கள் சாதாரண மனிதனது வாழ்க்கையில் ஏற்பட்டன. எனவே, அந்தந்த தேசத்தில் தொழில்களை நடத்துவோர், பிற நாட்டினருடன் போட்டி போட்டு இலாபத்தை அதிகப்படுத்திக் கொள்வதில் கண்ணுங் கருத்துமா யிருந்தனரே ஒழிய, இயந்திரங்களின் மூலம் மனிதனின் கஷ்டத்தை நீக்கி, உற்பத்தியைப் பெருக்குவதன் மூலம் சௌகர்யங்களை எல்லோரும் அனுபவிக்கும்படி செய்வதை மறந்துவிட்டனர். உற்பத்திக்குத் தேவையான மற்ற சாதனங்களுக்கு என்ன அந்தஸ்தும் மதிப்பும் கொடுத்தனரோ, அதே மதிப்பைத் தான் உயிர் வாழும் மனிதனுக்கும் அளித்தனர். இயந்திர உபயோகத்தினால் உபரியாய் விட்ட அல்லது பிழைப்புக்கு வழியற்றுப் போனவர்களின் பிரச்னை கவனிப்பாரில்லாமல் வளர்ந்து வந்தது.

சுரண்டல் தத்துவமும் நடைப் பிணங்களும்

"என்னிடம் ஒரு லக்ஷம் ரூபாய் இருக்கிறது. அதைப் பன்மடங்காக்க பலரை அமர்த்திப் பாடுபடுகிறேன். அவர்களுக்கு நான் தருவதெல்லாம் அவர்களது உயிர் உடலிலிருந்து பிரியாம லிருப்பதற்குக் கூடச் சில சமயங்களில் போதாம லிருக்கும். நான் கொடுக்கக்கூடிய வேலைக்கு அவர்கள் மேல் விழுந்து போட்டி யிடுகிறார்கள். அவர்களுடைய ஊதியத்தையும் நான் குறைப்பது அதனால் சாத்தியமாகிறது. அவர்களது உழைப்பின் மூலம் உற்பத்தியாகும் பண்டங்களும், தான்யங்களும் எனக்கு கோடிக்கணக்கில் இலாபத்தைக் கொடுக்கின்றன. ஆனால் நான் அவர்களுக்கு அதற்காகக் கொடுப்பதோ ஒரு மிகச் சிறிய வீதாசாரந்தான். அவர்கள் எக்கேடு கெட்டால் எனக்கென்ன?

பலரும் சொந்த இலாபத்தையே ஆதாரமாகக் கொண்டு, எங்களிடையே அநாவசியமான போட்டி யில்லாமல் வசதிகளை வகுத்துக்கொண்டுகட்டுப்பாடாய், ராஜீய செல்வாக்கையும் வைத்துக் கொண்டு உலகையே கட்டி யாள்கிறோம். இந்தப் பஞ்சைகளும் அனாதைகளும் பெரும்பான்மையோராயிருந்து என்ன செய்ய முடியும்? அவர்களை நடைப் பிணங்களாகத்தான் சாமர்த்தியமாய் நாம் ஆக்கிவிட்டோமே? அவர்கள் தொந்தரவு கொடுக்க முயற்சித்தால் எங்கள் சொற்படி நடக்க, ராஜீய இயந்திரமும் அதன் உபசாதனங்களான குண்டுகளும், பீரங்கிகளும் இருக்கின்றன. எனவே பார்ப்போம் ஒரு கை!"

இதுதான் ஒவ்வொரு பரசிரமஜீவியின் நினைப்பாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியில், அமெரிக்க முதலாளிகளிடையே மட்டும் 'விநியோகிக்கப்பட்டுவந்த "வால் ஸ்ட்ரீட்" என்ற பத்திரிகையின் ஒரு இதழில், ஒரு ரஸமான குறிப்பு காணப்படுகிறது. "அடுத்த சாப்பாட்டைப் பற்றியே தொழிலாளி சதா கவலை கொள்ளும்படியான நிலைமை என்றைக்கும் இருந்துவரவேண்டும்," என்று அந்தக் கட்டுரையாளர் தன் சகோதர முதலாளிகளுக்கு யோசனை கூறியிருக்கிறார். இதுதான் முதலாளித்துவம்; இதைத்தான் உலகமெங்கும் ஆதிக்கம் செலுத்திவரும் சிறுபான்மையோர் இன்று நடத்திக் காட்டி வந்திருக்கின்றனர். அம்மாதிரி அவர்கள் செய்வதை சாத்தியமாக்குவது ராஜீய அதிகாரந்தான். ராஜீய அதிகாரமின்றி நிமிஷங்கூட அவர்கள் தங்களது சுரண்டலை நடத்திக் கொண்டுபோக முடியாது.

ராஜீய அதிகாரமும் பாமர மக்களும்

இந்த உண்மையை நன்கு தெரிந்து கொண்டவர் கார்ல் மார்க்ஸ்தான்.

பெரும்பான்மை யோராயுள்ள பாமரமக்கள் எவ்விதத்திலாயினும் ராஜீய அதிகாரத்தைக் கைப்பற்றவேண்டியது இன்றியமையாதது என்று வற்புறுத்தி பாட்டாளி யுலகத்தை சென்ற நூற்றாண்டில் தட்டி யெழுப்பினார். ராஜீய அதிகாரம் அவர் கையில் வருவதுதான் மற்ற எல்லா வேலைத் திட்டங்களைவிட முக்யமானது என்பதைத் தெளிவுபடுத்தினார்.

பிரெஞ்சுப் புரட்சிக்குப் பிறகு சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் போன்ற எண்ணங்கள் வேகமாய் ஐரோப்பாவில் பரவிய போதிலும், ஜனநாயகம் என்ற பெயரால் பாமரமக்களுக்கு பல நாடுகளில் கொஞ்சங் கொஞ்சமாய் வோட்டுரிமை விஸ்தரிக்கப்பட்டு வந்த போதிலும், கார்ல் மார்க்ஸின் கொள்கைகள் பரவி வேரூன்றும் வரை, ராஜீய விழிப்பின் அவசியத்தைப் பாமர மக்கள் உணரவில்லை.

கேர்ப்ப ஸஞ்சீவி :—கெர்ப்பிணிகளின் மலஜலக் கோளாறுகளுக்கும், கெர்ப்பத்தை ரட்சிக்கவும்; கோபால ஔஷதாலயம், சீயாழி.

ராஜீய அதிகாரத்துக்காக பாமர மக்கள் ஆங்காங்கு ஸ்தாபன பலத்துடன்கூட போரிடத் தொடங்கியவுடன், ஆளும் வர்க்கத்தினராகிய பரசிரம ஜீவிகள் அவர்கள் மீது பலதுறைகளிலும் போர் தொடுத்தனர். விழித்தெழுந்த பாமர மக்களை யடக்க, பரசிரம ஜீவிகள் உலக யுத்தம் உட்பட எல்லா முறைகளையும் கையாண்டனர்.

சுதந்திரத்துக்கு சமாதி

சுதந்திரமும் நியாயமுந்தான் அடிப்படையானவை என்று சொல்லி ஜனநாயகத்துக்கு முகஸ்துதி பாடிவந்த முதலாளிக் கூட்டம், அதே ஜனநாயகத்தின் கீழ் பாமரமக்கள் ராஜீய அதிகாரத்தைக் கைப்பற்றும் லட்சியத்தை நோக்கி விரைவில் முன்னேறுகிறார்கள் என்பது தெரிந்தவுடன், பரசிரம ஜீவிகள் சுதந்திரத்துக்கும், ஜனநாயகத்துக்கும், நியாயத்துக்கும் சமாதி கட்டிவிட்டு பாஸிஸம், நாஜி தத்துவம், ராணுவ ஆதிக்கம் போன்ற முறைகளை அவலம்பிக்கின்றனர். ஜெர்மன், இத்தாலி, ஜப்பான் போன்ற சில தேசங்களில் இந்தக் குட்டிக்கரணம் சரித்திரபூர்வமான சில காரணங்களின் விளைவாக பரிபூர்ணமாய் விட்டது. பிரிட்டன், பிரான்ஸ் போன்றவைகளில் வெளித்தோற்றம் எவ்வாறிருந்தபோதிலும், காரியாம்சத்தில், பாஸிஸ்ட், நாஜி அனுதாபந்தான் ஆளும் வர்க்கத்தினரிடம் இருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.

ஏகாதிபத்திய முறை

அதற்குக் காரணம் அவர்களுடைய ஏகாதிபத்திய சுரண்டல் தத்துவந்தான்.

பாமரமக்கள் ராஜீய அதிகாரத்தைக் கைப்பற்றி எல்லோருக்கும் உயிர்வாழும் உரிமையை உத்தரவாதம் செய்யாமலிருப்பதற்காக சமீபகாலத்தில் நடைபெற்ற முயற்சிகளை உலகமறியும்.

இவற்றையெல்லாம் இங்கு விவரித்ததன் நோக்கம் ஒன்றே ஒன்றுதான். தொழில் முறைப் புரட்சி தோன்றியது முதல் பெரும்பான்மையோரின் வாழ்க்கையைப் பாழ்ப்படுத்தி ஒரு சில நபர்கள் அல்லது நாடுகள் சுகபோகங்களை அனுபவிக்கும் முதலாளித்துவ, ஏகாதிபத்திய சமுதாய ஏற்பாடு, இன்று வரையில் இருந்து வருகிறது. அதாவது உயிர்வாழ உரிமை இடைவிடாமல் பெரும்பான்மை மக்களுக்கு மறுக்கப்பட்டு வந்திருக்கிறது. இந்த உரிமை எந்த நிலைமையின் கீழ் எல்லோருக்கும் கிடைக்க முடியும்?

என்ன வித்தியாசம்?

மனிதர்களை இயந்திரங்களாகவோ, வெறும் தொழில் சாதனங்களாகவோ கருதாமல், எல்லோரின் வாழ்க்கையும் சந்தோஷமாயும் சௌக்யமாயும் நடைபெறுவதற்கான விதத்தில் சமூக அமைப்பை அடியோடு மாற்றியமைத்தால் தான் இது சாத்தியமாகும். 'மனிதன் உணவை மனிதன் பறிக்கும் வழக்கமும்,' 'மனிதர் நோக மனிதர் பார்க்கும்' வாழ்க்கை முறையும் ஒழிய வேண்டும்.

பசிக்கொடுமையினால், அல்லது இப்பொழு திருந்துவரும் ஏற்பாடுகளின் விளைவாக உறுதிப்படும் மனோபாவங்களினால் ஒருவன் திருடுகிறானென்றால் அவனுக்குத் தண்டனை கிடைக்கிறது. ஆனால், பெரும்பான்மை மக்களிடமிருந்து அவர்களுடைய உழைப்புக்கும் தேவைக்கும் தகுந்த ஊதியம் கொடுக்காமல், ஒரு சிலர் சேமித்துவைக்கும் பணப் பெருக்குக்கு கௌரவமான பெயரும், உத்தரவாதமான பாதுகாப்பும் இருக்கிறது! விடுமுதல்காரன் அதை வட்டி என்கிறான். வியாபாரி அதை இலாபம் என்று குறிப்பிடுகிறான். நிலச்சுவான்களும் சொத்துள்ளவர்களும் குத்தகை, வாடகை என்கிறார்கள்; ஆனால், கொள்ளையிடுபவன் உண்மையை மறைக்காமல் தனக்குக் கிடைப்பதை கொள்ளை என்றுதான் குறிப்பிடுகிறான். உண்மையிலேயே இவற்றிடையே வித்யாஸமில்லை. வெவ்வேறு வர்ணக் கண்ணாடிகளின் மூலம் பார்த்தால்தான் அவை வெவ்வேறாகப் புலப்படமுடியும்.

ஹிம்ஸையே அஸ்திவாரம்

ஹிம்ஸை ஒரு குற்றமாக பாவிக்கப்படுகிறது. ஆனால், பெரும்பான்மை மக்கள் ஒரு சிலரால் வாழ்க்கை பூராவும் ஹிம்சிக்கப்படும் கொடுமை சட்டப்படி குற்றமல்ல! சொத்துப் படைத்து பிறரைச் சுரண்டிப் பிழைப்போருக்கு ஒரு நியாயம், பெரும்பான்மையோராயுள்ள மற்றவர்களுக்கு ஒரு நியாயம் என்ற நிலைமை ஒழியவேண்டும். இது எப்பொழுது ஒழியும்? சொத்து தனிவுடைமையா யிருப்பதால் தான் சுரண்டல் சாதனமாகிறது. உற்பத்தி சாதனங்களும், நிலமும், சொத்துக்களும் சமுதாயத்துக்கே சொந்தமாயிருந்தால்தான் சுரண்டலை ஒழித்து எல்லோருக்கும் உண்மையான சம சந்தர்ப்பத்தை யளிக்க முடியும். ரஷ்யா, ஸ்வீடன், நார்வே, மெக்ஸிகோ போன்ற தேசங்களில் ஏறக்குறைய இம்மாதிரியான முறை ஓரளவுக்கு இருந்து வருவதால்தான் அங்கே வேலையில்லாத் திண்டாட்டமும், கேவலமான வறுமையும், சுரண்டலும் இல்லாமலிருக்கின்றன. இம்மாதிரியான ஏற்பாடு நம் நாட்டிற்குத் தகுந்ததல்ல என்று யாராவது சொன்னால், அவர்கள் இப் பிரச்னையில் போதிய கவனம் செலுத்தவில்லையென்றுதான் கூறவேண்டும்.

சில நூற்றாண்டுகளுக்கு முன்வரை, கிராமவாசிகள் சாகுபடி நிலத்தை பொது சொத்தாகத்தான் அனுபவித்து வந்தார்கள். நம் நாட்டிலுள்ள பெரிய தொழில்களில் ஒன்றாகிய ரயில்வே ஏற்கனவே சர்க்காருக்குச் சொந்தம். மற்ற தொழில்களையும் சொந்தமாக்குவது அசாத்தியமென்று சொல்வதிற்கில்லை. ஆனால், சர்க்கார் நம்முடைய சர்க்காராயில்லை. அதை நம்முடைய தாக்கிக் கொண்ட பிறகுதான் இந்த வேலைகளையெல்லாம் நிறைவேற்றி வைக்க முடியும்.

நமக்கு முற்றிலும் தகுதியானது

எல்லாவற்றிற்கும் மேலாக, பொதுவுடைமை அல்லது சோஷலிஸம் என்று சொல்லப்படும் ஏற்பாடு நமக்கு ரொம்பவும் இயற்கையானது. ஹிந்து அவிபக்த குடும்ப வாழ்க்கையை எடுத்துக் கொள்வோம். அதுவும் மற்றவைகளைப் போல பல சீர்கேடுகளுக்கு உள்ளாய் விட்டபோதிலும், இன்னம் கோடிக்கணக்கான குடும்பங்கள் அதைக் கைவிடவில்லை. அவிபக்த குடும்பத்திலுள்ளோர், யார் எவ்வளவு சம்பாதித்தபோதிலும், எல்லோரும் சொத்துக்களிலிருந்தும் வருமானங்களிலிருந்தும் கிடைக்கக்கூடிய பிரதி பிரயோசனங்களை ஏறக்குறைய சமமாகவே வகுத்துக் கொள்கின்றனர். கிடைப்பதை எல்லோரும் நிரவிக் கொண்டு, கஷ்ட சௌகர்யங்களை சமமாகப் பகிர்ந்து கொள்கின்றனர். சில நூற்றாண்டுகளுக்கு முன் நிலங்கள் பொதுவுடைமையா யிருந்தன என்பதை நாம் மனதிலிறுத்தினோமானால், ஹிந்து குடும்ப வாழ்க்கை முறையை சமுதாயத்துக்கே பொருத்தமுள்ளதாகச் செய்வது அசாத்தியமல்லவென்பது புலனாகும். தாங்கள் தனியாக இருந்தால் அதிகமான சுக போகங்களை அனுபவிக்கக்கூடிய நிலைமையிருந்தும், குடும்பத்திலுள்ளோர் மற்றவர்களின் க்ஷேம லாபத்தை உத்தேசித்து தாங்கள் அதிகப்படியாக அனுபவிக்கக் கூடிய சௌகர்யங்களை விட்டுக் கொடுக்கிறார்களல்லவா? அதைப்போலவே, இப்பொழுது பலதுறைகளிலும் ஆதிக்கம் செலுத்துவோரின் மனப்பான்மையும் மாறுமானால், இந்த சமுதாயப் புரட்சி எளிதாய்விடும். ஆனால், அப்படி சுலபமாய் மாறிவிடுமென்று எதிர் பார்க்கமுடியாது. ருசி கண்ட பூனைகள் எளிதில் போகமாட்டா. எனவே, எல்லோருக்கும் உயிர்வாழும் உரிமையைப் பெறுவதற்காக கட்டுப்பாடான போராட்டம் அவசியமாகிறது. அடிப்படையான இந்தக் கொள்கையை ஒப்புக்கொண்டு சமுதாயத்தை மாற்றியமைக்க பாமர மக்களும், அறிவாளிகளும் சேர்ந்து முயற்சித்தால், போராட்டம் கடுமையாக இராதபடி செய்யலாம். இல்லாவிடில், பாரதியார் சொன்னது போல், 'தனி யொருவனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம்' என்று மற்ற நாடுகளில் போலவே வீறுகொண்டெழுந்து போரிட வேண்டியதுதான்.

அதிகாலையில் எழுந்திருக்க சுலப வழி

பலர் உணவைப்பற்றி சரியாய்க் கவனிக்கிறதில்லை. ஆகார பதார்த்தங்களை தெரிந்துகொள்வது பெண்களுடைய அல்லது சமயற்காரருடைய வேலை என்று நினைக்கிறார்கள். அவர்களுக்கு 'சரியான உணவு' ஜீரண நிலைமை, உணவு ஆராய்ச்சி விபரம் இவைகளைப் பற்றி அதிகமாய்த் தெரியாது.

இரத்த சுத்திக்காகவும், எளிதாக ஜீரணம் செய்வதற்கும் மரக்கறி உணவில் பெருங்காயம் சேர்க்கப்படுகிறது. ருசிக்காக மாத்திரமல்ல.

தினந்தோறும் சமயலுக்கு பெருங்காயம் உபயோகமாகிறது. அதில் பல தினுசுகள் இருப்பதால் எது மிகவும் நல்லதென்று தெரிந்து கொள்வது அவசியம்.

உருசிக்காகவும் வாசனைக்காகவும் தயாரிக்கப்படுகிற சாதாரண பெருங்காயத்திலுள்ள இரும்பு சத்துகள் பாதுகாக்கப்படாததால் அது உணவுக்குப் பயனற்றதாகிறது.

அதை உபயோகித்து உங்கள் நாவுக்கு லஞ்சம் கொடுப்பதாகும்

சாஸ்திரீய முறையில் செய்தால்தான் பெருங்காயத்திலுள்ள ரசாயன சத்துகள் கெடாமல் பயன் தரும்.

16 வருட ஆராய்ச்சியின் பயனாக, சாஸ்திரீய முறையில் செய்யப்பட்ட எமது டி. டி. பெருங்காயம் அவ்வித மார்க்கு போட்டு விற்பனை செய்யப்படுகிறது. அதிலுள்ள ரசாயன சத்து (20·22% இரும்பு) கெடாமல் உருசியும் வாசனையுமுள்ளதாய்ச் செய்யப்பட்டுள்ளது.

உயரிய சாஸ்திரீய முறையில் தயாரிக்கப் பெற்ற எமது டி.டி. பெருங்காயத்தையே வாங்கிச் சுகம் பெறுங்கள்



சாஸ்திரீய
டி. டி. பெருங்காயம்

பரிசு கூபனுடன் விற்பனை செய்யப்படுகிறது

1 பவுண்டு விலை ரூ. 1-14-0

ஜீரணத்தை சுலபமாக்குகிறது

ஸ்ரீ ஜகதீஷ் பிலிம்ஸாரது முதல் உன்னத தெலுங்குப் படம்

மள்ளி பெள்ளி

அல்லது

மறுமணம்

டைரக்ஷன் :
Y. V. ராவ்

*

சங்கீத டைரக்ஷன் :
V. ராமசந்திர ராவ்

நடிகர்கள் :
Y. V. ராவ்
காஞ்சனமாலா
வித்வான் ஸ்ரீனிவாசன்
ரங்கஸ்வாமி அய்யங்கார்
லக்ஷ்மிகாந்த கவி
மற்றும்
பலர்

*

ஸ்டுடியோ :
நியூடோன் மதராஸ்

தமிழ் நாட்டுக்கு விநியோக உரிமை பெற்றவர்கள் :
சுப்ரீம் பிக்சர்ஸ்
59, ஜாபர்சா தெரு :: திருச்சினப்பள்ளி

ப்ரொட்யூசர்ஸ் :
ஸ்ரீ ஜகதீஷ் பிலிம்ஸ்
11, ஆர்ம்ஸ் ரோடு :: கீழ்ப்பாக்கம், மதராஸ்

'மொழி வளர்ச்சி' 'மொழி வளர்ச்சி' என்ற பேச்சு, சில ஆண்டுகளாகத் தமிழ் நாட்டில் கிளம்பி யிருக்கிறது. மொழி வளர்ச்சி எப்படிப்பட்டது? எதற்கு? மொழி வளர்ச்சி யார் கையி லிருக்கிறது? புராதன இலக்கிய இலக்கணங்களிலே மட்டில் புகுந்துழன்று, தற்கால உலகத்தினின்றும் தங்களைக் கத்தரித்துக் கொண்டு, வளர்ச்சியையும் வாழ்வையும் உணராத பண்டிதர்களின் கையிலேதான் மொழி வளர்ச்சி இருக்கிறதா? மனிதனது சுயானுபவத்தைப் பொது உடைமையாக்க முயலாது, பிறரைக் கிள்ளை போல் நகல் செய்யும் கிராமபோன் பெட்டிகளாக மனிதர்களை ஆக்குவதற்கா மொழி வளர்ச்சி? பழைய சொற்களை, பழைய பதத் தொடர்களை, பழங் கருத்துக் களடங்கிய வசனங்களைப் புதுப்பது அடுக்குக ளாக்கித் தரும் செப்பிடுவித்தைதான் மொழி வளர்ச்சியோ? மொழியை வளர்ச்சியுறச் செய்தல், மொழியின் உயிர்த் திறனைப் பெருக்குவது எவ்வாறு? இக் கேள்விகளைப் பற்றிச் சிறிதும் சிந்தியாமலே நாம் மொழி வளர்ச்சியைப் பற்றிப் பேசி விடுறோம். சுயசிந்தனை யில்லாத, பொருளற்ற நூல்களும் பல தோன்றிவிடுகின்றன. அவற்றை நோக்கும்போது, அச்சும் பணமும் அறிவு வளர்ச்சிக்கும் கலை வளர்ச்சிக்கும் முட்டுக் கட்டையாகி, அவற்றிற்குச் சாதனமான மொழியையும் சீரழித்து வருகிறது என்று கூடத் தோன்றுகிறது.

* • *

மொழி என்பது என்ன? மொழி எப்படித் தோன்றியது என்ற புராதன வரலாற்றை நாம் இங்கே ஆராய வேண்டியதில்லை. இன்று தினம் மொழி மனிதனுக்கு எத்தகைய சாதனமாயிருந்து வருகிறது, அதன் பயன் என்ன என்பவற்றை நிர்ணயித்துக்கொள்வது நமக்குப்போதும். சுருங்கக் கூறினல், மனிதனது சிந்தனையை வெளியிடுவதற்கான தொரு பிரதம கருவியே மொழி என்று சொல்லலாம். மொழியின் பயன், சிந்தனையின் வெளியீடு, கருத்துக்களின் பரிமாற்றம் ஆகும். வாழ்வு அனுபவத்தினின்றும், கற்பனு சக்தியினுலும், அறிவு நுணுக்க ஆராய்ச்சியின் விளைவாகவும் மனிதர் மனத்தகத்தே உறும் சிந்தனைகளையும் கற்பனைகளையும் அனுபவ உண்மைகளையும் நிறைத்து வைக்கப் பெறும் அற்புதப் பாண்டமே—களஞ்சியமே—இலக்கிய மெனப் படும்; அக்களஞ்சியம் அமைவது மொழி என்னும் சாதனத்தால் தான்.

* • •

ஒரு தேசத்தின் இலக்கியம் என்பது இக்காலத்தில் மிக அகண்ட பொருளில் வழங்குகிறது. ஒரு நாட்டின் கலைகள் பலவற்றையும் பௌதிக ஆராய்ச்சிகள் பலவற்றையும் குறித்து வெளியாயிருப்பனவும், கற்பனையும் கவிதையும் நிறைந்தனவுமான உயர்தர நூற்கள் யாவற்றின் தொகுதியுமே இலக்கியம் என்று தான் இக்கால அறிஞர் பலர் கருதுகிருர்கள். குறிப்பிட்ட சில காவியங்களே இலக்கியம் என்று அறிஞர் எவரும் கருதுவதில்லை. இந்த விரிந்த பொருளிலேயே, நமது இலக்கியச் செல்வத்தை நாம் மதிப்பிட்டுப் பார்க்கவேண்டும். தமிழ் மொழி வளர்ச்சியின் பிரதிபிம்பத்தை அதன் இலக்கியப் பெருக்கிலே தான் நாம் காணுதல் வேண்டும்.

* * *

ஆனல், தமிழ் மொழி வளர்ச்சிப் பேச்சுப் பேசுவோர் பலரோ விநோதமான முறைகளைக் கையாளுகின்றனர்; விசித்திரமான யோசனைகளைக் கூறுகின்றனர். மொழியை ஏதோ தனித்தியங்கும் ஓர் அந்தர வஸ்துவாக அவர்கள் கருதுகின்றனர். மனிதனது சமுதாய வாழ்வின் முதற் காரணம், மனித குலத் திரள் வாழ்வைச் சாத்திய மாக்கிய அற்புத சாதனம் பாஷையே என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ளவில்லை. தச்சன் மரத்தை யிழைப்பது போலவும், கொல்லன் இரும்பைக் காய்ச்சி அடிப்பது போலவும், மனிதன் தனது பழம் புலமைத் திறத்தால் மொழியைத் தட்டி நீட்டி விடலாம் என்று அவர்கள் மயங்கிக் கொண்டிருக்கிருர்கள். மொழிக்கு ஒரு ஜீவசக்தி இருக்கிறது. அதற்கு ஊட்டம் கிடைத்தாலன்றி, மொழியை வளர்க்க முடியாது என்பதை அவர்கள் ஏனே உணரவில்லை!

தமிழ் மொழி வளர்ச்சிபற்றி இந்நாள் பேசுவோரிற் பலர் என்ன செய்கிருர்கள்? என்ன சொல்லுகிருர்கள்? என்ன நினைக்கிருர்கள்? பழம் நூல்களை—கவிகளை—மட்டில் படித்து, அவற்றில் உள்ள நயங்களைச் சித்திரவதை செய்து, கடின நடையில் எழுதுவோர் சிலர். பாக்களை மறக்காதிருக்கவும், ஒலி நயத்தால் பொருள் நயத்தைத் தொனிக்கவும், ஓசையின்பத்துக்காகவும் தோன்றிய மோனையையும் எதுகையையும் ஒருவித நோக்கமும் எக்காரணமுமின்றிப் பெருவாரியாக உபயோகித்து வசனநடைக் கட்டுரைகள் வரைகின்றனர் சிலர். சுத்தமான தனித் தமிழ் வேண்டுமென்று கோஷிக்கின்றவரும் உண்டு. 'தமிழ் பரிபூரண வளர்ச்சிபெற்று விட்டது; இனி அது வளர வேண்டிய தேவையேயில்லை; நாம் அதனை அப்படியே வழங்க வேண்டியதுதான் பாக்கி'—இவ்வாறு கருதுவோரும் இருக்கிருர்கள். மொழி வளர்ச்சி இவற்ருலெல்லாம் உண்டாகிவிடுமா?

* * *

"எளிய நடை! எளிய நடை! சகல விஷயமும் எளிய நடையிலேயே இருக்கவேண்டும். எங்கள் பத்திரிகையே இப்படி நடக்கும் ஒரு சர்வ கலாசாலைதான்" என்று கூச்சலிடும் கும்பலொன்றும் மறுபுறம் இருக்கிறது. எதை யெடுத்தாலும் எளியநடை யென்பது எப்படி முடியும்? கவிதைக் கனவுகளையும், ஓசையோடு பொருளை யிழைக்கும் மதுர வர்ணனைகளையும், சிடுக்குகள் நிறைந்த கலா நுட்பக் கட்டுரைகளையும் எளிய நடையில் எழுதுவதென்ருல், எப்படி முடியும்? எளிய நடையிலிருப்பதெல்லாந்தான் இலக்கியம் ஆகிவிடுமா? 'பூனை வந்தது; வாலை ஆட்டிற்று; ஓடிப் போயிற்று' என்பது மிக எளிய நடைதான். எளிய நடைக்காரர்களுக்கு இது பெரிய இலக்கியமாகும் போலும். இந்த எளிய நடைக்கூப்பாடும் மொழிவளர்ச்சியை உண்டாக்கிவிடாது.

* * *

மொழியின் ஜீவநாடி—உயிர்த் தன்மை—மனிதனது வாழ்வில் தான் இருக்கிறது. மொழி வளர்ச்சி என்பது நெடுங்கணக்கிலும் எழுத்துக்களின் பலவிதச் சேர்க்கையா லுண்டாகும் சொற்குவியலிலு மில்லை; மனிதனது புதுப்புது அனுபவங்களினின்றும் அவனுக்குத் தோன்றும் புதுப் புதுக் கருத்துக்களையும் விளங்கும் புதுப் புதுப் பொருள்களையும் வெளியிட, மொழியென்னுங் கருவி சாமர்த்தியத்துடன் பயன்படுத்தப் பெற்று, இலக்கியம் பெருகுவதுதான் மொழிவளர்ச்சியாகும். மொழியின் வளர்ச்சியை அதன் பயனில்தான் காணவேண்டும். உழவு இல்லாவிட்டால், ஏருக்கு வேலையுண்டா? கருத்துக்களின் பக்குவமும் நிறைவும் பரிமாறலும் இல்லாவிட்டால், மொழிக்கு அலுவலேது?

* * *

மனிதனது வாழ்வு பொங்கிப் பலுகிச் செயல் நிறைந்து நிற்குமானல், மொழியின் பெருக்கமும் வளர்ச்சியும் தாமே ஏற்படும். சுருங்கக் கூறின், மொழிவளர்ச்சியின் நுட்பமே இதுதான். 'மரம் பழுத்தால் வெளவாலை வாவென்று இரந்தழைப்பார் யாருமங்குண்டோ?' செயல் நிறைந்த வாழ்விலே, அனுபவமும் சிந்தனையும் நிறைந்து ததும்பும்; அங்கே மொழி தானே பலுகி வளரும். ஞானம் சூன்யத்தின் குழந்தையன்று; கர்மபலனே யாகும். 'இலக்கியம் கண்டதற்கிலக்கணமியம்பலின்' என்பார்கள். உயிர்த் தன்மை குதூகலித்து உத்வேகத்துடன் வெளித்தோன்றி நிற்கும் வாழ்வெனும் இலக்கியத்திற்கு, இலக்கணமே யாகும் மொழிவளர்ச்சியின் பயனை இலக்கியம்.

* * *

வாழ்வு பெருகிச் செயல் நிறைந்து எழுச்சி கொண்டிருக்கும் பொழுதுதான் கலைகளும் பௌதிகசாஸ்திரங்களும் புதிது புதிதாய்த் தோன்றி வளரும். வாழ்வு மங்கிக் கிடந்தால், அதை ஜீவநாடியாக உடைய மொழிக்கு எங்கிருந்துஉயிர்த்தன்மை வரும்? எனவே, மொழியின் வளர்ச்சிக்கு வாழ்வின் எழுச்சி இன்றியமையாத தாகும். ஒளவையைக் குறித்து ஒரு கதை சொல்லுவதுண்டு. அரச சபையிலே ஒரு கொண்டாட்டம் நடந்தது. புலவர் பலரும் அங்கு ஆஜராகியிருந்தனர். அவர் யாவரும் அரசனை வாழ்த்தி ஒவ்வோர் கவி பாடினர்கள். ஒளவையின் முறை வந்தது. அவள் நீண்ட

அசல் சிதம்பரம் பச்சை அரிசிக்கு "V. R.; V. K. V. ராமசந்திர அய்யர், சிதம்பரம் ரைஸ் மில்லில் விசாரிக்கவும்".

கவியொன்றும் பாடவில்லை. "வரப்புயர" என்று இரண்டே வார்த்தைகளைக் கூறி உட்கார்ந்தாள்.* பொருள் எவருக்கும் விளங்கவில்லை. ஔவையே தன் கருத்தை விளக்க வேண்டியதாயிற்று. "வரப்புயர நீருயரும்; நீருயர நெல்லுயரும்; நெல்லுயரக் கோனுயரும்; கோனுயரக் கோனுயரும்" என்றாள் ஔவை. இதேபோலத்தான், மொழியுயர நாம் வாழ்த்துக் கூறவேண்டுமாயின், வாழ்வுயரவே பிரார்த்திக்கவேண்டும்.

* * *

தமிழனுக்கு இலக்கியப் பெருக்கு—மொழிவளர்ச்சி—வேண்டுமெனில், அவனுக்குச் செம்மை கொண்ட, ஜீவ சக்தி நிறைந்த, சுதந்திர வாழ்வு வேண்டும். அதனை அவன் வாழ்ந்தாகவும் வேண்டும். வாழ்வின் பல துறைகளிலும் ஈடுபட்டு, பல கலைகளையும் வளர்த்துக்கொண்டு, செயலும் இயக்கமும் நிறைந்த வாழ்வை நடத்திக்கொண்டிருக்கும் மனிதருக் கிடையேதான் இலக்கிய கர்த்தர்களும் தோன்றுவார்கள். புராதன அரசர்களின் சபைகளிலே 'பாணர்கள்' என்று சொல்லப்படும் பாடகர்கள் உண்டு. இன்னும் ஆங்கில மன்னர் சபையில் ராஜாங்கப் பாடகர் ஒருவ ரில்லையா? இந்தப் பாணர்களின் அலுவல் யாது? தங்கள் அரசரின் கீர்த்திச் செயல்களை, பெருமைகளை இசைத்துப் பாடுவதே அவர்கள் அலுவல். தமிழர்கள் இசைக்குரிய, கீர்த்திப் பிரதாபங்கள் கொண்ட, உயிர்த்தன்மை பொங்கித் ததும்பும், செயலும் இயக்கமும் ஓங்கிய வாழ்வை நடத்தினால், அவர்கள் வாழ்வின் பெருமையை இசைத்துப் பாடும் 'பாணர்கள்'—நவயுக நூலாசிரியர்கள் தாமே தோன்றிவிடுவார்கள்; ஜீவத் தன்மை நிறைந்த மொழி வளர்ச்சி உண்டாகும்; புதுப் புது நூல்கள் உதயமாகும்.

* * *

வான்மதி கண்ட வாரிதியைப் போல் திரைகொழித்து ஒலி செய்யும் ஆங்கில இலக்கியத்தை நோக்குங்கள். அது எவ்வாறு உயிர்த்தன்மை பெற்றிருக்கிறது; எவ்வாறு வளர்கின்றது? ஆங்கிலேயர் செயல் நிறைந்த, ஊக்கம் மிகுந்த வாழ்வை நடத்துகிறார்கள். ஆங்கில இலக்கியத்தின் ஜீவநாடி—ஆங்கிலேயர் வாழ்வு—தேங்கிக் கிடக்க வில்லை. ஆங்கிலம் வளர்ந்துகொண் டிருக்கிறது என்பதில் ஆச்சர்யமுண்டோ? ருஷ்யாவில் நேற்றுக் கிளம்பிய பொது உடைமைப் புரட்சியைத்தான் நோக்குங்கள். மனிதர்கள் எழுச்சி கொண்டார்கள்; ஆவேசமாகக் கிளம்பினார்கள். சிந்தனையைக் கிளறின அந்தக் காட்சிகள். பொது உடைமைக் கென்றோர் தனி இலக்கியம் தோன்றி, உலகத்தையே சூழ முயல்கிறது. நாடகம், நாவல், மற்றும் பல பொருள் நூல்களெல்லாம், பொது உடைமைக் கொள்கையுடனும் நோக்கோடும் புதிதாய்த் தோன்றிவிட்டன.

⋄ ⋄ ⋄

நமது நாட்டையே நோக்குவோம். வைத்தியம், வானநூல், அறநூல், காவியம், தத்துவம், வேதாந்தம் முதலியனவும் மற்றும் பல கலைகளும் முற்காலத்து நிலவி யிருந்தன. அக்கலைகளும் காவியங்களும் இப்பொழுது வளர்ந்து கொண்டிராக் காரணமென்ன? அதன் மர்மமென்ன? அவை தோன்றியகாலம், செயல் நிறைந்த வாழ்வு நடத்தப்பட்ட காலம். அனுபவத்தால் பல உண்மைகளைக் கண்டார்கள்; தேவையால் பல பொருள்களை ஆக்கினார்கள்; ஆவலும் ஊக்கமும் பல விளைவுகளைத் தந்தன; இயக்கம் மிகுந்த வாழ்விலே, முட்டி மோதி உயர்ந்தெழ விரும்பிய ஆர்வத்திலே பல கற்பனைகள் உதித்தன; அகண்ட இயற்கையின் அந்தரங்கத்தைப் பிறிவாழ்விலிசைத்து அதனைத் தெய்வ தமாக்கத் தோன்றிய முயற்சியிலே பல தத்துவங்கள் விளங்கின, சித்திரங்கள் புலப்பட்டன—இலக்கியக் கடல், கலைச் செல்வ வாரிதி, 'வெள்ளலைக் கைகளைக் கொட்டி முழக்கி' யார்ப்பரித்தது.

⋄ ⋄ ⋄

மொழிக்கு வாழ்வே ஜீவ நாடியெனில், வாழ்வுக்கு மொழியால் பயனில்லையா? பயனில்லையெனில், மொழியைப்பற்றி நாம் இவ்வளவு தொல்லைப்படத் தேவையேயில்லையே. வாழ்வுக்கு மொழியாலும், மொழியின் சோலையான இலக்கியத்தாலும் நிறைந்த பயனுண்டு. பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாக மனித குலம் கண்ட அனுபவங்களையும், அவற்றின் விளைவுகளையும், பார்த்த உண்மைகளையும், தேர்ந்த தத்துவங்களையும் அடக்கிக்கொண்டு முன்னிற்கும் இலக்கியத்தால் மனிதனது வாழ்வுக்குக் கிடைக்கக் கூடிய பயன்களைத் தொகுத்துக்கூறவும் வேண்டுமா? பழைய அனுபவங்களையும் விளைவுகளையும் துணைக்கொண்டு, புதிய நிலைமைகளிலும் சந்தர்ப்பங்களிலும் தனது பாதைக்குச் சிறந்த எல்லையை—வேலியை—மனிதன் கட்டிக் கொள்ளலாம். அன்றியும் மனித சமூகத்தின் திரள் வாழ்வைச் சாத்தியமாக்கிய மூல சாதனமே மொழிதான். ஆதலால், மொழியின் வளர்ச்சியிலே மனிதன் சிரத்தை கொள்ளுவது இயல்பு. மொழிக்கு, வாழ்வு ஜீவநாடியாகும்; வாழ்வுக்கோ, மொழி மிகச் சிறந்த தோர் இன்றியமையாச் சாதனமாகும். தமிழிலக்கியத்தின் ஜீவநாடி எப்போது துடிதுடிப்பு எய்துமோ அப்போது தமிழ்மொழி, யாரையும் கேளாமலே வளர்ச்சி எய்தும். அது எப்போது?

---

*ஸுகப் பிரஸவ ஔஷதம்:—பிரஸவத்தை கவலைப்படாமல் நடத்திக் கொள்ள கோபால ஔஷதாலயம், சீயாழி.

ஜனக் கவர்ச்சி மிக்க பஞ்ச ரத்தினங்கள்

பார்வதி கல்யாணம்
(தமிழ்)
நடிகநடிகைகள்:
எஸ். பி. எல். தனலக்ஷ்மி பி. எஸ். ஸ்ரீனிவாச ராவ்
காமிக் படம்:
"அபஸ்மார சிஷ்யன்"
நடிகர்கள்:
எம். எஸ். முருகேசம் எம். ஆர். சுப்ரமண்ய முதலியார்

●

சீமந்தனி
(தமிழ்)
நடிகநடிகைகள்:
எம். ஆர். கிருஷ்ணமூர்த்தி டி. பி. ராஜலக்ஷ்மி
இணை காமிக்: "மூன்று விகடர்கள்"
நடிகர்கள்:
எம். எஸ். முருகேசம் எம். ஆர். சுப்ரமண்ய முதலியார்

●

ராஜமோஹன்
(தமிழ்)
நடிகநடிகைகள்:
கே. பி. கேசவன் காளி ரத்னம் எம். எம். ராதாபாய்
ஸ்ரீமதி கோதைநாயகி அம்மாள்
எழுதிய கதை

●

பஞ்சாப் கேசரி
(தமிழ்)
நடிகநடிகைகள்:
கே. பி. கேசவன் காளி ரத்னம்
இன்னும் அநேக நடிக ரத்தினங்கள் நடித்தது
இணை காமிக்:
"கொக்கோவும் அவர் மந்திரப் பெட்டியும்"
நடிகர்கள்:
கோக்கோ, எம். ஆர். சுப்ரமண்ய முதலியார், கே. டி. சக்குபாய்

●

மோஹினி ருக்மாங்கதா
(தெலுங்கு)
நடிகநடிகைகள்:
வேமூரி கக்கையா ராமதிலகம்
முதலிய ஆந்திர தேசத்து நடிக திலகங்கள் தோன்றுவது

விவரங்களுக்கு:
ஸ்டார் பிலிம்ஸ்
132, பிராட்வே — மதராஸ்
தந்தி: 'FILMCO'

ஸ்ரீ ராமருக்குச் சீடை பிடிக்குமா?

நெ. பி. ஸ்ரீரங்கன்

எழுதியது

கண்ணனை மட்டும் என் எல்லாரும், இவ்வளவு தடபுடலாகக் கொண்டாடவேண்டும்? ஸ்ரீ ஜயந்தி என்றால் உலகிலுள்ள பக்ஷணங்களையெல்லாம் நைவேத்யமாக வைக்கிறார்கள். ராமருடைய பிறந்த நாள் (பங்குனியிலா சித்திரையிலா என்று சந்தேகம் வேறு) ஸ்ரீராம நவமி வரும்போது வடைபருப்பு, பானகம், நீர்ப்பருப்பு முதலிய காலணா அரையணாச் சரக்குகளையே நிவேதனம் செய்கிறார்கள்.

ஐயோ பாவம், ராமர் மட்டும் என்ன பாவத்தைச் செய்தாரோ? வைதிகர்களிடம் இதற்குக்காரணம் கேட்டுப் பாருங்கள். "அதெல்லாம் பாரபக்ஷம் கிடையாது. இருவரும் விஷ்ணுதானே. பாருங்கள், எங்கெந்த காலத்தில் எதெது அகப்படுகிறதோ, அதைத்தானே பகவானுக்கு அளிக்கவேண்டும்" என்கிறார்கள்.

ஆனால் நான் ஒன்று கேட்கிறேன். இந்தக் காலத்து கடைவீதிகளில் எல்லாப் பருவங்களிலும், எல்லா பதார்த்தங்களும், எல்லா சாமான்களும் கிடைக்கையில் ராமரைமட்டும் என் வஞ்சனைசெய்ய வேண்டுமோ?...... ராமருக்கு 'சீசந்தி' பக்ஷணங்கள் பிடிக்காது என்பதாலா?

இதற்காகத் தவம் செய்து கௌசல்யாவை அழைக்கலாமென்று பார்க்கிறேன்.

ஒரு சந்தேகம். கௌசல்யை ஸ்வர்க்கத்திலிருந்து பூமிக்கு வருவதென்றால் யாரை அனுமதி கேட்க வேண்டும்? அது தெரிந்தால் அந்த நபருக்கே சேதி தெரிவித்து, கௌசல்யாவை வரவழைத்துக் கேட்கலாமென்று பார்க்கிறேன். அதிலும் இப்போது செவ்வாய் கிரகம் அருகிலிருப்பதால் அதில் வசிப்பவர்களிடம் தெரிவித்தால் கூட செய்தி கௌசல்யைக்கோ அல்லது ஸ்வர்க்கத்தின் அதிகாரிக்கோ எட்டிவிடுமென்று எண்ணுகிறேன். அப்படிச் சுலபமாக முடிகிற விஷயமாயின், தவம் கிடக்கும் சிரமம் கூட இராது!

கௌசல்யை செவ்வாய் மூலம் எட்டும் செய்தியைக் கேட்டோ, அல்லது தன்னைக் குறித்துக்கூட தவம் செய்கிறவன் ஒருவன் இருக்கிறானா என்கிற சந்தோஷத்தினாலோ வருகிறதாக வைத்துக் கொள்வோம்.

* * *

கௌசல்யா தேவி பிரத்யக்ஷமாகிவிட்டாள்! அதோ!

"வீரன் ராம பிரானை ஈன்ற தாயே, நமஸ்காரம்" என்று சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்தேன்.

அந்த அம்மையார் என்னை ஆசீர்வதித்தாள். "அம்மா! எதாகிலும் சாப்பிடுங்களேன்" என்றேன்.

"அப்பா. நீ என்ன குகனைப் போலவே பிரியமாகப் பேசுகிறாயே. குகன் சாப்பாட்டை வைத்துவிட்டே கேட்டான். நீ என்ன வேண்டுமென்று கேட்கிறாய். அவ்வளவுதான் வித்தியாசம்."

நான்:—அம்மணி, ஒன்றுமில்லை. குகன் உங்களுக்கு மாமிஸ போஜனம் அளித்தான். இந்தக் காலத்திலோ நாங்கள் மாமிஸம் சாப்பிடுவதை நிறுத்திவிட்டோம். அதனால் தான் என்ன வேண்டுமென்று கேட்டேன்.

கௌசல்யை:—நீ பொல்லாதவனாயிருக்கிறாயே. இந்தக் காலத்து பக்ஷணத்தை தான் கொடு, சாப்பிட்டுப் பார்க்கிறேனே.

நான்:—அம்மணி, நாங்கள் எல்லாரும் காப்பி, இட்லி, சாம்பார் எல்லாம் சாப்பிடுகிறோம். உங்களுக்கும் தரட்டுமா?

கௌசல்யை:—தா. ஸ்வர்க்கத்தில் அளவுக்கு மிஞ்சி அமிர்தம் சாப்பிட்டு விட்டேன். அதற்கு மாற்றாக ஏதேனும் கொடு.

நான்:—சாம்பார் சாப்பிடுங்கள். கௌசல்யை 'மடமட' வென்று இரண்டு தம்ளர் சாம்பாரும் நான்கு கப் காப்பியும் சாப்பிட்டுத் தீர்த்தாள்.

அப்போது நான், "அம்மணி! இப்படித்தான் உங்கள் குமாரருக்கும் மோர் தீர்த்தம், பானகம் முதலியவற்றைக் கொடுத்து ஏமாற்றிவிடுகிறார்கள் ஹிந்துக்கள். ராமர் வாழ்ந்த வாழ்வென்ன?" என்று மெள்ள என் சங்கதியை ஆரம்பித்தேன்.

"நீ என்ன சொல்கிறாய், எனக்குப் புரியவில்லையே," என்றாள் கௌசல்யை.

"அம்மா, ஹிந்துக்கள் உங்கள் குமாரரை விஷ்ணு அவதாரமென்று கோவில் குளத்திலெல்லாம் பூஜிக்கிறார்கள்."

"அப்படியா, என் கண்மணியையா அவதாரமென்று பூஜிக்கிறார்கள். திருஷ்டி கழிக்கணுமே அவனுக்கு......"

"பூஜிக்கிறார்கள், வாஸ்தவம் தான். ஆனால் கிருஷ்ணன் என்று அடுத்த விஷ்ணு அவதாரமிருக்கிறது. அவருடைய பிறந்த நாளைக் கூட கொண்டாடுகிறார்கள்."

"என்ன என் ராமன் இன்னொருத்தியின் வயிற்றில் போய் பிறந்தானா" என்று ஆயாசத்துடன் கேட்டாள்.

"ஆமாம் அம்மா. அந்த கிருஷ்ணனுடைய ஜயந்தி ஆவணி மாதத்தில் கொண்டாடுகிறார்கள். என்ன ஆர்ப்பாட்டம் போங்கள்."

"அதே நீர் மோர் பானகந் தானே?"

"இல்லையம்மா, இந்தியாவிலுள்ள பக்ஷணம் பூராவும் வைத்துக் குதூகலமாகக் கொண்டாடுகிறார்கள்."

"என்னென்ன பக்ஷணங்கள்?"

"சீடை, முறுக்கு, சுகியன், குஞ்சாலாடு, பேணி, பதிர்ப்பேணி, தேன் குழல் இத்தியாதி பக்ஷணங்களும், நாவல் பழம், புளியன் பிஞ்சு, வெண்ணெய், சுக்கு வெல்லம் எல்லாம் படைக்கிறார்கள். ஆனால் உங்கள் குமாரருடைய ஜயந்தி வந்தால் வெறும் நீர்மோர் தான்!" என்று மெள்ள வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவதுபோல் பொறாமையைப் புகுத்தினேன்.

"நீர் மோரா? குழந்தைக்கு ஜல தோஷம் பிடித்துக்கொள்ளுமே. நீங்கள் அவனைக்கடவுளாகப்பூஜிக்கவும் வேண்டாம். இப்படித் தாயில்லாப் பிள்ளையைப்போல நடத்தவும் வேண்டம்" என்று படபடத்தாள் கௌசல்யா.

"அம்மா, கோபம் வேண்டாம். நான் 'ராமநவமி'யைப் புது முறையில் அனுஷ்டிக்க வேண்டும் என்று கருதியே உங்களை அழைத்தது. இருக்கட்டும் உங்கள் மகனுக்கு சீடை முறுக்கு பிடிக்குமா?"

"பிடிக்காமலென்ன? காட்டுக் கிழங்குகளைக் கடித்துத் தின்ற அவனுக்கு சீடை முறுக்கைத்தானா கடிக்க முடியாது"

"கடிக்கமுடியாமலென்ன, ராஜன் மகனாயிற்றே, பாதம்அல்வா தான் சாப்பிட முடியுமென்று பார்த்தேன். ஆனால் இந்த வைதிகர்கள் இதற்கு ஒப்பமாட்டார்களே."

"நான் வேணுமானால் சொல்லிப் பார்க்கிறேன்" என்று ஆசையுடன் கௌசல்யை கேட்டாள்.

"நீங்கள் என்னுடன் வந்தீர்களானால், உங்கள் பேச்சுக்கு மதிப்பு வைக்க மாட்டார்கள். என் கதர் துணியைப் பார்த்ததும் இது அரசியல் தந்திரம் என்றெல்லாம் அளக்க ஆரம்பித்து விடுவார்கள். நீங்களே போய் சொல்லுங்கள்" என்று சொன்னேன்.

* * *

கௌசல்யை உடனே அருகிலிருந்த ராமர் கோயில் வாசலில் போய் உட்கார்ந்து கொண்டாள்.

அப்போது கோவிலில் பூஜை செய்வதற்காக வந்த பட்டர் அவளைப்பார்த்து, "அம்மா! நீங்கள் எந்த ஊரோ?" என்று கேட்டார்.

"உள்ளே இருக்கிற ராமனைப் போய்க் கேளும்."

"அம்மா! கோவிச்சிக்கப்படாது. நான் லௌகிகம் தெரியாத வைதிகம். அதனால்தான் ஒரு மாதிரியாகக் கேட்டு விட்டேன்" க்ஷமிக்கணும் என்றார் பட்டர்.

"வைதிகமா? ஆமாம் உம்மைத் தான் தேடிவந்தேன். உங்களுக்கு ராமரிடம் பக்தி உண்டா?"

"ஆமாம். ஹனுமானுக் கீடான பக்தியிருப்பதாகச் சொல்லுகிறார்கள்."

"ஆமாம். உமது முகத்தைப் பார்த்தாலே தெரிகிறதே! பக்தியுள்ளவராயிருந்தால் "ஸ்ரீ ராம நவமி" யன்று நீர் மோரும் பானகமும் மட்டும் நைவேத்யம் செய்வது நியாயம்தானா?"

"அதுதான் நியமனமாகியிருக்கிறது."

"கிருஷ்ணனுக்கு மட்டும் பஞ்ச பக்ஷபரமான்னம் நியமனமாகியிருக்கிறதோ. நன்றாக இருக்கிறது உங்கள் நியமன நியாயம்," என்று கூச்சலிட்டாள்.

அந்தக் கூச்சல் கோவிலுக்குள் எழுந்தருளியிருந்த ராமபிரான் செவியில் பட்டது. அவர் உடனே, "லக்ஷ்மணா! எழுந்திரு. அம்மா வாசலில் வந்திருக்கிறாள் போலிருக்கிறது. என்னமோ கூச்சலிட்டுக் கொண்டிருக்கிறாள்," என்று லக்ஷ்மணனை அழைத்துக்கொண்டு கோபுர வாசலண்டை வந்து சேர்ந்தார்.

தாயைச் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்தார்.

"ராமா! என்ன இப்படி இங்கேயே தங்கி விட்டாய், வா போகலாம். உன்னை தான் இங்கே சரியாக நடத்துவதில்லையாமே!"

"அப்படி ஒன்றுமில்லையே அம்மா" என்று சிரித்துக் கொண்டே பதில்சொன்னார் ராமர்.

"உனக்கு ஒன்றும் தெரியாது. அப்படித் தான் கைகேயி வார்த்தையைக் கேட்டு கெட்டாய். யாரோ கிருஷ்ணனாம், அவனுக்கு சீடை முறுக்கெல்லாம் தருகிறார்கள். உனக்கு மட்டும் நீர்மோர்தானாமே. வைதிகர்கள் தூபம்போட்டு உன்னை ஏமாற்றுகிறார்கள், நீயும் இளித்துக்கொண்டு நிற்கிறாய்" என்று 'பட பட' வென்று பேசினாள்.

ராமர்:—"அம்மா! விஷயம் புரியாமல் இப்படியெல்லாம் பேசக் கூடாது. கிருஷ்ணனும் நான்தான். கிருஷ்ண ஜயந்தி வருஷ ஆரம்பத்தில் வந்து விடுகிறது.

அப்போது கண்டதையெல்லாம் சாப்பிட்டு விடுகிறேனா. ஜீரணமாவதில்லை. ராம நவமி வருஷக் கடைசியில் வருகிறது. அப்போது லேசாக பானகம், நீர்மோர் சாப்பிட்டால் சௌக்யமாக இருக்கிறது. அது தெரியாமல் நீ அனாவசியமாக அவஸ்தைப் படுகிறாய்?"

"அப்படியா சமாச்சாரம்! எவனோ ஒருவன் தவம் செய்து என்னை வரவழைத்து இந்தக் கோலம் கண்டுவிட்டான்," என்று ஆரம்பிக்கும்போது நான் சந்தடியின்றி, ஜாடையாக அந்த இடத்திலிருந்து நழுவி விட்டேன்.

A Mighty Mythological Masterpiece!

"BHAKTHA CHETHA"

(IN TAMIL)

WITH ILLUSTRIOUS STAR ARTISTES

Now under Production at **M. P. P. C. STUDIOS**

Three new releases this month:—

"SAKTHI MAYA"

(IN TAMIL)

A SRI RANJANI PRODUCTION

Featuring :

MEMBERS OF THE SHINING STAR SOCIETY.

"HASYA-KADAMBAM"

ALL COMIC PROGRAMME

(TAMIL)

Starring all your best comedians. A Novel idea first of its kind in the Tamil Cinema World.

"INBASAGARAN" (PREMSAGAR)

(HINDI)

NOW RUNNING SUCCESSFULLY IN ALL IMPORTANT CENTRES!

"THYAGA BHOOMI"

Featuring :

Srimathi S. D. SUBBULAKSHMI, Baby SAROJA & PAPANASAM SIVAN

Pictures Ready for Booking :

TAMIL

1. Naveena Satharam
2. Bhaktha Kuchela
3. Bala Yogini
4. Ammanji & Kausalya Parinayam
5. Seva Sadan
6. Vanaraja Karzan
7. Rajasekaran & Emanda Sonagiri

Producers :—

The Madras United Artistes Corporation,
MADRAS.

Sole Distributors :—

Gemini Pictures Circuit,
7, Bells Road, ;; Triplicane, MADRAS.

வலிமையும் வனப்பும்

புரொபஸர்:
கிருஷ்ணஸ்வாமி



அமெரிக்காவில் யாரோ ஒரு சினிமா நடிகை சொன்னாளாம், "அமெரிக்க நாட்டு சர்க்கார் இந்த தேசத்துப் பெண்களின் அழகுச்செலவுக்காக வருஷாவருஷம் பணம் ஒதுக்கிவைக்கவேண்டும். அதற்காக ஒரு மந்திரியும் ஒரு தனி இலாகாவும் ஏற்படுத்தவேண்டும். ஜனங்களின் மற்ற சௌகரியங்களுக்காகவும், வளர்ச்சிக்காகவும் வருஷா வருஷம் சர்க்கார் எவ்வளவோ பணம் செலவு செய்கிறார்களே. நம் தேசத்துப் பெண்கள் இன்னும் அதிக அழகுடனிருந்தால் அதனால் நம் ஜனங்களின் மனமும் அதிக உற்சாகம். நிறைந்திருக்குமே; வாழ்க்கையும் அதிக சந்தோஷகரமானதாக விருக்குமல்லவா" என்று.

அவள் சொல்லியதில் ஒரே ஒரு விஷயம் மாத்திரம் முற்றிலும் உண்மை. ஒரு நாட்டில் ஜனங்கள் பொதுவாக மனோகரமான அமைப்புடையவர்களாக இருந்தால், அவர்களது மனமும் அதேபோல ஆரோக்கியகரமாகவும், அழகான சிந்தனைகள் நிறைந்தும் விளங்கும் என்பது உண்மைதான்.

ஆனால் வெறும் வெளியழகு மாத்திரம் இருந்து என்ன பிரயோஜனம்? பௌடர்களாலும், ஸ்நோக்களாலும், ஆடையலங்காரங்களாலும் வெளியுருவத்தோற்றத்தை மாத்திரம் பகட்டாகச் செய்து விட்டால் போதுமா? அப்படிப்பட்ட அழகு வெறும் வெளிவேஷமாகத் தானிருக்கும். ஜலத்தின்மேல் படர்ந்திருக்கும் பாசத்தின் கனம் தானிருக்கும் அந்த அழகில்.

அந்த மாதிரி அழகினால் ஜனங்கள் மனதில் உற்சாகம் வளருமா? அவர்களுடைய வாழ்க்கையில் அழகு பரவுமா? ஒருக்காலுமில்லை. அந்த அழகில் அஸ்திவாரமிராது. பலமிராது. ஆகையால் அதனால் ஏற்படும் மன உற்சாகமும் வெறும் பகட்டு உற்சாகமாகத்தானிருக்கும்.

ஒரு தேச ஜனங்களின் பொதுவான மனோபாவத்தில் பலமும், உறுதியும், சகிப்புத்தன்மையும் இருக்க வேண்டும். இந்த மூன்றும் வளர்வதற்கு ஆதாரமாக இருக்கும் சரீர நிலைதான் உண்மையான உடலழகு.

ஒருவனுடைய மனநிலை எவ்வளவு ஆரோக்கியமாக இருக்கிறதோ அதற்குத் தகுந்தபடி தான் அவன் உடலும் ஆரோக்கியமாக இருக்கும். அதே போல அவனுடைய உடல் எவ்வளவு ஆரோக்கியமாக விருக்கிறதோ அவ்வளவு தான் அவன் மனமும் சுறு சுறுப்பாகவும், சந்தோஷமாகவு மிருக்கும்.



அதாவது ஒருவனுடைய மனமும் உடலும் சமயாக நோய் நொடியற்று, திடமும், உற்சாகமும் உடையவையாக இருக்க வேண்டும்.

நாம் பள்ளிக்கூடங்களில் எவ்வளவு நீதிகளைக் கற்றாலும் என்ன பயன்? உபநிஷத்துகள், பகவத்கீதை, இதர நீதிநூல்கள் ஆகியவற்றைப் படித்தால் மாத்திரம் பிரயோஜனம் என்ன? சோனியான, சகிப்புத் தன்மையற்ற உடல் நிலையுடனிருந்தால், அவ்வளவு நீதிகளையும், நியாயங்களையும் அறிந்திருந்தும் மனம் உற்சாகமற்றுச் சோர்ந்து போய் விடும்; கோணல் வழிகளில் போகத்தான் முயற்சி செய்யும்.



நம்முடைய முன்னோர்கள் இதை எவ்வளவு நிச்சயமாக அறிந்திருந்தார்கள் என்பதற்கு அவர்களுடைய வாழ்க்கை முறைகளே சாட்சி. அவர்களுடைய நித்திய கர்மானுஷ்டானங்களும், தினசரி வாழ்க்கையும் இடைவிடாமல் சரீரத்திற்கு ஆரோக்கியமும், பலமும் அளிக்கும் சாதகங்களாகவே யிருந்தன.

ஆனால் எப்படியோ நம் தேசத்தில் அந்த நிலை மாறிப்போய் விட்டது. நம் ஜனங்கள் உடலுழைப்பை கௌரவக் குறைவான ஒரு காரியமாகக் கருத ஆரம்பித்துவிட்டார்கள். இந்தப் பொய்கௌரவ நம்பிக்கை நம் ஜனங்கள் உடல் நிலையையும், அதனால் மனப்பான்மையையும் வியாதிகள் நிறைந்த ஒரு கேவல நிலைக்குக் கொண்டுவந்துவிட்டது. பொதுப்படையாக இந்திய ஜனங்களிடம் மனம் உடல் இரண்டிலும் கோழைத்தனம் வளர்ந்து ஊறிப்போய் விட்டது.

இப்போது இந்த நிலைமையைமாற்ற அங்கங்கே முயற்சிகள் நடந்து வருகின்றன. தேசத்தில் பிரமாதமான ஒரு விழிப்பு ஏற்பட்டு விட்டது. ஜனங்களின் வாழ்க்கையில் ஒவ்வொரு துறையிலும் புதிய கொள்கைகளும், வளர்ச்சியும் தோன்றியிருக்கிறது.

ஆனாலும் நம்முடைய சரீர பலம் சம்பந்தமாக இன்னும் நம்மிடையே போதுமான அக்கறை யேற்படவில்லை யென்பது வருந்தத்தக்க விஷயமே யாகும். நாம் இந்த விஷயத்தில் போதுமான கவனம் செலுத்தவில்லை.

உடலுழைப்பால் ஜீவனம் செய்பவன் கேவலமாகக் கருதப்படுகிறான். அதனால் நம் இளைஞர்கள், தங்கள் உடல்களை பலப்படுத்தும் உழைப்புகளை யேற்பதைக்கூட கௌரவக் குறைவாகக் கருதுகிறார்கள். தேகப் பயிற்சிகள் செய்வதென்றால் அவர்களுக்கு வேப்பங்காய் தின்பதுபோல விருக்கிறது. 'உம்' என்று முகத்தைத் திருப்பிக் கொள்கிறார்கள்.

நம் சரீரம் உழைப்பதற்காக ஏற்பட்டதே ஒழிய, உல்லாச நாற்காலியில் வைத்து பூஜைசெய்வதற்கல்ல. அப்படி உழைப்பதற்காக ஏற்பட்ட சரீரத்தை ஆரோக்யத்துடன் வைத்துக் கொள்ள தேக அப்பியாசமே முக்கிய சாதனமாகும். இதை நாம் ஒருக்காலும் மறக்கக்கூடாது.

ஆதிகாலத்தில் இருந்தவர்கள் எவ்வளவு திடகாத்திரத்துடன் இருந்தார்கள்! ஏன்? அக்காலத்தில் நிலக்கரியும் சவுக்குக்கட்டையும் அடுப்பங்கரையைக் கைப்பற்ற, காடும் கோடரியும் காணாமல் போகவில்லை. மின்சார இயந்திரம் தோன்றி ஏத்தத்தையும் தண்ணீர் இழுப்பதையும் பறக்கடித்து விடவில்லை. ஏணி ஏறுவானேன்! மரம் கொத்துவானேன்! அவர்கள் வாசமெங்கே! படுகுழிச் சௌகரியங்களுடன் வாழும் நம் வாசமெங்கே!

உலகமெங்கும் தேகமுன்னேற்றக் கொடியை உயர்த்திவருகிறார்கள். இங்கிலாந்தில் இக்கிளர்ச்சி பிரமாதமாக, ஆர்ப்பாட்டமாக நடந்துவருகிறது. அமெரிக்காவில் ஜனங்களின் உடல் பயிற்சி வகைக்காக இலட்சக் கணக்கான டாலர்கள் ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். நம் நாட்டினர் சரீர வலிமைக்குப் பிரசித்தி பெற்றவர்கள். ஆனால் இப்போது அதன் தேவையை உணர்ந்து அதை அபிவிருத்தி செய்யத் தீவிரமுயற்சி செய்யாமல் தூங்கிக்கொண்டிருக்கலாமா?

தேக சரீரப் பயிற்சி இயக்கம் ஒன்று நம் தேசத்தில் தீவிரமாக ஆரம்பிக்கவேண்டும். இத்தகைய ஒரு இயக்கத்தின் அவசியத்தைப் பற்றி ஜனங்களிடையே தீவிரமாகப் பிரசாரம் செய்யவேண்டும். நாம் கசரத்து செய்யலாமா, டிரில் செய்யலாமா, இதைச்செய்தால் என்ன பயன், அதைச் செய்தால் என்ன பயன் என்று இன்னும் வீண்வாதம் செய்து கொண்டு இருப்பதில் பிரயோசனமில்லை. வட இந்தியாவிலும், மகாராஷ்டிரத்திலும் தெருவுக்குத் தெரு பயிற்சிக்கழகங்களும் ஓடியாட விளையாட மைதானங்களும் தேகப்

சிதம்பரம் கைக்குத்தலரிசிக்கு "V. R. ; V. K. V. ராமசந்திர அய்யர், சிதம்பரம் ரைஸ் மில், சிதம்பரம்".

பயிற்சிகள் செய்யவும், பழகவும் தனி இடமும் கட்டப்பட்டு இருக்கின்றன.

நம் மாகாணத்தில் சத்திரம், சாவடி, கோவில் முதலிய தர்மக் கட்டிடங்கள் கட்டும் புண்யவான்கள், மனுஷ்யக் கோட்டையை, சரீரமென்னும் இந்தப் பிரத்யட்சக்கோவிலைப் பலப்படுத்த முன்வரக் கூடாதா? அரசாங்கமே எல்லாவற்றிற்கும் முன்வந்து திரவியமும் உற்சாகமும் ஊட்டமுடியாது. ஜனமுயற்சி இருந்தால் சர்க்கார் தானாக அதில் அக்கரை காட்டி அதை வளர்க்க சகல உதவிகளும் செய்துதான் தீருவார்கள்.

நம் மாகாணத்திலும் இப்போது அங்கங்கே ஒன்றிரு முயற்சிகள் ஆரம்பமாகி நடந்து வருகின்றன. இம்மாதிரி முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டு, ஆனால் போதுமான உற்சாகமும் ஆதரவுமின்றி வெகு சீக்கிரத்திலேயே சோர்ந்து மங்கிப்போகிறதென்பது அனுபவம். அதற்குக்காரணம், நம் ஜனங்கள் சரீரப் பயிற்சியின் பலத்தின் அவசியத்தையும், முக்கியத்தையும் மறந்திருப்பதுதான்.



அவர்களிடை தீவிரமாகப் பிரசாரம் செய்து, அவர்கள் மனதில் இந்த விஷயத்தில் அக்கரையும், உற்சாகமும் எழச் செய்ய வேண்டும். என்னைப்போல தேகப் பயிற்சியிலும், பலமும் அழகும் நிறைந்த உடல் வளர்ச்சியிலும் நம்பிக்கையுள்ளவர்கள், தினசரி தன்தன் உடல் வளர்ச்சிக்காகப் பயிற்சிகள் செய்வதுபோல, தினசரி சிறிது நேரமாவது, ஒன்றிரு வரிடமாவது இதைப்பற்றிப் பிரசாரம் செய்ய வேண்டுமென்பதே என் கோரிக்கை.

நம் மாகாணத்தில் ஆரோக்கியமும், சகிப்புத் தன்மை நிறைந்த பலமும் கொண்ட திட சரீரகளான சமூகத்தைச் சிருஷ்டிக்க நாம் ஒவ்வொருவரும் அக்கரையெடுத்துக்கொள்ள வேண்டும். இதை நாம் நமது ஒரு கடமையாக, தர்மமாகக் கொண்டு நிறைவேற்ற முயலவேண்டும்.

நம்மில் சிலராவது இந்த விஷயத்தில், அந்தரங்க பூர்வமான அக்கரையுடனும், நம்பிக்கையுடனும் உழைத்தால் வெகு சீக்கிரத்திலேயே நம்தேசமும் ஆண்மையுடன் உலகத்தின் முகத்தைப் பார்த்து நிமிர்ந்து நிற்க வழிசெய்துவிட முடியும் என்பதே என் நம்பிக்கை.

ரிஜிஸ்டர் நெ.

Regd. No. 1506

REGD. No 1506
அசோகா
MILD SCENTED
ASOKA
ஸ்ரீஜிபீடி
ரிஜிஸ்டர். நெ. 1506

தயாரிப்பவர் :—

எம். கே. கிருஷ்ண செட்டி,
கோயமுத்தூர்.

அசோகா சுகந்த பாக்குத்தூள்

பல் வியாதிகளுக்கு

T. B. சீதாராம்

பெரிய தெரு :: கும்பகோணம்

உங்கள் பற்களை சுத்தமாக வைத்திருங்கள்

சுதேசி தொழிலை ஆதரிக்க, "V. R. ; V. K. V. ராமசந்திர அய்யர், சிதம்பரம் ரைஸ் மில், சிதம்பரம்".



கிராமதேவதைகள்

கொத்தமங்கலம் சுப்பு

வீரம் பெருமாளே—ஒறந்தர
வேணும் பெருமாளே.
தீர னுனேப்போலே—திடம்பெற
தேடும் பெருமாளே!

காளி மகமாயி—கதிதரக்
கைகட்டி நிப்பவளே,
நாளி விதைச்சாலும்—தளேயிலே
நாலுகலம் தாடி

காலிகள் ஆட்டு மந்தை-கிடைகளேக்
காப்பது உம்பாரம்
வேலியி லெல்லேக்கல்லும்—விளுகாமல்
வீற்றது உம்பாரம்.

இருளா மலேக்கருப்பே—மேகநிறத்
தேறே கருப்பய்யா.
மருளாது மனிசருக்கே—தகிரிய
மணசைத் தருவாயே.

வெறியா மதத்துரையே!—துடி
வீறிட்டெளுந்திடடா! [கொண்டு
மருவாதை கெட்டவனேக்—குடியனே
மண்டை உடைத்திடுடா.

கொண்டிக் கருப்பணனே—மரத்தினில்
ஒண்டி நடப்பவனே
வண்டிக் குதிரைபோல—மணிச்சத்தம்
வந்தபின் தோணுவோனே.

சங்கிலிக்காரத் தொரை—சலங்கைக்கு
வெங்கலத்தாலே மணி
எங்கிருந்தாலுங் கோப்போம்-குடிக்கொ
பங்கம் வராது காப்பாய். [ரு

மலேயா மருங்கையனே—மணிநெல்லே
மலேயாத் தருங்கையனே
செலேயாயிருந்துக் கிட்டே—நெதம்
சேதி தருபவனே. [வந்து

தூரியென் தூண்டியப்பா—தொரை
ஊருணித் தேவதையே [களே
வாரிவலே யிளுப்போம்—வகைவகைப்
பாசி தருவாயே

நாலண்ணங் தம்பியோடே—பொறந்தா
நல்லண்ணன் நீதாண்டா [லும்
மேலெண்ணங் தர்மகுணம்—தந்து நீ
மேனி முனேயாவே.

கிட்டி மளேமேவுங்—குறிகளேத்
தொட்டியக்காரச் சின்னுன்
எட்டுமலே கடந்தே—நிதநிதம்
கிட்டவே வந்து சொல்லே

ஆத்தங்கரை மேட்டில்—பச்சைநெர
நாத்துவளர் காட்டில்
பூத்தமலர் வீட்டில்—புகும்வரும்
காத்தவரா யண்ணனே!

தூத்துங்கள மேட்டில்—தூரிசுடன்
எத்துமிரைப் பாட்டில்
காத்துத் தலேமாட்டில்—இருந்தப்போ
காத்தை யடிப்பாயே.

மயிலேறுஞ் சேவுகனே—மலர்க்கையில்
அயிலேந்துஞ் சேவுகனே
சயிலேஸ்வரி மகனே—சரவணச்
சாமி துணேயாமே.

நேர்த்தியான பச்சை அரிசிக்கு "V. R.; V. K. V. ராமசந்திர அய்யர், சிதம்பரம் ரைஸ் மில், சிதம்பரம்".

"இரண்டு பெரிய சோப்புக் கட்டிகள் செய்யலாம்; ஒரு இரும்பாணி பண்ணிக் கொள்ளலாம்; ஒரு கப் காப்பிக்குப் போட்டுக் கொள்ளத் தக்க சர்க்கரையும் தயாரிக்கலாம். பத்துத் தடவை வெற்றிலே போட்டுக் கொள்ளத் தக்க அளவு சுண்ணாம்பு முண்டு. ஆயிரம் தீக்குச்சிகளுக்கு வேண்டிய பாஸ்பரஸ், கொஞ்சம் மக்னீஷியம், கொஞ்சம் பொடாஸியம், இவைகளும் கிடைக்கும். மூன்று டம்ளர் ஜலமும் கிடைக்கும். இவைதான் ஒரு மனித சரீரத்திலிருந்து கிடைக்கக் கூடிய வஸ்துக்கள்" என்று ஒரு விஞ்ஞானி கணக்குப் போட்டுக் கூறினார்.

நான்கணா மதிப்புள்ள சாமான்களாலாகிய இந்த இயந்திரத்தை இயக்குகின்றதே அந்த நித்ய சக்தி தனது சொந்த ஆனந்தத்திற்காகச் சில அற்புதங்களை சிருஷ்டிக்கின்றது; வளர்க்கின்றது. அவைகளைக் கலைகள் என்கிறார்கள். ஆத்மானந்தத்துக்கான அற்புதங்களே கலைகள் என்னப்படுகின்றன.

* * *

கலையாவது கத்தரிக்காயாவது? சகஜமாகக் கூறப்படும் இந்த நையாண்டிச் சொல்லும் ஒரு கலா ரசிகரால் தான் சொல்லமுடியும். கத்தரிக்காய் ரஸிகரால் அதைக்கூடச் சொல்ல முடியாது. "கலை கலை என்கிறார்களே; இதனால் மனிதனுக்கு ஏதாவது பயனோ, உபயோகமோ உண்டா?" என்று கேட்கிறார்கள் கத்தரிக்காய் தாஸர்கள்.

இரண்டு கால்கள், இரண்டு கைகள் சகிதமுள்ள அந்த நான்கணா வஸ்துக்களுக்குப் பயன் ஏதேனும் உண்டா, உபயோகமேதேனும் உண்டா என்பது தான் அவர்கள் கவலை. ஏதோ நித்ய வஸ்து என்று ஒன்றை வர்ணிக்கப் பட்டதே அதன் இன்ப துன்பங்களைப் பற்றி அவர்களுக்கு ஸ்மரணையே கிடையாது. மனித உணர்ச்சிக்கும், மனித உடலுக்கும் பயன்தரத் தக்கன ஏதோ சில கலைகள்தான்.

◦ ◦ ◦

இயூக்லிட் சில உண்மைகளைக் கூறுகின்றான். அவன் கூறுகின்றவைகள் உப்புக்கூடப் பெறாதவைகளாய்த் தோன்றுகின்றன. நியூட்டன் ஆகர்ஷண சக்தியைப் பற்றிக் கூறுகின்றான். அவன் சொல்வதிலே ஒரு உபயோகமும் இருப்பதாகத் தோன்றவில்லை. இயூக்லிட் வாக்குகளும், நியூட்டன் சித்தாந்தங்களும் படிப்பதற்குக்கூட ரஸமாயில்லை. படிப்பவனுக்கு அவை உபயோகம் தருவனவா, இன்ப மூட்டுகின்றனவா என்று இயூக்லிட்டுக்கோ நியூட்டனுக்கோ கவலையு மில்லை. தாங்கள் கூற விரும்பிய ஸயன்ஸின் நித்திய சத்தியங்களைச் சொல்லியே தீர்க்கின்றார்கள். ஸயன்ஸ் என்ற கலை பின்னர் வளர்கின்றது. ஜியாமெட்ரி பல அற்புதக் கட்டிடங்களையும் இயந்திரங்களையும் பண்ண உபயோகமாகிறது. ஆகர்ஷண சக்தியைப்பற்றிய ஞானம் ஆகாய விமானத்தை இயக்க உபயோகப்படுகின்றது.

பயன்களையெல்லாம் ரூபா அணா பைசாவினால் மதிப்பிடக் கூடிய மனிதனும் திருப்தியுறும் வகையில் ஸயன்சுக் கலை விளைந்து கொடுக்கின்றது. "இந்த சயன்சுக் கலையினால் என்ன உபயோகம்?" என்று யாருமே இப்போது கேட்பதில்லை. ஆனால் ஆர்க்கிமிடெஸ் காலத்தில் கேட்டார்கள்; காலிலியோ காலத்தில் கேட்டார்கள்.

சங்கு ஸு. ஸுப்ரஹ்மணியன்

இப்போது மனித உடலுக்கு "உபயோகமற்றவை" யாகவும் ஆனால் கலைகள் ஜாப்தாவில் அமர்ந்துகொண்டும் இருப்பன நற்கலைகள் என்பன. சித்திரமாம்! சிற்பமாம்! இசையாம்! கவிதையாம்! இன்னும் என்னென்னவோவாம்! "ஸ்ரீ சேகரின் சித்திரங்களையோ, ஸ்ரீ ராஜுவின் படங்களையோ பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தால் வயிறு நிரம்பி விடுமா? மகாபலிபுரத்து மகிஷாசுர மர்த்தனிப் பொம்மையைப் பார்க்கப் போவதால் அந்த ஊரிலே சாப்பாடு மில்லாது அவதிப்பட வேண்டியது தான்! சங்கீதத்தைக் கேட்டுக் கொண்டேயிருந்தால் சாதம் வேண்டாது போய் விடுமா? பாரதியாரின் கவிதைப் புத்தகத்தைப் புரட்டுவதை விட நான்கு கத்தரிச் செடி நட்டால் கத்தரிக்காயாவது கிடைக்குமே" என்றெல்லாம் சொல்கின்றனர். நற்கலைகளுக்கு மதிப்புப் போடவும், ரூபா அணா பைசா அளவில் விலைபோடவும் ஏற்பட்ட கோளாறுகளினால் தான் இந்த நிலைமை ஏற்பட்டு விட்டது.

* * *

அடிவானத்துக்கருகே ஆயிரக் கணக்காக வர்ணப் பூச்சுகளோடு மினுக்குகிறதே, அந்த அழகான வில்லுக்கு இத்தனை ரூபாய் கொடுக்கலாம் என்று யாரும் இதுவரை மதிப்புப் போட்டதே யில்லை. மனிதர்களின் புத்திசாலித்தனங்களில் இதுவும் ஒன்று. ஏனெனில் அந்த அழகான வானவில்லுக்கு, காசு பணத்தை ஒரு அளவையாகக் கொண்டு கணக்கிட முடியாதென்று கண்டு பிடித்து விட்டார்கள். வைரங்களைத் தெர்மாமீட்டர் மூலம் அளக்க முடியாது என்பதை நன்கறிவார்கள். ஆனால் நற்கலை அற்புதங்களை மட்டும் காசை அளவாகப்போட்டு மதிப்புப் போட முயன்று தடுமாறுவோர் சர்வசகஜம்.

* * *

கவிதா ரஸனைக்கும் இசையின்பத்துக்கும் மதிப்புப் போட வாகான அளவு கருவிகள் ஏதும் கிடைக்கவில்லை. என்ன செய்வது? சத்தத்தின் அளவை நிர்ணயிக்கக் கருவிகள் இருக்கின்றன; இசையின்பத்தை அளக்க கருவிகள் இல்லை. படத்தின் நீளத்தை அகலத்தை அளக்க மட்டப் பலகையுண்டு; படத்தின் சுவையையளக்க வழியில்லை. நற்கலைகளின் சிகரமான கவிதையின் கதியைக் கேட்க வேண்டுமா? சீர், தளை என்று ஏதேதோ அளவைகள் கவிதையின் புற அமைப்புக்குக் கூறப்பட்டிருப்பினும் அதன் உட்கருத்தையும் ஆனந்தத்தையும் தொட்டுக் காட்டக்கூடக் கருவிகள் இல்லை. ஆகவே இந்த உலகம் உள்ளளவும் நற்கலைகள் உபயோகமற்றவை என்று கெட்ட பெயர் வாங்கிக்கொண்டு மதிப்பிடவும் இடமின்றி அவஸ்தைப்பட வேண்டியது தான்!

* * *

மனித மூளையிலே கேந்திர பரமாணுக்களாக இரண்டு கோடியே சொச்சம் நிலையங்கள் இருக்கின்றனவாம். அவைகளை 'பிரெய்ன் ஸெல்ஸ்' என்று கூறுகிறார்கள் டாக்டர்கள்.

"சிதம்பரம் ரைஸ் மில், சிதம்பரம்"; சிதம்பரம் பச்சை அரிசி ரகங்கள் கிடைக்கும்.

அந்த நிலையங்களின் அசைவுகளைப் பூதக் கண்ணுடிகள் மூலம் பார்ப்ப தற்கு இயலுமானல் ஒரு குறிப்பிட்ட கவிதைக்கு, ஒரு குறிப்பிட்ட சிற்ப வேலைப்பாட்டுக்கு, ஒரு குறிப்பிட்ட மனிதனின் மூளை எவ்வளவு அசை கிறது என்று வேண்டுமானல் கணக் கிட்டுக் கொள்ளலாம். ஆனல் அதே குறிப்பிட்ட கவிதையை அதே குறிப் பிட்ட சிற்ப வேலைப்பாட்டை இன் னெரு மனிதன் ரஸிக்க நேர்ந்தால் அவன் மூளை யசைவுகள் வெவ்வேறு அளவைகளில் இருக்கும். அநுபவம், ஆனந்தம் முதலியன ஆளுக்கு ஆள் பேதம். கட்சி தொலைந்ததா? எந்த இயந்திரத்தாலும்,கருவியினலும்மதிப் பிட முடியாத குளறுபடிகள் இந்த நற்கலைகள்! ஆகவே நற்கலைகள் மதிப் புக்கு லாயக்கற்றன ஆகின்றன!

* * *

“இந்த உபயோகமற்ற கலைகளை ஏன் வளர்க்க வேண்டும்?” என்று கேட்கின்ற ரஸக்ஞர்கள் எப்போது மிருந்திருக்கிருர்கள்; இப்போது மிருக்கிருர்கள். உடனே எதிர்க் கட்சி புறப்பட்டது. “ஐயா! எங்கள் கலை உங்கள் உபயோகத்திற்காக ஏற்பட் டவையன்று. கலை கலைக்காகவே பிறந் தது. கலைக்காகவே வளர்கின்றது” என்று பேசினர்கள். ‘Art for Art’s sake’ என்ற கட்சி சில கலாதாஸர்க ளால் கிளப்பப்பட்டது.

மனித வாழ்வின் இன்பத்துக்காக ஆத்மாவினல் சிருட்டிக்கப் படுவன ‘கலைக’ளென்று ஏற்கனவே சொல் லப்பட்டது. கலை கலைக்காகவே யிருக் கட்டுமே! ஆனல் அதுவும் மனித வாழ் வின் ஆனந்தானு பவத்துக்குத் தானே! அதை ஓர் உபயோக மென்று நினைக்கிறவர்கள் நினைத்துக் கொள்ளட்டுமே.

* * *

“எள்ளத்தனை பொழுதும் பயனின்றி
இராதென்றன் நாவினிலே
வெள்ளமெனப் பொழிவாய்”

என்று நவயுகத்துக் கவிஞன் தமிழ கத்தில் பாடினன். கவிதையின் சக்தி யிடத்தில் அவனுக்கு அளவற்ற நம் பிக்கை. “என் பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திட வேண் டும்” என்று அதே கவிஞன் பாடி னன். தனது கவிதைகளினல் உல கைப் பாலிக்க முடியும், உலகுக்குப் பயனூட்ட முடியும் என்று நினைத் தான் அக்கவிஞன்.

கவிஞன் எதையோ சொல்ல விரும் புகின்ருன். அந்த விருப்பமே கவி தைகளாக அவிழ்ந்து பறக்கின்றது. அந்தக் கவிதைகள் சில மனித ஹிரு தயத்தைச் சுருக்கெனத் தைக்கின் றன. சில உற்சாக மூட்டுகின்றன.

அந்தக் கவிதைகளில் சிலவற்றை நமது இழுப்புக்கு இழுத்து வைத்துக் கொண்டு ஒருவித உபயோகமும் கற் பிக்க முயலுகின்ருேம். ஆனல் அந்த உபயோகம் ஒன்ருவது ஸ்தூல மனிதனுக்கல்ல என்பதையும் நிச்சய மாக வைத்துக் கொண்டே பேச வேண்டும்.

* * *

எழுதிய படத்திலே ஒரு கீற்ருல், வர்ணிக்க முடியாத உணர்ச்சிகளை, பார்வையிடும் மனிதனின் இருதயத் தில் கிளப்பி விடுகின்ருனே அந்த ஓவியனின் வேலைப்பாடினல் “உல குக்கு என்ன பயன்?” என்று கேட் கிருர்களே என்ன செய்வது?

இவர்களை ஒரு அறிஞர் மறு கேள்வி போடுகின்ருர். “நற் கலைக ளால் என்ன பயன் என்று கேட்கின் ருயே; உலகத்திலே மனிதன் வாழ்வ தால்தான் என்ன பயன்?” என்பது அக் கேள்வி.

இந்தக் கேள்விக் கப்புறமும் “நற் கலைகளால் என்ன பயன்?” என்று எந்த நண்பராவது கேட்பாரானல், கட்டுரையின் ஆரம்பத்தில் கூறிய நான்கணு வஸ்துக்களுக் குரிய சரி யான மனிதர் அவர்தான்; அவர் மதிப்பும் அவ்வளவே என்று நிச்சய மாகக் கூறலாம்.

பிஷக் ரத்ன பாளயம் வெங்கடாசல பண்டிட் & ஸன் அவர்களின்

லோகாமயஹர
கஸ்தூரி மாத்திரைகள்
(ரிஜிஸ்டர்ட்)

இம் மாத்திரையை 1, 2 தாம்பூலத் துடனுவது, தனியாகவாவது ஸ்திரீ புருஷர்கள் யாவரும் உபயோகித்து வருவதி னல் வாய்க்கு நல்ல மணமும், ஜீர்ண சக்தி யும் உண்டாகி, தொத்து வியாதிகள் முதலியன தீரும். குழந்தைகளின் எல்லா மாந்தங்களும் இருமல், ஜலதோஷம், எல்லாவித ஜ்வரம், ஸ்வாசகாசம் முதலிய பல ரோகங்களும் தீர்ந்து பூர்ண ஆரோக் யம் தரும். நற்சாக்ஷிகள் பெற்றது. 250, 300 மாத்திரைகள் அடங்கிய புட்டி 1-க்கு ரூ. 0—4—0

N. B.—முக்கியமான எல்லா ஊர் களிலும் ஏஜண்டுகள் தேவை. நேரில் எழுதிக்கொள்ளவும்.

வி. பி. ஆர்டர்கள் மதராஸ் பிராஞ்சு ஆபீஸிலிருந்தும் அனுப்பப்படும்.

ஸ்ரீ சீதாராகவ வைத்தியசாலை,
மைசூர்

பிராஞ்சு:-30, கோவிந்தப்ப நாய்க்கன் வீதி, ஜி. டி, மதராஸ்.

ஆர்டர்கள் எழுதும்போது இந்தப் பத்திரிகையை குறிக்கவும்.

1001
REASONS WHY
...it pays well to print well!

"Good Printing" is **just** what Solden & Co. stands for, which means:—

A service that provides original and creative ideas for every kind of print.

A staff of specialists whose work is their pleasure and pride.

A plant that can meet all urgent and special occasions.

Colour work which has stood the test of thirty years and more.

Quality at all times and every time-whether your job is a visiting card, a label, a catalogue or a poster, etc.

SOLDEN & CO
TRIPLICANE
MADRAS, S. E.

“மாத்ருபூமி” பாடல்களை ஓடியன் ரிகார்டுகளில் கேளுங்கள்.

புக்கிங்களுக்கு : **AL. RM.** கம்பெனி, 32. ஆதியப்ப முதலி தெரு, வேப்பேரி, மதராஸ்

பி. எம். கண்ணன்

"ஞானம், இந்தக் கதர் கௌன் இவளுக்கு எத்தனை அழகாயிருக்கு பார்த்தாயா?" "ஆமாம். என் கண்ணுக்கு திருஷ்டியே விழும் போலஇருக்கு" என்று பெருமையுடன் பதிலளித்தாள் ஞானம்பாள்.

"ஆனால் இது காசு கொடுத்து வாங்கினது தானே. நாமே நூல் நூற்றுக் கொடுத்து இதை வாங்கியிருந்தால் இதற்கு இன்னும் எத்தனை பெருமை தெரியுமா?" என்று கேட்டார் தர்மலிங்கம்.

"ஆமாம். நானும்தான் சொல்லிண்டே யிருக்கேன். ஒரு ராட்டினம் வாங்கிண்டு வந்தா ஒழிஞ்ச வேளையிலே நூற்கலாம். பொழுது போக்காகவு மிருக்கும்."

"இதுதானே பிரமாதம்!......... அதற்கென்ன நாளைக்கே உனக்கு ஒரு ராட்டினம் வாங்கி வருகிறேன்."

"அப்பா! எனக்கப்பா லாட்னம்!" என்று இடைமறித்தாள் பேபி.

"உனக்கா? அட, இப்போ பிடித்து உனக்கும் ராட்டினம் வேணுமோ? சரி. உனக்கும் ஒன்று வாங்கித் தரேன்."

பேபியின் முகத்தில் மகிழ்ச்சி தோன்றியது. "அப்பா எனக்குக் கூட லாட்னம் வாங்கித் தரப் போறா!" என்று ராகத்துடன் பாடிக்கொண்டே தான் நின்றிருந்த பெஞ்சியின் மேலிருந்து குதித்து கைகளைக் கொட்டிக் கொண்டே குதூகலத்துடன் வீதிக்கு ஓடினாள் பேபி.

பேபி நல்ல சிவப்பு. நல்ல எடுப்பான நெற்றி. சுருண்டு சுருண்டு குச்சுக் குச்சாகத் தொங்கும் தலைமயிர் காற்றில் அசைந்து அவளது நெற்றியில் இடப்பட்டிருந்த சாந்துப் பொட்டை முத்தமிட்டுக் கொண்டிருந்தது. நீண்ட ரெப்பைகளின் கீழே விசாலமான கருவிழிகள் அந்த முகத்தின்மீது அழகை வாரிச் சொரிந்து கொண்டிருந்தன. இந்த அழகுக்கு அழகுசெய்வதுபோல அவளது காதுகளில் டோலக்குகள் இடப்பட்டிருந்தன. இயற்கை அழகுடன் கூடிய அந்தக் குழந்தைக்கு தர்மலிங்கம் அந்தக் கதர் கௌனைப் போட்டதும் அந்த கௌனுக்கே அவள் உடலழகு ஒரு சோபிதத்தை அளித்தது. தன் குழந்தையின் அழகில் பெருமையடைந்த தர்மலிங்கம் ஞானம்பாளை அழைத்தார் பேபியைப் பார்க்க. அப்போதுதான் மேற்கண்ட சம்பாஷணை நடந்தது.

* * *

மறுநாள் மாலை, பேபி தன் புது கௌனுடன் வாசலில் தன் தகப்பனாரை எதிர் பார்த்துக் கொண்டே நின்றிருந்தாள். அப்போது எதிர் வீட்டுப் பையன் சோமு அவளிடம் வந்தான்.

"பேபி, ஏன் இங்கே நின்னுண்டிருக்கே. விளையாட வாயேன்!" என்று அழைத்தான் சோமு.

"நான் இப்ப விளையாட வரல்லே."

"ஏன்? என் பேச்சு காயா?"

"இல்லே பழந்தான். எங்கப்பா இப்ப கடையிலேருந்து எனக்கு லாட்னம் வாங்கிண்டு வரப் போறாளே!" என்று பெருமையுடன் பேசினாள் பேபி.

"லாட்னமா! அப்படின்னா என்ன?"

"ஐயையே! உனக்கு லாட்னமே தெரியாது? அப்பா குடைமாதிரி பெரிசா யிருக்குமே. ஆனா 'டாப்' பிலே கறுப்பா யிருக்காது. வெள்ளையா யிருக்கும்."

"இந்த மானத்தைப் போலேயா?"

"ஹூம் ஹூம்! மானத்தைப் போல பெரிசில்லே. அவ்வளவு பெரிசா யிருந்தா வீட்டிலே எப்படி பிடிக்கும்? இன்னும் கொஞ்சம் சின்னதா யிருக்கும். தெரியுமா? அதிலே ஓரத்திலே எல்லாம் பச்சை, சேப்பு, நீலம், மஞ்சள் எல்லாக் கலரிலேயும் குதிரை கட்டியிருக்கும்."

"குதிரையா?"

"ஆமாம்."

"வண்டி கூட இருக்குமா?"

"ஊஹூம், வண்டி யிருக்காது. தொட்டில் இருக்கும்."

"நிஜம்மாவா?"

"நிஜம்மாத்தாண்டா சோமு. அந்த லாட்னம் சுத்தக்கூட சுத்துமே."

"சுத்துமா?"

"ஆமாம். அப்போ அந்தக் குதிரை, தொட்டில் எல்லாம் கூட சுத்தும். அதிலே ஏறிக்கிண்டா நாம்பகூட ஜோரா சுத்தலாமே!"

"தொட்டில் கூட சுத்துமா? தொட்டில் ஆடத்தானே ஆடும்?"

"இல்லேடா, நீ லாட்னத்தைப் பாத்ததில்லே. தொட்டில் சுத்தத்தான் சுத்தும்."

"ஆனா எங்கம்மா தங்கச்சியை தொட்டில்லே போட்டு ஆட்டறாளே. அப்ப தொட்டில் சுத்தலியே. ஆடத்தானே ஆடறது?"

"ஐயையே. இந்த சோமுவுக்கு ஒண்ணுமே தெரியல்லே. அட சோமு, அந்தத் தொட்டில் வேறே. இது வேறேடா. அது ஆடும். இது சுத்தும்."

சற்று நேரம் இரு குழந்தைகளிடையேயும் மௌனம் நிலவியது. பிறகு சோமு கேட்டான்: "அந்தத் தொட்டில்லே நான்கூட உக்காரலாமா?" என்று.

"ஊஹூம் கூடாது."

"கூடாதா?"

"ஊஹூம். எங்கப்பா எனக்குத்தானே வாங்கிண்டு வரப் போறா? உனக்கா? வேணும்னா உங்கப்பாவைப் போய்க் கேளேன்!"

"போடி! உன் பேச்சு டூ!" என்று சொல்லிவிட்டு சோமு ரொம்ப கோபத்துடன் தன் வீட்டுக்குப் போய்விட்டான். அதே சமயம் தர்மலிங்கமும் வந்து சேர்ந்தார். அவர் வாசற்படியில் காலை வைக்கும்போதே "அப்பா!" என்றாள் குழந்தை.

"என்னம்மா!"

"லாட்னம்!"

"என்ன லாட்னம்?"

"வாங்கிண்டு வரேன்னு சொன்னையே!"

"ஓஹோ அதுவா! மறந்தே போனேன். நாளைக்குக் கட்டாயமாக வாங்கிண்டு வரேன்," என்று சொல்லி பேபியைத் தூக்கிக் கொண்டு உள்ளே நுழைந்தார் தர்மலிங்கம்.

"ஊஹூம். கூடாது. இப்பவே!" என்று சொல்லித் தன்னை விடுவித்துக்கொண்டு கீழே இறங்க யத்தனித்தாள் பேபி.

அவள் முகத்தில் ஒரு ஏமாற்றம், வருத்தம் இரண்டும் தென்பட்டது.

"இப்பவேயா? இப்பவே எப்படியம்மா முடியும்?"

"நீ கடைக்குப் போயேன்!"

சட்டென்று சமாளித்துக் கொண்டார் தர்மலிங்கம்.

"இப்பதான் கடையிலேயிருந்து வரேன். கடைக்காரன் பண்ணிக்கொண்டிருக்கிறான். இன்னும் பண்ணி முடியவில்லை. நாளைக்கு முடிந்துவிடும். கட்டாயமா நாளைக்கு வரபோது வாங்கி வரேன்" என்று சால்ஜாப்பு சொன்னார் தர்மலிங்கம்.

"உம்......ஜோரா சுத்துமா அது?" என்று ஆவலுடன் கேட்டாள் பேபி.

"பேஷாய்ச் சுற்றும்."

இந்தப் பதில் பேபிக்குப் பரம திருப்தியை அளித்தது. அவள் தர்மலிங்கத்தின் கைகளினின்றும் தன்னை மெல்ல விடுவித்துக் கொண்டு வாசலுக்கு ஓடினாள்.

அவள் மனம் கொஞ்சம் குதூகலத்துடனிருந்தது. எப்படியும் மறு நாள் தனக்கு ராட்டினம் வந்துவிடுமென்று எண்ணினாள்.

அடுத்த நாள் மாலை. அதே நேரம். பேபி வாசற்படியிலேயே தன் தகப்பனார் வருகையை நோக்கியவண்ணமிருந்தாள். தகப்பனார் வந்தார். ஆனால் அவள் எதிர்பார்த்த ராட்டினம் வரவில்லை.

"அப்பா, லாட்னம்!" என்றாள்.

ஏதோ சால்ஜாப்புக்கள் தான் பதிலாகக் கிடைத்தது.

இன்று பேபி கொஞ்சம் பிடிவாதம் செய்து பார்த்தாள். தர்மலிங்கம் எப்படியோ சமாதானப்படுத்தி அவளை உள்ளே தூக்கிச் செல்வதற்குள் போதுமென்றாய் விட்டது. மறுநாள் கட்டாயமாக வாங்கித் தருவதாகச் சொன்னார் தர்மலிங்கம். எனினும் பேபிக்கு மட்டும் நம்பிக்கையில்லை.

மறு நாள் மாலை தர்மலிங்கம் ஆபீஸிலிருந்து வரும்போது ஒரு மர ராட்டினம் வாங்கி வந்தார்.

"பேபி!" என்று அன்புடன் கூப்பிட்டார் மகளை.

அப்போது பேபி வீட்டில் இல்லை. தன்னுடன் டூ விட்டுவிட்ட சோமுவுடன் வெகு சுலபமாக ராஜியாய்ப் போய் அவனுக்குச் சமைத்துப் போட்டு, அவனை ஆபீஸுக்கு அனுப்பிக் கொண்டிருந்தாள் கொல்லைப்புறத்தில். "பேபி" என்ற குரல் அவள் காதில் கேட்டதும் அவள் விளையாட்டுக்குத் தடை ஏற்பட்டது. ஆயினும், கொஞ்சம் பிகுவுடன் "என் அப்பா!" என்றாள் கொல்லைப் புறத்திலிருந்தே.

"உனக்கு ராட்டினம் வாங்கி வந்திருக்கேன்!"

"லாட்னமா? நிஜம்மாவா?"

பேபி ஓடி வந்தாள், சோமு பின் தொடர; தர்மலிங்கம் தான் வாங்கி வந்த மர ராட்டினத்தைக் கையில் தூக்கிப் பிடித்துக்கொண்டு, அதன் சக்கரத்தை ஒரு சுற்று சுற்றிவிட்டு "பேபி, பார்த்தையா! எப்படி சுற்றுகிறது இந்த ராட்டினம்" என்று கேட்டார் குழந்தையை.

பேபி தலையை உயர்த்திப் பார்த்தாள். "அப்பா கையிலே இருப்பது ராட்டினம் தானா?" என்று அவள் குழந்தை மனம் கேட்டுக் கொண்டது. "இதுகூட என்னமோ சுத்தறது" என்று எண்ணியது குழந்தை.

"அப்பா, அதைக் கீழே வையேன் அப்பா!"

தர்மலிங்கம் ராட்டினத்தைத் தரையில் வைத்தார். அதன் சக்கரம் 'கிறுகிறு'வென்று சுழலுகிறது. அதைச் சுற்றிச் சுற்றி வந்தாள் பேபி. அவள் பின்னாலேயே சோமுவும் வந்தான்.

கடைசியில் பேபி கேட்டாள்: "அப்பா! இதுதான் லாட்னமா?" என்று.

"ஆமாம்."

"ஆனால் ஒரு குதிரையைக் கூட காணுமே; அப்பா, இதுக்கு 'டாப்'பே யில்லையே. உம். லாட்னம் போயி இத்தனூண்டு தான் இருக்குமோ!"

இதற்குள் பக்கத்தில் நின்ற சோமுவுக்கு என்ன தோன்றியதோ. "பேபீ, இந்தத் தொட்டில்லே எப்படி உட்காரமுடியும்?" என்று கேட்டான்.

"தொட்டிலாவது, குதிரையாவது, இந்த ராட்டினத்தைத் தான் நான் சொன்னேன். இதிலே நூல் நூற்றுக்கொடுத்து உனக்கு கௌன் வாங்கலாம் என்று உன் அம்மா சொன்னாள்" என்றார் தர்மலிங்கம்.

பேபியின் முகத்தில் பெருத்த ஏமாற்றம்! தன் தாய்கேட்ட ஏதோ ஒரு ராட்டினத்தைத் தான் அப்பா

" ஆத்தங்கரை மேட்டில்—பச்சை நிற
நாத்து வளர் காட்டில்
பூத்தமலர் வீட்டில்—அவள்
வா(ழ்)த்து வளர்த்திடுவாள். "

வாங்கி வந்திருக்கிறார்; தனக்கு வேண்டிய ராட்டினத்தை வாங்கி வரவில்லை என்று அவள் மனதில் பட்டது. உடனே வெடுக்கென்று, "ஆனால் இது அம்மா லாட்டனமா?" என்று கேட்டுவிட்டாள்.

"நீயும் தான் வைத்துக்கொள்ளேன்!"

"எனக்கு இது வேண்டாம். குதிரை, தொட்டில் எல்லாம் கட்டியிருக்கே; அந்த லாட்னம்தான் வேணும்."

"ஓஹோ! இது ரங்க ராட்னத்தைச் சொல்றது" என்றாள் ஞானம்பாள்.

"ரங்க ராட்டினமா? அதை எப்படி வாங்க முடியும்? அதை விலைக்குக் கொடுக்கமாட்டானே!"

இந்த பதிலில் பேபிக்குக் கொஞ்சம்கூடத் திருப்தியில்லை.

"உம். அம்மா லாட்னம் மாத்திரம் விலைக்குக் கொடுப்பான். எனக்கு மாத்திரம் கொடுக்கமாட்டானே!" என்று முனகினாள் குழந்தை.

"இந்த ராட்டினத்தை நீயே வேண்டுமானால் எடுத்துக்கொள். எனக்கு ஒன்றும் வேண்டாம்" என்று கூறினாள் ஞானம்பாள்.

"ஊஹூம். யாருக்கு வேணும் உன் பீத்த லாட்னம்? இதிலே ஒன்றுமே இல்லையே. நீயே வச்சுக்கோ," என்று உதட்டை பிதுக்கிக் கோபத்துடன் பேசிவிட்டுச் சட்டென்று வேறுபுறம் திரும்பிக்கொண்டாள் பேபி.

"வேண்டாப் போனால்போ, உன் கோபம் என் பாக்யம்" என்று சொல்லி ஞானம்பாள் அந்த ராட்டினத்தை எடுத்துக்கொண்டு உள்ளே போனாள்.

"ஐயையே! ஏமாந்த எலிப் புழுக்கை!" என்று பேபியைப் பார்த்து குழந்தை தனத்துடன் கைகொட்டி நகைத்தான் பக்கத்திலிருந்த சோமு.

பேபிக்கு ஆக்ரோஷம் பொங்கியது. "போடா! உங்காத்துக்கு. உன்னையார் அழைச்சா இங்கே! பீடை!" என்று 'சொள்'ளென்று விழுந்து ஓங்கி அவன் கன்னத்தில் ஒரு அறைவிட்டாள் பேபி. சோமு அவளைவிட வயதில் சின்னவனாகையால் எதிர்த்துப் போர் புரிய மாட்டாமல் அழுதுகொண்டே போய்விட்டான்.

முகத்தை பத்திரகாளிபோல் வைத்துக்கொண்டு நின்ற பேபியை சமாதானப்படுத்த தர்மலிங்கம் அவளருகில் போய் அவளை அணைத்துக்கொண்டு "பேபீ!" என்றார் கனிந்த குரலில்.

"நீ என்னைக் கூப்பிடவேண்டாம். அம்மாவுக்கு மாத்திரம் லாட்னம் வாங்கிண்டு வந்தே எனக்கு ஒண்ணும் வாங்கி வரல்லே. உன்னோடே நான் பேசமாட்டேன் போ" என்று சற்று உயர்ந்த குரலில் வெடுக்கென்று பேசிவிட்டு, நாலடி அப்பால் எடுத்து வைத்தாள் பேபி.

"பேசாப்போனால் போயேன், கழுதை!" என்று சொல்லிவிட்டு தர்மலிங்கம் சட்டையைக் கழற்றி வைக்கப் போய்விட்டார்.

பேபியின் மனம் முறிந்தது. தன் அப்பா அம்மாவுக்கு வேண்டியதை மட்டும் வாங்கி வந்தார்; தனக்கு வேண்டியதை வாங்கித் தரவில்லை என்கிற நிலையான எண்ணம்தான் அந்தப் பச்சைசயுள்ளத்தில் வேரூன்றி விட்டது.

இந்த சம்பவத்தை தர்மலிங்கமும் ஞானம்பாளும் வெகு சீக்கிரத்தில் மறந்து விட்டனர். ஆனால் குழந்தை பேபியோ மறக்கவேயில்லை. இந்த லாட்னப் பைத்தியம் நாளேற ஏற முற்றி விட்டது பேபிக்கு.

* * *

நாட்கள் பல சென்றன. அன்று ரத உற்சவம். வீதிகளில் எள்விழ இடமில்லை. சுற்றுப்பக்கத்திலிருந்த பல ஊர்களினின்றும் ஜனக்கூட்டம் வந்து கூடியது.

அந்தத் திருநாளுக்கென்றே தெருக்களில் பந்தல்கள் போட்டுப் பல கடைகள் ஏற்பட்டிருந்தன. ஒரு பக்கம் வளையல் கடை, அதற்கடுத்தாப்போல மஞ்சள் குங்குமக் கடை, அப்புறம் மிட்டாய்க் கடை; வெற்றிலை பாக்குக் கடை, தேங்காய்க் கடை; பொரி, அவல் கடலை விற்கும் கடை ஒரு பக்கம்; சட்டிப் பானைக் கடை வேறொரு பக்கம். இடையிடையே கூத்துக் கொட்டில்கள், மாஜிக், டான்ஸ், முதலியன நிகழ்பெறும் பொழுது போக்குப் பந்தல்கள். இவைகளையெல்லாம் தாண்டிக் கொஞ்சம் விசாலமான இடத்தில் அந்த ராட்டினம்—ரங்க ராட்டினம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. இத்தனை வைபவங்களும் தேரில் வரும் சுவாமிக்கு வேண்டியிருந்ததோ இல்லையோ தெரியாது. ஆனால் வந்திருந்த ஜனங்களுக்குமட்டும் போதவில்லை. மனித அலைகள் முன்னும் பின்னும் மோதி வர, தேர் ஒய்யாரமாக ஆடி அசைந்து வருவது ஜனசமுத்திரத்தில் ஒரு கப்பல் நகருவது போலக் காட்சியளித்தது.

இந்தக் கும்பலில் நகர்ந்து சென்றவர்களில் தர்மலிங்கமும் ஒருவர். அவர் பேபியைத் தூக்கிப் போட்டுக்கொண்டு கும்பலில் நின்றபடி ஸ்வாமி தரிசனம் பண்ணிக்கொண்டிருந்தார். தேர் தெற்கு மூலை திரும்பிற்று. அதாவது ஜன நெருக்கமும், கடைகள் வரிசையையும் தாண்டி சற்று விசாலமான திருப்பத்துக்கு வந்தது. அங்கேதான் ஒரு மூலையில் அந்த ரங்க ராட்டினம் சுற்றிக்கொண்டிருந்தது. கூட்டத்தோடு கூட்டமாய் இடிபட்டுக்கொண்டு வந்த தர்மலிங்கமும் பேபியுடன் அங்கு வந்து சேர்ந்தார். பேபியின் கண்ணில் பட்டது ரங்கராட்டினம். அவ்வளவுதான்! அதே சமயத்தில் "ஸார், ஸார்!" என்று கூப்பிட்டுக்கொண்டே தர்மலிங்கத்தின் வெளியூர் நண்பர் ஒருவர் அவரிடம் பேச வந்தார். அங்கே இடம் சற்று விசாலமாயிருக்கவே பேபியைக் கீழே விட்டுவிட்டு தர்மலிங்கம் வந்தவரது யோக க்ஷேமங்களை விசாரிக்கலானார். இருவரும் வெகு நேரம் பேசிக்கொண்டிருந்தனர். பிறகு நண்பர் விடைபெற்றுச் சென்றார். அப்புறம்தான் தர்மலிங்கத்துக்கு பேபியின் ஞாபகம் வந்தது. கீழே குனிந்து "பேபி!" என்றார். ஆனால் பேபியைக் காணோம். சுற்றுமுற்றும் பார்த்தார். பேபி இல்லை. "பேபீ! பேபீ!" என்று உரக்கக் கூப்பிட்டார் மீண்டும்.

"நான் வரமாட்டேன் போ!" என்று பதில் கிடைத்தது எதிர்வாடையிலிருந்து. குரல் வந்த திக்கில் திரும்பிப் பார்த்தார் தர்மலிங்கம். அந்த ரங்க ராட்டினத்தின் அருகே பேபி நின்றுகொண்டிருக்கிறாள்.

"எங்கேயடீ போய் விட்டாய் போக்கிரிக் கழுதை!" என்று உரக்க சொல்லிக்கொண்டேபோய் அவளைத் தூக்கிக்கொண்டார் தர்மலிங்கம்.

"அப்பா!"

"என்?"

"இந்த லாட்னம் வாங்கித் தரையா?"

"இந்த லாட்டினமா? இதை எப்படி வாங்க முடியும்? அசடு!" என்று கண்டித்து தூக்கிக்கொண்டு வீடு நோக்கி நடந்தார் தர்மலிங்கம்.

அவர் இடுப்பில் நிற்கவில்லை பேபி. கையையும் காலையும் உதைத்தாள். திமிறினாள். விரைத்துப் போவது போல கதறினாள். "லாட்னம், லாட்னம்" என்று புலம்பினாள். வழியில் எதிர்பட்டவர்களெல்லாம் "என்ன, என்ன" வென்று விசாரித்தனர். சிலர் "சின்ன பொம்மை ராட்டினம் இருக்கிறது வாங்கிக் கொடுங்கள்" என்றும் யோசனை கூறினார்கள். எப்படியோ தர்மலிங்கம் பேபியைச் சுமந்துகொண்டு வீடு வந்து சேருவது பிரம்மப் பிரயத்தனமாகிவிட்டது.

வீட்டுக்கு வரும்போதே பேபி அழுத அழுகையில் அவள் உடம்பு மழுவாய்க் கொதித்தது.

பேபியின் அழகான மயிர்ச் சுருள்கள் சடைபட்டுத் தலையணை மீது சிதறிக்கிடக்கின்றன. அவள் எடுப்பான நெற்றியின் அழகு தெரியாமல் ஏதோ பத்துப் போட்டிருக்கிறது. சற்று நேரத்துக்கொருமுறை அவள் கண்கள் திறக்கும்போது, அந்தக் கருவிழிகள் செறித்து வெறித்து அர்த்தமில்லாமல் 'மேட்டுவளை'யைப் பார்ப்பது பயங்கரமாக இருக்கிறது. அவள் படுத்திருக்கும கட்டிலுக்குப் பக்கத்தில் ஒரு நாற்காலிமீது கவலை தேக்கிய முகத்துடன் ஞானம்பாள் உட்கார்ந்திருக்கிறாள். அன்று ரத உற்சவத்தன்று கண்ட ஜுரம், இன்னும் விட்டபாடில்லை திடீர் திடீரென்று பேபி வெறித்துப் பார்ப்பதும், வாய் பினத்துவதும் ஞானம்பாளுக்குப் பயமாக இருந்தது. ஏதேதோ மருந்துகளைக் கொடுத்து வருகிறார். பக்கத்திலேயே இருந்தும் கவனித்துவருகிறாள். ஆனால் பலன்—?

அவள் கண்களினின்றும் கண்ணீர் பெருகிக்கொண்டிருந்தது. அப்போது பின்னாலிருந்த மேஜை மேல் டம் டம் டமுக்கு, டம் டம் டமுக்கு,......" என்று சப்தம் கேட்டது. சட்டென்று திரும்பிப் பார்த்தாள் ஞானம். தர்மலிங்கம் தான் அப்போதுதான் வாங்கிவந்த சின்ன பொம்மை ராட்டினத்தை விசை கொடுத்துச் சுற்ற விட்டுவிட்டு பேபியையே பார்த்த வண்ணம் நின்றார்.

அந்த மிருதுவான மேள ஓசை கேட்டுக் கண்ணை மூடியிருந்த பேபியும் விழித்தாள். வழக்கம் போல் அவள் வாய் பிதற்றலாயிற்று.

"இந்தாப்பா எங்கப்பா, காலணா தான் கொடுத்திருக்கார். இதை வாங்கிண்டு அந்த லாட்னத்தை எனக்குத் தரயா?......என்னாலே அதை தூக்கமுடியாதே. நீயே கொண்டுவந்து முத்தத்திலே வச்சுடரையா?......ஓஹோ சின்னவாளுக்குன்னு சின்ன லாட்னம் வேறே இருக்கா?...அதிலே ஏறிக்கொள்ள முடியாதே...ஆனா அது கூட நன்னா சுத்துமா? சரி அதைத்தான் வாங்கித்தாயேன் ..இந்தா காலணா...ஐயையோ, உன்னோடே வரமாட்டேன் நான்...அந்த லாட்னம்...லாட்னம்!

"பேபி!"

ஞானம்பாள் தர்மலிங்கம் இருவரும் அழைத்தார்கள்.

பேபி தலையைத் திருப்பினாள். "பேபி, இதோபார். உனக்கு ரங்க ராட்டினம்."

"லாட்னமா? எதோ?"

தர்மலிங்கம் ராட்டினத்தின் விசையை முடுக்கி அதை பேபியின் எதிரே வைத்தார். 'டம் டம் டமுக்கு,டம் டம் டமுக்கு..." "அட, சின்னலாட்னம்; சுத்தறதே, மேளம்கூட அடிக்கிறதே!"

"ஆமாம். இதோ பாரு; குதிரை, தொட்டில் எல்லாம் கூட இருக்கு" என்று குழைந்த குரலில் பேசினாள் ஞானம்பாள்.

"அப்பா, இந்த லாட்னம் எனக்குத்தானே! அம்மாவுக்கு இல்லையே" என்று கேட்டாள் தர்மலிங்கத்துடன். "உனக்குத் தான் இது பேபீ! வேறே யாருக்குமில்லே உனக்கேதான்" என்று உருக்கமாக பதிலளித்தார் தர்மலிங்கம்.

* * *

பேபி இப்போது நிம்மதியாகத் தூங்குகிறாள். அவளது ஒரு பக்கத்தில் அந்த ராட்டினத்துக் குதிரை சுற்றி வருகிறது. இன்னொரு பக்கத்தில் அவள் தாயின் மனக்குதிரை பழைய சம்பவங்களைச் சுற்றிச் சுற்றி வருகிறது!

கும்பகோணத்தில் நியூ ரெங்க விலாஸ் காபி ஹோட்டல்

பெரிய கடை தெருவு (பூக்கடை சமீபம்) : : பிரஞ்சு : ரயிலடி

ருசிகரமான டக்ஷணங்களுடன் குளிமை தரக்கூடிய பானங்களுடன் அமைக்கப்பட்டது.

ரயிலடி பிராஞ்சில் சாப்பாடு வசதியும் உண்டு

R. வியாஸாச்சாரியார்,
Proprietor.



வஸந்த ருதுவின் எல்லே.

இன்னும் சில தினங்களில் சூரியனின் வெப்பம் தாங்க முடியாமற் போய்விடும். எங்கள் சிறுதோட்டத்தில் செடிகளின் இலைகளைப் பார்க்கப் பரிதாபமாயிருந்தது. கடும் வெயிலில் தண்ணீரைத் தேடியலையும் நாயின் நாவை போல அந்த இலைகள் சோர்ந்து தொங்கிக்கொண்டிருந்தன.

அதோ! அாளிக் கிளையொன்று. பிறந்து பத்து தினங்களுக்குள் தாயைப் பறிகொடுத்த இளங் குழந்தையைப் போல ஓர் செவ்வரளிக்கொத்து தலை சாய்ந்து தொங்கிக்கொண்டிருந்தது.

உலர்ந்த மண்கட்டிகளின்மேல் ஓர் சுட்டெறும்பு இங்கும் அங்கும் ஓடிக்கொண்டிருந்தது. பல வருஷங்களாக வெய்யிலுக்கும் மழைக்கும் ஈடுகொடுத்துக் காய்ந்து நிற்கும் வீட்டின் மதில் சுவற்றை அந்த எறும்பு அடைந்தது.

அங்கே சுண்ணும்புப் பூச்சு உதிர்ந்து வெளியே தெரிந்த ஒரு செங்கல் விளிம்பில் ஓர் மெல்லிய இழையில் ஓர் புழுக்குட்டிதொங்கிக்கொண்டிருந்தது.

அவற்றின்மேல் ஏறலாமா வேண்டாமா என ஜோஸ்யம் பார்ப்பதுபோல காத்து நின்ற எறும்பு அந்தப்புழுக்குட்டியைப் பார்த்தது. குடுகுடு என்றந்த சுவற்றின் மேலேறி மினுமினுப்பாயிருந்த அந்தப் புழுக்குட்டியை மெதுவாகத் தன் முன்னங் காலால் தொட்டுப் பார்த்தது. அவஸ்தாந்தரத்திலிருந்த அந்த முதற் புழுவின் மேனி சிலிர்த்தது.

"என் தூக்கத்தை யார் கலைக்கிறார்கள்" என்று சொர்ப்பன உலகத்திலிருந்து புழு கேட்டது.

"நீ ஏன் விழித்துக்கொண்டு வேலை செய்யக்கூடாது. உலகத்தில் செய்யவேண்டிய அலுவல்கள் பல இருக்கும்போது இப்படி மண்ணுங்கட்டியைப்போல தூங்குகிறாயே. வெட்க மில்லையா?" என்று அதிக ஆவேசத்துடன் அந்த எறும்பு சொல்லிற்று.

"நல்லது, அப்படி தலைபோகிற வேலை என்ன செய்யக்கிடக்கிறது" என்று அந்தப் புழு கேட்டது.

"வேலையா? அட சோம்பேறி! ஓடலாம், அலையலாம், குழியைத் தோண்டலாம். மனிதனைக் கடிக்கலாம், ஏன் இன்னும் என்ன வெல்லாமோ செய்யலாமே!" என்று கூறிற்று எறும்பு. பேசும்போதே வெடுக்கு வெடுக்கென்று அருகிலிருந்த செங்கல்லைத் தன் கொடுக்கால் வெட்டிக் கொண்டே பேசியது அதன் சுறு சுறுப்பைக் காட்டியது.

சோம்பல் முறித்துக் கொண்டே அந்தப் புழு, "ஏன் பாடுபடணுமோ?" என்று கேட்டுவிட்டுத் திரும்பவும் தூங்கப் போய் விட்டது.

எறும்புக்குப் பிரமாதமாகக் கோபம் வந்து விட்டது.

"ஏனா? ஏன்! தூங்குமூஞ்சிக்கு அகங்காரத்தைப்பார். ஏனா? கடமைகளை அலுவல்களை நாம் செய்யாவிட்டால் உலகம் சுற்றி வருமா? நீயும் கெட்டு உலகத்தையும் கெடுக்கிறாயே சோம்பேறி" என்று இரைந்தது எறும்பு.

புழுவுக்குத் தூக்கம் கெட்டுப் போவதில் வருத்தம்தான். இருந்தாலும்.................................... "நான் தூங்கு மூஞ்சிதான். கிடக்கட்டும்: நீ சதா ஓடியலைகிறாயே. நீ என்ன சாதித்து விட்டாய் உலகத்துக்கு" என்று கேட்டது.

"நானா? பேஷ். நீ தூங்கிக் கொண்டேயிருந்தால் நான் செய்யும் வேலை உனக்கெப்படி தெரியப்போகிறது? நான் உலகத்திலேயே மிகவும் சுறு சுறுப்பாக வேலை செய்கிறவன். நான் ஒரு கணமேனும் வீணுக்குவதில்லை. எனக்கு ஓய்ச்சலே கிடையாது. நான் சதா உழைத்துக்கொண்டேயிருக்கிறவன் தான் என்று மனிதர் கூட ஸர்டிபிகேட் கொடுத்திருக்கிறார்கள். அது என்ன பிரமாதம்! சூர்யன் இருக்கிறானே சூர்யன், அவன் தனது வெளிச்சக் கதிர்களை வீசிக்கொண்டு காலையிலே வருகிறானா, வந்தவுடன் அவனுக்கு முந்தி உழைப்பில் நான் மும்முரமாயிருப்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறான் முன்னமே வந்து" என்று பீத்திக் கொண்டது.

சலிப்போடு புழு "நீயே னப்படி யுழைக்கிறாய்?" என்றது.

எறும்பு பெருமையோடு பதில் சொல்லிற்று. "அது என் கடமை. இந்த உலகம் நடப்பதற்கு நீயும் நானும் உதவுகிறோமென்றால் அதுவே ஒரு பெரிய காரியமல்லவா?"

"அப்படியானால் இப்படி ஓய்ச்சல் ஒழிவில்லாமல் ஓடியாடித் திரிவது உனக்கு மிகவும் இஷ்டமான வேலை யென்று சொல்."

"இஷ்டமா? எனக்கு அதைவிட வேண்டுவது வேறொன்றுமில்லை."

"அப்படியானால் ஏனிப்படி பெருமையடித்துக் கொள்கிறாய்? உனக்கு இஷ்டமானதை நீ செய்து கொண்டிருந்தாயானால், நீ சந்தோஷத்தைச்சம்பாதித்துக் கொள்கிறாய்! அவ்வளவுதானே. உலகம்—கடமை—ஓட வேண்டுமென்றெல்லாம் ஏன் கதை அளக்கின்றாய்!"

"அது மாத்திரமேயில்லை. நான் ஸ்ருஷ்டி கர்த்தாவின் ஆஞ்ஞையை நிறைவேற்றுகிறேன். ஓடியாடித் திரிவதற்காகவே நான் படைக்கப்பட்டிருக்கிறேன். நான் சந்தோஷப்படுவது மட்டுமல்ல, நான் ஜீவித்திருப்பதற்கும் அதுவே காரணம் தெரியுமா?"

எறும்பு பேசி முடிந்தவுடன் புழுவின் பதில் கிடைத்து விட்டது!

"ரொம்ப நல்லதாப் போச்சுது; நீ சொன்ன பேச்சு, எனக்கு சாதகமாயிருக்கிறது! எப்படியென்றால் தூங்குவதற்காகத் தான் கடவுள் என்னைப் படைத்திருக்கிறார். நான் தூங்குகிறேன், உலகம் ஜோராய் நடக்கிறது." இனி ஏதும் வாயால் சொல்லப்போவதில்லை என்பதற்கடையாளமாகப் புழு குறட்டை விட ஆரம்பித்துவிட்டது.

ஆனால் எறும்பா விட்டுவிடும்! ஒருபோதுமில்லை. "நீ பேசுவதெல்லாம் முட்டாள்தனம். உன்னுடைய சோம்பேறித்தனத்தை மறைக்கவே வேதாந்தம் பேசுகிறாய். உலகத்தில் எந்த ஒரு ஜந்துவும் வெறுமனே சூரிய வெப்பத்தில் தூங்கிக்கொண்டிருப்பதற்காக படைக்கப்படவில்லை" என்று சொல்லிற்று.

புழு நெளிந்து கொடுத்து சிரித்துக்கொண்டே, "உனக்கெப்படி அதுதெரியும்?" என்று கேட்டது.

எறும்பு சற்று தயக்கத்துடன் பதில் சொல்லிற்று. "மூளையை

பாக்குத்தூளில் நிகரற்றது "சந்திரா"

டிரேட் மார்க் CHANDRA SCENTED BETEL NUTS ரிஜிஸ்டர்ட்

பாக்குத்தூள்

தயாராகுமிடம் :—

நேஷனல் இண்டஸ்டிரியல் கம்பெனி,

8, கீழ அய்யன் தெரு, தும்பகோணம்.

எல்லா முக்ய ஊர்களிலும் கமிஷனிலோ, மாதச் சம்பளத்திற்கோ விற்பனை செய்ய ஏஜெண்டுகள் தேவை. விபரங்களுக்கும் சாம்பிள் பாக்கட்டுக்கும் மேற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

உபயோகித்துப்பார்த்தால் தெரிகிறது. நீ ஓடி யாடி வேலை செய்யாவிட்டால், நீ உயிர்வாழ்வதில்தான் என்னபயன்? இறப்பதேமேல்.''

"அடேடே. நீ ரொம்ப கெட்டிக்காரன்தானப்பா! உனக்கு எல்லாம் தெரியுமென்றும் ஸர்வக்ஞனென்றும் பாவனை செய்து கொள்ளுகிறாயே அது தான் தவறு. ஓட வேண்டியது உன் வேலை யென்று நினைத்து ஓட்டம் ஓட்டமாய் ஓடுகிறாய். நல்லது அப்படியே நீ செய்! ஆனால் என்னை மட்டும் தொந்தரவு செய்யாதே. சும்மா படுத்திருக்க வேண்டியது என் கடமை. நீ ஓடித் திரிவதால் பல அற்புதமான காரியங்களைச் சாதித்து விடுவதாகச் சொல்லுகிறாய். இருக்கலாம். ஆனால் நான் அசைவின்றி என் இந்தக் குரும்பைக்குள்ளிருப்பதாலேயே அதைவிட அதிசயமான காரியத்தை சாதிக்கிறேனென்பது உனக்குத் தெரியாது, போய்ட்டுவா—உன் வேலையைப்பாரப்பா. நான் தூங்கப்போகணும்'' என்று புழு சிரித்துக் கொண்டே சொல்லிற்று.

"தூக்கம்! தூக்கம்! எப்போதும் ஓரே தூக்கமா? எங்கேயாவது தூங்குவதால் உலகுக்கு அநுகூலமான காரியங்கள் செய்யப்பட்டதாகக் கேள்விப்பட்டிருக்கிறாயா?'' என்று எறும்பு கேட்டது. அதன் தொனியில் ஏளனம் நிரம்பி யிருந்தது.

"ஏனில்லை. எத்தனையோ காரியங்கள்'' என்று புழு நிதானமாகப் பதில் சொல்லிற்று.

"எதோ, ஒரு உதாரணம் சொல்லு என் செல்லமே!'' எறும்புக்கு சிரிப்பு அடக்க முடியவில்லை.

"அட அசடே! கனவுகள் என்று மகத்தான காரியங்களுண்டே அதுகளைப்பற்றி கேட்டதில்லையா நீ. தூங்கினால்தானே உனக்கு கனவைப்பற்றித் தெரியும்! ஐயோ பாவம் நீ ஓர் ஜன்மமா!'' என்று கூறிற்று. புழுவின் முகத்தில் புன்னகை தோன்றிற்று.

"ஆமாம் தூக்கத்திலே கனவு காணக் கூடும்தான். ஆனால் அந்தக் கனவுகளால் பிரயோஜனம் என்ன?'' என்று கேட்டது எறும்பு. எறும்புக்குக் கொஞ்சம் சுரம் குறைந்து வருவதுபோல் தோன்றிற்று பேச்சில்.

"அப்படி வா வழிக்கு, சொல்லுகிறேன். பிரயோஜனம், பிரயோஜனம் என்று என்னவோ சொல்கின்றாயே, அதை என்னவென்று எண்ணுகிறாய்? அது எனக்குத் தெரியணும். ஆனால் நான் சற்று நேரத்திற்கு முன் ஓர் அழகிய கனவு கண்டேன். அதை என்னவென்று சொல்லட்டுமா, நீ கேளு''

புழுவின் உடம்பு சந்தோஷத்தால் விம்மிற்று.

"அழகிய கனவா? ரொம்ப ரொம்ப பேஷ். உலர்ந்த சருகைப் போன்ற நீ அழகைக் குறித்துப் பேசுவது ஓர் அழகுதான்.'' அசூயை நிறைந்த கண்களுடன் அந்தப் புழுக்குட்டியை எறும்பு பார்த்தது.

"அவசரப்படாதே. அழகிய கனவொன்றுதானே சொன்னேன். யார் கண்டார்கள்? (எறும்பை மறந்துவிட்டு புழு தனக்குத்தானே பேசிக்கொள்ளுவதுபோல் தோன்றிற்று) பாயில் கிடக்கிறவன் பாயிலேயே கிடக்கிறானா, தரையில் கிடக்கிறவன் தரையிலேயே கிடக்கிறானா? எல்லாம் கனவுதான். இருந்தாலும் எவ்வளவு அழகிய ஆனந்தமான கனவு. நான் இருண்ட என் குரம்பையை விட்டு வெளிவந்தேன். என்ன அதிசயம்! பல புஷ்பங்களின் அழகு என் சிறகுகளில் பதிந்திருந்தது தேவலோகத்து சிருஷ்டியைப்போலிருந்தது. என் இறக்கையை விரித்து சூரியனை நோக்கிப் பறந்து போனேன், என்ன ஆனந்தப்பயணம்! அடடா! இத்தகைய கனவு காண்பதற்கு எத்தனைத்தடவை வேணுமானாலும் தூங்கலாமே!''

"உனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதுபோ லிருக்கிறது'' என்று எறும்பு கேலி செய்யும் தோரணையில் சொல்லிற்று. ஆனால், புழு பதிலளிக்கவில்லை. பல தடவை அந்தக் குரம்பையை எறும்பு ஆட்டிப்பார்த்தது. ஆனால் உயிரற்ற சவம்போல் புழு அசைவின்றி ஆனந்த நித்திரையில் அமுந்தி யிருந்தது.

"அசங்கியப் பிராணியே! நீயும் உன்கனவுகளும்நாசமாகிப்போக! அப்பா என்ன அபூர்வமான கனவு இந்த அவலக்ஷண ஜந்துவுக்கு! புஷ்பங்களின் அழகாம், ஜோதிமயமான இறக்கைகளோடு சூரியனை நோக்கி இந்த அவலட்சணம் பறக்கிறதாம்!'' இப்படி நினைக்கும்போது எறும்புக்குத் தன்னை யறியாமல் சிரிப்பு வந்தது.

சுவற்றிலிருந்து ஒரே ஓட்டமாய்க் கீழே இறங்கி பல மேடு பள்ளங்களில் எறும்பு திரிந்து கொண்டிருந்தது. நாட்கள் பல கழிந்தன. அடிக்கடி எறும்பு புழுக் குரம்பை யண்டை வந்து அதிக அலக்ஷியமாக அதைப் பார்க்கும். அசைக்கவும் அசைக்கும். ஆனால் புழு ஒன்றையும் லக்ஷியம் செய்யவேயில்லை. தூங்கிக்கொண்டே யிருந்தது.

ஒருநாள் எறும்புவந்து பார்த்தபோது புழுக்குரம்பை உடைந்து காலியாயிருந்தது.

ஆகாயத்தை அலங்கரிப்பது — சந்திரன்
தடாகத்தை அலங்கரிப்பது — தாமரை
குடும்ப வாழ்க்கையை அலங்கரிப்பது — "இந்தியா லைப் பாலிஸி"

சீரான நிர்வாகம் சிக்கன செலவு உன்னத முன்னேற்றம்
உண்மையான தேச சேவை உறுதியான செக்யூரிடி

இவை யாவும் அமைந்தது

இந்தியா லைப் பெனிபிட் அஷ்யூரென்ஸ் சொஸைடி, லிமிடெட்

தலைமை ஆபீசு: **கோயமுத்தூர்.**

தென் இந்தியாவில் ஓங்கி வளரும் ஓர் உன்னத இன்ஷூரென்ஸ் கம்பெனி

இன்ஷ்யூர் செய்து கொள்ளுங்கள் | பிரதிநிதித்துவம் பெறுங்கள்

ஸ்ரீ ராவ்பகதூர் ராமச்சந்திர செட்டியார், B. A., B. L., F.R.G.S. (London) சேர்மன்

ஸ்ரீ எம். எஸ். பழனியப்ப முதலியார், B.A., மானேஜிங் டைரெக்டர்

சமீபத்தில் நல்ல போனஸ் பாலிஸிதாரர்களுக்குக் கொடுக்கப்படும்

கிளை ஆபீஸ்கள்:

26, பைகிராப்ட்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி, சென்னை. **102/1, கிளைவ் தெரு, கல்கத்தா.**

"உம்! ஒன்றுமே யில்லை. நானும் அப்படித்தான் நினைத்தேன். இப்படித் தூங்கினால் யார்தான் சாகமாட்டார்கள்? இந்த அசுத்த வாழ்விலே அதற்கு என்ன செருக்கு இருந்ததடியம்மா! அவலக்ஷணம் பிடித்த ஆபாசப் புழு!" என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டது.

அப்பொழுது ஒரு பூங் கொத்தில் அழகாக அமர்ந்திருந்த வண்ணாத்திப பூச்சி சிறகை படபடவென் றடித்துக்கொண்டது. எறும்பு அண்ணாந்து பார்த்தது. அதன் அழகிய இறக்கைகள் பல புஷ்பங்களின் இதழ்களைச் சேர்த்து ஜோடித்ததுபோல சூரிய வெளிச்சத்தில் பிரகாசித்தன. எந்த தேசத்து ராணியோ இவள் என்று நினைத்தது எறும்பு.

"என்ன நீங்கள் ஏதாவது கேட்டீர்களா?" என்று சற்று அச்சத்துடன் எறும்பு அந்த வண்ணாத்திப் பூச்சியைக் கேட்டது.

"ஒன்றுமில்லை. பழையசினேகிதனுயிற்றே என்று கைதட்டிக் கூப்பிட்டேன்" என்று சிரித்துக்கொண்டே வண்ணாத்திப் பூச்சி சொல்லிற்று.

"ஓஹோ, சரிதான் நீங்கள் ஸ்நேகிதரா? ஆனால் தங்களை எனக்குத் தெரியவிலலையே."

"அடடே உனக்கு எல்லாம் தெரியுமென்றல்லவா நினைத்தேன்," என்று 'களுக்' கென்று சிரித்தது. அதன்பின் வண்ணாத்திப் பூச்சி சொல்லிற்று.

"அப்படி யெல்லா மொன்றுமில்லை. தங்களை முன்னால் சந்தித்திருப்பதாக ஞாபக மில்லாவிட்டாலும், இப்பொழுது தாங்கள் சொன்னால் கேட்டு சந்தோஷப்படுவேன்" என்று எறும்பு சற்று தாழ்மையாகவே பதிலளித்தது.

"நாம் இருவரும் சில தினங்களுக்குமுன் சம்பாஷிக்க வில்லையா? நீ கூட நான் சோம்பேறி யென்றும், சதா தூங்கி வழிகிறேன் என்றும் இகழ்ந்தாயே, அதற்குள்ளேயா மறந்துபோய் விட்டது." என்று வண்ணாத்திப் பூச்சி கேட்டது.

"அதுவா? ஒருநாள் நான் அந்த செத்துப்போன புழுவினிடமல்லவா அப்படிப் பேசிகொண்டிருந்தேன். அப்பொழுது தாங்கள் எங்கிருந்தீர்கள்" என்று அங்கு கிடந்த எறும்பு புழுக் கூரம்பையைச் சுட்டிக்காட்டிறறு.

"ஞாபகம் வந்ததா ரொம்ப சரி. நான்தான் அந்தப் புழு!!!" இப்படி சொல்லிக்கொண்டே அது சூரியனை நோக்கி தன் அழகிய இறக்கைகளை விரித்துக் கொண்டு பறந்துபோயிற்று.

"என்ன அநியாயம்! இவ்வளவு அழகிய ராணியான வண்ணாத்திப் பூச்சிக்கு உண்மை சொல்லத் தெரியவில்லையே, போயும் போயும் இப்படியா பொய் சொல்லுணும்!" என்று எறும்பு தனக்குத்தானே சொல்லிக்கொண்டது.

ஆபரேஷன் இல்லாமலே 2,000 பேர்கள் இம்மருந்தை சாப்பிட்டு குணம அடைந்து இருக்கிறார்கள். ஐந்து வருடங்கள் ஆராய்ச்சி செய்து கண்டு பிடித்த கைகண்ட மருந்து. ஆபரேஷன் இல்லாமலே தொண்டையில் சதை வளரும் வியாதியை

டான்ஸினல்

(ரிஜிஸ்டர்டு)

ஆச்சரியமான நிவாரணியாகும்

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்

TONSINOL

TONSINOL ஏஜண்டுகள் தேவை

விவரங்களுக்கு:

டான்ஸினல் லெபொரேடரி

53, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, சென்னை

TRADE "TET" MARK

FOR TOOTHACHE

"டெட்"

எல்லாவிதமான பல் நோய்களையும் வெகு எளிதில் போக்கும்.

டெட் என்பது வெறும் பற்பொடி அல்ல. ஈறுகளின் நரம்புகளின் மூலம் வேலை செய்து பற்களை வெண்மையாகச் செய்யவும், கரைந்துபோன ஈறு புதிதாக வளரச் செய்யவும் கூடிய அபூர்வ சக்தி வாய்ந்த ஓர் ஆச்சரியமான ஔஷதம்.

தீரும் வியாதிகள் :—

1. பயோரியா (Pyorrhoea) என்ற ஈரில் சீழ்வடிதல்
2. பல்வலி
3. ஈறு கரைதல்
4. தந்தவாயு
5. பல் புழு, சொத்தைப் பல்
6. வாய்ப் புண் துற்நாற்றம்.
7. பல் ஆட்டம், அசைவு
8. தாள் வீக்கம்
9. பல் கூச்சல்
10. பல் தேய்தல் முதலியவைகளுக்கும் கைக்ண்ட மருந்து.

ஒரு தரம் உபயோகித்துப் பாருங்கள்.

எல்லா ஊர்களிலும் டிபாசிட்டுடன் ஏஜண்டுகள் தேவை.

Tet Manufacturing Co., Negapatam.

பஞ்சவர்ணக் கிளி

இ. என். சடகோபன் பீ. ஏ.
எழுதியது

பாடலீப்ரத்தில் அன்று நடந்த விருந்து போல் எப்பொழுதுமே நடந்ததில்லை. பெரிய பெரிய தலைவர்களும், சேனாதிபதிகளும் பலிஷ்டர்களும் அங்கு கூடியிருந்தனர். எங்கும் ஒரே கோலாகலமாயிருந்தது. ஆனால் விருந்துக்கு அதிபதியான நாகேந்திரன் முகத்தில் மட்டும், அங்கு தாண்டவம் போட்டுக்கொண்டிருந்த சந்தோஷத்தின் திவலையைக்கூடக் காணோம். காரணம் அவன் எதிர்பார்த்த வஸ்து அங்கு காணாததால் தான்.

அவன் எதிர்பார்த்தது ஓர் இளம் பெண்தான். வனமாலினி உண்மையில் பேரழகி. அவன் யாருக்காக அந்த விருந்தை நடத்தினானோ, யாருக்காக இவ்வளவு கோலாகலத்தையும் சிருஷ்டித்தானோ அவள் மட்டும் வரவில்லை. அதற்குக்கூட அவள் எட்டிப் பார்க்காததைக் கண்டபோது அவன் மனம் அனலிடைப் புழுவாய்த் துடித்தது.

இந்த விருந்துக்காக அவனது செல்வத்தில் முக்கால் வாசி போய் விட்டதைப் பற்றிக்கூட அவன் கவலைப்படவில்லை. அவள் வந்திருந்தால் போதும்; தனக்கு இகலோகத்தில் கிடைக்கவேண்டிய இன்பம் கிடைத்துவிட்டது என்றே எண்ணியிருப்பான்.

நாகேந்திரனைப் பாடலீபுரத்தில் அறியாதவர் யாரிருக்கிறார்கள்? அவன் மகாவீரன். மஹா செல்வந்தன்.

தான் பெற்ற வெற்றியைச் சாக்காக வைத்துக் கொண்டு தனது காதலி தன்னைப் பாராட்ட வேண்டும் என்ற கருத்துடனேயே இந்த விருந்தை நடத்தினான்.

வீராதிவீரனானாலென்ன? பெண்மையின் முன்பு தாழ்ந்துவிட்டான். பாடலீபுரத்து அழகிகளுக்கெல்லாம் அழகியான வனமாலினிமீது அவன் கண் திருஷ்டி விழுந்தது. அவள் நோக்கத்தைக் கவர, அவன் நடத்திய விருந்துகளும், மல் யுத்தங்களும், வாட்போர்களும் கொஞ்சமல்ல. கனவும் காதலும்செய்து முடிக்காத காரியம் எதுவுமே இல்லையல்லவா? ஆடம்பரமாக நடந்த அந்த விருந்துதான் அவன் அளிக்கும் கடைசி விருந்தாக இருந்தது. மறு வாரமே ஓட்டாண்டியாகிவிட்டான் அவன். அவனுடன் எஞ்சி நின்றது அவன் அது வரையில் வளர்த்து வந்த ஒரு பஞ்சவர்ணக் கிளியே யாகும். வெட்கமுற்று, தரித்திரத்தினால் வெறுப்புற்று அருகிலிருந்த ஒரு கிராமத்திற்குச் சென்று வசிக்கலானான் நாகேந்திரன். அவன் வறுமையில் வீரத்தை மறந்தான். வாழ்க்கையின் இலட்சியங்களை மறந்தான்; ஆனால் அந்தக் காதலை மட்டும் அவன் மறக்கவில்லை.

நாகேந்திரன் ஆண்டியாகப் போனதற்கு வனமாலினி காரணம் என்று சொல்லவே முடியாது. அவள் அழகின் அவதாரம். அறிவின் களஞ்சியம். அவள் மற்றொருவனின் கிரக லக்ஷ்மியாக இருந்தாள். போதாதற்கு அவளுக்கு ஒரு மகனும் இருந்தான். இந்த நிலையில் தன்மீது கண் போடும் ஒரு அந்நியனை கண்ணெடுத்தும் பார்க்கவில்லை. பதிதுரோகம் செய்யாதவளை குற்றவாளி என்று யார் சொல்ல முடியும்?

* * *

நாகேந்திரன் கிராமத்திற்குச் சென்று சரியாக ஒரு வருஷமாயிற்று. அதே தினத்தன்று வனமாலினி விதியின் பயனால் விதவையானாள். கணவனில்லாத அவளுக்கு இனி பட்டண வாழ்க்கை எதற்கு? அவளும் ஒரு கிராமத்திற்கு தன் மகனுடன்வந்து வசிக்கலானாள். ஆனால் வனமாலினி வசிக்கும் கிராமத்திற்கும், நாகேந்திரன் கிராமத்திற்கும் இடையே உள்ள தூரம் கொஞ்சமாகவே இருந்தது.

வனமாலினியின் மகன் மகேந்திரனோ விளையாட்டிலேயே காலத்தைக் கழிப்பவன். எப்படியோ அவன் நாகேந்திரனுக்கு நண்பனாய் விட்டான். யானை ஏற்றம், குதிரை ஏற்றம் முதலியவைகளை நாகேந்திரனே அவனுக்குச் சொல்லிக் கொடுத்து வந்தான். மகேந்திரனுக்கோ இவ்வளவு சுற்றுக்காண்டும் ஏதோ ஒரே ஒரு பொருள் மீது மட்டும் அவனுக்கு ஆசை அதிகமாய் விட்டது. அதுதான் நாகேந்திரனின் பஞ்சவர்ணக்கிளி. அதை எப்படியாவது தனதாக்கிக் கொண்டுவிட வேண்டுமென்று அவன் தீர்மானித்து விட்டான். ஆனால் அதை எப்படி அடைவது? நாகேந்திரனையே நேரில் கேட்டு வாங்கவும் அவன் மனம் துணியவில்லை. நாகேந்திரன் பஞ்சவர்ணக்கிளி மீது தன் உயிரையே வைத்திருக்கிறான் என்பதை அவன் நன்றாக அறிவான். அதனால் அவனிடம் இதைப்பற்றிப் பிரஸ்தாபிக்கவும் அஞ்சினான்.

நாளுக்கு நாள் இந்தப் பஞ்சவர்ணக்கிளி மோஹம் மஹேந்திரனிடம் அதிகமாய் விட்டது. இதே ஏக்கத்தினால் இரவு பகல் தூக்கமின்றி கடைசியில் நோயாகப் படுத்து விட்டான். இரவு ஜுரத்தின் மிகுதியால் 'பஞ்சவர்ணக் கிளியே! என் கிளி... ஹூஹூம்... ...என்னுடையதல்ல' என்று வாய் பிதற்றினான் மஹேந்திரன்.

வனமாலினி இதைக் கேட்டதும், தன் மகன் யாரிடமோ காதல் கொண்டுள்ளான் என்று தீர்மானித்துக் கலங்கலானாள். எதற்கும் நேரில் கேட்டு விசாரித்து விடலாம் என்று எண்ணி 'மகேந்திரா, உனக்கு' யார் மேல் ஆசை? ஏன் இப்படிப் பிதற்றுகிறாய், உள்ளதைச் சொல்' என்று அழுத கண்ணீருடன் கேட்டாள். மகேந்திரன், நாகேந்திரனது கிளிமீது தான் கொண்ட ஆசையைச் சொல்லி, அது கிடைக்காவிட்டால் தான் பிழைப்பது துர்லபம் என்று கூறிவிட்டான்.

இதைக் கேட்டதும் வனமாலினி திகைத்துப் போய்விட்டாள். 'எப்படி அவனைப் போய்க் கேட்பது' என்று பலகாலும் ஏக்கம் கொண்டாள் அவள். நாட்கள் அதிகமாக ஆக, பையனின் ஜுரமும் அதிகமாயிற்று. முடிவாக அவள் ஒரு முடிவுக்கு வந்து ஒரு சிநேகிதையுடன் நாகேந்திரன் வீட்டிற்குச் சென்றாள்.

* * *

நாகேந்திரனால் ஒரு நிமிஷம் தன் கண்களையே நம்ப முடியவில்லை. தன் ஆஸ்தி முழுதும் போனாலும் தன் ஆயுள் முடிவதற்குள் ஒருதரம் தரிசனம் தந்து நின்ற அந்த சுந்தரியைக் கண்டதும் அவன் மெய்மறந்து விட்டான்.

வனமாலினி மெதுவாக 'நாகேந்திரரே? இன்று காலை உம்முடன் போஜனம் செய்துவிட்டுத்தான் இங்கிருந்து கிளம்பப் போகிறோம்?' என்றாள்.

நாகேந்திரன் மனம் திடுக்கென்றது. அவன் உள்ளம் அப்படியே உறைந்து போய்விட்டது. ஆஸ்தி எல்லாம் அழித்து வைத்த விருந்துகள் ஒன்றிற்குக்கூட எட்டிப் பார்க்காத அவள், இப்போது பரம ஏழையாய் இருக்கும்போது போஜனமருந்த வந்திருக்கிறாளே! என்பதை நினைத்து அவன் கருத்தில் கண்ணீர் புரண்டோடியது. தன் வருத்தத்தை மறைத்துக் கொண்டு அவர்கள் ஆகாரத்திற்கு வேண்டியவைகளைக் கவனிக்க உள்ளே சென்றான்.

உள்ளே சென்றால் அங்கு என்ன இருக்கிறது? ஒன்றுமில்லை. காட்டுக்குப்போய் எதையாவது கொண்டு வந்து சமைக்கலாமென்றால் அதற்கும் நேரமாகிவிடும். மோஹனாங்கி பசியினால் தவிப்பாளே என்று எண்ணிப் பார்த்தான். என்ன செய்வதென ஒன்றும் தோன்றாது ஏங்கிக் கிடக்கும் போது பஞ்ச வர்ணக்கிளி திடீரென்று கொஞ்சவாரம்பித்தது. அதைக் கேட்டதும் நாகேந்திரன் கண்கள் கிளியின்மேல் சென்றன. அதையே உற்றுப் பார்த்தான். அதன் கொழுத்த உடல் ஓர் எண்ணத்தை இவன் மனத்தில் உண்டாக்கியது. 'இந்தக் கிளி இரண்டு பேர்களுக்கு நல்ல உணவாகுமே' என்ற எண்ணம்தான் அவன் மனதில் வந்தது. அதே சமயம் தனக்கு முடிவைத் தேடவிருக்கும் அவனிடம் குழந்தையுள்ளத்துடன் மறுபடியும் கொஞ்சவாரம்பித்தது. "என்ன சந்தேகம் நானிருக்கும் போது? உனக்கென்ன வருத்தமோ? இதோபார், என் உடல் அவர்களுக்கு உணவாகாதா?" என்ற கொஞ்சல் மொழிகளில் அது சொன்னதோ என்னவோ?

தான் வளர்த்து, தான் காதலித்த கிளியை உணவுக்காக் கொல்வதா? ...ஆனால் வேறு வழியில்லை. காதலி பசியினால் தவிக்கிறாள்!...மனதை இரும்பாக்கிக் கொண்டான். மறுநிமிஷம் கிளியின் கழுத்தை முறித்தான். அதன் சிறகு ஒன்றைஎடுத்து அதன் ரத்தத்தில் தோய்த்து அதன் ஞாபகார்த்தமாக அதைசேமித்து வைத்துக் கொண்டான்.

வனமாலினிக்கும், தோழிக்கும், தான் செய்த உணவை இட்டு அன்போடும் பறிமாறினான். தனது அன்பின் உருவத்தை, தனது அன்பின் உயிராக இருந்த ஒன்றை, தனது காதலுக்குப் பாத்திரமான ஒருத்தி உணவாகக் கொள்வதை காண அவன் மனம் வெடித்துவிடும் போலிருந்தது.

போஜனம் முடிந்த பின், தாம்பூலம் தரித்துக்கொள்கையில் வனமாலினி தன் கருத்தை மெதுவாக வெளியிடலானாள் :— "நாகேந்திரரே, நீர் என்மீது மோகம் கொண்டு, நாசம்செய்த பணத்திற்கு கணக்கே இல்லை. நான்தான், உம் செல்வத்திற்கெல்லாம் எமன்; உமது கடைசி சொத்திற்கும் 'நமனாக இருப்பது என் தலைவிதிதான். என் மகன், உமக்குத்தான் தெரியுமே மஹேந்திரன், உம் பஞ்சவர்ணக் கிளியின் மேல் ஆசைப்பட்டு படுத்த படுக்கையாகக் கிடக்கிறான். அதை என்னிடம் கொடுத்து, என் மகனுக்கு உயிர் அளிக்குமாறு வேண்டுகிறேன்."

இதைக் கேட்டதும் நாகேந்திரன் இடிவிழுந்தவன்போலானான். அவனால் பேச முடியவில்லை. நா எழவில்லை. பேச ஆரம்பிக்கும் போது, துக்கம் அவன் தொண்டையை அடைத்துக் கொண்டது. 'ஓ' வென்று அழுதான்.

வனமாலினியோ விழித்தாள். "நாகேந்திரரே, இதற்காக வருந்த வேண்டாம். என் மகன் மாளட்டும். பரவாயில்லை" என்று கலங்கும் கண்களுடன் கூறினாள்.

இச் சொற்கள், வெந்த புண்ணில் வேலைச் செலுத்துவதுபோல் அவன் காதில் நுழைந்தன. ஆதலால், மனதைச் சாந்தப்படுத்த வேண்டி சொன்ன வனமாலினியின் வார்த்தைகள் அவன் அழுகையை அதிகப் படுத்தியதே தவிர குறைக்கவில்லை. அவளுக்கு, என்ன செய்வது என்று புரியவேயில்லை.

நாகேந்திரன், சற்று மனதைத் திடப்படுத்திக் கொண்டு பேச ஆரம்பித்தான். "அம்மா, உன் மேல் என் மனம் சென்றது முதல், லக்ஷ்மி என்னைப் படுத்திய சித்ரவதையை சொல்லி முடியாது. அவள், இப்பொழுது ஏற்படுத்திய காயத்தின் முன் மற்றவைகள் மறைந்தே யாகவேண்டும். நான் வைத்த விருந்துகளுக்கு நீ வரவேயில்லை. இப்பொழுது, வந்தாய்; உனது சாப்பாட்டிற்குத் தகுந்த உணவு அகப்படாததால், இன்று காலையில்தான், கிளியைக்கொன்று அமுதாக்கினேன் : இதோ பாருங்கள், அதன் சிறகு." என்று சொல்லிக்கொண்டே கண்ணீரால் நனைக்கப்பட்ட அதைக் காண்பித்தான்.

வனமாலினியின் தலைசுழன்றது. மறு நிமிஷம் மூன்று ஆத்மாக்கள் விண்ணகத்தை நோக்கிச் சென்றன.

ஆண்டவன் நகைத்தான்.

'அம்பிகாபதி'யில்

தமிழ் பட - - டைரக்டர்கள்

(ம. க. த.)

ஸ்ரீ ராஜா சாண்டோ

"......ரொம்ப பொல்லாதவ ராமே! நடிகர், நடிகைகளை உதைப்பாராம்! திட்டுவாராம்! அடேயப்பா, இவரிடம் நடிப்பது பெரிய கஷ்டமாம்" என்று ஒரு பொதுவான வீண் புரளி தமிழ் நாட்டில் இருந்து வருகிறது. ஆனால் உண்மையில் நாம் காண்பது யாரைத் தெரியுமா? ஒரு பச்சைக் குழந்தையின் உள்ளத்தை தான். ஆம்! சினிமா உலகத்தில், கள்ளம், கபடம், ஏமாற்று, சூது, வாது வஞ்சனைகளற்ற ஒரே ஒரு மனிதர் டைரக்டர் ராஜா சாண்டோ தான்.

அரசியல் உலகத்துக்கு ஸ்ரீ எஸ். சத்தியமூர்த்தியை அளித்த புதுக்கோட்டையே சினிமா உலகத்துக்கு ஸ்ரீ ராஜாவை அளித்திருக்கிறது.

ஒரு பெரிய டாக்டரின் புதல்வராய்ப் பிறந்த இவர், இளமையில் 'சர்க்கஸ் நக்ஷத்திரமாக' சில வருஷங்கள் மிளிர்ந்து, பின்னர் சினிமா நக்ஷத்திரமானார்.

பல வருஷங்கள் பம்பாய் சினிமா உலகத்திலேயே இவர் காலம் கழித்து வந்தார்.

டைரக்டர் ராஜா சாண்டோவுக்கு ஒரு டைரக்டர் என்பதை விட, ஒரு முதல்தரமான, ஒப்புவமையற்ற ஒரு நடிகர் என்ற பெரும் புகழை அவரை நன்கு அறிந்தவர்கள் அளிக்கத் தயங்கவோ, தவறவோ மாட்டார்கள்.

தமிழ்ச் சினிமா உலகத்தில் நடிப்புக் கலையைப் போதிப்பதில் வல்லவர் ஸ்ரீ ராஜா சாண்டோ ஒருவர் தான். இவர் ஒத்திகைகளிலும், செட்டிலும் நடித்துக் காட்டும்போது நாம் மெய் மறந்து சிரிப்போம், அழுவோம், சீறுவோம், சிங்கம் போல் கொதித் தெழுவோம். 'கம்பன் வீட்டுக்கட்டுத்தறியும் கவிபாடும்' என்பதைப் போல, ஸ்ரீ ராஜா வீட்டுக் கல்லும் மண்ணும்கூட கசிந்துருகி நடிக்கும்.

கொஞ்ச காலம் சென்னை 'அஸோஸியேடட் பிலிம்ஸ்' ஸ்ரீ ராஜாவின் மேற் பார்வையிலிருந்து வந்தது. (அப்போது மௌனப்பட காலந்தான்) ஸ்ரீ கே. சுப்பிரமணியமும் அந்த



'பக்த அருணகிரி'யில்

சமயத்தில்தான் ஸ்ரீ. ராஜாவிடம் டைரக்ஷனில் பயிற்சி பெற்றார். மறுபடியும் ராஜா பம்பாய் சென்றார்.

முடிவாக இவரைத் தமிழ் தமிழ் நாட்டுக்குக் கொண்டுவந்தது 'மேனகா'தான். அதிலிருந்து இவர் வரிசையாக பல தமிழ்ப் படங்களை டைரக்ட் செய்திருக்கிறார்.

ராஜா எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு தீவிரமான அரசியல் பித்தர். அரசியலைப்பற்றி இவர் தமது நண்பர்களுடன் ஒண்ணாந்தர விவாதங்களை நடத்தும்போது, பழுத்த அரசியல் மேடைப் பிரசங்கிகள் கூட கொஞ்சம் அசைந்து போக வேண்டியதுதான்.

இந்த அகில இந்திய டைரக்டர்—நடிகர் இதுவரையிலும் சுமார் 50-க்கு மேற்பட்ட ஹிந்தி—தமிழ்ப் படங்களில் நடித்திருக்கிறார். இவற்றில் முக்கால்வாசியை டைரக்டும் செய்திருக்கிறார்.

இவரைப் பற்றிச் சொல்லும்போது இவரின் உதவியாளராகவுள்ள திருச்சி ஸ்ரீ. டி. கே. மாரியப்பனையும் இந்த சமயம் குறிப்பிடாமலிருக்க முடியாது. நிறைந்த விஷய ஞானமுள்ள உதவி டைரக்டர் ஸ்ரீ. மாரியப்பனை சரியானபடி வர்ணிக்கவேண்டுமானால், 'கல்கிணற்றுக்கேற்ற இரும்புத் தோண்டி' என்றே சொல்லவேண்டும்.

ஸ்ரீ. கே. சுப்பிரமணியம்

'ஆஹா...ஹா'...என்ன போங்கள் சார்! குழந்தையாவது, குழந்தை, அது என்னமா ஆக்ட் பண்றது........எல்லாம் அந்த ஆசாமியின் வேலை சார் வேலை" என்று யாராவது சொல்லும் போது, அந்த ஆசாமி, டைரக்டர் ஸ்ரீ. கே. சுப்பிரமண்யம் பி. ஏ. பி. எல். தான் என்பதை நீங்கள் நிச்சயமாய் முடிவு செய்து விடலாம்.

தமிழ்ப் பட டைரக்டர்களில் இந்த 'டிகிரி' யுடையவர்கள் வெகு சிலரே.

டைரக்டர் ஸ்ரீ. கே. சுப்பிரமண்யம் முகத்தில் எப்போதும் புன்னகை கொஞ்சிக்கொண்டேயிருக்கும்.

இவர் இன்று தமிழ் நாட்டின் தலைசிறந்த டைரக்டர்களில் ஒருவராய் விளங்குகிறார். பொது ஜனங்களுக்கு இன்னதுதான் வேண்டும், இதைத்தான் அவர்கள் கேட்கிறார்கள் என்பதை நன்றாய் அறிந்துகொண்டு, அவர்களைத் திருப்திப் படுத்தும் வகையில் நாளது வரையில் படங்களை அளித்துக் கொண்டு வந்திருக்கிறார் இவர்.

பெரிய பெரிய நடிகர்களையும், நடிகைகளையும் 'கன்ட்ரோல்' செய்வது பிரமாதமில்லை. ஆனால் குழந்தைகளைக் 'கட்டி மேய்த்து' அவைகளின் மூலம் இந்திர மஹேந்திர ஜாலங்களை சினிமா உலகத்தில் சிருஷ்டிக்கக் கூடியவர்கள் இந்தியாவில் இப்போது யாராவது இருக்கிறார்களா வென்றால், அவர் டைரக்டர் ஸ்ரீ. கே. சுப்பிரமணியம் தான்.

இவர், பல படங்களைத் தமிழ் நாட்டுக்கு அளித்துள்ளார். இன்று தமிழ் நாட்டில் நிகரற்ற சினிமா நக்ஷத்திரமாக ஜ்வலிக்கும் ஸ்ரீ. தியாகராஜ பாகவதரை முதல்

'அதிர்ஷ்டத்தில்'

முதலில் டைரக்ட் செய்தவரும் இவரே. அடுத்தபடி சினிமா ரஸிகர்களின் 'மனோரஞ்சிதமான' எஸ். டி. சுப்புலக்ஷ்மியையும் இவர்தான் இன்றைய மேன்மையான நிலைக்குக் கொண்டுவந்தார்.

தனது தொழில் சம்பந்தமான எதிரிகளிடம் கொஞ்சம்கூட மனத்தாங்கலை வெளிக்குக் காட்டாமல் நடந்து கொள்வதில் ஸ்ரீ கே. சுப்பிரமண்யம் ஈடற்றவர். இதை இவர் ஒரு 'கலை'யாகக்கூடப் பயின்றிருக்கிறாரோ வென்று பலர் சந்தேகிக்கவும் கூடும்....ஆனால் இந்த சந்தேகம் சந்தேகமாகவே இருக்க வேண்டுமென்பதே எனது ஆசை.

ஸ்ரீ எல்லிஸ் ஆர். டங்கன்

'இது எப்படி? அது எப்படி சாத்தியம்? எதற்காக, இவர்கள் இப்படிச் செத்துப் போகவேண்டும்? இந்தப் பாத்திரங்கள் ஏன் இவ்வளவு லேசாகவும் கோளாறாகவும் சித்தரிக்கப் பட்டிருக்கிறது?" என்று கேள்வி ஸ்வரூபமாக விளங்குபவர் ஸ்ரீ எல்லிஸ் ஆர். டங்கன்.

ஸ்ரீ டங்கன் தமிழ்ப் பட உலகத்து அடிமைகளால் (முதலாளிகள் மன்னிப்பார்களாக) துரை என்று அழைக்கப்படுகிறார். இந்தத் துரை அமெரிக்காவில் பிறந்தவர். மிகமிக நல்ல மனிதர். ஆளும் வாட்ட சாட்டமாய் இருப்பார். படப்பிடிப்பின் கஷ்ட நஷ்டங்களையும், அதன் நுட்பங்களையும் நன்கு அறிந்தவர். காமிரா அநுபவமும் இவருக்கு உண்டு. அறிவாளியான தமிழர் ஒருவரின் பரிபூர்ண உதவி யிருந்தால் மிகச் சிறந்த படங்களை அவரால் உற்பத்தி செய்ய முடியும். அவ்வித உதவியில்லாததால் தான் அவருடைய முதற் படங்களான 'சதி-லீலாவதி'யும் 'சீமந்தனியும்' தோல்வி யடைந்தன. பின்னர் ஸ்ரீமான்கள் ச. து. சு. யோகி, 'இளங்கோவன்' இவர்களின் பரிபூர்ண உதவியினால் முறையே 'இரு சகோதரர்கள்' 'அம்பிகாபதி' ஆகிய படங்களில் இவருக்கு பெரும் வெற்றி ஏற்பட்டது.

ஸ்ரீ. டங்கன் பல தமிழ்ப்பட டைரக்டர்களைப் போலல்லாது நுனிப்புல்மேயமாட்டார்.

"இவரைக் கட்டித் தீனிபோடுவது வெள்ளை யானையைக் கட்டித் தீனி போடுவதற்குச் சமானம்" என்று சில முதலாளிகள் கூக்குரலிடுவதை நான் கேட்டிருக்கிறேன். இது அர்த்தமற்ற கூற்று. 'நல்லமாடு நாலு காசுக்கு வராது' என்பதை முதலாளிகள் நினைவில் வைத்துக் கொண்டால் 'துரை'க்குக் கொடுக்கும் காசு நியாயமானதே யென்று ஒப்புக்கொள்வார்கள். இவ்வளவு இருந்தும், 'துரை'க்கு நமது தமிழ்ப் பாத்திரங்களுக்கு ஏற்ற நடிப்பு அவ்வளவாகத் தெரியாதது வருந்தத்தக்க விஷயமாகும். டைரக்டர் எல்லிஸ் ஆர். டங்கன் இந்தக் குறையை சுலபத்தில் நீக்கிக் கொள்ள முடியும் என்ற கருத்தின் மீதே இதைச் சொல்லிவைத்தேன்.

ஸ்ரீ. ச. து. சு. யோகி

"இவர் வெறும் கவிதைகள் புனைவதில் மட்டும் மேதாவி யல்ல, எல்லா விஷயங்களிலுமே கெட்டிக்காரர். சினிமா உலகத்திற்கு இவர் சேவை செய்ய வந்திருப்பது தமிழர்களுக்கு பெரிய அதிர்ஷ்டமென்றே சொல்ல வேண்டும்" என்று ஸ்ரீ இக்னேஷியஸ் அன்று ஒரு தேநீர் விருந்தின்போது கூறினார்.

இதை நானும் ஆமோதிக்கிறேன்.



ஸ்ரீ. "முருகதாஸா" டைரக்ட் செய்கிறார்

பால பாரதி ச. து. சுப்ரமண்ய யோகி, ஒரு யோகிமட்டுமல்ல, நல்ல கவியுமாவார்.

இவரின் பல நாட்கள் 'பத்திரிகாசிரியத்' தொழிலிலேயே கழிந்து வந்தன. பின்னர் 'தமிழ்ச் சினிமா உலகத்திற்கு' இவரைக் கொண்டுவந்து தள்ளியவர் 'சினிமா உலகம்' ஆசிரியர் ஸ்ரீ பி. எஸ். செட்டியார்தான்.

முதல் முதலாக 'இரு சகோதரர்கள்' என்ற படத்திற்கு இவர், கதையமைப்பும் (Treatment) வசனமும், பாட்டும் எழுதிக் கொடுத்தார். பின்னர் இவர் மயூரா பிலிம்ஸில் சம்பந்தப்பட்டு 'பக்த அருணகிரி'யையும், 'அதிர்ஷ்டத்தை'யும் டைரக்ட் செய்தார். இந்த இரண்டு படங்களே, இவரிடம் உள்ள சினிமாக் கலாஞானத்தை விளக்கப் போதுமானவை. சினிமாக் கலா நுணுக்க ரஸிகர்களுக்கு இவரின் படங்கள் பெரு விருந்தேயாகும்.

'பக்த குசேலாவில்'

ஸ்ரீ ஒய். வி. ராவ்

"128 தடவைகள் பார்த்தேன் சார்.......138 தடவைகள் பார்த்தேன்.......1001-தடவை பார்த்தேன்........அந்தப் படம் சலிக்கவேயில்லை"....என்று ஜனங்கள் பேசிக்கொள்ளும்போது அந்தப் படம் 'சிந்தாமணி' என்பதை சிறு பையனும் தெரிந்துகொள்கிறான். இந்த 'சிந்தாமணி'யை டைரக்ட் செய்தவரும் ஸ்ரீ ஒய். வி. ராவ் தான்.

நெல்லூர் வாசியாகிய இவர், மௌனப்பட காலத்திலிருந்தே டைரக்டர்—நடிகராக இருந்து வந்திருக்கிறார்.

இவரின் பெரும் வெற்றி சிந்தாமணிதான்.

நல்ல கண்யமான மனிதர். இவர் பேச்சுகளில் கிண்டலும் கேலியும் இணைந்து நர்த்தனமாடும். சோம்பேறித்தனமென்பதே இவருக்குக் கிடையாது. "பிசாசு மாதிரி" வேலை செய்வார் இவர். பல தமிழ்ப் பேசும் படங்களை இவர் டைரக்ட் செய்திருக்கின்றார்.

தமிழ் நாட்டின் சிறந்த டைரக்டர்களில் இவரும் ஒருவர்.

ஸ்ரீ 'முருகதாஸா'

ஸ்ரீ. ஏ. முத்துஸ்வாமி அய்யர் என்பவர் தான், சினிமா உலகத்தில் இன்று 'முருக தாஸா' என்றழைக்கப்படுகிறார். முதலில் இவரும் பத்திரிகைத் தொழிலில் தான் இருந்தார். சினிமாக் கலாஞானத்திலும் டைரக்ஷனிலும் பெரிய மேதை வாய்ந்தவர் இவர். கலா சௌந்தர்யத்துடன் கூடிய 'சுந்தரமூர்த்தி நாயனாரை' டைரக்ட் செய்தவரும இவர் தான். ஸ்ரீமான்கள் சேகர், ராமநாதன் இவர்கள் இவரிடம் 'சிக்ஷை' பெற்றவர்களே யென்றால், இவரைப் பற்றி அதிகம் எழுத வேண்டியதில்லை. எழுத்தாளரான ஸ்ரீ. பி. எஸ். ராமய்யாவை உதவி ஆசிரியராகக் கொண்டுள்ள 'சித்ரவாணி' என்னும் பத்திரிகைக்கு இவர்தான் ஆசிரியர்.

ஸ்ரீ டி. ஆர். சுந்தரம்

இவர் சேலம் வாசி. மேனாட்டுக்குச் சென்று திரும்பியவர். இவர் B. A. B SC. பட்டம் பெற்றவர். சினிமாப் படம் பிடிப்புக்கு வேண்டிய ஆயிரக்கணக்கான வசதிகளற்ற சேலத்தில் இவர் ஒரு பிரம்மாண்டமான ஸ்டுடியோவைக் கட்டி (Modern Theatres) அதில் வெற்றிகரமான படங்களை எடுத்து வருவது ஒன்றே, இவர் எடுத்த காரியத்தை எப்படியும் சாதிக்க வல்லவர் என்பதை ருஜுப்படுத்துகிறது.

'திருநீலகண்ட நாயனாரிலி'ருந்து

கண்டாள் கருணை ஏசுவை!



தேவதூதரான ஏசு, பாவிகளுக்கும், பாதகர்களுக்கும், தீயவர் கட்கும் சன்மார்க்க போதனைகளை உபதேசித்து வரும்போது, பணக் காரப் பொதுமகளான மரியாமக்தலேனுவை சந்திக்க நேர்ந்தது. அவர் அன்புடன் அவளை ஆட்கொண்டு, அவளுக்கும் உபதேசித்து அவளை பெரிய ஸ்ரீரத்தினமாக்கிவிட்டார். இந்த வரலாற்றை கவி. பாலபாரதி ச. து. சு. யோகி ஒரு அற்புதமான காவியமாகச் செய்திருக்கிறர். அதிலிருந்துதான் பின்வரும் கவிதைகள் இங்து கொடுக்கப்பட்டிருக் கின்றன. இந்த கட்டம், ஏசு, அவளுக்கு தரிசனம் தந்தபோது மரியா மக்தலேனுவின் மனோ உணர்ச்சிகளைச் சித்தரிக்கிறது.—ஆசிரியர்.

('மரியா மக்தலேனு' என்னும் காவியத்திலிருந்து)

" கண்டனள் விழித்தாள் மேரிக் காட்சிபற் றெவையும் காணுள்
உண்டதோர் மயக்கக் காமத் துவரிநீர் மேனியெல்லாம்
விண்டது வியர்வையாகிக் கழிந்தது வேறு ஜன்மம்
கொண்டவள் போலவெண்பொன் கோமளப் பாவை நின்ருள்.

2

" தீச்சுடர் கலவிப்புன்மைப் புகையினல் தீய்ந்த நெஞ்சம்
காய்ச்சிய வஞ்சமெல்லாம் கவடெலாம் சூழ்ந்து பொங்கும்
நீச்சினுக் கெட்டாக்காமச் சுறையோர் நீண்டுவிம்மும்
மூச்சினில் வெளிப்பட்டோட மூர்த்தியை மூர்த்தம் செய்தாள்.

3

" கழித்திடுங் காமங்கண்ட காளையர் தம்மை வாட்டிப்
பழித்திறன் பாயும்பாவைப் பார்வைதன் சலனம்நீங்கி
அழித்தலைக் கள்ளின்வாரி யமுதமாய் நிரம்பினுற்போல்
விழித்தகண் விழித்தவாறு வேறுள நோக்காநிற்கும்.

4

" கடவுளைக் கண்டஞானக் களிப்பினைப் பெரியதென்கோ ?
மடமையிற் செய்தபாவ வருத்தமே பெரியதென்கோ ?
விடமுற வெதுப்பும் காட்சி வியப்பினில் மகிழும்பின்னும்
திடமிலா வெதும்பும்திக்கை வெறித்திடும் திகைக்கும் சோரும்.

5

" சின்னதோர் கொடியில்தொங்கும் வேர்பலாச் செறியும் பாவப்
புன்மையோர் பொருப்பாய்த்தோன்றிப் பூவையை யழுத்தச் சாய்
தன்னையும் தாங்கலாசுத் தளிரினிற் குழையும் பாவை [பித்
அன்னமோர் பதுமப்புக்க தனையளா யணையிற் சாய்ந்தாள்.

6

" தோழியர் தம்மைப்பாராள் தோய்மதுக் கீதங்கேளாள்
நாழிகைக் கொன்ருய்த்தன்னைப் புனைந்திடல் நயவாள் பின்னும்
ஆழியின் திரையைப்போலங் கலைபவர் தம்மைப்பேணுள்
பாழிடங் தன்னைச்சும்மா வுற்றுற்றுப் பார்க்கின்ருளால்.

7

" தன்னிலே தானுய்த்தன்னங் தனியளாய்த் தழலிற் காய்ச்சும்
துன்னிய பாவமூட்டை யல்லதோர் துணையற்ருளாய்
என்னெனச் சொல்வதையோ வேந்திழை துயரக்கோலம்
மன்னுமிவ் வையம் வானம் மற்றெலா முருகுஞ்சேதி

8

" காமுகர் காமமெல்லாம் கைவசம் கண்டகாமத்
தீமையே வடிவாய்க்கொண்ட திருவினைத் தாங்கித்தாங்கிப்
பூமல ரமளிபெற்ற புன்மையாற் பொருமிப் பொங்கித்
தாமரை முள்ளைப்பூத்த தன்மையிற் றைத்த மாதோ.

Consult

THE CITY PROCESS STUDIO

FOR QUALITY BLOCKS IN LINE, TONE & COLOURS

21, Errabalu Chetty Street : : Broadway, Madras.

அனுபவ ஜோதிஷர்

இவர் பல பிரபுக்களால் உண்மைப் பலன்களுக்காகப் பரிசுகள் பெற்றவர். எதிர்காலத்தைப் பற்றி 3 கேள்விகளுக்கு ரூபா 1. மேல் கேள்வி 1-க்கு அணு 8. ஜாதகம் கணிக்க ரூபா 2. மாதவாரி ஒரு வருடப் பலன் யெழுத ரூ. 5. ஆயுள் பூராகப் பலன் யெழுத ரூ. 25 ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. Lt.-Col கிரஹாம் சேடன் ஹட்சிசன், D.S.O M.C., "W. பிளான்" "ஸாபு" இவைகளின் ஆசிரியர் லண்டன், 29-12-38-ல் தெரிவிப்பதாவது :

இவர் தெரிவிக்கும் ஜோதிட பலன்கள் மிக அதிசயிக்கத் தக்க, உண்மையாக அனுபவத்திலிருந்து வருகின்றன.

விலாசம் :—பிரபசர் காழியூர்-கோவிந்தாச்சாரி, 3/2, பிராடீஸ் ரோட், மைலாப்பூர், சென்னை. தே.

மகத்தான ஆரம்பதினத்தை எதிர்பாருங்கள் !

பாண்டுரங்கன்

அல்லது

ஜேய் ஜேய் விட்டல்

(தமிழ் பேசும் படம்)

வேல் பிக்சர்ஸாரின் அரிய தயாரிப்பு

இதுவரை ஹாஸ்ய பாகங்களிலேயே நடித்து எல்லாருடைய அன்பிற்கும் ஆதரவிற்கும் பாத்திரமான மிஸ் T. A. மதுரம் பிர தான பாகத்தில் நடிக்கும் முதல் படம் இதுவே.

முக்கிய நடிகர்கள் :

M. R. கிருஷ்ணமூர்த்தி,	வித்வான் சீனிவாசன்,	காளி ரெத்தினம்,	வாசுதேவ பிள்ளை,	K. K. பெருமாள்
T. A. மதுரம்,	P. S. சிவபாக்கியம்,	கோல்டன் சாரதாம்பாள்,	M. S. சரோஜா,	M. S. சந்திரா

மற்றும் பலர்

டிஸ்டிரிபியூடர்ஸ் :

வேல்முருகன் பிலிம் சர்வீஸ்,

128, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, மதராஸ்,

Telegrams : Vel Films.　　தபால் பெட்டி : 231　　Telephone : 3664

இன்றைக்கு இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்பு, அலெக்ஸாண்டிரியாவில், ஓரிரவு.

நைல் நதியில், ஒரு பிரம்மாண்டமான படகு, கருவானத்தில் மிதந்து செல்லும் மேகம் போல் மெல்லத் தவழ்ந்து சென்றுகொண்டிருக்கிறது. தேவ மகளோ என்று கூறும்படியான வனப்பு வாய்ந்த ஒரு யுவதி பஞ்சணைமீது சாய்ந்தவண்ணம் கண் சிமிட்டும் நக்ஷத்திரங்களைப் பார்த்துக்கொண்டிருக்கிறாள். அவள் எதிரில் அவள் முகத்தோடு முகமாய் ஒரு யுவகன் பேசிக்கொண்டிருக்கிறான். ஆனால் அவன் பேச்சுக்கள் ஒன்றும் அவள் காதுகளில் விழவில்லை. அந்த யுவகனை ஆண்டனியின் மோஹ லாஹிரியில் மெய்மறந்து கிடக்கும் அவள் தான் எகிப்திய மஹாராணி கிளியோபாத்ரா.

* * *

உலகத்தில் தோன்றிய பேரழகிகளில் கிளியோபாத்ராவும் ஒருத்தி. அவள் அழகினிடம் வீராதி வீரர்களெல்லாம் கோழைகளானார்கள். சக்கிரவர்த்திகள் வெறி நாய்களானார்கள். அவளது அழகில் மதுவின் போதையும், விஷத்தின் கடுப்பும் கலந்து காணப்பட்டன. பரிபூர்ணமான சின்றின்பப் பெருக்கின் சன்னிதானமே கிளியோபாத்ரா. கொழுந்துவிட்டெரியும் அக்னி பளிச்சென்று எப்படி கண்களுக்குப் புலப்படுகின்றதோ, அதே மாதிரி உடல் அழகுதான் அவளிடமும் காணப்பட்டது.

கடைந்தெடுத்த தந்தம் போல் மினுமினுக்கும் உடலையுடைய அந்தப் பேரழகி அனுஷ்டித்த அழகு ரகசியங்களைப்பற்றி சரித்திரம் கூறுவது மிகவும் சொற்பமே. இருந்தபோதிலும், கிளியோபாத்ராவைப் பற்றிய பல நூல்கள், இலக்கியங்கள் இவற்றின் ஏடுகளைப் புரட்டும்போது, கொஞ்சம் ஆச்சர்யப்படத்தக்க விஷயங்கள் கிடைக்கின்றன.

மஹாராணியான கிளியோபாத்ரா துள்ளி விளையாடும் புள்ளி மானைப் போன்றவள். ஒரு நிமிஷ நேரம் சும்மா இருக்கமாட்டாள். சோம்பல் என்பது அவள் அகராதியிலேயே கிடையாது.

அவள் சூரியன் உதயமாவதற்கு ஆறு நாழிகைக்கு முன்னதாகவே கண் விழித்து விடுவாள். உடனே கடாரம், கடாரமாக கொண்டுவந்து நிரப்பப்பட்டிருக்கும் கழுதைப் பாலில் ஸ்னானம் செய்வாள். பின்னர் அவளது அந்தப்புரத்தில், அவளுக்கென பிரத்தியேகமாக வெட்டப்பட்டிருக்கும் ஒரு குளத்தில் ஸ்னானம் செய்வாள். குளத்தின் விசேஷம் என்னவென்றால், சந்திரன் எந்தப் பக்கத்திலிருந்தாலும் அதன் வெளிச்சம் அதில் படும்படியாக வெட்டப்பட்டிருந்ததுதான். ஸ்னானத்தின்போது அவள் ஒருவித வாசனைத் தைலத்தை தலைக்குப் போட்டு வந்தாள். அத் தைலத்தின் கலவைப் பொருட்கள் பூராவும் தெரியாவிட்டாலும், முக்கால்வாசி வெங்காயச் சத்து என்று மட்டும் தெரிகிறது. கோரைக்கிழங்கையே கிளியோபாத்ரா உடலுக்கு பிரயோகப் படுத்தி வந்தாள். (சீதையும் இதை கையாண்டதாக நமது புராணங்கள் சொல்கின்றன).

ஸ்னானம் முடிந்ததும், ஒரு சிறு கோப்பை வெங்காய ரஸத்தைப் பருகி விடுவாள். பின் கொம்புத் தேனில் கலந்து பிசையப்பட்ட பழங்களைச் சாப்பிட்டு, நிறைய பசும் பாலைக் குடிப்பாள். சூரியன் வான உச்சியை அடைந்ததும் போஜனம் புசிப்பாள். போஜனத்தில் மாமிசாகாராதிகள் கொஞ்சம் தானும். விசேஷமாக ஒரு பெரிய கோப்பை நிறைய வைக்கப்பட்டிருக்கும் செவ்விளநீர்க்காய்களிலுள்ள இளசான தேங்காயை சாப்பிட்டுத் தீர்த்து விடுவாளாம். எந்த ஆகாரம் தவறினாலும் இந்த தேங்காய் ஆகாரம் மட்டும் அவளுக்குத் தவறவே கூடாதாம். சாப்பிடும்போது அவள் கோலாகலமாக தோழியர்களுடன் பேசிக்கொண்டே தானிருப்பாளாம்.

அஸ்தமன சமயம். சூரியன் மறைய இன்னும் ஒரு நாழிகைதானிருக்கிறது. அப்போது கிளியோபாத்ராவை நைல் நதியில் காண்கிறோம். சூரிய கிரணங்களால் கொதிப்புற்றிருக்கும் நைல் நதியின் தண்ணீரில் அவள் நீச்சலடிக்கும் 'அம்சம்' மஹா பயங்கரமானது. ஏனெனில் முதலைகள் கும்பல் கும்பலாக உள்ள ஒரு இடத்திலேயே அவள் தனது சந்தியாகாலத்து ஸ்னானத்தைச் செய்வது வழக்கம். இதை ஸ்னானமென்றழைப்பதைவிட ஒரு பயங்கர விளையாட்டு என்று அழைப்பதே மிகவும் பொருத்தமானது. சூரியனின் செந்நிறக் கதிர்கள் இருண்ட நைல் நதியில் பிரதிபலிக்க, பளிங்கால் வார்க்கப்பட்ட உருவம் போன்ற கிளியோபாத்ரா முதலைகள் உள்ள இடத்தில் குதித்து, அவைகள் அவளைப் பிடிக்க வேண்டி துரத்தும்போது, அவற்றிற்கு இரையாகாமல் வேகமாக நீந்தி கரையைப் பிடித்து விடுவதுதான் அவளின் இந்தவிளையாட்டு. இந்த நீச்சல் பயிற்சியின் காரணமாகவே வஞ்சிக் கொடிபோன்றதும், அதே சமயம் கட்டு மஸ்தானதுமான சரீரத்தையும் பெற்றிருந்தாள் கிளியோபாத்ரா.

இரவும் வந்துவிடும். மிதமான மீனுணவும், மிக மிக லேசான ஆகாரமும் புசித்து இரண்டு கோப்பைகள் திராக்ஷை ரஸ மதுவைக் குடிப்பாள். குடித்ததும், அரண்மனை வேலைக்காரர்கள் எப்படி தங்கள் கடமைகளைச் செய்து வருகிறார்கள் ? எவரேனும் எதிரிகள், எங்காவது பதுங்கியிருக்கிறார்களா ? உண்ட வீட்டிலேயே இரண்டகம் நடத்த சதியாலோசனை ஏதாவது நடக்கிறதா ? என்பதையெல்லாம் கவனிக்க வேண்டி, நான்கு அசுர பலமுள்ள எதியோப்பிய அலிகளுடன் அரண்மனையையும் கோட்டையையும் சுற்றி வருவாள். இதற்கு சுமார் மூன்று மணி நேரமாகுமாம்......... முடிவாக அவள் சயனக்கிருகத்தை நாடுவாள். ஆயத்தமாகவுள்ள ஒரு கோப்பை அன்னாசிப் பழ ரஸத்தைக் குடித்ததும், அல்லி இதழ்கள் தூவப்பட்ட மஞ்சத்தில் சாய்ந்து விடுவாள். சாய்ந்தாளோ இல்லையோ அவளுடைய மலர்க் கண்கள் மூடிப் போய்விடும்.

கிளியோபாத்ராவின் இந்த வாழ்க்கையைச் கவனிக்கும்போது, அவள் தன்னுடலை எப்படிப் பாதுகாத்து வந்தாள் என்பதை ஓரளவுக்கு யூகிக்க முடிகிறது. உடலின் உட்புறத்தை எவ்வளவுக் கெவ்வளவு சுத்தமாகவும், சக்தி நிறைந்ததாகவும் வைத்திருக்கிறோமோ, அவ்வளவுக் கவ்வளவு அற்புதமான அழகு அதில் ஆவாகனமாகி வெளியில் அதன் ஜோதியை வீசுகிறது என்பதே காணக் கிடக்கும் உண்மை.

மேலும் கிளியோபாத்ரா எக்காலத்திலும் மதுபானக் கேளிக்கைகளில் அமிதமாக ஈடுபட்டதே இல்லையாம். தவிரவும், ஒவ்வொரு பௌர்ணமியின் போதும், அவள் பிரமிட்டுக்கு கள்ளத் தனமாகச் செல்வாளாம். (ஏனெனில் அப்போது எகிப்திய நாகரிகம் மறைந்து, கிரேக்க நாகரிகம் தாண்டவமாடிக் கொண்டிருந்தது) அங்கு அந்தரங்கமான ஒரு இடத்தில், அவள் பிறந்த மேனியில் நின்று, சந்திரனையும், எகிப்தியர்கள் வணங்கிவந்த வானவில் தேவனான ஐரிஸை (Iris) யும் தனக்கு லோகத்தையே மயக்கும்படியான அழகைத் தரவேண்டி மந்திரம் ஜபித்தும் வந்தாளாம். அவ்வளவுடனில்லாமல், அரண்மனையிலேயே கிரேக்கர்களின் ரதியான அப்ரோடைட் (Aphrodite) (அழகான பறடுகளுள்ளவள் என்று அர்த்தம்) என்னும் தெய்வத்தையும் தனக்கு அழகை மேலும் மேலும் கொடுக்கும்படி வேண்டுவாளாம். அவளது சர்மத்தின் அதியாச்சர்யகரமான பளபளப்புக்கு ஒருவித தைலத்தை வாரத்திற்கு இருமுறை உபயோகித்து வந்தாளென்றும், அதன் விசேஷமான கலவைப் பொருள் நாக சர்ப்பங்களிலிருந்து இறக்கப்பட்ட சத்து என்றும் சொல்லப்படுகிறது.

இன்னும் எத்தனையோ அழகு ரகசியங்களை இந்த மஹாராணி அனுஷ்டித்தாளென்றும் நூற்கள் சொல்லுகின்றன.

கௌரி சிந்தாமணி : நாள்பட்ட வெட்டை ரோகத்திற்கும், சர்மவியாதிகளுக்கும், கோபால ஔஷதாலயம் சீயாழி.

இத்தகைய பேரழகியான கிளியோபாத்ரா, நச்சரவு (Asp) ஒன்றை தன் இருதயத்தில் கடிக்கவிட்டு தற்கொலையில் தன் ஜீவன் நாடகத்தை முடித்துக் கொண்டது லோக சரித்திரத்திலேயே, விதி செய்த பெரிய கோரமான ச்தி என்றுதான் சொல்லவேண்டும்.

(2)

“............இந்தக் கண் தூங்கினாலும் கருத்துத் தூங்கமாட்டேனென்கிறது. மஞ்சத்தில் படுத்தாலும் மனம் இங்கேதான் படுக்கிறது. ஊசலைப்போல் ஆடிக்கொண்டிருக்கும் என் உள்ளம் இப்படியே போய்க்கொண்டிருந்தால் பைத்தியமாகிவிடும்........ வேண்டாம்........பிடிவாதம் செய்யாதீர்! அவளைக் கண்டால் போதும்...என் மனம் திம்மதியடைந்துவிடும். நீர் எனது இந்த அல்ப ஆசையைப் பூர்த்தி செய்யாவிட்டால் நாளையே படையெடுப்பேன்...நகரத்தையே நாசமாக்கிவிடுவேன்....” என்று மன்றாடுகிறான் அவன். இந்த நிலைமைக்கு என்ன செய்வது? மன்றாடுவது சாதாரண மனிதனா, இல்லை, பெரிய மன்னன். மானத்தைவிட்டு, ஒரு புருஷனிடம் அவனது ஸ்திரீயின்மீது தான் கொண்டிருக்கும் காதலை வெளியிடுகிறான் அவன். இதைக் கேட்கும் அந்தப் புருஷன் புன்னகை செய்கிறான். பேடியா?......இல்லை!....வீராதி வீரன்!....தனது அநுதாபத்தை புன்னகையின்மூலம் வெளிப்படுத்துகிறான் அவ்வளவுதான். காமத்தால் கண்களை இழந்துவிட்டான் என்பதை அவன் கணத்தில் அறிந்துகொண்டு விடுகிறான். உம்!...ஒரு நீண்ட பெருமூச்சு!........மறுதினம் அவன் தன் மனைவியின் தோற்றத்தை ஒரு பிரம்மாண்டமான நிலைக் கண்ணாடியில் காட்டுகிறான். சிற்றின்ப வெறியனும் அந்த நோத்திற்கு சாந்தி கண்டு, அங்கிருந்து விடை பெற்றுக் கொள்கிறான்.

இந்த தூர்த்தன் வேறு யாருமல்ல, சரித்திரப் பிரசித்தி பெற்ற மஹம்மதிய அரசன் அலாவுதீன் தான், அவனுக்காக அனுதாபங் காட்டியவன் சித்தூர் அரசன், ரஜபுத்ர திலகம் பீம்ஸிங். கண்ணாடியில் காட்சியளித்தவள் பீம்ஸிங்கின் மனைவி பத்மினியே. பத்மினி உண்மையிலேயே பத்மினிதான். அவளிடம் பத்மினி ஜாதிக்கு வேண்டிய லக்ஷணங்கள் ஒரு சிறிதும் குறையாமல் அமைந்திருந்தன. அவள் உயிர் வாழ்ந்த காலத்தில், அவளின் அழகு தெஹ்லியிலிருந்து கன்னியாகுமரி வரையிலும்கூட எட்டியிருந்ததென்று சரித்திரம் சொல்கிறது. அவளின் சரீரம் இயற்கையிலேயே சண்பக மலரின் வாசத்தைக் கொண்டது என்றும் சொல்லப்படுகிறது.

அந்த அழகியின் வாழ்க்கை வரலாற்றைப்பற்றி இன்று எழுத்து மூலமாக கிடைக்கும் தகவல்கள் ஒன்றுமே கிடையாது. ராஜபுதனத்தில் கர்ண பரம்பரையாகக் கேட்டு பாடப்பட்டுவரும் கிராமியப் பாட்டுகள் மூலமாகவே சில உண்மைகளைத் தெரிந்துகொள்ள முடிகிறது.

பத்மினி விடியற்காலத்தில் கண் விழிக்கும்போதே, சூரிய கிரணங்கள் பூரணமாகப் படும் ஒரு பொற்கலசத்தில்தான் விழிப்பாளாம். தவிரவும் சூரியனையே அவள் தினந்தோறும் பல நிமிஷங்கள் இமைகொட்டாதுப் பார்த்து வந்ததால் அவளின் கண்கள் ஜோதியைக் கக்கிக்கொண்டிருந்தனவாம்.

அவளது அரண்மனையில் அழகுச் சித்திரங்களும், அழகுச் சிலைகளும் அழகிய பாத்திரங்களும் ஏராளமாம். அவளிடம் இருந்த பணிப் பெண்களெல்லாம் பேரழகிகளாம். அவளைச் சுற்றியிருந்ததெல்லாம் அழகு, அழகு, அழகுதானாம். அவள் தனது போஜனத்தில் பச்சையாக ஒருவித கீரையைச் சேர்த்து (பொன்னாங்கண்ணியாக இருக்கலாமென்று யூகிக்கப்படுகிறது) சாப்பிட்டு வந்தாளாம். காலையில் எழுந்ததும் ரோஜா இதழ்களில் இறக்கிய கஷாயத்தை ஒரு கோப்பை குடிப்பதும் அவள் வழக்கமாம்.

அவள் மித போகி யென்றும் சொல்லப்படுகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக அவள் சாயா புருஷ தரிசனத்தைத் (சந்திர வணக்கம்) தவறாது செய்து வந்தாளென்றும் ராஜ புதன வாசிகள் சொல்லிக் கொள்கிறார்கள்.

ஒவ்வொரு இரவும் அவள் ரதிதேவியைப் பூஜை செய்த பின்பே, தாழம் பூக்களால் பரப்பப்பட்டிருக்கும் அமளியில் படுத்து விடுவாளாம். பத்மினியைப் பற்றி அகப்படும் விவரங்கள் இவ்வளவே. அவளின் அழகை இன்றும் ராஜபுதனத்து தெருப் பாடகர்கள் பாடி வருகிறார்கள்.

இந்து தேச சரித்திரத்தின் ஏடுகளுக்கே ஒரு தனி சோபையைக் கொடுத்து வரும் சித்தூர் அழகுமயிலான பத்மினியும், காமாதுரனான அல்லாவுதீன் முற்றுகையின் காரணமாக தீக்குளித்து தன் உயிரை விட்டது விதியின் மற்றொரு விளையாட்டேயாகும்.

(3)

அவள் உடல் அசைவின் லயமும், பெயர்க்கும் அடிகளின் பேரழகும், நகைப்பின் காட்சியும், கொடி இடையின் குழைவும், விம்மி விழும் மார்பகங்களின் அற்புதமும், காந்தக் கண்களில் பொங்கி வழியும் அமுதமும் சக்கிரவர்த்தி ஷாஜாஹானை (உலகத்தின் சக்கிரவர்த்தி) ஸ்திரி தாஸனாக ஆக்கியதில் ஆச்சர்ய மொன்றுமில்லை.

சகோதர சகோதரிகளே! டெலிபோன்: 8016

கைத்தறி பட்டுசேலைகளையே ஆதரியுங்கள்

★

எங்கள் சொந்த கைத்தறி பட்டு சேலைகள்
நீண்டகாலம் உழைக்கக் கூடியவைகள்—புதுமாதிரியான பார்டர்கள்—நாகரீக கட்டங்கள்—இவ்வளவு புது மாதிரியான பார்டர்களும் கட்டங்களும் இதுவரையில் பார்த்ததில்லையே என்று நீங்கள் ஆச்சரியப்படும்படியான சேலைகளும் இன்னும் ஜாக்கிட் ஸில்க்குகள், வேஷ்டி ரகங்களும் ஏராளமாய் ஸ்டாக் செய்துள்ளோம்

தயவு செய்து ஒரு முறை எங்கள் கடைக்கு வந்து பார்வையிடும்படி கேட்டுக்கொள்கிறோம்.

ராதா ஸில்க் எம்போரியம்
1-14, சன்னதித்தெரு, மைலாப்பூர்

ஆம்! மஹாராணி மும்தாஜ் பீகம், நமது சரித்திரம் கடைசியாகக் கண்ட அந்தப்புர அழகு ராணி. மனித உள்ளத்தை ஆளப் பிறந்த மஹாராணி மும்தாஜ் கனவிலும் எவருக்கும் தீங்கு நினைக்காதவள். நல்ல புத்திகூர்மை யுடையவள். அவளுக்கிருந்த செல்வாக்கையும் அந்தஸ்தையும் கவனிக்கும்போது அவளின் வாழ்க்கை முறை ரொம்பவும் எளிமையானது என்றே சொல்ல வேண்டும்.

அவள் சூரியன் அஸ்தமன மானதும் பன்னீரால் நிரப்பப்பட்டிருக்கும் பெரிய கடாரத்தில் அப்படியே விழுந்து ஸ்னானம் செய்வாள். பிறகு சகிகள் பட்டாடைகளால் அவளை அலங்கரிப்பார்கள். உடனே வெறும் திராக்ஷை ரஸத்தை அவள் பருகிவிடுவாள். அரைமணி நேரம் கழித்து லேசான ஆகாரம் சாப்பிட்டு படுக்கையை அடைவாள். பளிங்கு மண்டபத்தைப் போன்றிருந்த அந்த அறையில், நான்கு கர்வ கன்னிகைகளின் உருவங்களையே (தந்தத்தினால் செய்யப் பட்டவையாம்) கால்களாகக் கொண்டிருக்கும் பெரிய கட்டிலும், அதில் தூவப்பட்டிருக்கும் மல்லிகை முல்லை, ரோஜா, மலர்க் குவியலும், அவளை பேருல்லாஸத்துடன் வரவேற்கும். பொற் சங்கிலிகளில் தொங்கி சுடர்விட்டுக்கொண்டிருக்கும் விளக்குகள் அந்த அறையை பூலோக ஸ்வர்க்கமோ என்றெண்ணச் செய்யும். தோழிகள் மருந்துகள் கலந்த பால் கிண்ணத்தை அவளிடம் நீட்டுவார்கள். அதைப் பருகியதுதான் தாமதம்! அவள் கண்ணுறங்கி விடுவாள்.

உஷா காலம். கீதங்கள் ஒலிக்கும். தோழிகள் பாடுவர். சலங்கையின் சப்தம் கிணுகிணுவென்று சப்திக்கும். சோம்பல்முறித்து சொகுசாக எழுந்திருப்பாள் சுகுமாரி. நளினமான தோழிகள் வந்து அவள் அங்கங்களை மெதுவாக வருடிப் பிடித்துவிடுவார்கள். (Massaging) அதன் பின்பு நேராக அவள் ஸ்னான அறைக்குச் சென்று, ரொம்பவும் இளஞ்சூடுள்ள பாலில் குளிப்பாள். ஸ்னானம் முடிந்ததும், எலுமிச்சம்பழம் சாற்றை கோப்பையில் கொண்டு வருவாள் ஒரு தாதி. அது அவள் அங்கம் முழுவதும் தேய்க்கப்படுமாம். இரண்டொரு நிமிஷங்களுக்கெல்லாம் அவள் இளஞ் சூடான வென்னீரில் முழுகுவாள். அதையடுத்து அவள் உடலில் மல்லிகைத் தைலத்தையும், பாதங்களில் ரோஜாத் தைலத்தையும், சிரசில் சம்பங்கி எண்ணெயையும் தேய்ப்பார்கள். பின்னர் அவள் ஒரு அறையினுள் பிரவேசிப்பாள். அங்கு சந்தனக் கட்டைகள், பர்மியக் காடுகளிலிருந்து யாத்ரீகர்களால் கொண்டுவரப்பட்ட தனகாக் கட்டைகள், இன்னும் பலவித வாசனைப் பொருட்கள் நெருப்பில் புகைந்து கொண்டிருக்கும். இந்தப் புகையில் சில நிமிஷங்கள் இருந்துவிட்டு வெளியே வந்ததும் மதுகரமான மாதுளங்கனி ரஸம் ஒரு கோப்பை அவள் வசம் அளிக்கப்படும். அதை அவள் பருகிவிடுவாள். இந்த விதங்களில் அவளின் அழகு வளர்ந்து வந்ததாம்.

அத்தகைய மஹாசுந்தரி, மஹாராணி மும்தாஜ் பீகத்தையும் ஒரு நாள் சாவு பலி கொண்டுவிட்டது.

அவள் உடல் மறைந்தது; ஆனால் அவள் மறையவில்லை. ஷாஜாஹான் கருத்திலிருந்த அவளது உடல் வண்ணமே, அவன் கண்டு ரஸித்த அந்தக் காவியமே, தாஜ்மாஹாலாக உரு வகித்தது. தாஜ்மஹாலின் அழகை ரஸித்து விட்டால் நாம் மஹாராணியின் அழகையும் ரஸித்துவிடலாம்.

செவிடு

காதடைப்பு, தினவு, கும் என்ற சப்தம் முதலிய காது நோய்களும் எமது கூராமத் எண்ணெயை உபயோகித்தால் தீரும்.

ஒரு புட்டி ரூ. 1—4—0
டிராப்பருடன் 1—8—0

இந்தியாவில் மட்டும் 3 புட்டிகள் ஒன்றாய் வாங்கினால் பாக்கிங், போஸ்டேஜ் இனம்.

பல்லப் ஹிஸ்டிரியா நிவாரணி.

ஹிஸ்டிரியாவுக்கு உத்தரவாதமான சிகிச்சை. வியாதி நாள் பட்டதாயினும் பரவாயில்லை. கூட எல்லா நரம்புக் கோளாறுகளுக்கும் பலனளிப்பது.

ஒரு புட்டி ரூ. 3—0—0

பல்லப் அண்ட் ஸன்ஸ்

கண், காது, மூளை சம்பந்தமான எல்லா வியாதிகளுக்கும் சிகிச்சையளிப்பவர். பைத்தியத்துக்கும் நல்ல மருந்து கிடைக்கும்.

கடிதங்கள் இங்கிலீஷில் எழுதவும்.

BALLABH & Sons,
PILIBHIT-U. P. INDIA

சென்னைக்கு விஜயம் செய்யும் அன்பர்கள் இந்த இரண்டு ஜோதிகளையும் சந்திக்க மறந்து விடாதீர்கள்

கப்பல் மார்க் ஸ்பெஷல் வைரங்கள்



உன்னத தயாரிப்பு, உயரிய ஜ்வலிப்பு, நீண்ட நாள் உழைப்பு, விலை அதிக மலிவு, எங்கள் நேர் பார்வையில் தயாரிக்கப்படுகிறது

சர்ச்லைட் வைரங்கள்

பல்லாண்டுகளின் ஆராய்ச்சியின் பயனால் கண்டு பிடிக்கப்பட்டது. சகல பரிசீலனைகளிலும் சிறந்தது

மொத்தமாகவும் சில்லரையாகவும் தயாரிலிருக்கின்றது. எங்கள் விலை ஜாபிதாவுக்கு எழுதுங்கள்.

புரொப்ரைட்டர்ஸ்:
ஷம்ஸுத்தீன் அண்ட் இஸ்மாயில்
தி இண்டியன் கெமிகல் டைமண்ட் ஒர்க்ஸ்
96, சௌகார்பேட்டை, ஜி. டி., மதராஸ்

S. தீன் சேட்
94, சௌகார்பேட்டை,
ஜி. டி., மதராஸ்

பாக்டரி: 612, ரங்கூன்

மனோரம்மியமானது

ஸூராஜ்மல்ஸில் உள்ள நகைகள் புதுமோஸ்தரானவை. கண்கள் வனப்பு கொண்டிருக்கும் உமது நுட்பமான, உயர்ந்த ருசிக்குகந்தவாறு தயாரிக்கப்பட்டிருக்கின்றன.

ஸெலக்ஷன்

நம்பிக்கை வாய்ந்த ஸெலக்ஷனுக்கு ஸூராஜ்மல்ஸ்தான் சிறந்த கம்பெனி. மேலும் நகை வாங்கும் விஷயத்தில் ஸெலக்ஷனே தான் முக்யமானது. ஏனெனில் நகைகள் நம்முடன் அதிர்ஷ்டத்தைக் கொண்டுவருகின்றன. சுத்தம், பிரகாசம், உபயோகிக்கப் பட்டிருக்கும் ரத்னங்களின் உயர்ந்த ரகம், இவை பதிக்கப்பட்டுள்ள நேர்த்தி, நமது சொந்த தொழிற் சாலையில் வேலை செய்யும் சிறந்த வேலைக்காரர்களால் செய்யப்பட்டுள்ள முடிவான நகாஸ் வேலை இத்தனையும் சேர்ந்து ஸூராஜ்மல்ஸின் நகைகளை உங்கள் பொக்கிஷங்களாக்குகின்றன.

நேரில் பார்த்து நலம் பெறுவீர்

★ ★ ★

மேலும்

இவை நம்பிக்கையானவை

189[illegible] முதல். அதாவது 40 வருஷங்களுக்கு மேலாக, ஸூராஜ்மல்ஸுக்கு தேசம் பூராவும் மதிப்பு உண்டு. இந்தியாவிலும் பர்மாவிலும் வெகுவாகப் பிரக்யாதியும் புகழும் பெற்றது. ஸூராஜ்மல்ஸ் அவர்களது கரூர் விலைக்கொள்கை, கண்டிப்பான விலை விகிதம், எல்லாம் நாணயமான முறையிலிருப்பதால், நகைகளின் குணத்திற்கும் அவை தரும் திருப்திக்கும், சிறந்த உத்தரவாத மாகிறது. உங்கள் அடுத்த வீட்டுக்காரர் கொடுத்த விலையையேதான் நீங்களும் கொடுக்கிறீர்கள். ஆகையால் நீங்கள் நம்பிக்கையுடன் நேராகவேனும், தபால் மூலமாயினும் நகைகள் வாங்கிக் கொள்ளலாம்.

★ ★ ★

ஸூராஜ்மல்ஸ்

"உமது நம்பிக்கைக் குகந்த நகை வியாபாரிகள்"

வைர வியாபாரிகள்

தங்கம், வெள்ளி சாமான்கள் செய்பவர்கள்

313, எஸ்பிளனேட் சென்னை

359, கல்பாதேவி ரோட், பம்பாய் **134, மொகல் தெரு, ர[illegible]**

Printed and Published by V. Sundram Iyer, Proprietor at his Kesari Printing Works, 150, Anna Pillai Street, G. T., Madras